


378.05
கிராங்
SLIPR

# இளங்கதிர்

**32வது ஆண்டு மலர் (98/99)**

*''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கு''*

*இதழாசிரியர் :*

**செல்வன் பாலகிருஷ்ணன் பிரதாபன்**

*வெளியீடு :*

**தமிழ்ச் சங்கம்**

**பேராதனைப் பல்கலைக் கழகம்**

**பேராதனை.**

## *தமிழ்ச் சங்கக் கீதம்*

*புகழ் திகழ் தமிழ் மகள் புவிமீ தாளும்*
*பொன்னாள் வருக! வருக!!*
*மகிழ்வுறு தமிழ்நில மாந்தர்கள் பண்பு*
*மலைவிளக் காகவே ஒளிர்க*
*சகலரும் ஒருதாய் தன்பிள்ளை கள்போல்*
*சமத்துவ மாகவே வாழ்க*
*தனித்துவம் காத்திட எழுக! எங்கள்*
*தமிழ்க் குற ளறநெறி தழைக்க*
*தாயக மணிக்கொடி துலங்க*
*பனித்திடு மலைசூழ் பழநகர் பேரா*
*தனையுயர் தமிழ்க்கலை மன்றம்*
*வளர்க! வளர்க! வளர்க*
*மாநிலம் போற்றிட வளர்க!!*

*வளம்தரு மாவலி நதிமருங் கமைந்தபே*
*ராதனைப் பல்கலை மன்றில்*
*விளைந்திடு பயிராய் விளங்கிடு சங்கம்*
*வீறு கொண் டிலங்கி மிளிர்க*
*இளந்தமிழ் மாணவர் இன்கலைக் கோட்டம்*
*இவ்வுலக குளவரை துலங்க*
*ஈழமணி நாடுவுயர்க! எங்கள்*
*நாளைய வாழ்வும் உயர்க*
*நமதிறை அருண்வழி பொலிக*
*பாளையின் குளிர்தரு மலைசூழ் பேரா*
*தனைத் தமிழ்ப் பணியகம் வாழ்க!*
*வாழ்க! வாழ்க! வாழ்க*
*பல்லாண் டுயர்வுடன் வாழ்க.*

*மெட்டு : "ஜன கண மன" எனும் இந்திய தேசிய கீதம்*
*ஆக்கம் : சக்திதாசன்.*

## *Message From The Vice- Chancellor*

*It is with great pleasure that I send a message of greetings to the Tamil Society on the occasion of the release of their annual magazine "Ilankathir".*

*The Tamil Society of the University of Peradeniya has rendered yeoman service in the development of the hidden literary talents of our students. I fervently hope that it will continue its praiseworthy work in the years to come.*

*I am proud to mention that 'Ilankathir' continues to remain one of the popular magazines published by the University and maintains high standards of writing and also helps to nurture spiritual values and attitudes of prime value to humanity.*

*It is only through the fostering of literary activities and contributing to understanding between people that the movement for peace could be sustained. In this respect 'Ilankathir' has accomplished its task of bridging the gap among the different linguistic and religious communities at the University.*

*I Congratulate the editor and the committee for the valuable service they have performed in publishing this magazine.*

*University of Peradeniya,*
*Peradeniya.*

***Prof.Leslie Gunawardana***
*Vice-Chancellor*

# பெருந்தலைவரின் வாழ்த்துக்கள்

நீண்ட வரலாற்றையுடையதும் மனதுக்கு நிறைவளிக்கும் சாதனைகளை நிலை நாட்டியதுமான பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடான **இளங்கதிர்** முப்பத்திரண்டாம் இதழுக்கு இச் செய்தியினை வழங்குவதிற் பெருமகிழ்வெய்துகிறேன்.

இச்சந்தர்ப்பத்தில் இப்பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவனாகப் பயின்ற காலத்துத் தமிழ்ச் சங்கச் செயற்பாடுகள் நினைவுக்கு வருகின்றன. கலை மண்டப முன்னால் தமிழ்ச் சங்கக் கொடியை முதன்முதலாக 1958 இல் எங்கள் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை ஏற்றிவைத்தது. பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை, புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை முதலான அறிஞர் பலர் உரையாற்றியது, பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த கலைஞர்கள் இங்கு தம் கலைநிகழ்ச்சிகளை அரங்கேற்ற வாய்த்ததில் உற்சாகம் அடைந்தது, வி.தெட்சினாமூர்த்தி அற்புதமான தவில் கச்சேரி நடாத்தியது. என்.கே.பத்மநாதன் இனிமை பொங்க நாதஸ்வரம் வாசித்தது. வி.வி. வைரமுத்து தன் இசைநாடகங்களை மேடையேற்றியது, பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையும் கவிஞர்கள் அமுது (ச.அடைக்கலமுத்து), ராஜபாரதி (வி.கி.இராசதுரை) ஆகியோரும் பிரபல எழுத்தாளர் மு.தளையசிங்கமும் **இளங்கதிர்** இதழ்களை ஒழுங்காகவும் சிறப்பாக வும் வெளிக்கொணர்ந்தது, சிறுகதைப் போட்டிகளில் பரிசில்கள் பெற்றது - இப்படியான பலவும் எண்ணத்தில் அலைமோதுகின்றன.

தமிழ் பேசும் இலங்கை மக்களின் பண்பாட்டு வரலாற்றிலே தமிழ்ச் சங்கத்துக்கும் இளங்கதிருக்கும் குறிப்பிடத்தக்க இடம் உண்டு. எமது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சு.வித்தியானந்தன் முதலானோர் தமிழ்ச் சங்கத்தைத் தம் கண்ணேபோற் காத்து வளர்த்தனர். எமது மாணவர்கள் தங்களுடைய சிந்தனையாற்றலையும் சிருஷ்டித்திறன்களையும் வளர்த்துக் கொள்வதற்கு உகந்தவகையில் பல நிகழ்ச்சிகளைத் தமிழ்ச் சங்கம் தொடர்ந்து ஒழுங்கு செய்து வருகிறது. சுதந்திரமான அறிவு வளர்ச்சிக்கும் கலைவளர்ச்சிக்கும் களம் அமைப்பதாக இளங்கதிர் வெளிவருகிறது.

தமிழ்ச் சங்கக் கருமங்கள் மென்மேலும் சிறந்து பயன் விளைவிக்கவும் நவீன கால அறிவுப் பெருக்கத்துக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் ஈடுகொடுப்பதாய் **இளங்கதிர்** ஒளிவீசவும் இதயபூர்வமாக வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் சி.தில்லைநாதன்**
**பெருந்தலைவர்,**
**தமிழ்ச் சங்கம்.**

**தமிழ்த்துறை தலைவர்**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**
**பேராதனை.**

# பெரும் பொருளாளர் வாழ்த்துகின்றார்...

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களிடையே மிகச் சிறப்பான இடத்தை வகிப்பது பேராதனைப் பல்கலைக்கழகமேயாகும். பொன்விழாக் கண்டதும் இப் பல்கலைக் கழகம் ஒன்று மட்டுமே. இயற்கை வனப்பில் மிகைத்திருப்பது போன்றே இந்த நாட்டின் அரசியல், கலை, கலாசாரம், தொழில் நுட்பம், சுகாதார சேவை முதலிய பல்வேறுபட்ட துறைகளிலும் தனது பட்டதாரிகள் மூலம் இப் பல்கலைக்கழகம் செலுத்தும் செல்வாக்கு மிகைத்து நிற்கின்றது. இத்தகைய பட்டதாரிகளை உருவாக்குவதில் கல்விப் பீடங்கள் மட்டுமன்றி இப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பல்வேறு மாணவர் சங்கங்களும் பெரும் பங்களிக்கின்றன. இத்தகைய சங்கங்கள் மத்தியிலே பழைமையும் பெருமையும் கொண்டவற்றினுள் நம் தமிழ்ச்சங்கம் முக்கியமானதொன்றாகும்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் வளர்ப்பதனைத் தன் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இக்குறிக்கோளுக் கேற்ப இச்சங்கம் இதுவரை ஆற்றி வந்துள்ள பணி மகத்தானது, அளவிடற்கரியது. இப்பணியில் இப் பல்கலைக்கழக மாணவர்களை மட்டுமன்றி இதர பல்கலைக்கழக மாணவர்களையும் ஒன்று சேர்த்துச் செயலாற்றுவதும் மெச்சத்தக்கது.

காத்திரமான படைப்புகள் பலவற்றைத் தாங்கிய 'இளங்கதிர்' சஞ்சிகையை இடையறாது வெளியிட்டு வருதலும் நம் தமிழ்ச்சங்கம் செய்து வரும் பெரும் பணிகளுள் ஒன்றாகும். இப்பாரம்பரியமான பணியைத் தவறவிடாமல் இவ்வாண்டின் செயற்குழு வினரும் அருமுயற்சி செய்து 32வது மலரான இவ்விதழை வெளிக்கொணர்ந்துள்ளனர். ஒரு சஞ்சிகையை வெளியிடுதல் இலகுவான காரியமன்று. சிரமங்களை எதிர்நோக்க வேண்டி யிருந்தது மட்டுமன்றிப் பல தியாகங்களையும் புரிய வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே அவர்கள், குறிப்பாக, இதழாசிரியர் நமது பெரும் பாராட்டுக்கு உரித்துடையராவர்.

இவ்வாழ்த்துச் செய்தியை இவ்வாண்டு மலருக்கு வழங்குவதில் பெரு மகிழ் வெய்துகின்றேன். இது போன்று தொடர்ந்து 'இளங்கதிர்'களை எதிர்காலத்திலும் வெளியிடவும் தனது சிறப்பான பணியைத் தொடரவும் தமிழ்ச்சங்கத்துக்கு என் ஆசிகளை அளிப்பதில் பெருமையடைகின்றேன்.

**டாக்டர். எம்.ஏ.எம். சித்தீக்,**
**பெரும் பொருளாளர்.**

**பல்மருத்துவ பீடம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

## சங்கத் தலைவரின் வாழ்த்துகள்

''அறிஞர்தம் இதயஓடை
ஆழநீர்தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!''

பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்பேசும் மாணவர்களின் முதன்மையான சஞ்சிகை என்ற பெருமையுடன் ஈழத்தின் இலக்கிய, அறிவியல் மலர்களில் தனக்கென தனி இடத்தைப் பிடித்துக் கொண்ட இளங்கதிர் தனது ஐம்பதாவது அகவையில் முப்பத்தியிரண்டாவது மலராக வெளிவருகிறது.

தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு பல எழுத்தாளர்களை உருவாக்கி வழங்கிய பெருமை மிக்க இளங்கதிர் இம்முறை கலை, இலக்கியம், அறிவியல் ஆகிய பல்துறைகளையும் உள்ளடக்கி கால ஓட்டத்தின் தேவைக்கேற்ப 21ம் நூற்றாண்டிற்கு உங்களை அழைத்துச் செல்கின்றது.

புலமைப் பரிசிற் திட்டத்திற்காகவும், இளங்கதிரின் உதயத்திற்காகவும் கொழும்பு மாநகரில் நடைபெற்ற ''குறிஞ்சித் தமிழமுதம்'' என்ற கலை நிகழ்வின் வெற்றிக்கு உழைத்த அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்வி சார்ந்த செயற்பாடுகளின் மத்தியிலும் தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகளில் பங்கேற்று ஒத்துழைத்த விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் அனைவரையும் நெஞ்சில் நிறுத்தி,

''இளங்கதிரே, அசையா உயர்ச்சி அடைக நீ!'' என்று வாழ்த்துகின்றேன்.

**பொறியியற்பீடம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்,**
**பேராதனை.**

**க.நரேந்திரநாதன்,**
**தலைவர்,**
**தமிழ்ச் சங்கம்.**

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து...

பேராதனை பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் தனது 32 வது 'இளங்கதிரை' இவ்வாண்டு வெளியிடுகிறது. நீண்ட ஒரு வரலாற்று பாரம்பரியத்தை கொண்ட இத்தமிழ்ச்சங்கம் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் பெருமுயற்சியால், 1948ம் ஆண்டு 'இளங்கதிரை' வெளியிட ஆரம்பித்தது. 'இளங்கதிர்' வெளிவரத்தொடங்கி 50 ஆண்டுகள் பூர்த்தியாகி உள்ளது என்பதை எண்ணும் போது பிரமிப்பாக உள்ளது. இடையில் ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக சில இதழ்கள் வெளிவராமல் போயிருக்கவே இவ்விதழ் 32வது இதழாக மலர்ந்து 50வது ஆண்டை நிறைவு செய்கிறது. அந்த வகையில் இவ்விதழுக்கு இதழாசிரியராக இருக்கின்றேன் என்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த 1998/99 ம் ஆண்டுக்கான இளங்கதிர் பல்வேறு சிறப்பம்சங்களை கொண்டுள்ளது. இவ்விதழ் இந்த நூற்றாண்டின் இறுதி இதழாக வெளிவருகிறது. எனவே இவ்வேளையில் மனித சமுதாயம் நடந்து வந்துள்ள பாதையையும், தொடர்ந்து நடக்கப் போகும் பாதையையும் அலசும் நோக்கில் ''20ம் நூற்றாண்டை நோக்கிய மீள்பார்வையும், 21ம் நூற்றாண்டை நோக்கிய எதிர்வுகூறலும்'' என்ற சிறப்புப் பகுதி இடம்பெறுகிறது. எதிர்பாத்தளவிற்கு பங்களிப்புகள் பெருமளவில் கிடைக்காததினாலும் இடப்பற்றாக்குறை காரணமாகவும் இப்பகுதி நிறைவு பெறவில்லையாயினும், சிந்தனை தூண்டலையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் என நம்புகின்றேன், கிடைத்தவற்றில் இருந்து சிறப்பாகச் செய்ய முயன்றுள்ளோம்.

மேலும் இம்முறை 'இளங்கதிர்' தரமானதாகவும், காத்திரமானதாகவும் அமைய வேண்டும் என்ற நோக்கில் வழமையான அம்சங்களுடன் வித்தியாசமான சில முயற்சிகளையும் தாங்கி வெளிவருகிறது. இவ் 'இளங்கதிரை' பார்த்து, வாசித்து, புரிந்து கொண்டு ஆதரவு நல்குவீர்கள் என நம்புகிறேன்.

புதிய நூற்றாண்டில் காலடி வைக்கப் போகும் 'இளங்கதிர்' புதிய சிந்தனைகளுடனும், முயற்சிகளுடனும் வெளிவரவேண்டும் என வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

**விடுகை வருடம்,**
**விஞ்ஞான பீடம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

**பா. பிரதாபன்,**
**இதழாசிரியர்,**
**தமிழ்ச் சங்கம்.**

அட்டைப்படக் கவிதை

# அழைப்பு

ஸ்ரீ. பிரசாந்தன், இரண்டாம் வருடம், தமிழ்த்துறை .

''இருபத்தொரு வயது'' இளைஞ!
வருக...இவ்வீட்டு வாயிற்கு.

துருவும் விழிகள், துப்பாக்கி,
இருபது நூறாண்டு இன்னல்
இவைக்கஞ்சி,
பருவங் கடந்தும்
கல்யாணம் பண்ணாமல்
வீட்டுள்
குமரி இருக்கிறாள்.
''அமைதி'க் குமரி இருக்கிறாள்.

ஒருவரும் வாழ ஒளி பிறவாத
இருபது நூறு ஆண்டுகள் தன்னில்
திருமணம் பற்றி யார்
நினைப்பார்கள்?

வேரடி தன்னில் கோடரி வெட்டு
விழுந்தன உயிராம் மரங்கள்.
ஆறடி மண்ணும் சொந்தமேயில்லா
அவதியில் இருண்டது அவனி.

புலனடக்கிக் கல்லறையுள்
தவம் பூண்டிருக்கின்ற
பிணங்களுக்கும் இங்கே
பிரச்சினைதான்.

போராட்டக் கடலின் புறப்பாடு.
அதன்
நீரோட்டத்தில் எமது
நிம்மதியும் போயிற்று.
நீசம்
தேரோட்டம் செய்யத்
தெருவில் ''மனிதத்''
தேங்காய் உடைந்து சிதறிற்று.

இருபது நூறாண்டு இன்னல்
''பின்''செல,
வருவதாம் மகிழ்ச்சிக்கு
வழிமேல் விழி வைத்தோம்.
இனியென்ன...?
திருமணந்தான்.
வா....இத்திசைக்கு.

விடலைப் பருவத்து
விஷமங்களுக்கஞ்சி
படலை 'கொழுவி' பாதுகாப்போடு
வீட்டுள்
குமரி இருக்கிறாள்.
''அமைதி''க் குமரி இருக்கிறாள்.

இருபத்தொரு வயது இளைஞ!
வருக....இவ் வீட்டு வாயிற்கு.

கருமந் தவறாத கைகொண்டு
திருகு....படலை திறக்கும்.

ஏதும் முள், கல் இல்லாதிருக்கின்ற
பாதை தெரியும், பயணிக்க.

நில்.
சென்ற நூற்றாண்டு சேறு ஒட்டி
இருந்தாலும்
என்று
வாளிக்குள் தண்ணீர் இருக்கிறது.
நின்று கழுவி நிமிர்க.
நீ....அணி கலன்கள்
நன்றே புனைக.
''திருநாள்'' அமையும்.

அன்று....
போர் வயிற் பிரிவைப்
பொறுக்காமல்
பசலை படர்ந்த மலைப்பாவையது,
சமாதானச் சேலையின்
வெள்ளை முந்தானையாய்
விழும் ஆறு.

அது கண்டு,
ரத்தச் சிவப்புக் கலவாமல்
வெள்ளைச் சூரியன்
விடியல் நடத்துவான்.

யுத்தம் ஓயும்.
யுகந்தோறும் அவதரித்த
புத்தர், யேசுபிரான் புனிதர்கள்
இம்மண்ணில்
வைத்த மரங்கள்
வாய் சிரித்து...அட
அட்சதைகள் தூவும்.
அன்றே உன் ''கல்யாணம்''
வைத்துக் கொள்.

எங்கள் வாலிபனே!
மிக விரைவில்
பெத்துக் கொடு
எமக்காய்
''சந்தோஷப்'' பெருங் குழந்தை.

ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பு
- ஆசிரியர்

அட்டைப் படம் :
இ.ருஷாந்தன்,
விலங்கு மருத்துவபீடம்.

# இதழின் உள்ளே...

## (அ) கட்டுரைகள்


சிலிக்கன் பள்ளத்தாக்கு - உலகின் உயர் தொழில் நுட்பச்சுரங்கம் 01

உலக கணணி வலைப்பின்னல் (Internet) 11

ஈழத்துப் பூதத்தேவனார் பற்றிய கருத்துநிலைகள் - ஓர் உசாவல் 17

வங்கித்துறையில் ஏற்பட்டு வரும் நவீன தகவல் தொழினுட்பங்கள் பற்றிய ஒரு நோக்கு 23

மன்னார் மாவட்டத்தின் நாட்டுக்கூத்துக்கலை 28

கோதாவரி நதியும் சான்றோர் கவியும் 31

இலங்கையின் பாதுகாப்புச் செலவினமும் பொருளாதார வளர்ச்சியில் அதன் தாக்கமும் 35

சாருமதியின் கவிதைகள் - ஒரு கண்ணோட்டம் 38

இலங்கையில் உள்ள தமிழர்களும் சுயநிர்ணய உரிமை பற்றிய தத்துவமும் 49

தாவர நோயியலில் மூலக்கூற்று உயிரியலின் பங்கு 57

சர்வதேச அரங்கை எதிர்கொள்ளும் சுதேசிய அரங்குகள் 61

பனைவளத்தின் விஞ்ஞான பொருளாதார கோட்பாடுகள் - ஒரு நோக்கு 66


## ஆ) கவிதைகள்


இது மரணதேசம் 34

எச்சம் பார்த்துச் சொல்கிறோம் 47

காலத்தின் கல்லறையில் .... 72


## இ) சிறுகதைகள்


உன்னோடு... 44

அகதி என்னும் முத்திரை 69


சிறப்புப் பகுதி

**20ம் நூற்றாண்டை நோக்கிய மீள்பார்வையும், 21ம் நூற்றாண்டை நோக்கிய எதிர்வுகூறலும்**

## அ) கட்டுரைகள்


இலங்கைப் பல்கலைக்கழக வளர்ச்சிக்குத் தமிழர் பங்களிப்பு 73

இருபதாம் நூற்றாண்டில் தலைமைத்துவம் - ஓர் மீள்பார்வை 80

சுதந்திர இலங்கையின் அரசியலமைப்புக்களில் மனிதவுரிமைச் சட்டங்கள் - ஓர் ஒப்பீட்டாய்வு 86

இலங்கையில் தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சனைக்கான அடிப்படைக் காரணங்கள் 98

தமிழர்களின் பாரம்பரியத் தாயகம் சார்பு - எதிர் வாதங்கள் 106

சமூக அரசியல் மெய்யியல் நோக்கில் காந்தீய அஹிம்சையும் - வன்முறையும் 110

இலங்கைத் தமிழ் தேசியவாதத்தின் பரிணாமம் 117

எங்கள் வரலாறுகள் காக்கப்படுமா? 122

அடுத்த நூற்றாண்டா? அது எப்போது? 127

புதிய நூற்றாண்டின் தேவை மாற்றங்களை உள்வாங்கும் முகாமை
- இலங்கை ஓர் பார்வை 132

நவீன விவசாயத்துறை, 21ம் நூற்றாண்டை நோக்கி... 145

21ம் நூற்றாண்டில் தமிழ் மொழியின் பயன்பாடு 157

**ஆ) கவிதைகள்**

நாசமான வாழ்க்கையும்... ஒன்றுமில்லாத நிலையும்.... 92

விடியுமா? 105

'திரும்பிப் பார்த்த பொழுதினில்' 114

விடியலை நோக்கி... 126

புதுயுகம் படைப்போம்! 130

நாளைய சிவப்பு விடியலில்... 143

விடிவை நோக்கிய விநோத ஆயத்தம் 152

**இ) சிறுகதைகள்**

மீன் சந்தை 93

உறவுகளைத் தேடி ... 139

தேடல் 148

கருகிப் போன அரும்புகள் 153

**சங்க நிகழ்வுகள் - ஒரு மீள்பார்வை**

நாடகவிழா - 1998 167

குறிஞ்சித் தமிழமுதம் - ஓர் விமர்சனம் 169

சங்கத்தின் பாதையிலே... 171

செயலாளர் அறிக்கை 174

தமிழ்ச் சங்க செயற்குழு 181

என்றும் நன்றியுடன்... 182

# சிலிக்கன் பள்ளத்தாக்கு - உலகின் உயர் தொழில் நுட்பச் சுரங்கம் -

## இன்றைய நிலைமை பற்றிய சில குறிப்புக்கள்

பேராசிரியர் மா.செ.மூக்கையா, புவியியல் துறை.

ஐக்கிய அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவுக்கும், சான் ஜோசுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பில் சிலிக்கன் பள்ளத்தாக்கு அமைந்து காணப்படுகிறது. அங்கே முதலாளித்துவத்தின் நோக்கங்களின் முக்கியமானதான செல்வம் சேகரிக்கும் நடவடிக்கைகள் வெகு சிறப்பாகவும் வெற்றி கரமாகவும் இடம்பெறுகின்றன. கலிபோர்னியா மாநிலத்தின் பொருளாதாரம் பற்றி தொடர்ந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வரும் நிறுவனம் ஒன்றின் ஆய்வாளர்களில் ஒருவரான ஸ்டீபன் லெவி (Stephen Levy) சிலிக்கன் பள்ளத்தாக்கின் 2 மில்லியன் மக்களுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தி 65 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் என்றும் அது 15 மில்லியன் மக்களைக் கொண்ட சிலி நாட்டினது முழுப் பொருளாதாரத்தின் ஒரு வருட பெறுமானத்துக்கும் சமமானது எனக் கணிப்பிட்டுள்ளார். 1996 ஆம் ஆண்டு சிலிக்கன் பள்ளத்தாக்கில் சராசரி வேதனம் 5 வீதத்தால் அதிகரித்து 43,510 டொலரை எட்டியுள்ளது. ஆனால் ஐக்கிய அமெரிக்காவின் அனைத்து தொழில்களில் காணப்படும் வேதன அதிகரிப்பு அவ்வருடம் ஒரு வீதமாகவே காணப்பட்டு 28,040 டொலராகவே இருந்தது. சிலிக்கன் பள்ளத்தாக்கின் உயர் தொழில் நுட்ப தொழில்களுக்குத் தேவையான தொழிலாளர்கள் பற்றாக்குறையாகக் காணப்படுவதால் இன்டர்நெட் (Internet) தொழிலில் முன்னணி வகிக்கும் சிஸ்கோ சிஸ்டம்ஸ் (CISCO Systems) நிறுவனம் மாதாந்தம் 400 தொழிலாளர்களைத் தொழிலுக்கு சேர்ப்பதற்காக பெருமளவு விளம்பரங்களைச் செய்ய வேண்டியிருந்தது. ஐக்கிய அமெரிக்க மேற்குக் கரையோர கைத்தொழில் வலயத்தில் தொழில் புரிவோரில் 25 வீதமானோர் இவ்வுயர் தொழில் நுட்பம் சார் தொழில்களிலேயே ஈடுபட்டுள்ளனர். அத்துடன் பாரம்பரியமான பரும்படியாக்க கைத்தொழில் வலயங்கள் ஐக்கிய அமெரிக்காவில் மந்தமடைந்த போது கலிபோர்னியாவின் கைத்தொழில் வலய அந்தஸ்து இவ்வுயர் தொழில் நுட்ப தொழில்களினாலேயே பாதுகாக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**உற்பத்தி பெறுமானம்:** இப்போது ஐக்கிய அமெரிக்காவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உயர் தொழில் நுட்பங்களின் பெறுமதி பத்து (10) வீதமாக உள்ளது. சிலிக்கன் பள்ளத்தாக்கில் செயற்படும் 6,000 உயர் தொழில் நுட்ப நிறுவனங்கள் வருடாந்தம் 200 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் களுக்குத் தமது உற்பத்திகளை விற்பனை செய்கின்றன. அத்துடன் அவற்றின் பெறுமதியினை எதிர் காலத்தில் அதிகரிக்கச் செய்வதற்கான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றன. தனிப்பட்ட கம்பியூட்டர் (PC) வியாபாரத்தில் பெரும் சாதனை படைத்த உயர் தொழில் நுட்ப சிலிக்கன் பள்ளத்தாக்கு தொழில் நிபுணர்கள் இப்போது இன்டர்நெட் (Internet) தொழிலில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். அதனால் தனிப்பட்ட கம்பியூட்டரை விடவும் கூடிய வியாபார வெற்றியினை இன்டர்நெட் வியாபாரத் தினால் பெறப் போகின்றனர் என்றும் அபிப்பிராயங்கள் கூறப்படுகின்றன. சாந்தா கிளாரா பகுதியிலேயே

அமெரிக்காவின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் கூடிய இன்டர்நெட் பயன்பாடு அதிகரித்துக் காணப்படுவதால் 1000 பேருக்கு 355 தொடர்புகள் வரை பயன்பாட்டில் உள்ளன.

அட்டவணை 1

**ஐக்கிய அமெரிக்கா - இன்டர்நெட் பயன்பாடு 1996**

| | இன்டர்நெட் பயன்பாட்டாளர் (ஆயிரத்தில்) | 1000 மக்களுக்கான இன்டர்நெட் இணைப்புக்கள் |
|---|---|---|
| சாண்டா கிளாரா, கலிபோனியா | 545 | 355 |
| மசசூசெட்ஸ் | 244 | 173 |
| லொஸ் ஏஞ்சலிஸ் | 160 | 18 |
| நியூயோர்க் | 146 | 96 |
| பெயார் பிக்ஸ்,வேர்ஜீனியா | 132 | 149 |
| ஓரஞ்ச், கொண்டி, கலிபோனியா | 124 | 48 |
| சண்டியாகோ | 112 | 42 |
| குக்,இல்லிநோய்ஸ் | 111 | 22 |
| சோல்ட் லேக், உடா | 91 | 112 |
| அலடேடா கலிபோனியா | 90 | 68 |

**செயற்படும் நிறுவனங்கள்:** உலகின் மைக்ரோ சொப்ட் (Microsoft) மேதாவியும் தீரருமான பில்கேட்ஸ் (Bill Gates) சியாட்டல் நகரிலும், தனியார் கம்யூட்டர் (PC) தயாரிப்பின் நிபுணரான கொம்பாக் (Compaq) டெக்சாஸ் மாநிலத்திலும், ஐபிஎம் (IBM) நிறுவனம் நியூஜேசியிலும் இருந்தே செயற்படுவது உண்மை தான் என்றாலும் கூட பெரும்பாலான ஏனைய தொழில் நுட்ப நிபுணத்துவ நிறுவனங்களான சன் மைக்ரோ சிஸ்டம்ஸ், (Sun Micro Systems), கியூலெட் பக்கார்ட் (Hewlett Packard), ஓராக்கல் (Oracle), 3கொம் (3 Com), பிரயோக மெட்டீரியல்ஸ் (Applied Materials), நெட்ஸ்கேப் (Netscape), சிஸ்கோ சிஸ்டம் (CISCO System), இன்டெல் (Intel) ஆகிய யாவுமே சிலிக்கன் பள்ளத்தாக்குகளிலேயே அமைந்துள்ளன. அங்கே காணப்படும் நிறுவனங்கள் ஐந்திற்கு ஒன்று சிறிய நிறுவனங்களாக காணப்படுவதுடன் அவை கடந்த நான்கு வருடங்களில் வருடாந்தம் 20 வீத வளர்ச்சியினைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தேசிய ரீதியாக 35 நிறுவனங்களில் ஒரு நிறுவனமே அத்தகைய வளர்ச்சியினை அடைந்திருந்தது என்பதும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

**மூலதனம்:** இந்நிறுவனங்களுக்கு நிதி வழங்கும் நிறுவனங்களும் சிலிக்கன் பள்ளத்தாக்கில் குறிப்பாக மென்லோ பார்க் (Menlo Park) பகுதியில் உள்ள சான்ட் ஹில் (Sand Hill) வீதியில் அமைந்து காணப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்காவில் தனிப்பட்டவர்களால் பயன்படுத்தப்படும் மூலதனத்தில் மூன்றில் ஒரு பங்கு சிலிக்கன் பள்ளத்தாக்கிலேயே கையாளப்படுகின்றது. உலகளாவிய வகையிலான பயன்பாட்டில் அவ்வாறு முதலீட்டுக்குப் பயன்படுத்தும் தொகையில் அது ஆறில் ஒரு பங்கு ஆகும். அந்நிறுவனங்கள் கையாளும் நிதியின் பேரளவினை இனங்காண கிளீனியர் பேர்கின்ஸ் கோல்பீல்ட்

அன்ட் பயர்ஸ் (Kleiner Perkins Caulfield & Byers) நிறுவனத்தின் நிதி பரிமாற்றத்தினை உதாரணமாக அவதானிப்பதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம். அந்நிதி நிறுவனம் 250 நிறுவனங்கள் ஆரம்பிப்பதற்கு தேவையான ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியுள்ளது. அந்நிறுவனத்தின் வருட வருமானம் 44 பில்லியன் டொலராகவும், சொத்துப் பெறுமதி 85 பில்லியன் டொலராகவும் இருந்துள்ளது.

**வெளிநாட்டார் பங்கு:** சிலிக்கன் பள்ளத்தாக்கில் பெண்களும் வெளிநாட்டவர்களும் தமது விகிதாசாரத்திற்கு அதிகமாக தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இன்டெல் (Intel) நிறுவனத்தின் அதிபர் அன்டிகுரோவ் (Andy Grove) ஹங்கேரி நாட்டில் பிறந்து வளர்ந்தவர். அது போன்றே சன் (Sun), ஒராக்கல் (Oracle), சோல்க்டிரன் (Solectron),சைரஸ் லொஜிக் (Cirus Logic) மற்றும் நூற்றுக்கணக்கான நிறுவனங்களில் குறைந்த பட்சமாக அவற்றின் ஆரம்பகால ஸ்தாபகர்களில் ஒருவராவது வெளிநாட்டவராகவே காணப்பட்டனர். இந்நிலைமை பற்றி பிரைஸ் வோட்டர் ஹௌஸ் (Price Water House) நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் குறிப்பிடும் போது இந்நிறுவனங்களில் தொழில் புரிவோரது குறிப்பேடுகளைப் பார்த்தால் அவற்றில் ஓர் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ அமைப்பினை காணக்கூடியதாயிருக்கும் எனக் கூறியுள்ளார். இதிலிருந்து சிலிக்கன் பள்ளத்தாக்கு தொழிலில் பல நாட்டு பல்லின மக்களினதும் பங்கேற்பு பற்றி அறிய முடிகிறது. அமெரிக்காவில் இன்று வாழும் ஐந்து விஞ்ஞான பட்டதாரிகளில் ஒருவர் வெளிநாட்டில் பிறந்தவராவார். அதனால் சிலிக்கன் பள்ளத்தாக்கில் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்து வந்தவர்கள் பெரும் பங்கினை வகிப்பது ஆச்சரியத்திற்குரியதல்ல.

இவர்களில் முக்கியமான இரண்டு பிரிவினர் வெளிநாடுகளில் வாழும் சீனர்களும், இந்தியர்களுமாவார்கள். கூப்பர்ஸ் அன்ட் லைபிரான்ட் (Coopers & Lybrand) நிறுவனத்தின் மதிப்பீட்டின்படி இந்தியா வருடாந்தம் தகவல் தொழில் நுட்பத் துறை சார்ந்து 50,000 பட்டதாரிகளைப் பயிற்றுவிப்பதாகவும் அவர்களில் 25 வீதமான 12,000 முதல் 15,000 பேர் வரையில் அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகின்றனர் என்பதும் தெரிய வருகின்றது. இதனை லொஸ் ஏஞ்சல்ஸ் கிரிக்கட் கிளப்பின் இன்றைய நடவடிக்கைகளையும் அவற்றில் பங்கு பெறுபவர்களையும் பார்க்கும் போது நன்கு இனங்காண முடிகிறது. முன்னர் அப்பகுதி ஆங்கில அமெரிக்கர்களுடைய கலாசாரத்தினைக் கொண்ட பகுதியாயிருந்தது. இப்போது சாந்தா கிளாரா (Santa Clara) பகுதிகளில் தொழில் புரியும் இந்திய நிபுணர்களைக் கூட்டங் கூட்டமாக அங்கே காண முடிகிறது. இது எந்தளவுக்கு இந்தியர்கள் இங்கே இத்தொழில்களில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதற்கு ஒரு குறிகாட்டி எனவும் கூறலாம்.

**இலாபம்:** இத்தொழில் ஊழியர் ஒருவருக்கான பெறுமதி சேர்மானம் (Value Added) மிக அதிகமாகும். அட்டவணை 11இல் இதுபற்றிய விபரங்களை காணலாம்.

**அட்டவணை 11**


**ஐக்கிய அமெரிக்காவின் உயர் தொழில்களில் பெறுமதி சேர்மானம் 1996 (டொலர்களில்)**

| | 1987 | 1992 |
|---|---|---|
| சாந்தா கிளாரா, கலிபோனியா | 72,000 | 117,000 |
| ஒஸ்டின், டெக்சாஸ் | 65,000 | 100,000 |
| கொலராடோ, ஸ்பிரிங்ஸ் | 55,000 | 83,000 |
| ஐ.அ.காசரி | 60,000 | 71,000 |
| போர்டலண்ட் | 50,000 | 67,000 |
| லொஸ் ஏஞ்சலிஸ் | 51,000 | 65,000 |
| சன்டியாகோ | 56,000 | 56,000 |

*இன்டெல் நிறுவனம் 1996ஆம் ஆண்டு 5.2 பில்லியன் டொலரை தேறிய இலாபமாகப் பெற்றது. அதன் மூலம் ஜெனரல் இலக்ரிக்கல்ஸ் நிறுவனத்தையும் விடக் கூடிய இலாபத்தினைப் பெற்று அமெரிக்காவில் கூடிய இலாபம் பெற்ற நிறுவனங்களிடையே முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. அச்சாதனையினைக் கொண்டாடும் முகமாக தனது 48,500 ஊழியர்களுக்குத் தலா ஆயிரம் அமெரிக்க டொலர்களைச் சன்மானமாகத் திடீரென வழங்கியது குறிப்பிடத்தக்கதாகும். மறு புறத்தில் இன்டெல் நிறுவனத்தின் கோடீஸ்வர ஸ்தாபகர்களில் ஒருவராவது தனிப்பட்ட அலுவலகம் ஒன்றைக் கொண்டிருக்கவில்லை என்பதும் அவர்களில் ஒருவரான கோடன் மூர் (Gorden Moore) என்பவர் ஒரு நாள் தனது காரை தரித்து நிறுத்த இடமின்றி இருபது நிமிடங்கள் வரை அங்கும் இங்கும் அலைக்கழிந்தார் என்பதும் ஒரு செய்தியாகும். இது அவர்களது எளிமையான வாழ்க்கை முறைகளை எடுத்துக் காட்டும் உதாரணங்களாகும்.*

***வாழ்க்கைத் தரம்:*** *நியூயோர்க், லொஸ் ஏஞ்சல்ஸ் நகரங்களுடன் ஒப்பிடுகையில் சிலிக்கன் பகுதியில் வாழ்க்கை முறைகள் சாதாரணமாகவே தென்படுவதாகக் கூறப்படுகிறது. டிபானி* ***(Tiffany)*** *போன்ற ஆடம்பர நகைக் கடைகள், மற்றும் உணவு விடுதிகள் ஸ்டான்போர்ட்டின்* ***(Standford)*** *மத்திய பகுதிகளில் காணப்படுவது உண்மையேயாகும். ஆனால் கோடீஸ்வரர்களான உயர் தொழில் நுட்ப நிபுணர்கள் லெக்சஸ் (Lexus) அல்லது பி.எம்.டபில்யூ. (BMW) போன்ற சாதாரண கார்களையே பெரிதும் பயன்படுத்துவதாகவும் பெராரி (Ferrari) போன்ற ஆடம்பர கார்கள் அபூர்வமாகவே ஓடுவதாகவும் தெரிய வருகிறது. ஆனால் இங்கே வீடுகளுக்கு அத்தர்டன் (Atherton) பகுதியில் ஒரு மில்லியன் டொலர் சராசரியான விலையாகும். செல்வந்தர்களின் வாழ்விடமான லொஸ் ஏஞ்சலின் பெவர்லி ஹில் (Beverly Hill) பகுதியிலும் கூட சராசரி வீட்டின் விலை அரை மில்லியன் டொலர்களே ஆகும். எனவே இங்கே வெளியே ஆடம்பர வாழ்க்கை தோன்றாத போதும் உள்வாழ்க்கை மிகக் கூடிய செலவினைக் கொண்ட அதி உயர் வாழ்க்கையாகும்.*

**அமெரிக்காவின் சிலிக்கன் பள்ளத்தாக்கு**



**கலிபோர்னியாவுக்கு வெளியேயும் அமெரிக்காவுக்கு வெளியேயும் சிலிக்கன்:** இன்று உலகின் பல நாடுகளில் உள்ள அரசாங்கங்களும் தத்தமது நாடுகளுக்குச் சொந்தமாக ஒரு சிலிக்கன் பள்ளத்தாக்கினை உருவாக்குவதில் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றன. ஐக்கிய அமெரிக்கா தனது உடா **(Utah)** மாகாணத்தில் சிலிக்கன் பாலைவனத்தினையும் **(Silicon Desert)**, நியூயார்க் மாகாணத்தில் சிலிக்கன் குறுந்தெரு **(Silicon Alley)** ஒன்றினையும், ஒஸ்டின் பகுதியில் சிலிக்கன் குன்றினையும் **(Silicon Hill)**, சியாட்டல் அல்லது போர்ட்லண்டில் சிலிக்கன் வனத்தினையும் **(Silicon Forest)** கொண்டுள்ளது. தாய்வான், இஸ்ரேல், இந்தியா, பிரித்தானியா யாவுமே தம்மிடமும் அவ்வாறான உயர் தொழில் நுட்ப நடவடிக்கைகளின் வளர்ச்சியினை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. ஐரோப்பாவின் கலிபோர்னியா எனப்படுவதும், எகிப்தின் பிரமிட் தொழில் நுட்ப பூங்கா எனப்படுவதும் இன்னும் உயர் மட்டங்களுக்கு வளர்ந்து விடவில்லை.

மலேசியா பிரதமர் மஹதிர் மகமுட் தனது நாட்டில் 750 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தினை கோலாலாம்பூரின் தெற்குபகுதியில் தனது அபிலாசையான ஒரு சிலிக்கன் பள்ளத்தாக்கினை அமைக்கும் நோக்கத்திற்காக ஒதுக்கியிருப்பதாக அறிவித்தார். அத்துடன் 40 பில்லியன் அமெரிக்க டொலரும் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 1 லட்சம் மக்களைக் கொண்ட நகரில் பல்துறை தகவல் வழங்கும் அதிசிறந்த வழி **(Multimedia Super Corridor)** ஒன்றினை அமைக்கவும் திட்டம் உருவாக்கப்பட்டது. மஹதீர் மஹமுட் போன்ற அரசியல்வாதிகள் சிலிக்கன் பள்ளத்தாக்கினை ஒரு உயர் தொழில் நுட்ப கைத்தொழிலாகவே நோக்குகின்றனர். ஆனால் அதனை வியாபாரத்திற்கான சிறந்த வழிமுறையாகப் பார்க்கும் போது தான் பொருத்தமாயிருக்கும். அதில் தொழில் நுட்பம் ஒரு தனி உற்பத்தியாக அமைந்து விட்டதாக கருதலாம்.

தனியொரு தொழிலாக அதாவது, யப்பானில் கம்யூட்டர் உற்பத்தித் தொழில் காணப்படுவது போல் தனித்துப் பார்க்காது உதாரணமாக ஹொலிவுட்டில் பல தொழில்கள் குழுமியிருக்கும் சூழ்நிலையிலும், இலண்டன் நகரில் பல நடவடிக்கை குழுமியிருக்கும் சூழலிலும் உயர் தொழில் நுட்ப நடவடிக்கைகள் அவற்றுடன் இணைந்து செயல்படும் வகையில் அமைவதே சிலிக்கன் பள்ளத்தாக்கின் கோட்பாட்டுக்குச் சிறப்பாக அமையலாம். அவ்வாறு பார்க்கும் போது அதற்கான சமூக, அரசியல் காரணிகளை உதாரணமாகக் கூறுவதானால் வெளிநாட்டார் வருகையினை சகித்துக் கொள்ளும் மனப்பான்மையினை வளர்த்துக் கொள்ளுதல் போன்றவை அவசியமாகும். இவை தொழில் நுட்பத் தகுதி, பொருளாதார பலம் என்பவற்றை விட முக்கியமானவையாகும்.

**சிலிக்கனின் வெற்றி:** சிலிக்கன் பள்ளத்தாக்கின் உயர் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அப்பள்ளத்தாக்கின் முக்கிய பங்களிப்பு அதன் சிறந்த நிறுவன ரீதியான அமைப்பாகும். தொழில் நுட்பத் திறன் எனக் கூற முடியாது. வளர்ச்சியுற்ற நாடுகளை ஊன்றிக் கவனித்தால் அங்கே வர்த்தகத்தில் சிலிக்கன் மயமாக்கம் ஏற்பட்டுள்ளமையினைக் காணலாம். சிலிக்கன் பள்ளத்தாக்கில் காணப்படுவதனைப் போன்ற திறமையான சிறு நிறுவனங்களே அமெரிக்காவின் மூன்றில் ஒரு பங்கு புதிய தொழில்களை வழங்குகின்றன. இதே அளவில் தான் ஐரோப்பாவிலும் யப்பானிலும் புதிய தொழில்கள் உருவாகின்றன. பெரிய நிறுவனங்களின் உருவாக்கம் இறுதியில் தோல்வியுறுகின்றன. அவை பின்னர் பிரிவுற்று சிறிய நிறுவனங்களாகி விடுகின்றன. அத்துடன் அத்துறையில் ஈடுபடும் பெருமளவான ஊழியர்களுக்கு முழு நேர தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை.

இப்போது அரசியல்வாதிகளும், பொருளியல் நிபுணர்களும் சிலிக்கன் பள்ளத்தாக்கின் மீது கூடிய ஆர்வம் செலுத்துகின்றனர். ஸ்டன்போர்ட் பல்கலைக்கழகம் பொருளாதார வளர்ச்சி பற்றிய புதிய கோட்பாடுகளைக் கூறுகின்றது. புதிய கருத்துக்களிலும், தொழில் நுட்பங்களிலும் ஏற்படுத்தும் முதலீடுகள் குறைந்து செல்லும் விளைவு விதியின் தாக்கத்திற்கு உட்பட வேண்டியதில்லை என்றும், ஆனால்

அதற்கான முதலீடுகள் முயற்சியாளர்களினால் தான் ஏற்பட வேண்டுமே ஒழிய அரசாங்கங்களினால் இடப்படக்கூடாது என்றும் கூறப்படுகின்றது. அரசியல் தலைவர்கள் உயர் தொழில் நுட்ப நிபுணத் துவத்தில் முன்னணியில் திகழ்பவர்களைப் பாராட்டவும், பின்பற்றவும் தயாராக உள்ளனர். பிரான்சின் ஜனாதிபதி ஜக்குஸ் சிரக் (Jacques Chirac) முன்னர் ஸ்டன்போர்ட்டில் (Stranford) பயின்று இப்போது பிரான்சில் வெற்றிகரமான சொப்ட்வியர் (Software) நிறுவனமான பிஸ்னஸ் ஒப்ஜெக்ட்ஸ் (Business Objects) நிறுவனத்தின் அதிபர் பேர்னாட் லயடட் (Bernard Liautaud) என்பவரிடமும் பில்கேட்ஸ் என்பவரிடமும் ஆலோசனை பெற்று வருகிறார். இத்தகைய பின்னணியில் சிலிக்கன் பள்ளத்தாக்கு எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் அலட்சியப்படுத்தி விட முடியாது. சிலிக்கன் பள்ளத்தாக்கே இத்தொழிலில் முதன் முதலில் ஈடுபட்டதன் காரணமாக, இப்பள்ளத்தாக்கு தொடர்ந்தும் இத்துறையில் உலகில் முன்னணியில் திகழ வேண்டும் என்பது நியதியல்ல. ஆனால் அதற்கான அச்சுறுத்தல்கள் உள்ளன. அவற்றினைச் சமாளிக்க தொடர்ந்து நிபுணர்களை பயிற்றுவித்துக் கொண்டிருத்தல் அவசிய மாகிறது. அது ஒரு பெரும் சவாலாகும். இத்துறையில் வெற்றி பெறுபவரே எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளும் (Winner takes all) பண்பு காணப்படுவதால் செல்வத்தை எப்படிப் பகிர்ந்து கொள்ளலாம் என்பதும் பெரும் சவாலாகக் காணப்படுகிறது. இது உலக நாடுகளின் பாராளுமன்றங்களில் இப்போது காரசாரமாக விவாதிக்கப்படுகின்றது.

இப்பிரச்சினைகளும் கருத்துக்களும் நேற்று தோன்றியவை அல்ல. பீட்டர் டிரக்கர் (Peter Dracker) என்பவர் 1950 ஆம் ஆண்டுகளிலேயே அறிவுடைய ஊழியர்கள் பற்றிய பிரச்சினைகள் பற்றி எழுதியிருந்தார். சிலிக்கன் பள்ளத்தாக்கின் உயர் தொழில் நுட்பங்களும் அண்மையில் ஏற்பட்டனவல்ல. அங்கு ஏற்பட்ட முன்னணி நிறுவனங்களின் ஸ்தாபகர்களில் ஒருவரான ஹீவ்லெட் பெக்கார்ட் (Hewlett Packard) என்பவருக்கு இப்போது வயது 60 ஆக இருக்கின்ற போதிலும் அவர் சிலிக்கன் பள்ளத்தாக்கு இன்று பரிசோதனை நிலைமைகளின் மட்டம் ஒன்றிலேயே காணப்படுவதாகவே நம்புகிறார். ஐக்கிய அமெரிக்காவில் கலிபோர்னியா அமெரிக்காவை விட உயர்ந்ததாகக் காணப்படுவது போன்று நவீன வர்த்தகத்தை விட சிலிக்கன் பள்ளத்தாக்கு சிறிது உயர்ந்ததாகக் காணப்படுகிறது என அபிப்பிராயங்கள் கூறப்படுகின்றன.

**அமைவிடக் காரணிகள்:** சிலிக்கன் பள்ளத்தாக்கின் உயர் தொழில் நுட்ப நடவடிக்கைகள் அங்கே தோன்றுவதற்கு வரலாறும், புவியியலும் காரணம் எனக் கூறப்படுகிறது. பொருளியலாளர்களும் அரசியல்வாதிகளும் சிலிக்கன் பள்ளத்தாக்கின் எழுச்சிக்கு பின்வரும் காரணங்களே முக்கியமானதென அண்மைக்காலம் வரை கூறிவந்தனர்.

(அ) பயிற்சிபெற்றதும் நெகிழ்ச்சியான பண்பினதான தொழிலாளர் போதியளவில் காணப்பட்டார்கள்.

(ஆ) அப்பிரதேசத்தின் தொழிலுக்குத் தேவையானவற்றை அளிக்கும் ஆற்றல் உடையவர்கள் காணப்பட்டார்கள்.

(இ) தொழில்களுக்குத் தேவையான மூலதனங்களை வழங்கக்கூடிய நிதி நிறுவனங்கள் காணப்பட்டன.

(ஈ) அதிசிறந்த கல்வி வசதிகளும், ஆராய்ச்சிக்கான நிறுவனங்களும் குறிப்பாக ஸ்டென் போர்ட் (Stanford), பேர்கலி (Berkeley) பல்கலைக்கழகங்களும், ஜெரோக்ஸ் பாலோ அல்டோ (Xerox's Palo Alto) ஆராய்ச்சி நிலையம் என்பனவும் காணப்பட்டன.

பள்ளத்தாக்கினை வர்த்தக படத்தில் இடம் பெயரச் செய்வதற்கு இக்காரணிகள் உதவி புரிந்தன என்பது உண்மை தான். ஸ்டன்போர்ட் பல்கலைக்கழகத்தினைச் சூழ்ந்து சுமார் ஆயிரம் நிறுவனங்கள்

தோன்றியுள்ளன. ஆயினும் மேற்கூறிய காரணங்கள், விளைவுகளுக்கான ஒரு பக்க விளக்கம் மட்டுமே யாகும்.

பேர்க்லி பல்கலைக்கழக பேராசிரியர் சக்சீனியன் (Saxenian) என்பவர் தனது ''பிரதேசத்திற் குரிய அனுகூலம்: சிலிக்கன் பள்ளத்தாக்கில் பண்பாடும் போட்டியும் 128 ஆம் இலக்க வழியும்'' என்ற நூலில் பொஸ்டனினது 128ஆவது வழியினைச் சார்ந்து காணப்படும் மூலதன வசதிகளும் ஆராய்ச்சிக் கான வாய்ப்புக்களும் சிலிக்கன் பள்ளத்தாக்கினை விடக் கூடியதாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். இருந்த போதிலும் 1970 ஆம் ஆண்டுளில் சிலிக்கன் பள்ளத்தாக்கு 128 ஆம் இலக்க வழியினை விட கூடிய உயர் தொழில் நுட்ப தொழில்களை உருவாக்கியுள்ளது. அத்துடன் 1980ஆம் ஆண்டுகளில் இரண்டு பகுதிகளுமே வீழ்ச்சியினை எதிர் நோக்கிய போது சிலிக்கன் பள்ளத்தாக்கு நிலைமைக்கு ஏற்ப தன்னை சுதாகரித்துக் கொண்டதோடு அவ்வாறு சமாளித்துக் கொள்ளும் தகுதி உள்ளது என்பதையும் உறுதிப் படுத்தியது.

பேராசிரியர் சக்சினியன், இதற்கு தொழிலில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடைய கலாசாரங் களும் அமைப்பு முறைகளுமே காரணம் என அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். உதாரணமாக கிழக்கு கரையோர நிறுவனங்களான டிஜிடல் எகுப்மன்ட்ஸ் கூட்டுத்தாபனம் (Digital Equipment Corp.), டேடா ஜெனரல் (Data General) போன்றவை சிறிய கம்பியூட்டர்கள் (Mini Computer) உற்பத்தியில் மாத்திரம் ஈடுபட்டிருந்தன. அதே போல் சிலிக்கன் பள்ளத்தாக்கு நிறுவனங்களும் மென் உற்பத்திகளிலேயே ஈடுபட்டிருந்தன. ஆனால் சிலிக்கன் பள்ளத்தாக்கு நிறுவனங்கள் பன்முகப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஏனைய நிறுவனங்களுடன் தடையற்ற வகையில் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தன. இதனால் அவை ஒரு வலைப்பின்னல் முறையில் பொருளாதார அமைப்பைக் கொண்டு விரைவாக மாற்றங்களுக்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொள்ளும் தகைமைகளைக் கொண்டிருந்தன.

இங்கே பழைய நிறுவனங்கள் ஒழிந்து போகும் போது புதியன தோன்றுகின்றன. அதனால் மூலதனம், கருத்துக்கள், மக்கள் யாவருமே மீளப் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படுகின்றனர். இவற்றில் இங்கே முயற்சியாளர்கள் காணப்படுகின்றமையும் அவர்களைக் கவருவதான அயராததும் உற்சாகமிக்கதுமான தொழில் கலாசாரம் காணப்படுவதும் முக்கிய காரணிகளாகும்.

சிலபகுதிகளில் இடரீதியாகக் குழுமியதாகவும் சில சமூகங்களில் செறிவான முறையிலும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. ஹொலிவுட் சிலிக்கன் பள்ளத்தாக்குப் பகுதிகளிலும், வெளிநாடுகளில் இருந்து வந்துள்ள சீன சமூகத்தினர் மத்தியிலும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் காணப்படு கின்றன. கலாசாரம் என்பது காட்சிக்கு தோன்றாத ஒரு காரணியாக இருந்தாலும் அதுவே தொழில்நுட்பம், பொருளியல் ஆகிய காரணிகளை விட கூடியளவில் இப்பகுதிகளில் இத்துறை முன்னேற காரண மாயிருந்துள்ளது. அக்கலாசாரம் இடர்களை எதிர்நோக்கும் (Risk taking) பண்பினைக் கொண்டது. உதாரணத்துக்கு பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

**தோல்வியினைப் பொறுத்துக் கொள்ளும் கலாசாரம்:** ஐரோப்பாவில் வணிக முயற்சிகளில் தோல்வியுற்றால் (Bankraptcy) அது அவதூறுக்குரியதாகக் கருதப்படுகிறது. சில நாடுகளில் வணிக நடவடிக்கைகளில் ஒரு முறை தோல்வியுற்றால் மீண்டும் அத்தொழிலைத் தொடருவதற்கு அவர்கள் தகுதியற்றவர்கள் என்ற அபிப்பிராயம் நிலவுகின்றது. அமெரிக்காவில் கடனைத் திருப்பிக் கொடுக்கா தவர்களுக்காகத் தனிப்பட்ட சிறைச்சாலை இல்லை என்ற கருத்து அமெரிக்காவில் இத்தகையனவற்றைப் பொறுத்துக் கொள்ளும் கலாசாரம் அங்குள்ளது என்பதனையே எடுத்துக் காட்டுகின்றது. ஹென்றி போர்ட் (Henry Ford) என்பவர் ஆரம்பித்த முதல் இரண்டு கார் உற்பத்தித் தொழில்களும் தோல்வியுற்றுள்ளன.

பல இன்டர்நெட் நிறுவனங்கள் வீழ்ச்சியுற்றுள்ளன. ஆனால் சிலிக்கன் பள்ளத்தாக்கு, தவறுகளை வெகு விரைவில் மறந்து விடும் பண்பினதாக உள்ளது.

**நம்பிக்கைத் துரோகத்தினைப் பொறுத்துக் கொள்ளும் கலாசாரம்:** உத்தியோகத்தர் களையும், இரகசியங்களையும் சிலிக்கன் பள்ளத்தாக்கில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள முடியாது.

1957 ஆம் ஆண்டு சொக்லீ லெபோரடரீஸ் (Shockley Laboratories) நிறுவனத்தில் இருந்து வெளியேறியவர்களைத் துரோகிகள் எனக் குறிப்பிட்டார்கள். வெளியேறிய எட்டுப் பேர்களும் சேர்ந்து முதலில் பெயர் சைலட் செமி கண்டக்டர்ஸ் (Fair Child Semi Conductors)நிறுவனத்தினை உருவாக்கி னார்கள். இவர்களில் ஒருவரே பின்னர் உலகப் பிரசித்தி பெற்ற 37 வேறான நிறுவனங்களை உருவாக்கிய இன்டெல் (Intel) புகழ் கோர்டன் மூர் (Gordon Moore) என்பவராவார். சிலிக்கன் பள்ளத்தாக்கின் பெரிய நிறுவனங்கள் யாவுமே முன்னர் ஏதோ நிறுவனத்துடன் இருந்து பிரிந்து வந்தனவேயாகும்.

நிறுவனங்கள் பயிற்றுவிக்கின்ற நிபுணர்கள் பின்னர் பிரிந்து வந்து தொழில் ஆரம்பிப்பது சகஜம். இதனைப்பற்றி சன் மைக்ரோ சிஸ்டம்ஸ் (Sun Micro Systems) அதிபர் ஸ்கொட் மெக் நீலி (Scot McNealy) கருத்து கூறும்போது ''நானே அவ்வாறு பிரிந்து வந்தவன் தான். ஆனால் என்னை விட்டு பிரிந்து போகிறவர்களை நான் தொழிலுக்கு வைத்துக் கொள்ள விரும்புவதில்லை. என்னிடம் 20,000 பேர் தொழில் புரிகின்றனர்'' எனக் கூறுகிறார்.

**இடர்களை எதிர் நோக்குதல்:** சிலிக்கன் பள்ளத்தாக்கு தொழிலதிபரிடம் ஒரு தொழில்நுட்பப் பிரச்சினை பற்றி அபிப்பிராயம் கேட்டால் அவர் அது இன்னொருவருக்கான வாய்ப்பு என்ற கருத் தினையே கூறுவார். சிலிக்கன் பள்ளத்தாக்குத் தவிர்ந்த அமெரிக்காவின் ஏனைய பகுதிகளிலும், ஐரோப்பாவிலும் முதலீட்டாளர்கள் சிறிய விடயங்களைப் பொறுத்தும் அலட்டிக் கொள்வார்கள். ஆனால் சிலிக்கன் பள்ளத்தாக்கு முதலீட்டாளர்கள் வாய்ப்புக்களையும், முயற்சியாளர்களையும் ஊக்குவிப்பதில் சளைக்காதவர்கள். இடர்களை ஊக்கத்துடன் எதிர்நோக்குவது தொழில் முதலீட்டாளர்களுக்கு அர்த்தமிக்கதாகும். சிலருக்கு அதிர்ஷ்டமில்லாமல் போனாலும் வேறு சிலருக்குப் பெரும் நன்மைகள் ஏற்பட்டுள்ளன. தொழில் நுட்ப வியாபாரத்தில் முதலில் ஈடுபடும் நிறுவனம் சில தகுதிகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் சந்தையில் மற்றோரை விட முன் நிற்கலாம். சிலிக்கன் பள்ளத்தாக்கு முன்னணி முதலீட்டாளரான டிம் டிராப்பர் (Tim Draper) என்பவர் தனது அனுபவத்தின் அடிப்படையில் பள்ளத் தாக்கில் ஆரம்பிக்கப்படும் 20 கம்பனிகளின் எதிர்காலம் பற்றி பின்வருமாறு எதிர்வுகூறுகின்றார்.

1. 4 நிறுவனங்கள் தோல்வியடைந்து விடும்.
2. 6 நிறுவனங்கள் தொழிலில் நிலைத்து நின்றாலும் பணத்தில் நட்டமடைவன.
3. 6 நிறுவனங்கள் சுமாரான இலாபத்தை அடைகின்றன.
4. 3 நிறுவனங்கள் சிறந்த இலாபத்தை அடைகின்றன.
5. 1 நிறுவனமே ஜக்பொட் அதிஷ்டத்தில் இயங்க முடியும்

### சிலிக்கன் பள்ளத்தாக்கின் பிரதான தொழில்வகைகள்

1. சொப்ட்வியார் (Software)
2. மென் ஊடுகடத்தி (Semi Conductors)
3. கம்பியூட்டர், தொடர்பாடல் (Computer / Communication)

4. பாதுகாப்பு, விண்வெளி *(Defence / Aero Space)*

5. உயிரியல் விஞ்ஞானம் *(Bio Science)*

6. புது முறை காணும் சேவைகள் *(Innovation Service)*

7. சூழல் தொழில் நுட்பங்கள் *(Environment Technologies)*

8. கண்ணிய தொழில் சேவைகள் *(Professional Services)*

**உலகின் ஏனைய சிலிக்கன் பிரதேசங்கள்:** மைக்ரோ சொப்ட் தீரர் பில்கேட்ஸ் சிலிக்கன் கலாசாரம் உலகில் பரவுகிறது என்றும் அது இப்போது 22 நாடுகளில் பரவி கம்பியூட்டர் துறை சார் நிகழ்ச்சி தயாரிப்பு நிபுணர்கள் **(Programme Experts)** அதிகரித்து வருவதாகவும் கருத்துத் தெரிவித் துள்ளார். பின்லாந்தின் ஹோலி சீ **(Holy See)**, நியூசிலாந்து என்பனவும் அவற்றில் அடங்குகின்றன. இஸ்ரேல், யப்பான், பல ஐரோப்பிய நாடுகளிலும் நிகழ்ச்சித் தயாரிப்பு ஊழியர்களின் தொகை அதிகரிக்கின்றது.' சீனாவிலும் ஒப்பளவில் நிகழ்ச்சி தயாரிக்கக்கூடியவர்களின் அளவு அதிகரித்தே வருகின்றது. பில்கேட்சின் நிறுவனம் சியாட்டல் **(Seattle)** நகரில் அமைந்துள்ளது. அது இப்போது வளர்ச்சியடைந்து வரும் ஒரு மையமாகும். வாசிங்டன் மாகாணத்தில் 2,000 சொப்ட்வியர் **(Software)** நிறுவனங்கள் இயங்குகின்றன. அவற்றின் வருடாந்த வியாபாரம் 2.3 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது.

டெக்சஸ் மாகாணத்தில் ஒஸ்டின் **(Austin)** நகரம் மாத்திரமன்றி உலகின் வேறு சில பகுதிகளும் சிலிக்கன் பள்ளத்தாக்கின் அந்தஸ்தினைக் கோரிவருகின்றன. அவற்றில் பிரித்தானியா, இந்தியாவில் பெங்களூர், இஸ்ரேல், நியூயோர்க்கில் மென்ஹொட்டன் தீவுப்பகுதி, தாய்வானின் சின்சூ விஞ்ஞான பூங்கா போன்றன முக்கியமானவையாகும்.

மேற்கைரோப்பாவில் உயர் தொழில் நுட்பத் துறையில் சிலிக்கன் அந்தஸ்துக்கு உயர பிரித்தானியா தரம்மிக்க போட்டியாளராக வளர்ந்துள்ளது. அந்நாட்டில் தரம்மிக்க விஞ்ஞானிகள் மூன்று பிரதான மையங்களில் செறிந்து காணப்படுகின்றனர். ஸ்கொட்லாந்து, கேம்பிரிட்ஜ், தேம்ஸ் பள்ளத்தாக்கு ஆகிய மூன்றும் முக்கியமானவையாகும். ஆயினும் பிரித்தானியாவில் அனைத்து வகை சார்ந்த எலக்ரோனிக் கம்பனிகளின் பெறுமதியும் நாட்டின் மொத்த வருவாயில் 5 வீதமாகவே காணப்படுவதுடன் இத்துறை முயற்சியாளர்கள் ஏனைய முயற்சியாளர்களுடன் ஒப்பிடும் போது பெரிதும் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

இந்தியாவின் தென்மாநிலங்களில் ஒன்றான கர்நாடகாவில் அமைந்துள்ள பெங்களூர் நகரம் ஏற்கனவே சொப்ட்வியர் தொழில் மூலம் சிலிக்கன் பள்ளத்தாக்கில் இருந்து வருடம் (1996) 280 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தைப் பெற்று வருகிறது. இந்திய பல்கலைக்கழகங்கள் கம்பியூட்டர் திட்ட நிகழ்ச்சித் தயாரிப்புக்கான பயிற்சிகளை பெரியளவில் அளித்து வருகின்றன. இந்தியாவில் 600 உயர் தொழில் நுட்ப தொழில் நிறுவனங்கள் ஏறத்தாழ 150,000 பேர்களைத் தொழிலுக்கமர்த்தி உள்ளன. தற்போது பெங்களூர் மற்றவர்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்வதி லேயே நிபுணத்துவம் பெற்றுள்ளது. இந்தியாவில் இத்தொழிலின் வளர்ச்சிக்கு ஏற்ற பல்வேறு உள்ள மைப்பு வசதிகளும் காணப்பட்ட போதிலும் இந்திய உயர் தொழில் நுட்ப நிபுணர்கள் கலிபோர்னியா சென்று தொழில் புரிவதனையே விரும்புகின்றனர்.

இஸ்ரேல் நாடும் விகிதாசார ரீதியாகப் பார்க்கும் போது அதன் குடித்தொகையை விட கூடிய விஞ்ஞானிகளைக் கொண்டுள்ளது. அந்நாட்டில் 2,000 உயர் தொழில் நுட்ப நிறுவனங்கள் இயங்கு

கின்றன. செக்பொயின்ட் (Check Point) போன்ற நிறுவனங்கள் கம்யூட்டர் வலைப்பின்னல் அமைப்பு (Net Work) சேவைகளுக்கான சேவைகளை வழங்குகின்றன. 1996 ஆம் ஆண்டு 18 இஸ்ரேல் நிறுவனங்கள் ஐக்கிய அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டன. வெளிநாடொன்று ஐக்கிய அமெரிக்காவில் இத்துறை சார்ந்த தொழிலை அதிகளவில் ஆரம்பித்தது இதுவே முதல் தடவையாகும். சிலிக்கன் பள்ளத்தாக்கின் உயர் தொழில் நுட்ப நிறுவனங்கள் குறிப்பாக சன் (Sun), சிலிக்கன் கிராபிக்ஸ் (Silicon Graphics), பே நெட்வேர்க்ஸ் (Bay Networks), ஹீல்லெட் பெக்கார்ட் (Hewlett Packard), இன்டெல் (Intel) போன்றவை தமது கிளை அலுவலகங்களை இஸ்ரேலில் நிறுவியுள்ளன. கலிபோர்னியா முதலீட்டார்கள் இஸ்ரேல் கலிபோர்னியாவைப் போன்ற சூழலைக் கொண்டுள்ளதாக எண்ணுகின்றனர்.

பொஸ்டன் பகுதியும் சிலிக்கன் பள்ளத்தாக்குடன் இணைந்து செயற்படும் வகையில் வளர்ந்துள்ளது. மன்ஹட்டன் தீவு உயர் தொழில் நுட்பத் துறைக்கான பயிற்சி பெற்றவர்களை போதியளவில் கொண்டுள்ளமை அதன் தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பாக உள்ளது. கூர்ப்பஸ் அன்ட் லைபிரான்ட் (Coopers & Lyprand) நிறுவனத்தின் கடைசி அறிக்கையின்படி நியூயோர்க் இத்துறையில் 3.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக பெற்றதுடன் 71,500 ஊழியர்களை இத்தொழிலில் அமர்த்தியிருப்பதாகவும் தெரிய வருகிறது. ஆனால் பல கலிபோர்னிய பொருளியல் நிபுணர்கள் இத்தரவுகளை ஏற்க மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

தைவானில் அதன் தலைநகரமான தைப்பேயின் வட திசையில் 1 மணி நேர பயண தூரத்தில் சின்சூ சயன்ஸ் பார்க் (Hsinchu Science Park) அமைந்துள்ளது. தாய்வான் அரசாங்கம் அதன் உயர் தொழில் நுட்ப நிபுணர்களைச் சிலிக்கன் பள்ளத்தாக்கில் இருந்து மீட்டெடுப்பதற்காக 1980 ஆம் ஆண்டில் மேற்கூறிய உயர் தொழில் நுட்பப் பூங்காவை நிறுவியது. இத்தொழிலில் முதலிடுபவர்களுக்கு பலவித வரிச்சலுகைகளை அளித்த அரசாங்கம், அவர்களது தொழிலில் அரசு தலையிட மாட்டாது என்ற உறுதி மொழியினையும் அளித்து ஊக்குவித்தது. இதனால் இப்போது சின்சூபார்க்கில் 50,000 உயர் தொழில் நுட்ப ஊழியர்களைக் கொண்ட பல சிறிய தொழில் நிறுவனங்கள் இயங்குகின்றன. சிப்ஸ் உற்பத்தியே முக்கிய தொழிலாக இருந்த போதிலும் தைவானின் அசர் (Acer) நிறுவனம் தனிப்பட்டோருக்கான கம்பியூட்டர்களை உற்பத்தி செய்வதில் உலகில் முக்கியமான நிறுவனமாக விளங்குகின்றது. இவ்வாறான வளர்ச்சிகளுடனும், தைவானும் இந்தியாவைப் போன்றே தனது சொந்த கருத்துக்களுடன் இத்தொழிலில் ஈடுபடாது ஐக்கிய அமெரிக்காவின் வழிகாட்டல்களிலேயே இயங்குகின்றமை ஒரு குறைபாடாக காணப்படுகிறது. எனவே இத்துறையில் வளர்ச்சியும் மாற்றமும் தேவை.

சிலிக்கன் பள்ளத்தாக்கினை ஒத்ததாக சொப்ட்வியர் வியாபாரத்தில் வெளிநாடுகளில் தொழில் நிறுவனங்கள் இல்லை. ஆனால் கலிபோர்னியாவைப் போன்று உள்ள வெளிநாட்டவர்களை பெருமளவுக்கு கொண்ட இன்னொரு பகுதியான சன்டியாகோ மையத்தில் உயிரியல் தொழில் நுட்ப வலைப்பின்னல் (Bio Technology Net Work) தொழில் மையங்களும், லொஸ் ஏஞ்சல்சில் உள்ள தளபாட, நெசவுத் தொழில் சார்ந்த தாழ் தொழில் நுட்ப மையங்களும் சிலிக்கன் பள்ளத்தாக்கினைப் பிரதிபலிக்கின்றன. இவை பற்றி லொஸ்ஏஞ்சல்சில் உள்ள பொருளியல் நிபுணரான ஜோல் கொட்கின் (Jole Kotkin), மஞ்சள் கௌண்டி (Orange County) பகுதியில் உள்ள இர்வின் (Irvene) நகரம் 1996ஆம் வருடம் ஐக்கிய அமெரிக்காவில் விரைவாக வளர்ச்சி பெற்ற 500 நிறுவனங்களில் ஒன்பது நிறுவங்களைக் கொண்டு செயற்பட்டதாக குறிப்பிடுகிறார்.

# உலக கணணி வலைப்பின்னல் (Internet)

**வே.மகிந்தன், மின்னியல்துறை (3 ம் வருடம்), பொறியியற் பீடம்.**

*'இன்ரநெற்' என்ற பதம் இன்று எல்லோராலும் பேசப்படும் அளவிற்கு தகவற் தொடர்பு தொழில்நுட்ப வளர்ச்சியில் பாரியளவில் தனது பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கின்றது. இந்நிலையில் 'இன்ரநெற்' என்றால் என்ன? அது எவ்வாறு தொழிற்படுகின்றது? தமிழில் 'இன்ர நெற்'றின் பங்கு என்ன? என்ற பொதுவான கேள்விகட்கு இக்கட்டுரை விடைகாண முயல்கின்றது.*

*'இன்ரநெற்' என்பது மக்கள், தகவல்கள், கணணிகள் என்பவற்றைக் கொண்டிருக்கும் உலக ளாவிய வலைப்பின்னல் என்பதன் மூலம் வரையறுக்கப்படலாம். அமெரிக்காவின் உயர்பாதுகாப்பு ஆராய்ச்சித் திணைக்களத்தினால் (ARPA) இராணுவ புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக 1968 ம் ஆண்டு உருவாக்கப்பட்ட "ARPANET" இன்று 'இன்ரநெற்' ஆக வளர்ச்சியடைந்துள்ளது.*

## தகவற் பரிமாற்றம்

*'இன்ரநெற்' வெவ்வேறு வகையான கணணிகளையும் வேறுபட்ட இயங்கு முறைகள் (Operating System) கொண்ட கணணிகளையும் இணைக்கின்றது. அவ்வாறு இணைக்கப்படும் போது ஒரு பொதுவான ஊடகம் தேவைப்படுகின்றது. அதுவே TCP/IP (Transfer Control Protocol and Internet Protocol) என அழைக்கப்படுகின்றது. 'புறோட்டோகோல்' (Protocol) என்பது ஒரு தொகுதி இயங்கு படிமுறைகளின் தொகுப்பு ஆகும். அவை தொழில்நுட்ப பதங்கள், அவற்றின் செயல்பாட்டு முறைகள் என்பன பற்றி விளக்கி அவற்றைச் செயற்படுத்துகின்றன. உதாரணமாக ஒரு இலத்திரனியல் தபாலில் (E-mail) தகவல் அனுப்புதல், பெறுதல் எவ்வாறு செயற்படுத்தப்பட வேண்டும் என்பதனை நிர்ணயிக்கின்றது. இவ்வாறான நூற்றுக்கும் மேற்பட்ட 'புறோட்டோகோல்'களை TCP/IP ஆனது தொகுத்து கணணிகளை இணைக்கின்றது. IP ஆனது ஒருமுனையில் இருந்து மறுமுனைக்கு தகவல் அனுப்பும் பாதையை நிர்ணயிக்கின்றது. தகவல்கள் செல்லும் ஒரு பாதையில் தடங்கல் ஏற்படும் போது அதற்கு மாற்றீடான பாதையில் தகவல்கள் அனுப்பும் பணியையும் இது செய்கின்றது.*

## பெயரீட்டு முறை

*'இன்ரநெற்'றில் ஒவ்வொரு தகவல் தளங்களும் தங்களுக்கே உரித்தான முகவரியைக் (URL) கொண்டுள்ளன. இப் பெயரீட்டு முறையானது Domain Name System அல்லது DNS என்று அழைக்கப் படும். உதாரணமாக http:// www.pdn.ac.lk என்பது பேராதனைப் பல்கலைக்கழகத்தினது இன்ரநெற்*

முகவரியாகும். இதில் http என்பது Hyper text Markup Language என்பதனையும், www என்பது World Wide Web என்பதனையும், pdn என்பது பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கான பெயரையும், ac என்பது உப நிலை இராச்சியத்தையும், lk என்பது உயர் நிலை இராச்சியத்தையும் குறிக்கின்றன.

உயர்நிலை இராச்சியம் (Domain) என்பது இருவகைப்படுத்தப்படலாம். ஸ்தாபனங்களின் இராச்சியங்கள், புவியியல் நிலை இராச்சியங்கள் என்பன அவையாகும். ஸ்தாபன இராச்சியங்கள் இன்ரநெற்றின் ஆரம்பகாலத்தில் அமெரிக்காவில் பாவிக்கப்பட்டு பின் உலகளாவிய ரீதியில் விரிவு படுத்தப்பட்டவை. ஸ்தாபன இராச்சியத்தின் கீழ் com-வர்த்தக ஸ்தாபனங்கள், edu- கல்வி நிறுவனங்கள், gov - அரசாங்க நிறுவனங்கள் (அமெரிக்கா), int - சர்வதேச நிறுவனங்கள், mil - இராணுவ நிறுவனங்கள், net - வலைப்பின்னல் நிறுவனங்கள், org- இலாபநோக்கற்ற நிறுவனங்கள் அடக்கப்படுகின்றன. புவியியல் நிலை இராச்சியங்களின் கீழ் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு இராச்சியப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக lk- இலங்கை, jp- யப்பான், uk- ஐக்கிய இராச்சியம், ca - கனடா போன்றவற்றைக் குறிப்பிடலாம். உபநிலை இராச்சியம் என்பது ஒரு குறிப்பிட்ட நிறுவனம் தனக்கென ஒரு இணைப்பைப் பெற்ற பின்னர் அதிலிருந்து இணைப்புக்களை வழங்குதல் ஆகும். உதாரணமாக, மேலே குறிப்பிடப்பட்ட ac என்பது LEARN எனப்படும் ஒரு கல்வி சார் நிறுவனத்தின் சுருக்கப் பெயராக உயர்நிலை இராச்சியத்தினால் வழங்கப்பட்டதாகும். LEARN ஆனது இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள், மற்றும் பல கல்வி நிறுவனங்களை இணைத்து அவற்றை உயர் நிலை இராச்சியமான lk உடன் இணைத்துள்ளது. இதன் மூலம் மொறட்டுவப் பல்கலைக்கழக 'இன்ரநெற்' முகவரி www.mrt.ac.lk என்றவாறாக அமையும்.

இராச்சிய பெயரீட்டு முறைமை (DNS)இன் கீழ் வழங்கப்படும் பெயர்களுக்கு ஒரு இலக்க முறைப் பெயரீடு ஒன்றும் கொடுக்கப்படும். இவ்விலக்க முறைப் பெயர் IP முகவரி என்றழைக்கப்படும். இதன் மூலமே IP இனால் சரியான முனைக்கு தகவல்கள் அனுப்பப்படுகின்றன. உதாரணமாக pdn.ac.lk என்பது இலக்கப் பெயரீட்டில் 192.248.40 என்றவாறாக அமையும்.

## 'இன்ரநெற்'றின் பிரிவுகள்

'இன்ரநெற்'றை அதன் தொழிற்பாட்டின் அடிப்படையில் பல்வேறு வகைகளாக வகுத்து நோக்கலாம். E-mail, http (web), ftp,usenet, Gopher, Archie, telnet என்பன அவையாகும்.

இலத்திரனியற் தபால் (E-mail) இது தனிப்பட்ட தகவற் பரிமாற்றத்திற்கு பாவிக்கப்படுகின்றது. இதுவே 'இன்ரநெற்'றில் கூடுதலான மக்களால் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக Name@pdn.ac.lk என்பதனை எடுத்துக் கொண்டால் பேராதனைப் பல்கலைக்கழக 'சேர்வர்' இல் குறிப்பிட்ட பெயருக்குரியவரிற்கு அனுப்பப்படும் தகவல்கள் சேமிக்கப்படுகின்றன. தகவல்களை உலகெங்கிலும் இருந்து அனுப்ப முடியும். 'சேர்வர்' வசதி இல்லாதவர்கள் இலவசமாகவோ, பணம் செலுத்தியோ இவ்வசதியினைப் பெற்றுக் கொள்ள முடியும். இலவச இலத்திரனியல் தபால் வசதிகளை வழங்குவதில் www.yahoo.com, www.hotmail.com போன்ற பல நிறுவனங்கள் பிரசித்தி பெற்ற நிறுவனங்கள் ஆகும். இவர்களது 'வெப்'தளத்தில் நுழைந்து எமக்கென இலத்திரனியல் தபால் முகவரியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இலத்திரனியற் தபாலிற்கு அடுத்ததாக 'இன்ரநெற்'றில் பயன்படுத்தப்படும் பகுதி http, (web அல்லது www) ஆகும். இதுவே இன்ரநெற்றின் தகவற் பரிமாற்றத்தின் தாய்த்துறை ஆகும். சங்கிலி (link) இணைப்புகள் கொண்ட இத்தகவற் பெட்டகமானது தகவல்களை சொற்கள், பட உருக்கள், புகைப் படங்கள், அசைதகு சொற்கள், பட்டிகள் (Banners), ஒலிகள், வரைபடங்கள், வீடியோ படங்கள் போன்ற ஏராளமான வடிவங்களில் கொண்டுள்ளது. ஒரு மனிதன் தனக்குத் தேவையான அன்றாட அலுவல்களை

வீட்டில் இருந்து கொண்டே செய்து முடிக்கும் அளவிற்கு இது வளர்ச்சியடைந்துள்ளது. உதாரணமாக ஒரு 'வெப்'மூலம் தேவையான பொருட்களின் தரம், விலை என்பன பற்றி அறிந்து கொள்வதுடன், **credit card** மூலம் பணத்தை செலுத்தி அவற்றைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். 'இன்ரநெற்' றிலோ, 'வெப்'பிலோ எல்லா தளங்களின் முகவரிகளையும் தெரிந்து வைத்திருத்தல் முடியாத காரியம் ஆகும். ஆனால் எமக்கு தேவையான பகுதியுடன் சம்பந்தப்பட்ட 'வெப்'தளங்களை தேடுதல் செய்து அறிவதற்காக, பல 'வெப்' தளங்களை 'இன்ரநெற்'றில் உருவாக்கியுள்ளார்கள். அவற்றில் உலகில் உள்ள வெப்தளங்கள் பற்றிய தகவல்களை சேமித்து இணைத்துள்ளனர். அதன் மூலம் தேவையான தகவல்களையோ அல்லது நேரடியாக தேவையான வெப்தளத்திற்கோ செல்லமுடியும். இவ்வகை தேடுதல் தளங்களை "Search Engine" என அழைப்பர். உதாரணமாக www.yahoo.com, www.webcrawler.com போன்றவை உலகப் பிரசித்தி பெற்ற தேடுதற் தளங்கள் ஆகும்.

ftp (file transfer protocol) ஆனது கோப்புக்களை (file) ஒரு முனையில் இருந்து மறு முனைக்கு மாற்றீடு செய்கின்றன. எவ்வகையான கோப்பு அடிக்குறிப்பு **(file extension)** கொண்ட கோப்புக்களையும் மாற்றீடு செய்ய முடியும். 'இன்ரநெற்'றில் மென்பொருட்கள் **(Software)** சாவிப்பலகை எழுத்துருக்கள் **(Fonts)** போன்றன, இவ்வகை 'புறோட்டோகோல்' மூலமே இறக்குமதி, ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

usenet என்பது விவாதக் குழுக்களின் சேர்மானம் ஆகும். உலகெங்கும் இருந்து பல மில்லியன் மக்கள் ஒரு விவாதத்தலைப்பின் கீழ் ஒன்றுபட்டிருப்பர். இவர்கள் அக்குறிப்பிட்ட விடயத்தைப் பற்றி ஆய்வுகள், விவாதங்கள் நடத்துவர். உதாரணமாக கணனி, விஞ்ஞானக்கதைகள், நகைச்சுவை, பொறியியல், மருத்துவம், இலக்கியம் போன்ற துறைகளில் கூடுதல் விவாதங்கள் நடைபெறுகின்றன.

Gopher என்பதில் 'மெனு' அடிப்படையில் தகவல்கள் அடுக்கப்பட்டுள்ளன. இது இன்ரநெற் வசதிகளை இலகுவாகவும் விரைவாகவும் பெற்றுக் கொள்ள உதவுகின்றது. **telnet** என்பது இன்ரநெற்றில் இணைக்கப்பட்டுள்ள கணணி ஒன்றின் ஊடாக வேறொரு கணணியை இன்ரநெட்டில் இணைத்தல் ஆகும். இது ஆரம்ப காலங்களில் **"main frame"** கணணிகளில் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டது. இதன் மூலம் தூர இடங்களில் இருந்தும் ஒரு முனைக் கணணியைக் கட்டுப்படுத்த முடியும்.

## இன்ரநெற் இணைப்பு

இன்ரநெற் சேவை வழங்குநர்கள் இருமுறையில் இணைப்புகளை வழங்குகின்றனர். நேரடி இணைப்புச்சேவை இலக்கச் சுழல் இணைப்புச் சேவை என்பன அவையாகும். ஒரு இன்ரநெற் இணைப்பு சேவையை பெறுவதற்கு ஒருவர் அல்லது ஒரு நிறுவனம் கணணி, மொடம் (Modem), தொலைபேசி இணைப்பு, சிலவகை மென்பொருட்கள் என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். சில சமயங்களில் நேரடி இணைப்புச் சேவை விசேட வகை 'கேபிள்'கள் மூலம் வழங்கப்படுகின்றன.

நேரடி இணைப்புச் சேவையைப் பெறுபவர் ஒரு 'இன்ரநெற்' முகவரியை கொண்டிருப்பார். இது **URL (Uniform Resource Locator)** என்றழைக்கப்படும். உதாரணமாக பேராதனைப் பல்கலைக்கழகம் நேரடி இணைப்புச் சேவையைக் கொண்டுள்ளது. **(www.pdn.ac.lk)** இவ்வகை இணைப்பைப் பெறுபவர்கள் ஒரு சேமிப்பகத்தினை (Server) பராமரித்து அதில் அவர்கள் வெளியிட விரும்பும் தகவல்களைச் சேமித்து வைப்பர். அத்துடன் இவர்களால் இலத்திரனியல் தபால் சேமிப்பகத்தினையும் வைத்திருக்க முடியும். இதன் மூலம் தங்கள் நிறுவனத்தில் உள்ளவர்களுக்கு இலத்திரனியல் தபால் வசதிகளை வழங்க முடியும். இவ்வகை நேரடி இணைப்புக்கள் 24 மணிநேரமும் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும். உலகெங்கும் இருந்து இம் முகவரியில் உள்ள தகவல்களைப் பெறவும் அனுப்பவும் முடியும்.

இலக்கச்சுழல் முறை இணைப்புச் சேவையை பெறுபவர் தமது கணணி மூலம் சில இலக்கங்களைச் சுழற்றி சேவை வழங்குநர் உடன் தொடர்பு கொண்டு இணைப்புச் சேவையைப் பெறுவர். தங்கள் தேவை முடிந்தவுடன் இணைப்பைத் துண்டிப்புச் செய்ய வேண்டும். இவ்வகை இணைப்பைக் கொண்டிருப்பவர்கள் தமக்கென எதுவித 'இன்ரநெற்' முகவரியையும் கொண்டிருக்க மாட்டார்கள். ஆனால் 'இன்ரநெற்'றில் உள்ள தகவல்த்தளங்களை பார்வையிடவும் அவற்றில் இருந்து இறக்குமதி செய்யவும் முடியும். இது செலவு குறைந்த இணைப்பு முறை என்பதால் தனிநபர்கள் இவ்வகைச் சேவையையே அதிகமாகப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். இப்படியான சேவை வழங்குநர் சிலவேளைகளில் தங்களது வாடிக்கையாளர்களுக்கு இலத்திரனியல் தபால் வசதியைச் செய்து கொடுக்கிறார்கள். இவ்வகை இணைப்புக் கொண்டவர்கள் தங்களது தகவல்தளங்கள் அல்லது Home Pageஇனை நிறுவ விரும்பின், பல நிறுவனங்கள் இலவசமாக வழங்கும் சேமிப்பக வசதிகளை பயன்படுத்திக் கொள்ளலாம். அந்தளவில் www.Tripod.com., www.geocities.com. என்பன கூடுதலான சேமிப்பக வசதிகளையும், கூடுதலான வாடிக்கையாளர் அல்லது உறுப்பினர்களையும் கொண்ட வெப்தளங்கள் ஆகும். இவற்றின் வெப்தளத்தில் நுழைந்து எமக்கென இலவச சேமிப்பக வசதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

## 'இன்ரநெற்'றில் தமிழ்

'இன்ரநெற்'றில் தமிழின், தமிழர்களின் செயற்பாடானது மற்றைய திராவிட மொழிகளைக் காட்டிலும் மேலோங்கியே காணப்படுகின்றது. இதற்கான கூடுதற் பங்களிப்பை இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உள்ளவர்களைவிட புலம் பெயர்ந்து மேற்கத்தைய நாடுகளில் வாழ்பவர்களே அளிக்கிறார்கள் என்று கூறின் மிகையாகாது. தமிழ் சம்பந்தமாக பத்திரிகைகள், சஞ்சிகைகள், செய்தித் தளங்கள், சினிமா, இலக்கிய ஆய்வுகள், ஆவணப்படுத்தல்கள், மென்பொருட்கள் என்பன காணப்படுகின்றன.

பத்திரிகைகளில் வீரகேசரி (www.ccom.lk/virakesari), நண்பன் (மலேசியா, www. murasu.com/nanban), தினக்குரல் (இந்தியா, www.thinakural.com) போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம். சஞ்சிகைகளில் ஆனந்த விகடன் (www.vikatan.com),குமுதம் (www.kumudam.com), கல்கி (Kalki weekely.com) என்பவற்றையும் 'வெப்' சஞ்சிகை குயிலையும், சிந்தனைத் தடாகத்தையும் (www.tamilweb.com) குறிப்பிட்டுக் கூற முடியும். இன்னும் ஏராளமரன சஞ்சிகைகள், பத்திரிகைகள் 'இன்ரநெற்' றில் வெளிவருகின்றன.

செய்தித்தளங்கள் என்ற முறையில் ஈழம் (www.eelam.com), தமிழ்'நெற்' (www.tamilnet.com) என்பன முன்னணி வகிக்கும் தமிழ், தமிழர் சம்பந்தமான செய்தித்தளங்கள் ஆகும். இதில் ஈழத்தில் தமிழ், ஆங்கிலம் இருமொழிகளிலும் தமிழ் நெற்றில் ஆங்கிலத்திலும் செய்திகள் உள்ளன. இவற்றிற்கான செய்திகள் ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கப்படுகின்றன.

தமிழ் சினிமா பற்றி நோக்குகின்றபோது ஏராளமான தளங்களை, பக்கங்களை காண முடியும். இவற்றை மூன்று அடிப்படை வகைகளில் நோக்க முடியும். முதலாவதாக தமிழ் சினிமாவை ஆவணப்படுத்தும் முயற்சியில் உள்ள வெப்தளங்கள், நடிகர் நடிகைகள் மற்றும் சினிமாவுடன் சம்பந்தப்பட்டவர்களால் தங்களுக்கென உருவாக்கப்பட்ட வெப்தளங்கள், ரசிகர்களால் தங்களது நடிக நடிகையர், இசையமைப்பாளர்களுக்காக உருவாக்கப்பட்ட தளங்கள், பக்கங்கள் என்பன ஆகும். உதாரணமாக www.tamilcinema.-com என்பது ஆவணப்படுத்தும் முயற்சியில் உள்ள தளம் ஆகும். இதில் இதுவரை வெளிவந்த தமிழ்ப் படங்கள், ஆண்டுகள் அடிப்படையில் பிரிக்கப்பட்டு சேமிக்கப்பட்டுள்ளன.

இலக்கிய ஆய்வு முயற்சிகள், ஆவணப்படுத்தல்கள் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளபோதும்

*சிலவற்றை குறிப்பிட்டுச் சொல்லமுடியும். Dr.K.கல்யாணசுந்தரம் (www.geocities.com/a/thens/5180) என்பவரின் தமிழ் இலத்திரனியல் நூலகத்தைக் குறிப்பிட முடியும். இதில் மற்றைய இலக்கிய சம்பந்தமான தளங்களுக்கான இணைப்புகள் (link) உள்ளன. மற்றும் பலர் பாரதியார் கவிதைகள், திருக்குறள் (ஆங்கிலம்-தமிழ்), கவிதைகள், சினிமாப்பாடல்கள், தங்களது இலக்கியங்கள் என்பனவற்றை ஆவணப்படுத்தியுள்ளனர். ஒருவர் தமிழ் நாட்டில் இற்றை வரை வெளியான தமிழ் நாவல்களை ஆவணப்படுத்தியுள்ளார். அதில் வெளியான ஆண்டு, நாவலின் பெயர், வெளியீட்டகத்தின் பெயர், எழுத்தாளர் போன்ற விடயங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*மென்பொருட்கள் (Software), எழுத்துக்கள் (Fonts) என்பவற்றை எடுத்துக் கொண்டால் பதமி (Word Processor), முரசு அஞ்சல் (www.murasu.com) திரு.குப்புச்சாமியின் 'கல்வி', Dr.V. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தமிழ் விளையாட்டுக்கள் (Tamil games) மற்றும் மயிலை, மயிலை சிறி, இன்னும் பலப்பல தளங்களில் பரவிக்கிடக்கும் எழுத்துக்களையும் குறிப்பிட முடியும். தற்போதும் பல மென் பொருட்கள் தயாரிப்பிலும் விற்பனையிலும் இருப்பதாக அறியமுடிகின்றது.*

*தமிழைக் கணணி முறைப்படுத்தலில் பல சிக்கல்கள் உள்ளன. என்னவெனில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான சாவிப்பலகை (சாவிப்பலகை முறைகள் பற்றி சென்ற இளங்கதிரில் ''கணணியில் தமிழ்'' என்ற தலைப்பில் நோக்கப்பட்டுள்ளது.) முறைமையைரீஷி பயன்படுத்துவதால் அதை வாசிப்பவரிடமும் அவ்வகையான சாவிப்பலகை முறை இருக்க வேண்டியது அவசியமாகின்றது. தமிழில் ஆறிற்கும் மேற்பட்ட சாவிப்பலகை முறைகள் புழக்கத்தில் உள்ளன. வீரசேகரி 'Jaffna' என்ற எழுத்துருவிலும், நண்பன் 'முரசு அஞ்சல்' என்ற எழுத்துருவிலும், தினக்குரல் 'இணைமதி' என்ற எழுத்துருவிலும் வெளிவருவதை உதாரணமாகக் குறிப்பிட முடியும். இம் மூன்று வகை எழுத்துக்களும் வெவ்வேறு வகையான சாவிப்பலகை முறைமையைக் கொண்டவை. இதனால் முரசு அஞ்சலில் உள்ளதை 'இணைமதி'யிலோ, "Jaffna" இலோ வாசிக்க முடியாத நிலையே உள்ளது. இதனால் தமிழில் தகவல்களை வெளியிடுபவர்கள் தாங்கள் உபயோகிக்கும் எழுத்துருவை இலவசமாக "ftp" மூலம் இறக்குமதி செய்யக்கூடிய நிலையில் அவற்றை தங்களது தளங்களில் சேமித்து வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. உதாரணமாக வீரகேசரியை வாசிக்க வேண்டுமாயின் "jaffna" என்ற எழுத்துரு எங்களின் கணணியில் இருக்க வேண்டும். அல்லாவிடின் அவர்களது தளத்தில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும். அவ்வாறு இறக்குமதி செய்கையில் கால, பண விரயங்கள் ஏற்படுகின்றன. சில தளங்களில் தமிழ்ச் சொற்களை பட உருக்களாக (graphic files) மாற்றி வெளியிடுகின்றனர். இது காலதாமதத்தை ஏற்படுத்துகின்றது உதாரணமாக ,'ஈழம்' வெப்தளத்தில் இம்முறையே கடைப்பிடிக்கப்படுகின்றது.*

*இச்சாவிப்பலகைப் பிரச்சனையானது இன்ரநெற் உலகில் தமிழுக்கு மாபெரும் பிரச்சனையாக உள்ளது. ஆங்கிலத்திற்கு இவ்வாறான பிரச்சனைகள் எழுவதில்லை. ஏனெனில் ஆங்கிலத்தில் ஒரேயொரு சாவிப்பலகை முறையே (ASCII) உலகமெங்கும் புழக்கத்தில் உள்ளது. தமிழிலும் TSCII (Tamil Standard Code for Information Interchange) என்ற சாவிப்பலகை முறைமையை ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இது எவ்வளவு தூரம் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் என்பது குறித்து எதிர்வு கூறமுடியாத நிலை உள்ளது.*

*தமிழ் 'இன்ரநெற்' உலகில் தமிழர்களின் சர்வதேச மயப்படுத்தப்பட்ட தளம் என்ற ரீதியில் www.tamilweb.comஇனைக் குறிப்பிட முடியும். இது தமிழர்கள் வசிக்கும் ஒவ்வொரு நாட்டிலும் தனது பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது. அதன் மூலம் அந்நாட்டுத்தகவல்களை அது பெற்றுக் கொள்கின்றது. இத்தளத்தில் தேனீ-தேடல் இயந்திரம், சிந்தனைத் தடாகம்-'வெப்'சஞ்சிகை,IID-தமிழர்கள் விபரப் புத்தகம் போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூறமுடியும். இதில் தேனீ என்பது தமிழ், தமிழர் சம்பந்தப்பட்ட ஒரு தேடல் இயந்திரம் ஆகும். சினிமா - படப்பாடல்கள், கல்வி, பொழுதுபோக்கு, வரலாறு, சோதிடம்,*

மொழி, இலக்கியம், தொடர்பு ஊடகம், சாத்திரசங்கீதம், இந்தியா - தமிழ் நாடு, இலங்கை, ஈழம், சிங்கப்பூர், மலேசியா, இதர தமிழர் வசிக்கும் நாடுகள், ஸ்தாபனங்கள், இடங்கள், அரசியல், சமூக பண்பாடு, மென்பொருட்கள், விளையாட்டு, என்ற வகைப்படுத்தல்களின் கீழ் ஏராளமான இணைப்பு முகவரிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

கல்வி என்ற தமிழ்க்கல்வி சம்பந்தப்பட்ட மென்பொருள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவற்றுள் ஒன்று ஆகும். இது திரு. குப்புச்சாமி என்பவரால் உருவாக்கப்பட்டது. இதன் நோக்கம் தமிழை ஆங்கிலத்திற்கூடாக கற்றல் என்பதாகும். இதில் தமிழ் முதல் எழுத்துக்களை எவ்வாறு எழுதுதல் என்பதனை அசைவியக்கம் மூலம் காட்டுதல், தமிழில் 1-100 வரையான எண்களை எவ்வாறு எண்ணுதல், அவற்றின் தர்க்க கட்டமைப்பு (Logic Structure) ஆங்கில எழுத்துக்களில் தமிழ்ச் சொற்களின் ஒலி உச்சரிப்பு, தமிழ் சொற்களை விளையாட்டாக கற்றல் (games) என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. முரசு அஞ்சல் என்னும் மென்பொருள் தமிழில் இலத்திரனியற் தபால் அனுப்புதல், பெறுதல், ஒரு சாவிப்பலகை முறையில் உள்ளவற்றை இன்னொரு சாவிப்பலகை முறைக்கு மாற்றுதல், எழுத்துக்களை தட்டச்சு செய்தல் போன்ற தேவைகட்குப் பயன்படுத்தப்படுகின்றது. இதனை (www.murasu.com) என்ற முகவரியில் இருந்து இலவசமாக இறக்குமதி செய்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

தமிழில் வாழ்த்து அட்டைகள், தமிழ் பாடல்கள், புரட்சிப்பாடல்கள் என்பவற்றை www.tamil world.com இலிருந்து பெறமுடியும். இத்தளத்திலிருந்து பாடல்களை இறக்குமதி செய்து எமது கணணியில் கேட்க முடியும். சில தமிழ் வெப்தளங்கள் வெளிநாட்டில் ஒலிபரப்பப்படும் வானொலி நிகழ்ச்சிகளை இன்ரநெற்றின் ஊடாக ஒலிபரப்புகின்றன. பாடசாலைகள் என்ற ரீதியில் பல பாடசாலைகளின் பழைய மாணவர்கள் தங்கள் பாடசாலை சார்பான தளங்களை உருவாக்கி உள்ளனர். உதாரணமாக யாழ்.இந்துக் கல்லூரி (members.tripod.com/k-Devan) ஹாட்லிக்கல்லூரி (www.hartleycollege.com) என்பவற்றைக் குறிப் பிடலாம். மற்றும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வெப்தளங்களாக www.vanavil.com, www.tamilnadu.com, www.tamilcanadian.com, www.tamilmurasu.com, www.tamil.net, www.chennaionline.com,www.eelam web.com என்ற தனித்து இயங்கும் 'வெப்'தளங்களையும், ஏராளமான வேறு 'வெப்' தளங்களில் பகுதியாக இயங்கும் தளங்களையும் குறிப்பிடலாம்.

இலங்கைத்தீவில் இருந்தான இலக்கிய முயற்சிகள் 'இன்ரநெற்'றில் இல்லை என்று சொல்லக் கூடிய அளவிற்கு அரிதாகவே உள்ளன. இவற்றை நிவர்த்தி செய்து எம் தேசத்து இலக்கியங்களையும் பன்னாட்டவரின் பார்வைக்குக் கொண்டு வரவேண்டியது எங்களது கடமையாகும். மற்றும் எமது பாரம்பரிய கலைகள், இலக்கியங்களைப் பேணிப்பாதுகாக்க வேண்டியதும் ஆவணப்படுத்த வேண்டியதும் எங்களது முக்கிய பொறுப்பாகும். இக்கடமையினை உணர்ந்து எமது தேசத்தின் இலக்கியங்களை, கலைகளை பாதுகாக்க கலை, இலக்கியவாதிகள், விமர்சகர்களுடன் இணைந்து பல்கலைக்கழகங்கள் முன்வர வேண்டும் என்பதும் அவற்றை 'இன்ரநெற்' என்ற வலுமிக்க சாதனத்தின் மூலம் யாவரையும் அடைய வைக்க வேண்டும் என்பதும் எல்லோரதும் அவா ஆகும். அத்துடன் இன்ரநெற்றின் பயன்பாடுகளை அனுபவிக்க நாமும் அவற்றில் நுழைந்து அடுத்த பொற்காலத்தை எதிர் கொள்வோம்.

# ஈழத்துப் பூதந்தேவனார் பற்றிய கருத்து நிலைகள் - ஓர் உசாவல்

**வ.மகேஸ்வரன், விரிவுரையாளர், தமிழ்த்துறை.**

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு பற்றி எழுதுபவர்கள் அல்லது ஈழத்து இலக்கியப் பாரம்பரியம் பற்றிச் சிந்திப்பவர்கள் அனைவரும் ஈழத்து இலக்கியப் பாரம்பரியம் ஈழத்துப் பூதந் தேவனாருடன் ஆரம்பமாகின்றது எனக் கூறுவது இன்று மரபாகி விட்டது. கடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவர் என்று கருதப்படும் இவர் ஈழத்துப்பூதந்தேவனார், மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் என்ற பெயர்களில் அகநானூற்றில் 88,231,307ஆம் இலக்கச் செய்யுள்களையும், குறுந்தொகையில் 189, 343, 360ஆம் இலக்கச் செய்யுள்களையும் நற்றிணையில் 366 ஆம் இலக்கச் செய்யுளையும் பாடியுள்ளார். பூதந்தேவனார் என்ற பெயருடன் 'ஈழத்து', 'மதுரை ஈழத்து' என்ற அடைமொழிகள் கொடுக்கப் பட்டிருப்பதே இவரை ஈழத்தவராக்கி உரிமை கொண்டாடச் செய்தது. முரஞ்சியூர் முடிநாகராசர், கோவூர் கிழார், சீத்தலைச் சாத்தனார் என்று அக்காலப் புலவர்கள் தமது ஊர் அல்லது வாழிடங்களுடன் தொடர்பு படுத்தித் தமது பெயரை இட்டுக் கொண்டதுபோல பூதந்தேவனாரும் தமது ஊர் (நாடு), வாழிடம் இரண்டையும் தொடர்புபடுத்தி அவ்வாறு இரு அடைமொழிகளுடன் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். எனவே அறிஞர்கள் 'ஈழம்' என்ற அடைப்பெயர் அவர் ஈழத்தைச் சேர்ந்தவர் என்பதைத் தெரிவிக்கவும் 'மதுரை ஈழத்து' என்ற அடைப்பெயர் அவர் வாழிடத்தைத் தெரிவிக்கவும் இடப்பட் டுள்ளது என்றும் கூறுவர்.

பூதந்தேவனார் ஈழத்தைச் சேர்ந்தவர் என்பது பற்றிய கருத்து நிலை தொடர்பாகத் தமிழியல் அறிஞர்களிடையே நீண்டகாலமாக விவாதம் ஒன்று நடைபெற்று வருகின்றது. அவர் ஈழத்தைச் சேர்ந்தவர் என்று சிலரும், அதை மறுப்பார் சிலருமாக இவ்விவாதம் நீண்டு கொண்டே செல்கின்றது. எனினும் பொதுவாக ஈழத்துப் பூதந்தேவனாரை ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் ரிஷி மூலமாகக் கொள்வது இன்று மரபாகி விட்டது. [1] இக்கருத்து நிலைகள் தொடர்பான சில வாதவிவாதங்களைச் சுட்டிக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மகாவித்துவான் கணேசையர், பூதந்தேவனாரை ஈழத்தவராகவே இனங்காண்கின்றார்.

''திருவளர் மதுரைத் தென்தமிழ்ச்சங்கப்
புலவருளொருவராய் புவியிசை நாட்டிய
பூதந்தேவனார் முதலிய சான்றோர்
தோன்றுதற்கிடமாம் தொன்றுகொள் கீர்த்தி திருவளர் ஈழம்..'' ......[2]

எனக்கூறி அவரால் ஈழத்துக்கே பெருமை சேர்ந்தது எனக் குறிப்பிடுகின்றார்.

*இவருடைய செய்யுட்களை அறிமுகம் செய்யவந்த பேராசிரியர் ஆ. சதாசிவம்,*

> *''இவர் பரணரின் காலத்தவர். விக்கெழுதானைப் பசும்பூட் பாண்டியன் என்பவனை இவர் பாடியுள்ளார்'' ...* [3]

*எனக் குறிப்பிடுவார்.*

*பூதந்தேவனாரை ஈழத்தவர் என ஏற்றுக்கொண்ட மகாவித்துவான் எப்.எக்ஸ்.ஸி. நடராசா,*

> *''பசும் பூட்பாண்டியனைப் பற்றிய செய்திகள் அகப்பாடல்களிலே காணப்படுவதால் பரணர், நக்கீரர், மதுரைக் கணக்காயனார் ஆகிய புலவர்கள் அக்காலத்தில் வாழ்ந்தார்கள் என்று திடமாகக் கூறுதற் கில்லை. பசும் பூட்பாண்டியன் பற்றிய குறிப்பு ஈழத்துப் பூதந்தேவ னாரின் காலத்தை வரையறுக்க உதவுவது கடினமாகும்.''*

*எனக் குறிப்பிடுகின்றார்.*

*பூதன் எனும் பெயர் யாழ்ப்பாண மாவட்டத்திலே பல ஊர்களில் வழங்கி வந்துள்ளது என்பதனைக் கலாநிதி அ.நடேசபிள்ளை நிறுவுகின்றார்.....* [5]

*மேற்குறித்த கருத்து நிலைகள் வலிமை பெற்ற ஒரு காலத்தில் அது ஏகோபித்த வரவேற்பைப் பெற்றிருந்தது. எனினும் காலத்துக்குக்காலம் ஆய்வாளர்கள் இக் கருத்துநிலையை மீள் பரிசீலனை செய்தனர்.*

> *''ஈழத்துப் பூதந்தேவனார் யாத்த செய்யுட்கள் எமக்குப் பெருமை தேடித் தரத் தக்கனவெனினும் அவர் இலங்கையில் பிறந்து வளர்ந்தவர் என்பதை நிரூபிக்கும் வரை அவர் பாடல்களை ஈழத்தமிழ் இலக்கிய வரிசையில் இணைத்துக் கூற முடியுமா என்பது சந்தேகமே. இப்புலவர் பெயருக்கு இட்டுள்ள அடைமொழியான 'ஈழத்து' என்ற ஒரு சொல்லை மட்டும் கொண்டு அவர் இலங்கையர் என்று ஊகிப்பது தக்கது எனத் தோன்றவில்லை. <u>ஈழவர் என்ற ஒரு வகுப்பினர் கேரள நாட்டிலும் வாழ்ந்தனர் என அறியப்படுகின்றது. அவர் வாழ்பதியும் ஈழமென வழங்கப்பட்டிருத்தல் சாலும்</u>'' ....* [6]

*என்பார் கலாநிதி K.S நடராசா.*

*பேராசிரியர் பொ.பூலோகசிங்கமும் இதே கருத்தையே கொண்டுள்ளார்.*

> *''இவரது செய்யுட்களாகக் குறிப்பிடப் பெறுவனவற்றுள் ஈழம் பற்றிய எவ்வித குறிப்பும் இல்லை. பூதந்தேவனார், ஈழத்துப் பூதந்தேவனார் மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் என்ற பெயர் விகர்ப்பங்கள் காணப் படுகின்றன. இவற்றில் வரும் 'ஈழம்' என்னும் சொல் இலங்கை நாட்டினைத்தான் குறிப்பிடுகின்றது என்று சித்தாந்தமாகக் கொள்ளத்தக்கதா என்பது சிந்திக்கத்தக்கது.''.....* [7]

*என அவர் குறிப்பிடுகின்றார்.*

*மேற்குறித்த விவாதங்களில் தொக்கு நிற்கும் கருத்து நிலைகள் யாதெனில்*

*(அ) ஈழம் என்பது இலங்கையைக் குறித்ததா*

*(ஆ) பூதந்தேவனாருடைய பாடல்கள் எவையாயினும் ஈழத்துப் பகைப்புலத்தை விபரித்தனவா*

(இ) 'ஈழத்து' - என்ற அடைமொழி கேரளாவில் உள்ள ஈழவர் என்ற குலத்தினரை ஏன் குறித்திருக்கக்கூடாது, என்பவையேயாம்.

ஆரம்பகால ஈழத்துத் தமிழர் இலக்கியங்கள் தொடர்பாக ஆய்வுரை ஒன்றை நிகழ்த்திய பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை பூதந்தேவனாரை ஈழத்தவராக நிலைநிறுத்த முயல்வதில் பெரும் அக்கறை கொண்டு பல சான்றுகளை முன்வைத்தார். அவற்றுள் முதன்மையானது ஈழம் என்பது இலங்கையைத் தான் குறித்ததா என்பதாகும். இலங்கையே ஈழம் எனப்பட்டது என்பதற்கு அவர் பின்வரும் சான்றுகளை முன் வைக்கின்றார்.

(1) ஈழக்குடும்பிகள் (திருப்பரங்குன்றத்துச் சனம்)

(2) சிங்களர் ஈழமண்டலம் (முதலாம் இராசராசன் மெய்க்கீர்த்தி)

(3) தெண்திரை ஈழமண்டலமுழுதும் (முதல் இராசேந்திரன் மெய்க்கீர்த்தி)

(4) இலங்கை ஈழங்கலந்தரு செப்பு (உதயணன் பெருங்கதை)

(5) நன்னூலுக்கு மயிலை நாதர் எழுதிய உரை (சிங்களமும் ஈழமும் தனித்தனியே கூறப்பட்டுள்ளமை)

(6) ஈழஞ் சுற்றியோடுதல் (கண்ணகி வழக்குரையில் - வரும் இத்தொடர் இலங்கையின் கிழக்குக்கரையைச் சுற்றியோடுவதைக் குறித்தது)

(7) 16 ஆம், 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுச் செப்பேடுகளில் சிங்களத்தின் இடத்தில் ஈழமும் ஈழத்தின் இடத்தில் யாழ்ப்பாணமும் கூறப்பட்டுள்ளமை.

முதலிய சான்றுகளை அவர் தந்து ஈழம் என்பது இலங்கையையே குறித்தது என்பதை நிறுவுகின்றார்.

> ''ஈழம் என்ற பெயருக்குச் சிறப்புரிமை திரிகோணமலைப் பகுதிக்கே உரியதெனக் கொண்டால் சிக்கல் தீரும். யாழ்ப்பாண அரசிலே திரிகோணமலை அடங்கியிருந்தபோது தமிழ் அரசு ஈழம் எனப்பட்டது. திரிகோணமலை கண்டியரசர் ஆதிக்கத்துக்கு உட்பட்டபோது அதுவே ஈழமெனப்பட்டது'' ...... [8]

என்றும் குறிப்பிடுகின்றார். பட்டினப்பாலையில் இடம் பெறும் ''ஈழத்துணவு'' என்ற பதம் இலங்கையிலே இருந்து பாக்கு தமிழகத்துக்கு ஏற்றுமதியாகியதையே குறிக்கின்றது என்பாருமுளர்.[9] மேலும் இடைக்காலத் தமிழ்ச்சங்கங்களில் 'ஈழக்காசு' என்ற நாணயமும் புழக்கத்தில் இருந்து வந்துள்ளது.[10] மேற்கூறிய தரவுகளினடிப்படையிலும் இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் எழுந்த இலக்கியங்களிலும், ஈழம் என்ற பதம் இலங்கையைக் குறித்தது என்றே சித்தாந்தமாக ஏற்றுக் கொள்ள முடியும்.

பூதந்தேவனார் பற்றிய சர்ச்சையில் இன்னோர் அம்சமாக விளங்குவது அவர் செய்யுட்கள் ஈழத்துப் பகைப்புலத்தைக் கொண்டிருக்கவில்லையென்பதாகும். சங்கப்புலவர்கள் பலரது செய்யுட்களிலே விளக்கம் பெற்ற பகைப்புலங்கள் பல இந்து ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. நில அமைப்பியல் முறைமூலமாக அல்லது ஊர்ப்பெயர் மூலமாகப் பண்டைத் தமிழ் இலக்கியத்தில் குறிக்கப்பட்ட இடங்கள் விளக்கம் பெற்றுள்ளன. ஆயினும் சங்கப்பாடல்கள் பல முதல், கரு உரிப் பொருளைப் பாடும் போது தனித்தனியே இனங்காண முடியாதவாறான பொதுமைத் தன்மையையே கொண்டிருந்தன என்பதனை எவரும் உணர்வர். அவை பொதுவான ஐநிலம் பற்றியே பேசின. எனவே பூதந்தேவனார் பாடலும் இப்பொதுமைக்குட்பட்டே பாடப்பட்டிருக்க வேண்டுமென்பதே ஏற்றுக்

கொள்ளக்கூடியதாகும். மாறாக அவரது செய்யுட்களில் ஈழத்துப் பிரதேசப் பண்பைத் துருவி ஆராய்வது பயனற்ற செயலாகும். எனினும் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் பூதந்தேவனாருடைய செய்யுட்களிற் பெரும்பாலானவை பாலை நிலத்துப் பிரிவு ஒழுக்கம் பற்றியனவென்றும், அவை பெரும்பாலும் தம்பதெனியப் பிரதேசத்துக்குரிய சாயலைக் கொண்டிருந்தனவென்றும் விளக்குகின்றார்.[11] இந்த விளக்கம் தொடர்பான சர்ச்சைகள் தமிழறிஞரிடையே நிலவுகின்றன.

கலாநிதி K.S.நடராசா அவர்கள் குறிப்பிட்ட கேரளத்து ஈழவர் தொடர்பாகவும் தமது கருத்தை முன் வைக்கின்றார் பேராசிரியர் ஆ.வே. அவர்கள். கேரளா என்ற பெயருக்கு ஈழம் என்ற பெயர் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனவே கேரளா-ஈழமாகாது. மாறாக அங்கு கள்ளிறக்கும் தொழிலைச் செய்பவர்களே 'ஈழவர்கள்' என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் கேரளா முழுதும் பரந்து வாழ்கின்றார்கள். எனவே அவர்களுக்குரிய இனத்துவ அடையாளம் என்பதே ஈழவர்கள் என்பதாகும். அது அவர்களுடைய வாழும் பிரதேசத்தைக் குறித்ததாகாது. எனவே ஈழவர் குலத்துக்கும் ஈழத்துப் பூதந்தேவனாருக்குமிடையே உறவு காண முயற்சிப்பது பொருந்தாது என்பது அவரது வாதமாகும்.[12]

கலாநிதி துரை மனோகரன் தமது நூலொன்றிலே பூதந்தேவனாரை இலங்கையராக ஏற்றுக் கொள்வதில் தவறில்லை என்கிறார்.

> ''சில ஆய்வாளர்கள் பூதந்தேவனார் இலங்கையைச் சார்ந்தவர் தானா என்பதில் கருத்து வேறுபாடு கொண்டவராக விளங்குகின்றனர். ஆயினும் சங்ககாலத்தைச் சார்ந்தவராக இலங்கையைச் சேர்ந்த புலவர் ஒருவர் பங்களிப்புச் செய்திருக்க இயலும் என்று கொள்வதில் தவறில்லை என்றே தோன்றுகின்றது. <u>தமிழ் நாடு இலங்கைக்கு மிக அண்மையில் இருப்பதனாலும் தமிழர்கள் நீண்ட காலமாக இங்கு வாழ்ந்து வந்திருப்பதனாலும் இலங்கையைச் சேர்ந்த ஒரு புலவர் பண்டைத் தமிழ் இலக்கியத்துக்குப் பங்களிப்புச் செய்திருக்க இயலும்.</u> ஈழத்துப் பூதந்தேவனார் என்பது, அவர் இலங்கையைச் சார்ந்தவராதல் வேண்டும் என்பதையும் மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் என்பது, அவர் இலங்கையிற் பிறந்து, மதுரையில் தமது வாழ்க்கையைக் கழித்த வராதல் வேண்டும் என்பதையும் உணர்த்துவதாகக் கொள்ளலாம்''[13]

என அவர் குறிப்பிடுகின்றார். (அடிக்கோடுகள் எம்மால் இடப்பட்டன) இவ்வாறாகப் பூதந்தேவனாரை ஈழத்தவர் என்று இனங்காணும் முயற்சிகள் யாவும் பொருத்திப் பார்த்தலாலும் ஊகங்களினாலும் நிலை நிறுத்தப்பட்டதொன்றாகும். (இவையின் பாற்பட்ட கருத்து நிலையே மறுக்க முடியாத மரபாகவும் நிலவி வருகின்றது என்பதும் இவ்விடத்தில் மனங்கொள்ளத்தக்கது)

பூதந்தேவனார் தொடர்பான சர்ச்சைகளுக்கு இன்னுமோர் ஆய்வு, களம் அமைத்துக் கொடுத்திருக்கின்றது. கே.எஸ். நடராசா கேரளாவில் வாழ்ந்த ஈழவர்கள் பற்றியே பேசினார். அதனையே பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை மறுதலித்தார். ஆயின் அண்மையில் முனைவர் கேசவன் தமது நூலொன்றிலே

> ''நாடார்கள் குறித்த முன் வரலாறு கட்டுக்கதைகள் பலவற்றுடன் பின்னிப் பிணைந்துள்ளது. பொதுவாக தமிழ் நாட்டில் எல்லாச் சாதிகட்கும் அத்தகைய வரலாறு உள்ளது. நாடார்கள் தம்மைப் பாண்டியர் பரம்பரையினர் என்று கருதிக் கொள்கின்றனர்.

*இசுலாமியர், நாயக்கர் ஆகியோரின் படையெடுப்பிற்குப் பின்னர் நாடார்களின் சமூகத்தொகுதி வீழ்ச்சியடைந்தது; அவர்கள் பல பகுதிகட்குச் சென்று வாழத் தலைப்பட்டனர்; தமக்குப் புதியதான பனைமரம் ஏறும் தொழிலை மேற்கொண்டனர்; இவ்வாறு பல கதைகள் உள்ளன....இவை மட்டுமன்றி நாடார்கள் ஈழத்திலிருந்து இங்கு வந்து குடியேறிய மக்கட்பகுதியினர் என்னும் ஒரு கதையும் இருக்கிறது. இது குறித்த விரிவான ஆய்வை வேறிடத்தில் மேற்கொள்ளலாமெனினும் ஈழச்சான்றார், ஈழக்குலச்சான்றார் என்ற தொடர்கள் இடைக்காலத் தமிழகத்தில் நிலவின என்பது உண்மையாகும்.''*

*எனக் குறிப்பிடுகின்றார்.* [14] *அவர் மேலும் குறிப்பிடுகையில்,*

*''இடைக்காலத்தில் பல்லவர்களாலும் சோழர்களாலும் பார்ப்பனருக்கு மட்டுமே தானமாகக் கொடுக்கப்பட்ட பிரம்ம தேசக் கிராமங்களில் தென்னை மரங்கள் வளர்க்கலாமெனினும் அங்கு இருந்த ஈழச்சான்றார்கள் கள்ளிறக்குந்தொழிலைச் செய்யக்கூடாது எனத் தடுக்கப்பட்டனர். இதன் மூலம் வேளாளரின் அதிகாரத்தின் கீழ் இருந்த வெள்ளான்வகைக் கிராமங்களில் ஈழச்சான்றார் கள்ளிறக்கும் தொழிலை மேற்கொண்டு இருக்கலாமென ஊகிக்க இடமுண்டு.''*

*எனத் தெரிவிக்கின்றார்.* [15] *மேலும் பெரியபுராணத்திலே ஏனாதிநாத நாயனார் ஈழக்குலச் சான்றாராகவே குறிப்பிடப்படுகின்றார்.* [16] *அவரது பரம்பரைத் தொழிலாக மன்னர்க்கு வாட் பயிற்சி கற்றுத்தரும் பணியையே சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.*

*''ஈழச்சான்றார், ஈழக்குலச்சான்றார் ஆகிய இரண்டு தொடர்களுமே கள்ளிறக்குதலையும், வாட்பயிற்சி தருதலையும் நமக்கு உணர்த்துகின்றன. இந்த ஈழக்குலச்சான்றார், ஈழச்சான்றார் ஆகிய இருவரும் ஒரே சாதியினர். இன்றைய நாடார் (சாணர், கிராமணியார்) இவர்களின் வம்சாவளியினரா என்பனவற்றை விரிவான ஆதாரங்களுடன் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது ''*

*எனக் கேசவன் குறிப்பிடுகின்றார்.* [17]

*முனைவர் கேசவனின் கூற்றின்படி நாம் இவ்விடத்தில் விளங்கிக் கொள்வது*

*(அ) ஈழவர்கள் பாண்டியரின் பரம்பரை என்பது.*

*(ஆ) ஈழவர்கள் இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் என்பது.*

*(இ) கள்ளிறக்குதலையும் வாட் பயிற்சியையும் தொழிலாகக் கொண்டிருந்தனர் என்பது. (இவர்கள் பிற்காலத்தில் கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்து கல்விமான்களாகவும், சிறு,பெரு வணிகராகவும் மாற்றமுற்றுள்ளனர்) அத்துடன் 'சான்றார்' என்ற பின்னொட்டும் நுணுக்கமான கவனிப்பிற்குள்ளாகின்றது.*

*எனவே தென் பாண்டி நாட்டிற்கும் இலங்கைக்கும் இருந்த தொடர்புகள், இலங்கையில் இருந்த ஈழச்சான்றார் தமிழகத்துக்குப் புலம் பெயர்ந்தனர் என்ற கதை மரபுகள் (ஈழத்துப் பூதந்தேவனார் - மதுரை ஈழத்துப் பூதந்தேவனாராகியது இவ்வாறான புலம் பெயர்தலினால் ஏற்பட்டதாகக் கொள்ள முடியும்)*

மேலும் விரிவான முறையில் துலக்கம் பெறும்போது பூதந்தேவனாரது பூர்வீகம் பற்றிய சர்ச்சைகள் இன்னுமோர் தளத்தை நோக்கிச் செல்வதற்கான சாத்தியப்பாடுகள் உண்டு.

**அடிக்குறிப்புகள்**

1. சிவத்தம்பி. கா. (1978) ஈழத்தில் தமிழ் இலக்கியம், சென்னை- ப.8
2. சதாசிவம். ஆ (1966) தமிழ்க் கவிதைக் களஞ்சியம். இலங்கைச் சாகித்தியமண்டலம், கொழும்பு. ப.1
3. மேலது - ப.2
4. நடராசா F.X.C (1970) ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு, கொழும்பு - ப. 21
5. நடேசபிள்ளை. சு.(1960) கடல் கடந்த தமிழ், கல்கி தீபாவளி மலர்
6. நடராசா. கே.எஸ் (1987) ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி, காந்தளகம், சென்னை. ப. 3
7. பூலோகசிங்கம். பொ. (1974) ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி, நான்காவது அனைத் துலகத் தமிழாராச்சி மாநாட்டு மலர்,
8. ஆ.வேலுப்பிள்ளை (1985) இராமநாதன் ஞாபகார்த்தச் சொற்பொழிவு, யாழ் பல்கலைக் கழகம்.
9. கங்கேஸ்வரி. க. வீரகேசரி
10. SII Vol (III) Part (III) No - 106
11. தம்பதெனியாவில் சரசோதிமாலை என்ற தமிழ் நூல் அரங்கேற்றம் பெற்றதை ஆதாரமாகக் கொண்டே அவர் இவ்வாறு கூறுகின்றார். சரசோதிமாலை அரங்கேறிய சூழ்நிலையை நோக்கி, அதற்கான பின்புலம் அங்கு தமிழர்கள் வாழ்ந்தமையே என அவர் நிறுவுகின்றார்.
12. வேலுப்பிள்ளை ஆ. மு.கு. கட்டுரை
13. மனோகரன். துரை. (1997) இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி, கலைவாணி புத்தக நிலையம், கண்டி ப.01
14. கேசவன்.கோ. (1997) கோயில் நுழைவுப் போராட்டங்கள், சரவணபாலு பதிப்பகம், விழுப்புரம். ப.55
15. மேலது ப.55
16. பெரியபுராணம் - ஏனாதி நாயனார் வரலாறு, பாடல் எண்-3
17. கேசவன். கோ. மு.கு. நூல் ப.55

# வங்கித் துறையில் ஏற்பட்டு வரும் நவீன தகவல் தொழில்நுட்பங்கள் பற்றிய ஒரு நோக்கு

திரு.வ.தர்மதாசன், விரிவுரையாளர், பொருளியல், வணிக,புள்ளிவிபரவியல் துறை.

தகவல், தொழில் நுட்ப வளர்ச்சி என்பது இன்று நாளுக்கு நாள் முன்னேற்றத்தைக் கண்டு கொண்டிருக்கும் ஒரு அம்சமாக உள்ளது. இது இன்று சகல துறைகளிலும் வியாபித்து வருகின்றது. இதற்கு வங்கித்துறையும் விதிவிலக்கல்ல. எனவே, வங்கித்துறையும் புதிய புதிய தகவல் தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் தனது தொழிற்பாடுகளில் முன்னேற்றகரமான மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலம், தனது வாடிக்கையாளர் தொடர்பான சேவைகளை இலகுபடுத்தி வெற்றியடைய முனைவதுடன், புதிய புதிய வாடிக்கையாளர்களையும் தம்வசம் ஈர்க்க முனைகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில், கடந்த இரண்டு தசாப்தங்களாக வங்கித் துறையானது போட்டி மிகுந்த ஒரு துறையாக மாறிவருகின்றது. இதற்கு அரசு மட்டுமல்லாமல், உள்நாட்டுத் தனியார் துறையினரும், வெளிநாட்டுத் தனியார் துறையினரும் இதில் ஈடுபட்டு வருவதே காரணமாகும். எனவே பல்வேறு வங்கிகளும் தாம் சிறந்த சேவையை ஆற்றி வருவதனை வாடிக்கையாளருக்கும், பொது மக்களுக்கும் வெளிப்படுத்த வேண்டிய கட்டாய நிலையிலுள்ளன. இதன் மூலம் ஏலவே உள்ள தமது வாடிகைகையாளர்களைத் தொடர்ந்து தம்மிடமே தக்க வைத்துக் கொள்ளவும், அதேவேளை புதிய வாடிக்கையாளர்களைத் தம்மை நோக்கி ஈர்த்துக் கொள்ளவும் முடியுமென அவை கருதுகின்றன. இதன் காரணமாகவே நாளுக்கு நாள் வரும் புதிய தொழில் நுட்பங்களையும், தகவல் பரிமாற்ற முறைகளையும் வங்கித்துறையானது பயன்படுத்த முனைந்து செயற்படுவதாகும். இதனால் வங்கித் துறையானது வளர்ச்சி அடைந்துவரும் ஒரு துறையாக மாறிவருகின்றதென்பது உண்மை தான். ஆனால், இதற்கு எதிர்விளைவாக சில பிரச்சினை களையும் அவை ஏற்படுத்துகின்றன என்பது இங்கு கவனிக்கற்பாலது. இக்கட்டுரையானது வங்கித் துறையில் கடந்த இரு தசாப்தங்களாக ஏற்பட்டுவரும் தகவல், தொழில் நுட்ப வளர்ச்சியினை ஆராய் வதற்கு முயலுகின்றது. அத்துடன் இந்த வளர்ச்சியின் காரணமாக எழக்கூடிய சில பிரச்சினைகளையும் இக்கட்டுரை அடையாளம் செய்ய முற்படுகின்றது.

வங்கிகள் ஒரு நாட்டின் முதுகெலும்பாகக் கருதப்படுகின்றன. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், உற்பத்தி, வர்த்தக, வியாபார மேம்பாட்டிற்கும் வங்கித்துறையானது அளப்பரிய சேவையாற்றுகின்ற அதேவேளையில் இன்றைய தொழில் நுட்ப வளர்ச்சிக்கும், தகவல் பரிமாற்ற வளர்ச்சிகளுக்கும் ஏற்ப வங்கித்துறையும் வளர்ச்சியடைந்து வருகின்ற தென்றால் அது மிகையாகாது. இலங்கையிலும், சிறப்பாகத் திறந்த பொருளாதார முறைமை அறிமுகமாகிய பின்னர் வங்கித்துறையினது வளர்ச்சி இன்றியமையாததாகவிருந்தது. ஏனெனில், உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளைக் கவர் வதற்கும், உற்பத்தி, வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதவுவதற்கும், கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துவதற்கும் வங்கித்துறை விரிவாக்கம் அவசியமான ஒன்றாகக்

கருதப்படுகின்றது. இதன் காரணமாகப் புதிய உள்நாட்டு, வெளிநாட்டு வங்கிகளும் உருவாக ஊக்கம் அளிக்கப்பட்டது. 1982ம் ஆண்டின் 17ம் இலக்கக் கம்பனிச் சட்டத்தின் மூலம் வங்கித் தொழில் கம்பனிகளை வரையறுத்த பொதுக்கம்பனிகளாக உருவாக்க வசதிகள் செய்யப்பட்டன. இதற்கெனப் பல்வேறு சலுகைகளும் அறிமுகம் செய்யப்பட்டன. எனவே, வங்கிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. இப்பெருக்கமானது வங்கிகளுக்கிடையே வியாபாரப் போட்டியை ஏற்படுத்தியது. இதன் விளைவாகவே வங்கித் துறையானது புதிய புதிய தொழில் நுட்பங்களையும், தகவல் பரிமாற்ற முறைகளையும் அறிமுகப் படுத்தி வருகின்றது எனக் கூறுவது தவறல்ல. கடந்த இரண்டு தசாப்தங்களாக வங்கித் துறையினரால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழில் நுட்பங்களையும், தகவல் பரிமாற்ற முறைகளையும் இங்கு நோக்கலாம்.

### (அ) கணனி மயப்படுத்தப்பட்ட மத்திய வங்கியின் காசோலைத் தீர்வையகம்:-

வர்த்தக வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்து வைக்கும் பணியை மத்திய வங்கியே செய்து வருகின்றது. இதற்காகக் குறிப்பிட்ட கால இடைவெளியில் வர்த்தக வங்கிகளின் பிரதிநிதிகள் மத்திய வங்கியில் கூடி தமக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களைத் தீர்த்துக் கொள்வர். இது தற்போது கணனிமயப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் காசோலைத் தீர்ப்பனவுகளில் இருந்த காலதாமதம் தவிர்க்கப்பட்டு விரைவுபடுத்தப்பட்டுள்ளது. அத்துடன் ஏலவே இருந்த மனிதத் தவறுகளும், பிழைகளும் இயன்றவரை தவிர்க்கப்பட்டுள்ளன. மேலும் குறிப்பிட்ட நாளில் தீர்வையகத்தின் பணி முடிவடையும் போதே வங்கிகளின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்குகளை காலதாமதமின்றி அறிக்கை இட முடிகின்றது. காசோலைத் தீர்வையகத்தின் கணனிமயப்படுத்தற் செயற்பாட்டிற்காக காசோலைகளின் அடிப்பாகத்தில் காசோலை இதழின் இலக்கம், வங்கியின் சங்கேத இலக்கம், வாடிக்கையாளரின் நடைமுறைக் கணக்கு இலக்கம் என்பன காந்த மையினால் பொறிக்கப்பட்டுள்ளன.

### (ஆ) கறுப்பு ஒளி முறைமை:-

இத்தொழில் நுட்பம் அறிமுகமாவதற்கு முன்னர் ஒருவர் வங்கியில் கணக்கை ஆரம்பிக்கும் போது அவரது மாதிரிக் கையொப்பமும் ஒரு ஆவணத்தில் (அட்டையில்) வங்கியால் பெறப்பட்டு வைத்திருக்கப்படும். பின்னர், குறிப்பிட்ட வாடிக்கையாளர் வங்கியுடன் ஏற்படுத்திக் கொண்ட கணக்கினூடாக வங்கியின் சேவையைப் பெறும் போதெல்லாம் அவரது தற்போதைய கையொப்பத்துடன் ஏலவே வங்கியால் பெறப்பட்டு வைத்திருக்கப்படும் மாதிரிக் கையொப்பம் ஒத்திருக்கின்றதா என்பதை பரிசோதிக்க, மாதிரிக் கையொப்பம் வாங்கிவைத்த ஆவணத்தை எடுத்து ஒப்பிட்டுப்பார்க்க வேண்டி யிருந்தது. ஆனால், இத்தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் ஒருவர் வங்கியில் கணக்கை ஆரம்பிக்கும் போதே அவரது மாதிரிக் கையொப்பமும் குறிப்பிட்ட வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் வங்கிப் புத்தகத்தில் ஒரு இரசாயனத் தாளைப் பயன்படுத்துவதன் மூலம் பதியப்படும். அது சாதாரண மாகப் பார்க்கும் போது வெளியே தெரியமாட்டாது. ஆனால் கறுப்பு ஒளிமுறைமை சாதனத்தின் மூலம் பார்க்கும் போது அக்கையொப்பம் தெரியும். இதனால், ஒரு வாடிக்கையாளர் வங்கிக் கருமபீடத்தில் காலதாமதமின்றி சேவையைப் பெற்றுக் கொள்ள இது உதவுகின்றது.

### (இ) கணனிப் பொறித் தொழில்நுட்பம்:-

இன்று பெரும்பாலான வங்கிகள் தமது நடவடிக்கைகளைக் கணனி மயப்படுத்தியுள்ளன. இதன் காரணமாக, வங்கிச் சேவைகள் வாடிக்கையாளர்களுக்கு இலகுவாகக் கிடைக்கக்கூடியதாக உள்ளது. பெரும்பாலான வங்கிகள் தமது நடவடிக்கைகளை குறிப்பிட்ட கிளைக்குள்ளே மட்டுமல்லாமல், தமது ஏனைய கிளைகளுடனும், அத்துடன் ஏனைய வங்கிகளின் கிளைகளுடனும் கணனித் தொடர்புகளை

விரிவுபடுத்தி சேவைகளை விஸ்தரித்துள்ளன. கணனி மயப்படுத்தலின் காரணமாக வாடிக்கையாளருக்கு விரைவானதும், வசதிகள் கொண்டதுமான சேவைகளை வழங்க முடிவதுடன், வங்கிகள் தமது அன்றாட நடவடிக்கைகள், கணக்கு அறிக்கைகள் போன்றவற்றையும் தன்னியக்கமாகவே பெறக்கூடியதாகவுள்ளது. தமது கொடுக்கல் வாங்கல்கள், கணக்கு விடயங்கள் தொடர்பாக எத்தனை பிரதிகளையும் வாடிக்கையாளர் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவுள்ளது. தவறாக ஒரு கொடுக்கல் வாங்கல் நடைபெற்றால் கூட கணனி அதனை நிராகரித்து விடுகின்றது. எனவே, பாதுகாப்பான, உத்தரவாதமான, விரைவான சேவையை வழங்க இது உதவுகின்றது.

### (ஈ) காசு அட்டை வசதிகள்:-

வாடிக்கையாளர் ஒருவர் வங்கிக்குச் சென்று தமது காலத்தை வீணடிக்காது சேவையைப் பெற்றுக் கொள்வதற்கும், குறிப்பிட்ட வங்கி நேரம் என்ற வரையறை இன்றி 24 மணி நேரமும் சேவையை பெற்றுக் கொள்வதற்கும் இவை உதவுகின்றன. இவ்வட்டைகள் மூலம் வாடிக்கையாளர்கள், தமது சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக வங்கிகளினால் தன்னியக்க கூற்று இயந்திர (Automatic Teller Machine) வசதிகள் வங்கிகளுக்கு வெளியே பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் வாடிக்கையாளர் எல்லாவித சேவைகளுக்குமே வங்கிக் கரும பீடத்துக்குச் செல்லும் தேவை தவிர்க்கப்படுகின்றது. பெரும்பாலான வங்கிகள் இந்த இயந்திர வசதியை வலைப்பின்னல் முறையில் இயங்கக்கூடியவாறு தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளன. இதன் பயனாக வாடிக்கையாளர்கள் குறிப்பிட்ட ஒரு வங்கிக் கிளையில் மட்டுமல்லாமல் அந்த வங்கியின் இன்னொரு கிளையிலும் குறிப்பிட்ட வங்கியின் சேவையைப் பெறக்கூடியதாகவுள்ளது. இலங்கையில் உள்ள பல்வேறு வங்கிகளும், பல்வேறு பெயர்களில் இந்த அட்டைகளை வெளியிட்டுள்ளன. சம்பத் வங்கியின் செற் (Set) அட்டை, மக்கள் வங்கியின் பெற் (Pet) அட்டை, வரையறுத்த வர்த்தக வங்கியின் கற் (Cat) அட்டை போன்றவற்றை உதாரணமாகக் கூறலாம். இந்த அட்டையானது வாடிக்கையாளர் ஒருவருக்கு வழங்கப்படும் போது அவருக்கு ஒரு இரகசிய இலக்கமும் வழங்கப்படும். இந்த இலக்கத்தை பயன்படுத்துவதன் மூலமே குறித்த வாடிக்கையாளர் இவ்வட்டையின் மூலம் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். குறிப்பாக வங்கிக் கணக்கில் உள்ள மீதிகளை அறிவதற்கும், பணத்தை மீளப்பெறுவதற்கும் இந்த அட்டையைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

### (உ) கடன் அட்டை வசதிகள்:-

''கடன் வாங்குவது என்பது கௌரவக் குறைவு'' என்ற காலம் மலையேறி பெரும்பாலான கொடுக்கல் வாங்கல்கள் இன்று கடன் அடிப்படையிலேயே நடைபெறுகின்றன. கடன் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்ள அதில் ஈடுபடும் இருசாராரும் அறிந்தவர்களாக இருப்பது பெரும்பாலும் விரும்பப்படுகின்றது. ஆனால், இது எல்லா சந்தர்ப்பங்களிலும் சாத்தியமில்லை. ஒருவரை ஒருவர் முன் அறியாத நபர்களும் கூட கடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் ஒருவர் உத்தரவாதம் அளிக்க வேண்டியுள்ளது. இவ்வாறு உத்தரவாதம் அளிப்பதன் மூலம் ஒருவர் பொருட்கள், சேவைகளைப் பெற்றுக் கொள்ள உதவுவனவே இக்கடன் அட்டைகள் ஆகும். இக்கடன் அட்டை ஒருவருக்கு வங்கியால் வழங்கப்படும் போது அவர் இந்த அட்டையைப் பயன்படுத்தி எந்தெந்த நிறுவனங்களில் பொருட்கள், சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது நிறுவனங்களின் பெயர்கள் கொண்ட பட்டியல் மூலம் வங்கியினால் வழங்கப்படும். அந்நிறுவனங்களில் குறித்த வாடிக்கையாளர் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இன்று வங்கிகளினால் சர்வதேச, உள்ளூர் தரத்திலான கடன் அட்டைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, இவற்றின் மூலம் அறிமுகமற்றவர்களும் கொடுக்கல் வாங்கலை இலகுவாக நிறைவேற்ற முடிகின்றது. இங்கு கடன் அட்டைகள் மூலம் ஒருவர் சேவையைப் பெறும் போது விற்பனை நிறுவனத்திற்குச் சேரவேண்டிய பணத்துக்குக் குறிப்பிட்ட அட்டையை வழங்கிய வங்கி உத்தரவாதம் அளிக்கின்றது. இக்கடன்

அட்டைகள் பணத்துக்கான பதிலீடுகளாகக் கருதப்படுகின்றன. இவற்றின் காரணமாகத் தாள், சில்லறை நாணயங்களினதோ, காசோலைகளினதோ தேவையானது பெருமளவு குறைக்கப்பட்டு விடுகின்றது. இவ்வட்டைகள் 30 ஆண்டுகளுக்கு முன்பே பல்வேறு உலக நாடுகளிலும் அறிமுகமான போதும் இலங்கையில் கடந்த 9 ஆண்டுகளுக்கு முன்பே அறிமுகப்படுத்தப்பட்டது. இவற்றை இலங்கையில் பல்வேறு வங்கிகளும் அறிமுகப்படுத்தியுள்ளன. சம்பத் வங்கியின் மாஸ்ரர் (Master) அட்டை, மக்கள் வங்கியின் பீபிள்ஸ் (Peoples) அட்டை, இலங்கை வங்கியின் கிளாசிக் (Classic) அட்டை போன்றவற்றை உதாரணமாகக் கூறலாம்.

### (ஊ) வரவு அட்டைகள்:-

இது மேற்கூறிய இருவகையான அட்டைகளது சேவைகளையும் இணைத்த ஒரு சேவையாகப் பரிணமிக்கின்றது. இதனை வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தாம் பொருட்கள், சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் இடத்திலேயே இந்த அட்டையைப் பயன்படுத்திப் பொருட்கள், சேவைகளுக்கான கொடுப்பனவை மேற்கொள்ளலாம். அவ்வேளை அவர்களது வங்கிக் கணக்கில் இருந்தும் கழிக்கப்படும். இதனை சம்பத் வங்கி 1997 ம் ஆண்டின் இறுதியில் அறிமுகப்படுத்தியுள்ளது. செற் (Set) அட்டையை வைத்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கே இந்த வசதியை சம்பத் வங்கி செய்து கொடுத்துள்ளது. செற் அட்டையை வைத்திருக்கும் ஒருவர் தன்னியக்க கூற்று இயந்திரத்தைப் (ATM) பயன்படுத்தும் போது பாவிக்கும் இரகசிய இலக்கத்தைப் போல இந்த வரவு அட்டைப்பாவனையின் போதும் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதனால் ஏனைய கடன் அட்டைகளை விட இம்முறையிலான வரவு அட்டைகள் பாதுகாப்பானவையாகக் கருதப்படுகின்றன.

### (எ) மின்னியல் பணமாற்றல் சேவைகள்:-

இன்று வெளிநாட்டுப் பணக் கொடுக்கல் வாங்கல்கள் அதிகரித்த நிலையில் இச்சேவைகள் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்கு விரைவாகப் பணப் பரிமாற்றத்தைச் செய்ய இந்தச் சேவை வசதியளிக்கின்றது. உலகளாவிய ரீதியில் வங்கிகளுக் கிடையில் உருவாகியுள்ள நிதி, தொலைத் தொடர்பு தொழில்நுட்ப வசதிகள் இதற்கு முக்கியமானவை யாகும். வர்த்தக வங்கிகள் இச்சேவையைப் பயன்படுத்துவதன் மூலம் நாடுகளுக்கிடையே விரைவாகப் பணப்பரிமாற்றத்தை மேற்கொள்ளலாம். இச்சேவையின் மூலம் விரைவாகப் பணத்தை அனுப்ப விரும்பும் ஒருவருக்கு அல்லது விரைவாகப் பணத்தைப் பெற விரும்பும் ஒருவருக்கு குறிப்பிட்ட வங்கிகளில் கணக்கு வசதிகளோ அல்லது கடன் அட்டை வசதிகளோ அல்லது குறித்த வங்கியில் அங்கத்துவ வசதிகளோ இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. இலங்கையில் இச்சேவை தொடர்பான மூன்று வெவ்வேறு ஏற்பாடுகள் நடைமுறையில் உள்ளன.

(1) செலான் வங்கிக்கும், வெஸ்ரேன் யூனியன் வங்கிக்கும் இடையிலான பணமாற்றல் சேவை.

(2) ஸ்ராண்டட் சாட்டட் வங்கியின் ஸ்வெப்ற் பணமாற்றல் சேவை.

(3) ஹொங்கொங் அன்ட் சங்காய் வங்கியின் கெக்சகோன் பணமாற்றல் சேவை என்பன அவையாகும்.

### (ஏ) இலங்கையில் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை (SLIPS) :-

இதன் அறிமுகத்தின் மூலம் வங்கிளுக்கிடையிலான கொடுப்பனவுகளையும், நிறுவனங்கள் பல்வேறு நபர்களுக்கு ஒரே முறையில் செய்ய வேண்டிய கொடுப்பனவுகளையும் வங்கிகள்

தமக்கிடையில் கணனிப் பரிவர்த்தனையின் மூலம் பதிந்து கொள்ளும் முறையாகும். உதாரணமாக

1. நிறுவனமொன்று தனது ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுக்காகத் தனித்தனியே ஒவ்வொரு ஊழியருக்கும் காசோலைகளை வரையாமல் தமது நிறுவன வங்கிக் கணக்கினூடாக அந்தந்த ஊழியர்களின் வங்கிக் கணக்குகளில் அவர்களது சம்பளக் கொடுப்பனவை செலுத்த முடிதல்.

2. குறிப்பிட்ட ஒரு வங்கியின் வாடிக்கையாளர் தான் செலுத்த வேண்டிய பல்வேறு கொடுப்பனவுகளையும் (தொலைபேசிக் கட்டணம், மின்சாரக்கட்டணம், காப்புறுதிக் கட்டணம்) தனது வங்கிக்கு கட்டளை இடுவதன் மூலம் செலுத்த வேண்டிய நிறுவனங்களின் கணக்குகள் உள்ள வங்கிக் கிளைக்கு கொடுப்பனவுகளைச் செய்தல் போன்றவற்றைக் கூறலாம்.

### (ஐ) தொலைபேசியூடான வங்கிச் சேவையும், பண அனுப்பற் (Remitance) சேவையும்:-

தொலைபேசி வங்கிச் சேவை என்று கூறும் போது குறிப்பிட்ட வங்கியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வங்கியால் வழங்கப்பட்ட இரகசிய இலக்கத்தைக் கூறுவதன் மூலம் வங்கிக்குச் செல்லாமலே ஒரு வாடிக்கையாளர், தனக்குத் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொள்ளப் பயன்படும் ஒரு முறையாகும். இச்சேவையின் காரணமாக எதிர்காலத்தில் வங்கிகளின் கருமபீடத்துக்கு மக்கள் செல்ல வேண்டிய தேவை பெருமளவுக்கு குறைந்து விடுவதற்கு வாய்ப்புண்டு. மேலும் இந்தத் தொலைபேசி வங்கிச் சேவையைப் பயன்படுத்துவதன் மூலம் பண அனுப்பல் வசதிகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறாக, வங்கித்துறையானது வளர்ந்து வரும் தகவல், தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப புதிய புதிய சேவைகளையும் வாடிக்கையாளருக்கு அறிமுகப்படுத்தி வருகின்றது. இவ்வாறான வளர்ச்சிகள் வங்கித்துறையில் ஆரோக்கியமான போட்டியையும், பாரிய முன்னேற்றத்தையும் ஏற்படுத்தி விடுவதுடன் வாடிக்கையாளருக்கு இலகுவான, விரைவான சேவைகள் கிடைப்பதற்கு வகை செய்கின்றதென்றால் மிகையாகாது. இவ்வாறான தகவல், தொழில் நுட்ப வளர்ச்சிகள் வங்கிகளின் பணிகளில் மாற்றங்களைப் புகுத்தி, முன்னேற்றத்தை ஏற்படுத்தி வரும் அதேவேளையில் வேறு சில பிரச்சினைகளையும் உருவாக்கி வருகின்றனவெனக் கூறின் அது தவறன்று. இதில் முக்கியமானது வேலையில்லாப் பிரச்சினையாகும். அதாவது தகவல், தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப வங்கித்துறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களின் காரணமாக வாடிக்கையாளர்கள் பெரும்பாலும் வங்கியின் கரும பீடத்துக்குச் செல்லாமலே வங்கியின் சேவைகளைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகி வருகின்றன. இதனால் பெரும் எண்ணிக்கையானோரை வேலைக்கு அமர்த்த வேண்டிய தேவை வங்கிகளுக்கு இல்லாமல் போகின்றது. எனவே, ஏலவே வேலை செய்யும் பலர் வேலை இழப்பதற்கும், புதிய வேலை வாய்ப்புக்கள் அருகி வருவதற்கும் இது காரணமாகி விடுகின்றதோ என எண்ண வேண்டியதாகவுள்ளது. இருப்பினும், புதிய தகவல், தொழில் நுட்ப வளர்ச்சிகளுக்கு ஏற்ப வேறு புதிய, புதிய வேலை வாய்ப்புக்களை வங்கித்துறையானது உருவாக்கி வருகின்றது என்பது கருத்திற் கொள்ளத்தக்கது.

**உசாத்துணைகள்**


1. இலங்கை சுதந்திர பொன்விழா மலர், மத்திய வங்கி வெளியீடு, 1998
2. பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி, ஆராய்ச்சி பிரிவு வெளியீடு, மலர் 22, இதழ் 8/9 1996
3. பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி, ஆராய்ச்சி பிரிவு வெளியீடு, மலர் 22, இதழ் 6/7, 1996
4. பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி, ஆராய்ச்சி பிரிவு வெளியீடு, மலர் 20, இதழ் 9, 1994
5. பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி, ஆராய்ச்சி பிரிவு வெளியீடு, மலர் 9, இதழ் 2, 1983
6. Bank of Ceylon News, மலர் 12, 1990

# மன்னார் மாவட்டத்தின் நாட்டுக்கூத்துக் கலை

அ.எட்வேட் நிக்சன் சொய்சா, விடுகை வருடம், புவியியல் (விசேடம்).

வளர்ந்த சமுதாயத்தில் கலைகள் சிறந்து வளரும். வளரும் கலைகள் அந்தந்த நிலத்தின் இயல்பினைப் பெற்றுத்திகழும். நிலம் சார்ந்த மக்கள் வாழ்வைக் கலைகள் பிரதிபலிக்கும். ஒவ்வொரு நாட்டிலும் கலைகள் காலச்சூழலுக்கு ஏற்ப மலர்கின்றன. காலத்தின் பதிவுகளை பல கலைகளில் காண்கின்றோம். உலகின் பல பாகங்களிலும் பல்வகைக் கலைகள் செழித்துள்ளன.

இப் பல்வகைப்பட்ட கலைகளில் நாட்டுப்புறக்கலைகள் எல்லாம் மக்கள் கலைகளேயாகும். மக்கள் வாழ்வோடு இணைந்த கலைகள் அவர்களுக்கு வாழ்வளிக்கும் கலைகளாகவும், மனமகிழ்வூட்டும் கலைகளாகவும், வாழ்விற்கு உரம் ஊட்டும், தெம்பூட்டும் கலைகளாகவும் இருக்கின்றன. இந்த வகையில் பல்வேறுபட்ட கலைகளில் ஒன்றான நாட்டுக்கூத்துக் கலை என்பது சங்க காலம் தொடக்கம் இன்று 20ம் நூற்றாண்டு வரை வளர்ந்து வந்துள்ளதை அறிய முடிகிறது.

நாட்டுக்கூத்தென்பது மரபு வழிநாடகமாகும். இவை புராதன, பொருளாதார, சமூக, அமைப்பு களால் பூரணமாகக் கையாளப்பட்டு பயிலப்பட்டு அரங்கேற்றப்படுவதாகும். இவற்றில் கதை இயைபு, இரசனை நெறிகள், தனித்துவம் ஆகிய பண்புகளை உரைக்கல்லாகக் கொண்டு ஆடப்படுவதாகும். ''நாட்டுக்கூத்து'' எனுஞ் சொற்றொடரில் வரும் ''கூத்து'' எனுஞ் சொல் கதை தழுவிவரும் ஆட்டத்தைக் குறிப்பது ஆகும். ''நாட்டு'' எனுஞ் சொல் கிராமத்தைக் குறிப்பதாகும். எனவே கிராமப்புறங்களில் மக்களினால் பாடப்படும் கதை தழுவி வரும் ஆட்டத்தைக் குறிப்பதாக நாட்டுக்கூத்து காணப்படுகிறது.

இலங்கைத்தீவில் உள்ள பெரிய தீவுகளில் ஒன்றான மன்னார் நகரத்தை பிரதான நகராக கொண்ட மன்னார் மாவட்டத்தில் இக்கூத்துக் கலையானது நாட்டின் ஏனைய பாகங்களில் மேடையேற் றப்படும் கூத்துகளை விட சிறப்புப் பெற்று காணப்படுகிறது. இந்நாட்டுக்கூத்துக் கலையானது இந்தி யாவை ஆண்டு வந்த சோழ, சேர, பாண்டிய மன்னர்களில் சிறப்புத் தன்மை பெற்று வந்த சோழ மன்னனான இராஜ கேசரி சுந்தர சோழரின் இளைய புதல்வனான இராஜ ராஜ சோழன் என பெயர் கொண்ட அருள்மொழிவர்மன் ஈழத் தீவின் மேல் படையெடுத்த காலத்தில் இராஜ கேசரி சுந்தர சோழரின் அமைச்சரவையில் முதன் மந்திரியாக இருந்த அன்பில் அநிருத்தப் பிரம்மராயர் ஈழத்திலே விஜயம் மேற் கொண்டு வங்கம் ஏறி இலங்கைத் தீவின் மாதோட்டப் பகுதியில் வந்திறங்கிய போது இவர் கொண்டு வந்த சில பிரதிகளே அன்று மன்னாரில் கூத்தாகக் காணப்பட்டு வந்துள்ளதென்றும் பின்பே வளர்ச்சியுற்று வந்துள்ளது என்றும் பரம்பரையாக பேசப்பட்டு வருகிறது.

ஆனால் இன்று வரை நம்பப்பட்டு வருகின்ற நாட்டுக்கூத்து வளர்ச்சியினை நாம் பார்க்கையில் 15ம் நூற்றாண்டில் இலங்கையின் மீது படையெடுத்த போர்த்துக்கேய நாட்டினர் தாம் கைக்கொண்டிருந்த

கத்தோலிக்க மறையினை மக்களுக்குப் பரப்ப இலகுவான முறையாக நாட்டுக்கூத்து முறையினைக் கடைப்பிடித்தனர். இவர்கள் இந்திய நாட்டில் வாழ்ந்த போது அந்நாட்டு மக்களிடையே புரையோடி யிருந்த நாட்டுக்கூத்துக் கலையினை இந்நாட்டில் பரப்பச் செய்தனர். கத்தோலிக்க மறையின் சத்திய உண்மைகளை கூத்து வடிவில் வடித்து அதை மக்களிடையே பரப்பி மக்களை தம் மறையில் சேர்த்துக் கொள்வதில் இலகுவாக வெற்றி கொண்டனர் என்று கூறப்படுகிறது.

இதன் பின் பெருந்தொகையாக மனம் மாறிய மக்களை ஊக்குவிக்கும் பொருட்டு 16 ம் நூற்றாண்டில் போறன்ஞ்சுப்பிள்ளை ஆசிரியரால் மாதோட்டத்தில் ''மூவிராசாக்கள் வாசகப்பா'' எனும் நாட்டுக்கூத்தும், இதை தொடர்ந்து கீதாம் பிள்ளை புலவர் அவர்களால் ''எண்டிறிக் எம்பரதோர்'' எனும் நாட்டுக்கூத்தும் மேடையேற்றப்பட்டது. மன்னாரிலே பெரும்பாலும் கத்தோலிக்க, கிறிஸ்தவ நாடகங் களே மேடையேற்றப்பட்டு வந்துள்ளன.

மன்னாரில் அரங்கேறி வரும் நாட்டுக்கூத்துகள் வடமோடி (வடபாங்கு) தென்மோடி (தென்பாங்கு) என இரு பிரிவாக வகைப்படுத்தி கூறப்படுகிறது. வடமோடி (வடபாங்கு) நாட்டுக் கூத்தினதும், தென்மோடி (தென்பாங்கு) நாட்டுக்கூத்தினதும் கதையமைப்பு, உடை, இசையமைப்பு, மேடையமைப்பு, கூத்து முறைகள் இன்னும் பல அம்சங்கள் வேறுபட்டுக் காணப்படும்.

வடமோடி நாட்டுக்கூத்தில் எடுத்தாளப்படும் பாடல்கள் அனைத்தும் கர்னாடக இசையைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் வெண்பா, விருத்தம், கீர்த்தனை, க்ருதி, பதம், ஜதி, போன்றவை இடம் பெற்றுள்ளன. கோபத்திற்கும், சோகத்திற்கும், நகைச்சுவைக்கும் ஏற்ற கர்னாடக இராகங்கள் இடம் பெறும். எனவே கரகரப்பிரியா, அடானா, முகாரி, பைரவி, பூபாளம், தோடி, ஹம்சத்வனி, மோகனம், காம்போதி, தன்யாசி போன்ற ஜனரஞ்சகமான இராகங்கள் அடிக்கடி இடம் பெறும். கூத்தைப் பொறுத்தவரை இவ்வகை நாட்டுக்கூத்தில் அதிகம் இல்லை என்றே கூறலாம். ஆனால் ஜதிகள் இடம் பெறுகின்றன. மிருதங்கத்தின் பயன்பாடே அதிகம் தேவைப்படும். கூத்தும் தாளக் கட்டுப்பாட்டுடன் இருக்கும். இத்தன்மைகளைக் கொண்ட வடமோடி நாட்டுக்கூத்துகள் கீதாம் பிள்ளைப் புலவர் அவர்களால் அருமை, நொண்டி நாட்டுக் கூத்துகளும், 1838 ல் நானாட்டான் கற்கிடந்தகுளம் ஆனாப்பிள்ளை என்பவரால் ஞான சவுந்தரி நாடகமும், 1833 ல் பறப்பான் கண்டல் மனுவேல் மொறாய்ஸ் என்பவரால் சூசையப்பர் நாடகம், சந்தோமையார் வாசகப்பா, செபமாலைமாதா வாசகப்பா என்பனவும், 17 ம் நூற்றாண்டில் வாழ்ந்த சுண்டிக்குளி தொன் சுவாம் அந்தோனிப்பிள்ளை என்பவரால் மூன்று நாடகங்களும் மேடையேற்றப்பட்டன. இவற்றில் சில நாடகங்கள், இரண்டு மூன்று இரவுகள் தொடர்ந்தும் மேடையேற்றப்படும் தன்மை உடையதாகக் காணப்பட்டன.

தென்மோடி நாட்டுக் கூத்தை எடுத்துப் பார்த்தால் பாட்டோடு சேர்ந்த கூத்து மிகவும் கவர்ச்சி யானதாகக் காணப்படும். இக்கூத்துக்களில் வரும் ஆடற்தகு வடமோடி கூத்தில் வரும் ஜதிக்கு சமனானதாகக் காணப்படும். அத்தோடு இக்கூத்துகளில் சிந்து, வரவுகவி, தாழிசை, விருத்தம், வசனக்கவி, இன்னிசை போன்ற பலவிதமான பாடல்கள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. கோபத்திற்கும் சோகத்திற்கும் பொருத்தமான இராகங்களில் இப்பாடல்கள் இடம் பெறும். எதுகை, மோனை வடிவில் அமைக்கப்பட்டு பாடப்பட்டு வரும் இத்தென்மோடி பாங்கு நாட்டுக்கூத்தானது 1749-1799 ஆம் ஆண்டில் வசித்த மாதோட்ட புலவர் சந்தியோரு புலவர் அவர்களால் பாடப்பட்ட கோது கப்பித்தான் நாடகமும், 18 ம் நூற்றாண்டில் நானாட்டான் ஆதித்த நாடார் பிலிப்பு சந்தான் அவர்களால் பாடப்பட்ட ''நற்கருணை வாசகப்பா'' நாட்டுக்கூத்தும், 1780-1829 ம் ஆண்டு வரை வாழ்ந்த மாந்தையைச் சேர்ந்த மரியானுப்புலவர் அவர்களின் மூன்று நாடகங்களும், நறுவிலிக் குளத்தில் 1751-1802 வரை வாழ்ந்த வெள்ளைப் புலவர் என்பவர் வங்காலை மக்களுக்காக இரு இரவுகள்

பாடக்கூடிய ''மரிய சித்தாள்'' பெரிய நாடகமும், மன்னார் பள்ளி முனையில் 1876-1958 வரை வாழ்ந்த ஆரோக்கியம் றோச் என்பவரால் இயற்றப்பட்ட அந்தோனியார் நாடகம், சாந்த லூசியா பவனித்தரு, சவரியார் வாசகப்பா போன்றவையும் குறிப்பிடத்தக்கன. இவர்களால் இயற்றப்பட்ட அனைத்துக் கூத்துகளும் கத்தோலிக்க, கிறிஸ்தவ மறையின் போதனையை வலியுறுத்திப் பாடப்படுவது குறிப்பிடத் தக்கது.

இவர்களை விட பிறமதப் புலவர்களும் அதாவது, முஸ்லிம் புலவர்களும் கூத்து வளர்ச்சிக்கு பங்காற்றியுள்ளனர். இவர்களில் மன்னார் பட்டினம் மூர்வீதியில் 1841-1921 வரை வாழ்ந்த சதக்குப்பி புலவர், முசலி கொண்டச்சியில் 1923-1970 வரையில் வாழ்ந்த முகமது சரீபூ, நெயினா முகமது, எருக்கலம்பிட்டி பக்கீர்ப்புலவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மன்னார் பிரதேச நாட்டுக்கூத்து வளர்ச்சியில் பல நவீன உத்திகளைக் கொண்டு நாட்டுக்கூத்தினை இயற்றி அரங்கேற்றி புகழ் பெற்ற புலவர்கள், அண்ணாவி மார்கள் பலர் காணப்படுகின்றனர். இவர்கள் பின்வருமாறு,

- தலைமன்னார் ஆரோக்கியம் ஜேம்ஸ் டயஸ் - ஆதாம் ஏவாள்
- முருங்கன் செ. செபமாலை (குழந்தை) -வீரத்தாய், கல் சுமந்தகாவலர்
- வங்காலை தொ. மக்சிமஸ் லெம்பேட் - ஆத்ம சாந்தி
- வங்காலை அபியாஸ் அதிரியான் சொய்சா - சடாயு வதம், ஆத்ம சாந்தி, கீசகன் வதம்,
- வங்காலை கிறிஸ்டோபர் லெம்பேட் - பாஞ்சாலி சபதம், வாலிவதை, இலங்கேஸ்வரன்
- வங்காலை சீ.பத்தினாதன் பறுனாந்து - கும்பகர்ணர் வதை
- வங்காலை பிரான்சிஸ் சவிரியான் லெப்பேட் - அரிசந்திரன், சிலம்பின் செல்வி
- பேசாலை யுவானி ஆரோக்கியம்
- முருங்கன் மரியாள் செபஸ்ரியான்
- நானாட்டான் திமிங்கு சூசைப்பிள்ளை
- வங்காலை அதிரியான் டலிமா - கர்ணன் போர்

போன்றவர்களின் பங்களிப்பு இன்று நாடளாவியரீதியில் மன்னார் மாவட்டத்தின் கூத்து வளர்ச்சிக்குப் பெரும் உத்வேகத்தினைக் கொடுத்துள்ளது.

இப்படியாக மன்னார் பிரதேசத்தில் நாட்டுக்கூத்து பல நூற்றாண்டுகளாக வளர்ச்சியடைந் துள்ளது. இன்று இரு பாங்கு நாட்டுக்கூத்துகளும் கலந்து நவீனமயமாக்கப்பட்டு சாகித்திய பரிசு பெறும் அளவிற்கு வளர்ந்துள்ளதென்றால் ஆச்சரியப்படக்கூடியதொன்றாகும். இவைகளில் பாஞ்சாலி சபதம், கர்ணன் வதை, பஞ்சவடி காவலன், வாலிவதை, வீரத்தாய், கல் சுமந்தகாவலன் ஆகிய நாட்டுக்கூத்துகள் பிரசித்தி பெற்றவையாகும்.

இன்று மன்னார் பிரதேசத்தில் மேலும் பல இளைஞர்கள் இத்துறையில் பங்கு வகித்து புதிய உத்திகளைக் காலத்திற்கு ஏற்ற விதத்தில் பிரயோகித்து எழுதி வருவதனால் எதிர்காலத்தில் பல நாட்டுக்கூத்துகள் முன்னேற்றமடையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

# கோதாவரி நதியும் சான்றோர் கவியும்

**க.ஜெயநிதி, முதலாம் வருடம், கலைப்பீடம்.**

*உலகில் காலங்கடந்து நிற்போர் கடவுளர் மட்டுமல்லர், நல்ல கவிஞர்களும் ஆவர். காலத்தால் அழியாத நல்ல கவிதைகளைப் படைத்த கவிஞர்கள், இறந்தும் வாழ்கிறார்கள். கம்பனைக் கற்போர் இந்த உண்மை வானளவு விரிவதைக் காண்பர்.*

*கம்பன், இலக்கியத் தோட்டத்தில் அன்றே மலர்ந்து அன்றே வாடும் மலர்களுக்கு மத்தியில், என்றும் மணம் வீசும் வாடாமலர்; கவிதை யாத்திரையின் ஏராளமான படிக்கற்களுக்கு இடையில் ஒரு மைல்கல்; 'சொல்லுக்குள் வாக்கியத்தைச் சுருக்கி வைத்த கவிப்புலவன்'. கவிதைக் கலையில் அவனுக் குள்ள ஆற்றல்கள் விரிக்கிற் பெருக்கும்.*

*'தமிழச்சாதி அமரத்தன்மை வாய்ந்தது' என்ற நம்பிக்கையைப் பாரதிக்கு ஏற்படுத்திய அத்துணைப் பெருங்கவிஞன், 'கவிச்சக்கரவர்த்தி', நல்ல கவிதை பற்றிக் கொண்டிருந்த உயரிய கருத்தை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.*

*இலங்கையர் கோன் தங்கை, சூர்ப்பனகை அறிமுகமாகும் படலத்தின் முதற்பாடல். கோதாவரி என்னும் தெய்வத் திரு நதியின் பொலிவைப் பாடவிழைகிறான்: 'கவிச்சக்கரவர்த்தி' கம்பன்,*

*''புவியினுக்கு அணியாய், ஆன்ற*
*பொருள் தந்து, புலத்திற்று ஆகி,*
*அவி அகத் துறைகள் தாங்கி,*
*ஐந்திணை நெறி அளாவிச்*
*சவி உறத் தெளிந்து, தண் என்று*
*ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்*
*கவி எனக் கிடந்த கோதா*
*வரியினை வீரர் கண்டார்''*

*வனம் நோக்கி விரையும் வீரர்களான இராம இலக்குவர்கள் வழியில், நிலமகளுக்கு ஓர் அணிகலனாய், சிறந்த பொருள்கள் பலவும் கொடுத்து, விளை நிலங்களைப் பக்கத்தே உடையதாய், அவியுணவு கொடுக்கும் வேள்வித் துறைகளை உடையதாய், ஐவகை நிலங்களின் வழியைச் சேர்ந்து, ஒளி விளங்கும் தெளிவினை உடையதாகி, குளிர்ந்த நீரோட்டத்தை உடையதாய் ஓடி வரும் கோதாவரி நதியைக் காண்கிறார்கள்.*

அத்துணைச் சிறப்பு வாய்ந்த தெய்வத்திரு நதியைக் கம்பனும் காண்கிறான். கவிச்சக்கர வர்த்தியின் கண்களுக்கு அந்நதியின் திருப்பொலிவு சான்றோர் தம் கவிச் செல்வத்தின் பண்புகளைப் பெற்றுத் திகழ்வது புலப்படவே, ''சான்றோர் கவி எனக் கிடந்த கோதவரி'' என விரிகிறது அக்கவிதை.

சிறந்த அணியிலக்கணம் பொருந்தியதாய், சிறந்த பொருட்சுவையளித்து, அறிவினிடத்ததாகி, அகப் பொருளிலக்கணத் துறை வகைகளையுடையதாய், ஐந்து திணைகளின் இலக்கணத்தைத் தழுவி, அழகு மிகும்படி தெளிவினைக் கொண்டதாகி, குளிர்ந்த இனிதாகிய நடையையும் கொண்டு விளங்கு கின்ற சான்றோர் கவி கம்பன் கற்பனையில் கோதாவரி நதிக்கு உவமானமாகிறது.

தொல்காப்பியனார் குறிப்பிட்ட வினை, பயன், மெய், உரு என்ற நான்கும் பற்றித் தோன்றும் உவமை வகைகளை, தக்க சந்தர்ப்பத்தில் பொருள்களுக்கேற்ப எடுத்துக்காட்டிக் கற்றோரும் மற்றோரும் அப்பொருளை நேரே காணுமாறு செய்து சுவை பெறச் செய்வதில் கம்பன் நிகரற்றவன். அழகு சேர்க்கக் கையாளப்படும் அணிகள், கம்பன் கைபட்டதும் அழகுக்கு அழகு சேர்ந்தாற் போலாகிவிடும் அவ்விந்தை காண்பாம்.

மேற் குறிப்பிட்ட பாடலில், கோதாவரி நதிக்குச் சான்றோர் கவியைச் சிலேடை நயம் தோன்ற உவமையாக்கியுள்ளான், கம்பன். ''உயர்ந்ததன் மேற்றே உள்ளும் காலை'' என்னும் தொல்காப்பிய உரைக்கேற்ப, ஒப்புமை சொல்ல வந்த அவன், சான்றோர் கவி என்னும் உயர்ந்த பொருளோடு கோதாவரி நதியை உவமித்துள்ளமை ஈண்டு நோக்கத்தக்கதாகும்.

இனி, இவ்விரண்டு பொருட்களுக்கும் உரித்தான பொதுத்தன்மைகள் எவை என்பதை விரிவாக ஆராய்வோம்.

இரண்டுமே புவியினுக்கு அணி, அதாவது கோதாவரி அழகிய பெருநதி; பூமிப் பெண்ணுக்கு முத்தாரம் போல்வது. சான்றோர் கவியும் பல் வகை அலங்காரங்களைக் கொண்டு, உலகத்தில் உயர்ந் தோர் பலராலும் கொண்டாடப்படுவது.

இரண்டுமே ஆன்ற பொருள் தருவன. அதாவது, கோதாவரி நதி பொன்னும் மணியும் அகிலும் ஆரமும் போன்ற சிறந்த பொருட்களையும் மற்றும் மலைபடுதிரவியங்களையும் ஆற்றுப் பெருக்கினால் அடித்துக் கொண்டு வருவது. சான்றோர் கவியும் சிறந்த அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருட்களின் திறத்தை உணர்த்தும்; மற்றும் செம்பொருள், இலக்கணப் பொருள், குறிப்புப் பொருள் என்னும் மூவகைப் பொருட்களையும் குறிக்கும்.

இரண்டுமே புலத்திற்று ஆகி வருவன. அதாவது, கோதாவரி நதி தன்னைச் சார்ந்த வயல்களும் விளை நிலங்களும் பயன் பெறுமாறு அமைந்து ஓடும். சான்றோர் கவியும் தன்னைக் கற்போர், அறிவு கொண்டு ஆராய ஆராய நன்கு புலப்படும் ஆழ்ந்த பொருளைத் தந்து, அறிவை வளப்படுத்தும்.

இரண்டுமே அவி அகம் துறைகள் தாங்குவன. அதாவது, கோதாவரி நதிக் கரையினிலே நெய் பெய்து ஓமத்தீ வளர்க்கும் ஓம குண்டங்களையும், வெப்பந்தணிவிக்கும் குளிர்ந்த, மரச் செறிவுடைய இறங்கு நீர்த் துறைகளையும் காணலாம். சான்றோர் கவியும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் தமிழிலக்கணமைந்தினுள் பொருளின் பகுதியாகிய களவு, கற்பு என்னும் ஒழுக்கங்களின் தன்மை கூறும்.

இரண்டுமே ஐந்திணை நெறி அளாவுவன. அதாவது, கோதாவரி நதி குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல், மருதம் என்னும் ஐவகை நிலங்களினூடாகவும் பாய்ந்து வருவது. சான்றோர் கவியும் ஐவகை நிலங்களுக்குமுரிய புணர்தல், இருத்தல், பிரிதல், இரங்கல், ஊடல் என்னும் ஒழுக்கங்களுக்கு அங்கமானவற்றை உரைக்கும்.

இரண்டுமே சவி உறத் தெளிந்தவை. அதாவது, கோதாவரி நதிப்புனல் ஒளி பொருந்திய தெளிவினை உடையது; மிக்க ஆழத்திலுள்ள பொருட்களும் கட்புலனாகும் படி மிகத் தெளிந்திருக்கும். சான்றோர் கவியும் மயங்கவைத்தல் என்னும் குற்றத்திற்குச் சிறிதும் இடமின்றி, அழகுக்கு முழுவதும் இடமாய்ச் செவ்வையாய்த் தெளிந்திருக்கும்.

இறுதியாக, இரண்டுமே தண் என்று ஒழுக்கமும் தழுவியவை. அதாவது, கோதாவரி நதி இடையறாது குளிர்ந்த நீரொழுக்குடன் கூடியது. சான்றோர் கவியும் என்றும் நல்லொழுக்கத்தை உணர்த்தும்; மெல்லென்ற ஓசையுடன் தட்டறச் செல்லும் சிறந்த நடை கொண்டு விளங்கும்.

இவ்வாறாகக் கம்பன் கண்ட கோதாவரி என்னும் தெய்வத் திரு நதி, சான்றோர் கவியினால் உவமிக்கப்பட்டுச் சிறப்புற்றது எனலாம். நுணுகி ஆராய்வோர்க்குக் கம்பன் கவியே அச்சான்றோர் கவிக்கும் உதாரணமாவதும் புலப்படலாம். இங்கும் தொல்காப்பியரின் ''உயர்ந்ததன் மேற்றே உள்ளும் காலை'' என்னும் விதி பொருந்தும்.

காரணம், கம்பன் கவியும், சான்றோர் கவி போலவே புவியினுக்கு அணியாகும்; ஆன்ற பொருள் தரும்; புலத்திற்று ஆகும்; அவி அகம் துறைகள் தாங்கும்; ஐந்திணை நெறி அளாவும்; சவி உறத் தெளியும்; தண் என்று ஒழுக்கமும் தழுவும். இனிவரும் கவிஞர் ஆற்றை வருணிக்கும் கால், ''கம்பன் கவி எனக் கிடந்த கோதாவரி'' என்று துணிந்து பாடலாம்.

இற்றைக்கு எண்ணூறு ஆண்டுகளுக்கும் மேலாகக் கம்பன் என்னும் கவிதைப் பெருநதி ஓடிக் கொண்டிருக்கிறது. அள்ளி அள்ளி நம்முன்னோர்கள் எடுத்த பின்பும், தேவைக்கு அதிகமாகத் தருகிறது அந்நதி, எத்துணை ஆழமாகப் போனாலும், அதனினும் ஆழம் காட்டி, நம்மனோர்க்கு அறிவின் எல்லையாய்க் காட்சி தருகிறான், கம்பக் கவி.

***''உலகெங்கிலும் உள்ள 70 மில்லியன் தமிழ் மக்களுக்கிடையே இடைத் தொடர்புகளை வளர்த்துக் கொள்ளுதல்'' எனும் தொனிப் பொருளுடன் இயங்கும் ''தமிழ் தேசம்'' (Tamil Nation) என்ற இணைய தளம், தமிழ் இணைய தளங்களுள் பரந்த ஒன்றாகவும் பல்வேறு விடயதானங்களை உள்ளடக்கியதாகவும் விளங்கு கின்றது. கலை, கலாசாரம், சமூகம், சமயம், அரசியல், மனித உரிமைகள் என வெவ்வேறு தலையங்கங்களின் கீழ் விரிவான தகவல்களையும், வரலாற்றையும், விவரணங்களையும் சேகரித்து வழங்கும் இத் தளம் http:// tamil nation.org என்னும் முகவரியில் அமைந்துள்ளது. ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் புதிய தக வல்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. இத் தளத்தில் காணப்படும் தமிழ் தேசிய அரங்கு (Tamil National Forum) ஊடாக ஆக்கபூர்வமான கருத்துக்களை உலக மெங்கிலும் பரந்து வாழும் தமிழ் மக்கள் பகிர்ந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. பெருமளவு ஆங்கில மொழிமூலமான பக்கங்களும் கணிசமான அளவு 'மயிலை' தமிழ் எழுத்து மூலமான பக்கங்களும் தளத்தில் காணப்படுகின்றன.***

# இது மரண தேசம்

ஐ.எம்.ஜெமீல், 3 ம் வருடம், தமிழ் (விசேடம்), கலைப் பீடம்.

*இது மரண தேசம்*
*இங்கிருக்க*
*எனக்கு*
*இஷ்டமில்லை.*

*இங்கு*
*தேசிய கீதம்*
*மரண ஓலங்கள் தான்*

*அரசியல்*
*ஆவணம்*
*துவேஷ தூரிகையால்*
*தீட்டப்படுகின்றது.*

*பாராளுமன்றம்*
*சிலருக்கு*
*பரத்தையர் வீடு*

*சர்வதேச*
*பொழுது போக்கு*
*வேடிக்கை*
*சமாதானப்*
*பேச்சு வார்த்தை*

*இனிப்புக் காட்டும்*
*இன்சுவைச் செய்தி*
*தீர்வுப் பொதி*

*கச்சிதமான செருப்பு*
*பெரும்பான்மைக்*
*கால்களுக்கு*
*சிறுபான்மை.*

*தேசப்படத்தில்*
*என் தேசம்*
*தேன் கூடு*
*தேடிப் பார்ப்பின்*
*இது ஓர் பிணக்காடு*

*சேற்று நிலங்களில்*
*செந்தாமரைகள்*
*அல்ல*
*ரீட்டாக்கள்*
*முளைத்திருக்கிறார்கள்*

*மண்ணில் பொன்மணிகள்*
*இல்லை*
*செம்மணிகள்*
*சிதைக்கப்பட்டிருப்பர்.*

*மழை பெய்ய*
*மறந்து விட்டது*
*செல்லடிகள்*
*சரமாரி பொழியும்*

*தோட்டங்களில்*
*தோட்டாக்கள் தான்*
*முளைத்திருக்கும்*

*எனக்கு*
*அமைதி வேண்டும்*
*தாயின் கருவறைக்குள்*
*மீண்டும் என்னை*
*அனுப்புங்கள் .*

# இலங்கையின் பாதுகாப்புச் செலவினமும் பொருளாதார வளர்ச்சியில் அதன் தாக்கமும்

**இராசா. கோகுலதாஸ் , 2 ம் வருடம், வர்த்தக விசேடதுறை, கலைப்பீடம்**

*ஒரு நாடு தனது அரசியல் சுதந்திரத்தைப் பாதுகாத்து இறைமையுடைய நாடாக விளங்கவும், நாட்டு மக்களிடையே சட்டம், ஒழுங்கு என்பனவற்றைப் பேணவும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது இன்றியமையாதது ஆகும்.*

*பாதுகாப்பு சேவையானது தூய பொதுப்பொருளாகக் காணப்படுகின்றது. பொதுப் பொருட்கள் நுகர்வில் விலக்குதல் விதிக்கு உட்படாததும், பொருள் நுகர்வில் போட்டி அற்றதுமாகும். பாதுகாப்பு சேவையைப் பொறுத்து நுகர்வில் போட்டி இன்மையும், விலக்குதல், தவிர்த்துக் கொள்ளுதல் சாத்திய மின்மையாலும் இது தூய பொதுப் பொருளாகக் கருதப்படுகிறது. இத்தகைய சேவைகளை தனியார் பொருட்கள், சேவைகள் போன்று சந்தையினூடாக ஒதுக்கீடு செய்ய முடியாது என்பதனால் அரசாங்கமே வழங்க வேண்டி உள்ளது. நாம் இங்கு குறிப்பிடுவது தேசிய பாதுகாப்பு ஆகும். தேசிய பாதுகாப்புக்கு அரசாங்கம் பாதீட்டின் மூலம் வளங்களை ஒதுக்கீடு செய்கிறது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இது பெருமளவு சாதனங்களை நுகர்கின்ற துறையாக வளர்ந்து வருகிறது.*

*இராணுவச் செலவினம் என்பது காலாட்படை, கடற்படை, விமானப்படை என்பவற்றுக்கான செலவினங்களையே குறிக்கும். இராணுவ நடவடிக்கைகளுக்காக துணைப்படைகளும் பயன்படுத்தப் படுவதுண்டு. உதாரணமாக ஊர்காவற்படை, பொலிஸ் அதிரடிப்படை என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுக்கான நேரடியான செலவினங்களை இராணுவச் செலவினங்களாகக் காட்டுவதில்லை. பொலிஸ் படைக்கான செலவு பொதுவாக சட்டம், ஒழுங்கு, பொது மக்கள் பாதுகாப்பு கருதி செய்யப்படுகின்ற செலவாக எடுத்துக் காட்டுவதே வழக்கமாகும். எனவே சிவிலியன்கள் செலவில் ஒரு பகுதி இராணுவ நடவடிக்கைகளுக்காக மறைமுகமாகச் செலவு செய்யப்படலாம். அதே போன்று இராணுவ செலவினங் களின் ஒரு பகுதி சிவிலியன்களுக்கும் உதவலாம். எனவே இராணுவ செலவுகள் பற்றிய ஆய்வில் முழுமையான இராணுவ நடவடிக்கைகளுக்கான செலவுகளை உய்த்தறிவது கடினமாகும்.*

*இராணுவச் செலவினமும் ஏனைய செலவுகளைப் போல் மீண்டெழும் செலவுகள், மூலதனச் செலவுகள் இரண்டையும் உள்ளடக்கியுள்ளது. மத்திய வங்கி அறிக்கையில் அரசாங்கச் செலவினம் பற்றிய தொழிற்பாட்டு ரீதியான வகைப்படுத்தலில் மீண்டு வரும் செலவினங்களைப் பாதுகாப்பு (Defence), பொது ஒழுங்கு பாதுகாப்பு (Public Order and Safety) எனும் இரு பிரிவாக எடுத்துக் காட்டி யுள்ளனர். ஆனால் மூலதனச் செலவினங்களின் கீழ் 1970 களின் பிற்பகுதியில் இருந்து சிவில் நிர்வாகம், பொது ஒழுங்கு பாதுகாப்பு எனவும் பகுக்கப்பட்டு இருக்கிறது. இலங்கையின் பாதுகாப்பு செலவினத்தில் மீண்டுவரும் செலவினங்கள் என்பது ஆளணியினருக்கான சம்பளங்கள், மேலதிகப்படிகள், போக்கு வரத்து படிகள், இராணுவ போக்குவரத்துச் சேவைகளுக்கான செலவினங்கள் என்பவற்றை உள்ளடக்கும்*

இலங்கையின் பாதுகாப்பு செலவினத்தில் மூலதன செலவினங்கள் என்பது நவீன ஆயுத தளபாட கொள்வனவுகள், இராணுவ முகாம் அமைத்தல், இராணுவ போக்குவரத்துச் சாதன கொள்வனவு என்பன வற்றை உள்ளடக்கும்.

சுதந்திரத்தின் போது மொ.உ.உற்பத்தியில் 0.2 சதவீதமாக மட்டும் காணப்பட்ட பாதுகாப்புப் பணிகள், மற்றும் பொது அமைதியும் பாதுகாப்பும் என்பனவற்றை உள்ளடக்கிய மொத்த பாதுகாப்பு செலவினம் 1982 வரையில் 1.1 சதவீதத்திற்கு குறைவாகவே காணப்பட்டது. 1980 களின் பிற்பகுதியில் ஏற்பட்ட உள்நாட்டு அமைதியின்மை, வடக்கு, கிழக்கில் ஏற்பட்ட இனநெருக்கடி என்பன பாதுகாப்பு செலவினத்தில் சடுதியான அதிகரிப்பை ஏற்படுத்தியதால் பாதுகாப்பு செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.1 சதவீதத்தை அடைந்தது. இவ்வாறு தொடர்ச்சியாக அதிகரித்து 1996ல் பாதுகாப்பு செலவினம் மொ.உ. உற்பத்தியில் 5.7 சதவீதமாகக் காணப்பட்டது.

பாதுகாப்புச் செலவினங்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தும் தன்மை கொண்டது என ஒரு சாராரும், பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது என மற்றொரு சாராரும் அபி விருத்தியடைந்து வரும் நாடுகளின் புள்ளி விபரங்களை ஆதாரமாகக் கொண்டு கருத்து வெளியிட் டுள்ளார்கள்.

இலங்கையின் இராணுவத் துறையின் செலவின அதிகரிப்பானது, ஒரு புறம் ஆளணி அதிகரித்து, இவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் அதிகரித்ததனால் ஏற்பட்டது. எனவே இராணுவ செலவின அதிகரிப்பானது வேலை வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது என்பது தெளிவாகின்றது. 1980 களில் இருந்து முப்படைகளிலும் படையினரது எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. எனினும் இராணுவத் துறையில் ஏற்படும் வேலை வாய்ப்பு பொருளாதாரத்துக்கு எத்தகைய நன்மையை ஏற்படுத்தும் என்று நோக்குவது அவசியமாகும். இராணுவத் துறையில் வேலை வாய்ப்பினை பெறும் ஒருவர் வேறு துறையில் ஈடுபட முடியாமல் போவது அவரைப் பொறுத்துச் சந்தர்ப்பச் செலவாகும். இளைஞருக்கு இராணுவத்துறையில் வேலைவாய்ப்புக் கிடைக்குமானால் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வருமானம் கிடைக்கக் கூடிய வாய்ப்பும் ஏற்படுகிறது. ஆனால் இராணுவத்துறையில் ஒரு வேலை வாய்ப்பை ஏற்படுத்த செலவு செய்த தொகையை வேறு துறைகளில் முதலீடு செய்திருந்தால் சில சமயங்களில் மேலும் கூடிய தொகையினருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கலாம். உயர் ஆபத்தை எதிர் கொள்ளாமல் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்க முடியும்.

இராணுவச் செலவின அதிகரிப்பு சாதன ஒதுக்கீட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும். அரசாங்கம் இராணுவச் செலவினங்களை அதிகரித்து ஏனைய செலவுகளைக் குறைத்துக் கொண்டால் அந்த சேவை களைப் பெற்றுக் கொள்வதற்காகத் தனியார் செலவினங்கள் அதிகரிக்க, தனியார் சேமிப்பு வீழ்ச்சி யடையும். அரசாங்கம் ஏனைய சேவைகளுக்கான செலவுகளைக் குறைத்து, இராணுவ செலவினங்களை அதிகரிக்கும் போது அரசாங்க சேமிப்பு வீழ்ச்சியடையும். இராணுவச் செலவு அதிகரிப்பு கல்வி, சுகாதார செலவினங்களில் வீழ்ச்சியை ஏற்படுத்தவில்லை. ஆனால் ஏனைய அரசாங்க செலவினங்களில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

முதலீட்டு செலவினங்களில் 1980 களிலிருந்து ஏற்பட்ட அதிகரிப்பு அன்னிய செலாவணியில் தாக்கத்தினை ஏற்படுத்தி இருக்கிறது. இராணுவத்தளபாடங்கள் பிறநாட்டிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. இறக்குமதிக்கு அன்னிய செலாவணியாகவே கொடுப்பனவுகள் செய்ய வேண்டி இருக்கிறது. மேலும் ஏற்றுமதி வருமானங்களில் இருந்தே ஆயுத தளபாடங்களுக்கான செலவுகளையும் செய்ய வேண்டும். இவ்வாறு செலவு செய்யும் போது மூலதன, நுகர்வுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அன்னிய செலாவணிப்பற்றாக்குறை ஏற்படும். மூலதன, நுகர்வுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு கடன் பெற்றால் அந்த நாட்டின் கடன் பழு அதிகரிக்கும். இதனால் நாட்டின் பொருளாதார

வளர்ச்சியும் பாதிக்கப்படும். இலங்கை போன்ற வளர்முக நாடுகள் அருமையான அன்னிய செலவாணியை இராணுவத் தளபாட இறக்குமதிக்குச் செலவு செய்வது பாரிய பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்தும்; வளர்ச்சியையும் பாதிக்கும்.

இலங்கையில் இராணுவச் செலவினம் பொருளாதார வளர்ச்சிக்கு எத்தகைய பங்களிப்பைச் செய்துள்ளது என நோக்கினால், இலங்கையில் இராணுவ செலவினம் அதிகரித்த காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சி முன்னைய காலப்பகுதியை விடக் குறைந்துள்ளது. 1978-80 காலப்பகுதியில் 6.6 சதவீதமாக இருந்த வருடாந்த வளர்ச்சி வீதம் 1983-96 காலப்பகுதியில் 5.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதும் 1983-96 காலப்பகுதியில் 5 சதவீதமாக மேலும் கீழ் நோக்கி சென்றிருப்பதும் உண்மை ஆகும்.

இலங்கையில் நடைபெறும் உள்நாட்டு யுத்தமே இராணுவ செலவு அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும். இந்த யுத்தம் வடக்கு கிழக்கு உற்பத்தி நடவடிக்கைகளைப் பெரிதும் பாதித்துள்ளது. குறிப்பாக மீன்பிடி தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் பொருளாதார தடைகளினால் உள்ளீடுகள் போதியளவு கிடைக்கப் பெறாமையும் ஏனைய உற்பத்திகளிலும் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. அத்துடன் உற்பத்திமையங்கள், சேவை நிலையங்கள், உள்ளக கட்டுமானங்கள், குடியிருப்பு வசதிகள் போன்றவை அழிக்கப்பட்டுள்ளன. பெருமளவு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இவை அனைத்தும் பொருளாதார உற்பத்திக்கு உதவக்கூடிய பௌதிக மனித வளங்களாகும். எனவே பாதுகாப்பு செலவின அதிகரிப்பு உற்பத்தி வளங்களை நலிவடையச் செய்து உற்பத்தி வீழ்ச்சிக்கு வழிகோலும்.

அதிகரித்த பாதுகாப்பு செலவுகளால் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை உயர்வடைந்துள்ளது. இந்தப் பற்றாக்குறையை ஈடு செய்ய என்ன வழியில் நிதி திரட்டப்படுகிறது என்பதைப் பொறுத்து பொருளாதார விளைவுகள் வேறுபடும். உள்நாட்டு வங்கித்துறையில் கடன் பெற்றால் பண நிரம்பல் அதிகரித்து பணவீக்கம் ஏற்படும். வெளிநாட்டிற் கடன் பெற்றால் கடன் சுமை ஏற்படும்.

இராணுவச் செலவு அதிகரிப்பினால் பொருளாதாரத்துக்கு ஏற்படும் வெளிவாரி விளைவுகளை நாம் மறந்துவிட முடியாது. அதாவது இராணுவத் தேவை கருதி உருவாக்கப்படும் உள்ளக கட்டுமான வசதிகள் பொருளாதாரத்தின் ஏனைய துறைகளுக்கும் பயன் தரக்கூடியதாக அமையும். உதாரணமாகக் விமானத்தளங்கள், வீதிகள், பாலங்கள், தொலைத் தொடர்புகள் போன்றவற்றை இதற்கு உதாரணமாக கூறலாம். இவை நேரடியாக இராணுவச்சிப்பாய் அல்லாதவர்களுக்கும் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும். அத்துடன் பொதுமக்கள் பாவனைக்குக் கிடைக்கும் போது பொருளாதாரத்துக்கு நன்மை ஏற்படும். இவ்வாறான உட்கட்டுமானங்கள் இலங்கையில் ஏற்பட்டுள்ளது. இதற்கு இராணுவம் பெருமளவு செலவு செய்துள்ளது. சிவிலியன்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் பொது மக்கள் பாவனைக்கு இது பயன்படுத்தப்படவில்லை என்று தான் சொல்ல வேண்டும். வெளிவாரி விளைவுகள் இருப்பது உண்மை. இலங்கையைப் பொறுத்தவரை பிரயோசனப்படவில்லை என்றே சொல்லலாம். எனவே இராணுவ செலவினத்தால் ஏற்பட்ட நன்மைகளை விட தீமைகளே அதிகமாகும்.

உறுதியான நிரந்தரமான தீர்வு எட்டப்பட்டு படிப்படியாக இராணுவத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வளங்கள் பொருளாதாரத்தின் ஏனைய துறைகளுக்குத் திசை திருப்பப்பட்டால் மட்டுமே இலங்கை எதிர்காலத்தில் பொருளாதார சுபீட்சத்தை அடைந்து கொள்ளலாம்.

### References


1. Economic Review Various Issues
2. Nathakumaran.R, Economics, Theory, Policy and Problem
3. Central Bank Annual Report (மத்திய வங்கி ஆண்டு அறிக்கை)
4. Piyadasa E.P, Military Expenditure Economic Growth - The case of Sri Lanka.

# சாருமதியின் கவிதைகள் - ஒரு கண்ணோட்டம்

**செ.சிங்காரவேல், விடுகை வருடம், கலைப்பீடம்.**

இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றில் ''மறுமலர்ச்சிக்காலம்'', மறக்கமுடியாத காலப்பகுதியாகும். அதுவரை காலமும் பண்டித மரபு வழிப்பட்டு நின்று, சமயத்தையும், நிலப்பிரபுக்களையும் பாடுபொருள்களாக ஏற்றுவந்த கவிதைப் போக்கில் புதிய சிந்தனைகளையும், சமுதாயம் சார்ந்தும், சமுதாயப் பிரச்சினைகள் சார்ந்தும் நின்று எளிய வடிவங்களில் அமைத்த நவீன கவிதையைத் தோற்றுவித்தவர்களாக இந்த மறுமலர்ச்சிக் குழுவினர் உள்ளார்கள். இவர்களது காலப் பகுதியை மறுமலர்ச்சிக் காலப்பகுதி என்பர். இவர்களால் தோற்றுவிக்கப்பட்ட நவீன கவிதை அறுபதுகள், எழுபதுகளில் அதன் மேல் நிலை வளர்ச்சியை எட்டியது. இந்த நவீன கவிதை முயற்சிகள் ஈழத்தில் புதுக்கவிதையின் தோற்றத்திற்கான ஏதுக்களில் ஒன்றாகும். நவீன கவிதையின் அடுத்த கட்ட வளர்ச்சி யாகவே புதுக்கவிதையின் தோற்றத்தினை இனங்காண்பர். அறுபதுகளில் மறுமலர்ச்சிக் குழுவினராலேயே முதலில் புதுக்கவிதை முயற்சிகள் ஈழத்தில் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும், எழுபதுகளிலிருந்தே அது வளர்ச்சியடையத் தொடங்குகிறது எனலாம். இன்று ஈழத்துக் கவிதை என்னும் போது புதுக்கவிதையே, என்று சொல்லுமளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது.

ஈழத்துப் புதுக்கவிதையை வளர்த்தெடுத்தவர்களில் சாருமதிக்கும் பங்குண்டு என்பதை மறுப்பதற்கில்லை. மட்டக்களப்புக் கல்லடியைச் சேர்ந்த க.யோகநாதன், சாருமதி என்ற புனைபெயருடன் எழுபதுகளின் முற்பகுதியில் கவிதைத் துறையில் இறங்கி, அண்மையில் மரணிக்கும் வரைக்கும் பல கவிதைகளைப் படைத்து ஈழத்துக் கவிதைத் துறைக்கு வளத்தினைச் சேர்த்துள்ளார். இவர் ஆரம்பத்தில் நவீன கவிதைகளைப் படைத்த போதிலும், பிற்காலத்தில் புதுக்கவிதையாளராகவே இனங்காணப் படுகிறார். அரசியல், உழைப்பு, பெண்கள் நிலை, காதல், சமயம், வாழ்வில் நம்பிக்கை, நம்பிக்கை இன்மை, இழிவு, ஒற்றுமை, சுரண்டல்கள் எனப் பல விடயங்கள் சார்ந்தும் இவரது கவிதைப் பார்வை விரிகிறது என்பதற்குச் சான்றாக சில கவிதைகளை நோக்கலாம்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடாகும். மக்களால் மக்களுக்காக ஆளப்படுகின்ற ஆட்சியே ஜனநாயகம் என்பதால், அங்கு மக்களுக்கான சகல உரிமைகளும் கொடுக்கப்பட்டு, செயற்படுத்தப்பட வேண்டும். இலங்கை அரசியல் யாப்பு சகல உரிமைகளையும் மக்களுக்குக் கொடுத்தது. ஆனால் நடைமுறையில் சில சுதந்திரங்கள் மறுக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய ஏமாற்ற நிலையினைக் கவிஞர் சாடுகின்றார். இதனைப் பின்வரும் கவிதையில் காணலாம்.

**''வாக்குரிமை**
**வரலாற்றை ஆக்குரிமை**

*இன்னும்*
*பேச்சுரிமை பிறபல*
*தாற்பரியங்கள் எல்லாம்*
*தாராளமாய் உண்டு*
*இந்த நாட்டினிலே!*
*கேட்பதற்கு இனிமைதான்*
*ஆனால் நமக்கு*
*கிடைத்ததெல்லாம் கொடுமை*
......................
*சொத்துக்கள் சேர்ப்பதற்கும்*
*சுரண்டல்கள் செய்வதற்கும்*
*அர்த்த ராத்திரியில்*
*அடிக்கடி விலையுயர்த்துவதற்கும்*
*துப்பாக்கிப் படைகளினால்*
*துன்பப்படுவோரை*
*நிஸ்டூரம் செய்வூதற்கும்*
*ஒப்புவமை அற்ற*
*ஓர்பெருமை கொண்ட*
*அச்சா நாடு*
*ஏனென்றால்*
*இது ஒரு ஜனநாயகநாடு''*

*தன்னை ஒரு ஜனநாயக நாடாகப் பிரகடனப்படுத்தி விட்டு, அந்த ஜனநாயகத்தைப் பாதுகாக்காமல் மேற்படி செயல்களிலே மேலும், மேலும் ஈடுபடுவதால் இது ஒப்புவமை அற்ற நாடாக விளங்குகிறது. ஜனநாயகப் பண்பிற்கு முரணான அரசின் செயற்பாடுகளையே இக்கவிதையில் கவிஞர் சாடுகிறார்.*

*மக்களால் மக்களுக்கான ஆட்சியில் மக்களே ஆட்சியாளர்களைத் தெரிவு செய்கின்றனர். தேர்தல் மூலம் தங்களுக்கு விரும்பியோரைத் தெரிவு செய்து ஆட்சிக்கு அனுப்பி, அவர்கள் மூலம் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர். ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வதில் சில நேரங்களில் மக்கள் ஏமாற்றத்திற்கு உள்ளாகின்றனர். அத்தகையதொரு ஏமாற்றத்தினை ''புரியாதன புரிந்தால்'' எனும் கவிதையில் காணமுடிகிறது.*

*''பள்ளியில் நான்போட்ட*
*பிழைகளினால்*
*பிள்ளைகள் முகம் கவுண்டது*
*தேர்தலில் நான் போட்ட*
*பிழைகளினால்*
*துயரங்கள் வானுயர்ந்தது*

*பிழைகள் போட்ட*
*பிழையை உணர்ந்து*
*சரிகளைத் தேடி*
*நான் எழுதினேன்*

*பள்ளியில் அது*
*கற்றலாயிற்று*
*தேர்தலில் அது*
*செல்லாதாயிற்று''*

*பாடசாலைகளில் பிழைபோட்டால் உடனே சரிசெய்து மாணவர்களது மகிழ்ச்சியை வரவழைக் கலாம். ஆனால் தேர்தலில் தவறினால் உடனே சரிசெய்து கொள்ள முடியாதநிலை. அடுத்த சந்தர்ப்பம் வரும்வரை அது பெறுமதியற்றதாகவே இருக்கும்.*

*இலங்கை அரசியல் வரலாற்றில் 1983 ஜுலையில் இடம் பெற்ற இனக்கலவரத்தின் தாக்கம் நாட்டின் பல பாகங்களிலும் எதிரொலித்தது. இதனால் பல உயிரழிவுகள் ஏற்பட்டன. இக்கலவரம் சிறுபான்மையினரான தமிழரிடம் அழிவை ஏற்படுத்தியதோடு ஒரு விழிப்புணர்வையும் உண்டாக்கியது. இதனை ''1983 ஜுலைப் பிரகடனம்'' எனும் கவிதையில் கவிஞனின் குரலாகக் காணமுடிகிறது.*

*''........*
*கதவுகள் தட்டப்பட்டன*
*காரியம் நிதானிக்கு முன்னரே*
*உமிழப்பட்ட ரவைகளுக்கு*
*உயிர்கள் சுவராகிச் சாய்ந்தன*
*..............................''*

*இவ்வாறு பல உயிர்களைப் பலிகொண்ட ஜுலைக்கலவரம்*

*''எங்கள் மண்ணையும்*
*எங்கள் மரங்களையும்*
*கோபுரக் கலசங்களையும்*
*கொடிகளையும் தேர்களையும்*
*இழந்து வாழ*
*நாங்கள் ஒருப்படோம்*
*நாங்கள் ஒருப்படோம்''*

*என்று விழிப்புற்று எழுந்து நிற்கவும் தூண்டியது எனலாம்.*

*சமுதாயத்தில் தொழிலாளர்கள், அவர்களது பிரச்சினைகள் பற்றியும் கவிஞரின் பார்வை விரிகிறது. எடுத்துக்காட்டாக ''எனது கிராமத்தின் ஒருவருடம்'' எனும் கவிதையில்*

*''விதை விதைத்தாயிற்று*
*பயிர்கள் இனிமுளைக்கும்*
*சிறுமழை பெருமழை*
*சீராகவும் சீரற்றும்*
*வரைகள் நிறையும்*
*வக்கடைகள் உடையும்*
*...................''*

*மழையை நம்பியே உழவர்கள் விதைப்பர். சிலவேளைகளில் காலநிலை மாற்றத்தினால் மழை இல்லாமலும் போகலாம், சில சந்தர்ப்பங்களில் அடை மழையும் கொட்டலாம். இதனால் பயிர்கள் ஒரு புறம் கருகியும், மறுபுறம் வெள்ளத்தினால் மணல் வார்க்கப்பட்டு அழிந்தும் போக ஆங்காங்கே*

ஒன்றிரண்டு தலைநிமிரும், அவை விழைந்து வரும் காலங்களில் குருவிகளின் தொல்லை ஒருபுறம். இத்தனைகளிலும் இருந்து விடுபட்டாலே விதைத்தலின் பயனை அடையமுடியும். அவ்வாறு அடைந்த பயன் வாழ்நாள் முழுவதும் வயிற்றுக்குப் போவதில்லை.

''அரைவயிறு நிறைய
ஆறுமாதம் ஓடும்
மறுபடியும்
விதை விதைப்பு
.......

பருவம் அறிந்த
பறவைகளின் வருகை
குடலை காயும் வரை
எனது கிராமத்தின்
குடல்களும் காயும்''

இவ்வாறு உழவர்களின் வேளாண்மையை நம்பி வாழும் அவர்களது வாழ்க்கை, அந்த நம்பிக்கையில் ஏற்படும் இடையூறுகள் என்பன இங்கு காட்டப்படுகின்றன. வேளாண்மையையே நம்பி வாழும் உழவர்களது இரங்கத்தக்க வாழ்வினை ''இனி ஒண்டுமில்லை'' எனும் கவிதையிலும் காண முடிகிறது. இதனை,

''ஆடியிலே காத்தடிக்க
ஆரம்பிச்சா வயல்வேல
ஓடிஓடி உழைக்கவும்
ஒண்டுமில்ல மிச்சமிங்கே

சட்டையில காலவச்சா
வயிறுகூட மறந்துபோகும்
பட்டகடன் அடைச்சா
பதர்கூட மிச்சம் இல்லை.''

என வரும் கவிதை மூலம் காணமுடிகிறது.

சமுதாயம் சார்ந்த பல பிரச்சினைகளையும் தமது கவிப் பொருளாக்கியுள்ளார் சாருமதி. சமுதாயத்தில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். பெண்களின் உரிமைகளை மறுத்த எந்தச் சமுதாயமும் விடிவு கொள்வதில்லை. சில சமூகங்களிடையே ஆணாதிக்கத்தின் கோரப்பிடிக்குள் பெண்களின் உரிமைகள் அழிந்து போகின்றன. சுகபோகங்களுக்காகவும், அடுப்படி வேலைகளுக் காகவும், பெண்களை கருவியாக்கிக் கொண்டிருந்த வரலாறுகளும் உண்டு. ஆனால் பரவலாக்கப்பட்ட கல்வியறிவினால் பெண்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு இந்நிலைக்கு எதிராக இன்று அவர்கள் குரல் கொடுக்கின்றனர். இந்நிலையினை ''எழுக தோழியரே எழுக'' எனும் கவிதையில் காணமுடிகிறது.

''ஆதாமும் ஏவாளும்
உலகின்
ஆரம்பம் என்று சொன்னால்
அந்த

***ஆரம்பத்தின் ஒரு பாதியின்று***
***அடிமையாய் வாழ்வது ஏன்?***
***..............***
***எழுக தோழியரே எழுக***
***.................''***

*சமுதாயத்தில் கல்யாணமாகாத பெண்கள் நிலை கேலிக்குள்ளாகிறது. அவர்களது திருமணத்தைத் தீர்மானிப்பதில் பொருளாதாரம் முன்னிற்கிறது. இதனால் பல பெண்களின் வாழ்க்கை கண்ணீராலே எழுதப்படுகிறது. இந்நிலையினை கவிஞரின் ''கல்யாணி என்ன செய்வாள்'', ''காதல் போட்ட முடிச்சு'' போன்ற கவிதைகளில் காணமுடிகிறது.*

***''கல்யாணி ஏன்***
***கண்ணீரில் கரைகின்றாள்***
***கல்யாணச் சந்தையில்***
***காலம் தப்பிப்போன***

***அந்தப் பூமரத்திற்கு***
***காலம் எல்லாம் இனி***
***கண்ணீரும் இருட்டுந்தானா?''***

*எனும் கவிதையில் காண முடிகிறது.*

*காதலைப் பாடாத கவிஞர்கள் இல்லை என்று சொல்லுமளவில் உள்ளனர். அந்தளவிற்கு கவிஞர்களது பார்வையைக் காதல் தன்பக்கம் திருப்பி விடுகிறது. இதற்கு சாருமதியும் விதிவிலக்கானவரல்லர். காதல் சார்ந்தும் இவரது பார்வை நீள்கிறது. ''சுருதி பேதங்கள்'' எனும் கவிதையில்*

***''அப்பா பார்த்த பெண்***
***ஒப்பவில்லை என்று***
***சுப்பிரமணியம்***
***வாழ்க்கைக்குச்***
***சுபம் சொல்லி***
***சுருக்கிக் கொண்டான்***
***.............''***

*மகன் காதலிப்பது தெரிந்த தந்தை, நிறைந்த சீதனத்துடன் தனக்குப் பிடித்த இடத்தில் பெண் பார்த்து விடுகிறார். பணத்திற்காக எடுத்த பெண்ணால் அவனது மனதில் வாழும் பெண்ணை அழிக்க முடியவில்லை. உடனே கழுத்தில் கயிறு மாட்டித்தன்னையே அழித்துக் கொள்ளும் இளைஞனின் பரிதாப நிலை மேலே காட்டப்படுகிறது. ''நானொரு மனிதன்'' என்ற கவிதை மூலமும் காதலித்துத் தோற்றுப் போன ஒரு இளைஞனின் நிலையினை கவிஞர் காட்டியுள்ளார். இவற்றை விட இவரது கவிதை நோக்கு, சமயம், இழிவுகள், வாழ்க்கையில் விரக்தி, நம்பிக்கைகள், ஒற்றுமை போன்ற விடயங்கள் சார்ந்தும் அமைந்துள்ளன.*

*வாய்மொழி இலக்கியச் சாயலிலும், அதற்கே உரித்தான சொற்கள், உறவு முறைகள் என்பவற்றைக் கொண்டும் கவிதைகளைப் படைக்கும் முயற்சிகளிலும் சாருமதி ஈடுபட்டிருக்கிறார் எனலாம். உதாரணமாக ''காவலுக்கு நான் வாரன்'', ''அவரைக் கண்டால்'', ''உழைப்பவர்கள் வென்றுவிட்டால்'', ''வருங்கால ஏழையின் வாழ்வைத் தேடி'' போன்ற பாடல்களைக் குறிப்பிடலாம்.*

எடுத்துக்காட்டாக;

"நட்டநடு வரவ
நடுவரவிக் கட்டால
கட்டுக் கட்டாய் புல் சுமந்து
கால்வீசிப் போற மச்சாள்
கால்வீசிப் போறதில
வேகமென்ன சொல்லு மச்சாள்
..............."

எனும் கவிதையினை நோக்கலாம்.

சாருமதியின் ஆரம்பகாலக் கவிதைகள் நவீன கவிதைகளாக விளங்கினாலும் பிற்காலத்தில் புதுக்கவிதைகளே இவரது படைப்புகளாக இருந்தன. இவையே இவருக்குப் புகழைத்தேடிக் கொடுத்தன. மட்டக்களப்புப் புதுக்கவிதை வளர்ச்சியின் காரணகர்த்தா இவர் என்றே சொல்லலாம். ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் மட்டக்களப்புக் கவிஞர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர். இந்த வகையில் ஈழத்துப் புதுக்கவிதைப் போக்கில் சாருமதிக்கும் நிலையான ஒரு இடமுண்டு என்பதில் ஐயமில்லை.

---

***இணையத்திலுள்ள தமிழ்ப் பக்கங்களில் ஆக்க இலக்கிய முயற்சிகள் ஆங்காங்கு இடம்பிடித்துள்ளன. அவ்வகையில் தமிழ் கவிதைகள் இடம்பெற்றுள்ள பக்கங்களைக் குறிப்பிடலாம்.***

***சில தனிநபர்களினால் பிரபல கவிஞர்கள் பற்றிய பக்கங்களும், வேறு சில கவிஞர்களால் தமது சொந்த கவிதைப் பக்கங்களும் இணையத்தில் பேணப்படு கின்றன. சில கவிதைப் பக்க முகவரிகள் :***

***மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கவிதைகள் :-***

*http:// www.geocities.com/Athens/Acropolis/6551/bharathi.htm*

***பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் கவிதைகள் :-***

*http:// www.geocities.com/Athens/Acropolis/6551/pattu.htm*

***கவியரசு கண்ணதாசன் கவிதைகள் :-***

*http:// www.tamilnews.org.sg/~knadasan/*

***செல்வகணேசன் கவிதைகள் (தமிழகம்) :-***

*http:// www.geocities.com /Athens/Acropolis/6582/selva.htm*

***தற்போது கனடாவில் வாழும் ஈழத்துக் கவிஞர் கந்தவனம் அவர்களது கவிதைப் பக்கம் : -***

*http:// www.kavithai.com/*

***ஈழத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சியாக விளங்கும் 14 கவிதைகளின் தொகுப்பான "நெஞ்சத்து நினைவுகள்" :-***

*http:// www.expage.com /page/ kavi*

# உன்னோடு

சி.மைதிலி, 2ம் வருடம், பொறியியல்பீடம்.

'அன்று கல்லோடு கல்லைத் தேய்த்து தீயைக் கண்டு பிடித்த போது பிறப்பெடுத்த விஞ்ஞானம், படிப்படியாக வளர்ச்சியுற்று இந்த 20ம் நூற்றாண்டில் கம்பியூட்டர், ரோபோவுடன் விண்ணிலே மிதந்து இன்னொரு உலகத்தையும் சிருஷ்டிக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டது. தனது இரு கைகளையும் விரித்து மனுக்குலத்தையே அணைத்துக் கொண்ட விஞ்ஞானம் ஏன் எம் கைகளை மாத்திரம் கட்டிப் போட்டு விட்டது' என்ற நினைப்பு வந்த போது கூடவே சிரிப்பும் வந்தது, அவனுக்கு. 'அணுவையே துளைத்து ஆற்றலைக் கண்டுபிடித்து எத்தனையோ சாதனைகள் செய்துவிட்டது விஞ்ஞானம். ஆனால் விஞ்ஞானம் என்ற பெயரைக் கேள்விப்பட்டவுடன் என் தம்பிக்கு ஞாபகம் வந்தது ஏ.கே. 47ம் தோட்டாவும் தானே.'

தன் விதியினை நினைத்து ஆசைகளைச் சுருக்கி ஒரு சில இலட்சியங்களுக்காக மட்டும் வாழ்ந்த அவனுக்கு இந்தக்கட்டத்தில் இப்படிப்பட்ட எண்ணம் வந்ததில் ஆச்சரியமில்லைத்தானே.

ஐந்து வயதிலே தந்தை இறந்ததும் தாங்கள் குடியிருந்த வீடு முதற்கொண்டு அத்தனை காணிகளை யும் அப்பாவின் சகோதரர்கள் பங்குபோட்டுக் கொண்டதும், யாரிடமும் உரத்துப் பேசக் கூடத் தெரியாத அம்மா மௌனமாக எல்லாவற்றுக்கும் தலையசைத்துவிட்டுத் தன் தாய் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போனபோது விழுந்தது முதலாவது அடி. கவலைப்பட்டான். தன் அத்தை, சித்தப்பாமார், அப்பப்பாவை விட்டுப் பிரிகின்றோமே என்று.

ஆனால் அவள் அம்மம்மா என்ன அவ்வளவு வசதியானவளா? காலம் முழுவதும் அவர்களை வைத்துக் காப்பாற்றுவதற்கு, ஆறாவது மாதமே காணி ஓரத்தில் ஒரு கொட்டில் மட்டும் போட்டுக் கொடுத்துவிட்டு வெளியேற்றியபோது ஆத்திரப்பட்டான், தன் உறவினர்களை நினைத்து.

அன்றிலிருந்து அவன் தாய் எத்தனையோ கஷ்ரப்பட்டுக் கூலிவேலை செய்து அரைவயிறு, கால்வயிறாகக் கிடந்து அவர்களை வளர்த்தெடுத்தபோது இரத்தக் கண்ணீர் வடித்தான், அம்மா என்ற பிறவியைப் பார்த்து.

அவள் தாய் ஒரு உத்தமி. கணவன் இறந்தபிறகு யாரிடமும் கடமைப்படாமல் கஷ்டப்பட்டு அவர்களை வளர்த்தெடுத்தாள். ஆனால் அவளுக்குக் கடுமையாக உழைக்கத் தெரிந்ததே தவிர பிள்ளை களின் மனதை அறிந்து கொள்ளத் தெரியவில்லை. பிள்ளைகளுக்காக உயிரைக் கொடுக்கத் தெரிந்ததே தவிர உள்ளக் கொதிப்பை அறிந்து கொள்ளத் தெரியவில்லை.

அவனுக்கு சில சமயங்களில் ஏக்கமாக இருப்பதுண்டு.

ஆனால் எல்லாமே தம்பியின் முகத்தைப் பார்த்ததும் பறந்துவிடும் அவனுக்கு. உறவுகள், கவலைகள், பிரிவுகள் எல்லாம் மறந்துவிடும், அவனைக் கண்டதும் பூரிப்பால். அவனுக்கு ஓய்வுநேரத்தில் பொழுதுபோக்கு, கவலையடையும் நேரத்தில் மாற்றுமருந்து எல்லாமே அவன் தம்பிதான்.

சின்ன வயதிலே பிள்ளைகள், பெற்றோரின் அதட்டலுக்குப் பயந்து பள்ளிக்கூடம் செல்வதைப் பார்த்திருக்கிறான். ஆனால் படிக்க வேண்டும், உழைத்து முன்னுக்கு வரவேண்டும் என்பதற்காகவே படிக்கச் சொல்வதற்கு ஆளே இல்லாத நிலையிலும் அவன் ஊக்கமாகப் படித்தான்.

ஆனால் எட்டாம் வகுப்புக்கு வந்தபோது பக்கத்துவீட்டு அங்கிளின் போதனையால் வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு முடிவெடுத்தாள் அம்மா.

''அம்மா என்னைப் படிக்க விடுங்கள். நான் ஒரு டொக்டராக வரவேண்டும்'' என்று சொல்வதற்கு அவன் உதடுகள் துடித்தன.

ஆனால், 'அம்மா எத்தனை நாட்களுக்குத்தான் இப்படி ஓடாகத் தேய முடியும்?' அத்துடன் பிள்ளைகளின் தேவைகளை மட்டும் தீர்த்து வைக்கக்கூடியவளாக, ஒரு வேலைக்காரியாக, இயந்திரமாக மட்டுமே இருக்கும் அம்மாவிடம் எதைச் சொல்லிப் புரியவைப்பது. அத்துடன் இலட்சியத்தை சற்று மாற்றிக் கொண்டான்.

'குடும்பப் பாரத்தை ஏற்று அம்மாவைக் கஷ்டப்படுத்தாமல் தம்பியை ஒரு டொக்டராக்கி விடவேண்டும்', மனது நிறையப் பாரத்துடன் தம்பியை முத்தமிட்டு விமானநிலையம் சென்றான்.

வெளிநாட்டுக்குப் போனபிறகும் உடனடியாக அவனால் எதையும் செய்யமுடியவில்லை. தம்பியின் ஞாபகம் வந்தது. அன்றாடம் பத்துப்பாத்திரம் தேய்க்கும் அம்மாவின் ஞாபகம் வந்தது. ஒரு துணையும் இல்லாமல் அவர்களைத் தனியவே விட்டுவிட்டு வந்தது பற்றிப் பயம் வந்தது.

ஆனால் அதை மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கவா அவனுக்கு நேரம். படிப்படியாகத் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு வேலையில் கவனம் செலுத்தத் தொடங்கினான்.

ஆயிரம் கஷ்டங்களுக்கு மத்தியிலும் தம்பியின் கடிதங்களும், அவன் படிப்பில் காட்டும் அக்கறையும் அவனுக்குப் புத்தூக்கம் கொடுத்துக்கொண்டு இருந்தன.

தம்பியைப் பற்றிய நினைவுகளில் அடிக்கடி எங்கேயோ போய்விடுவான்.

அன்றும் ஒருநாள்....

தம்பி பெரிய அம்புலன்ஸ் ஒன்றிலிருந்து வெள்ளைக் கோட்டுடன் இறங்கி வருவது போலவும், அவனோடு கூட பல ஸ்பெஷலிஸ்ட்கள் விவாதித்துக் கொண்டு போவது போலவும், தான் தூர இருந்து அதனைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் வடிப்பது போலவும்...

திடீரென்று மணிச்சத்தம் கேட்டது. அது ரெலிபோன் மணியல்ல, சாவுமணி.

அது கெடுத்தது தூக்கத்தை மட்டுமல்ல, நிம்மதியையும் தான்.

அத்துடனேயே வேலையை மூட்டை கட்டி வைத்துவிட்டு இலங்கைக்குப் புறப்பட்டவன்தான்.

கண்ணீரின் பிடியில் எத்தனைநாட்கள் கட்டிலிற் கிடந்தானென்று அவனுக்கு ஞாபகமில்லை.

மெல்ல எழுந்து நடக்க எத்தனித்தபோது காணும் பொருட்கள் எல்லாம் தம்பியை நினைவு படுத்தியது. மறுபடி சரிந்து கண்ணை மூடிவிடுவான்.

'அவனுக்குக் காலம் வந்துவிட்டதாம். அதனால் அதேவழியில் போய் இறந்துவிட்டானாம்' அவனைத் தேற்றுவதற்காக அவன் அயலவர்கள் சொன்னார்கள்.

''இப்படியே இருந்தால் கவலைதான் கூடும். பேசாமல் ஒரு கல்யாணத்தைச் செய்து கொள். காலப்போக்கில் எல்லாம் மறந்து போய்விடும்'' என்று அம்மாகூடச் சொன்னார்.

ஆனால்...

எப்படியாவது சந்தோசத்தைத் தேடிப் போக வேண்டும் என்ற நிலையிலா அவன் இருக்கின்றான்?

*அப்படியே அதனை மறந்து விடுவதாக இருந்தாலும் இதுவரை அநுபவித்த பாசத்தின் பிரிவுக்கு அவன் காட்டும் மரியாதை இதுதானா?*

*ரயில் பயணிகள் போல வாழ்வில் எப்போதாவது எதிர்ப்படவும் உடனே மறைந்து போய் விடுவதற்கும் என்றா கடவுள் உறவுகளைக் கொடுத்திருக்கிறான். இல்லை... வாழ்க்கை மறைந்த பின்பும் இலக்கணமாக உடல் மறைந்த பின்பும் உண்மையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தானே பெற்றோர் என்றும் உடன்பிறந்தோர் என்றும் சில உறவுகளை மட்டும் தனித்துவப்படுத்தி இருக்கின்றனர்.*

*இருபத்தைந்து வயதில் துள்ளித் திரிய வேண்டிய இளமைப் பருவத்தில் இவன் நெஞ்சை உலுக்கியது இந்தச் சம்பவம்தானா என்பது ஆச்சரியமாகத்தான் இருந்தது மற்றவர்களுக்கு.*

*ஆனால் அவன் தன் தம்பியைத் தவிர வேறு யாரையுமே, எதையுமே ஒரு பொருட்டாகவே கருதவில்லையே.*

*'தம்பியுடையான் படைக்கஞ்சான்' என்று சொல்லுவார்கள். தம்பியுள்ள காரணத்தினாலே இவன் யாரையும் நண்பர்களாகக் கூடச் சேர்த்துக் கொள்ளவில்லை.*

*இவனைப் பொறுத்தவரையில் இவன் உயிர்மூச்சு, அவன் குடும்பகௌரவம் எல்லாமே தம்பிதான். அவனாற்தான் குடும்பம் முன்னேற வேண்டும் என்று நினைத்தான்.*

*ஆனால் இலட்சியங்கள், கோட்டைகள் எல்லாம் மண் குடிசையாகித் தரைமட்டமான பின்பு யாரை நொந்து கொள்வது.*

*இப்போதெல்லாம் அவனுக்குள் ஒரு எண்ணம் வருவதுண்டு, தன் கூடவே அவன் தொடர்வது போல...*

*வெளியிலே போகும்போது கூடவே வருவதுபோல, சாப்பிடும்போது முன்னாலே இருந்து சாப்பிடுவது போல, இருட்டில் வரும்போது முன்னால் போவது போல...*

*ஏதோ ஒரு உள்ளுணர்வு சொல்லிக் கொண்டிருந்தது.*

*சில சமயங்களில் பிரமையோ என்று கூட நினைக்கத் தோன்றுவதுண்டு.*

*ஒருநாள் இரவு 9 மணியிருக்கும். அவன் கட்டிலில் படுத்திருக்கின்றான். நித்திரை வரவில்லை. சுழன்று சுழன்று படுத்திருக்கின்றான். திடீரென்று கதவைத் திறந்து கொண்டு தம்பிதான். கட்டைக் காற்சட்டையும் ரீசேட்டும் போட்டுக்கொண்டு,*

*''அண்ணா உன்னோடு ஒளிச்சுப்பிடிச்சு விளையாடிக் கனகாலமாச்சு. இண்டைக்கு விளையாடுவமா'' என்றான்.*

*தோட்டத்துக்குக் கூட்டிக் கொண்டு போய்க் கண்களைக் கட்டுகிறான். திடீரென்று மூச்சு வாங்குவது போல இருக்கிறது. விரைவாகக் கட்டுக்களை அவிழ்க்க எத்தனிக்கிறான். முடியவில்லை.*

*''அண்ணா இங்கவா, இங்கவா''*

*தம்பி ஓடிப்போய் நின்று கூப்பிடுவது கேட்கிறது. காலை அசைக்கிறான். அது நகர மறுக்கிறது.*

*''அண்ணா இங்கே....'' திடீரென்று குரல் எதிர்ப்பக்கம் கேட்கிறது.*

*''அண்ணா நான் உனக்கு முன்னாலேயே போகிறன். நீ எனக்குப் பின்னாலேயே வா'' என்றபடியே ஓடுகின்றான்.*

*திடீரென்று கண்விழிக்கின்றான் அவன்.*

*எதிரில் தம்பியின் துப்பாக்கி தொங்கிக் கொண்டு இருக்கிறது.*

# எச்சம் பார்த்துச் சொல்கிறோம்

வே.முருகதாசன், 3 ம் வருடம் , பொறியியல் பீடம்

*பூவரசம் இலையில் திரட்டி*
*வைத்த பழஞ்சோற்றில்,*
*எறும்புகள் புள்ளிகளாய்*
*கோலம் போட்டிருந்தன...*
*காய்ச்சி வைத்த*
*கறுப்பியாட்டின் பால்*
*சட்டியில் உறைந்து போய் கிடக்கிறது...*
*சூரியன் வடலியடைப்பிற்குள்*
*முகம் மறைக்க*
*முயன்று கொண்டிருந்தான்...*
*கொக்கரித்த வண்ணம் கோழிகள்*
*கொய்யாவில் இடம் பிடித்தன...*
*மேய்ச்சலிற்கு போன*
*கறுப்பிகூட கட்டைக்கு வந்தாச்சு...*
*பள்ளிபோன அவன் மட்டும்*
*இன்னும் வீடு வரவில்லை.*
*''இவ்வளவு நேரமாய்*
*எங்கே போயிருப்பான்*
*தேப்பன் முழுங்கி...தத்துவாரி''*
*வார்த்தைகள் வெளியில்*
*வராமல் மகனை மனதுள்*
*திட்டிக் கொண்டாள் இருந்துமென்ன,*
*கோபச்சுரப்பிற்கு பாசச்சுரப்பு*
*தடை போட்டது-ஊரில்*
*பச்சையுடைகள் தொடர்பான*
*காணாமல் போனோர் கதைகளால்*
*பயச்சுரப்பும் கூடவே வந்தது.*
*பந்தடி வெட்டைக்கு*
*போய்ப் பார்த்தாள்,*
*சூனியப் பிரதேசமாயிருந்தது*
*சுதந்திரமாக மேயும்*
*ஒரு சில மாடுகளைத் தவிர...*

*நீச்சலடிக்கும் கேணியும்*
*அமைதியாகக் கிடந்தது*
*தவளைகள் மட்டும் ஏதோ*
*தீர்வுகாணும் பேச்சு வார்த்தையில்*
*மும்முரமாயிருந்தன...*
*அரட்டையடிக்கும்*
*ஆலமரத்தடியில்*
*அவர்களைத் தவிர யாருமேயில்லை*
*அயல்வீட்டில் தேடிப்*
*பார்த்தாயிற்று,*
*அன்னம்மா வீட்டிற்கும்*
*அவன் வரவில்லையாம்...*
*அழுகையோடு அலங்கோலமாய்*
*கசங்கிப் போனவள்*
*அறிந்து கொண்டது,*
*பள்ளியால் வந்தவனை*
*பச்சையுடைகள் வழிமறித்ததுவரை*
*முகாம் தேடிப் போனவளிற்கு*
*முடிவாகச் சொன்னார்கள்*

''அவனை நாங்கள் பிடிக்கவில்லை''
துப்பாக்கியின் சுடு குழல்களால்
தீர்ப்புகள் எழுதப்படும்
பிரதேசத்தில் என்றும்
நடத்தப்படுவதில்லை மறுவிசாரணைகள்
அவளால் என்ன செய்ய முடியும்
கண்ணீரை மட்டும்
கடலாகப் பெருக்க முடிந்தது
அவளைப் போன்றோர்
அங்கே செய்து கொண்டிருப்பதும்
அது ஒன்றையேதான்.
கண்ணீரில் தத்தளித்தவளிற்கு
கலங்கரை விளக்கமொன்று
காட்டினார்கள்...
குற்றச்சாட்டுக்களை அடுக்கவும்
படிவங்களை நிரப்பவும்
மட்டுமே தெரிந்த,
மனித உரிமைகள் குழு.
விசாரணைகள் முடித்து
ஆறுதலாய்ச் சொன்னார்கள்
ஆறுமாதம் பொறுத்திருங்களம்மா
செம்மணியில் எல்லாம்
எரிந்து முடியட்டும்
எச்சம் பார்த்து
சொல்கிறோமென்று.

---

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் மின்னியல் தமிழின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிப்பு செய்து வருகின்றனர். அவ்வகையில் ''இலங்கை தமிழ் சங்கம் - அமெரிக்கா''வின் 'வெப்' தளமும் ''தமிழ் கனடியன்''; 'வெப்' தளமும் முக்கியத் துவம் பெறுகின்றன.

http:// www.sangam.org எனும் முகவரியைக் கொண்ட தமிழ் சங்க 'வெப்' தளம் காலத்துக்குக் காலம் புதிய தகவல்களையும் கட்டுரைகளையும் பல தரப்பட்ட ஆக்கங்களையும் சேர்த்துக் கொள்கின்றது. தமிழ் கனடியன் 'வெப்' தளம் பல்வேறு தலையங்கங்களில் விடயதானங்களை வகைப்படுத்தி வழங்குகின்றது. http:// www.tamilcanadian.com என்ற முகவரியில் உள்ள இத் தளம் தினமும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் வெளிவரும் இலங்கை தொடர்பான செய்திகளுக்கு தனது செய்திப் பக்கத்தில் இணைப்புக்களை வழங்குவதன் மூலம் இலங்கை விருந் தினர்களுக்கு அளப்பரும் சேவையாற்றி வருகிறது. தமிழ் கனடியன் செய்திப் பக்க முகவரி http:// www.tamilcanadian.com /news என்பதாகும்.

# இலங்கையிலுள்ள தமிழர்களும் சுயநிர்ணய உரிமை பற்றிய தத்துவமும்

சுமணசிறி லியனகே, சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை.

திருவாளர் சுமணசிறி லியனகே, பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தில் பொருளியல் துறையில் விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகின்றார். இலங்கையின் குறிப்பிடத்தக்க இடதுசாரிச் சிந்தனையாளர்களுள் ஒருவர். சிங்கள மொழி பேசும் மக்களினது கருத்துக்களைத் தமிழ் பேசும் மக்களிடம் எடுத்துச் செல்லக்கூடிய வகையிலான கருத்துப் பரிமாறல் களம் ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டியது, இன முரண்பாடுகள் மிகுந்து நிற்கும் இன்றைய காலத்தின் தேவையாக இருப்பதை 'இளங்கதிர்' உணர்ந்துள்ளது.

அவ்வகையில் ''இலங்கையிலுள்ள தமிழர்களும் சுயநிர்ணய உரிமை பற்றிய தத்துவமும்'' என்ற திரு. லியனகே அவர்களது கட்டுரை தமிழில் இங்கு பிரசுரமாகிறது.

இலங்கையிலுள்ள தமிழர்கள் (இலங்கைத் தமிழர்கள் என்ற பதத்தினை நான் வேண்டுமென்றே தவிர்த்துள்ளேன்) சுயநிர்ணய உரிமையைக் கொண்டிருக்கிறார்களா? ஒரு இளம் தமிழ்ப் பல்கலைக்கழக மாணவனினால் இந்தக் கேள்வி என்னிடம் கேட்கப்பட்டபோது, அக்கேள்வி என்னுள்ளே சிறிது கலவரத்தை ஏற்படுத்தியது. பல காரணங்களால் இக்கேள்வி கடுமையான ஒன்றாக இருக்கின்றது.

முதலாவதாக வில்லியம் கொன்னொலி (1974) என்பவர் குறிப்பிட்டது போன்று ''சுயநிர்ணயம்'' என்ற எண்ணக்கரு அத்தியாவசியமாகச் சர்ச்சைக்கு உட்படுத்தப்பட்ட ஒரு எண்ணக்கருவாகும். ஏனெனில் அது வேறுபட்ட பல அர்த்தங்களை வெளிப்படுத்துவதோடு, மாறுபட்ட வீச்சுகளுக்குட்பட்ட உரிமைகளையும் தழுவி நிற்கிறது.

இரண்டாவதாக, ஹனும் என்பார் குறிப்பிட்டுக் காட்டியது போன்று, சுயநிர்ணய உரிமை என்பது இரண்டு நுணுக்கமான பிரச்சினைகளை முன்வைக்கிறது. ''சுயம்'' என்பது எதனை உள்ளடக்கி

யுள்ளது என்பதும் எந்த மாதிரியில் அதன் விதி தீர்மானிக்கப்படவேண்டும் என்பதுமே அவையாகும். (1992:பக் 30)

மூன்றாவதாக எனது சிங்களத்துவம், எனது பகுப்பாய்வினுட் புகுந்து, எனது முடிவுகளை மட்டுப்படுத்துமோ என நான் வியப்படைகின்றேன்.

இருந்த போதிலும் இந்தக் கேள்வி இலங்கையின் இன முரண்பாடு பற்றிய எந்தக் கலந்துரையாடலிலும் தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகும். திம்புவில் பிரதிநிதித்துவம் வகித்த எல்லாத் தமிழ் அமைப்புகளும் இன்றியமையாத நான்கு தத்துவங்களுள் ஒன்றாக அதனை இனம் கண்டன. ஆகவே எந்தத் தீர்வும் இந்தத் தத்துவங்களை ஏற்றுக் கொள்வதை அடிப்படையாகக் கொண்டே அமைய வேண்டும் என அவை உரிமை கொண்டாடின.

இந்தக் கட்டுரையில் இந்தப் பிரச்சினையை அணுக, உரிமையை அடிப்படையாகக் கொண்ட அணுகு முறையைத் தான் நான் பிரயோகிக்கின்றேன். ஏனெனில், சர்வதேச சமுதாயம், எந்தப் பக்கம் உரிமைகளைக் கொண்டுள்ளது என்றும் எந்தப் பக்கம் ஒரு நீதியான காரணியைக் கொண்டுள்ளது என்றும் வேறு பிரித்தறிந்து ஒரு தீர்மானத்துக்கு வருவதற்கு உதவும் ஒரு எல்லைச் சோதனையாக மனித உரிமைகள் மட்டுமே விளங்குகின்றன. (கோர்பச்சேவ் 1992).

இருந்த போதிலும் தாராண்மை வாதிகளைப் போன்று நான் மனித உரிமைகள் என்பது அரசியலுக்கு முற்பட்டது என்று கொள்ளவில்லை. ஹபர்மாஸ் (1996) இன் கருத்தைப் பின்பற்றி நான் மனித உரிமைகள் அதன் ஆரம்பத்திலிருந்தே அரசியல் என்று கொள்கின்றேன். எந்தக் கருத்தில் என்றால், குடிமக்களது ஊகத்தினடிப்படையிலான இடைத் தொடர்புகளினால் பெறப்படுபவையே மனித உரிமைகள் என்பதாகும். தனிப்பட்ட பொது சுயாட்சிக்கு உரிமைகள் இன்றியமையாதவை. அவை ஒன்றுடன் ஒன்று இணைந்து தோன்றியவையாகும். ஆகவே மனித உரிமைகள் பற்றிய பார்வை வரலாற்றுத் தொகுதிகளை மீள்வரையறைப் படுத்திப் புதிய அர்த்தங்களையும் அவற்றுக்குத் தரும்.

## நவீனத்துவ இரும்புக் கூடு :

''இருபத்தோராம் நூற்றாண்டில் நாகரிகம் - ஒரு முன்னோக்கிய பார்வை'' என்ற விடயத்தில் பேசும்போது மிக்கெய்ல் கோர்பச்சேவ், தேசியவாதம், தேசங்களினது சுயநிர்ணய உரிமை என்பவற்றுக்கிடையேயான வேறுபாடு பற்றிச் சுவாரசியமான ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார்.

தேசியவாதத்துக்கும் சுயநிர்ணய உரிமைக்கும் இடையேயான இணைப்பின்மை, எதிர்காலம் பற்றிய ஒரு தூரதிருஷ்டியை அடிப்படையாகக் கொண்டே அமைந்தது. ஏனெனில் மேற்கு ஐரோப்பாவின் வரலாற்று அனுபவம் அவை இரண்டுக்கும் இடையேயான பிரிக்க முடியாத ஒற்றுமையை ஆதரிக்கின்றது.

ஹனும் குறிப்பிடுகிறார்:

> ''தேசியக் குழுக்களினது சுயநிர்ணயத் தத்துவம் 18ம், 19ம் நூற்றாண்டுகளில் அபிவிருத்தியடைந்து வரும் தேசியவாதத்தின் ஒரு இயல்பான தொடர்ச்சியாகவே அபிவிருத்தியடைந்தது. ஒட்டமன், ஆஸ்திரிய, ஜேர்மனிய, ருஷிய சாம்ராஜ்யங்களின் மத்திய அதிகாரங்கள், அதிகளவிற்குக் 'கூட்டிணைத்தல்' என்ற கொள்கையைப் பின்பற்றிய போது அல்லது அதிகளவு சுயாட்சிக்கான அல்லது உள்ளூர் சுய அரசாங்கங்களுக்கான கோரிக்கைகளை ஆரம்ப நிலையிலேயே இராணுவ, அரசியல் ரீதியில் பலவீனப்படுத்த முனைந்த போது, முழுமையான சுதந்திரத்துக்கான கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.'' (1992 பக்.27)

தேசிய வாதம், தேசிய அரசு, சுயநிர்ணயத் தத்துவம், இறைமை என்ற பதங்களின் மரபு ரீதியான அர்த்தங்கள் மத்திய காலப்பகுதியிலிருந்து மேற்கு ஐரோப்பாவின் வரலாற்று அபிவிருத்தியோடு மிக நெருக்கமாகத் தொடர்பு பட்டவையாகும். ''மத்திய கால அரசுகள், அரசியல் இருப்புடையவையாகும். அத்தோடு கலாசார, அரசியல் இணைப்புகளிடையேயான அவசியமான தொடர்புகள் பற்றி எந்த நம்பிக்கையும் இருக்கவில்லை.'' (கொபன் 1969 பக். 27) அதேபோன்று மத்திய கால அரசுகள் நவீன அர்த்தத்தில் இறைமை படைத்த அரசுகளாக இருக்கவில்லை. மேலும், மத சார்பற்ற இறைமை என்ற சிந்தனை மத்திய காலப் பகுதியின் இறுதிக் கட்டத்தை அடைந்த போது, மீளத் தோற்றம் பெற்றது. (மேற்படி பக் 29)

ஆகவே அரசியல் இருப்புடைமைக்கும் கலாசார அடையாளங்களுக்குமிடையிலான இடைப் பின்னலானது, அரசுருவாக்கச் செய்முறையில், ஒப்பீட்டளவில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட அபிவிருத்தியேயாகும்.

18ம் நூற்றாண்டின், இரண்டாம் அரைப் பகுதியில் தேசமானது ஒரு புதிய அர்த்தத்தைப் பெற்றுக் கொண்டது. அரசின் ஜனநாயகச் சிந்தனையின் தோற்றப்பாட்டுடன் சமாந்தரமாக அதேவேளையில் வித்தியாசமானதாக இந்த அபிவிருத்தி அமைந்தது. (மேற்படி பக் 34)

ஜில்னரும் அன்டர்சனும், தேசத்தின் எழுச்சியையும் அது அரசுடன் கொண்டுள்ள இணைப்பை யும் முதலாளித்துவ அபிவிருத்தியின் அவசியமான தொடர்ச்சியாகக் கருதுகின்றனர். (ஜில்னர், 1983; அன்டர்சன், 1983). ஸ்ருவர்ட் ஹோல் (1996) அவர்களின் படி, நவீன தேசிய அரசு, கைத்தொழில் மயமாதல், முதலாளித்துவம் என்பவை நவீனத்துவ உருவாக்கச் செய்முறையின் வரையறுக்கும் இயல்புகளாகும். உலகம் முழுவதும் ஏற்பட்ட சமகால தேசியத்துவ இயக்கங்களும் கூட, அரசும் தேசமும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து கைகோர்த்துப் போக வேண்டும் என்ற கருத்தையே கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

அலெக்ஸாண்டர் ஜே.மோற்றில் வரைவிலக்கணப்படுத்துமாறு, தேசியவாதம் ஒரு அரசியல் சிந்தனையாகும். அது, ஒவ்வொரு தேசத்தினதும் அரசியல் ஒழுங்கமைப்பின் உச்ச மாதிரியே அரசு என்று கொள்கிறது. (1991, பக் 53) ஆகவே, ஜெல்னரின் பின்வரும் தேசியவாதம் பற்றிய வரைவிலக்கண மானது, சமகால தேசியவாதப் போராட்டங்களின் கோரிக்கைகளை விளக்க வல்லதாக இருக்கின்றது. மேலும், நிலை நிறுத்தப்பட்ட நவீன தேசிய அரசுகள் பலவற்றின் இனத்துவக் கொள்கைகளையும் அது விளக்கக் கூடியதாக உள்ளது.

> ''தேசியவாதம் என்பது ஆரம்ப நிலையில் ஒரு அரசியற் தத்துவமாகும். அது அரசியல் அலகும் தேசிய அலகும் ஒன்றுடன் ஒன்று இணைந்தது எனக் கொள்கிறது... இந்தத் தத்துவத்தை மீறுவதனால் ஏற்படும் ஆத்திர உணர்வு அல்லது இத் தத்துவத்தை நிறைவேற்றுவதனால் ஏற்படும் திருப்தி உணர்வே தேசியவாத உணர்வலையாகும்'' (1983, பக் 01)

அப்படியாயின் கொர்பச்சேவ் ஏன், தேசியவாதத்துக்கும் சுயநிர்ணயத்துக்கும் இடையில் இணைப்பின்மை நிலவுவதாகக் கருத்துத் தெரிவித்தார்? அவர் நவீன தேசிய அரசின் உருவாக்கத்தில் தேசியவாதத்துக்கும் சுயநிர்ணயத்துக்கும் இடையிலான வரலாற்று ஒற்றுமையை எதிர்த்ததாகத் தெரியவில்லை. ஆயின் நவீன தேசிய அரசில் வெளிப்பட்டதும் பிரதிபலித்ததுமான தேசியவாதம் இன்று தவிர்க்கப்பட்டு விட்டதாக அவர் கருதுவதாகத் தென்படுகின்றது.

ஒரு ஆள்புல எல்லைக்குள் வாழும் பல தேசங்களுக்கு இடமளிக்கும் சிக்கலான நவீன அரசு என்ற சட்டத்தினுள், ''ஒத்த தன்மை வாய்ந்த அரசியல் இருப்பு'' என்ற தேசியவாதத்தின் உட்கிடையான

கோரிக்கையைத் திருப்திப்படுத்த முடியாதுள்ளது. இந்தத் தொடர்பில் கொர்பச்சேவ் கருத்துத்தெரிவித்த படி, ''தேசியவாதம் என்பது சட்டபூர்வமானதும் போதுமான பின்னணியைக் கொண்டதுமான தேசிய இனத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதல்ல. மாறாக, மற்றைய தேசிய இனங்களினது உரிமைகளை உதாசீனஞ் செய்வதற்கும் மீறுவதற்கும் எதிராகப் பெற்றுக் கொண்ட பிரத்தியேகமான உரிமைகளுக்கான கோரிக்கையாகவே தேசிய வாதம் உள்ளது.'' (1992)

இக் கருத்து பெரும்பான்மைத் தேசியவாதம், சிறுபான்மைத் தேசியவாதம் இரண்டுக்குமே உண்மையானதெனத் தெரிகிறது. வேறு வார்த்தைகளிற் கூறுவதானால், இந்தப் பிரத்தியேகமான உரிமைகளைப் பெறுவதற்காகத் தேசிய இனங்களினால் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்ட ஒரு எந்திரப் பொறியியலே இறைமை பெற்ற தேசிய அரசாகும்.

அறிவுடைமை, நவீனத்துவம் என்பவற்றின் முரணறு நிலை, நவீன தேசிய அரசை மதத்தி லிருந்து தூரச் செல்ல வைத்தாலும், மறு புறத்தில் அதற்கு ஒரு தேசியவாத அல்லது இனத்துவ இயல்பை வழங்கியது. இறைமை பெற்ற தேசிய அரசு, பெண்களுடைய ஒரு அரசையோ அல்லது ஒரு வகுப்பின ருடைய அரசையோ உருவாக்குவதை அனுமதிக்கவில்லை என்பதைக் கவனத்தில் எடுத்தல் சுவாரசிய மானது.

இந்தத் தேசியவாத இயல்பானது நவீன தேசியஅரசினுள், அரசினுடைய இறைமை, மக்களின் இறைமை என்பவற்றுக்கிடையே தொடர்ச்சியான ஒரு நெருக்கடி நிலைமையை ஏற்படுத்தி வந்துள்ளது.

கனபி விளங்கப்படுத்தியவாறு:

> ''எந்த விதச் சிறுபான்மைகளுமற்றுத் தனக்கென ஒரு சொந்தமான நாட்டை ஒரு தேசம் கொண்டிருக்கும் இலட்சியமான அல்லது பிரச்சினைக்குரியதல்லாத சந்தர்ப்பங்கள் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில், ''இறைமை'' என்ற பதத்தினை இந்த இரட்டைச் சட்டகத்தினுள் பகுப்பாய்வு செய்வது அவசியமானதாகும். ஏனெனில் சிறுபான்மை அடிப்படையிலான இனத்தேசியவாத இயக்கங்கள் போட்டியிடும் பிரதான பிரச்சினை, தம்மை ஒரு தனித்துவமான மக்களாகத் தாம் கொள்ளும் இறைமையைத் தாம் வாழும் நாட்டின் இறைமைக்குக் குறித்து ஒதுக்கியமை பற்றியதாகும்.'' (1996:பக்.92)

ஆகவே தேச உருவாக்கச் செயன்முறை, உலகெங்கிலும் சிறுபான்மைத் தேசங்களின் இரும்புக் கூடு ஒன்றாக இயல்பான விருத்தி கண்டுள்ளது போலவே தோன்றுகிறது. ஆக்கிரமிப்புச் செலுத்தும் பெரும்பான்மைத் தேசம் அல்லது தேசங்கள் அரசைக் கட்டுப்படுத்தும் போது, அவை அந்நாட்டை ஒரு பிரத்தியேகமான, விதிவிலக்கான, ஓரினத் தன்மையுடையதாகவே கருதுகின்றன. சிறுபான்மைத் தேசங்கள் தாமாகவே அந்நாட்டினுள் ''பிறிதொருவர்'' என்ற நிலையைப் பெற்று விடுகின்றனர். ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற இறைமை படைத்த தேசிய அரசைப் பற்றிய கனபியின் பின்வரும் குறிப்பு அறிவூட்டல் திட்டத்தின் முரணறுவாதத்தைத் தெளிவாக முன்வைக்கிறது.

''இறைமையுள்ள தேசிய அரசென்ற ஐரோப்பாவின் கண்டுபிடிப்பு, ஜனநாயகமும் தாராண்மை வாதமும் எழுச்சியடைவதற்கு மட்டுமல்லாமல், ஒற்றுமை, கருத்தொருமைப்பாடு என்பவற்றின் பேரில், சகிப்பின்மை, ஒதுக்கல் என்ற புதிய அரசியல் அடையாளம் உருவாகவும் வழிவகுத்தது. தேசிய வாதத்தின் இந்த இரு முகங்களும் ஒன்று, பன்மையியலும் கருத்தொருமைப்பாடும் உடையதாகவும் மற்றையது அத்தியாவசியமானதாகவும் பிரத்தியேகமானதாகவும் அமைந்து உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள ஐரோப்பிய தேசிய அரசுகளின் பிரதிபிம்பங்களில் வேறுபட்ட வெளிப்பாடுகளாகக் காணக்கூடியதாக உள்ளது.'' (1996.பக் 99)

இது எம்மை ஒரு அடிப்படையான கேள்வியை நோக்கி அழைத்துச் செல்கின்றது. நவீன சிக்கல் நிறைந்த, பல்லின சமூகங்களுக்குள் அமைந்த இறைமையுள்ள தேசிய அரசு என்ற சட்டகத்தினுள், மக்களுடைய உரிமையை அரசுக்கு எதிராகப் பாதுகாப்பது சாத்தியமானதா?

இந்தக் கேள்வி கடுமையான கவனத்தைக் கோரி நிற்கின்றது. ஏனெனில் உலகின் பல பகுதிகளிலும் தேசிய அரசுகளுடன், தமது இறைமையை வெற்றி கொள்ளப் போரிடும் சிறுபான்மைத் தேசங்கள் அதே இறைமையுள்ள தேசிய அரசு மாதிரியை யதார்த்தமாகக் கொள்வது போலத் தெரி கின்றது. இனத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சமகால இயக்கங்கள் தேசிய அரசினுடைய எண்ணத்தையும் ஸ்தாபனத்தையும் தமது கட்டுப்பாட்டினுள்ளும் ஆதிக்கத்தினுள்ளும் மீள உரிமை கொள்ள விரும்புகின்றனவேயன்றி அவற்றை விஞ்சிப் போக முயலவில்லை. எனவே இன்னொரு ''இரும்புக்கூடு'' உருவாக்கப்பட வேண்டியுள்ளது. கோர்பச்சேவும் (1992) இன முரண்பாடுகளின் அடிவேர்களை, ஒரு இனக் குழுவின் சுயநிர்ணய உரிமைக்கும் தேசிய வாதம் என்ற எண்ணக்கருவுக்கும் இடையிலான முரண்பாட்டிலேயே காண்கிறார்.

## இலங்கை முரண்பாடு:

பல்வேறு, காலனித்துவத்திற்குப் பிற்பட்ட கால சூழ்நிலைகளைப் போலவே, இலங்கையினதும் அரசுருவாக்கச் செயற்திட்டம், முன்னைய பகுதியில் ஆராயப்பட்ட வகையிலான தேசிய அரசு மாதிரியினைப் பின் பற்றியதாகவே உள்ளது. பெரும்பான்மை இன அடையாளம் என்பதை ஸ்தாபன மயப்படுத்தி எண்ணக்கருவாக்கி நவீனத்துவம் என்ற காலனித்துவத்திற்குப் பிற்பட்ட கால இலங்கையின் அரசுருவாக்கம் பற்றிப் பல எழுத்தாளர்களும் பதிவு செய்துள்ளதாலும், இடமின்மை காரணமாகவும் நான் அவற்றை இங்கு சுருக்கித் தர எண்ணவில்லை. உயிர்ப்பான குடியியல் பங்குபற்றுதலில் இருந்து தமிழர்களை நீக்கி வைப்பதற்கான பல்வேறு மசோதாக்களும் சுதந்திரத்திலிருந்து, சட்டசபையில் நிறைவேற்றப்பட்டன என்பதே போதுமான ஒன்றாகும். சிங்களத்திற்கும் பௌத்தத்திற்கும் அரசியலமைப்பு ரீதியாக முன்னுரிமை வழங்கப்பட்டது. ''நாம்'' என்பது அரசியல் அகராதியில், ''சிங்கள பௌத்தர்கள்'' என்று வரைவிலக்கணப்படுத்தப்பட்டது. ''எமது'' பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலேயே முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் என்று பலர் சிந்திப்பதாகத் தெரிகிறது. ''மற்றவர்களுடைய'' பிரச்சினைகள் பற்றி, நேரமும் வளங்களும் இடந்தருமானால் மட்டும் கவனத்திற் கொள்ளலாம் எனப் பலரும் சிந்திப்பதாகவும் தெரிகிறது. ஸ்தாபனங்கள், சட்டங்கள், கல்வி, வெகுஜன தொடர்பு சாதனங்கள், தேசிய மன உணர்வு என்பவற்றில் சிங்கள அரசு கட்டி எழுப்பப்பட்டமை, ஒரே ஆள்புலத்தினைப் பகிர்ந்து கொள்ளும் தமிழ்த் தேசத்தினால் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. இருந்த போதிலும், தமிழ்ச் செயற்திட்டமும் அதற்கு நேரெதிரான சிங்கள அரச செயற்திட்டத்தின் இயல்புகளையே பகிர்ந்து கொள்கின்றது.

சுயநிர்ணயமும் தேசிய வாதமும் எதிரெதிரானவையாகவோ முரண்பட்டவையாகவோ முன்வைக்கப்படவில்லை. தமிழ் உரையாடல்களில் சுயநிர்ணய உரிமை என்பது, தேசியத்துவ மொழிநடையிலேயே வரைவிலக்கணப் படுத்தப்படுகிறது. தேசத்துக்கும் அரசுக்கும் இடையிலான வரலாற்று இணைப்பும் மீளக் கருதப்பட்டுள்ளது.

## ஒழுக்கமுறை உரையாடல்களில் மனித உரிமைகள்:

இந்த முட்டுக் கட்டையிலிருந்து வெளிப்பட இரு முக்கிய அபிவிருத்திகள் உதவி செய்யலாம். முதலாவது, இறைமையுள்ள தேசிய அரசுகளின் அபிவிருத்திக்குச் சமாந்தரமாக தேசங்களையன்றி,

குடிபெயர்ந்தவர்களைக் கொண்டமைந்த ஒரு புதிய மாதிரியான அரசு முறை எழுச்சியடைந்தது. இரண்டாவது, இரண்டாம் உலகப் போரிலிருந்து அரச மத்திய முறைக்குள் எழுச்சியடைந்த சர்வதேசச்சட்டம் படிப்படியாக ஒரு புதிய பரிமாணத்துக்கு வழிவகுத்தது. இது மனித உரிமைகளைப் பாதுகாப்பதனையும் மதிப்பதனையும் பிரதானமான கவனங்களுள் ஒன்றாக்கியது. (துரர், 1995: பக் 55) நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலக மயமாக்கல் நடைமுறையாலும் பிராந்திய உருவாக்கத்தாலும், முழுமையானதும் பிரிக்க முடியாத அதிகாரங் கொண்டதும் என்றளவில் நோக்கப்பட்ட ''இறைமை'' எண்ணக்கருவும், அதனோடு சம்பந்தப்பட்ட தேசிய அரசு என்ற எண்ணக்கருவும் அடித்துச் செல்லப்பட்டன.

இவ் அபிவிருத்தி, அரசுகளின் சர்வதேச நிலவமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியது. இப்போது, மரபு ரீதியான புவியியல் எல்லைகளைப் பல பிரச்சினைகள் மீறிச் சென்றுள்ளன. ஆகவே இந்தப் புதிய அர்த்தம் சுயநிர்ணய உரிமை என்பதனை மீள்வரையறை செய்வதைத் சாத்தியமாக்கியுள்ளது. குறிப்பாக, மரபு ரீதியான இறைமை படைத்த தேசிய அரசு மற்றும் பிரத்தியேகமான தேசியவாத எண்ணக்கரு என்பவற்றிலிருந்து தூரப்படுத்திக் கொண்டு, மனித உரிமை நோக்கில் வைத்துப் பார்க்க விரும்பும் தேசங்களைப் பொறுத்தளவில் இது சாத்தியமாகியுள்ளது. எவ்வாறாயினும், இவ்வகையிலான முயற்சி மனித உரிமைகள் தொடர்பான தாராண்மைவாத எண்ணக்கருவுக்கு மேலாகச் செல்லல் வேண்டும்.

ஹபர்மாஸின் ஒழுக்கமுறை பற்றிய உரையாடல்கள் பொதுவாக மனித உரிமைகள் பற்றியும் குறிப்பாகச் சுயநிர்ணய உரிமை பற்றியும் மீள்வரையறை செய்வதற்கான கோட்பாட்டுச் சட்டகத்துக்குரிய ஓர் அடிப்படையைத் தருகின்றன. பிரபல்யமான இறைமை பற்றிய குடியியல் குடியரசுக் கருத்துப் பற்றியும், மனித உரிமைகள் பற்றிய தாராண்மைவாத எண்ணக்கரு பற்றியும் ஹபர்மாஸ் பின்வருமாறு எழுதுகின்றார்.

> ''ஐக்கிய அமெரிக்காவின் சமகாலக் கலந்துரையாடல்களிலிருந்து ஒரு சுருக்கப் பதத்தினை நான் இரவல் பெறலாமானால், ''தாராண்மை வாத'' மரபுகள் மனித உரிமை களை உளரீதியான சுயநிர்ணயத்தின் வெளிப்பாடாகவே கொண்டிருக்கின்றன. ஆனால் ''குடியியல் குடியரசு வாதம்,'' பிரபல்யமான இறைமையை ஒழுக்க முறைகள் பற்றிய சுய அடைவினை வெளிப்படுத்துவதாகவே விளக்கமளிக்க முயற்சிக்கிறது. இவ்விரு நோக்கு களிலுமிருந்து, மனித உரிமையும், பிரபல்யமான இறைமையும் ஒன்றுடன் ஒன்று பரஸ்பரம் ஒத்துப்போகாமல், போட்டியிடுகின்றன எனலாம்.'' (1996: பக் 99)

இணைந்த தோற்றப்பாடு என்ற அம்சத்தை அறிமுகம் செய்வதினூடாக இந்த இரண்டு போட்டியிடும் அம்சங்களையும் ஒழுக்க முறை பற்றிய உரையாடல்கள் சட்டகத்தில் இணைக்கலாம் என அவர் பிரேரிக்கின்றார்.

ஒழுக்க முறைகள் பற்றிய உரையாடல் அரசு பற்றிய புதிய எண்ணக்கருவை விருத்தி செய்கிறது. ஜொஸ் டெல்பிறக், இந்தப் புதிய மாதிரியான அரசைக் குறிக்க, 'திறந்த குடியரசு' என்ற பதத்தையே விரும்புகின்றார்.

'இந்த எண்ணக்கரு அரசினை ஒரு ஒருமைப்படுத்தப்பட்ட குடிமக்கள் இணைந்த சமுதாயமாக இருப்பதற்கு வழிகோலுகிறது. அதனுள்ளேயே அது ஒரு இருப்பிடத்தையும் கண்டு பிடிக்கிறது. ஆனால் அது கலாசார ரீதியிலும் இனத்துவ ரீதியிலும் வேறுபடும் குடிமக்களுக்கும் இடமளிக்க வேண்டும்.'

திறந்த குடியரசு அரசினை இனத்துவமற்றதாக்கி அறிவூட்டல் திட்டத்தின் விடுதலை வழங்கும் பரிமாணத்தையும் பூர்த்தி செய்கின்றது. உதாரணமாகத் தேசத்திலிருந்து அரசினை வேறுபடுத்துதலைக்

குறிப்பிடலாம். வெளியார் ஆக்கிரமிப்பிலிருந்து தேசிய விடுதலையைக் குறித்துக் கருத்து வெளியிடும் ஹபர்மாஸ், தேசிய விடுதலை என்பதிலிருந்து குடிமக்களின் சுதந்திரத்தை வேறுபடுத்திக் காண்கிறார். ஒரு நாட்டினுள் குடிமக்கள் அனுபவிக்க உரித்தான அரசியல் சுதந்திரத்தை உண்மையாகத் தேசிய விடுதலை என்பது உத்தரவாதப் படுத்தவில்லை. ஆகவே ஒழுக்க முறைமைகள் பற்றிய கண்ணோட்டத்திலான உரையாடலில், மனித உரிமைகள் மிகவும் பரவலானதும் ஆழமானதுமான அர்த்தத்தைச் சுயநிர்ணய உரிமைக்கு வழங்குகின்றது. ஹபர்மாஸ் இது குறித்துப் பின்வருமாறு எழுதுகிறார்.

> ''ஒவ்வொரு மனிதனும் மூன்று முறையான அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும். அவர்கள் பிரதியீடு செய்யப்பட முடியாத தனி நபர்கள் என்ற அடிப்படையிலும், இனத்துவ கலாசார குழுக்களின் அங்கத்தவர்கள் என்ற முறையிலும், குடிமக்கள் அதாவது அரசியற் சமுதாயத்தின் அங்கத்தவர்கள் என்ற முறையிலும், சமமான பாதுகாப்பையும் சமமான கௌரவத்தையும் பெறுதல் வேண்டும்'' (மேற்படி, பக்.104). அக நோக்கிலிருந்தே உரிமைகள் பெறப்படுகின்றன. ஆகவே மனித உரிமைகள் அரசியல் வழிமுறைக்கு வெளியேயன்றி உள்ளேயே காணப்படுகின்றன.

அரசானது தனது சட்டத்தன்மையினை இன, கலாசாரத் தன்மைகளிலிருந்தன்றி, அரசியற் தன்மைகளிலிருந்தே பெறுகின்றது. ஒரு நவீன அரசு நிலைத்திருப்பதற்கு வேண்டிய முன் நிபந்தனைகள், அதனது, பகிரும் நடைமுறை உளநோக்கை விருத்தி செய்வதற்கும் அரசியல் கலாசாரத்தை விருத்தி செய்வதற்குமான இயல்புடைமையே ஆகும். ஒரு திறந்த குடியரசின் நான்கு மூலகங்களும் பின்வருமாறு:

1. குடியரசு, ஒரு யாப்புடைய அரசாகும். ''சட்டத்தினாலான அரசாகும். மனிதர்களாலான அரசல்ல.'' அரசியல் யாப்பும் சட்டங்களும் அரசியல் பெரும்பான்மைக்கு எல்லைகளை விதிக்கும். இதனூடாக அரசு கொடுங்கோன்மையாக மாறுவதனைத் தடுக்கின்றன.
2. அரசாங்கத்தில் எல்லாக் குடிமக்களும் ஜனநாயக முறையில் பங்கு பற்றுதல் - குறிப்பாக அரசியல் யாப்பு, சட்டங்களை இயற்றுதல், ''மக்களாலான அரசாங்கம்'' என்பதை உருவாக்கல்.
3. சிந்தனைகள் கூடும் இடம் என்ற அம்சம்.
4. சகிப்புத் தன்மை, மற்றவர்கள் வேறுபட்டவர்களாக, (தனித்துவமானவர்களாக) இருப்பதை மதித்தல் (டெல்பிறக்)

## திறந்த குடியரசை நோக்கி: 21ம் நூற்றாண்டில் இலங்கை

முன்னர் உள்ள பகுதிகளில் ஆராய்ந்தது போல, சுயநிர்ணய உரிமை என்பது, தனிப்பட்ட, குழு, பொது சுயாட்சி என்பவற்றை இணைக்கும் பல மட்டங்களில் செயற்படுகின்றது. இலங்கையிலுள்ள தமிழர்கள் இந்த உரிமையைக் கூட்டாகவும் தனியாகவும் அப்பியாசிக்கத் தத்துவமுடையவர்கள். (சுயநிர்ணய) உரிமை என்பது ஒரு குழுவை அல்லது மக்களை ஒடுக்குமுறையில் இருந்து அவர்களைப் பாதுகாத்து அவர்களுக்கு உரிய இடம் வழங்குகின்றது. (மக் கோர்க்குவோடேல், 1996: பக். 12). ஆகவே அது தேசிய வாதத்திலிருந்து சேய்மைப் படுத்தப்பட்டு விட்டது. சுயநிர்ணய உரிமை என்பது, பிரிந்து செல்வதற்கான உரிமையையும் உள்ளடக்கியுள்ளதா? நான், ''ஆம்'' என்றே நினைக்கின்றேன். இருந்த போதிலும் பிரிவினை என்பது, இன அல்லது கலாசார அம்சங்களினூடாக நியாயப்படுத்தப்படல் ஆகாது. ஆனால் மனித உரிமைகள் அம்சங்களில் நியாயப்படுத்தப்படலாம்.

*வேறு வார்த்தைகளிற் கூறுவதாயின், இலங்கை ஒரு திறந்த குடியரசை உருவாக்கத் தவறுமாயின், தமிழர்கள் பிரிந்துபோகும் உரிமையை நடைமுறைப் படுத்தவும் அனுபவிக்கவும் எல்லா விதமான உரிமைகளையும் கொண்டவர்களாவர்.*

*மேலும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய அனைவரும், அறிவு சார்ந்த ஜனநாயக உரையாடல் களிலும், அரசியல் ஸ்தாபனங்களிலும், சட்டங்களிலும், திறந்த குடியரசுக்கு அடிப்படையாக அமையும் அரசியல் யாப்பிலும் பங்கு பற்றக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.*


Canefe, Nergis. 1996. 'Sovereingty Without Nationalism? A Critical Assessment of Minority Rights Beyond the Sovereign Nation-State Model', in MNS Sellers (ed) *The New World Order: Sovereignty, Human Rights and Self-Determination,* Baltimore: Berg Publication Ltd.

Cobban, Alfred. 1969. *The Nation State and National Self-Determination,* London: Collins.

Connolly, William. 1974. *The Terms of Political Discourse,* Lexington, MA: D C Heath.

Delbruck, Jost. nd, Global Migration-Immigration-Multiethnicity; Challenges to the Concept of the Nation-state, *Internet article.*

Gorbachev, Mikhail. 1992. 'Civilization in the 21st Century - a look ahead', *Hindu,* April, 28

Habermas, Jurgen. 1990. 'Citizenship and National Identity', in Habermas (1996)

Habermas, Jurgen. 1996. *Between Facts and Norms: Contribution to a Discourse Theory of Law and Democracy,* Cambridge, Mass: MIT Press.

Hall, Stuart et al. 1996 *Modernity: An Introduction to Modern Societies,* Cambridge, Mass: Blackwell Publishers.

Hannum, Hurst. 1992. *Autonomy, Sovereignty, and Self-Determination: The Accommodation of Conflicting Rights,* Philadelphia: University of Pennsylvania Press.

Loganathan, Ketheshwaran. 1996. *Sri Lanka: Lost Opportunities,* Colombo: CEPRA.

McCorquodale, Robert. 1996. 'Human Rights and self-Determination', in M N S Sellers (ed) *The New World Order: Sovereignty, Human Rights and Self-Determination,* Baltimore: Berg Publication Ltd.

Motyl, Alexander J.1991. *Sovietology, Rationality, Nationality: Coming to Grips with Nationalism in the USSR,* New York: Columbia University Press.

Thurer, Daniel G. 1995. 'National Minorities: A Global, European and Swiss Perspective', *The Fletcher Forum of World Affairs,* Vol 19,No.1, pp. 53-70


**தமிழில்:- சு.நிலக்ஷன்**

***மொழிபெயர்ப்பு மேற்பார்வை:- பேராசிரியர் அ.சிவராசா***

# தாவர நோயியலில் மூலக்கூற்று உயிரியலின் பங்கு

மணிமேகலா நாகநாதன், 2ம் வருடம், விவசாய பீடம்.

உயிர்களின் மூலாதாரம் சக்தி. அந்த சக்தியின் மூலமுதல் சூரியன். உயிர்த்தோற்றுவாயின் ஊற்றுக் கண்ணாம் அந்த சூரியன் மட்டும் இருந்தால் பூமியில் உயிர்கள் வாழ முடியுமா? நிச்சயமாக இல்லை. அந்த சூரியனிலிருந்து சக்தியைப் பிரித்து உலகிலுள்ள ஏனைய இனங்கள் வாழ வழி வகுப்பவை தாவரங்கள். இதில் மனித உயிர்களைப் பொறுத்தவரையில் பெரும்பங்கு வகிப்பவை பயிர்த் தாவரங்கள். இப்பயிர்த் தாவரங்களின் அறுவடையின் மூலம் உயிர் வாழ வழி வகுப்பவர்கள் விவசாயிகள். ஒரு நாட்டின் முதுகெலும்பு போல் விளங்குகிறவர்கள் நம் விவசாயிகள். இன்று இந்த விவசாயிகள் எதிர்நோக்கும் பாரிய நெருக்கடி தாவர நோய்களாகும்.

பல்வேறுபட்ட பங்கசுக்கள், பக்ரீரியாக்கள், வைரசுக்கள் முதலியன தாவரங்களில் நோயை ஏற்படுத்துகின்றன. தாவர நோய்களுக்கெதிராக இன்று பல்வேறுபட்ட இரசாயனங்கள் உதாரணமாக, பங்கசுக் கொல்லிகள், பக்ரீரியாக் கொல்லிகள் மற்றும் ஏனைய கிருமி நாசினிகள் விசிறப்படுகின்றன. ஆனால் தற்போது இவற்றைச் சகித்து வாழக்கூடிய பல எதிர்ப்பினங்கள் தோன்றியுள்ளன. மீண்டும் இப்புதிய இனங்களுக்கெதிராக இரசாயனங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சில சந்தர்ப்பங்களில் இரசாயனங்கள் செயலிழந்ததாகக் காணப்படுகின்றன. இதற்குப் பிரதான காரணம் நோய்க் காரணிகள் சரியாகக் கண்டு பிடிக்கப்படாமையேயாகும்.

தாவர நோயியலாளர்களினால் தொன்று தொட்டுப் பலவகையான நுட்பங்கள் கையாளப்பட்டு வந்துள்ளன. உதாரணமாக 1970 களில் ELISA (Enzyme - Linked Immuno Sorbent Assay) எனப்படும் பிற பொருள் எதிரி முறை கையாளப்பட்டது.

ELISA முறையானது பொதுவாக நோயாக்கி வைரசுக்களை கண்டு பிடிக்கவே முதன் முதலில் பயன்படுத்தப்பட்டது. இதில் 0.4 மில்லி லீட்டர் கொள்ளளவுடைய நுண்டுவாரங்களைக் கொண்ட பாத்திரம் பயன்படுத்தப்படுகிறது. முதலில் இப்பாத்திரமானது வைரசு பிறபொருளெதிரி (Virus Antibody) கொண்ட கலவை ஒன்றினால் நிரப்பப்பட்டுப் பின் வெறுமையாக்கப்படுகிறது. இதன் போது ஒரு பகுதி வைரஸ் பிறபொருளெதிரி பாத்திரத்தின் நுண்டுளைகளில் சிக்கிக் கொள்கின்றன. அடுத்து வெறுமை யாக்கப்பட்ட பாத்திரமானது, நோயுற்ற தாவரப் பாகத்திலிருந்து பெற்ற கலச் சாற்றினால் சிலாவப்படு கின்றது. இதன் போது இத்தாவரத்திலுள்ள வைரசுக்கள் அதற்குரிய வைரஸ் பிறபொருளெதிரி (Virus Antibody) இணைக்கப்படுகின்றன. மீண்டும் பாத்திரமானது, நொதியங்கள் இணைக்கப்பட்ட வைரஸ் பிறபொருளெதிரி கொண்ட கலவையினால் சிலாவப்படுகிறது. இதன் போது, ஏற்கனவே பாத்திரத்தின் நுண்டுளைகளிலுள்ள வைரசுக்கள் நொதியம் இணைக்கப்பட்ட வைரஸ் பிறபொருளெதிரியுடன் இணைக் கப்படுகின்றன. இறுதியாக பாத்திரமானது நொதிய கீழ்ப்படைப் பதார்த்தத்தினால் நிரப்பப்படுகிறது.

இதன் போது இக் கீழ்ப்படைப் பதார்த்தம் நிறமாற்றம் பெறுகிறது. நுண்டுளைகளிலுள்ள இந்த நிறச் செறிவானது நிறமானி (Colori meter) யினால் அளக்கப்படுகிறது. நிறமானி வாசிப்பின் பருமன் வைரசு எண்ணிக்கையைத் தருகிறது.

ஆனால் இம் முறை மூலம் நோயாக்கி நுண்ணங்கியின் இனப் பாகுபாட்டை சரிவரக் கண்டு பிடிக்க முடியவில்லை. பின்பு வந்த விஞ்ஞானிகளின் கண்டு பிடிப்புகள் நுண்ணங்கிகளை இனம் மற்றும் பேத அடிப்படையில் இனம் காண உதவியுள்ளன. 1990 களில் மூலக்கூற்று உயிரியல் அடிப்படையில் பிறப்புரிமைப் பதார்த்தங்கள் (DNA - Deoxy Ribo Nucleic Acid அல்லது RNA-Ribo Nucleic Acid) அவற்றின் காரத்தொடர்கள் (Base Sequence) ஆராயப்பட்டு அதன் அடிப்படையில் சரியாக நோயாக்கி நுண்ணங்கிகள் கண்டு பிடிக்கப்படுகின்றன.

நவீன மூலக்கூற்றியலுடன் சம்பந்தப்பட்ட முறையாக, பொலிமரேஸ் எனப்படும் நொதியச் சங்கிலித் தொடர்த்தாக்கம் (PCR- Polymerase Chain Reaction) உபயோகப்படுத்தப்படும். RFLP தொழில் நுட்பம் (Restriction Fragment Length Polymorphism) மற்றும் Southern Blotting, Western Blotting, Northern Blotting, Dot Blotting எனப்படும் ஒற்றுத்தாள் முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன. மேற்கூறப்பட்ட தொழில்நுட்பங்களை அலசி ஆராய்வதற்கு Electrophoresis எனப்படும் இலத்திரனியல் பகுப்பு முறையும் Autoradiography எனப்படும் கதிரியக்கத் தொழிற்பாட்டு முறையும் நடைமுறையிலுள்ளன.

## PCR தொழில் நுட்பம் (PCR Technique)

Polymerase Chain Rection எனப்படும் இந்த முறையானது, தற்போதைய தாவர நோயிய லாளர்களினால் பரந்தளவில் பயன்படுத்தப்படுகிறது. இது தாவர நோயாக்கி நுண்ணங்கிகளின் பிறப்புரிமையியல் பதார்த்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.


நோயுற்ற தாவரப்பகுதியின் கலப்பகுதிகள் எடுக்கப்பட்டு முதலில் தாவர DNA (Deoxy Ribo Nucleic Acid - பிறப்புரிமைப் பதார்த்தம்) பகுதி நீக்கப்பட்ட பின், நுண்ணங்கியின் DNA பகுதி ஆய்வுக் குட்படுத்தப்படுகிறது. இந்த DNA பகுதியானது மிகச் சிறிய அளவிலேயே காணப்படுவதால், முதலில் இந்த DNA பகுதி பல மடங்குகளாக விஸ்தரிக்கப்படுகிறது (amplify)

இவ்வாறு விஸ்தரிக்கப்பட்ட DNAயுடன், ஆரம்பத்தொடர் (Primer), பிரதியெடுப்பதற்குத் தேவையான மூலப்பொருட்கள் என்பன சேர்க்கப்பட்டு, இந்தக்கலவை வெவ்வேறு வெப்ப நிலை மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுகிறது. இதன் போது DNAயின் இரட்டைச் சுருளியமைப்பு பிரிக்கப்பட்டு இரண்டு இழைகளும் வேறுபடுத்தப்பட்டு, DNAயானது பிரதியெடுக்கப்படுகிறது. இவ்விரு பிரதிகளும் அதே நிபந்தனைகளில் மீண்டும் மீண்டும் பிரதியெடுக்கப்படுகின்றன. இவ்வாறு 20 வட்டங்கள் பூரணமாகும் போது கிட்டத்தட்ட 1 மில்லியன் பிரதிகள் (Copies) எடுக்கப்பட்டு விடும். இங்கு பயன்படுத்தப்படும் பிரதான மூலப்பொருள் DNA-Polymerase எனப்படும் நொதியமாகும். இது மேற்கூறப்பட்ட நடைமுறைகள் சம்பந்தப்பட்ட வெப்பநிலைகளைச் சகிக்கக்கூடிய (Thermus Aquaticus) எனப்படும் பக்றீரியா மூலம் பெறப்படுகிறது.

இவ்வாறு பெறப்பட்ட DNAகள் இலத்திரனியல் ஆய்வு நுட்பங்கள் (Electrophoresis Technique) மற்றும் ஒற்றுத்தாள் நுட்பங்கள் பிரதானமாக Southern Blotting Technique என்பவற்றின் மூலம் ஆராயப்படுகின்றது.

Electrophoresis முறையில், இவ்வாறு பெறப்பட்ட DNAயானது, ஏகார் ஊடகத்தில் மின்புல மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுகிறது. ஏகார் ஜெல் ஊடகத்திலுள்ள நுண்ணிய கிணறுகளில் (Wells) இந்த

DNA இடப்பட்டு, அதன் திணிவிற்கேற்ப அசையும் தூரமானது Marker DNA துண்டமொன்றின் உதவியுடன் அளக்கப்பட்டு, அதிலுள்ள காரத் தொடர் துணியப்படுகிறது. DNAஆனது அதிலுள்ள பொசுபேற்று கூட்டம் காரணமாக எதிரேற்றம் கொண்டதாகக் காணப்படுகிறது. ஆகவே மின்புலத்தில் இது நேரேற்ற முனையை நோக்கி நகர்கிறது; மூலக்கூற்று திணிவுக்கேற்ப ஏகார் ஊடகத்திலுள்ள நுண்டுளைகளில் இது தங்குகிறது.





பாத்திரத்தின் மேன் முகப்புத்தோற்றம்

இவ்வாறு பெறப்பட்ட நோயாக்கி நுண்ணங்கியின் DNA கொண்ட ஏகார் துண்டமானது வெட்டி எடுக்கப்பட்டு Blotting Techniqueக்குட்படுத்தப்படுகிறது.

Southern Blotting முறையில், மேற் கண்டவாறு பெறப்பட்ட, ஏகார் துண்டத்திலுள்ள நோயாக்கி நுண்ணங்கியானது, நைத்திரோ செலுலோஸ் ஒற்றுத் தாளுக்கு இடமாற்றப்படுகிறது, இம்முறையானது E.M. Southern என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் Southern Blotting என்று பெயரிடப்பட்டுள்ளது.


Southern Blotting நுட்பத்தில், முதலில் Agar ஊடகத்திலுள்ள DNAயின் இரட்டை இழைகள் பிரிக்கப்படுகின்றன. பொதுவாக சோடியம் ஐதரொட்சைட்டுக் கரைசல்களினால் இது நிறைவேற்றப் படுகிறது. பின்பு இந்த ஏகார் துண்டானது நேரடியாக நைத்திரோ செலுலோஸ் வடிதாளுடன் தொடர்பில் வைக்கப்படுகிறது. பின்பு இது ஈரமான ஒற்றுத்தாளின் மேல் வைக்கப்பட்டு சோடியம் ஐதரொட்சைட்டுக் கொண்ட பாத்திரத்தினுள் வைக்கப்படுகிறது. நைத்திரோ செலுலோஸ் வடிதாளின் மேல் இன்னொரு சாதாரண வடிதாள் வைக்கப்பட்டு இவற்றின் மேல் பாரம் (Weight) ஒன்று வைக்கப்படுகிறது.




இங்கு சோடியம் ஐதரொட்சைட்டுக் கரைசல் இடமாற்றும் (Transferring) ஊடகமாகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே இது வடிதாளை நோக்கி இழுக்கப்படுகிறது. இதன் போது ஏகார் துண்டத்திலுள்ள DNA பாகமானது நைத்திரோ செலுலோஸ் வடிதாளுக்கு இடமாற்றப்படுகிறது.

நைத்திரோ செலுலோசு ஊடகமானது, கலப்புப் பிறப்பாக்கம் (Hybridisation) செய்வதற்குச் சிறந்த ஊடகமாகும்.இதன் போது செயற்கையாகத்தயாரிக்கப்பட்ட (CDNA (Complementary DNA) பாகத்துடன் நுண்ணங்கி DNA (ஒற்றையிழை) கலப்புப் பிறப்பாக்கம் (Hybridization) செய்யப்படுகிறது.

இந்த CDNAயானது CDNAநூலகங்களில் (CDNA Library) இருந்து பெறப்படுகிறது. CDNA நூலகம் என்பது, கதிரியக்கத் தொழிற்பாட்டு மூலகங்களைக் கொண்ட நியூக்கிளியோதைட்டுக்களினால் தொகுக்கப்பட்ட ஒற்றையிழை (Single Strand) DNA பகுதிகளை பில்லியன் கணக்கில் கொண்ட ஒரு அமைப்பாகும். கலப்புப் பிறப்பாக்கத்தின் (Hybridization) போது, நோயாக்கியின் DNA பாகத்திற்கு பூர்த்தி செய்யக்கூடிய (Complementary) CDNAயானது தெரியப்பட்டு நைத்திரோ செலுலோஸ் ஊடகத்தில் கலப்புப் பிறப்பாக்கம் நடைபெற்று இரட்டையிழை DNA பெறப்படுகிறது.




இவ்வாறு பெறப்பட்ட கலப்பின DNA (Hybrid DNA) Autoradiography எனப்படும் கதிர்த் தொழிற்பாட்டியலின் மூலம் காரத் தொடர் (Base Sequence) அறியப்படுகிறது.

இவ்வாறு பிறப்புரிமைப் பதார்த்தத்தின் (DNA)யின் காரத்தொடர் துணியப்பட்டு, அவை ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட நோயாக்கி நுண்ணங்கிகளுடன் ஒப்பிடப்பட்டு அவை எவ்வகை நுண்ணங்கிகள், அதாவது பக்ரீரியா, வைரஸ், பங்கஸ் எனப்பேதப்படுத்தப்பட்டு, பக்ரீரியாக்களாயின் அல்லது பங்கசுக்களாயின் விஞ்ஞான அடிப்படையில் சாதி (Genus), இனம் (Species), உப இனம் (Sub species), பேதம் (race) என்ற அடிப்படையில் பெயரிடப்படுகிறது.

புதிய இனங்களாயின் race1, race2 இவ்வாறு வகைப்படுத்தப்பட்டு அவற்றிற்குரிய கட்டுப் பாட்டு (Control) முறைகள் சிபாரிசு செய்யப்படுகிறது. வைரஸ் இனங்களாயின் தாவர அடிப்படையில் அல்லது நோய் அறிகுறி (Symptoms) அடிப்படையில் பெயரிடப்படுகிறது. உதாரணமாக மிளகாய்ச் செடியில் இலைச்சுருள் நோயை ஏற்படுத்தும் வைரசு (Chilli Leaf Curl Virus - CLCV) என்று பெயரிடப்படுகிறது.

இவ்வாறு நோயாக்கி நுண்ணங்கியின் DNA காரத் தொடர் அறியப்பட்டதன் மூலம், நோய் ஏற்படுத்துவதற்குப் பொறுப்பான காரத்தொடர் (Base Sequence) அதாவது பரம்பரை அலகு (Gene) அறியப்பட்டு அதைச் செயலிழக்கச் செய்யக்கூடிய பரம்பரை அலகு (Gene) தாவரப் பிறப்புரிமைப் பதார்த்தத்தில் (Plant DNA) புகுத்தப்பட முடியும், அல்லது வீரியத்தை செயலிழக்கச் செய்யக்கூடிய இரசாயனங்களைத் தொகுக்க முடியும். இவ்வாறு, தாவர நோயாக்கிகளைக் கட்டுப்படுத்த முடியும். மிகவும் சரியாக நோயாக்கியை அறிந்து கொள்ள முடியும்.

இலங்கையைப் பொறுத்தவரை இது தொடர்பான ஆய்வுகள் பல்கலைக்கழகங்களிலும், விவசாய ஆராய்ச்சி நிலையங்களிலும் ஆய்வு கூட மட்டத்திலேயே உள்ளன. பொருளாதார வசதியின் மையே பிரதான காரணமாகும். ஆகவே இலங்கையிலும் பயிர்ச் செய்கையில் இவ்வாறான நுட்பங்களைப் பிரயோகிப்பதன் மூலம், பயிர்ச் செய்கையில் தன்னிறைவைக் காணக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன.

**ஆதாரம்**

1. Plant Pathology (George Agrios)
2. Molecular Genetics (Prime Rose)
3. Article on Molecular Genetics (Robert H. Tamarin, Boston University)

# சர்வதேச அரங்கை எதிர்கொள்ளும் சுதேசிய அரங்குகள்

**சி.ஜெயசங்கர், விரிவுரையாளர், நுண்கலைப் பீடம், கிழக்குப் பல்கலைக் கழகம்.**

*இன்றைய அரங்குகள் சர்வதேச அரங்கு, சுதேசிய அரங்குகள் என்றழைக்கப்படுகின்ற இரண்டு வேறுபட்ட எண்ணக்கருக்களின் ஆதிக்கங்களுக்குள் நின்றியங்குபவையாகவே காணப்படுகின்றன. தொலைத்தொடர்பு, செய்மதித் தொடர்பு, கணனி, பல்தேசியக் கூட்டுத்தாபனங்கள் என்பவை புவியியல் ரீதியானதும், தேசிய ரீதியானதுமான எல்லைகளை ''அகற்றிவிட'' உலகம் ''பூகோளக் கிராமம்'' ஆகிவிடுகின்றது. இந்தப் பின்னணியிலேயே சர்வதேச அரங்கு பற்றிய எண்ணக்கரு தோற்றம் பெற்றிருக்கிறது.*

*சர்வதேச அரங்கு என்பது உண்மையில் மேலைத்தேச எண்ணக்கருவாகும். இந்த அரங்கு எந்தத் தளத்தில் இயங்குகிறது? உலகம் தழுவிய மனிதம் என்பதன் அர்த்தத்திலா அல்லது மேலைத் தேசத்தினதும், கீழைத்தேசத்தினதும் பண்பாட்டு ஒன்றிணைவிலா? இதற்கு விடைகாண வேண்டும். மேலும் பண்பாடுகளுக்கு இடையிலான ஒன்றிணைவின் தேவை ஏன் ஏற்பட்டது? அது பற்றியும் சிந்திக்க வேண்டும்.*

*உண்மையில், சர்வதேச அரங்கு என்பது, இருமைத் தன்மை கொண்ட எண்ணக்கருவாகும். ஏற்கனவே புழக்கத்திலுள்ள அரங்க ஆற்றுகைகளில் சலிப்புற்ற மேலைத்தேசப் பார்வையாளருக்கு புதியதொன்றை வழங்கும் முயற்சியாகவும், அதேவேளை கீழைத்தேசப் பார்வையாளருக்கு, உலக மக்களனைவரும் சகோதரர்கள் என்னும் தோற்றப்பாடும் முன்னிறுத்தப்படுகின்றது. இதனாலேயே பீற்றர் புறூக்கின் மகாபாரதம் நாடகம் பற்றி The Horizone சஞ்சிகையில் விமரிசனம் எழுதிய கிருஷ்ண சைதன்ய கீழ்க்கண்டவாறு புளகாங்கிதமடைய நேரிடுகிறது.*

> *''எனது அனுபவத்தில் சர்வதேச நாடக உறுப்புகள் என்பது ஒரு துணிகரப் பரிசோதனையும், ஒரு முற்று முழுதான வெற்றியாகவும் அமைந்தது வெளிப்படை. முதல் சில நிமிடங்களின் பின் நாடக நடிகர்கள் ஆபிரிக்க, ஆசிய, ஐரோப்பிய நாடுகளில் இருந்து வந்துள்ளனர் என்ற உணர்வை இழந்தேன். அவர்கள் யாவரையும் சகபாடிகளாகவே கண்டேன்.''*

*இத்தகைய நாடகத் தயாரிப்புகளில் பாத்திரங்களை சர்வதேச நடிகர்களும் ஏற்று இயங்குவது ''யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தோற்றப்பாட்டுக்குக் காலாகியிருக்கின்றது. இதுவே கீழைத் தேசத்தவர்களைப் புளகாங்கிதமடையச் செய்துவிடுகிறது.*

சர்வதேச அரங்கு, மேலைத்தேசத்தவர்களுக்கு எவ்வாறு தோற்றந் தருகிறது என்பதைக் காட்ட, பிரெஞ்சு நெறியாளரான Ariane Mnouchkineன் பத்து மணித்தியாலங்கள் இயங்கும் நாடகச் (tetralogy) சக்கரமான "Les Atrides" பற்றி Jack Kroll என்பவர் Newsweek சஞ்சிகையில் எழுதிய விமர்சனம் போதுமானதாகும்.

''துணிவாக சுதேசிய ஆற்றுகைப் பாணியை ஒட்டியுள்ளார். முக்கியமாக இந்தியக் கதகளி அரங்கின் முகமூடி ஒப்பனையையும், செட்டான சடங்காச்சாரமான அசைவுகளையும் மேற்கத்தேய அரங்கின் அடிப்படையினுள் ஒட்டியுள்ளார்'' என நாடக விமரிசனம் காணப்படுகின்றது.

கீழைத்தேசத்தவர்களுக்கும், மேலைத்தேசத்தவர்களுக்கும் இருவேறு விதமாகத் தோற்றங் காட்டும் சர்வதேச அரங்கின் உள்ளார்ந்த நோக்கம் பற்றி இனிக் கவனிப்போம்.

''மகாபாரதம்'' பற்றிக் கேட்கப்பட்ட கேள்விக்கு பீற்றர் புறூக் கூறுகிறார். ''நாம் இந்தியத் தனத்தை வெளிப்படுத்த முனைந்துள்ளோமே தவிர, இந்துத் தத்துவத்தைக் கொடுக்கும் எண்ணம் எமக்கில்லை.'' இந்துத் தத்துவம் நீக்கப்பட்ட மகாபாரதம் அதன் ஆன்மாவை இழந்ததாகவே இருக்கும். உண்மையில் இங்கு நிகழ்ந்திருக்க வேண்டியது, கீழைத்தேச மற்றும் மேலைத்தேச வெளிப்பாட்டு முறைகளினூடாக இந்துத் தத்துவத்தின் சர்வதேசத்தன்மை வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மாறாக ஐரோப்பிய அரங்கக் கட்டமைப்புக்குள் உலகப் பண்பாடுகளை உட்கொண்டு விடுவதாகவே நடைமுறை உள்ளது. சர்வதேச அரங்கு என்று பேசப்படுவதன் உண்மையான நோக்கமே இதுவாகத்தான் இருக்கிறது.

பிரெஞ்சு நெறியாளரான Ariane Mnouchkineஇன் "Les Atrides" நாடகத்தில் கிரேக்க அவலச் சுவை நாடகாசிரியரான ஈஸ்கலஸின் ''ஒறஸ்ரியா'' எனும் முக்கூட்டு நாடகத்துடன் யுரிப்பிடிசினது ''ஒலிஸில் இபிஜினியா'' என்ற அவலச்சுவை நாடகமும் இணைக்கப்பட்டுள்ளது.

இந்நாடகம் மிகவும் விஞ்சத்தக்க வகையில் எமது கதைதான். மனித இனமானது முடிவில்லாத வன்முறைச் சூழலைக் களைந்து அதனைச் சட்டத்தின் ஆட்சிக்குள் கொண்டுவரும் கதையிது. இன வேற்றுமை வளர்ந்துவரும் காலத்தில் மேடையானது கிழக்கினதும் மேற்கினதும் இணைவிடமாக மாறுகிறது. இந்தச் சக்கரத்தின் ஆற்றுகை சைகைகளும், கதகளி ஒப்பனைகளும் இதில் முக்கிய பங்கு வகித்திருக்கின்றன. மேலைத்தேச, கீழைத்தேச பண்பாட்டு இணைவில் இந்த அரங்க வெளிப்பாடு நிகழ்கின்றது என்று கூறப்படுகின்ற போதிலும் உண்மையில் ஐரோப்பிய பார்வையாளருக்கு புதியதான பெருங்காட்சித் தன்மையை வழங்கவே கதகளி ஆற்றுகை முறைமை இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஊகிக்க முடிகிறது.

மனித இனம் வன்முறையை ஒழித்து அந்த இடத்தில் நீதியை நிலை நிறுத்தும் முயற்சியையே இந்த நாடகச் சக்கரம் வெளிப்படுத்துகின்றது என்று கூறிய நெறியாளர் ''கிழக்கு ஐரோப்பாவில் நிகழ்ந்து கொண்டிருப்பது பயங்கரவாதம், பிசாசுகளே அங்கு நிறைந்துள்ளன. பெரிய பிசாசு தோற்கடிக்கப் பட்டுள்ளது. எஞ்சியிருக்கிற சிறிய பிசாசுகளையும் வலுவிழக்கச் செய்ய வேண்டும். "Les Atrides" இதனை வெளிப்படுத்துகிறது, இனங்காட்டுகிறது, பிசாசுகளை இனங்காட்டுகிறது'' என்கிறார். ''கலைஞர் என்ற வகையில் எமது பயணத்தில் எச்சரிக்கை செய்வது, குரலெழுப்புவது, சத்தம் வைப்பது, எந்தச் சிறிய வெற்றியானாலும் அதைக் கொண்டாடுவது'' என்று கூறும் இவரது பயணம் எந்த இலக்கை நோக்கியது என்பதைப் புரிந்து கொள்வது கடினமானதல்ல.

மேற்கு ஐரோப்பிய, அமெரிக்க நலன் சார்ந்ததாகவே சர்வதேச அரங்கு என்ற எண்ணக்கரு கட்டியெழுப்பப்படுகிறது என்பதைத் தெளிவாகவே அறிந்து கொள்ள முடிகிறது. சர்வதேச அரங்கு என்ற

இந்த மேலைத்தேய எண்ணக்கரு பண்பாட்டு ரீதியாக கீழைத்தேசத்தை ஆதிக்கம் செலுத்தும் **நோக்கில்** உருவானதென்ற சந்தேகம் எழுவது இங்கு தவிர்க்க முடியாததாகிறது.

பலதேச நடிகர்களை ஒன்றிணைப்பதும், கீழைத்தேச ஐதிகங்களின், புராணங்களின் தத்துவங் களைக் கருத்தில் கொள்ளாது கதைகளை மட்டும் எடுத்து மேலைத்தேச நோக்கில் வெளிப்படுத்துவது அல்லது கீழைத்தேச வெளிப்பாட்டு முறைகளினைத் தழுவி மேலைத்தேச நோக்கிலமைந்த கதைகளை வெளிப்படுத்துவதும் சர்வதேச அரங்காகி விடுமா? சர்வதேச அரங்கு என்ற பெயரில் கீழைத்தேச மூலவளங்களைச் சுரண்டி மேலைத்தேசச் சிந்தனைகளைத் திணிக்கும் பண்பாட்டு ஏகாதிபத்தியமாக விளங்குகிறதா என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கீழைத்தேசங்களைப் பொருளாதார ரீதியாகத் தன்னில் தங்க வைத்துக் கொண்டிருக்கிற மேலைத்தேசம், கீழைத்தேசங்களினதும் அடிப்படையானதும், இறுதியானதுமான எதிர்ப்பு வடிவமான பண்பாட்டு அடையாளத்தின் தனித்துவத்தையும் கருவறுத்துவிடும் முயற்சியாகவே இது தென்படுகிறது. ஏனெனில் பொருளாதார ரீதியாகத் தன்னில் தங்க வைத்திருக்கும் கொள்கையுடைய மேலைத் தேசம் பண்பாட்டு ரீதியாக ஒன்றிணைதல் பற்றிப் பேசுவது அவதானத்துடன் கவனிக்கப்பட வேண்டியதாகும். இதனைப் பண்பாட்டுக் காலனித்துவத்தின் வடிவமாகவே கருத முடிகிறது.

ஏனெனில் ஏகாதிபத்தியவாதிகள் தங்களது இலக்குகளை வெளிப்படையாக்குவார்களே யானால் தங்களது நோக்கங்களில் வெற்றி அடைந்தவர்களாக இருக்கமாட்டார்கள். எனவே அவர்களது கருத்தியலாளர்கள் உண்மை நோக்கத்தை மறைக்கக் கூடியதாகவும், மக்களது விழிப்புணர்வையும், எதிர்ப்புணர்வையும் மழுங்கடிக்கக்கூடியதாகவும் ஒரு முறைமையை உருவாக்குவார்கள். அவை கலை, இலக்கிய வடிவங்களின் மூலமாகவும், கலை, இலக்கியக் கோட்பாடுகளாகவும், சமூகக் கோட்பாடு களாகவும் பல வழிகளில் உட்புகுத்தப்படும். இவை எல்லாம் ஒடுக்கப்பட்ட அல்லது ஆக்கிரமிக்கப்பட்ட சமூகங்களினதும் எழுச்சிக் கெதிரான கருவிகளாகச் செயற்படுபவையாக இருக்கும்.

## II

சுதேசிய அரங்குகள் எதிர்ப்பு அரங்குகளாகவே தொழிற்படுகின்றன. நாட்டின் உள்ளிருந் தெழும் முரண்பாடுகளையும், வெளியே இருந்து உட்புகும் அழுத்தங்களையும் எதிர்கொள்ளும் அரங்குகளாகவே இவை விளங்குகின்றன. இந்த அரங்குகளின் வெளிப்பாட்டுத் தன்மைகள் மேலைத்தேச அரங்குகளிலிருந்து வித்தியாசப்படுபவை. இதன் அழகியல் வித்தியாசமானது. பாரம்பரியமாக இருந்து வந்த அழகியல் கோட்பாடுகள், அரசியல் நோக்குகள் என்பவற்றுடன் முரண்பட்டவையாக இருக்கும். பல்வேறு தளங்களிலும் ஒடுக்கப்பட்டவர்களது பெறுமானங்களுடன் தொடர்புடையதாக இருப்பது இந்த அரங்குகளின் அடிப்படைப் பொதுமையாகும்.

மேலைத்தேச காலனித்துவத்தால் ஏற்படுத்தப்பட்ட நகரமயமாக்கலும், கல்வி முறைமையும் மரபு ரீதியான சமூக அமைப்பில் மாற்றத்தினை ஏற்படுத்திவிட, பாரம்பரிய அரங்குகள் செல்வாக்கு இழக்கத் தொடங்கின.

மேலைத்தேச அரங்கு இச்சூழ்நிலையில் வளர்ச்சியடைந்திருப்பினும், அரங்க வெளிப்பாடு முறைமையை மாற்றியமைத்திருப்பினும் காலனித்துவத்திற்கு எதிரான தேசிய எழுச்சி புதியதொரு நிலைமையைத் தோற்றுவித்துவிட முனைகின்றது. ''வேர்களுக்குத் திரும்புதல்'' ''பாரம்பரியங்களை மீட்டல்'' என்பவை புதிய சுலோகங்களாகி பாரம்பரிய அரங்கை மீட்டெடுக்கும் முயற்சிகள் மேற்

கொள்ளப்படத் தொடங்கின. ''வேர்களுக்குத்திரும்புதல்'' என்பது சுதேசியத்தினூடான சர்வதேசிய வெளிப்பாடு என்றே அர்த்தம் கொள்ளப்படுகின்றது. மாறாக, பழைய அல்லது கடந்த கால வாழ்க்கை முறைகளுக்குத் திரும்புதல் அல்ல.

மேற்படி முன்னெடுப்புக்களின் ஒரு கிளை ஒடுக்கப்பட்டவர்களின் உணர்வு வெளிப்பாடு களைக் காவும் அரசியல் வன்மைமிக்க சாதனமாக வடிவெடுக்க, மறுகிளை முதலாளித்துவச் சமூகத்தின் நுகர்வுக்கான விளம்பரச்சாதனமாகியிருக்கிறது. வரவேற்பு வைபவங்களில், விடுதிகளில், விழாக்களில் காட்சிப் பொருளாகியிருக்கிறது.

இதே வேளையில் மேலைத்தேய அரங்க வடிவினூடாக காலனித்துவ எதிர்ப்பை முழுவீச்சுடன் வெளிப்படுத்துவதில் மட்டுப்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில் மேலைத்தேச அரங்கு அத்தேச நிலமைகளுக்கேற்ப இயல்பிலேயே கட்டமைக்கப்பட்டது. அதாவது மேலைத்தேசம் அறிமுகமாக்கிய கல்வி முறைமையைப் போலவே ஐரோப்பியமயப்பட்டதும், அடக்குமுறைத்தன்மை வாய்ந்ததுமாகும். எனவே காலனித்துவ எதிர்ப்பு அல்லது அடக்குமுறை எதிர்ப்பென்பது அடக்குமுறைத் தன்மை வாய்ந்த அரங்கினூடாக வெளிப்படுத்தும் போது அதனது எதிர்ப்புச் சக்தி நீர்த்துப்போய் விடுகின்றது.

எனவே எமக்கேயான பிரச்சனைகளை வெளிப்படுத்தக்கூடியதான சுதேச மூலக்கூறுகளை அடிப்படையாகக் கொண்ட வெளிப்பாட்டு முறைமைகள் பற்றிய முன்னெடுப்புக்கள் அவசியமாகின்றன.

இந்த நிலையில் எமது சூழலின் அரங்க இயக்கங்களை அவதானிப்போமாயின், செல்வாக்கை இழந்து வரும் பாரம்பரிய அரங்கு கிராமியச் சூழலிலும், எதிர்ப்புக்குள்ளாகும் மேலைத்தேச அரங்கு காலனித்துவச் செல்வாக்குகள் அதிகம் விழுங்கப்பட்ட நகரச் சூழலிலுமாக ஒரே சமூகத்தின் இரு வேறுபட்ட தளங்களில் இயங்கி வருவதைக் காண முடிகிறது. இந்த இருவேறுபட்ட தளங்களையும் ஒன்றிணைத்து நவகாலனித்துவத்திற்கெதிராக, புதிய உலக ஒழுங்கிற்கு எதிராக, பூகோளமயமாதலுக்கு எதிராக முன்னிறுத்தும் முயற்சியாக தேடல் நிகழ்கிறது. இதற்கான கொள்கைத் தளமாக பின்காலனித்துவக் கொள்கைகள் விளங்குகின்றன. சுருக்கமாகச் சொல்வதானால் காலனித்துவம் விளைவித்ததும், நவ காலனித்துவம் விளைவித்துக் கொண்டிருப்பதுமான சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்துவதற்கான புதிய அரங்கியல் மொழிக்கான தேடலும் இயக்கமுமாக இச்செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

இச்செயற்பாடு பாரம்பரிய அரங்கு சார்ந்த, அரங்கு சாராத மூலக்கூறுகளுடன் மேலைத் தேசத்தினதும், கீழைத்தேசத்தினதும் அரங்கு சார்ந்த, அரங்கு சாராத மூலக்கூறுகளும் கரைந்து இணைந்த வடிவமாகக் கருதப்படுகிறது. இச்செயற்பாடே மேலைத்தேசத்தவர்களால் மூன்றாம் உலக அரங்கு என்று அழைக்கப்படுகிறது. நாமும் அவ்வாறே அழைத்துக் கொள்கிறோம். உண்மையில் மூன்றாம் உலகம் என்பது பொருளாதாரம் சார்ந்து மேலைத்தேசத்தை மையப்படுத்திய பதப்பிரயோகமாகும். இந்தியா, சீனா போன்ற நாடுகள் பண்பாட்டு ரீதியில் எந்த வகையிலும் மூன்றாம் உலகமாக இருக்க முடியாது. எனவே மூன்றாம் உலக அரங்கு என்பதைக் குறிக்கும் புதிய பதப்பிரயோகத்தின் தேவை உணரப்பட்டது. இதன் விளைவே சுதேசிய அரங்கு என்ற பதப்பிரயோகத்தின் அறிமுகமாகும். இது சுதேசிய நவீனவாதம், சுதேசிய நவீனத்துவம் என்ற எண்ணக்கருக்களுடன் தொடர்புடையது.

நவீனம் (Modern), நவீனவாதம் (Modernism) நவீனத்துவம் (Modernity) என்ற மேற்கத்தைய நோக்கிலான எண்ணக்கருக்கள் முழு உலகுக்குமுரியவை என்பதாக நம்பவைக்கப்பட்டிருக்கிறது. மேற்படி சிந்தனைப் போக்கு மேற்கு நாடுகளில் நிகழ்ந்த பிரெஞ்சுப் புரட்சி, கைத்தொழிற், புரட்சி,

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் போன்ற காரணங்களால் உருவாகியதென்றால், கீழைத்தேசங்களில் நவீனம், நவீனவாதம், நவீனத்துவம் ஆகிய எண்ணக்கருக்கள் காலனித்துவத்திற்கு எதிரான போராட்டங்களுடன் உருவாக்கம் பெற்று, நவகாலனித்துவத்துடன் அதன் அடுத்த கட்ட வளர்ச்சியைப் பெற்றுக் கொண்டிருக்கிறது.

ஐரோப்பிய நவீனவாதம் போலன்றி கீழைத்தேசங்களின் நவீனவாதம் தனக்கேயான சூழலையும், தேவையையும், நோக்கையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இவை சுதேசிய நவீனவாதம், சுதேசிய நவீனத்துவம் என்றழைக்கப்படுகின்றன. இன்றைய நிலையில் தகவல் மேலாண்மையால் பூகோளமயமாக்கும் மற்றுமொரு காலனித்துவத்திற்கு எதிராக இயங்குவதை நோக்கமாகக் கொண்டதாக சுதேசிய நவீனவாதம், சுதேசிய நவீனத்துவம் ஆகிய எண்ணக்கருக்கள் இயங்குகின்றன. உண்மையில் அரங்கில் சுதேசியமயமாதல் என்பது காலனித்துவத்திற்கு எதிரான கிளர்ச்சிகளுடன் ஆரம்பமாகி, படிப்படியாக அதுவொரு எண்ணக்கருவாக வளர்ச்சிகண்டு வருவதுடன், வித்தியாசங்களை உடையதாகவும் இருக்கிறது.

இச்சுதேசிய நவீனவாத அரங்குகள் ஒவ்வொன்றுமே காலத்தால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய பண்பாட்டு அடையாளங்களை பேணிக் கொண்டே, சமகாலத்தை எதிர்கொள்வனவாகக் காணப்படுகின்றன. இன்னொரு புறத்தில் மேலைத்தேசம், பண்பாட்டு ஏகாதிபத்தியத்தின் மூலம் இந்த நாடுகளின் அடிப்படையான எதிர்ப்புச் சக்தியான பண்பாட்டு வேர்களையும் கல்லிலிட முனைகின்றன.

இந்த வகையில் இன்றைய உலக அரங்க இயக்கமானது சர்வதேச அரங்கு, சுதேசிய அரங்குகள் என்ற இரு எண்ணக்கருக்களுக்கிடையிலான ஊடாட்டத்தில் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது. இன்னொரு வகையில் சொல்வதானால் பண்பாட்டு ஏகாதிபத்தியத்தின் சாதனமாக அதாவது ஒடுக்குபவர்களின் அரங்காகவும், பண்பாட்டு ஏகாதிபத்திய எதிர்ப்பின் சாதனமாக அதாவது ஒடுக்கப்படுபவர்களின் அரங்குகளாகவும் தொழிற்பட்டு வருகின்றன.

இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞானத் தொழில்நுட்ப சாகசங்களின் விளைநிலமாக இருப்பினும், அதற்கெதிரான போராட்டங்களையும், கலை இலக்கியங்களில் அதன் பிரதிபலிப்புக்களையும் காண முடிகிறது. இது முழு உலகமும் தழுவியதாகும். அதாவது ஒடுக்கப்பட்டவர்களது உலகம். இந்த வகையில் இதற்கொரு சர்வதேசியத்தன்மை உண்டு. இச்சர்வ்தேச அரங்குகள் ஐரோப்பிய மைய அதிகாரத்துவம் முன்னிறுத்துகின்ற பண்பாட்டு ஆதிக்க முறையான சர்வதேசிய அரங்கிற்கு எதிரானவை. ஒடுக்கப்படுபவர்களது அரங்கு என்ற முறையில் சர்வதேசத் தன்மை வாய்ந்ததாகவும், சுதேசியச் சூழலின் தனித்துவமான தன்மை காரணமாக வித்தியாசங்களை உடையதாகவும் இவை இயங்கி வருகின்றன. ஒடுக்குமுறைச் சூழலினால் உருச்சிதைக்கப்பட்ட ஆளுமைகளை மாற்றி அதனிடத்தில் பெருமிதத்தையும் கூட்டுணர்வையும் வைப்பதும், இலட்சியத் தளத்திலல்லாது யதார்த்தத் தளத்தில் சமூகங்களை இயங்க வைப்பதும் இந்த சுதேசிய அரங்குகளின் பணியாகி இருக்கிறது.

# பனைவளத்தின் விஞ்ஞான, பொருளாதார கோட்பாடுகள் - ஒரு நோக்கு

**சோ.கோகுலதாசன்,** *B.Sc. (Peradeniya) M.Sc. (Jaffna),*
**பொது முகாமையாளர், பனை அபிவிருத்திச் சபை.**

இலங்கையின் முக்கிய மூலளவங்களில் ஒன்றாகிய பனைமரத்தின் (Borassus flabellifer) பயன்பாடுகளை இலங்கை மக்கள் அனைவரும் உணரத் தொடங்கியுள்ளனர். ஆனால் இம்மூலவளம் முழுமையாக பயன்படுத்தப்படாதது மாத்திரமல்ல, ஆராய்ச்சியாளர்களின் கவனத்தையும் ஈர்க்கவில்லை. பனைமரங்கள் விவசாயத்திற்கு ஒவ்வாத நிலங்களில் இலகுவாக வளரக்கூடியதுடன் இதன் வளர்ச்சிக்கு நிலப் பண்படுத்தல், நீர்ப்பாய்ச்சல், பசளையிடல், களைகட்டல், பூச்சிபீடைகட்டுப்பாடு என்பன அவசியமற்றன. இவ்வளம் வடக்கு கிழக்கு மாகாண மக்களின் முக்கிய பொருளாதார மூலவளமாக போற்றப்படுவதுடன், இன்று நாடளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டு அதிக வருவாய் ஈட்டிக்கொடுக்கும் பாரிய கைத்தொழில் துறைகளில் ஒன்றாகவும் மாறி வருகின்றது.

இலங்கையில் மொத்தமாக 11 மில்லியன் பனைமரங்கள் காணப்படுவதாக கணிக்கப்பட்டுள்ளது. இதில் 3.5 மில்லியன் பனைமரங்கள் யாழ் மாவட்டத்திலும், 3.5 மில்லியன் பனைமரங்கள் கிளிநொச்சி மாவட்டத்திலும், 3 மில்லியன் பனை மரங்கள் மன்னார் மாவட்டத்திலும், மிகுதி ஒரு மில்லியன் பனை மரங்கள் முல்லைத்தீவு. வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, புத்தளம், அம்பாந் தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் பரவி உள்ளன. பனை மரங்கள் பொதுவாக ஒழுங்கான இடைவெளி களில் அல்லாமல் தோப்புக்களாகவே காணப்படுகின்றன.

பனையில் இருந்து எண்ணூறுக்கும் அதிகமான உற்பத்திப்பொருட்களை சாறு, ஓலை, பழம், தும்பு, கிழங்கு, மரம் ஆகிய உப மூலப்பொருட்களிலிருந்து பெறலாம். பனை மரத்திலிருந்து இவ்வாறு எண்ணற்ற பயன்கள் பெறப்படுவதனால், இது கற்பகதரு என அழைக்கப்படுகிறது. பனம் பாளையிலிருந்து சுரக்கப்படும் சாறு நொதிக்கும் பொழுது கள்ளாகவும், நொதிக்காத பொழுது பதனீராகவும் பெறப்படும்.

இதிலிருந்து பாணி, பனை வெல்லம், கல்லாக்காரம், வினாக்கிரி, சாராயம் போன்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பனை வளத்தில் இந்த சாறு தான் (கள்ளு,பதநீர்) மக்களிடையே சமூக விஞ்ஞான பொருளாதார கோட்பாடுகளுக்கு முக்கிய காரணியாக அமைகின்றது.

பனம் பழத்திலிருந்து பெறப்படும் கழியிலிருந்து பனாட்டு, ஜாம், கோடியல், பனம் அற்ககோல் மற்றும் பலகாரவகைகள் பெறலாம். பனை ஓலையானது முற்காலத்தில் எழுதுவதற்கு பயன்படுத்தப்பட்டது. தற்பொழுது குருத்து ஓலையில் இருந்து பல வகையான கைப்பணிப்பொருட்களும், பாவனைப் பொருட்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. முதிர்ந்த ஓலைகள் வேலி, வீட்டுக்கூரை என்பன அமைப்ப தற்கு பயன்படுகின்றன. பனம் விதை முளைக்கும் பொழுது முதல் வித்திலை உணவு சேமிக்கப்பட்டு கிழங்காக மாறியுள்ளது. இக்கிழங்கிலிருந்து பல உணவுப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

வடலிப்பனைகளில் இருந்து பிரிக்கப்படும் கங்கு மட்டைகளில் இருந்து பனம் தும்பு பெறப்படும். இப்பனம் தும்பானது இயற்கையானதும், இரசாயனங்கள், ஈரப்பற்று, பூச்சி பீடை தாக்கம் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தன்மை உள்ளதும் குறிப்பிடத்தக்கது. மிக முக்கியமாக பெரும் தெருக்களை சுத்தப்படுத்தும் கடின தூரிகைகள் தயாரிப்பதற்கு இத்தும்பு பயன்படுத்தப்படுகின்றது. பனைமரப்பகுதியில் இருந்து கட்டடங்கள் கட்டுவதற்கு தீராந்திகள், வளைகள், சிலாகைகள் என்பன மாத்திரமல்ல தளபாடங்கள் மற்றும் கைப்பணிப் பொருட்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

பனம் தொழில் அபிவிருத்தியில் விஞ்ஞான ஆராய்ச்சி முக்கியமான பங்கை தற்பொழுது வகிக்கின்றது. பாரம் பரிய உற்பத்திகளை விஞ்ஞான ஆராய்ச்சிகள் மூலம் நவீனமயப்படுத்தும் போது சமூகப் பொருளாதார வேறுபாடுகள் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டுள்ளது.

பாரம்பரிய உற்பத்திகள் நவீனமயமாக்கப்படும் பொழுது பனம் கைத்தொழிலானது உற்பத்தி, சந்தைப்படுத்தல், ஆராய்ச்சி, தொழில்நுட்பம் ஆகிய முக்கிய பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டி யுள்ளது. எனினும் பாரம்பரிய உற்பத்திகள் நவீன மயப்படுத்தப்பட்டு மக்களால் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுக்கு சந்தைப்படுத்தல் கவர்ச்சிகள் அளிக்கப்படுகின்றது. எமது நாட்டின் அந்நியச் செலாவணி கூடுதலாக செலவழிக்கப்படும் பெக்ரின் என்னும் பதார்த்தம் பனம் பழ கழியிலிருந்து பெறப்படுவதுடன் பனம்பழ சம்போ, பனம்பழ பற்பசை, பனம்பழ அற்ககோல் என்பன தற்பொழுது சந்தைப்படுத்தலுக்கு தயாராகவுள்ளன. இப்புதிய பொருட்கள் உள்ளூர் சந்தைக்கும், ஏற்றுமதிக்கும் இணங்கத்தக்கதாக கைத்தொழில் மயமாக்கப்படுகிறன.

பின்வரும் அம்சங்களைப் பனம் கைத்தொழில் நவீனமயப்படுத்தலுக்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

01. பனம் கழியை திண்ம மணிகளாக அல்லது பவுடராக மாற்றுதல்.
02. பனங்கிழங்கிலிருந்து ரிப்பிரிப் போன்ற நவீன பொருட்களின் உற்பத்தி .
03. பதநீரை பொலித்தீன் பக்கெற்றில் அடைத்தல் .
04. பற்பசை, சம்போ, பெக்ரின், மற்றும் சலவைப் பொருட்களை பனம் கழியில் இருந்து பெறுதல்.
05. பொதி செய்தலுக்கு அமர்த்தப்பட்ட பரிகரிக்கப்பட்ட பனை ஓலையைப் பாவித்தல்.
06. பனை வெல்லம், பதநீர், கள்ளு ஆகியவற்றின் நீண்டகாலம் பாவிக்கும் தன்மையை அதிகரித்தல்.
07. பிறப்புரிமை ஆராய்ச்சி மூலம் குட்டையான பனைமரங்களை உருவாக்குதல் .
08. கைத்தொழில் அற்ககோல், அமில உற்பத்திகளை மேம்படுத்தல் .
09. பனை ஏறுதல், சீவுதல் போன்றவற்றை நவீனமயப்படுத்தல்.

மேற்படி ஆராய்ச்சிகள் கடினமாகவும் நடைமுறையில் பிரதிகூலமாகவும் உள்ளதற்கு பின்வரும் காரணிகளை குறிப்பிடலாம்.

01. பனை நீண்ட வாழ்க்கைக்காலமுள்ள தாவரமாகையினால் முதலாவது ஆராய்ச்சிப் பெறுபேற்றுக்கே நீண்ட காலம் எடுக்கும்.
02. தோப்புக்களிடையே பனைமரங்களுக்கு இடையேயும் பல்வேறு இயல்பு வேறுபாடுகள் காணப்படு கின்றன.
03. விதை அல்லது நாற்று நிலையில் பால் வேறு பாட்டை நிர்ணயிக்க முடியாமை.
04. ஒவ்வொரு பனைமரங்களுக்கிடையிலும் தனித்தன்மையான இயல்புகள் காணப்படுகின்றன.
05. ஒவ்வொரு வகையான விளை பொருட்களும் வருடாந்தம் குறுகியகாலத்திற்கே கிடைக்கின்றன.
06. உயரமான மரமாகையால் சாறு உற்பத்திகளின் வாசிப்புக்களைச் சரியாகப் பெறுவது கடினமாகும்.

07. காற்று உற்பத்தி வாசிப்புக்களை சரியாகப் பெறுவதற்குக் கல்வி கற்ற சீவல் தொழிலாளர் இல்லாமை.

08. தோப்புக்கள் தூரமான இடங்களில் ஒழுங்கற்ற முறையில் அமைந்திருத்தல்.

பனைவளமானது பனைசார்ந்த மக்களின் பொருளாதார அபிவிருத்தியில் முக்கிய பங்குவகிக்கின்றது. தற்பொழுது சாறு உற்பத்திகளே பொருளாதார மேம்பாட்டிற்கு வழிகோலியுள்ளன. அத்துடன் தும்பு உற்பத்தியும், பழ உற்பத்திகளின் புதிய கண்டு பிடிப்புகளும் எதிர்கால ஏற்றுமதிவாய்ப்பை கொண்டுள்ளன.

சகல பனைவளமும் பாவிக்கப்பட்டால் மொத்த சாறு உற்பத்தி 80 மில்லியன் போத்தல்களாகும். இது முழுமையாக பனை வெல்ல உற்பத்திக்கு பாவிக்கப்பட்டால் பனை வெல்லத்தின் விற்பனைப் பெறுமதி ஏறத்தாழ ரூபா 400 மில்லியன்களாகும். சீனி உற்பத்திக்கும், அற்ககோல் உற்பத்திக்கும் பயன்படுத்தப் பட்டால் விற்பனைப் பெறுமதி ரூபா 680 மில்லியன்கள். சாறானது முழுமையாக அற்ககோல் உற்பத்திக்கு மாத்திரம் பாவிக்கப்பட்டால் விற்பனைப் பெறுமதி வருடாந்தம் ரூபா 1300 மில்லியன்கள் ஆகும்.

வருடாந்தம் பனம்பழக் காலபோகத்தில் பெறப்படும் மொத்த பனம்களி 10000 மெற்றிக் தொன் ஆகும். இது முழுமையாக பெக்ரின் உற்பத்திக்குப் பாவிக்கப்பட்டால் பெறப்படும் 400 மெற்றிக் தொன் பெக்ரினின் விற்பனைப் பெறுமதி ரூபா 320 மில்லியன்களாகும்.

இதைவிடுத்துப் பனம்களியானது முழுமையாகக் குளிர்பான உற்பத்திக்கும் கோடியல் உற்பத்திக்கும் பயன்படுத்தப்பட்டால் விற்பனைப் பெறுமதி 400 மில்லியன்களாகும். முளைதிறன் வீதம் 50 வீதம் என எடுத்துக்கொள்ளும்போது, வருடாந்தம் 150 மில்லியன் கிழங்குகள் பெறப்படும். இதிலிருந்து 2500 மெற்றிக் தொன் புழுக்கொடியல், ஒடியல்மா பெறலாம். இதன் விற்பனைப் பெறுமதி ரூபா 150 மில்லியன்.

தற்பொழுதுள்ள 2 மில்லியன் இளம் பனைகளிலிருந்து (வடலி), ஒரு வடலியிலிருந்து 5 கிலோ பனம் தும்பு என்ற வீதத்தில் வருடாந்தம் ஏறத்தாழ 100 மெற்றிக் தொன் தும்பு பத்து வருடங்கள் தொடர்ந்து பெறப்படலாம். இதன் வருடாந்த விற்பனை விலை ரூபா 80 மில்லியன்கள்.

ஏறத்தாழ 1 வீதம் கட்டிடத்தேவைகளுக்காக பனை மரம் பாவிக்கப்படும் பொழுது வருடாந்தம் ஒரு இலட்சம் பனை மரங்கள் வெட்டப்படும். ஆகவே மொத்தமாக வருடாந்தம் 80 மில்லியன் ரூபா மரவிற்பனையிலிருந்து பெறப்படும்.

முதிர்ந்த பச்சைப் பனை ஓலைகள் கால்நடைத் தீனியாகப் பாவிக்கப்படும் பொழுது இதன் மொத்த விற்பனைப் பெறுமதி 120 மில்லியன் ரூபாவாகும். இந்த ஓலைகளிலிருந்து பெறப்படும் ஈர்க்கு, நார் முதலியன முழுமையாகப் பாவிக்கப்பட்டால் இதன் பெறுமதி ரூபா 215 மில்லியன்களாகும். அத்துடன் ஊமல்கள் முழுமையாகக் கரியாக்கப்படும் பொழுது (**Charcoal**) 3759 மெற்றிக் தொன் வருடாந்தம் பெறப்படும். இதன் முழுமையான விற்பனைப் பெறுமதி ரூபா 18.75 மில்லியன்களாகும்.

பனை வளத்தின் பின் தங்கிய சமூகக் கோட்பாடுகள் படிப்படியாக நீக்கப்பட்டு விஞ்ஞான கண்டு பிடிப்புக்கள் மூலம் புதிய உற்பத்திப் பொருட்களும், அத்துடன் பாரம்பரிய உற்பத்திப் பொருட்கள் நவீனமயப்படுத்தலின் மூலமும் பனம் தொழிலில் உள்ள மக்களின் ஒவ்வாமை படிப்படியாக நீக்கப்பட்டு பனை வளம் மிக்க மாவட்டங்களில் சாறு, பழம், ஓலை, தும்பு, கிழங்கு, மரம் ஆகிய உற்பத்திகள் கைத்தொழில் மயப்படுத்தலின் மூலம் மேம்படுத்தப்படும் என்பதில் ஐயமில்லை.

வருடாந்த மீள்நடுகை ஒழுங்காக அமுலாக்கப்படும் பொழுது உருவாகும் மேலதிக பனை வளத்திலிருந்து பல்வேறு வகையான உற்பத்திப் பொருட்களைப் பெற்றும் பனையின் பயன்பாட்டை மேலும் அதிகரிக்க முடியும். இத்துடன் கரையோரப் பகுதிகள் முக்கியமாக எதிர்நோக்கும் மண் அரிப்பை பனை மரங்கள் தடுப்பதுடன் காற்று வேகத்தையும் குறைத்துச் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பிற்கு முக்கிய பங்களிப்பை செய்யும். பனைசார்ந்த வெவ்வேறு உற்பத்தித் திட்டங்கள் அமுலாக்கப்படும் போது இலங்கையின் முக்கியமான ஏற்றுமதிப் பயிர்களில் ஒன்றாக பனை வளம் விளங்கும் என்பது கண்கூடு.

# அகதி எனும் முத்திரை

**றெ.வைகுந்தன், மூன்றாம் வருடம், பொறியியல் பீடம்.**

*உடம்பு ஒரே அலுப்பாயிருக்குது, கொஞ்ச நேரம் ஓய்வெடுத்து வேலைகளை பார்ப்பம் என்றால் அதற்குள் 12 மணியாகிவிடும். இரண்டாமவள் கொறிச்சுக் கொண்டு தான் பள்ளிக்கு போனவள் வந்து விடுவாள். உடம்பு மட்டுமா அலுப்பு? மனம் கூட வரவர சோர்வடையுது. ஏன் தான் ஆண்டவன் எங்களை இவ்வளவு சோதிக்கிறானோ?*

*ம்ம்...., அக்காவிண்ட கடிதத்துக்கு பதிலும் போடேல்லை. என்ன நினைக்கிறாவோ, நான் கல்யாணம் கட்ட முதல் எனக்கு தாய் தந்தையா என்ன மாதிரி அத்தானும் அக்காவும் என்னைப் பார்த்திச்சினம். இப்ப மன நிம்மதிக்குக்கூட கதைக்க ஆள் இல்லாமப் போச்சு. ஒரு பதில் போட்டாலாவது மனப்பாரம் இறங்கின மாதிரி இருக்கும்.*

* * *

*அன்பும் பாசமும் உள்ள அத்தான், அக்காவுக்கு,*

*உங்கள் அன்புக் கடிதம் எம் எல்லோரையும் மனம் குளிரவைத்தது. பதில் போட இன்றுதான் நேரம் கிடைச்சுது. என்ன செய்வது அக்கா, விதி எம் எல்லோரையும் பிரித்து விட்டது. ஒண்டா, ரெண்டா, அஞ்சு சகோதரத்தோடு பிறந்த எனக்கு, மன நிம்மதிக்குக் கூட கதைக்க ஒரு சகோதரம் கூட கிட்ட இல்லை. அது கிடக்கட்டும், பேரனுடன் எப்படி பொழுது போகுது? மதி எப்படி இப்ப உடம்பு தேறி விட்டாளா? மச்சம் ஒண்டும் சாப்பிடமாட்டாள். ஒப்பரேசன் செய்து தான் பிள்ளையை எடுத்தது என்று எழுதியிருந் தாய். எனது ரெண்டு பிள்ளைகளுக்கும் பிள்ளைப்பேறு பார்த்த உனக்கு பத்தியங்கள் தெரியும் தானே.*

*நீங்கள் சாவச்சேரிப் பக்கம் போக நாங்க நால்வருமா பருத்துறைப்பக்கமாப் போனோம். அதை எண்ணண்டு சொல்வது? பெட்டிசாமான் ஒரு பக்கம், துணிமணிகள் ஒரு பெட்டியில், பிள்ளை குட்டிகளையும் கூட்டிக் கொண்டு இந்த கொழுத்தும் வெயிலில வெளிக்கிட்டம். நாங்கள் தான் பறவா யில்லை. பிள்ளைகளை நினைக்கத்தான் வயித்தை பத்தி எரியுது. சனம் எண்டா கொஞ்ச நஞ்சமா? கொஞ்சம் கொஞ்சமாய் அரக்கி திருவாரூர் தேர் மாதிரி போச்சுது. இருட்டி விட்ட போது தான் எல்லோரையும் கண்ணைக் கட்டி காட்டில் விட்ட மாதிரியிருந்தது; இயங்க வழியில்லை. களைப்பில் அயர்ந்து தூங்கிவிட்டம். இப்படி மூன்று நாள் பிடிச்சுது, எங்கு நாம் போய்ச் சேர? இப்படித்தானே நீயும் மதியும் கஷ்டப்பட்டிருப்பியள். நல்லவேளை உங்களில் அத்தானும் தம்பியுமாவது கொழும்பில் இருந்தது. எங்கட அம்மா, அப்பா கொடுத்து வைச்சதுகள், ஒருத்தருக்கும் கரைச்சல் இல்லாமல் போய்ச்*

சேர்ந்திட்டுதுகள். கடவுள் புண்ணியத்தில அத்தானுடன் வேலை செய்த ஒருவர் ஒரு சிறு இடம் தங்கத் தந்தார். ஒரு கஞ்சியாவது வைச்சுக் குடிக்க பட்ட பாடு கடவுளுக்குத் தான் தெரியும். நான் இன்னும் சுயநலமாய் என்னைப் பற்றியே யோசிக்கிறேன்; அங்கு இருந்த எல்லோரின் நிலையும் இதுதான். பிள்ளைகளுக்கு ஒரு நேர ஆகாரமாவது கொடுக்க அத்தான் பட்டபாடு என்னென்று சொல்வது?

இப்படியே ரெண்டு,மூன்று மாதம் போயிருக்கும். அரைகுறையாக வயிற்றைக் கழுவினோம். அத்தானுக்கு ரசமும் சோறும் எண்டாலே வயிறு நிரம்பிவிடும். அது கூட இல்லாமல் உடம்பு எல்லாம் ஒட்டி, பார்க்க இயலாமல் போயிட்டுது. நாங்கள் தான் பாவம் செய்த பிறவிகள் என்றால் பரவாயில்லை; பிள்ளைகளை நினைக்கத்தான் அழுகை வருகிறது. மூத்தவள் விளக்கமுள்ளவள். பசியைத் தாங்கி என்னோடு கிடந்தாள். கடைக்குட்டிதான் அம்மா பசிக்குது, பசிக்குது எண்டும். கடவுள் நன்றாகத்தான் சோதித்து விட்டார். அத்தான் அங்கு வேலைக்கு அலைந்து ஒரு வாழைப்பழக்கடையில் வேலை ஒன்று கிடைத்து போனார். அங்கு வாழைக்குலைகளை இறக்கிக் கடைக்கு உள்ளே கொண்டுபோய் வைப்பது தான் வேலை. ஐம்பது ரூபா நாளுக்கு தாறதெண்டு சொன்னானாம். ரெண்டு நாள் போயே அத்தானாலே ஏலாம போயிட்டது. எங்க ஆமான சாப்பாடு இல்லாமல் இந்த பாரத்தை தூக்கி பறிக்க அவராலே ஏலுமா? இருவரும் சேர்ந்து ஒருவரை ஒருவர் தேற்ற அழுவோம்.

ஒரு மாதிரி, கொஞ்சம் கொஞ்சமா சனம் வீடுகளுக்கு திரும்பியது. என்றாலும் உயிருக்கு உத்தரவாதம் இல்லை. தலைக்குமேல வெள்ளம், சாண் ஏறி என்ன? முழம் ஏறி என்ன? செத்தாலும் நாலுபேருமா நிம்மதியாகச் சாவோம் என்ற நிலையில் வெளிக்கிட்டம். வீடு வளவுகள் என்ன மாதிரி? போய் இருக்கலாமோ? எல்லோர் முகத்திலும் ஒரே பீதியும், அங்கலாய்ப்பும் தான்.

காமாட்சி அன்னையின் அருளால் நாச்சிமார் கோவிலடி வந்து சேர்ந்தோம். வீடுகளுக்கு மதில் இல்லை; கூரையில்லை, எல்லாம் எம்மைப் பார்த்து கண்ணீர் வடித்தது. அத்தானின் புத்தக கடை, முதலாளியின் வீடு கூட தப்பவில்லை. எவ்வளவு நாள் உதவி செய்து இருப்பார். வீட்டை கஷ்ட நிலையால் போனாலே குறிப்பறிந்து 'என்ன ஸ்ரீ? வா! எவ்வளவு வேணுமப்பா?' என்பார். காலனின் வேலையா? கடவுளின் விதியா? அவரும் சொந்த மண் பிடிப்பில் வீட்டை விட்டு வெளிக்கிடக்கூடாது என்று இருக்க, செல்லடியால் மோசம் போய்விட்டார்.

எங்கட வீடும் தப்பவில்லை. மழை, வெயிலுக்கு குளித்து ஓவென்று திறந்து கிடந்தது. ஒரு அறையை மட்டும் சரிக்கட்டி ஒரு மாதிரியிருந்தம். உங்கட வீட்டை போய் அது கொஞ்சம் நல்ல நிலையில் இருந்தால் இருப்பம் என்று யோசித்தோம். முதலில் ஒருவரும் ரவுனுக்குள் போக அனுமதிக்கவில்லை. ஒரு மாதிரி நானும் அத்தானுமாக உங்கட வீட்டை போனோம். உங்கட வீடு என்ன அக்கா? நான் சின்னனில இருந்து வளர்ந்து கலியாணம் கட்டும் வரையும் வாழ்ந்த என்ர வீடு அல்லோ? மனம் ஒரு கணம் மூச்சு விட மறுத்தது. எவ்வளவு செழிப்பாய் இருந்த நிலபுலங்கள் கட்டாந்தரையாக கிடந்தது. வீட்டை என்ன சொல்வது, உங்களுக்கு தாங்கும் சக்தி இருக்காது. விடியவில தேத்தண்ணி கூட குடிக்காம குளித்து சாமி கும்பிட்டு எல்லாப்படங்களுக்கும் பூவைத்து அல்லவா ஒரு மிடர் தண்ணி குடிப்பியள். தம்பி கம்பஸ் படிப்புக்காக படித்த புத்தகங்கள் எல்லாம் சிதறிக் கிடந்தது. மழை எல்லாம் கூரைகளை பதம் பார்த்து இருந்தது. தம்பிக்கு சொல்லாதைங்க அக்கா... கொப்பி புத்தகம் ஒன்றை நிலத்திலே மறந்து போய் வைத்து விட்டாலும் படிப்புக்கு இப்படியா மதிப்பு கொடுக்கிறது என்று சீறிக் கொண்டு வாறவன் அல்லவா அவன்! நீங்கள் வரவே கூடாதக்கா! தாங்க மாட்டியள்... அப்பா இந்த வீடுகளை இந்த நிலையில் காணாமல் போனது நல்லது. பதினாறு வயதில அரைகுறை படிப்போடு கொழும்பில போய், மாடாய் முறிஞ்சு கட்டின வீடு அல்லவா இது?

*பிள்ளைகள் படிக்குதுகள். இரண்டாமவளை நீங்கள் மறந்தும் இருக்கலாம். எத்தனை வயதெண்டு கேக்காதீர்கள்... கேட்டால் கவலைப்படுவியள். ஏற்கனவே மூத்தவளால் வயிற்றில நெருப்புக் கொள்ளி ஒன்றை கட்டிக் கொண்டு அத்தான் திரிகிறார். இவளும் இன்றோ, நாளையோ எப்ப பெரியவள் ஆகிறாள் என்று பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அவளுக்கு ஆமான சாப்பாடு கூட கொடுக்க கொடுத்து வைக்கவில்லை. நான் முந்தி குமராக இருந்த போது நல்லெண்ணை விட்டு எல்லாம் உழுத்தம் மா கிண்டித் தருவியள். என்ர செல்வங்களுக்கு ஆமான பருப்பும் சோறுமாவது கொடுக்க ஆண்டவன் படியளந்தால் போதும். பெரியவள் இம்முறை ஏலெவல் எடுக்கிறாள். கம்பஸ் ஏதும் கிடைத்தால் மன நிம்மதியாக அவளுக்கும் இருக்கும்; எமக்கும் இருக்கும்.*

*நீங்கள் நாங்கள் படும் அவலத்தை யோசித்து, வரச்சொல்லி, உதவி செய்வதாக எழுதியிருந்தியள். நீங்களும் அங்கு வாடகைக்குத் தானே இருக்கிறியள். நாங்கள் மட்டுமா இங்க இருக்கிறம். எல்லாம் 'ஊரோடு ஒத்தது தானே', மீண்டும் இடம் பெயர்ந்து அகதியாய் வாழாமல் ஒரு நேரக் கஞ்சியோடாவது நாலுபேருமாய் ஒன்றாகக் கிடந்திட்டாப் போதும். நீங்கள் செய்த உதவிகளு....*

* * *

*''அம்மா, அம்மா என்ன எழுதிறாய் அம்மா?''*

*''அதுக்குள் 12 மணியாச்சுதோ, நான் இன்னும் உலைவைக்கேலே மோள், பசியென்றா பாணைச் சாப்பிடு மோள், இந்தா சமைக்கிறன்''.*

*''என்ன அம்மா ஒவ்வொரு நாளும் பாண் தானா?''*

*மீண்டும் பழைய நிம்மதியற்ற, நீண்ட பயணம் போகும் முடிவில்லாத வாழ்க்கையைத் தொடர குசினுக்குள் போகிறேன்.*

**1997/98ம் ஆண்டு 'இளங்கதிர்' வெளியீட்டிற்காக நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற இவ்வாக்கம் தவறுதலாக கடந்த வருட இதழில் பிரசுரமாகவில்லை. ஆகவே இவ்வருட இதழில் பிரசுரமாகின்றது.**

# காலத்தின் கல்லறையில்...

யோ.அன்ரனி யூட், 2 ம் வருடம், விலங்கு மருத்துவ பீடம்

விதையொன்று கண்விழித்து
முளைத்த புல் என் வழியில்

எப்பொழுதோ ஒரு பறவை
தற்செயலாய்த் தாங்கி வந்தோ

காற்றின் சிறகுக்குள்
சிக்கிப் பயணித்தோ

ஓடும் நீரோடு
ஓர் துளியாய்ச் சேர்ந்தலைந்தோ

வந்து இவ்விடத்தில்
தங்கியிருந்த விதை

காலம் எப்போதும்
கைகொடுக்கும் நண்பனில்லை

கொஞ்சம் ஓய்வெடுக்கக்
காத்திருக்கும் தோழனில்லை

வெய்யில் ரூபத்தில்
பொய்த்த மழைவடிவில்

அன்பில்லா நெஞ்சம்போல்
இறுகும் மண்வடிவில்

காலம் இவ்விதையைக்
கல்லறைக்கு அனுப்பியது

வட்ட வாழ்வசைவில்
காலம் மாறியது

வானம் கருவாகி
நீரை அனுப்பிவைக்க

விதையுறங்கும் மண்னோக்கிச்
சூரியனின் புன்சிரிப்பு

எல்லாம் கிடைத்த பின்னர்
எழுந்திருக்க ஏதுகுறை?

காலத்தின் கல்லறையில்
கருவறையின் சாயல்கள்

புல்லின் அந்த விதை
மீண்டும் முளைத்ததங்கு

தொலைவில் நகர்கின்ற
மாநதியின் ஜதியுடனோ

இடையிடையே கடக்கின்ற
ரயிலின் லயத்துடனோ


ஒத்துத் துடிக்கின்ற
பச்சை உயிரிலைகள்

வாழ்க்கைக்கும் வானம் போல்
முடிவேதுமில்லையென்று

காலத்தின் கல்லறையில்
கருவறை முடியுமென்று

நம்பிக்கை தந்தென்னை
நடக்க அழைக்கிறது

விதையொன்று கண்விழித்து
முளைத்த புல் என் வழியில்.




# 20ம் நூற்றாண்டை நோக்கிய மீள்பார்வையும்...

# 21ம் நூற்றாண்டை நோக்கிய எதிர்வு கூறலும் ...

# இலங்கைப் பல்கலைக்கழக வளர்ச்சிக்குத் தமிழர் பங்களிப்பு

பேராசிரியர் சி. தில்லைநாதன், தமிழ்த்துறை.

கல்வியறிவின் இன்றியமையாமையினையும் அதனை ஈட்டுவதனால் ஏற்படத்தக்க நன்மைகளையும் தமிழ் மக்கள் நெடுங்காலமாகவே அறிந்திருந்தனர்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்ற உயர்நோக்கினையும் அவர்கள் பெற்றிருந்தனர். இலங்கைத் தமிழ் மக்களும் கல்வியைப் பெருக்குவதிலும் அதற்குரிய வாய்ப்புக்களை வளர்ப்பதிலும் அக்கறையுடையவர்களாகவே இருந்து வந்தனர். இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வி வளர்ச்சிக்கான அவர்களின் பங்களிப்பும் மகத்தானது என்றே கொள்ள வேண்டும்.

சென்ற நூற்றாண்டிலே இலங்கையின் பலபகுதிகளில் நவீன முறையிற் கல்வி போதிக்கும் நிலையங்கள் நிறுவப்பட்டன. அவற்றில் தாய்மொழி மூலம் ஆரம்பக்கல்வியும் ஆங்கில மொழி மூலம் உயர் கல்வியும் போதிக்கப்பட்டது. உயர்தரக் கல்லூரிகள் பல தோன்றியமையினையும், அவை அரச திணைக்களங்களிலும், வர்த்தக நிறுவனங்களிலும் சேவையாற்றும் வாய்ப்புக்களை வழங்கியமை யினையும், அவ்வாய்ப்புக்களைத் தமிழ் மக்கள் இயன்றளவு பயன்படுத்த விழைந்தமையினையும் யாவரும் அறிவர். அரச நிர்வாக சேவைகள் படிப்படியாகச் சுதேசமயமாக்கப்பட்டதையொட்டி உயர்தரக் கல்லூரிகள் பெருகியபோது பல்கலைக்கழக மட்டத்திலான கல்வி வசதிக்கான தேவை உருவாயிற்று. இந்நிலையில் பல்கலைக்கழகப் படிப்பினை மேற்கொள்ள விரும்பியவர்கள் சென்னை, கல்கத்தா போன்ற இந்தியப் பல்கலைக்கழகங்களையோ ஒக்ஸ்போட், கேம்பிரிட்ஜ் போன்ற இங்கிலாந்துப் பல்கலைக்கழகங் களையோ நோக்கிச் செல்ல வேண்டியவராயினர். செல்வத்துட் பிறந்த சிலருக்கே அது இயல்வதாயிற்று.

இக்காலப்பகுதியிலே மேலைநாட்டுக் கல்வி பயின்ற நடுத்தர வகுப்பினரின் அரசியற் செல் வாக்கு அதிகரிக்கலாயிற்று. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இடம்பெற்ற சமய மறுமலர்ச்சி இயக்கங்களைத் தொடர்ந்து தோன்றிய அரசியல், பண்பாட்டு இயக்கங்கள் தேசியப் புனருத்தாரணம் குறித்துக் குரலெழுப்பின. இந்திய தேசிய இயக்கத்தினதும் உலக மாறுதல்களினதும் செல்வாக்குக்கு ஆட்பட்ட அவ்வியக்கங்கள், உலகமுன்னேற்றத்துக்கு இசைந்தவகையிலும் விஞ்ஞான அடிப்படையிலும் கல்வி அமைய வேண்டும் என்பதை மட்டுமன்றி நாட்டுக்கு உகந்தவகையில் பாடவிதானம் உருவாக வேண்டும் என்பதையும் வற்புறுத்தின.

1870ஆம் ஆண்டில் இலங்கைச் சட்ட சபையிலே உத்தியோகப்பற்றற்ற இலங்கைப் பிரதிநிதியாக விளங்கிய பி.குமாரசுவாமி அவர்கள் இலங்கையின் உயர்தரக் கல்வி நிலையினை மறுசீராய்வு செய்வதற்கு ஒரு குழுவினை நியமிக்க வேண்டுமென்ற பிரேரணையைச் சமர்ப்பித்தார். அதற்கிணங்கச் சட்டசபையின் உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டது. பி.குமாரசுவாமியும் வேறோர் இலங்கை உறுப்பினரும் அக்குழுவிற் பணியாற்றினர். உயர்தரக் கல்வி மூலம்தான் ஆரம்பக் கல்வியைப் போதிப்பதற்குத் தகுதி வாய்ந்தவர்களையும் உருவாக்க முடியும் என்று அவ்வுபகுழு அறிவித்தது.

1905 ஆம் ஆண்டு பிரசித்த பெற்ற கீழைத்தேய அறிஞரும் பண்பாட்டு மறுமலர்ச்சிவாதியுமான கலாநிதி ஆனந்த குமாரசுவாமி தலைமையிலே தொடக்கப்பட்ட இலங்கைச் சீர்த்திருத்தச் சங்கமானது மொழி, கல்வி, பண்பாடு முதலானவை சம்பந்தமான பொதுமக்கள் அபிப்பிராயங்களை மாற்றும் முயற்சிகளில் இறங்கியதோடமையாது பல்கலைக்கழக இயக்கத்துக்கும் ஒரு முன்னோடியாக அமைந்தது. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி, சீர்திருத்தச் சங்கம் நடாத்திய இலங்கைத் தேசிய சஞ்சிகையில் பல்கலைக்கழகத் தாபனம் பற்றியதொரு திட்டத்தை வெளியிட்டார். பண்பாட்டையும் சிந்தனா சக்தியையும் வளர்க்கும் குறிக்கோள்களை அதில் அவர் வலியுறுத்தினார்.

இந்தப் பின்னணியில் இந்நாட்டுக்கென ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஒரு முகமாக உறுதியோடு முன்வைத்த இயக்கத்தைத் தோற்றுவித்தவர் சேர். பொன்னம் பலம் அருணாசலம் ஆவர். இலங்கைப் பல்கலைக்கழக இயக்கத்தின் தந்தை எனச் சிறப்பிக்கப்படும் பெருமை அவருக்கே உரித்தாயிற்று. பல்கலைக்கழகம் வேண்டிக் கிளர்ச்சி செய்யும் நோக்கோடு 1906 ஜனவரியில் இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கம் தோன்றப் பெரிதும் பொறுப்பாயிருந்த அவரே அச் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். பல்கலைக்கழகம் ஏன் தேவைப்பட்டது என்பதையும், அது எவ்வாறு அமையவேண்டுமென்பதையும் விளக்கும் வகையில் அவர் பல கட்டுரைகளை எழுதினார். இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கச் சஞ்சிகையிலே 1906 இல் அவர் வெளியிட்ட மேல்வரும் கருத்து எதனை அவர் எதிர்பார்த்தார் என்பதை எடுத்துக்காட்டுவதாகும்.

''ஆங்கில மொழியைக் கற்பதற்கும் மேலைத்தேய பண்பாட்டைத் தமதாக்கிக் கொள்ளுதற்கும் சிறந்த வாய்ப்புக்கள் அளிப்பதுடன் எமது இளைஞர்கள் தமது சுயமொழிக்கும் தமது முன்னைய வரலாற்றுக்கும், பாரம்பரியத்துக்கும் அன்னியராக வளர்ந்து வராது பாதுகாப்பதே இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பிரதான இலட்சியமாகவிருக்கும். ஆகவே, இலங்கைப் பல்கலைக்கழகம் ஒரு கல்வித் திட்டத்தை உருவாக்கும் போது எமது சுயதேவைகளும் உள்நாட்டு நிலைமைகளுமே கல்வியின் ஆணிவேரெனக் கொண்டு அக்கொள்கையை இலங்கைப் பல்கலைக்கழகம் கடைப்பிடிப்பதோடு அதைச் செயற்படுத்தவும் முடியும்.''

இலங்கையிலே பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும் என்பது 1912 ஆம் ஆண்டிலே கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், முதலாம் உலகப் போர் வெடித்தமையின் காரணமாக அது சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. பின்னர் 1921 ஆம் ஆண்டில் இலண்டன் பல்கலைக்கழகத்தோடு இணைந்து இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி நிறுவப்பட்டது. அக்கல்லூரி அமைக்கப்படுவதற்கு முன்னின்று உழைத்தவரும், அதன் செம்மையான செயற்பாட்டுக்கான முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டவரும் சேர். பொன் அருணாசலம் ஆவர்.

பல்கலைக்கழகம் ஒன்று செயற்படுவதற்கு ஏற்றதொரு நூல்நிலையம் அத்தியாவசியமான தென்பதை யாவரும் அறிவர். இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரிக்கான நூல்நிலையம் அறையொன்றில்

ஆரம்பிக்கப்பட்டது, சேர் பொன். அருணாசலம் நன்கொடையாக அளித்த புத்தகங்களை முதலாகக் கொண்டேயாகும். இளமையிலேயே காலஞ்சென்ற அவரது மகனான பத்மநாப சேகரித்து வைத்திருந்த புத்தகங்களைப் பல்கலைக்கழகக் கல்லூரி நூலகத்துக்குச் சேர் பொன். அருணாசலம் வழங்கினார். கல்லூரியின் யூனியன் விடுதிக்கும் அவர் தாராளமாக உதவினார். சேர் குமாரசுவாமி விஞ்ஞானப் பரிசுக்கு ஏற்பாடு செய்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பல்கலைக்கழகம் அமைப்பதற்குச் சட்ட சபையில் ரூபா. 3,000,000 ஒதுக்கப்படுவதற்கு இரண்டு மாதங்கள் முன்னதாக 9.01.1924 அன்று சேர் பொன். அருணாசலம் இறைபதம் எய்தினார். இலங்கைப் பல்கலைக்கழகத்தை எங்கே அமைப்பதென்பது குறித்து அன்று நடைபெற்ற சர்ச்சையிலும் பல்கலைக்கழகம் பேராதனையில் அமையவேண்டும் என்பதற்கு ஆதரவான கருத்தினை அவர் வெளியிட்டிருந்தார். பேராதனைக்குப் பல்கலைக்கழகம் மாற்றப்பட்டபோது முதலில் அமைக்கப்பட்ட மாணவர் விடுதிக்கு அருணாசலத்தின் பெயர் சூட்டப்பட்டது.

1923 இறுதியிலே தலயாத்திரை மேற்கொண்டு இந்தியா சென்ற சேர் பொன். அருணாசலம் 1924 ஜனவரியில் மதுரையில் மறைந்த செய்தி இலங்கையை எட்டியபோது, பல்கலைக்கழகக் கல்லூரி மாணவர்களை அதன் முதல் அதிபரான ஆர். மார்ஸ் கல்லூரியின் பிரதான மண்டபத்திற் கூட்டினார். கூட்டிய அதிபர், சேர் பொன். அருணாசலம் பற்றி உணர்ச்சிகரமான நீண்டதோர் உரையினை நிகழ்த்தினார். பல்கலைக்கழகம் சம்பந்தமான அருணாசலம் அவர்களின் எண்ணங்களை அறிந்தவரும் உள்ளக் கிடக்கையை ஒன்றி உறவாடி உணர்ந்தவருமான மார்ஸ், அருணாசலத்தின் சேவைகளை நன்றிப் பெருக்குடன் நினைவுகூர்ந்தார். இலங்கைப் பல்கலைக் கழகத் திட்டத்தின் தந்தையென அருணாசலத்தைக் குறிப்பிட்ட மார்ஸ், பல்கலைக்கழகம் நிறுவுவது பற்றி ஆலோசிக்க 1906 ஜனவரி 19 ஆம் திகதி கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய சேர் பொன். அருணாசலம் முடிவுரையாகக் கூறியவையும் இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கம் உருவாக்கப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தவையுமான வாசகங்களை நினைவுபடுத்தினார்.

1906 ஜனவரியில் நடந்த கூட்டத்தில், இலங்கைப் பல்கலைக்கழகம் எந்தக் கட்டமைப்பில் உருவாக வேண்டும், இங்கிலாந்துப் பல்கலைக்கழகங்களைப் போலவா அல்லது இந்தியப் பல்கலைக் கழகங்களைப் பின்பற்றியா, எவ்வாறு போதனைகளை நிகழ்த்துவது, எவ்வாறு பரீட்சைகளை நடாத்துவது என்பன போன்ற வினாக்கள் எழுப்பப்பட்டன. அவற்றைப் பற்றியெல்லாம் அதிகம் கவலைப்படத் தேவையில்லை என்றும் காலகதியில் எமது விசேட தேவைகளுக்கேற்ற மாற்றங்களுடன் அவற்றை முடிவு செய்து கொள்ளலாம் என்றும் கருத்து வெளியிட்ட சேர் பொன். அருணாசலம், எமது மக்களின் பண்பாட்டை உயர்த்தப் பல்கலைக்கழகம் ஒன்று அமையவேண்டும் என்பதே முக்கியமானது என்பதை வலியுறுத்தினார்.

மனித நாகரிகத்தின் உயர்ந்த தரங்களுக்கு ஏற்பச் சிந்திக்கவும் செயலாற்றவும் கூடிய, உண்மையும் உறுதியும் பேணும் குடிமக்களை உருவாக்குவதே இலங்கைப் பல்கலைக்கழகத்தின் இறுதி இலக்காக இருக்க வேண்டுமென்பதைச் சேர் பொன். அருணாசலம் தன் இலட்சியமாகக் கொண்டிருந்தார் என்பதை மார்ஸ் நினைவுபடுத்தினார். கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற அந்த அஞ்சலிக் கூட்டத்தில் மார்ஸ் கூறிய மேல்வரும் வார்த்தைகள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவை.

''தனது நாட்டின் முன்னேற்றத்துக்கான அதன் முக்கியத்துவம் பற்றிய விளக்கத்துடனும் கோட்பாட்டுத் தெளிவுடனும் திடசங்கற்பத்துடனும் ஆற்றல் வாய்ந்த ஆர்வத்துடனும் பல்கலைக் கழகத்துக்காக அவரைப் போல் வாதாடியவர்கள் இந்நாட்டில் வேறு யாரும் இலர்.''

சேர் பொன். அருணாசலத்தின் சகோதரரான சேர் பொன் இராமநாதனும் பல்கலைக்கழக இயக்கத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டவராவர். அவர் இலங்கைப் பல்கலைக்கழகம் இணைந்த கல்லூரிகளைக் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கண்டியிலும் கொண்டதாக அமையவேண்டுமென்ற கருத்தை முன்வைத்தவராவர். பல்கலைக்கழகத்தை எங்கே அமைப்பது என்பது குறித்து அறிக்கை சமர்ப்பித்த குழுவிலும் அவரும் அவரோடு சட்டசபை உறுப்பினராக இருந்த எச்.ஏ.பி. சந்திரசேகரரும் இடம்பெற்றனர். அது ஒரு பல்கலைக்கழகமாக வேண்டுமென்ற நோக்குடன் யாழ்ப்பாணத்திலே பரமேஸ்வரக் கல்லூரியை நிறுவிய அவரது தொலைநோக்கு வியக்கத்தக்கதாகும். இலங்கைப் பல்கலைக் கழகத் தாபகர்களுள் ஒருவராக மதிக்கப்படும் சேர் பொன். இராமநாதனின் பெயரிலே பேராதனையிற் பெரியதொரு விடுதி அமைந்துள்ளது.

இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிலும் 1942 இல் நிறுவப்பட்ட இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் பல்வேறு துறைகளில் பணியாற்றிய தமிழர்கள் பல்கலைக்கழக விருத்திக்குப் பெரிதும் உதவியிருக்கிறார்கள். அந்தவகையில் 'அடங்காத் தமிழன்' எனப்பட்ட சி. சுந்தரலிங்கம் எமது நினைவுக்கு வருகிறார். இந்திய சிவில் சேவை, இலங்கைச் சிவில் சேவை ஆகிய இரு பரீட்சைகளிலும் சித்தியெய்தியவரும் இலங்கையின் விடுதலைக்குப் பிந்திய முதலாவது அரசாங்கத்தில் வர்த்தக அமைச்சராக விளங்கியவருமான சி. சுந்தரலிங்கம் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிற் கணிதப் பேராசிரியராகப் பெரும் செல்வாக்குடன் பணியாற்றியவராவர். யூனியன் விடுதிப் பாதுகாவலராக விளங்கிய சி. சுந்தரலிங்கமே தமிழ்ச்சங்கத்தையும் ஆரம்பித்துவைத்தார். பல்கலைக்கழகக் கல்லூரி அதிபராகவும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகவும் அவர் முயன்றமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது விஞ்ஞானப் பீடாதிபதியாகவும் முதலாவது இரசாயனப் பேராசிரியராகவும் பதவி வகித்தவர் இலண்டன் பல்க்கைல்கழக டி.எஸ்ஸி. பட்டம் பெற்ற ஏ.கந்தையா ஆவர். சி.சுந்தரலிங்கத்துக்குப் பின் கணிதப் பேராசிரியராகிய எப்.எச்.வி.குலசேகரம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது கணிதப் பேராசிரியரானார். அவருக்குப் பின் கணிதப் பேராசிரியர் பதவியை அலங்கரித்தவர் அத்துறையில் உலகப் பிரசித்திபெற்றவரும் இலண்டன் பல்கலைக்கழக டி.எஸ்ஸி. பட்டம் பெற்றவருமான சி.ஜே. எலியேசர் ஆவர். அவர் சிலகாலம் விஞ்ஞான பீடாதிபதியாகவும் விளங்கினார். பௌதிகப் பேராசிரியர் பதவியை முதலில் வகித்த இலங்கையர் ஆ.வி.மயில்வாகனம் ஆவர். அவருடன் பணியாற்றிய வி. அப்பாப்பிள்ளை பேராதனையில் பௌதிகப் பேராசிரியராகவும் நீண்டகாலம் விஞ்ஞானப் பீடாதிபதியாகவும் பெருமையுடன் விளங்கினார்.

கணிதப் பேராசிரியர் பே. கனகசபாபதி, தாவரவியற் பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியம், சிறந்த கணித ஆசிரியரென மதிக்கப்பட்ட என்.நடராசர், இரசாயனத் துறையில் டி.எஸ்ஸி. பட்டம் பெற்ற கலாநிதி எம்.ஏ.வி. தேவநாதன் முதலானோரையும் குறிப்பிட வேண்டும்.

மேலே கூறியவற்றால் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திலே பல தமிழர்கள் சிறப்புடன் துலங்கியமையையும், பாடநெறிகளையும் ஆய்வுகூடங்களையும் ஒழுங்குபடுத்தவும் உயர்த்தவும் உதவியமையையும் அறிந்துகொள்ளலாம். ஏனைய பீடங்களிலும் தமிழர் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்தன.

கலைப்பீடத்தில் தமிழ்த் துறையினைப் பொறுத்தவரை தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கான அதன் பங்களிப்புத் தனியாக நோக்கப்பட வேண்டியதாகும். பல்கலைக்கழகக் கல்லூரியில் தமிழ் பாடத்துக்குப்

பொறுப்பாயிருந்த வண. பிதா. பிரான்சிஸ் கிங்ஸ்பரி இலங்கைக்கு முழுமையான ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமென்பதை அடிக்கடி வலியுறுத்தினார். இலங்கைப் பல்ககைல்கழகத்தின் முதலாவது தமிழ்ப் பேராசிரியரான சுவாமி விபுலானந்தர் 1920 களிலிருந்தே நாட்டு முன்னேற்றத்திற்குப் பல்கலைக்கழகம் அவசியம் என்பதை வலியுறுத்தி வந்தார். சுமார் ஐந்து ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய அவரும் அவருக்குப் பின் வந்த பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையும் பல்கலைக்கழகத்தில் கீழைத்தேயக் கல்வி வளர்ச்சிக்குச் சிறந்த ஆலோசனைகள் வழங்கினர்.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் பேராதனையில் நாட்டுக்கூத்துக்களை நவீன முறையில் தயாரித்து எல்லோரது பாராட்டையும் பெற்றவர்; விஜயவர்த்தனா விடுதியின் முதலாவது பாதுகாவல ராகப் பணியாற்றியவர். பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகி அதன் விருத்திக்குப் பலவகைகளில் ஆதாரமானவர். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகச் சிறந்த முறையிற் செயலாற்றிய க. கைலாசபதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் அமைக்கப்பட்ட போது அதன் முதல் தலைவராகப் பொறுப்பேற்று வளாகம் உறுதியான அடித்தளத்தில் எழக் காலானார். இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் மத்தியில் கலைகளையும் பண்பாட்டுப்பெறுமானங்களையும் பேணி வளர்க்கும் ஆர்வத்தைத் தூண்டிய வகையில் சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் கணபதிப் பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தன், கலாநிதி கைலாசபதி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

புவியியல்துறைப் பேராசிரியர்களாக விளங்கிய க.குலரத்தினம், ஜி.ஜி.ஆர். தம்பையாபிள்ளை, மெய்யியல்துறைத் தலைவராகவும் ஹில்டா ஒபயசேகர பெண்கள் விடுதிப் பாதுகாவலராகவும் பணியாற்றிய செல்வி கே. மதியாபரணம், கல்வித் துறையில் விரிவுரையாளராயிருந்தபின் மலேசியப் பல்கலைக்கழகத்துக்குச் சென்றவரும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தைத் தோற்றுவித்தவருமான தனிநாயக அடிகள், கல்வித்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றிப் பின் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியரான ப. சந்திரசேகரம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியற் பேராசிரியராக விளங்கிய சோ. செல்வநாயகம், அங்கு இந்து நாகரிகப் பேராசிரியராக அமர்ந்திருந்த கா. கைலாசநாதக் குருக்கள், பிறநாடுகளில் பிரசித்தியுடன் திகழும் சமூகவியலறிஞர் எஸ்.ஜே. தம்பையா, அரசறிவியற் பேராசிரியர் ஏ.ஜெயரத்தினம் வில்சன், வரலாற்றுப் பேராசிரியர் எஸ். அரசரத்தினம், ஆங்கிலத் துறையிற் பணியாற்றிய கலாநிதி திரு. கந்தையா முதலானோர் கலைப்பீடத்தை அலங்கரித்து இலங்கைப் பல்கலைக்கழக வளர்ச்சிக்குப் பல வகைகளில் உதவியோராவர்.

இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஐந்து ஆண்டுகளின் பின் 1947 இல் சட்டக் கல்வித்துறை ஆரம்பிக்கப்பட்ட போது விரிவுரையாளராக நியமிக்கப்பட்ட இருவரில் ஒருவர் த. நடராஜா ஆவர். அதிதி விரிவுரையாளராகப் பணியாற்றியவர் பின்னர் நீதியரசரான கலாநிதி எச்.டபிள்யு. தம்பையா ஆவர். த. நடராஜா நீண்ட காலம் சட்டத்துறைத் தலைவராகவும் சிலகாலம் கலைப்பீடாதி பதியாகவும் திகழ்ந்தவர். அவர் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தராக விளங்குகிறார்.

மருத்துவ பீடத்தில் வெகுகௌரவம் வாய்ந்தவராக விளங்கிய பேராசிரியர் மில்றோய் போல், அறுவைச் சிகிச்சைத்துறைத் தலைவராகப் பல காலம் பணியாற்றினார். அத்துறையிற் பின்னர் புகழுடன் மிளிர்ந்த ஒருவர் பேராசிரியர் பார்-குமாரகுலசிங்கி ஆவர். ஒட்டுண்ணியியல் துறையின் முதற் பேராசிரியர் வி. சிவலிங்கம் 1956 முதல் 1964 வரை அப்பதவியில் விளங்கினார். 1958 இல் உயிரிய விரசாயனத் துறையின் முதற் பேராசிரியரான ஏ.ஏ. ஹுவர் எழுபதுகளின் மத்தியபகுதிவரை சேவை புரிந்தார். மகப்பேற்று, பெண்நோயியற் பேராசிரியர் அ. சின்னத்தம்பி சமய, இலக்கியப் பணிகளிலும் நாட்டமுடையவராக மிளிர்ந்தார். உடலமைப்பியற் பேராசிரியராக விளங்கிய பி.கே. சண்முகம்,

உடற்றொழிலியல் துறைத்தலைவராகத் திகழ்ந்த ஆர்.எஸ். வாட்சன், மருத்துவப் பேராசிரியராக மிளிர்ந்த ரி.வரகுணம் ஆகியோரையும் இங்கு குறிப்பிடாதொழிதல் சாலாது.

பல்வைத்தியத்துறையில் ஆரம்பத்தில் அமைந்த ஒரே பேராசிரியப் பதவியை அலங்கரித்தவர் பிறிற்றோ முத்துநாயகம் ஆவர். அத்துறையில் நீண்டகாலம் புகழுடன் கடமையாற்றியவர் மருத்துவ டாக்டர் பார்ட்லெட் ஆவர்.

பல்கலைக்கழகத்தின் பொறியியற் பீடத்தைப் பொறுத்தவரை தமிழர்களின் பங்களிப்புக் கணிசமானது. பொறியியற் பீடம் 1950 இல் நிறுவப்பட்ட போது நியமிக்கப்பட்ட இரு பேராசிரியர்களில் ஒருவர் ஆர்.எச்.போல் ஆவர். அவர் இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் பணிப்பாளராக விளங்கிய முதலாவது இலங்கையர். மின் எந்திரவியற் பேராசிரியராக நீண்ட காலம் பணியாற்றிய பேராசிரியர் போல் அத்துறைக்கான ஆய்வுகூடங்களை நன்கு திட்டமிட்டு நிர்மாணித்தார். பொறிசார் எந்திரவியற் பேராசிரியராக விளங்கிய ஜே.சி.வி. சின்னப்பாவும் சிறப்புப் பேராசிரியராகப் பதவிபெற்ற எஸ். மகாலிங்கமும் தமது துறை ஆய்வு கூடங்களைச் சிறந்த முறையில் அமைத்துக் கொண்டனர். வெளிக்கள அனுபவம் மிகுதியாகப் பெற்றிருந்த த.சிவப்பிரகாசப்பிள்ளை, பொறியியலில் முதலிற் பி.எச்டி.பட்டம் பெற்ற பி.செல்வநாயகம் முதலானோரின் சேவைகளும் பொறியியற் பீடத்துக்கு வாய்த்தன.

இலண்டன் பல்கலைக்கழக டி.எஸ்ஸி.பட்டம் பெற்றவரும் பொறிசார் அதிர்வு சம்பந்தமான பிரச்சினைகளை நுணுகியாராய்ந்தவருமான பேராசிரியர் எஸ்.மகாலிங்கம் ரோல்ஸ் ரோய்ஸ் நிறுவனத்தாரிடமிருந்து பெற்ற ஜெட் விமான இயந்திரம் பேராதனைப் பொறியியற்பீட வாயிலில் வைக்கப் பட்டுள்ளது. கற்பித்தலுக்கும் ஆய்வுக்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த பேராசிரியர் மகாலிங்கம் பிற ஆசிரியர்களுக்கு ஓர் இலக்காகத் திகழ்கிறார். அவரோடு உரையாடியமையின் பலனாகக் கிடைத்த பல தகவல்கள் இக்கட்டுரையாக்கத்துக்குப் பெரிதும் உதவின.

குடிசார் எந்திரவியல் துறை ஆய்வுகூடங்கள் பேராசிரியர் அ.துரைராசாவினாலும் கலாநிதி கே.ஆறுமுகத்தினாலும் திட்டமிடப்பட்டவை. சில காலம் பொறியியற் பீடாதிபதியாகச் செல்வாக்குடன் விளங்கிய பேராசிரியர் அ. துரைராசா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகி அதன் வளர்ச்சி வேண்டிக் கருமமே கண்ணாக வலிய முயற்சிகளை மேற்கொண்டார்.

விவசாய பீடத்திலும் பல தமிழர்கள் பயன்மிகு வகையிற் பணியாற்றினர். பேராசிரியர் ஆர்.ஆர். அப்பாத்துரை விவசாய பீடாதிபதியாகப் பலகாலம் செயலாற்றினார். பேராதனையிற் சிறந்து விளங்கும் விவசாய உயர்பட்டப்படிப்புக்கள் நிறுவனம் எழுவதற்குப் பிரதான காரணமாக இருந்தது பேராசிரியர் அப்பாத்துரையின் பெருமுயற்சியேயாகும். அந்நிறுவனத்தின் பணிப்பாளராகச் சிலகாலம் விளங்கிய பேராசிரியர் த.யோகரத்தினம் இன்று விவசாயப் பொருளியற் பேராசிரியராகப் பணியாற்று கிறார்.

பாராளுமன்றத்தில் சிலகாலம் பருத்தித்துறைப் பிரதிநிதியாக விளங்கிய பொன்.கந்தையா இலங்கைப் பல்கலைக்கழகத்தில் உதவி நூலகராக இருந்து சிறந்த முறையிற் பணியாற்றியமையும் பலரால் நினைவு கூரப்படுவதாகும்.

இலங்கைப் பல்கலைக்கழக இலச்சினையை உருவாக்கியவர் கலைவல்லுநரான எஸ்.சண்முக நாதன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

*கலைவல்லுநர் எஸ்.சண்முகநாத னால் வரையப்பெற்ற இலங்கைப் பல்கலைக்கழக இலச்சினை*

*பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இன்றைய இலச்சினை*

*இலங்கைப் பல்கலைக்கழகம் 1942 இல் நிர்மாணிக்கப்பட்டபோது அதன் முதலாவது துணைவேந்தரான சேர் ஐவர் ஜென்னிங்ஸ் அவர்களுக்கு உறுதுணையாக நின்று சிறந்த முறையிற் செயற்பட்டவர் பல்கலைக்கழகப் பதிவாளர் ஏ.எம்.கே. குமாரசாமி ஆவர். இந்நூற்றாண்டின் மூன்றாவது நான்காவது தசாப்தங்களிற் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்ட குமாரசாமி ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த பேச்சாளராகவும் விளங்கினார். அவரே இலங்கைப் பல்கலைக்கழகம் கொழும்பிலிருந்து பேராதனைக்கு மாறிய வேளையிலும் பதி வாளராக இருந்து அம் மாற்றத்தைத் திறமையுடன் அமுல்படுத்தினார்.*

*இலங்கைப் பல்கலைக்கழக வளர்ச்சிக்குப் பல்வேறு வகைகளிலே தமிழர் பலர் பங்களிப்புச் செய்துள்ளனர். அவர்கள் எல்லோரைப் பற்றியும் இங்கே எடுத்துக்கூறுவதென்பது இயலாதகாரியம். இது காலவரை அறிந்தவைகளையும் கேள்விப்பட்டவைகளையும் பின்னோக்கிப் பார்த்தவேளையில் நினைவுக்கு வந்தவையே இங்கு கூறப்பட்டனவெனலாம்.*

***(நன்றி: உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயப் பவள விழா மலர் 1992)***

# இருபதாம் நூற்றாண்டில் தலைமைத்துவம்: ஒரு மீள் பார்வை

பூ.சோதிநாதன், விரிவுரையாளர், பொருளியல் துறை.

## 1. முகவுரை

இருபதாம் நூற்றாண்டில் காலடி எடுத்துவைக்கும் போது வருங்கால முன்னேற்றத்திற்கு எவ்வாறான தலைமைத்துவக் கருத்துக்கள் தேவை எனச் சிந்திப்பது ஒருமுறை. இருபதாம் நூற்றாண்டுக் கருத்துக்களில் எவற்றை முற்றாக விட்டுவிட வேண்டும் எனச்சிந்திப்பது மற்றொரு முறை. இரண்டு முறைகளும் வருங்கால முன்னேற்றத்திற்கு வேண்டிய ஆரோக்கியமான சிந்தனைகளே. எனினும் ஒப்பீட்டு ரீதியில் இரண்டாவது முறைச்சிந்தனை மிக முக்கியமானது. மனிதர் தாம் நீண்ட காலமாக உருவாக்கிக் கொண்ட நடத்தை முறைகளை மாற்றுவதற்கு விரும்ப மாட்டார்கள் என்பதாலும், நீண்ட காலமாகச் சேகரித்த அறிவின் ஒரு பகுதி பிரயோசனமாக இருக்காதது மட்டுமன்றி முன்னேற்றத்திற்குத் தீங்கு விளைவிப்பதாக இருந்தாலும் அதனைத் தூக்கி எறிய விரும்பமாட்டார்கள் என்பதாலும் இரண்டாவது முறைச் சிந்தனையில் கவனம் செலுத்துவது மிக அவசியமானது. இரண்டாவது வகைச் சிந்தனையை மிகப் பலமாகச் செய்து அதனை நடைமுறைக்குக் கொண்டு வராவிட்டால் முதலாவது வகைச் சிந்தனையினால் எப்பிரயோசனமும் ஏற்படாது.

இருபதாம் நூற்றாண்டுத் தலைமைத்துவ நடைமுறைகளுக்கு அடிப்படையாக இருந்து வந்த சில முக்கிய கருத்து ரீதியான குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும். அதற்காகத் தலைமைத்துவம் ஏன் தேவைப்படுகிறது? தலைமைத்துவம் என்றால் என்ன? தலைமைத் துவத் தேவையைத் தலைவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்களா? நிறைவேற்றாது விட்டால் அதற்கான அடிப்படைக் காரணங்கள் எவை? என்ற பின்னணியில் அதனை அணுகலாம்.

## 2. தலைமைத்துவத்தின் தேவை

நிறுவனங்களையும், குழுக்களையும் உருவாக்கியதன் நோக்கம் மனிதன் தனித்துத்தன்னால் நிறைவேற்ற முடியாத சில தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பொதுவாக அவ்வாறான தேவைகளைக் கொண்ட சிலரைச் சேர்ப்பதாகும். இந்த அடிப்படையில் ஒரு நிறுவனத்தை மற்றொரு நிறுவனத்தில் இருந்து அதன் பிரதான நோக்கத்தினால் வேறுபடுத்தி அறிந்து கொள்ளலாம். உதாரணமாகப் பொருளாதார நிறுவனத்தையும் சமய நிறுவனத்தையும் எடுத்து நோக்கலாம். பொருளாதார நிறுவனத்தின் பிரதான நோக்கம் அது தன்னிடமுள்ள வளங்களை மிகத்திறமையாகப் பயன்படுத்திச் சமுதாயத்திற்கு

அது கொடுக்கக்கூடிய விலையில் பொருட்கள் சேவைகளை வழங்குவதாகும். இதனைத்தவிர ஒரு பொருளாதார நிறுவனம் தொழிற்சங்கத்தின் மூலமாக அரசியலில் ஈடுபடலாம், கல்வி, பயிற்சி முதலானவற்றை வழங்கலாம், சமய நடவடிக்கைகளில் ஈடுபடலாம். ஆனால் ஒரு சமய நிறுவனத்தின் பிரதான நோக்கம் ஒரு கொள்கையின் அடிப்படையில் தனது அங்கத்தவர்களின் ஆன்மிக வாழ்வை முன்னேற்றுவதாகும். எனினும் அதே நிறுவனம் அரசியலிலும், பொருளாதாரத்திலும் ஈடுபடலாம். எனவே நிறுவனங்களுக்கும் பிரதானநோக்கங்களும் இரண்டாந்தர நோக்கங்களும் இருக்கின்றன என்பதை அறியலாம்.

ஒவ்வோர் நிறுவனத்திற்கும் அதன் பிரதான நோக்கமே மிக முக்கியமானதாகும். அதன் இரண்டாந்தர நோக்கங்களை அது நிறைவேற்றுகிறதா இல்லையா என்பது முக்கியமில்லை. அரசியல் நிறுவனங்கள் தமது முக்கிய நோக்கமான ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டி மக்களின் பாதுகாப்பை ஏற்படுத்தி இருக்கின்றனவா, பொருளாதார நிறுவனங்கள் மக்களுக்குத் தேவையான பொருட்கள் சேவைகள் எல்லாவற்றையும் அவர்கள் கொடுக்கக்கூடிய விலையில் வழங்குகின்றனவா, சமய நிறுவனங்கள் மனிதர் தம்மை உணர்ந்து விழிப்புணர்வு பெற வைத்திருக்கின்றனவா, கல்வி நிறுவனங்கள் மனிதர்களின் வாழ்க்கையை ஒரு விளையாட்டாக எடுத்துச் சிந்தித்து மன நிறைவுடனும் அமைதியுடனும் வாழவழி வகுத்திருக்கின்றனவா என்பதே பிரதான கேள்வி. இதற்கு அவ்வந் நிறுவனங் களின் தலைவர்களே 'ஆம்' என்று பதில் கூற மாட்டார்கள். இதிலிருந்து பின்பற்றுபவர்கள் மட்டுமன்றித் தலைவர்களே தலைமைத்துவம் தோற்று விட்டது என்பதை ஒப்புக் கொள்கிறார்கள் என்று அறியலாம். இதிலிருந்து தலைமைத்துவத்தின் தேவையையும் முக்கியத்துவத்தையும் உணரலாம்.

## 3. தலைமைத்துவம்

தலைமைத்துவம் தோற்றுவிட்டது என்று கூறிப் பல கோட்பாடுகளை முன்வைப்பதில் பிரயோசனமில்லை. தலைமைத்துவம் என்னால் என்ன? அதன் அடிப்படைகள் எவை? அவ்வடிப் படைகளுக்கு என்ன நேர்ந்தது? என்று இன்றைய நடைமுறைகளின் பின்னணியில் அவற்றை அவதானிக்க வேண்டும்.

எந்த ஒரு நிறுவனமும் தனது பிரதான நோக்கத்தைச் செயற்றிறனோடும் வினைத்திறனோடும் நிறைவேற்றுவதற்கு ஒருவர் தனது குழுவினரை நெறிப்படுத்தி அவர்களுக்கு உற்சாக மூட்டுவது தலைமைத் துவமாகும். எனவே தலைமைத்துவத்துக்குரிய பிரதான பண்பு பின்பற்றுபவர்கள் அல்லது ஒரு குழுவினர் இருப்பதே ஆகும். தலைமைத்தவத்தில் தலைவருக்கும் குழுவினருக்கும் இடையே உள்ள உறவுகளும் நேரமும் பிரதான விடயங்களாகும். நிறுவனத்தின் நோக்கத்துக்காக உழைக்கும் குழுவிலுள்ள ஒவ்வொரு அங்கத்தவரோடும் தலைவர் கொண்டுள்ள உறவுகளே தலைமைத்துவத்தில் மிக முக்கியமான அம்சமாகும். அதாவது தலைவருக்கும் அவரது குழுவினருக்கும் இடையேயுள்ள உறவுகளே தலைமைத்துவத்தின் அடிப்படை என்பதை மறக்கக்கூடாது.

தலைமைத்துவம் செயற்றிறனானதாகவும் வினைத்திறனானதாகவும் இருக்க வேண்டும். செயற்றிறன் ***(Effectiveness)*** என்பது எதைச் செய்ய வேண்டும் என்று தீர்மானிப்பதோடு தொடர்புடைய தாகும். நிறுவனம் நிகழ்காலத்தில் என்ன செய்ய வேண்டும் என்றும் எதிர்காலத்தில் என்ன செய்ய வேண் டும் என்றும் தலைவர் தீர்மானிக்கவேண்டும். இவையிரண்டும் ஒன்றிலொன்று தங்கியுள்ளன. இத் தீர்மானத்தைத் திறம்பட எடுப்பதிலேயே தலைவரின் ஆற்றலை மதிப்பிடலாம். அவ்வாறான தீர்மானத்தை

எடுத்த பின்பு அதனை நடைமுறைப்படுத்தக் குறைந்த செலவில், குறைந்த நேரத்தில், குறைந்த வளங்களுடன், குறைந்த முயற்சியில் அதிகபலனைப் பெறக்கூடியவாறு செயற்படுவது வினைத்திறன் (*Efficiency*) ஆகும். செயற்றிறனான தீர்மானத்தை எடுக்காது வினைத்திறனாகச் செயற்பட முற்படுவது ஒருவர் ஓட்டப்பந்தயத்தில் பங்கு பற்றி எல்லோரிலும் பார்க்கத்திறமையாகவும், வேகமாகவும், இளைக்க இளைக்க ஒரே இடத்தில் நின்று ஓடுவதற்கு ஒப்பானது.

தலைமைத்துவத்தில் அவதானிக்கக்கூடிய மற்றொரு விடயம் நெறிப்படுத்தல் ஆகும். தலைவர்களை அவர்களது பின்பற்றுவோரிலிருந்து வேறுபடுத்தி அறிய உதவுவது இந்த நெறிப்படுத்தலாகும். ஆனால் எந்த வகையிலும் தலைவர் தனது குழுவில் இருந்து மேலானவர் என்ற பொருள் கொள்ள அது இடம் அளிக்காது. தலைவர் ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கித் தனது குழுவினரை வழிகாட்டுவது நெறிப்படுத்தலாகும். இந்த ஒளிமயமான எதிர்காலத்தைக் கற்பனையில் காணும் திறம் (*Visionary ability*) தலைவரிடம் இருக்க வேண்டும்.

எதிர்காலக் காட்சியின்றித் தலைவர் தமது குழுவினரை நெறிப்படுத்த ஆரம்பித்தால் குருடனைக் குருடன் வழிகாட்ட முனைவது போல இறுதியில் எல்லோரும் பாழ் குழியில் விழவேண்டி நேரிடும்.

ஊக்கமூட்டுவது தலைமைத்துவத்தின் மற்றொரு அம்சமாகும். தலைவர் தனது குழுவினரின் நடத்தையை நிறுவன நோக்கத்திற்கு ஏற்ப மாற்றி அமைப்பதற்காக அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவது ஊக்கமூட்டலாகும். ஊக்கமூட்டுவதற்குப் பணம், பதவியுயர்வு முதலானவற்றையோ தண்டனை, மிரட்டல், பதவியிறக்கம் முதலானவற்றைப் பயன்படுத்துவதாகவே அது கருதப்படுகிறது. ஆனால் அச் செல்வாக்குச் செலுத்துவதன் மூலம் தற்காலிகமான நடத்தை மாற்றத்தை ஏற்படுத்த முடியுமே தவிர தலைவருக்கும் அவரது குழுவினருக்கும் இடையே நிரந்தரமான நல்ல உறவுகளை விருத்தி செய்ய முடியாது.

## 4. தலைமைத்துவ உறவு

தலைவருக்கும் அவரது குழுவினருக்கும் இடையே நல்ல உறவுகள் மலருவதற்குக் குழுவினர் தலைவரைச் சிறிதளவு கூடச் சந்தேகமின்றி நம்ப வேண்டும். அவ்வாறு அவரை நம்புவதற்குக் குழுவினரிடத்திலே எந்தவிதமான சிறப்பான பண்பும் தேவையில்லை. ஆனால் தலைவர் ஒரு நல்ல மனிதனாக இருந்தாலே அந்த நம்பிக்கையைப் பூரணமாக ஏற்படுத்த்ப்போதுமானது. மனிதனாக இருப்பதென்றால் ஒருவர் பல்வேறு வகையில் பிளவுபட்டவராக அன்றி முழுமையானவராக இருப்பதைக் குறிக்கும்.

முழுமையான மனிதன் பொய் சொல்ல மாட்டான். பொய் சொல்லிக்கொண்டு பொய் சொல்லவில்லை என்று நிரூபிக்கக் கடும் பிரயத்தனம் எடுப்பவன் முழுமையான மனிதன் அல்லன். அவனில் ஒருபகுதி பொய்சொல்லுகிறது; மற்றப்பகுதி பொய் சொல்லவில்லை என்று நிரூபிக்க எத்தனிக்கிறது. இந்த விதமான நடத்தை, தலைவன் தான் குறைமனிதனாகத்தான் இருக்கிறேன் என்பதைச் சொல்லாமற் சொல்லுகிறது. இதிலுள்ள இன்னொரு விசித்திரம் என்னவெனில் பொய் சொல்லுகின்றவருக்கே தான் பொய் சொல்லுகின்றேன் என்பது தெரிவதில்லை. பொய்யை நியாயப் படுத்துகிற வழியில் தொடர்ந்தும் சிந்தித்துக் கொண்டிருப்பதால் அவர் உருவாக்கியுள்ள தற்பாதுகாப்புப் பொறிமுறை அவரைத் தான் பொய்யன் என்று உணராதபடி தடுத்துவிடும். முழுமையான மனிதன் உண்மை சொல்லுவது முதலாக எளிமையான பண்புகள் அனைத்தையும் உள்ளவனாக இருப்பான்.

பண்புள்ள தலைவன் தனது குழுவிலுள்ள ஒவ்வொருவரது முன்னேற்றத்திலும் அக்கறை யுடையவனாக இருப்பான். வருங்காலத்தில் பணம், பொருள், நிலம், உடலுழைப்பு முதலான வேறு எந்தச் சொத்துக்களையும் விட அறிவு மூலதனம் **(Intellectual Capital)** மிகப் பிரதானமாக விளங்கப் போகிறது. எனவே சமூகத்தின் செல்வமான அறிவு மூலதனம் செழித்து வளர வேண்டுமாயின் தலைவர் எதிர்காலக் காட்சியில் தனது பொறுப்பை முற்றும் உணர்ந்தவராக இருக்க வேண்டும்.

மேற்கூறிய பண்புகள் தலைவரிடம் இருந்தால் நிறுவனத்தில் நல்ல உறவுகளை உருவாக்கு வதற்கு எவ்வித விசேட கெட்டித்தனமோ ஆற்றலோ தேவையில்லை. நல்ல உறவுக்கு அறிவும், ஆற்றலும் இடையூறாகக் கூட அமையலாம். தலைவர் தனது அறிவைக் கொண்டு மிகக்கெட்டித்தனமாக ஒரு பொய்யை மெய்யென நியாயப்படுத்திக்காட்டலாம். அந்த அறிவும் ஆற்றலுமே தலைவர் மீதுள்ள நம்பிக்கையை இழக்கச் செய்து விடும். உண்மையில் தலைவருக்கும் அவரது குழுவினருக்கும் இடையே யுள்ள உறவு ஒரு இதயத்துக்கும் மற்ற இதயங்களுக்கும் இடையேயுள்ள தொடர்பிலேயே முற்றும் தங்கியிருக்கிறது.

## 5. தலைமைத்துவத்தோல்விக்கான பிரதான காரணங்கள்

### (அ) அதிகாரம்

பேட்டன் ரசல் என்ற தத்துவஞானி மனிதன் அதிகாரத்தைப் பெறவும், அதனைத் தன்கையில் வைத்திருக்கவும், மற்றவர்கள் மீது அதனைப் பிரயோகிக்கவும் எல்லையற்ற ஆவல் உடையவனாக இருக்கின்றான் என்கிறார். உண்மையில் பரிணாம வளர்ச்சியில் சமூக அமைப்பாக வாழும் உயிரினங் களான தேனீ, எறும்பு, குரங்கு முதலியன குழுவாக இயங்குகின்றன. அவற்றில் ஒரு குழுவில் ஒன்று அக்குழு மீது அதிகாரம் செலுத்துவதைக் காணலாம். குழுவாக வாழும் மனிதனது நிறுவனங்களில் காலத்தால் மூத்த பெரிய நிறுவனம் அரசும் அதன் படை அமைப்புமேயாகும். அந்த அமைப்பிலேயே ஆணையிட்டு மற்றவர்களைக்கட்டுப்படுத்திப் பணியவைக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்த மனிதன் ஆரம்பித்திருக்கின்றான். அன்றிலிருந்து இன்றுவரை அவ்வாறான அதிகாரம் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. உயிரியல் ரீதியாக விலங்குகளின் கூட்டு வாழ்க்கைக்கு அதிகாரம் தேவை எனினும் விலங்குகளில் மிக முன்னேற்றமடைந்துள்ள மனிதனுக்கும் அவ்வாறே அதிகார அமைப்பு தேவையா எனச் சிந்திக்கத்தூண்டுகின்றது.

அதிகாரம் தன்மீது செலுத்தப்படுவதை எந்த ஒரு மனிதனும் விரும்ப மாட்டான். விருப்ப மில்லாது விட்டாலும் தனது தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத் தனது சுதந்திரத்தை ஒருவரிடம் கொடுத்து விட்டு அவர் சொல்லுகிற படி நினைக்கவும், நடக்கவும் இணங்குகின்றான். இந்த உறவே இன்றுள்ள எல்லா வகை நிறுவனங்களிலும் காணக்கூடியதாக உள்ளது. விருப்பமில்லாத வகையில் உருவாகியுள்ள இந்த உறவு உண்மையானதுமல்ல ஆரோக்கியமானதுமல்ல.

முன்னர் குறிப்பிட்டது போல முழுமையான மனிதனாக இருக்க முடியாத தலைவர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தித் தமது குறைபாடுகளை மறைத்து மற்றவர்களைக் கட்டுப்படுத்துகின்றனர். அதிகாரம் இருந்தும் அதனை தவறாகப் பயன்படுத்தாத போதே தலைமைத்துவத்திற்கு இருக்க வேண்டிய உண்மையான உறவுமுறை நிலவும். அங்ஙனம் அதிகாரத்தைப் பயன்படுத்தாததாலேயே தலைமைத்துவம் தோற்றுப்போகிறது.

## (ஆ) தலைவரின் நிலை

பெரும்பாலான தலைவர்களுக்குப் பதவியினால் அதிகாரம் கிடைக்கின்றது. அறிவு, அனுபவம், காந்தசக்தி முதலிய அடிப்படைகளிலிருந்து வரும் அதிகாரத்தைவிட இன்றைய நிறுவன அமைப்பு முறையில் பதவியினால் அதிகாரம் பெறுவது முக்கிய தோற்றப்பாடாக உள்ளது. எந்த வகையிலாவது அதிகாரம் பெற்ற தலைவர் தனது குழுவினரை விடத் தான் ஒப்பற்ற நிலையில் இருப்பதாகக் கருதிக்கொள்கின்றார். அது மட்டுமன்றித் தலைவர் மற்றவர்களை விட எல்லாம் வல்லவரென்றும், அவரே எல்லாவற்றையும் நிறைவேற்றுகின்றார் என்றும் அவருக்குப் புகழ்மாலை சூட்டி அவரை முன்னிறுத்தும் சிந்தனையும் நீண்ட காலமாகவே சமூகத்தில் இருந்து வருகிறது. தலைவர் ஒரு சிறந்த செயற்றிறனான தீர்மானத்தை எடுத்தால் உண்மையில் அது முற்றும் அவருடையதென்றே நம்பும்படி எம்மை நாமே எமது சிந்தனை மரபினால் ஆக்கிவைத்திருக்கின்றோம்.

ஒரு தலைவருடைய கருத்து அவருடைய தலைக்குள் இருந்து மட்டும் தெய்வீகமாகத் தோன்றுவது அல்ல. அது அவர் தமது குழுவினருடன் உரையாடுவதிலும், அவர்கள் தெரிவிக்கின்ற ஆலோசனைகளிலும், மற்றவர்களுடன் அவர் பழகிப் பெற்ற அனுபவத்திலும், அவரது அறிவிலும் இருந்து வருவதாகும். எனவே அந்த அறிவு அவருடைய தனிச் சொத்து அன்று. அது குழுவினதும், சமூகத்தினதும் பொதுச் சொத்தாகும். அவ்வாறாயின் தலைவருக்கு முக்கியத்துவம் வழங்குவதனால் அவரிடம் இருந்து அதிகம் எதிர்பார்ப்பதையும், குழுவினர் பொது நோக்கத்தை நிறைவேற்றுவதில் பெரும் பகுதியைத் தலைவருக்கு விட்டுத் தாம் தப்பிக்கொள்வதையுமே காண முடியும். மேலும் தலைவருக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவதிலிருந்து குழுவினர் தம்மைத்தாமே தாழ்த்திச் சிந்தித்து வந்திருக்கின்றனர்.

இந்தச் சிந்தனை மரபின் அடிப்படையும் போர்ப்படை அதிகார அமைப்பில் இருந்து தான் வந்ததாகும். அங்கு தலைவனின் கீழ் உள்ளவர்கள் ஆயுதத்தோடு இருப்பதால் எந்த நேரமும் அத் தலைவனை ஒழித்துக்கட்டி அப்பதவியைக் கைப்பற்ற முயலலாம். அவர்களுக்கு அவ்வாறான எண்ணம் ஒருபோதும் எழாமல் இருக்கும் சிந்தனையைக் குழுவினருக்குப் பதிய வைக்கும் முறையில் கட்டாயமாகத் தலைவனுக்கு முக்கியத்துவமும் குழுவினருக்குக் கீழ்ப்படிவும் வற்புறுத்தப்படுகிறது. அந்தப் படை அமைப்பின் உட்கிடையான கருத்து அங்கே தலைவருக்கும் குழுவினருக்கும் இடையேயுள்ள உறவு சந்தேகத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும்.

அதே அதிகாரம் - ஆணை - நடத்தை - கட்டுப்பாடு என்ற முறையினை எல்லா வகை நிறுவனங்களுக்கும் பயன்படுத்த முயன்றது 20 ஆம் நூற்றாண்டில் விட்ட மாபெரும் தவறாகும். ஆனால் அதனாலேயே இன்றும் நிறுவனங்களின் தலைவர்கள் தமது பதவியைக் குழுவினரில் எவராவது கவிழ்த்து விடுவாரோ என்ற சந்தேக நிலை உருவாகியுள்ளது. எனவே சந்தேகத்தின் அடிப்படையில் அமையும் உறவு முறையும் நல்ல பயனைத் தரும் என்று எதிர்பார்க்க முடியாது. அதனால் நிறுவனம் தனது நோக்கைச் செயற்றிறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றமுடியாது தலைவர்கள் தோல்வி போகின்றனர்.

## (இ) ஊக்க மூட்டல் கருவிகள்

குழுவினரை ஊக்க மூட்டவென இருவகையான கருவிகள் முகாமை இலக்கியங்களில் குறிக்கப் படுகின்றன. ஒன்று வெகுமதி, பாராட்டு, பரிசில், பதவியுயர்வு முதலாயின. மற்றது தண்டனை, மிரட்டல், பதவியிறக்கம் முதலாயின. இந்த ஊக்கமூட்டல் கருவிகளின் பயன்பாடும் குழுவின் உறவு முறையிலே யுள்ள குறைபாட்டை எடுத்துக்காட்டுகின்றது.

பொது நோக்கத்தை நிறைவேற்றி அதனால் ஒவ்வொருவரும் பலன் பெறலாமாயின் ஊக்க மூட்டலும், அதற்கான கருவிகளும் தேவையில்லையன்றோ. முன்பு குறிப்பிட்டது போன்ற பல்வேறு காரணங்களினாலும் உறவுமுறை சீர்கெட்ட போது நிறுவனத்தை நடாத்துவதற்கு வழிதேவைப்பட்டது. நிறுவன நோக்கத்திற்கு உழைக்காமல் விட்டால் தண்டனை, மிரட்டல், பதவியிறக்கம் என்பன வழங்கப் பட்டன. அவ்வாறு தண்டனை பெறுபவர் தலைவருக்கு எதிராகச் சதிகள் செய்து அவரைப் பதவி நீக்கு வதிலும், நோக்கத்திற்குப் பங்களிக்காத வகையில் செயற்படுவதிலும் ஈடுபடுவார்.

ஊக்குவிப்பு வழங்குவதற்குச் சிலரை தெரிவு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் அளவீடுகள் யாவற்றிலுமே சில குறைபாடுகள் இருக்கின்றன. இத்துடன் தலைவருக்கு எதிராக இயங்குபவரைப் பற்றிய தகவல்களைப் பெறப் பெரும்பாலும் நம்பகமான சிலரை வைத்திருக்கத் தலைவர் விரும்புவார். அப்படிப்பட்ட சிலர் ஊக்குவிப்புக்களைப் பெற்றால் அங்ஙனம் அவற்றைப் பெறுபவர்களுக்கும் பெறாதவர்களுக்கும் இடையே கருத்து வேற்றுமையும் பிணக்குகளும் தோன்றி நிறுவன உறவுமுறை மேலும் பலவீனம் அடைகின்றது. எனவே ஊக்கமூட்டல் கருவிகள் நிறுவன உறவு முறையைச் சீர்குலைத்துத் தலைமைத்துவத்தைத் தோல்வியடையச் செய்யக்கூடும்.

### (ஈ) ஊழல்

நிறுவன அமைப்பு முறை பிரமிட் அடுக்கமைப்பை ஒத்தது. அதில் ஒருசில உயர் பதவிகள் மட்டுமே உண்டு. அப்பதவிகளுக்காகப் போராடுபவர்களோ எண்ணற்றவர்கள். மேற்காட்டியபடி உறவு முறைகளில் சீர்குலைவு இருக்கும் போது போட்டி அடிப்படையில் முன்னேற முடியாதவரும், அதனை விரும்பாதவரும் ஊழல்களில் ஈடுபட்டு அப்பதவியைக் கைப்பற்ற முனையலாம். அதனால் மேலும் தலைமைத்துவ உறவுகள் பாதிப்படைகின்றன.

### (உ) செயற்றிறனற்ற வினைத்திறன்

தலைமைத்துவத்தின் உயிர் நாடியே மனித உறவுகள் தான். அவ்வுறவுகள் சீர்குலைந்தால் அன்றாட அலுவல்களைச் செய்வதே கடினமாகி விடும். தலைவர்கள் அவ்வாறான நிலைமைகளில் உறவுகளைச் சீர்திருத்துவதிலும் நெருக்கடிகளைச் சமாளிப்பதிலும் தமது நேரத்தைச் செலவழிக்கவேண்டி இருப்பதால் அன்றாடக்கடமைகளை மட்டும் முடிந்த வரையில் கவனிக்கவேண்டிய நிலை உருவாகும். இதனால் தலைவர் நிறுவனத்தை ஒளிமயமான எதிர்கால சூழல் ஒன்றுக்கு இட்டுச் செல்ல முடியாத நிலை தோன்றும். எதிர்கால நோக்கில்லாத உடனடிநோக்கை நிறைவேற்றக் கடுமையாக உழைத்தாலும் அதிகம் பலன் வரப்போவதில்லை. எதிர்கால வெளிச்சமும் சமகால நலனும் ஏற்படுத்தாத தலைவர்களினால் ஒரு நலிந்த சமூகத்தையே தோற்றுவிக்கமுடியும்

## (6) முடிவுரை

கணனி, லேசர், கொம்சற், சூரியசக்தி, உயிர்ச்சக்தி முதலான பல புதிய விடயங்களோடு இருபத்தோராம் நூற்றாண்டு பிறக்கலாம். ஆனால் அறிவு மூலதனமே எதிர்காலத்தில் ஒரேயொரு பெறுமதிமிக்க சொத்தாக அமையப்போகிறது. அதனை எல்லோரும் பெறவும் எல்லோரும் அதன் பலன்களைப் பகிர்ந்து கொள்ளவும் புதிய வகை நிறுவனங்களும், அவற்றில் சிறந்த முறையிலான உறவு முறைகளும், அவற்றை ஏற்படுத்தக்கூடிய தலைமைத்துவப் பண்பாடும் தேவையாகும். அது முற்றும் பழையன கழிதலிலேயே தங்கியிருக்கின்றது எனலாம்.

# சுதந்திர இலங்கையின் அரசியலமைப்புகளில் மனிதவுரிமைச்சட்டங்கள் - ஓர் ஒப்பீட்டாய்வு

***(சிறப்பாக பொதுஜன ஐக்கிய முன்னணியினால் முன் வைக்கப்பட்டுள்ள உத்தேச அரசியலமைப்பில் மனிதவுரிமைகள் - ஐப்பசி 1997)***

**ஆறுமுகம் யோகராஜா B.A. (Hons), உதவி விரிவுரையாளர், அரசறிவியற்றுறை.**

## *அறிமுகம்:-*

*பெரும்பாலான இன்றைய சம்பாசணைகளில் உத்தேச அரசியலமைப்புப் பற்றி அறிவதில் மக்கள் ஆர்வமாக இருக்கின்றார்கள் என்பதைத் துணிந்து கூறலாம். ஒரு நாட்டில் வாழும் மக்களின் நாளாந்த வாழ்க்கையில் அந்த நாட்டின் அரசியலமைப்பு நேரடியாகவும், மறைமுகமாகவும் பிரதான பங்கு வகிக்கின்றது. எனவே அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அரசியலமைப்பு (ஐப்பசி 1997) வரைபைப்பற்றி மக்கள் அதிகம் பேசுவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.*

*குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் எந்தவொரு நாட்டிலும் ஒரு தனி மனிதனுக்குக் கட்டயாமாக இருக்க வேண்டிய உரிமைகளாகும். அடிப்படை மனித உரிமைகளாகக் கருதப்படுகின்ற இவ்வுரிமைகள், மனித உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சாசனத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படல் வேண்டும். உத்தேச யாப்பில் அடிப்படை உரிமைகளுக்கு விசேட இடம் கொடுக்கப்பட்டுள்ளது. வரலாற்றில் முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு இந்த அடிப்படை உரிமைகள் வியாபித்துள்ளன. இந்த யாப்பின் மூலமாக புதிதாக ஒரு சில உரிமைகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. தற்போது காணப்படுகின்ற ஒரு சில சாதாரண உரிமைகளை நாட்டின் அடிப்படைச் சட்டங்களாக யாப்பில் உள்ளடக்குவதன் மூலம் அவை அடிப்படை உரிமைகளாக உயர்த்தப்பட்டுள்ளன. அதைப் போலவே குறைக்கப்பட்டுள்ளமையும், உரிமைகள் மீறப்பட்டோர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான துறைகள் மிகவும் விரிவாக்கப்பட்டுள்ளமையும் விசேட இலட்சணங்களாகக் குறிப்பிடலாம். ஜனநாயகத்தில் பேசப்படுகின்ற முக்கியமான கோட்பாடாக அமைவது உரிமைகளாகும். உலகிலுள்ள எல்லா அரசியலமைப்புகளிலும், அவற்றில் அடிப்படை உரிமைகள் தொடர்பான அத்தியாயம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. எனவே, உத்தேச அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் பற்றிய ஏற்பாடுகளையும் அவற்றின் சிறப்புகளையும் ஆராய்வது இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.*

## *மனித உரிமைகள்:-*

*ஒரு பிரசை சமுதாயத்தில் தனக்குரிய ஆளுமையை முழுமையாக அனுபவித்து வாழ்வதற்குத் தேவையான முன் நிபந்தனைகளின் கூட்டமே மனித உரிமை எனப்படுகின்றது. மனித உரிமைகளை எவரும் இலவசமாக வழங்கவுமில்லை, வழங்கப்போவதுமில்லை. இயற்கை நியதிக்கிணங்க ஒரு மனிதன் பிறக்கின்ற போதே வாழ்வதற்கான பல உரிமைகள் இயற்கையாக அவனுக்கு உரித்தாக வேண்டும்.*

பிறவிகள் அனைத்திலும் மேலான பிறவியாகக் கருதப்படும் மனிதனுக்கு இயற்கை இவ்வாறாகப் பெறுமதி மிக்க உரிமைகளை அனுபவிக்கும் தகைமையை வழங்கி உள்ளது. அவ்வாறானவற்றை மனித உரிமை களென அறிமுகப்படுத்த முடியும். இருப்பினும், மனித வரலாற்றின் சகல நிலைகளிலும், இவ்வியற்கை யாக அனுபவிக்க வேண்டிய உரிமைகள் சகலருக்கும் ஒரே விதமாக அவ்வச் சமூகங்களால் அளிக்கப்பட வில்லை. இதன் விளைவாக சமூக வாழ்க்கையானது துன்பம், துயரம் என்பவற்றின் நிலைக்களமாக அமையலாயிற்று. மனித இனத்திற்குரித்தான வலிமையின் விளைவாக மனிதன் இத்தகைய துன்பகரமான அனுபவங்களிலிருந்து விடுபடுவதற்கு தன் வரலாறு முழுவதிலும் நிரந்தர முயற்சியில் ஈடுபட்டான்.

அரச இராணுவமும் பொலிசும் நீதியையும் நியாயத்தையும் நிலை நாட்டும் பாதுகாப்புப் படையாக இல்லாமல் அடக்குமுறைக் கருவியாக மாறியபோது மனித உரிமைகள் மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டன. அரசென்பது ஓர் சமூக உடன்படிக்கை. மக்கள் தமது ஆட்சியாளர்களுக்கு ஒப்படைக்கும் அதிகாரத்தை, அவர்கள் மனித உரிமைகளைப் பேணும் வகையிலும் பயன்படுத்துவர் என்பது அவர்களின் நம்பிக்கை. இருப்பினும் ஆட்சியாளர்கள் எப்போதும் தமது கடமையை ஒரே மாதிரியாக மேற்கொள்வதில்லை. பதிலாக அவ்வப்போது மனித உரிமைகளை மீறும் வகையில் செயற்படுவதும் உண்டு. சமூகத்தில் மதிப்புக்குரிய உயர் பதவிகள் வகுப்போர், உயர் குழாம் வர்க்கத்தினர் ஆகியோரால் சமூகத்திற்கு நிரந்தரமான சேவை கிட்டுவதில்லை. அவர்கள் தமது பதவி அதிகாரங்களை மனித உரிமைகளுக்கு எதிராகப் பயன்படுத்திய சந்தர்ப்பங்களும் உண்டு.

அறிவாளிகள், தத்துவஞானிகள், குழுக்கள், நிறுவனங்கள் ஆகியோர் சமுதாயத்தில் மனித உரிமைகளை நிலை நாட்டுவதற்காக வரலாற்றில் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் போராட்டங்களை நிகழ்த்தியதுடன் குரல் எழுப்பியும் உள்ளனர். இவர்கள் முன்வைத்த கருத்துக்கள் நிரந்தரமான பெறுமதி மிக்கவையாயிற்று. அறிவும் விழிப்புணர்வும் மிக்க மக்கள் மத்தியில் இக்கருத்துக்கள் பெருமதிப்பையும் வரவேற்பையும் பெற்றன. எனவே, தொன்றுதொட்டுப் பெருக்கெடுத்து வந்த இவ்வுரிமைப் போராட்ட மானது மென்மேலும் முன்னேற்றம் காணலாயிற்று. இப்போராட்ட ஒலியானது இயற்கையாகவே மனிதாபிமானத்தின் ஒலியாகப் பரிணமிக்கலாயிற்று. இப்போராட்டத்தின் பெறுபேறாகவே இன்று யாப்புக்கள், உடன்படிக்கைகள் என்பவற்றில் கூட மனித உரிமைகள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

மனித உரிமை என்பது சமூகத்தில் ஒரு நபர் அதி கூடிய கௌரவத்துடன் வாழ்வதற்குத் தேவையான நிபந்தனையாகும். இந்நிபந்தனைகளைக் காக்கக்கூடிய சக்தி வாய்ந்த ஒரு நிறுவனமிருந்தால் மட்டுமே நிபந்தனைகளால் கிடைக்கும் நிவாரணத்தை முழுமையாக அனுபவிக்க முடியும். அத்தகைய சக்தி வாய்ந்த நிறுவனமாக அரசே விளங்க வேண்டும். இவ்வுரிமைகளை அடிப்படைச் சட்டத் தொகுப்பில் அதாவது, யாப்பில் சேர்த்துக் கொண்டதனூடாக அரசு அதனைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. மனித உரிமையானது அடிப்படைச் சட்டமாகவே யாப்பிலே சேர்த்துக் கொள்ளப் பட்டால், அது அடிப்படை உரிமையாகப் பரிணமிக்கும். இதற்கிணங்க அடிப்படை உரிமை என்பது அடிப்படைச் சட்டங்களாகக் கொள்ளப்பட்ட மனித உரிமைகளாகும்.

## சோல்பரி யாப்பு - 1947

சுதந்திர இலங்கையின் முதலாவது அரசியலமைப்பான சோல்பரி யாப்பில் மனிதவுரிமைகள் பற்றிய சரத்து எதுவும் உள்ளடக்கப்படவில்லை. இது இந்த யாப்பில் காணப்பட்ட பாரிய குறைபாடாகும். சிறுபான்மையினரின் உரிமைகளைப் பேணும் வகையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 29 IIஆம் சரத்தின் மூலம் நிவாரணம் தேடுவது சிக்கலான விடயமாக இருந்தது. 1947ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலின் போது இலங்கைப் பிரசைகள் அனைவருக்கும் வாக்களிக்கும் சுதந்திரமிருந்தது. அத் தேர்தலின் போது தோட்டப் பகுதிகளிலிருந்து பலர் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாறு தெரிவு

செய்யப்பட்ட உறுப்பினர்கள், அவ்வேளை நடைமுறையிலிருந்த அரசியற் கொள்கைக்கு எதிரான அரசியலில் ஈடுபாடு கொண்டவர்களாக விளங்கினர். இது தமது நிலைப்பட்டிற்குப் பெருஞ் சர்ச்சையாக இருப்பதை உணர்ந்த அரசு, தேர்தல் சட்ட மூலத்தை மாற்றிப் பிரஜா உரிமைச் சட்டத்தை அமுல்படுத்தி இந்திய வம்சாவளியினரான தோட்டப்பகுதி மக்களின் வாக்குரிமையை ரத்துச் செய்தது. இவ்வாறு தொடராகப் பல அரசியல் ரீதியான அநீதிகளை, இவ்வரசியல் திட்டம் நடைமுறையிலிருந்த சுமார் கால் நூற்றாண்டுப் பகுதியில் சிறுபான்மை மக்கள் எதிர் கொண்டனர்.

## முதலாம் குடியரசு அரசியல் திட்டம் - 1972

அடிப்படை உரிமைகள் பற்றிய சரத்தொன்று இலங்கையின் அரசியலமைப்பில் முதன் முதலில் சேர்த்துக் கொள்ளப்பட்டது 1972 ம் ஆண்டு முதலாவது குடியரசு யாப்பிலேயே. இலங்கையில் மனித வுரிமைகள் பற்றிய மிக முக்கியமான மைல்கல்லாக இதனைக் குறிப்பிடலாம். இருப்பினும் மனித உரிமை கள் மீறப்படுகின்ற போது செயலாற்றுவதற்கான விசேட நீதிமன்ற அதிகாரங்கள் பற்றி இந்த யாப்பில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை. மனித உரிமை மீறலுக்கிலக்காகும் நபரொருவர் சட்டத்தின் உதவியை நாடலாமெனக் குறிப்பிட்ட போதிலும் 1978 ம் ஆண்டு யாப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போன்று, குறிப்பாக, இந்த நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டுமெனக் குறிப்பிடப்படவில்லை. எவ்வாறாயினும் மனிதவுரிமைகளை இலங்கையில் அறிமுகப்படுத்திய பெருமை 1972 ஆம் ஆண்டு யாப்பையே சாரும்.

## இரண்டாம் குடியரசு யாப்பு - 1978

1972 ஆம் ஆண்டு யாப்புடன் தொடர்புடைய வகையில் மனிதவுரிமைத்துறையில் குணாம்ச ரீதியில் மென்மேலும் அபிவிருத்தியைக் கொண்ட யாப்பாக இரண்டாம் குடியரசு யாப்பைக் குறிப்பிட லாம். 1972 ம் ஆண்டு யாப்பில் குறிப்பிடப்படாத பல்வேறு உரிமைகள் 1978 ஆம் ஆண்டு யாப்பில் உள்ளடக்கப்பட்டது. அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்ற போது அவர்களுக்கு நிவாரணம் பெறுவதற் குத் தேவையான நீதிமன்ற அதிகாரங்கள் முன்னரிலும் பார்க்க கூடுதலாக யாப்பினுடாகவே வழங்கப் பட்டிருந்தது. மனிதவுரிமை மீறலுக்குட்படும் நபருக்கும் உயர் நீதிமன்றத்தின் உதவியை நாடும் அவகாசம் கிடைத்தது. இருப்பினும் 1972 ஆம் ஆண்டு யாப்பில் குறிப்பிடப்பட்டிருந்த வாழ்தலுக்கான உரிமை 1978 ஆம் ஆண்டு யாப்பில் உள்ளடக்கப்படவில்லை. அவ்வாறே ஜனாதிபதி, பிரசை ஒருவரின் மனித உரிமைகளை மீறும் வகையில் செயற்பட்டால், அதன் பொருட்டு எந்த நீதிமன்றத்திலும் அனுசரணை கிடைக்காமை உட்பட பல்வேறு குறைபாடுகள் அந்த யாப்பிற் காணப்பட்டது.

## உத்தேச அரசியலமைப்பில் மனித உரிமை - 1997

உத்தேச அரசியலமைப்பின் மூன்றாம் அத்தியாயத்தின் கீழ்க்காட்டப்பட்ட அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும் பற்றிய வரைவிலக்கணம் ''ஒவ்வோர் ஆளும், உயிர் வாழ்வதற்கான உள்ளார்ந்த உரிமையைக் கொண்டிருப்பர். ஆள் எவரதும் உயிர் வாழ்வு எதேச்சையாகப் பறிக்கப்படுத லாகாது'' - 1978 ஆம் ஆண்டின் யாப்பில் உயிர் வாழ்வு பற்றிய இந்த உரிமை குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. உரிமைகளை அனுபவிக்கவோ கடமைகளை ஈடேற்றவோ உயிர் வாழும் மக்கள் இருக்க வேண்டும். எனவே இந்த உரிமையை வெளியிட்டமை உத்தேச அரசியலமைப்பின் முக்கியமான இலட்சணமாகும்.

உத்தேச அரசியலமைப்புச்சட்டவரைவில் சித்திரவதைகளிலிருந்து அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துகைக்குட்படுத்தப்படுவதிலிருந்து மீளுவதற்கான உரிமை

வழங்கப்பட்டுள்ளது சட்டத்துக்கு முரணான வகையில் கைது செய்யப்படுவதோ மறியற் தண்டனைக் குட்படுவதோ, உடலியல் ரீதியாகத் தடுத்து வைக்கப்படுவதோ, எதிர்காலத்தைப் பாதிக்கும் வகையிலான தண்டனைக்குட்படுத்துவதோ தடைசெய்யப்பட்டுள்ளது.

உத்தேச அரசியலமைப்பு சமத்துவத்துக்கான உரிமை பற்றியும் பேசுகிறது. சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள் என்பதுடன் அவர்கள் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கும் உரித்து உடையவர்கள். இனம், மதம், மொழி, சாதி, பால் அரசியல் கொள்கை அல்லது பிறப்பிடம் என்பன காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் ஏதேனும் ஒன்று காரணமாக எப்பிரசையும் ஓரங்கட்டப்படலாகாது. நாட்டிற்குள் குடிமனைகளை அமைத்தல், எங்கும் நடமாடும் உரிமை, நாட்டை விட்டுச் செல்லும் உரிமை, மீண்டும் நாடு திரும்பும் உரிமை அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

சகல பிரசைகளுக்கும் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையை நடத்துவதற்கும் கடிதம், செய்தித் தொடர்புகளுக்கும், நிந்திக்கப்படுதலுக்குள்ளாகாமல் சுதந்திரமடைவதற்கும் உத்தேச யாப்பில் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க உங்கள் சொந்த விடயங்களைச் சோதனை செய்வதற்கு எவருக்கும் உரிமை இல்லை. அரசினாற் கூட உங்கள் கடிதங்களைப் பிரித்துப் பார்க்க முடியாது.

எவருமே மற்றொரு பிரசையின் மனச்சாட்சிக்கு அச்சுறுத்தல் விடுக்க முடியாது. சகல பிரசைகளும் சுதந்திரமாகச் சிந்திப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. தாம் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராய் இருப்பதற்கு அல்லது கண்டுபிடிப்பதற்குச் சகல பிரசைகளுக்கும் உரிமையுண்டு. இச் சுதந்திரமானது படைப்பாற்றலுக்கு மிக முக்கியமானது. ஒரு நபர் சமூகத்துடன் கொண்டுள்ள பிணைப்பு சிறப்பதற்கும் இவ்வுரிமைகள் அவனுக்கு இன்றியமையாதவை. மனிதனது படைப்பாற்றலின் விளைவாக, பல விடயங்களை நிர்மாணிப்பதற்கும் தனது சுற்றுப் புறச் சூழலைத் தனக்கேற்ப அமைத்துக் கொள்வதற்கும் இவ்வுரிமை பிரசைகளுக்கும் இருக்க வேண்டும். அதே போல பேச்சுச் சுதந்திரம் மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். அவனின் படைப்புத்திறன் நிலைத்திருப்பதற்கும், பிரகாசிப்பதற்கும் பேச்சுச் சுதந்திரம் மிக முக்கியமானது. எனினும், சமூகத்திலுள்ள பிறரைத் துன்புறுத்தும் வகையிலோ அவமானப்படுத்தும் வகையிலோ அல்லது அவர்களின் நம்பிக்கை களை அவமதிக்கும் வகையிலோ பேசுவது பேச்சுச் சுதந்திரமாகாது.

அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கும் ஒருங்கு சேர்வதற்குமான உரிமையை உத்தேச அரசியலமைப்பு வழங்கியிருப்பதுடன் கருத்துக்களை வெளியிடும், தெரிவிக்கும் சுதந்திரத்தையும் அது வரையறுத்துள்ளது. எனினும் தகவல்களைப் பெறுவதற்கான உரிமை பேணப்பட்டால் மாத்திரமே பேச்சுச் சுதந்திரம், கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் என்பன முழுமை பெறும்.

தாம் விரும்பும் மொழியில், தமது சுய பாஷையில் கடமை ஆற்றும் உரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டுகோள் விடுத்தமைக்குக் குறிப்பிடத்தக்க வரலாறு ஒன்றுண்டு. இருப்பினும் இவ்வுரிமை கிடைக்காமையினால் சிறுப்பான்மைத்தமிழ், முஸ்லிம்களின் வெறுப்பு நாளுக்கு நாள் துளிர் விடலாயிற்று. பிற்பட்ட காலத்திலாவது யாப்பினூடாக இவ்வுரிமைகளைப் பெற்றுக் கொடுக்க முயன்ற மையை மிக முக்கிய விடயமாகக் கருதலாம். தான் விரும்பிய மொழியில் கடமையாற்றும் சுதந்திரமானது அடிப்படை உரிமையாக இந்த யாப்பினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ் மக்கள் மொத்த சனத்தொகையில் 12.5% க்கு மேல் வாழும் உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளிலுள்ள அரசாங்க அலுவல்களில் தமிழ் மொழியிலும் ஆவணங்களைப் பேணுதல் போன்ற மொழி உரிமைகள் இந்த அத்தியாயத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவ்வுரிமைகளைப் பேணும் வகையில் யாப்பின் 27ம் சரத்தில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் அரச கரும மொழிகளெனக் குறிப்பிடப்பட்டுள்ளன. அதே போலப் பிரசை ஒருவர் சொந்தக் கலாசாரத்தை அனுபவிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான உரிமமையை உத்தேச அரிசயலமைப்பு வழங்கியுள்ளது.

சாதாரண கைத்தொழிலிலோ, வியாபாரத்திலோ ஈடுப்படுவதற்குரிய உரிமை உத்தேச யாப்பில் அடிப்படை உரிமையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. சமுதாயத்திற்கோ, மக்களுக்கோ பாதிப்பு ஏற்படாத வகையில் அவ்வுரிமைகளை விருத்தி செய்வதும், பரவலாக்குவதும் மக்களின் உரிமையாகும். இருப்பினும் சமூகத்தைப் பாதிப்பதும் தீங்கிழைப்பதுமான வியாபாரம், கைத்தொழில் அல்லது தொழிலைச் செய்வது உரிமையாகாது. அத்தகைய விசமச் செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசிற்குப் பரிபூரண அதிகாரம் உண்டு.

சொத்துக்களை வைத்திருப்பதற்கும் உத்தேச அரசியலமைப்பு இடமளிக்கின்றது. ஒவ்வொரு பிரசையும் தனியாக அல்லது ஏனையவர்களுடன் சேர்ந்து சொத்துக்களை உடைமையாகக் கொண்டிருக்க முடியும்.

சட்டபூர்வமான நடவடிக்கைகள் மூலமன்றி, இவ்வுரிமைகளை எவராலும் ரத்துச் செய்ய முடியாது. பொது நல நோக்கம் கருதி ஒருவரது வீடு, வளவு போன்றவற்றை அரசு கைப்பற்றுமானால், அதற்குரிய நட்டஈட்டை வழங்கல் வேண்டும்.

## அடிப்படை உரிமைக்குப் பாதுகாப்பு

அடிப்படை உரிமைகள் மீறல்கள் தொடர்பாக வழக்குத் தொடர்வதிலும் உத்தேச அரசியலமைப்பு இன்றைய அரசியலமைப்பிலும் பார்க்க சிறப்பான அம்சங்களைக் கொண்டிருக்கிறது. தற்போதைய அரசியலமைப்பின் கீழ் நிர்வாக மற்றும் நிறைவேற்று நடவடிக்கைகள் காரணமாக அடிப்படை உரிமை மீறல்கள் இடம்பெறும் பட்சத்தில் மாத்திரமே அவற்றிற்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம். நீதிமன்ற நடைமுறைகள் காரணமாக அடிப்படை உரிமை மீறப்படுதல் தொடர்பாக வழக்குத் தொடுக்க முடியாது.

ஆனால் உத்தேச அரசியலமைப்பில் அதற்கு இடமுண்டு. நிறைவேற்றும் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் காரணமாகவோ அல்லது குற்றவியல் நியாயாதிக்கத்தைக் கொண்ட ஒரு நீதி மன்றத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை காரணமாகவோ அடிப்படை உரிமைகள் தொடர்பான அத்தியாயத்தின் ஏற்பாடுகள் அல்லது மொழி உரிமைகள் தொடர்பான அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மீறப்படுமிடத்தில் அதற்கெதிராக உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுப்பதற்கான உரிமையை உத்தேச அரசியலமைப்பின் 171வது சரத்து வழங்குகின்றது.

தற்போதைய ஏற்பாடுகளின்படி, (1978 ஆம் ஆண்டு யாப்பு) பாராளுமன்றத்திலொரு மசோதா சமர்ப்பிக்கப்பட்டதும் அது அரசியலமைப்பிற்கு முரணானதா? என்பதைத் தீர்மானிப்பதற்கு, அந்த மசோதா சட்டமாக நிறைவேற்றப்படுவதற்கு முன் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். ஆனால் ஒரு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்ட பின்னரும் நீதிமன்றத்தில் விண்ணப்பிப்தற்கான உரிமையை உத்தேச அரசியலமைப்பு வழங்குகின்றது.

புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வரும் திகதிக்குப் பின் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் ஒரு சட்டம் அல்லது அதன் ஒரு பகுதி அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகவுள்ளதா? என்பதைத் தீர்மானிப்பதற்கு எவரேனும் ஒரு பிரசை நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம் என உத்தேச அரசியலமைப்பின் 168 வது சரத்து கூறுகின்றது. அந்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியடைவதற்கிடையில் இவ்வாறு விண்ணப்பிக்க முடியும். அடிப்படை உரிமைகளுக்கு முரணாக இருக்கின்றதென நீதிமன்றம் கருதினால் அந்தச் சட்டம் அல்லது குறிப்பிட்டதொரு பகுதி செல்லுபடியற்றதாகும்.

அரசியலமைப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் அடிப்படை உரிமைகளை மீறுதல் தொடர்பாகவும் உரிய ஏற்பாடு உத்தேச அரசியலமைப்பில் உண்டு. உத்தேச அரசியலமைப்பின் 28வது சரத்தின் IIவது உபபிரிவின் கீழ் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த 3 மாதங்களுக்குள் 5க்கு மேற்படாத அங்கத்தவர்களைக் கொண்ட ஆணைக்குழுவொன்றை ஜனாதிபதி நியமிப்பார். இந்த ஆணைக்குழு நடைமுறையிலுள்ள எல்லாச் சட்டங்களையும் ஆராய்ந்து எந்தச் சட்டமாவது அரசியலமைப்பின் அடிப்படை உரிமை பற்றிய ஏற்பாடுகளுக்கு முரணாக இருக்கின்றதா? என்பது பற்றி ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும். ஜனாதிபதி உரிய நடவடிக்கைகளுக்காக அந்த அறிக்கையைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைப்பார். இவ்வாறாக, அடிப்படை உரிமைகளுக்குச் சிறப்பான பாதுகாப்பளிக்கும் புதிய ஏற்பாடுகள் உத்தேச அரசியலமைப்பிலுள்ளன.

## முடிவுரை

உத்தேச அரசியலமைப்பினை மேலோட்டமாகப் பார்க்குமிடத்து, ஒரு பிரசை சமுதாயத்தில் தனக்குரிய ஆளுமையை முழுமையாக அனுபவித்து வாழ்வதற்குத் தேவையான முன் நிபந்தனைகள் என்று சொல்லக்கூடிய உரிமைகளாவன :

- வாழ்தலுக்கான உரிமை
- சித்திரவதைக்குட்படாமை
- சமத்துவம்
- சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம்
- கருத்துச் சுதந்திரம்
- பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம்
- விரும்பிய தொழிலைச் செய்தல்
- விரும்பிய இடத்தில் வாழ்தல்
- விரும்பிய இடத்திற்குப் போக்குவரத்துச் செய்தல்
- விரும்பிய மதத்தைப் பின்பற்றும் உரிமை

எல்லாவற்றிற்கும் மேலாக அடிப்படை உரிமைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காப்பீட்டு வழிமுறைகளும் சிறப்பாக உளம் கொள்ளத்தக்கது. எனினும் இவ்வடிப்படை உரிமைகளைப் பரந்த அடிப்படையில் சமூகத்திற்குப் பெற்றுக் கொடுக்கின்ற போது சமூகத்தின் பிரதான அங்கங்கள் பலவற்றில் அமைப்பு ரீதியான மாற்றங்களைச் செய்ய வேண்டியது அரசின் கடமையாகும். இதனையிட்டு, அரசு பாரியதும், சூக்குமமானதுமான பொறுப்பை வகிக்க வேண்டியுள்ளது.

முக்கியமாகப் பாதுகாப்புச் சேவையை அடக்குமுறை உபகரணமாகவன்றி ஒரு சேவையாக நவீனமயப்படுத்த வேண்டியுள்ளது. நீதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டும் போதும், நீதி விசாரணைகளின் போதும் புதிய நடைமுறைகளைத் தேட வேண்டிய நிலை பாதுகாப்புப் பிரிவிற்கு ஏற்படும். அதே போல உரிமையை மதித்து செயற்படுத்துவதில் பொதுமக்களுக்கும் மிகப் பெரிய பங்குண்டு என்பதில் இரண்டாம் பேச்சுக்கு இடமில்லை. எது எவ்வாறிருப்பினும் எவ்வளவுதான் சிறப்பாக அடிப்படை உரிமைகள் பற்றி ஏட்டில் எழுதி வைத்தாலும் அவையனைத்தும் நடைமுறையில் பின்பற்றப்படுவதிலேயே நிகழ்தகவு நிச்சயிக்கப்படும். இல்லாவிட்டால் ''ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது'' என்ற பழமொழியை எமக்கு மீண்டும் நினைவூட்டலாம்.

**''என் கையிலுள்ள கைத்தடியை**
**என் விருப்பம் போல் சுழற்ற முடியும்.**
**இருப்பினும் எனது சுழற்சியானது**
**மற்றவரின் மூக்கு நுனியுடன்**
**மட்டுப்படுத்தப்படும் ''** **- ஜோன் லொக் -**

பரிசு பெறும் கவிதை

# நாசமான வாழ்க்கையும்....
# ஒன்றுமில்லாத நிலையும்....

**ஸ்ரீ.பிரசாந்தன், இரண்டாம் வருடம், கலைப்பீடம்.**

*அச்சமில்லை என்ற சொல்லை மெச்ச வேண்டுந் தோழரே!*
*ஆயுதத்தைக் கூட எங்கள் காகிதங்கள் வெல்லுமே!*
*கச்சவிழ்த்த பெண்ணைப் போலக் காலதேவி நிற்கிறாள்.*
*கற்பிழந்து போக முன்னர் காக்க வேண்டுந் தோழரே!*

*காலை வந்து பார்த்தபோது காளையாக நின்றவன்*
*மாலை வந்து பார்த்த போது மாண்டு போனதென்னடா?*
*நாளை வந்து பார்க்கும் போது நாடு என்ன ஆகுமோ?*
*தேளை விட்டுப் பாம்பு பெற்ற தேசமாகிப் போகுமோ?*

*இன்பம் என்ற பேரிற்பட்ட துன்பம் யாவும் போதுமே*
*இன்னல் என்ற மின்னல் எம்மை இன்றுந் தாக்கக்கூடுமே.*
*உண்பம் என்று போன போதும் உண்ணவில்லைத் தோழரே!*
*உணவு கூட எங்களுக்குக் கனவு போல ஆனதே.*

*உத்தமர்கள் என்ற பேரில் வித்தவர்கள் போதுமே.*
*உள்ளம் என்ற பூவைத் தீய வெள்ளங் கொண்டு போனதே.*
*கத்துகின்ற போது வந்து குத்துகின்ற பேர்களா*
*'கட்சி' என்ற பேரில் எம்மை ரட்சி செய்யக் கூடுவார்?*

*கொத்துகின்ற காகங்கூடக் கூவிக்கூவி உண்ணுதே*
*கோழை மாந்தர் மட்டுந்தானே கூடச் சேர்வதில்லையே.*
*பத்துகின்ற வீட்டில் வந்து பாயைத் தூக்கும் பேர்களா*
*பாசங் கொண்டு வந்து எங்கள் நாசம் நீக்கப் போகிறார்?*

*நன்று வாழ்ந்த வாழ்க்கை இன்று நாசமாகிப் போனது*
*என்று சொல்லிச் சென்றதாலே ஏது இங்கு ஆனது?*
*''சென்று வந்த கால மெல்லாம் சேர்த்ததென்ன?'' என்றதும்*
*''ஒன்றுமில்லை'' என்ற சொல்லை ஒரு நொடிக்குட் சொல்லுவேன்.*

பரிசு பெறும் சிறுகதை

# மீன் சந்தை

*பா. மணிமாறன், இறுதி வருடம், பொறியியற்பீடம் .*

வீட்டில் இருந்து சைக்கிளை எடுத்த போது மனம் சந்தோஷமாக இருந்தது. ஏனென்று தெரியவில்லை. மீன் சந்தைக்குப் போறதெண்டால் எனக்கு நல்ல விருப்பம். மீன் சாப்பிடுறதில உள்ள விருப்பம்தானோ தெரியவில்லை.

வழமையா அம்மாதான் போறவ. சனி,ஞாயிறு எண்டால் பள்ளிக்கூடம் இல்லைத்தானே. என்ரை முறை வந்து விடும். எல்லாச் சனி,ஞாயிறும் மீன் சந்தைக்குப் போகக் கிடைக்குமென்றில்லை. வீட்டின் காசு நிலவரத்தில்தான் எல்லாம் தங்கியிருக்குது. போன கிழமை முழுக்க செல்வராசா அண்ணை கடையில் கொப்பிக்கு வாங்கின பருப்போடதான் போனது. அப்பாவின்ரை காசை போன கிழமை முழுக்கப் பார்த்துக் கொண்டிருந்தது, இன்னமும் வரயில்லை. அவரும் மட்டக்களப்பிலிருந்து ஆரும் வந்தால்தானே குடுத்துவிடலாம். அப்பாவின்ரை காசைப் பார்த்துக் கொண்டிருந்திட்டு இண்டைக்குக் காலமைதான் அம்மா பக்கத்தில தேவியக்காவிட்டை நூறு ரூபா மாறிக் கொண்டு வந்தவ. அந்த நூறு ரூபா இப்ப என்ரை பொக்கற்றுக்குள்ளதான் இருக்குது. இது இன்னும் ஒரு கிழமைக்காவது ஓடவேணும். வழமைபோல இண்டைக்கும் ஆகக்கூடினது இருபது ரூபாக்குக் கூட மீன் வாங்க ஏலாது.

நான் சின்னனாக இருக்கேக்க இதே பருத்தித்துறை மீன் சந்தையில் பத்து ரூபாவுக்கு எவ்வளவு மீன் வாங்கியிருப்பம். அந்தளவு மீன் இப்ப அறுபது, எழுபது ரூபாவுக்கும் வாங்க ஏலாது. நாட்டுப் பிரச்சினையில் இருந்து உள்ள பிரச்சினையெல்லாம் சொல்லி சாமனுகளின்ரை விலை மட்டும் அஞ்சாறு மடங்காக ஏறிற்றுது. எங்கட எல்லைக்கோடென்றால் முதல் பத்து ரூபாவாக இருந்தது. இப்ப இருபது ரூபாவாக மாறியிருக்குது, அவ்வளவுதான்.

பழங்கதையெல்லாம் விடுவம். இந்தா சந்தையும் வந்திட்டுது. எனக்கெல்லாம் மீன் சந்தைக்குப் போறதற்கு எழுதப்படாத விதிகள், ஒழுங்குகள் இருக்குது. முதலாவது ஜீன்ஸ் போட்டுக்கொண்டு மீன் சந்தைக்குப் போகக்கூடாது. ஜீன்ஸிற்காக என்று எப்படியும் உண்மை விலையில குறைந்தது ஐந்து ரூபாவாவது கூட்டப்படும். (உதையெல்லாம் எங்கட பிரின்ஸிபலிற்கு என்னெண்டு விளங்கப்படுத்திறது. நான் பள்ளிக்கூடத்தில பிறிஃபெக்ட்டாம். வெளியாலயும் மரியாதையாக இருக்க வேண்டும் எண்டு எச்சரிக்கை) அடுத்தது எங்க சைக்கிளை விடப் போறியள் என்பது. சைக்கிள் பார்க்கில் விட்டால் இன்றைய பட்ஜெட்டில் துண்டு விழும் தொகை ஒரு ரூபா. இருபது ரூபா பத்தொன்பது ரூபா ஆகிவிடும். எனவே சைக்கிளை சந்தையில் இருந்து சற்றுத்தள்ளி (சந்தைக்குக் கிட்ட வைத்தால் பார்க்காரனே வந்து தூக்கிக் கொண்டு போடுவான்) ஒரு கடைக்கு நேர்முன்னால் விட வேணும். பார்க்கிறவரைப் பொறுத்த வரை சைக்கிள்காரர் முன்கடையில் சாமான் வாங்குகிறார். சரி, சைக்கிள் துலைந்தால்.... அது துலையாது. இப்போதைய முக்கியம் அந்த ஒரு ரூபாதான்.

அரோகரா! இண்டைக்கு நல்ல சனம். நாகர்கோவில் மனுசியளின்ரை வரிசையையும் காணவில்லை. உந்த பொலிகண்டி மனுசியள் மீனிற்கு மட்டுமில்லாமல் வாங்கிற ஆளிற்கு, அவரின்ரை கூடைக்கு எல்லாத்திற்கும் சேர்த்து விலை சொல்லுவாளுகள். பரவாயில்லை, இப்பத்தானே நேரம் 9.45. கொஞ்சம் சுத்துவம்.

ஓவ்! இண்டைக்கு என்ரையாள் முன்னிற்கே இருக்குது. ஆர் என்ரையாள் எண்டு கேட்கிறியளோ. பிழையாக நினைக்கக்கூடாது. அந்தா! அந்த மீன்கார மனுசிதான். என்னை வடிவாகக் கவனிச்சு வைச்சிருக்குது மனுசி ஒருக்காலும் இருபது ரூபாவுக்குக்கூட வாங்க மாட்டன் எண்டு தெரியும். என்ன மீன் விலைக்குள்ளயும் குஞ்சு குருமான் எல்லாம் போட்டு இருபது ரூபாவுக்கு கொஞ்சம் பொலிவாகத் தரும். அப்பிடி என்னில மனுசிக்கு ஒரு அக்கறை (அல்லது என்னைப் போல எத்தனை பேரோ!) மனுசியின்ரை கண்ணில விழுந்திட்டால் அங்கால போக ஏலாது. மீனை வாங்கிக் கொண்டு திரும்ப வேண்டியதுதான். என்ரை மீன் சந்தை சுத்திற சந்தோஷம் கெட்டுப்போகும். சுத்திக் கொண்டு போகவேண்.....

''டேய்'' தோளில கைவிழுந்தது. திரும்பினேன், சுரேன்

சரியாய்ப்போச்சு! மீன் வாங்க வந்திருக்கிறான்போல கிடக்குது. தகப்பன் கடை வைச்சிருக் கிறார். இவன் வாங்கினால் நூறு ரூபாவுக்குக் குறைய வாங்க மாட்டான். நான் இருபது ரூபாவுக்கு வாங்கினால் இவனின்ரை வாயில அவல் தான். அவனை என்னெண்டு இப்ப காய் வெட்டிறது?...

''என்ன மீன் வாங்கவோ?'' கேட்டேன்.

''ஓமடா, இண்டைக்கு அப்பா ஒரு செத்த வீட்டை போட்டார். நான்தான் இண்டைக்கு அம்பிட்டேன். எனக்கெண்டால் ஒருக்காலும் வாங்கிப் பழக்கமில்லை. நீ என்ன மாதிரி?''

''சனி, ஞாயிறு எண்டால் நான்தான் மார்கெட்டிங்''

''அப்பெண்டால் எனக்கும் சேர்த்து நல்ல மீனாகப் பார், வா''

'எனக்கும் சேர்த்து' என்ற வார்த்தைப் பிரயோகம் வயித்தில புளியைக் கரைக்க அவனோடு கூட நடந்தேன்....இவன் என்ன என்ரை மீன்கார மனுசியின் வரிசைப் பக்கம் போறான். மனுசி கூப்பிட்டு தெண்டால்...நல்ல காலம் மனுசி பார்த்திட்டும் கூப்பிடவில்லை. கடவுளிற்கு நன்றி.

ச்சே! ஒரு மீன் வாங்க எத்தனை பேருக்குப் பயப்பிட வேண்டியிருக்குது.

''எவ்வளவுக்கு மீன் வாங்கப் போறாய்?'' கேட்ட என்னை ஒரு மாதிரிப் பார்த்தான் சுரேன்.

''எங்கட வீட்டை ஐஞ்சுபேர்'' என்றான்

என்ரை புத்தியை செருப்பால அடிக்க வேணும். ஏதோ அவனும் என்னை மாதிரி இருபது ரூபா லிமிட் எல்லாம் வைச்சிருப்பான் மாதிரிக் கேட்கிறான் பார்!

''இல்லை இன்டையான் கறிக்குத்தானோ, இல்லாட்டி நாளைக்கும் சேர்த்து வாங்கப் போறியோ எண்டு கேட்டனான்'' என்று சாதுவாகச் சடைஞ்சன்.

''நல்ல மீன் என்றால் நாளைக்கும் சேர்த்து வாங்கலாம். நீ என்ன மாதிரி'' திருப்பிக் கேட்டான்

''நான் இண்டைக்கு மட்டும் தான்....இந்த விளை மீன் எப்பிடி'' கதையை மாற்றினேன். ''கேட்டுப் பார்ப்பம்''

''ஆச்சி, இந்த இரண்டுக்கும் என்ன சொல்கிறாய்?''

''நூறெண்டால் எடு, இப்ப ஒராள் தொண்ணூறு கேட்டுட்டு போறார்'' ஆச்சி சொன்ன விலையைக் கேட்டு எனக்கு புல்லரிச்ச மாதிரி இருந்தது. சுரேன் சாதாரணமாகத்தான் இருந்தான்.

''எவ்வளவெண்டால் எடுப்பாய்'' சுரேனை இரகசியமாய் கேட்டேன்.

''எண்பதெண்டால்''

''எணை ஆச்சி எழுபத்தஞ்சுக்குத்தாறியோ இரண்டையும்'' என்று கேட்ட என்னை ஆச்சி உக்கிரமாகப் பார்த்து வாயைத் திறக்க சுரேனின் கையைப் பற்றி இழுத்தபடி பின் வாங்கினேன். பின்னால் எனது மூஞ்சி, இன்ன பிற எல்லாவற்றையும் சம்பந்தப்படுத்தி வசவு எழுந்தது.

''திரும்பிப் பார்க்காத நோர்மலாக நடந்து வா. இஞ்ச இப்பிடித்தான் விலை, கேட்டிட்டு ஓடி வந்திடவேணும். அந்த விலைக்குத் தருவான் எண்டால் கூப்பிட்டுத்தருவான். இல்லையெனின் பேச்சு வாங்காமல் தப்பலாம்...இது ஆரை மீன், கிரந்தி, வீட்டில ஒத்துக் கொள்ளுமோ?'' கேட்டேன்.

''வேண்டாம், அப்பரிற்கு கிரந்தி எண்டா ஆகாது....உதென்னெடா பழுதாப்போன மீனை விக்கிறான்...'' முகத்தைத் சுளித்தான் சுரேன்.

''டேய், அது பழுதாப்போன மீன் இல்லையடா. அது மண்ணா மீன், உப்பித்தான் இருக்கும். உருந்து கொட்டுப்படுகிற மாதிரி. ஆனால் கொஞ்சம் சுடுதண்ணிக்கை போட இறுகிடும். பிறகு கறிவைக்க மணியாய் இருக்கும்''

''நீ சாப்பிட்டிருக்கிறியோ?''

''ஓ, நல்ல டேஸ்ட, எப்ப கடைசியாகச் சாப்பிட்டது எண்டு ஞாபகம் இல்லை. ஐஞ்சாறு வருஷமாவது இருக்கும். கனபேர் வாங்காத மீன் எண்டாலும், விலை எண்டால் எங்கட ரேஞ்சிற்கு அப்பாலதான் இருக்கும்''

''....வேண்டாண்டா அம்மா என்ன சொல்லிறாவோ தெரியாது'' சுரேன் ஒதுக்க, பயணம் தொடர்ந்தது.

ஒரு ஐந்து நிமிடம் கழித்து ஒரு சுறாவைக் கண்டோம். ஒரு அளவான சுறா, இரண்டு குடும் பத்திற்கு காணும். அதை வைத்து என்ரை மீன் சந்தை புலமையை சுரேனிற்குக் காட்ட வேண்டுமென்று ஒரு அவா எழுந்தது.

''சுரேன், அந்தச் சுறா எவ்வளவு போகும் எண்டு சொல்லு பார்ப்பம்'' என்று சுரேனைக் கேட்டேன்.

''ஒரு நானூறு வருமே?'' என்று சுரேன் ஊகித்தான்.

''ம்ம் முன்னூறு சொல்லுவான். இருநூற்றம்பதிற்கு எடுக்கலாம்'' என்றேன். ''அப்ப போய்க் கேட்டுப்பார்ப்பமே'' என்றான் சுரேன். ''கேட்டு என்ன செய்யிறது'' நான் அலுத்துக்கொண்டேன்.

''வாங்கிறதுதான்'' என்று விட்டு சுரேன் சுறாவிடம் போக எனக்கு விசராக்கிற்று.

சுரேனோடு இழுபட்டேன். சுறாக்காரன் முன்னூற்றம்பது சொன்னான். சுரேன் என்னை ''என்னடா இப்படிச் சொல்கிறான்'' என்ற மாதிரிப் பார்த்தான்.

''சொல்லி இருநூற்றம்பதிற்கு வாங்கலாம். ஆனால் உவ்வளவு பெரிசைக் கொண்டுபோய் என்ன செய்யப்போறாய்?'' என்று கேட்டேன் நான்.

''ஏன்? நீயும் நானும் சேர்ந்து வாங்குவம்'' எண்டான் சுரேன். எனக்கு தலையில இடி

விழுந்தமாதிரி இருந்தது. ஏன் இந்தச் சுறாக்கதையைத் தொடங்கினம் எண்டு இருந்தது. சுறாவைப் பரிதாபமாகப் பார்த்தேன். நல்ல பால்சுறா, குழம்பும் வைச்சு வறையும் வைக்க மணியாய் இருக்கும். இரண்டு தரம் எச்சில் விழுங்கினேன்.

''இல்லை மச்சான், வீட்டை அண்ணாவுக்கு சுறா பிடிக்காது எண்டு, வீட்டை சுறா எடுக்கிற தில்லை'' சமாளித்தேன் நான்.

''அப்ப என்ன, வேற மீன் பார்ப்பம்'' எண்டு சுரேன் சுறாவை விட்டுவிட்டு வந்தான். எனக்கு ஒரு கண்டம் விலகின நிம்மதி

மேலும் ஒரு ஐந்து நிமிடம் செலவழிஞ்சதில சுரேன் எண்பது ரூபாவுக்கு அறக்குளா முறி கொஞ்சம் வாங்கினான். ''நீயும் வாங்கு, மலிவுதானே'' எண்டு அறிவுரை செய்து மீண்டும் எனது வயிற்றுக்குள் சங்கடம் உண்டாக்கினான். அவனை சமாளிச்சுக் காய்வெட்ட எனக்குப் போதும் போதும் எண்டாயிற்றுது.

நாலு லட்சம் காசிருக்கிறவன் பாடும் பிழையில்லை, நாலு லட்சம் கடன் இருக்கிறவன் பாடும் பிழையில்லை. எங்களைப்போல அரசாங்க உத்தியோகத்தர் குடும்பத்தின்ரை பாடுதான் கஷ்டம். அடுத்த ஐந்து ரூபா எங்கட காசிலிருந்து செலவழியப் போகுதோ அல்லது கடனில செலவழியப் போகுதோ எண்டு தினமும் யோசிச்சபடி இருக்கவேணும்.

சுரேனோடு சேர்ந்து சந்தை சுத்திப் பார்த்தாச்சு, இனி மீன் வாங்கிக்கொண்டு போக வேண்டியது தான். அட, இஞ்ச கொஞ்சம் மீன்கார மனுசியள் வருகுதுகள். நாகர்கோவில் வான் வந்திட்டுது போல கிடக்குது. இண்டைக்கு நாகர்கோவில் ஸ்பெஷல் என்ன எண்டு பார்ப்பம்.

நினைச்சன், இண்டைக்கும் நெத்தலிதான். எண்டாலும் பரவாயில்லை, குறைஞ்ச காசிற்கு பொலிவாக வாங்கக்கூடியதெண்டால் நெத்தலி, சூடைபோல கொஞ்சம்தான். எண்டாலும் கொஞ்ச நெத்தலி எடுத்து தட்டைச்சுளகு முழுக்க பரவிவிட்டு விலைசொல்லுவாகள். அதுக்குள்ள எந்தக் கூறுக்குள்ள கூட மீன் இருக்குது எண்டு தெரிவு செய்யிறதிற்கு ஒரு திறமை வேணும். கிள்ளிப்போட்டுத் தாரன் வா தம்பி எண்டுவாங்கள். ஐஞ்சு மீனை கிள்ளி எடுத்திட்டு இரண்டு மீனைப் போட்டுட்டு மூண்டு மீனைத் திருப்பிக் கொண்டு போடுவாள்.

ஒரு மீன்கார மனுசியைத் தெரிவு செய்து அணுகினேன்.

''ஆச்சி, கூறு எவ்வளவணை?'' கேட்டேன்

''பத்துரூபா தம்பி''

''இரண்டு கூறு போடனை''

இரண்டு கூறு எனது பையிற்கு வந்தது. பொக்கற்றுக்குள்ளால் ஸ்டைலாக நூறு ரூபாவை எடுத்துக் கொடுத்தேன். மனுசி உதட்டைப் பிதுக்கியது

''சில்லறை இல்லையே தம்பி?'' மனுசி கேட்டது

''இல்லை ஆச்சி''. வீட்டில மொத்தமாக்கிடக்கிறதே இவ்வளவுதான் எண்டு என்னெண்டு சொல்கிறது.

மனுசி நூறு ரூபாவை வாங்கிக் கொண்டு மிச்சக்காசிற்காக பெட்டிக்குள்ள குடைஞ்சது.

''தம்பி ஒரு ஐஞ்சு ரூபா குறையுது. மிச்சத்திற்கு நெத்தலி போட்டுத்தாறன் பிடி'' என்று மனுசி சொல்ல எனக்குக் கோபம் தான் வந்தது.

''எனக்கு நெத்தலி வேண்டாம். காசைத்தாணேய்''.

''என்னடா மோனை கைவிஷேமாய் வந்திட்டு நூறுரூபா தந்திட்டு உலைச்சல் பிடிக்கிறாய். ஐஞ்சு ரூபா தானே, நெத்தலியைப் போட்டுத்தாரன் எண்டு சொல்லிறன்'' மனுசி குரலை உயர்த்தியது.

என்னத்திற்கு இப்ப மனுசி குரலை உயர்த்துது. ஏதோ அடிபாட்டிற்கு நான் வந்த மாதிரி. சாதுவாக வெட்கமாக இருந்தது. சுற்றி முற்றிப் பார்த்தேன்....துலைஞ்சுது! பக்கத்தில வாசுகி, என்ரை வகுப்புப் பெட்டை, சாதுவாக நக்கல் சிரிப்புச் சிரிச்ச மாதிரி இருந்தது.

''என்னடா தம்பி ஐஞ்சு ரூபாவுக்கு இப்படிக் கரைச்சல் பிடிக்கிறாய்'' மனுசி இன்னமும் குரலை இறக்கிறதாய் இல்லை. மனுசி ''ஐஞ்சு ரூபாயில்'' அழுத்தியது வாசுகிக்குக் கேட்டிருக்குமோ தெரியாது.

''சரி, சரி நெத்தலியை தாணேய்'' பையை நீட்டினேன் மனுசி ஐஞ்சு ரூபாவுக்குப் போட்ட நெத்தலி நிச்சயம் ஐஞ்சு ரூபாவுக்குக்குறைவு சந்தைக்கு வெளியே நடந்தேன். இருபத்தஞ்சு ரூபாவுக்கு மீன்! நெஞ்சு திக்கெண்டது இண்டைக்கு அம்மாவிற்றை அர்ச்சனைதான்.

சைக்கிளை எடுத்தபோது வரும்போது இருந்த சந்தோஷம் காணாமல் போயிருந்தது.

---

உங்கள் சொந்த 'வெப்' தளத்தை இலவசமாகப் பெற்றுக் கொள்ள விரும்புகிறீர்களா? பெறவிரும்பின் http://www.geocities.com/ என்ற முகவரி ஊடாக நீங்கள் பெறலாம். இத் தளமானது பலவகைப்பட்ட பிரிவுகளாக பிரிக்கப்பட்டு உள்ளது. வியாபாரம், கல்வி என்பன இவற்றுள் சிலவாகும். இத் தளமானது, பல்லாயிரக்கணக்கான மக்களை ஒன்றிணைத்து செயற்படுகின்றது. இத் தளத்தில் உதாரணமாக கல்வியைப் பற்றி இலவச தளத்தைப் பெறுவோமாயின் பலவகைப் பட்ட பிரிவுகள் உள்ளன. இவற்றுள் உங்களுக்கு விருப்பமான ஒரு பிரிவைத் தெரிவு செய்தபின் ஒரு விண்ணப்பப் படிவம் உங்கள் கணனி திரையில் தெரியும். அதனை நீங்கள் பூரணமாக நிரப்பி, 'அனுப்பு' (Send) என்ற 'பொத்தானை' அழுத்தினால், உங்களது இலத்திரனியல் முகவரிக்கு உங்களது தனிப்பட்ட பெயரும் அதற்கான passwordஉம் வழங்கப்படும். பின் மீண்டும் http:// www.geocities.com/ என்ற முகவரியைப் பெற்று அதில் உறுப்பினர் பகுதி (members area) என்ற பகுதியை அழுத்தினால் அதில் உங்களது தனிப்பட்ட பெயரும் passwordஉம் கேட்கப்படும். அதை நிரப்பினால் உங்களுடைய file manager என்னும் கட்டளையை காண முடியும். அதன் மூலம் உங்களது தகவல்களைக் கொடுத்து இலவச தளத்தை அமைக்க முடியும்.

# இலங்கையில் தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சினைக்கான அடிப்படைக் காரணங்கள்

**இஸ்மாயில் ஏ. நஜீம், விடுகை வருடம், அரசறிவியல் (விசேடம்).**

தேசிய ஒருமைப்பாடு என்பது பல அம்சங்களை உள்ளடக்கிய ஒரு சிக்கலான பரந்த விடயமாகும். பல்வேறு காரணிகளின் அடிப்படையில் தம்முள் வேறுபடும் மக்கள் குழுக்களை உடைய ஒரு நாட்டில் தேசிய ஒருமைப்பாடு மிகவும் சிக்கலானதாகவும், எந்தவொரு தனியான காரணிகளினாலும் அடைந்து கொள்ள முடியாததாகவும் காணப்படும். தென்னாசியாவில் உள்ள பல நாடுகள் இத்தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சினைக்கு தீர்வுகளை தேடிய வண்ணம் இருக்கின்றன. இந்நாடுகளின் அரசியல் வாதிகளும், எழுத்தாளர்களும், வாக்காளர்களும், தேசிய உணர்வின் வளர்ச்சியின் மூலமும், தேசிய ஒருமைப்பாட்டின் வெற்றியின் மூலமும் காலனித்துவ ஆட்சியின் சின்னங்களை அகற்றித் தத்தமது தனித்துவத்துடன் கூடிய கலாச்சாரத்தை புத்துயிரடையச் செய்வதிலேயே தங்கியுள்ளது. இந்த வகையில் இலங்கையில் தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சினை மேலே கூறப்பட்ட விடயங்களுடனும் வேறு பல விடயங்களுடனும் தொடர்புள்ளதாக காணப்படுகின்றது.

**தேசிய ஒருமைப்பாடு :-**

தேசிய ஒருமைப்பாடு என்ற பதத்தை விளக்குகின்ற போது ஒரு நாட்டில் வாழ்கின்ற சகல மக்களும் தம்மிடையே உள்ள வேறுபாடுகளை மறந்து, நாம் எல்லோரும் இந்த நாட்டுமக்கள் என்ற வகையில் ஒரே நாட்டினத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதி தேசிய ரீதியில் ஒன்றுபட்டு வாழுவதைக் கூறலாம்.

ஹாவாட் றிக்கின்ஸ் (Haward Wriggins) என்பவர் தேசிய ஒருமைப்பாடு என்பது பிரிந்து கிடக்கும் ஒரு சமூகத்தின் பல்வேறு கூறுகளை ஒன்றாக இணைத்தல் அல்லது பல சிறிய சமூகங்களைக் கிட்டத்தட்ட நெருங்கிய வகையில் ஒரே நாட்டினர் என்ற வகைக்கு கொண்டு வருதல் என்று *Modernization, The Dynamic of Growth* என்ற நூலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ''ஒருமைப்பாடு'' என்பது, அகராதியின்படி ஒன்றாக இணைக்கின்ற நடவடிக்கையை குறிக்கின்றது. ''லாலண்டே'' (Lalande) தனது மெய்யியல் அகராதியிற் குறிப்பிட்டதன்படி ''ஒருமைப்பாடு என்பது உயிர் வாழும் மக்கள் தொகையினரிடையே அல்லது ஒரு சமூகத்தின் உறுப்பினர்களிடையே நெருங்கிய முறையில் பரஸ்பரம் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலையை ஏற்படுத்துவதாகும்''. எனவே ஒருமைப்பாடு என்பது பிரிந்து கிடக்கும் பகுதிகளை ஒன்று சேர்ப்பதன் மூலம் ஒரு பூரணமான முழுமையை ஏற்படுத்துதல் என்று கூறலாம்.

***தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சினை :-***

*இலங்கை போன்ற குறை விருத்தி நாடுகளில் தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சினையில் காணப்படும் அம்சம் என்னவெனில், ஐரோப்பாவில் காணப்படுவது போல வெறும் புவியியல் ரீதியான வேறுபாடுகளாக மட்டுமல்லாமல் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் கூர்மையான வேறுபாடுகள் காணப்படுவதாகும். குறைவிருத்தி நாடுகளில் இன, மொழி, மத, ரீதியில் பெரும் வேறுபாடுகள் காணப்படுவதோடு இன வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு எல்லைகள் வகுக்கப்பட்டன; வகுக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இந்நாடுகளின் அரசாங்கங்கள் மொழிச் சட்டங்கள், அதிகார ரீதியான நடவடிக்கைகள் என்பவற்றின் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முயன்ற போதும் இத்தகைய முயற்சிகள் மூலம் தேசிய ஒருமைப்பாடு ஏற்படுவதற்குப் பதிலாக அதற்கான தடைகள் ஏற்பட்டன. இதே போன்று இலங்கையும் இத்தன்மைகளுக்கு விதிவிலக்கன்று, இலங்கையில் பல இனங்கள் ஒன்றில் இருந்து ஒன்று முற்றாக பிரிந்து விடவில்லை. அதேவேளை அவற்றிற்கிடையே ஐக்கியம் காணப்படவில்லை என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.*

***இனப்பாகுபாடு :-***

*இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டைப் பாதித்த காரணி என்ற வகையில் நாம் வெவ்வேறு இலங்கை வாழ் இனங்களை எடுத்து நோக்க முடியும். இந்த வகையில் சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம், ஏனையோர் எனும் இனப்பிரிவுகளைக் கொண்டு இருப்பதுடன் தத்தமது இனத்தின் மேம்பாட்டினை விரும்புகின்றவர்களாகவும் இருக்கின்ற காரணத்தால், ஒரு இனத்தின் மீது இன்னொரு இனம் ஏதாவது விதத்தில் மேலாண்மை செலுத்துவதை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எனினும் இனரீதியான செயற்பாடுகள் தவிர்க்க முடியாததாக இருந்ததினால் குறிப்பாக சிங்கள இனத்தின் மேலாண்மையினால் சிறுபான்மை இனத்தவர்கள் பல விதத்திலும் புறக்கணிக்கப்பட் டார்கள். இந்த வகையில் நாம் இனம் காணும் முதலாவது விடயம் இனரீதியான பிரதிநிதித்துவமாகும். அத்துடன் 19ம் நூற்றாண்டு காலம் முதல் வளங்களைப் பங்கீடு செய்வதில் சிறுபான்மை இனத்தவர்கள் மட்டுமன்றி பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த கரையோர சிங்களவர்களும் பாதிப்புக்குள்ளானார்கள். மறுபுறம் ஆங்கிலேயர் தமது ஆட்சியைப் பலப்படுத்திக் கொள்வதற்கும் பாதுகாத்துக் கொள்வதற்கும் பயன்படுத்திய கருவி ''இனம்'' என்றால் அது பிழையாகாது.*

*இவ்வாறு இனரீதியான பிளவுகளினால் 1956இல் சிங்கள மொழி அரச கரும மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டபோது, அதனை எதிர்த்த சிறுபான்மை இனம் மோசமாகத் தாக்கப்பட்டதுடன் 1957இல் கொண்டு வரப்பட்ட சிங்கள சிறீ (ஸ்ரீ) திணிப்பு நடவடிக்கை 1958இல் பெரும் இனக் கலவரத்தை தூண்டியது. அது மாத்திரமன்றி 1972இல் குடியரசு அரசியல் யாப்பு மாற்றத்தினால் சிங்கள இனத்திற்குச் சார்பான சகல நடவடிக்கைகளையும் அந்த யாப்பு மூலம் திணித்ததுடன் சிறீலங்கா எனும் பெயரும் மாற்றப்பட்டமையும் தனிச்சிங்கள இனத்தின் மேலாண்மையை எடுத்துக் காட்டுகின்றது. இதன் விளைவுகளே 1977, 1981, 1983 இனக் கலவரங்களுக்குத் தூபமிட்டன; இனப்பாகுபாட்டு நடவடிக்கை கள் இன்னும் தளிர்விட்டுக் கொண்டிருப்பதற்குக் காரணமாயும் உள்ளன. இதற்கு சிறந்த உதாரணமாக அரச தொழில் வாய்ப்புகள் இனரீதியாக வழங்கப்பட்டுள்ளதுடன் அவை பெரும்பான்மை இனத்தின் விகிதாசாரத்தை தாண்டி நிற்பதையும் அவதானிக்கும் போது நன்கு புலனாகும்.*

**இனரீதியாக தொழில் வாய்ப்பு (1990 கணிப்பீடு)**

| இனம் | சனத்தொகை% | அரசசேவையில் பணிபுரிவோர் |
|---|---|---|
| சிங்களவர் | 73.9 | 91.2% |
| இலங்கைத்தமிழர் | 12.7 | 5.9% |
| மலை நாட்டுத்தமிழர் | 5.5 | 0.1% |
| முஸ்லிம்கள் | 7.0 | 0.2% |
| ஏனையோர் | 0.9 | 0.8% |

மூலம்:- அரசதுறை மற்றும் கூட்டுத்தாபன துறையில் பணிகொள்ளல் தொகை மதிப்பு - 1990.
குடிசன தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் 1992.

**மத அடிப்படையில் பிளவு :-**

மத அடிப்படையை நோக்கும் போது இலங்கையில், இந்தியாவில் காணப்படுவதைப் போல் அல்லாமல் மதரீதியான பிரச்சினை குறைவாகக் காணப்படுகின்றது என்றே கூறவேண்டும். ஏனெனில் இலங்கை மக்கள் ஏதாவது ஒரு மதத்தினைப் பின்பற்றுபவர்களாகவே இருக்கின்றனர். இதனைக் கீழ்வரும் புள்ளிவிபரம் தெளிவுபடுத்துகின்றது.

**இலங்கையில் மதத்தினைப் பின்பற்றுவோர்**

| மதம் | மக்கள்தொகை | விகிதம்% |
|---|---|---|
| பௌத்தர் | 820,0000 | 66.7% |
| சைவர்கள் (இந்துக்கள்) | 230,0000 | 18.3% |
| கிறிஸ்தவர்கள் | 120,0000 | 9.4% |
| இஸ்லாமியர்கள் | 70,0000 | 5.6% |

மூலம்:- 1970ம் ஆண்டு கணிப்பீடு

மத அடிப்படையில் பிரிந்து தத்தமது மதங்களைப் பேணிக்காப்பதில் ஒவ்வொரு மதமும் பின்னிற்பதில்லை. அதேவேளை இவ்வாறு பல மதங்கள் காணப்படும் நாட்டில், அரசியல் அமைப்பில் பௌத்தமதத்திற்கு முன்னுரிமையளிக்கப்பட்டு, 1972ம் ஆண்டு வரையப்பட்ட யாப்பில் இருந்து இன்றுவரை ஏனைய மதத்துக்குக் கொடுக்காத சலுகையும் மேலாண்மையும் பௌத்தமதத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் பௌத்தமதத்துக்கு உதவியளிக்கப்பட்டு வருவதுடன், காலஞ்சென்ற ஜனாதிபதி R.பிரமேதாஸவினால் அறிமுகம் செய்யப்பட்ட ''சம்பத்கேந்திர'' எனும் முக்கோணத்திட்டத்தின் கீழ் ஏனைய மத ஸ்தானங்களை அண்டிய பகுதியில் பௌத்த விகாரைகளை நிறுவும் மறைமுகத் திட்டத்தையும் குறிப்பிடலாம். அதே சமயம் தற்போது ஆட்சி செய்யும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கமும் முன்பு இருந்த கலாசார அமைச்சுக்களை புறக்கணித்துத் தனியாக புத்தசாசன அமைச்சரை நியமித்துள்ளது. அதே சமயம் சிறுபான்மை சமயத்தவர்களின் விசேட தினங்கள், பெருநாள் தினங்கள் என்பவற்றின் விடுமுறைகளிலும் கட்டுப்பாடு கொண்டு வந்துள்ளது. இவ்வாறான செயற்பாட்டினால் தேசிய ஒருமைப்பாட்டுக்கு பதிலாக இனமுரண்பாடே தோன்றுகின்றது.

### *மொழிப்பிரச்சினை :-*

*இலங்கையின் தேசியே ஒருமைப்பாட்டை சீர்குலைத்த முக்கியமான காரணி என்ற வகையில் மொழிப் பிரச்சினையை எடுத்து நோக்கலாம். சுதந்திரத்துக்கு முன் 1944ல் விசேட ஏற்பாட்டுக்கு அமைய அரச கரும மொழியாக தமிழும், சிங்களமும் காணப்பட்டது. எனினும் சுதந்திரத்தின் பின் ஏற்பட்ட பொதுவான விளைவுகளின் காரணமாக மொழிப்பிரச்சினையானது தவிர்க்க முடியாத விடயமாகி விட்டது. ஒரு மொழியைப் பொதுவாக எல்லோரும் பேசும்போது பிரச்சினை என்பது குறைவாகவே காணப்படும். ஆனால் பலமொழிகளைப் பேசும் போது அங்கு பிரச்சினை தவிர்க்க முடியாத விடயமாகி விடுகின்றது. இலங்கையில் மொழிக்கொள்கை காரணமாக இனங்களுக்கு இடையே வகுப்புவாத உணர்வுகளும் முரண்பாடுகளும் வெளிப்படையாகத் தோன்றலாயின. 1956ல் கொண்டு வரப்பட்ட சிங்கள மொழிச் சட்டம் 1958ல் இனக் கலவரத்துக்குத் தூபமிட்டது. அரசியல் காரணங்களுக்காக U.N.Pயும் S.L.F.Pயும் 1956ல் மொழிச் சட்டத்தைப் பிரயோகித்து ஆட்சிக்கு வருவதை நோக்காகக் கொண்டு செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.*

*அதே வேளை 1944க்குப் பிற்பட்ட காலத்திலே ஆங்கில மொழிக்குப்பதிலாக சிங்களமும், தமிழும் அரச கரும மொழியாக சட்ட சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது 1948க்குப் பின் ஆங்கில மொழிக்கு எதிரான போராட்டமாகத் தொடர்ந்தது. பின் தமிழுக்கு எனக் கொண்டு வரப்பட்ட விசேட சரத்து 1966 வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.*

*அதேவேளை மொழிப்பிரச்சினையானது தொழில் வாய்ப்பு ரீதியாகவும், தமது தேவையை நிறைவு செய்யும் விடயத்திலும் பலதரப்பட்ட பிரச்சினைகளையும் தோற்றுவித்தது. அதேவேளை மக்களது அத்தியாவசிய விடயங்களை நிறைவு செய்யும் போது, விண்ணப்பங்கள், பரீட்சைகள் என்பன மொழி ரீதியான சிக்கலை ஏற்படுத்தின. மொழி ரீதியாக உயர்ந்த அந்தஸ்து இல்லாவிடினும் சம அந்தஸ்தாவது சாதி, மத, கலாசார ரீதியாக எதிர்பார்ப்பது இயல்பானது. எனவே சம அந்தஸ்து வழங்குவதாக அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நடைமுறையில் இதனைக் காண்பது அரிதான விடயமாகவே உள்ளது.*

### *பொருளாதார அமைப்பு :-*

*பொருளாதார அமைப்புகளை எடுத்து நோக்கும் போது ஆங்கிலேயரினால் ஏற்படுத்தப்பட்ட ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதாரம் சனத்தொகை விருத்திக்கு மாற்றமானதாகும். சமூக நலச் செலவீடு, ஒதுக்கீடுகள், குறைவான நிதிவளம், திட்டமிடா பொருளாதாரம், மந்தமான பொருளாதார வளர்ச்சி என்பனவும் இனரீதியான, பிரதேச ரீதியான நிதி ஒதுக்கீடு, தொழிற்சாலைகள் அமையப் பெறும் விதம் என்பன தமிழ் சிங்கள இன முரண்பாட்டை ஏற்படுத்துகின்றன. மற்றும் கல்வி நிலைகளை எடுத்து நோக்கின் பொருளாதார உதவிகளில் சிறுபான்மையினர் புறக்கணிப்பு என்பது பொருளாதாரரீதியான புறக்கணிப்புகளாகக் காணப்படுகின்றன.*

### *கல்வி அமைப்பு :-*

*அடுத்த அம்சமாக கல்வி எனும் விடயத்தை எடுத்து நோக்கும் போது ஒரு சமூகத்தின் உயிர் நாடியாகத் திகழ்வது கல்வியாகும். 1943ல் இலங்கையின் கல்வி முறை பற்றி ஆராய்ந்த விசேட குழு இலங்கையில் பல்லின மக்களை ஒன்றிணைத்து ஒரு நாட்டு இனமாக்கும் வகையில் கல்வித்திட்டம் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் எனக் கூறிய போதும், அது பின்பற்றப்படவில்லை. மற்றும் பொருளாதார வசதியின்மையினால் சகலரும் உயர் கல்வி வாய்ப்பைப் பெறமுடியாத நிலையும் காணப்பட்டது. அதே*

வேளை மொழிவாரியாகப் பாடசாலைகள் உருவாக்கப்பட்டமை கல்வி முரண்பாட்டை வளர்க்கக் காரணமாக இருந்தது. அத்துடன் இன முரண்பாட்டை வளர்க்கக்கூடிய வரலாற்று சம்பவங்களை பாடசாலைகளில் கற்பித்தல், மற்றும் மொழி வாரியாக வேறுபட்ட பாடத்திட்டம் என்பனவும் காணப் பட்டன. மேலும் தேசிய ஒருமைப்பாட்டுக்குத் தடையாகவுள்ள காரணிகள் என்ற வகையில் பல்கலைக் கழகத்திற்கான தெரிவும் அவற்றில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களும் முக்கியமானவை.

1971ல் மொழி அடிப்படையில் பல்கலைக்கழகத் தெரிவு (13.07.94 வீரகேசரி)

| பயிற்சி நெறி | பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளி | |
|---|---|---|
| | தமிழ் மொழி | சிங்கள மொழி |
| பொறியியல் பீடம் (1) பேராதனை | 250 | 227 |
| பொறியியல் பீடம் (2) கட்டுப்பெத்த | 232 | 212 |
| மருத்துவம்:- பல் மருத்துவம் | 250 | 229 |
| மிருக வைத்தியம் | 206 | 181 |
| உயிரியல் விஞ்ஞானம் | 204 | 183 |
| பௌதீக விஞ்ஞானம் | 184 | 175 |
| கட்டிடக் கலை | 194 | 180 |

1970ல் பொறியியல் பீடத்துக்கு மொத்தமாக 162 பேர் தெரிவு. இதில் 100 தமிழர்கள் தெரிவானமை குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து,

1973ல் மொழி மூலமான தரப்படுத்தல்.

1974ல் மொழி மூலமான தரப்படுத்தலும் மாற்றியமைக்கக் கூடிய மாவட்ட கோட்டா முறையும்.

1975ல் மொழி மூலமான தரப்படுத்தலுடன் ஓரளவு மாவட்ட கோட்டா முறையும் அறிமுகப் படுத்தப்பட்டன.

இதன் அடிப்படையில் சிங்களவர்களது விகிதம் படிப்படியாக கூடும் அதேவேளை, தமிழர்களின் விகிதாசாரம் குறைந்து செல்லும் நிலை காணப்பட்டது. இது இலங்கையில் தேசிய ஒருமைப்பாட்டிற்குத் தடையாக இருப்பதுடன் தீவிரவாதக் குழுக்களின் தோற்றத்திற்கும் காரணமாக அமைந்தது எனலாம்.

**புவியியல் அமைப்பு :-**

மேலும் தேசிய ஒருமைப்பாட்டிற்குத் தடையாகப் புவியியல் ரீதியாகவும், பிரதேசரீதியாகவும் காணப்படும் பிளவுகளும் காரணமாக அமைந்தன. அதாவது வடகிழக்கு தமிழர், மலைநாட்டுத் தமிழர், மலைநாட்டுச் சிங்களவர், கரையோரச் சிங்களவர், பிரதேச ரீதியாகத் தென்கிழக்குப் பகுதி (அம்பாறை, கல்முனை, சம்மாந்துறை) போன்ற பிளவுகள் காரணமாகத் தேசிய ஒருமைப்பாடு பாதிப்புறுகின்றது. ஆரம்ப காலத்தில் தென்னிந்தியப் படையெடுப்புகளில் இருந்து பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்காக சிங்கள மக்கள் வரண்ட பிரதேசத்தில் இருந்து, முதலில் வடமேற்குப் பகுதிக்கும், பின்னர் மலைநாட்டுக் கும், தென்பகுதிக்கும் குடிபெயர, தமிழர்கள் வரண்ட வட கிழக்கில் தமது குடியிருப்புகளை அமைத்தனர். இவ்வாறு ஈர, வரண்ட பிரதேசங்களை வசிப்பிடமாகக் கொண்டமையால் இவ்வாறு தமிழர், சிங்கள வர்கள் பிரிந்து வாழலானார்கள். மலைநாட்டுத் தமிழர்கள் (ஈரலிப்பு) சிங்களவர்களுடன் பிரிந்து வாழலானார்கள். இவ்வாறான பிரிவுகள் பௌதீகக் கலாசாரத் துண்டிப்பை ஏற்படுத்தியது மாத்திரமன்றித் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் தடையாக அமைந்தன எனலாம்.

***அரசியல் காரணி :-***

தேசிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைத்த காரணி என்றவகையில் அரசியல்ரீதியான காரணி களையும், பொதுக் காரணிகளையும் கவனத்திற்கொள்ளும் போது பலதரப்பட்ட விடயங்களில் எமக்குத் தெளிவு பெற முடிகின்றது. 1947ல் ஏற்படுத்தப்பட்ட சோல்பரி யாப்பில் 29ம் சரத்து மற்றும் செனட் சபை, அரசாங்க சேவை, நீதிச் சேவை என்பன சிறுபான்மையோரது நலனுக்காக ஏற்படுத்தப்பட்டவையாகும். இவை சிறந்த வெற்றியினைத் தரவில்லை. அதே சமயம் 1945ல் ஜீ.ஜீ. பொன்னம்பலம் 50:50 எனும் கோரிக்கையை முன்வைத்தார். எனினும் இது வெற்றியளிக்கவில்லை. இதனைத் தொடர்ந்து 1951ல் சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. எனினும் இதுவும் நிறைவேற்றப்படவில்லை. தொடர்ச்சியாகச் சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்டு வந்தமையால் திருப்தியற்ற நிலையிலே சிறுபான்மையினர் தொடர்ச்சியாகத் தமது கோரிக்கைகளை முன்வைத்தபடி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

1948ம் ஆண்டு சுதந்திரத்தைத் தொடர்ந்து UNP அரசாங்கத்தால் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டது. இது 1948 இலங்கையின் குடியுரிமைச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது எந்தவிதத்திலும் நியாயமானதாகாது. ஏனெனில் இலங்கையின் வருமானத்தில் பெரும்பகுதியை சம்பாதித்துத் தருபவர்களுக்குச் செய்யப்பட்ட பெரும் அநீதியாகவே கருதப்பட வேண்டும். அத்துடன் 1949ல் இந்தியா, பாகிஸ்தான் குடியிருப்பாளர் (பிரஜாவுரிமை) சட்டமும், 1948ன் சட்டமும், 1950, 1955 திருத்தச் சட்டத்தின்படியும் ஒருவர் இலங்கையின் பிரஜையாகத் தகைமை பெறுவது I. வம்சாவளிப் பிரஜை, II. பதிவுப்பிரஜை எனும் அந்தஸ்தினைக் கொண்டிருக்க வேண்டும் என்பதுவும் தொடர்ச்சியாகத் தோட்டத் தொழிலாளர்கள் கல்வி, பொது நல வசதி என்பவற்றில் பாதிப்புச் செலுத்தி வந்தது மாத்திரமன்றி பெருந்தோட்டங்களில் அவர்களின் வேலைக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படாத நிலையும் காணப்படுகின்றது. அதே வேளை 1992 - 1996 வரை தனியார் மயமாக்கம் காரணமாக 50,000 தோட்டத்தொழிலாளர்கள் தமது வேலைகளை இழந்து நிற்கின்றமையும், ஏனைய வருக்கு இருக்கும் சகல விதமான உரிமைகளும், சமத்துவமும் மறுக்கப்படுவதாக அன்று தொடக்கம் இன்று வரை குரல் எழுப்பிய வண்ணம் இருக்கின்றமையும் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முடியாத அம்சங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது.

***திட்டமிட்ட குடியேற்றம் :-***

சுதந்திரத்தின் பின் ஆட்சிக்கு வந்த அரசாங்கமானது குறிப்பாக 1948க்குப் பின் D.S.சேனநாயக்கா காலத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்கள் இன்றுவரை பாதிப்புச் செலுத்திய வண்ணம் இருக்கின்றன. 1960களில் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத்திட்டத்தையடுத்து,

| | |
|---|---|
| 1965 - கந்தளாய் | 1976 - தம்பலகாமம் |
| 1965 - கோமரங்கடவெல | 1976 - மொரவேவ |
| 1971 - சேருவில | 1982 - பதவிய, சிரிபுர |

போன்ற பல குடியேற்றத் திட்டங்களின்படி வடகிழக்கு மாகாணங்களில் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் சிங்கள மக்களை குடியேற்றியதன் மூலம் மாவட்ட ரீதியான இன விகிதாசாரத்தைக் குறைப்பதை நோக்கமாக கொண்டு செயற்படுத்தப்பட்டது. இதன்படி அம்பாறை மாவட்டத்தில் 75 வீதத்துக்கு மேலாக இருந்த முஸ்லிம்கள், இன்று 52 வீதமாகக் காணப்படுகின்றனர். அதேபோன்று திருகோணமலை மாவட்டத்தில் சேருவில, மணலாறு (வெலிஓயா) போன்ற குடியேற்றத்திட்டங்களினால் அங்கு சிறுபான்மையோரது விகிதாசாரம் திட்டமிட்டுக் குறைக்கப்பட்டது. இதே போல் வவுனியா, பொலநறுவை மாவட்டங்களிலும் திட்டமிட்ட குடியேற்றத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறான குடியேற்றத்

திட்டங்கள் தேசிய ஒருமைப்பாட்டுக்குத் தடையாக இருப்பதுடன் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு இன்று சவாலாகவும் இருந்து வருகின்றன.

மேற்குறிப்பிட்ட சகல விடயங்களையும் எடுத்து நோக்குகின்றபோது தேசிய ஒருமைப் பாட்டுக்குத் தடையாக அமைந்த காரணிகள் தெட்டத் தெளிவாக விளங்குகின்றதைக் காண முடிகின்றது. அதேவேளை இலங்கையில் சுதந்திர காலம் தொட்டு இன்று வரை பல தரப்பட்ட முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அவை தோல்வியைத் தழுவியதாகவே காணப்படுகின்றன. இந்த வகையில்

1957 - பண்டா - செல்வா ஒப்பந்தம்
1965 - டட்லி - செல்வா ஒப்பந்தம்
1983 - வட்டமேசை மகாநாடு
1983 - இணைப்பு 'சீ' திட்டம்
1984 - சர்வகட்சி மகாநாடு
1985 - திம்புப் பேச்சுவார்த்தை
1985 - புதுடில்லி ஒப்பந்தம்
1986 - அரசியல் கட்சி மகாநாடு
1986 - சிதம்பரம் - பண்டாரி முயற்சிகள்
1986 - பெங்களூர் பேச்சுவார்த்தை
1987 - இந்திய - இலங்கை ஒப்பந்தம்
1988 - D.P.A. இன் யோசனைகள்
1989 - சர்வ கட்சி மகாநாடு
1989 - கருணாநிதியின் மத்தியஸ்தம்
1990 - அரசு புலிகள் பேச்சு
1992 - பாராளுமன்றத் தெரிவுக்குழு
1994 - அரசு புலிகள் பேச்சு
1995 - பிராந்திய சபைகள் திட்டம்

போன்ற விடயங்களினால் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த முயன்ற போதும் அவை செயற்படுத்தும் போது தோல்வியையே தழுவியமையால் தேசிய ஒருமைப்பாடு என்ற விடயத்தில் இன்று மக்கள் நம்பிக்கை இழந்தவர்களாகவே காணப்படுகின்றனர். அதே வேளை இன்று இலங்கையில் தலைவிரித்தாடும் யுத்தத்தின் மூலம் பெறுமதிமிக்க மனித உயிர்களும், சொத்துக்களும், இயற்கை வளங்களும் நாளாந்தம் அழிவுப்பாதையை நோக்கிச் செல்வதற்கு காரணம் தேசிய ஒருமைப்பாடு இன்மையே என்று சொன்னால் அது மிகையாகாது.

**உசாத்துணை நூல்கள்**


- இலங்கையின் குடியரசு அரசியல் அமைப்பு - இ. முத்துத்தம்பி
- Communalism and Language in the Politics of Ceylon - Robert N. Kearney - (1967)
- இலங்கையின் இனத்துவமும் சமூக மாற்றமும் (சமூக விஞ்ஞானிகள் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் வழங்கப்பட்ட கட்டுரைகள்) - டிசம்பர் 1979
- சிவில் ஒத்துழையாமையும் ஏனைய கட்டுரைகளும், நீலன் திருச்செல்வம்-1997
- இலங்கையின் தமிழ்த் தேசிய வாதமும் அதன் தோற்றமும் வளர்ச்சியும், எஸ்.செல்வராஜா - 1982 (எம்.ஏ.ஆய்வுக் கட்டுரை)
- சமாதானப் போர் அன்றும் இன்றும் - இன உறவு அலுவல்கள் தேசிய நல்லிணக்க அமைச்சு - 1994.
- இலங்கையின் இனவர்க்க முரண்பாடுகள், குமாரி ஜெயவர்தனா - 1995
- இலங்கை நாட்டைக் கட்டி எழுப்புதல், ஞானா முனசிங்க - 1993
- இலங்கையின் இனவாதமும் சாதிபேதமும், மு.தர்மலிங்கம்
- Haward Wriggins-Ceylon: Dilemmas of New Nation - (P-20)
- பொருளியல் நோக்கு - ஜூலை 1976

# விடியுமா?

**வல்லிபுரம் சுகந்தன், 2 ம் வருடம் , பொறியியற் பீடம்.**

*வீடிழந்து நாடிழந்து*
*முகவரியும் நாமிழந்து*
*உடுத்த உடை தனையிழந்து*
*நடுத் தெருவில் நாயானோம்.*

*ஹெலி கண்டு நாங்கள்*
*கிலி கொண்டு ஓடி*
*எலிவளையாய் ஒரு குழிக்குள்*
*வலியுடன் நாள் கழிக்கின்றோம்.*

*அஞ்சி அஞ்சி எம்முடன்*
*கொஞ்சிக் கொஞ்சு மொழி பேசி*
*நெஞ்சில் நடை பயின்ற*
*பிஞ்சுப் பாதங்கள் மிதிவெடிக்கு இரையாக,*

*திண்ணைக்கு நிழல் தந்த*
*திருவார்த்தி, வேம்பும்*
*வேலிக்கு அரணமைத்த முட்கிளுவை*
*பூவரசும் பாழ்பட்டுப் போனதே!*

*ஒரு பிடி உணவிற்காய்*
*திரு வோடு தனை ஏந்தி*
*கரு வாடாய் வெயில் காய்ந்து*
*உருமாறி அலைகின்றோம்.*

*முந்தி நாங்கள் முற்றத்தில்*
*குந்தி யிருந்து சுற்றமுடன்*
*பந்தி வைத்து, வற்றலுடன்*
*சந்தி வரை அன்னமிட்டோம்.*

*காதலர் தாம் உடல் தழுவ*
*கடலலை அவர் கால் கழுவ*
*கதிரவன் தன் நிலை நழுவ*
*காரிருளில் எம்மூர் நிலா வழுக்கும்.*

*ஊஞ்சல் ஆடி விளையாடி*
*உடைந்து போன கிளை கூட*
*நெஞ்சின் அடி மஞ்சத்தில்*
*நீங்காமல் நிலைத்திருக்க,*

*சிறகிழந்த பறவைகளாய்*
*உறவிழந்து வாடுகின்றோம்,*
*வாடுகின்ற எம் வாழ்வில்*
*வந்து தென்றல் வீசாதோ?*

# தமிழர்களின் பாரம்பரியத் தாயகம்

## சார்பு - எதிர்வாதங்கள்

*பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா, அரசறிவியல் துறை.*

*இலங்கைத் தமிழர்களது பாரம்பரிய தாயகம் என்ற எண்ணக்கருவைச் சரியாக விளங்கிக் கொள்வதற்கு அரச உதவியுடனான குடியேற்றத்திட்டங்களை, பிரதானமாக உலர் வலயத்தில் ஆரம்பிக் கப்பட்ட அத்தகு திட்டங்களைப் பரிசீலனை செய்வது அத்தியாவசியமாகும்.*

*இலங்கையில் 1934ல் அரச உதவியுடனான குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமைக்கு, திரு டீ.எஸ். சேனநாயக்கவின் முயற்சிகளே பிரதான காரணமாக இருந்தன. அவர் அப்போது விவசாய அமைச்சராக இருந்தார். இந்தத் திட்டங்கள் பல்வேறு காரணங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டன: சனத்தொகை அதிகரிப்பு, வேலையின்மைப் பிரச்சினை, 1930 களில் இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தைப் பாதித்த பொருளாதார மந்தம்.*

*இலங்கையின் உலர் வலயம் என்பது ''மலைநாட்டுப் பகுதிகள் தவிர்ந்த தீவின் வட கிழக்கு பகுதிகளை உள்ளடக்கியது'' ஆகும். அது இலங்கையின் நிலப்பகுதியில் 2/3 பங்கை உள்ளடக்கியதாகும்.*

*நாட்டின் இரு பிரதான பொருளாதாரப் பிரச்சினைகள் அப்போதைய கொள்கை வகுப்பாளர் களை இத்தகைய குடியேற்றத் திட்டங்களை ஆரம்பிக்கத் தூண்டியிருக்கலாம். முதலாவது இலங்கை அதனது உணவுக்காக வெளிநாடுகளில் பெருமளவில் தங்கியிருந்தமை, உணவு வகைகளை வாங்குவதற்காக இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தின் பெரும்பகுதி செலவிடப்பட்டமை.*

*மேற்கூறிய திட்டங்களினூடாக குடியானவர்கள் அதிகளவு உணவைப் பயிரிட ஊக்குவிக்கப் பட்டது. இரண்டாவதாக, சனத்தொகை அதிகரிப்பு, நிலப்பற்றாக்குறை என்பனவும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்களின் மக்களை இடம்பெயர வைக்கும் இன்னொரு ஊக்குவிக்கும் காரணியாக அமைந்தது.*

*1935ம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட நில அபிவிருத்தி கட்டளைச் சட்டம், குடியமர்வு களுக்கு வாய்ப்பாயிருந்த பகுதிகளை அரசாங்கம் விளம்பரஞ் செய்ய வேண்டும் என்று கோரியது. நிலங்கள் குத்தகை முறையில் வழங்கப்பட்டன. நேரடியாகக் கொடுக்கப்படவில்லை. ஏனெனில் குடியிருப்பவர்கள் அதனைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்பதற்காகவாகும்.*

*W.H.றிக்கின்ஸ் என்பவரின் கருத்துப்படி ''1945 க்கும் 1955 க்கும் இடையில் ஏறத்தாழ 20,000 ஏக்கர் உலர் வலய நிலம் பயிரிடுகைக்காகத் திறந்து விடப்பட்டதோடு, ஒரு லட்சம் மக்கள் புதிய வீடுகளைப் பெற்றுக் கொண்டனர்''.*

இத்தகைய பல திட்டங்கள் தமிழ் பேசும் பிரதேசங்களிலோ அல்லது இலங்கைத் தமிழர்கள் வாழ்ந்த பகுதிகளுக்குக் கிட்டவோ தான் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கைத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய சமஷ்டிக்கட்சி, காலக்கிரமத்தில், சிங்களவர்களை இத்திட்டங்களில் குடியமர்த்துவது இலங்கைத் தமிழர்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் என்ற காரணத்துக்காக இதனை எதிர்த்தது.

சமஷ்டிக்கட்சித் தலைமைத்துவம் இத்தகைய திட்டங்கள் இலங்கைத் தமிழர்கள் பெரும் பான்மையாக வாழும் பகுதிகளைச் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளாக மாற்றும் என வாதிட்டதோடு, தமிழ் மாகாணங்களின் சனத்தொகைப் பரம்பல் மாதிரியினைச் சிங்களக் குடியேற்ற வாசிகள் மாற்றக்கூடும் என்றும் வாதிட்டனர். சமஷ்டிக்கட்சித் தலைவர் S.J.V. செல்வநாயகம், அக்கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் 1949 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 18ம் திகதி பேசும் போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

> ''.....தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தளவில் மேலும் அபாயகரமான விடயம் என்னவெனில் அரசாங்கத்தின் குடியேற்றக் கொள்கையாகும். நாம் கல்லோயாவில் அதன் ஆரம்பத்தையே காண்கிறோம்....இப்பிரதேசம் தூய்மையான / முழுமையான தமிழ் பேசும் பிரதேசம் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு..... இப்போதுள்ள தமிழ் பேசும் பிரதேசங்களைக் குறைக்கும் நீதியற்ற நோக்கத்திற்காக அரசாங்கம் தனது அதிகாரங்களைப் பயன்படுத்து கின்றது.....ஆகவே சமஷ்டிக்கட்சி பாரம்பரியமான தமிழ்ப் பிரதேசங்களில் குடியமர்த்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்பதைத் தனது நோக்கங்களில் ஒன்றாகவும் கோரிக்கைகளில் ஒன்றாகவும் சேர்த்துக் கொண்டது.''

தமிழ் பேசும் மக்களின் தனியான அடையாளத்தை வற்புறுத்துவதன் ஊடாக சமஷ்டிக்கட்சி தமிழ் பேசும் மக்களின் தேசிய உளப்பாங்குக்கு அறைகூவல் விடுத்தது. தமிழர்களின் தலைமைத்துவம், ஒரு தேசத்துக்கு இருக்க வேண்டிய ஒவ்வொரு அம்சங்களைப் பொறுத்தவரையிலும் தமிழர்கள் ஒரு தேசம் என்பதனை நிலை நிறுத்த முற்பட்டது. முதலாவதாகத் தமிழர்களுக்குத் தனியான வரலாற்றுக் கடந்த காலம் உண்டென்பதையும் இரண்டாவதாக ஒரு தனியான மொழி வழி, குழுமமாக உள்ளது என்ற உண்மையையும் திட்டவட்டமான பிரதேசங்களை உள்ளடக்கிய குடியிருப்புகளைக் கொண்டிருந்தது என்ற காரணத்தையும் காட்டி, அது ஒரு தனியான தேசம் என்பதை வற்புறுத்தியது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> ''இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் ஒரு தனியான தேசத்தவர்கள் ஆவர். சர்வதேச ரீதியில் எமக்குத் தெரிந்த எல்லா அளவீடுகளின் அடிப்படையிலும் ஒரு தேசத்துக் கென ஏற்றுக் கொள்ளப்பட்ட எல்லா வரைவிலக்கணங்களின்படியும் தமிழ் மக்கள் ஒரு தனியான தேசம் என்பதற்கு தகுதியுடையவர்கள் ஆவர்.''

எமக்குக்கிடைக்கின்ற புள்ளிவிபரங்கள், மட்டக்களப்பு மாவட்டத்தின் சிங்கள சனத்தொகை 1946ல் 11.5 சதவீதம் என்பதிலிருந்து 1963 ல் 32.7 சதவீதமாக அதிகரித்தமை, கிழக்கு மாகாணத்தில் ஒரு புதிய மாவட்டமான அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட வழிவகுத்தது.

திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவருடைய சனத்தொகை 1946ல் 20.7 சதவீதமாக இருந்து 1981ல் 33.6% மாக அதிகரிக்க, இலங்கைத் தமிழரின் சனத்தொகை 1946 ல், 40.1 சதவீதத் திலிருந்து 1981 ல் 33.8 சதவீதமாகக் குறைந்தது.

திருகோணமலையில் சிங்களவரின் சனத்தொகையின் அதிகரிப்பானது 1976ல் அப்போதைய அரசாங்கம் நியமித்த தேர்தற் தொகுதி எல்லைகளை நிர்ணயிக்கும் ஆணைக்குழு ஒரு புதிய தேர்தற்

தொகுதி உருவாக்கப்பட வழிவகுத்தது. அதுவே சேருவில ஆகும். திருகோணமலையிலும் மட்டக் களப்பிலும் ஏற்பட்ட சனத்தொகை மாற்றமானது தமிழ்த்தலைவர்கள் வெளியிட்ட அச்சங்களில் சில உண்மைகள் இருப்பதைக் காட்டியது.

1950க்கும் 1977க்குமிடையில் அரசாங்கம் மட்டக்களப்பில் கல்லோயாத் திட்டத்தினை ஆரம்பித்ததோடு, அனுராதபுரத்தில் மகாவிலாச்சிய திட்டத்தையும், குருநாகலில் அத்தறங்கலாவ, வறற்வத்த ஓயா திட்டங்களையும், மட்டக்களப்பில் உன்னிச்சைத் திட்டத்தையும், திருகோணமலையில் அல்லைத் திட்டத்தையும், வவுனியாவில் மாங்குளம், வன்னிக்குளம் திட்டங்களையும் ஆரம்பித்தது. ஆகவே தமிழர் தலைமைத்துவம், இத்தகைய திட்டங்களை எதிர்த்ததோடு மாத்திரமல்லாது மேற்சொன்ன பிரச்சினைகளில் தமிழர்களின் தேசிய உணர்வினையும் தூண்டியது. தமிழர் தலைமைத்துவத்தினால் முன்னெடுக்கப்பட்ட பாரம்பரிய தாயகம் என்ற எண்ணக்கரு பலரின் எதிர்ப்புக்குட்பட்டது. உதாரணமாக காமினி இரியகொல என்பவர் தனியான ஒரு தமிழரசுக்கான கோரிக்கையானது இலங்கையின் பழைய, நவீன வரலாறுகளைத் தவறாகக் கணிப்பீடு செய்ததன் மீது தான் முன்வைக்கப்பட்டது எனக் குறிப்பிடு கிறார். மேலும் அவர், யாழ்ப்பாண அரசின் தோற்றமானது அல்லது யாழ்ப்பாண அரசானது தென்னிந்திய விஜயநகர சாம்ராஜ்யத்திற்கு உட்பட்ட ஒரு மானிய அரசாகத் தான் இருந்தது அல்லது மற்றைய நேரங்களில் யாழ்ப்பாண இராச்சியத்தின் தளகர்த்தர்கள் போர்த்துக்கேய அரசின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டவர்களாக இருந்தனர் என்று குறிப்பிடுகின்றார்.

இத்தகைய வரலாற்று நோக்கை ஏனையோர் எதிர்த்துள்ளனர். உதாரணமாக கலாநிதி C.R. de சில்வா ''14ம் நூற்றாண்டின் மத்திய பகுதியில், இந்த மாகாணத்தின் தளபதி அல்லது அரசன் மேற்குக் கரையோரத்தைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரமுடிந்தது. அதாவது களனி ஆறு வரை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முடிந்தது என்பதையும் கம்பளையின் அரசனாக இருந்த (1357-1374 வரை) 3ம் விக்கிரமபாகுவை தானனுப்பிய வரிசேகரிப்பாளர்களை ஏற்கும்படி செய்தமையும் அதாவது சிங்கள அரசரின் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் வரிசேகரித்தமையை இரியகொல சொல்ல மறந்து விட்டார்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

பதின்மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதிகள் வரை ஒரு தமிழ் இராச்சியம் இருந்தது என்பதை ஏற்றுக் கொள்ளும் பேராசிரியர் K.M.de சில்வா அவர்கள் ''அந்த இராச்சியம், யாழ்ப்பாணக் குடாநாட்டையும் அருகிலுள்ள சில பிரதேசங்களையும், அதாவது கரையோரப் பிரதேசங்களையும், உள்ளேயுள்ள சில பகுதிகளையும் கட்டுப்படுத்தியது'' என்று குறிப்பிடுகிறார்.

மேலும் அவர், ''1977 ம் ஆண்டு, தமிழர் கூட்டணி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திலும், வட்டுக்கோட்டைப் பிரகடனத்திலும் வெளியிடப்பட்டுள்ள சுதந்திரமான ஒரு அரசுரிமை தொடர்பாக தொடர்ச்சியான ஒரு தேசிய கருத்தொருமைப்பாடோ அல்லது தொடர்ச்சியான மரபோ இருந்தமைக்கு குறைந்தளவான சான்றுகள் உள்ளன'' என வாதாடுகின்றார். மேலும் அவர், ''கிழக்கு மாகாணம் யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒரு பகுதியாக ஒருபோதும் இருந்ததில்லை என்றும் அது கண்டி இராச் சியத்தின் ஒரு பகுதியாக இருந்தது'' என்றும் வாதிடுகிறார். இதுபற்றி பேராசிரியர் ஜெரால்ட் பீரிஸ் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> ''கிழக்கு மாகாணத்தின் உட்பகுதிகளில் குடியமர்ந்தவர்கள் அடர்த்தியற்ற முறை யிலேயே குடியமர்ந்தனர் என்றும் கரையோரப் பகுதிகளில் தமிழர்கள் எண்ணிக்கையளவில் அதிகமாக இருந்தனர் என்பதைக் கொண்டு இந்த பிரதேசம் தமிழர்களது பிரதேசம் என்று கோட்பாட்டு ரீதியில் அழுத்தம் கொடுப்பதற்கு அனுபவ ரீதியான அடிப்படைகள் ஒன்றும்

இல்லை. உள்ளூர் பிரதேசங்கள் மற்றைய இனத்துவக் குழுக்களுக்குள்ள மரபு ரீதியான உரிமைகளைக் கருத்தில் எடுக்காது தமிழர்களுக்கு உரிய பிரதேசம் என உரிமை கொண்டாடுவது சரியான விடயம் அல்ல''

பேராசிரியர் ஜெரால்ட் பீரிஸ் அவர்களது வாதம், தமிழர்கள் தமது பாரம்பரிய தாயகமாக முழுமையான கிழக்குமாகாணத்தை உரிமை கொண்டாட முடியாது. ஏனெனில் புராதன, மத்திய காலப்பகுதிகளில் அது சிங்கள பாரம்பரிய கிராமங்களைக் கொண்டிருந்தது என்பதாகும்.

மறுபுறம், தமிழ் ஆய்வாளர்கள் தமது அரசியல் பலமும் பொருளாதார பாதுகாப்பும், நிலக் குடியமர்வுக் கொள்கைகளால் அழிக்கப்படலாம் என்ற பயத்தினாலேயே அக்கொள்கையை முன்வைத்துள்ளனர் என்கின்றனர். உதாரணமாக ராதிகா குமாரசாமி அவர்கள் ''பாரம்பரியத் தமிழர் தாயகம் பற்றிய உரிமைகோரலை அரச அதிகாரத்தைக் கட்டுப்படுத்தாத ஒரு ஆள்புலம் உள்ள இனச் சிறுபான்மை அரசுக்கெதிரான தனது உரிமைகளை வற்புறுத்தும் பின்புலத்தில் தான் நாம் இதனை சிறப்பாக விளங்கிக் கொள்ள முடியும்'' என்று வாதிடுகிறார். ''விசேடமாக, ஒரு இனத்துவக் குழுவின் அரசியல் அதிகாரத்தினை அல்லது அதனது சமூக பொருளாதார வாழ்வு முறையினை மாற்ற முற்படும் அல்லது மலினமாக்க முற்படும் அரசின் முயற்சிகளின் பின்னணியில்தான் அதனை நோக்க முற்படும்'' என்று குறிப்பிடுகிறார். கலாநிதி நீலன் திருச்செல்வம் அவர்கள் ''கிழக்கு மாகாணத்தில் புராதன கிராமங்கள் உள்ளன என்பது கிழக்கு மாகாணத்தின் மற்றைய பகுதிகளில் தாயகம் ஒன்றைத் தமிழர்கள் கோரமுடியாது என்று பொருள்படாது'' என்று குறிப்பிடுகிறார்.

மேற்சொன்ன வாதங்களுக்கு மத்தியிலும் தமிழ் அரசியற் தலைவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகம் உள்ளது எனத் தொடர்ச்சியாக உரிமை கொண்டாடி வருகிறார்கள்

இந்தத் தொடர்பில் எது முக்கியமானதெனில் இவ்விரு மாகாணங்களில் வாழும் தமிழர்கள் இப்பிரதேசங்களைத் தமது பாரம்பரியமான தாயகம் எனக் கொள்கிறார்கள் என்பதாகும்.

**முடிவுரை**

மேற்சொன்ன எமது பரிசீலனை மூலம் தமிழ்த்தலைவர்களும் தமிழ் மக்களும் வடகிழக்கு மாகாணங்களை தமது பாரம்பரியத் தாயகமாகக் கொள்கிறார்கள் என்பதையும் அந்தப்பாரம்பரியப் பிரதேசங்களை அரச உதவியுடனான திட்டமிட்ட குடியேற்றங்களின் மூலம் சேதப்படுத்தப் பிறர் முயன்று வந்துள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக ஒரு அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டதிலிருந்தும், திருகோணமலையில் சேருவில என்ற புதிய தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டதிலிருந்தும் இது புலனாகின்றது.

எமக்குக் கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் 1983ம் ஆண்டுக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தில் இந்தப் பாரம்பரியத் தாயகத்தை இராணுவ உதவியுடனான பல்வேறு திட்டங்களினூடாகச் சேதப்படுத்த மேலும் முயற்சிகள் இடம்பெற்று வருவதாக அறிகிறோம். ஆகவே அத்தகைய முயற்சிகள் உடனடியாக தடுத்து நிறுத்தப்படுவதற்கு ஆவன செய்யபட வேண்டியது அத்தியாவசியமான ஒரு நடவடிக்கையாகும்.

புரையோடிப் போயுள்ள இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதில் இந்தப் பாரம்பரிய தாயகம் பற்றிய பிரச்சினைக்கும் தீர்வு காணப்படவேண்டியது அவசியமாகும்.

# சமூக அரசியல் மெய்யியல் நோக்கில் காந்தீய அஹிம்சையும் - வன்முறையும்

எம்.ஐ.எம். தௌபீக், மெய்யியல் (விசேடம்), கலைப்பீடம் .

யதார்த்தம் பற்றிய அறிவுரீதியான மெய்யியலானது எத்துறைகளையும் விட்டுவைக்கவில்லை. பொருளியல், அரசியல் என்று எதுவாயிருப்பினும் காலத்துக்கு காலம் மாறிவந்த தனக்குரிய சிந்தனை முறையினூடாக இவற்றை அது செய்கின்றது. இந்த வகையில் அரசியல் என்ற துறை கூட மெய்யியலுக்குள் கொண்டுவரப்பட்டு 'சமூக அரசியல் மெய்யியல்' என அழைக்கப்படுகின்றது.

சமூக அரசியல் மெய்யியல் சமுதாயத்தின் அரசியல் முறைகளையும், அவற்றின் தொடர்பட்ட எண்ணக்கருக்களையும் பகுப்பாய்வு செய்கின்றது. இவ்வகையில், தற்கால உலகில் பேசப்படும் காந்தீய அஹிம்சையையும் - வன்முறையையும் இந்நோக்கில் ஆராய்வோமெனின், இன்னா செய்யாமை, தீங்கு செய்யாமை, தீமையான செயல்களைப்பற்றி மனத்தாலும் நினையாமை எனப்பொருள்படும். அஹிம்சையானது மகாத்மா காந்திஜியினால் (1869-1948) பிரபல்யப்படுத்தப்பட்ட கொள்கையாகும். காந்திஜி அஹிம்சையை தனது வாழ்வில் நடைமுறைப்படுத்திய பின்பே பிறருக்கு அறிவுரை செய்தார். எனவேதான் தனது சுயசரிதைக்கு "My Experiments with truth" என்ற தலைப்பினை அமைத்தமை குறிப்பிடத்தக்கது. காந்திஜி அஹிம்சையை விளக்க மூன்று பிரிவாக எடுத்துக்காட்டுகின்றார்.

1. தெளிந்த சிந்தனையும் ஆழ்ந்த நம்பிக்கையும் கொண்டவர்கள் பின்பற்றும் அஹிம்சை (Non-Violence of the Enlightened). இது முதன்மையானது
2. அறிவு வளர்ச்சியும், ஆழ்ந்த நம்பிக்கையும் இல்லாதவர்கள் பின்பற்றும் அஹிம்சை (Passive - Non - Violence). இது இரண்டாவது நிலையாகும்.
3. கோழைகள் பிடிவாதமாக பின்பற்றும் அஹிம்சை (Non-Violence of the Coward). இது மூன்றாம் நிலையாகும்.

இவ்விதமிருக்க, முதன்முதலாக ராஜாங்கத்துக்கெதிராக ஒத்துழையாமை இயக்கம் அல்லது சட்டமறுப்பியக்கத்தை சித்தாந்த, அரசியல் முறையாகவும் உணர்ந்து கூறியவர் அமெரிக்க அரசியல் ஞானியான 'தோரே' (1817-1862) என்பவரேயாவார். அவரது சட்டமறுப்பு (Civil disobedience) என்ற அரசியல் கட்டுரை சிந்தனையைத் தூண்டவல்ல அரிய கட்டுரையாகும்.

சமூக மாற்றத்தை ஏற்படுத்த காந்திஜி அஹிம்சையை ஒரு சாதனமாக பயன்படுத்தினார். அவரின் அஹிம்சை, ஹிம்சையோடு தொடர்புடையது. அவர் முழு அளவில் வன்முறையை (Violence)

எதிர்க்கவில்லை. ஆனால் அவருக்கு நியாயப்படுத்தலிலேயே பிரச்சினை இருந்தது குறிப்பிடத்தக்கது. காந்திஜி பல்வேறு சுற்றாடல் தன்மைகளை குறிப்பிட்டு அஹிம்சையை அதில் எவ்வாறு பயன்படுத்தலாம், பயன்படுத்த முடியாது என்பது பற்றிக் கூறியுள்ளார்.

அஹிம்சைக்கான முதலாவது நிபந்தனை, ஒருவகையில் அஹிம்சை என்பது தற்காப்பு நிலை (Resistance) ஆகும். இந்நிலை மாறுமானால் அஹிம்சை வன்முறையாக மாறும். இது காந்திஜியின் நடைமுறையில் பலமுறை நடந்துள்ளது. ஆனால் இங்கு ஒன்றை மனதில் கொள்ளவேண்டும். எங்கு வன்முறை இருக்கின்றதோ அங்கு தான் அஹிம்சை பயன்படுகின்றது. மேலும் உண்மையானதும், அர்த்தமுள்ளதுமான விடயங்களுக்கெதிரான சூழ்நிலை ஏற்படும் நிலையில் தான் அஹிம்சை பயன்படுத்த சரியான சூழல் என்றார். அதனால் தான் சத்தியாக்கிரகத்தின் வெற்றிக்கு நிபந்தனை கட்டாயம் என்றார்.

அஹிம்சைக்கான இரண்டாவது நிபந்தனை அதில் சம்பந்தப்படும் முகவர்களைப்பற்றியதாகும். இதில் கோழைத்தனத்தை குறிப்பிடுகின்றார். கோழைத்தனம் அஹிம்சைக்கு பொருத்தமற்றது. வன்முறை, கோழைத்தனம் என்ற இரண்டிலொன்றை தெரிவு செய்தல் என்ற நிலையில் நான் வன்முறையை ஆதரிக்கின்றேன் என காந்திஜி கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. அங்கு ஒரு முரண்பாடு எழுவதைக் காணலாம். அச்சத்தை வாழ்விலிருந்து நீக்கியவனே அஹிம்சையைக் கடைப்பிடிக்க முடியும். அச்சமுடைய ஒருவன் வன்முறை செயல்களை தவிர்த்தல் இயலாத ஒன்றாகும். ஹரிஜன் இதழில் காந்திஜி கூறுவது: இயலாத சுண்டெலி பூனையினால் உண்ணப் பெறுகின்றதால், இது துன்புறாத நிலையில் விளங்குகின்றது என கூறமுடியாது. தன்னைக் கொலை செய்யும் பூனையையும் தான் உண்ணத்தயாராக இருக்கும். ஆனால் எப்பொழுதும் பூனையைக் கண்டு ஓடி ஒழிவதால் உண்ண இயலுவதில்லை. எனவே வன்முறை பலமுள்ளது போல் தோன்றும். ஆனால் அதன் பலம் போலியானது என்றார் காந்திஜி. எனவேதான் அஹிம்சை என்பது ''பலம் உள்ளவர்களுக்கு இருப்பது போல் பலவீனர்களுக்கும் சமமான நிலையை உருவாக்குவதும், தனிமனித சுதந்திரத்தை பாதுகாப்பதும் தான்'' என ஹரிஜன் இதழில் (18-05-1940) கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இவரது கருத்தில் தண்டனை வழங்குவதை விட மன்னிப்பது பொருத்தமாகும். அதாவது தண்டனை அளிக்கக்கூடிய அதிகாரம் எப்போது வலிமையுடையதாக இருக்கின்றதோ அப்போது மன்னிப்பதே பொருத்தம் என்றார். இவ் அஹிம்சை முறையைத்தான் இந்திய விடுதலைப் போருக்கு சாதகமாக பயன்படுத்த முயன்றார். ஒருவன் வன்முறையை பார்த்து திரும்பி ஓடுவதாகயிருக்கலாம். ஆனால் சத்தியாக்கிரத்தின் வெற்றிக்கு முடிவுவரை துன்பத்தை சுமத்தலே (Suffer to the end) தேவையாகும். ஆனால் அஹிம்சைக்கு சுய கௌரவம் (Self Respect) என்ற எல்லையிருக்கின்றது என்றார். எனவே அஹிம்சையில் தற்காப்பு, சுயகௌரவம் இணைதல் வேண்டும்.

உண்மையான ஜனநாயகம் வன்செயல்களிலிருந்து பெறமுடியாதென்றார். ''கள்ளிவிதையை விதைத்து அதிலிருந்து அழகிய ரோஜா மலரை எதிர்பார்க்க முடியாது''. அதாவது பலாத்காரம், வன்முறையாலும் உண்மையான சுய ஆட்சியை பெறமுடியாதென்றார். மேலும் தனி நபர்களின் சுதந்திரம் ஏற்கக் கூடியதாயிருந்தாலும் கூட தீமை கலவாத அஹிம்சையுள்ள இடத்தில் தான் சாத்தியமாகும். இவ்வகையிலே சமூக ஒற்றுமை என்ற மாக்ஸிச கருத்தில் உடன்பாடாயிருந்த காந்திஜி ''பலாத்காரமின்றி கம்யூனிசம் வருவதென்றால் தாராளமாக வரட்டும்'' எனக் கூறியிருப்பது நோக்கத்தக்கது.

எனவே காந்திஜி வன்முறையற்ற அஹிம்சையில் உறுதியாகயிருந்து பொருள் பற்றற்ற நிலையிலும் (Non attachment), அன்போடும் தொடர்புடையதாக இருக்கவேண்டும் என்றார். வன்முறை பற்றி கூறும்போது முக்கிய பிரச்சினையாக பற்றற்ற நிலை காணப்படுகிறது. இப்பற்றற்ற நிலையையே

பகவத்கீதையில் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்கிறார். உண்மையில் காந்திஜி யுத்தம் செய்து கொண்டு அஹிம்சையாக இருக்கலாம் என்பதை எதிர்க்கவில்லை.

மூன்றாவதும், இறுதியுமான நிபந்தனை அஹிம்சை தற்காப்பினூடாக ஏற்படுத்தப்படும் முறையாகும். எவ்வாறாயினும் அஹிம்சை என்பது நாம் விளங்கிக் கொள்ள போதுமானதா? ஏனெனில் இந்நிபந்தனைகளை பொதுவான முறையாகத்தான் சேர்த்திருந்தார்.

காந்திஜி அடிக்கடி கூறுவது, அஹிம்சை எதிரியின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்த செயல்படும் ஒரு தொழில்நுட்பமாகும். ஆனால் தேவையான அளவைவிட மிகுதியாக வன்முறை பயன்படுத்தப் படுமானால் அங்கு அஹிம்சையின் முறை என்ன? என்ற கேள்வி எழுகின்றது. சாதாரண வாழ்வில் வன்முறை ஏதாவதொரு வகையில் தவிர்க்க முடியாதது எனக்கூறிய காந்திஜிக்கு அஹிம்சைக்கு உறுதியான கோட்பாடொன்றைத் தரமுடியாமல் போயுள்ளது. அதேபோல் வன்முறைக்கும் நியம வரையறை தரமுடியவில்லை. எனவே காந்திஜியின் அஹிம்சை - ஹிம்சை பற்றிய சில கருத்துக்கள் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. ஏனெனில் இந்திய நிலைமைக்கேற்ப பற்றற்ற நிலையாகத்தான் அஹிம்சையைக் கருதினார்.

ஆனால், காந்திஜி தனது அஹிம்சையின் மூலம் நினைத்த இந்தியா இன்று தலைகீழாக மாறியிருப்பதை காணலாம். அவர் வெள்ளையரை எதிர்க்க உபயோகித்த அஹிம்சா போராட்டங்கள் இன்று அரசியல்வாதிகளாலும், வன்முறையாளர்களாலும் தவறாக உபயோகிக்கப்படுகின்றன. ஏனெனில் இன்று ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டம் காலையில் சாப்பிட்டுவிட்டு மாலை ஐந்து மணிக்கு தோடம்பழ ரசத்துடன் விரதத்தை முடித்து கொள்ளுமளவுக்குக் கேவலமாகி விட்டது.

அதுமட்டுமன்றி A.R.ரஹ்மானின் பாடல்களை முணுமுணுப்பது இன்றைய கலைஞர்களின் மோகமாக விளங்குவது போல, இளம் இந்திய அரசியல்வாதிகளுக்கு காந்திஜியின் கொள்கைகளை மறுப்பதும், தூற்றுவதும் பாஷனாகி போய் விட்டதை காணலாம்.

உதாரணம்:- இந்திய அரசியல்வாதி மாயாவதி

மேலும் இந்திய எழுத்தாளர் பிக்கு பிரேக் தனது "Colonialism, Tradition and Reform" என்ற நூலில் "Sex Energy and Politics" என்ற அத்தியாயத்தில் காந்திஜி பற்றி கூறியிருப்பது சில ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் சர்ச்சையைக் கிளப்பியதை அறியலாம்.

இன வன்முறையை நோக்கின், யூட்டன் கிறில்லர் 'வன்முறைக்கும் Forceக்கும் நெருங்கிய தொடர்புண்டு' என்றார். ஆனால் சில சந்தர்ப்பங்களில் வேறுபடுகின்றது. அதாவது வன்முறை நடைபெறும் போது அங்கு மனித நடவடிக்கை செயல்படுகிறது. இதை தெளிவாக கூறின் Ideas of Violence, Ideas of Force அல்ல. வேறு வகையில் கூறினால் மனிதன் ஏதாவதொன்றை மீறுகின்றான். இதனால் வன்முறை மீறப்பட்ட நடவடிக்கை எனலாம்.

அண்மைக்கால அரசியல் வன்முறையாளர்களை கெரில்லாக்கள், சுதந்திர போராளிகள், கிளர்ச்சியாளர்கள் என்றெல்லாம் குறிப்பிடப்படுகின்றது. யாஸீர் அறபாத் வன்முறையாளர்களை பற்றி கூறுகையில் 'யாரும் பயங்கரவாதியல்ல. அவர்கள் நீதியான காரணங்களுக்காக போராடுபவர் களாயிருந்தால்' என்றார்.

இவ்விடத்தில் நாம் சற்று பயங்கரவாதம் பற்றி நோக்கின் "Terrorism is a Violence" என சாதாரணமாக ஒரு வரைவிலக்கணம் இருப்பினும் 1970ல் அலெக்சாண்டர் ''பயங்கரவாதம் கட்டாயம்

வன்முறையைக் கொண்டிருக்க வேண்டியதில்லை. வன்முறை இல்லாமலும் பயங்கரவாதத்தை ஏற்படுத்த முடியும்'' என்றார்.

அரசியல் பயங்கரவாதிகளில் பல்வேறு பிரிவினர் காணப்படுகின்றனர்.

1. சர்வதேச ரீதியான பயங்கரவாதிகள் - International Terrorists.

2. அடிப்படைவாதப் பயங்கரவாதிகள் - Fundamentalists.

3. கருத்தியல் பயங்கரவாதிகள் - Ideologists.

இக்குழுக்களின் நோக்கங்களை பொறுத்து அவை பல்வேறாகயிருப்பினும் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கலாம். பொதுவாக ஜனநாயக சமூகங்களில் வன்முறை ஆர்ப்பாட்டங்கள் வரவேற்கப் படுவதில்லை. பயங்கரவாதமும் தான். சர்வதேச சமூகத்தை பொறுத்தவரை அவர்களின் ஒத்துழைப்பை பொறுத்தவரை இவ்விடயத்தில் பலமிழந்த நிலையில் இருக்கின்றனர். ஏனெனில் பல நாடுகள் பயங்கர வாதத்தை பயன்படுத்தும், மறைமுகமாக ஆதரிப்பவைகளாகவுள்ளன.

சமூக, அரசியல், இன, கைத்தொழில் ரீதியான காரணங்கள் வன்முறையை தோற்றுவிக்கின்றன. சில ஆய்வாளர்களின் நோக்கில் ஜீன்போல் சாத்ரேயின் (1905-1980) இருப்புவாத (Existentialism) கருத்துக்கள் 3ம் உலக யுத்தத்தை உருவாக்கக் காரணமாக இருப்பதாக கூறப்படுகிறது.

உளவியல் ரீதியில் வன்முறையை நோக்கின், நபர்கள், சொத்துக்களுக்கெதிராக பலாத்காரத்தை பிரயோகித்தல் வாயிலாக பகைமையை வெளிப்படுத்துவதாகும். சிக்மன்ட் பிறைட் தனது ''நாகரிகமும் விரக்தியும்'' என்ற நூலில் மனிதன் மனிதனுக்கு ஓநாய் ஆவான். அதாவது மனிதனில் தன் சகோதர மனிதர் மீதான இயல்பான பகைமை அடங்கியிருப்பதாக கூற எத்தனிக்கிறார்.

பொதுவாக கொலை, சொத்தை அழித்தல் என்பன வன்முறையாளர்களுடன் தொடர்பு படுகின்றன. இங்கு யுத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது ஒரு பிரச்சினையாகும். ஏனெனில் யுத்தத்தில் பொதுமக்கள், மத ஆலயங்கள் தாக்கப்படக்கூடாது போன்ற விதிகள் இருப்பினும் அவை கவனிக்கப் படுவதில்லை. எனவே ''வன்முறை ஒரு காட்டுமிராண்டித்தனம்'' என கூறப்படுகின்றது. எனவே வன்முறை உலகுக்கு ஓர் அச்சுறுத்தலே. ''நகர கெரில்லாக்கள் பற்றிய குறிப்பு'' என்ற நூலில் கார்லோஸ், மணிகல்ஸ் என்போர் தற்காலப் பயங்கரவாதம் எந்தவொரு தோற்றப்பாட்டையும், தத்துவத்தையும் தரவில்லை. எனவே ''போதிய நியாயபடுத்தல் தேவை'' என்றனர்.

நியாயப்படுத்தல் இருப்பினும் தற்காலத்தில் வன்முறை கண்டிக்கப்படுகின்றது. இங்கு தான் நியாயமான காரணங்களுக்குரிய தீர்வாக அஹிம்சையைக் கூறலாம். ஏனெனில் அஹிம்சை பயங்கரவாத மற்ற எதிர் நடவடிக்கையாகவுள்ளது. எவ்வாறாயினும் தற்கால ஆயுத கலாச்சார சூழலில் அஹிம்சையா? வன்முறையா? தீர்வு தரும் என்பது கேள்விக்குரியதாகும். மொத்தத்தில் அஹிம்சை தீங்கு விளைவிக்காத ஒன்றாகவும், வன்முறை சமூகத்தில் தீங்கு விளைவிக்கும் செயற்பாடு எனவும் கொள்ளலாம்.

# 'திரும்பிப்பார்த்த பொழுதினில்...'

கி.பாலநாதன், இறுதி வருடம், விஞ்ஞான பீடம்.

★

*இதோ!*
*இதே மாமர இணலில்*
*இருபது வருடங்களுக்கு முன்னால்*
*கோழிக் குஞ்சுகளுடன்*
*கொஞ்சி விளையாடிய*
*நான்*
*இன்று*
*கோடை விடுமுறையில்...*

*மன்னிக்கவும்,*
*அது சென்ற வருட விடுமுறை*
*இன்றோ*
*நிரந்தரமான விடுமுறையில்...*

★

*ஓ!*
*நான்*
*பட்டதாரியாயிற்றே!*

★

*அதோ நிற்கிறதே*
*அந்தப் பூவரசை*
*எனக்கும் அதற்கும்*
*ஒரே வயதுதான்.*
*அது*
*பூத்துக் குலுங்குகிறது.*
*நானும் அப்படித்தான்.*
*ஆனால்*
*கண்ணீர்ப் பூக்களை!*

*என் நினைவுகளை*
*உரசிச் செல்லும்*
*இந் நூற்றாண்டின்*
*வாசனையை*
*நொடிப் பொழுதில்*
*மீட்டுவிட முடியுமா?*
*திரும்பிப் பார்க்கின்றேன்.*
*தெரிகின்றன.*

*வெடி குண்டு வெளிச்சத்தில்*
*நான்*
*நடந்து வந்த*
*பாதச் சுவடுகள்.*

★

*அன்றொரு நாள்*
*வடக்கே இருந்து*
*வருத்தத்துடன் வந்த*
*வாடைக் காற்றினை*
*கொஞ்சம்*
*வடிகட்டிப்பார்த்தேன்.*
*உதிரத்தில் தொட்டெழுதிய*
*அன்னையின் கையெழுத்தில்*
*தனயனின்*
*மரண சேதி!*

*ஊருக்குச் செல்ல*
*ஒரு கோடி பாதைகள்*
*ஆனால்*

*அவை*
*மூடியடைத்து*
*பூட்டுப்போட்டு*
*சாவி*
*தொலைந்த நிலையில்.*
*இதயத்துள்*
*இறங்கியது*
*இருபது லட்சம் வோல்ட்டு*
*மின்சாரம்.*

*அதை விடப் பிரகாசமானது*
*எதிர்காலம்*
*என்ற குருட்டு நம்பிக்கையில்*
*கைகளில்*
*தவழ்ந்தவையெல்லாம்*
*வாழ்க்கைத் தத்துவத்தை*
*விளம்பாத*
*கணக்குப் புத்தகங்களும்*
*எழுதி முடியாத*
*பேனாக்களுந்தான்.*

★

*பிறந்த மண்ணிலேயே*
*முகவரியைத் தொலைத்துப்போட்டு*
*முகாம்களுக்குள் தேடிக்*
*கொண்டிருந்ததாம்*
*என்னைச் சுமந்த*
*கருவறை!*
*அப்போது தெறித்த*
*சூரியக் கதிர்கள்*
*இருளைத்தான் தந்தனவாம்.*
*என் தாய்*
*சுமந்த பொதிக்குள்*
*தீனிக்குப் பஞ்சமாம்.*
*இங்கோ*
*திராணியற்ற தீர்வுகளுடன்*
*சில பொதிகள்.*

*அப்போது கூட*
*என் விரல்கள்*
*இன்டர் நெற்றில்*
*சிக்கெடுத்துக் கொண்டிருந்தன.*

*மனிதம்*
*அர்த்தமிழந்த வேளையில்*
*விஞ்ஞானம் மட்டும்*
*அர்த்தப்பட்டுக் கொண்டிருந்தது!*

★

*சந்ததிகள்*
*சமாதானம் இழந்த*
*சங்கதிகள்*
*சந்தி வரை*
*வரையப்பட்டன.*

*பறக்கவிடப்பட்ட*
*வெண் புறாக்கள்*
*எங்கோ பறந்து போனதால்*
*நிலையாய் வேரூன்ற*
*புதியதாய்*
*பலவெண்தாமரைகள்!*

★

*ஜாதிகள்*
*இரண்டொழிய வேறில்லைதான்*
*ஆனால்*
*அவை இரண்டுமே*
*ஒழிந்து கொண்டிருந்தன.*

★

*நீதிப் புத்தகங்கள்*
*வாரத்திற்கு ஒருமுறை*
*அரசியல் சாக்கடையில்*
*அலசி*
*சலவை செய்யப்பட்டன.*

★

*சில*
*மாதங்கள் கூட*
*கறுப்பு அங்கிகளை*
*உடுத்துக் கொண்டதால்*
*சரித்திர ஏடுகளில்*
*அங்கீகரிக்கப்பட்டன.*

★
இவை இப்படி இருக்க,
வாழ்ந்து
நிம்மதியைத் தொலைத்தோர்
நிலத்தடியில் கூட
நிம்மதியைக் கண்டனரா?

அணுக்குண்டுகள்
அலறியதில்
பிணங்கள் கூட
கண் விழித்தனவாம்!

இது
என்ன சோதனை?
பூமாதேவிக்கே
அச்சுறுத்தலா?
ஐம்பூதங்கள் கூட
அஞ்சிவிடுமோ?

★
அங்கே
மேற்கிற்கும் கிழக்கிற்கும்
கலப்புத் திருமணமாம்
பிறந்த குழந்தை
மேற்கத்தியத்தில்
வளர்ந்ததாம்.

ஏன்?
நம்மூர்
குளத்து மீனில் கூட
வெடுக்கு வாடை
நீங்கி
மேற்கத்திய வாடை
வீசியதாம்!

★
அப்போது கூட
என் தாயின் காயங்களுக்கு
நெய்
தடவவேண்டிய நாள்,
இங்கு
கணனிகளின்
வைரசுக்கு
கை மருந்து
அரைத்துக் கொண்டிருந்தேன்.

★
போதும்
இத்தோடு போதும்
என்
மண்டை நரம்புகளால்
இந்நூற்றாண்டினை
அளந்தது போதும்.
புறப்படுகின்றேன்
இதே மரத்தடியில்
என்
இறந்த எண்ணங்களை
ஒட்டு மொத்தமாய்
குழி தோண்டிப்
புதைத்து விட்டு
புறப்படுகின்றேன்.

★
ஒருவேளை
இனி வரும் காலங்களில்
வேற்றுக் கிரகத்தில்
வேலைக்கு
விண்ணப்பித்துப்பார்க்கலாம்.

அங்கு கூட
லஞ்சம் தான்
வரவேற்பு வைபவம்
நடத்துமோ?

★
ஒன்று மட்டும்
நிச்சயம்
இதே மனிதன்
நிலவினைக் கூட
கரிபூசி மறைத்து விட்டு
'டியூப் லைட்டு' வெளிச்சத்தில்
யுத்த சாஸ்திரமே
வாசிப்பான்.

பரிசு பெற்ற கட்டுரை

# இலங்கைத் தமிழ்த் தேசியவாதத்தின் பரிணாமம் ___

**சுவர்ணராஜா நிலக்ஷன், முதலாம் வருடம், விவசாயபீடம்.**

*ஆதி முதல் இலங்கை ஒன்றுக்கு மேற்பட்ட கலாச்சாரங்களை உடைய மக்கள் கூட்டத்தினரை உடைய தீவாகவே விளங்கியது.*

> *''இலங்கை பதியப்பட்ட வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து ஒரு பல்லின சமூகங்கள் வாழும் நாடாக விளங்கியது. இதில், அங்கீகரிக்கப்படக்கூடிய திராவிடக் கூறும் முக்கிய மானதாக விளங்கியது''* (1)

*என்று K.M. டி சில்வா அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.*

*தொன்று தொட்டுப் பல்லின சமூகங்கள் ஒற்றுமையாய் வாழ்ந்தாலும் இன மோதல்களும் சரித்திர கால முதலே இடம் பெற்று வந்துள்ளன. சில மோதல்கள் இன மோதல்களாக இல்லாத சந்தர்ப்பங்களில் கூட, இன மோதல்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் அதிகார பூர்வமான சரித்திரத்தினை வரைந்தவர்களும் பதிவு செய்தவர்களும் குறித்த ஒரு இன, மதக் குழுவைச் சேர்ந்தவர்களாக இருந்தமையே ஆகும். இரு மன்னர்களுக்கிடையே நிகழ்ந்த யுத்தமான ''எல்லாளன் - துட்டகைமுனு'' யுத்தம், தமிழ்-சிங்கள யுத்தமாகச் சித்திரிக்கப் பட்டிருப்பது இதற்குரிய நல்லதொரு சான்றாகும்.*

*இவ்வாறாக ஒரு குறிப்பிட்ட குழுவினரின் பக்கச் சார்பான அரசியல், சமூக நடத்தைகளின் காரணமாகவே, ஒன்றுபட்ட இலங்கைக்குள் தனித்தனித் தேசியங்களின் எழுச்சியும் தேசியவாதங்களின் வளர்ச்சியும் ஏற்படலாயிற்று.*

> *''இனத் தேசியவாதம் என்பது, பிராந்திய அல்லது உப தேசியங்களின், அதி மையப்படுத்தப்பட்டதும் மேலாதிக்கமுடையதுமான அரசுக்கு எதிரான, எதிர்த்தாக்கங் களும் எதிர்ப்புகளும் ஆகும். அத்துடன், அவர்கள் தமக்குச் சொந்தமான பிராந்திய மற்றும் உள்ளூர் சமூக அரசியல் கட்டமைப்புகளை பெற்றுக் கொள்வதற்கான இயக்கமுமாகும்''*(2)

*எனப் பேராசிரியர் ஸ்ரான்லி தம்பையா குறிப்பிடுகின்றார்.*

*பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களின் காலத்தில், காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதே முக்கிய குறிக்கோளாயிருந்தது. இதன் பொருட்டு, எல்லா இனத்தவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை இருந்தது, எனினும் சுதந்திரத்துக்கு முன்னரே, தமிழ்த் தேசிய வாதம் வளர்ச்சி பெறத் தொடங்கி விட்டது. நாட்டின் சுதந்திரத்துக்காக ஒன்றுபட்டுப் போராடிய தமிழ்த்*

தலைவர்களின் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படாமையும், அவர்கள் தாம் ஒதுக்கப்படுவதை உணர்ந்த மையும், வளர்ச்சி பெற்றிருந்த சிங்களத் தேசிய வாதத்துக்கு ஈடுகொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்ட மையுமே தமிழ்த் தேசியவாதத்தின் எழுச்சிக்கு முக்கிய காரணங்களாகும் என்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது.

''சிங்களத் தேசியவாதத்தின் எழுச்சியுடன் தமிழ்த் தேசியவாதத்தின் பரிணாமம் தொடர்புபடுத்தப்பட்டாலும், அதன் வேர்கள், சைவ மறுமலர்ச்சி அமைப்புகளின் எதிர்ப்பியக்கங்களுடனும் அடையாளப்படுத்தப்பட முடியும். ஆறுமுக நாவலரின் சைவ பரிபாலன சபை இதில் குறிப்பிடத் தக்க பங்கை ஆற்றியது. நாவலர் சமயப் பணியுடன் தம்மை வரையறுத்துக் கொள்ளாது சமூக அரசியல் நடவடிக்கைகளிலும் செல்வாக்குச் செலுத்தக்கூடியவராகக் காணப்பட்டார். பொன்னம்பலம் இராமநாதனை இலங்கைச் சட்டவாக்கப் பிரதிநிதியாகத் தேர்வு செய்வதற்கும் நாவலரின் பிரச்சாரம் உதவியது. இவை, பின்னர் எழுந்த தமிழ்த் தேசிய வாதத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றின''.[(3)]

யாழ்ப்பாண சங்கம், தமிழர் மகாசன சபை, யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் என்பவையும் தமிழ்த் தேசிய வாதத்தை வளர்த்தெடுப்பதில் முக்கிய பங்காற்றின.

இலங்கையில் அரசியல் யாப்புச் சீர்த்திருத்தங்களுக்கான கோரிக்கைகளைப் பலமாக முன்வைத்த பெருமை சேர் முத்துக்குமாரசாமி, சேர் பொன். அருணாசலம், சேர் பொன்.இராமநாதன் ஆகியோரையே சாரும். இதனால் தான் இலங்கைத் தேசிய காங்கிரசின் தலைவராக அருணாசலமும் படித்த இலங்கையர் பிரதிநிதியாக இராமநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இருந்தபோதும், காலப் போக்கில் சிங்களத் தேசியவாதிகளின் போக்கினால் மனமுடைந்த அருணாசலம் தேசியக் காங்கிரசை விட்டு விலகியதுடன் அரசியல் நடவடிக்கைகளில் விரக்தியும் அடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் தலயாத்திரை மேற்கொண்டிருக்கும் போது, அருணாசலம் அவர்கள் காலமானார்கள். மேல் மாகாணத்தில் தமிழரது பிரதிநிதித்துவம் குறித்துச் செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒருதலைப் பட்சமாக மீறப்பட்டதனால், சேர் இராமநாதன் முதலான தமிழ்த் தலைவர்கள் அதிருப்தியும் நம்பிக்கையீனமும் மேற்பட, தமிழ்த் தேசிய வாதத்திற்கு வலிமை சேர்ப்பதில் மும்முரமாக ஈடுபட்டனர்.

1944 இல் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டமையும், இராமநாதனுக்குப் பின் ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தை நிரப்பிய ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் ''ஐம்பதுக்கு ஐம்பது'' கோரிக்கையை முன்னெடுத்தமையும் தமிழ்த் தேசியவாதத்தின் வளர்ச்சியில் ஏற்பட்ட மற்றொரு பரிணாமமாகும். அதாவது சிங்கள தேசத்துக்கு ஈடான உரிமையைத் தாமும் கொண்டிருப்பதாகத் தமிழ்த் தேசம் ஆட்சியில் சமபங்கைக் கோரியதன் மூலம் வலியுறுத்தியது.

அதுவரை காலமும், ஒன்றுபட்ட இலங்கையில் ஆட்சியில் சம பங்கையே தமிழ்த் தேசியத் தலைவர்கள் கோரி நின்றனர். தமிழ்த் தேசிய வாதம், பிரிவினை வாதமாக மாற்றம் பெற்றிருக்கவில்லை. இதற்குக் காரணம், இரு திறத்தவர்களுக்குமே பொது எதிரியாகப் பிரித்தானிய காலனித்துவ ஆட்சி யாளர்கள் விளங்கியமையேயாகும்.

''தமிழ்த் தலைவர்கள் செய்து வந்த அடிப்படைத் தவறு, அவர்கள் தமிழர்களது அடிப்படை உரிமைகளில் அக்கறை செலுத்தாமையேயாகும். அவர்கள் சுதந்திரம் பெற்றுத் தம்மைத் தாமே ஆளும் உரிமையைப் பெற்ற பின், சுதந்திரத்தின் விளைவுகளைத் தமிழர் களும் சிங்களவர்களும் சமமாக அனுபவிக்கக்கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கை

மிக்கவர்களாயிருந்தனர். இதன் நிமித்தமே தமிழ் மக்களது அடிப்படை உரிமைகளைப் பேணுவது தொடர்பில் அவர்கள் அத்துணை அக்கறை செலுத்தவில்லை.'' (4)

எனினும் சுதந்திரத்தின் பின்னரான நிகழ்வுகள், தமிழ்த் தேசியவாதத்தைப் ''பிரிவினைவாதம்'' என்ற மட்டத்துக்கு உயர்த்திச் சென்றன. இன்றுங்கூடத் ''தேசியவாதம்'' என்பது தமிழ் மக்கள் பலராலும் மாற்று வழியேதுமின்றியதால் பற்றிக் கொள்ளப்படவேண்டிய கொழுகொம்பாகவே காணப்படுகிறது. மார்க்சிய சோசலிச சித்தாந்தங்கள் தமிழ்ப்பகுதிகளில் பரவலான செல்வாக்கை ஒரு காலத்தில் பெற்றிருந்தாலும் கூட, தேசியவாதத்தின் முன்னால் அவற்றால் ஈடு கொடுக்க முடியாமற் போய்விட்டது. இதற்குக் காரணம் அச்சித்தாந்தங்களின் தோல்வியோ குறைபாடோ அல்ல. மாறாக, முள்ளை முள்ளால் எடுப்பது போல, சிங்களத் தேசியவாதத்தின் வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கத்தக்க வகையிற் தமிழ்த் தேசியவாதம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதை அனைவரும் உணர்ந்தமையே ஆகும்.

1948இல் சுதந்திரத்தின் பின், தமக்குரிய நியாயமான கௌரவம் வழங்கப்படாமையைத் தமிழர்கள் உணர்ந்தனர். தமிழர்களும் அரசில் அங்கம் வகிக்கின்றார்கள் என்று காண்பிப்பதற்காக ஒரு சிலருக்கு மந்திரிப் பதவிகளை வழங்கித் தமிழ் மக்களின் பிரச்சினைகளை மூடி மறைக்கும் நடவடிக்கையை அன்றைய அரசுகள் முதற்கொண்டு இன்றைய அரசுகள் வரை பின்பற்றி வந்திருக்கின்றன. அதற்குத் தமிழர்களும் விலை போய்க் கொண்டிருந்திருக்கின்றார்கள்.

தமிழரசுக் கட்சி அல்லது சமஷ்டிக் கட்சியின் தோற்றம், தமிழ்த் தேசியவாதத்தின் வளர்ச்சியில் ஆழ்ந்த செல்வாக்கைச் செலுத்தியது. தமிழரசுக் கட்சியின் தலைவராக, ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களின் தளகர்த்தர்களில் ஒருவராக இருந்த தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் விளங்கினார்.

> ''திரு. செல்வநாயகம் தமிழ்த்தேசிய இனத்தை நிறுவினார். இவரது காலத்துக்கு முன்னர் இருந்த தமிழ்த் தலைவர்கள் சிங்கள மக்களுடனும் ஏனையோருடனும் ஐக்கிய இலங்கையில் தமிழ் மக்கள் எவ்வாறு ஒன்றாக வாழலாம் என்பது பற்றியே பேசினார்கள். அது சாத்தியமானது அல்ல என்பதைத் தீர்க்கதரிசி செல்வநாயகம் தெரிந்து கொண்டார். எனவே, தான் உருவாக்கிய தமிழ்த் தேசிய இனத்தைத் தனித்துவத்துடனும் பிறிதானதாகவும் உறுதியான ஓர் அடித்தளத்திலிட நடவடிக்கை எடுத்தார். அரசியலில் சுதந்திர இறைமையுள்ள அரசு ஒன்றை அவர் நிறுவனாரல்லர். ஆனால் அதற்கு முதற்படியாக அவர் தமிழ் பேசும் மக்கள் தங்களை ஒரு தேசிய இனமாகச் சிந்திக்க வைத்தார்''(5)

தமிழரசுக் கட்சியினர் முன்வைத்த தமிழர்களது பாரம்பரிய தாயகம், தமிழர்கள் ஒரு தேசத்துக்குரிய தகைமைகளைப் பெற்றிருக்கும் தன்மை, இதன் நிமித்தம் அவர்களுக்கு உரிய சுயநிர்ணய உரிமை போன்ற பிரச்சாரங்கள் தமிழ்த் தேசிய வாதத்தை மேலும் வலுவூட்டப் பயன்பட்டன. தமிழர்களது தேசிய உணர்வை வலுவாக்குவதில் ''பாரம்பரிய தாயகம்'' என்ற கோட்பாடு பெருஞ் செல்வாக்குச் செலுத்தியது. சுதந்திரமும் இறைமையும் மிக்க யாழ்ப்பாண இராச்சியத்தினைப் போர்த்துக் கேயரிடம் இழந்த தமிழர்கள், அவ் இறைமை திரும்பத் தங்களை வந்தடைதல் நியாயமானது என வாதிட்டனர்.

> ''மாகனின் இராசரட்டை மீதான நீண்ட கால ஆதிக்கம், 1215களில் மத்தியில் கூடிய கட்டுப்பாடு செறிந்திருந்தமையை மாற்றியமைத்தது. இராசரட்டையிலிருந்து சிங்கள அரசியல் சக்தியின் நிரந்தரமான பெயர்வையும் மத்திய, மேற்கு பகுதிகளில் அதன் பரம்பலையும் மாகனின் ஆட்சி ஏற்படுத்தியது. இதே நேரம் இராசரட்டைப் பகுதியில் கணிசமான எண்ணிக்கையில் வாழ்ந்த தமிழர்களும் ஏனைய திராவிடர்களும் வட கிழக்குப் பகுதிகளில் மேலாதிக்கமுடையவர்களாக வந்தனர்''(6) .

இவ்வாறாக ''நிதர்சனமாயிருந்த யாழ்ப்பாண இராச்சியத்தின் இறைமையைத் தமிழர்கள் போர்த்துக்கேயரிடமும், அவர்கள் டச்சுக்காரரிடமும், பின் பிரிட்டிஷாரிடமும் இழந்த பின், பிரிட்டிஷார் அவ் இறைமையை தமிழர்களிடம் கையளிக்கவில்லை. அதே நேரம் சிங்களவர்கள் கருத்தொருமைப் பாட்டின் அடிப்படையிலோ, வெற்றி கொண்டதன் மூலமோ தமிழ் மக்கள் மீதான இறைமையைப் பெறவில்லை. தமிழர்கள் தங்கள் இறைமையை பிரிட்டிஷார் சிங்களவருக்குக் கையளிப்பதை ஆதரிக்க வும் இல்லை'' என்ற வாதங்கள் தமிழ்த் தேசிய உணர்வைத் தூண்டி வளர்த்தன.

சிங்கள அரசியல் தலைவர்களின் ஒரு தலைப் பட்சமான நடவடிக்கைகளும் ஆட்சியைத் தக்கவைப்பதற்காகவும், ஆட்சியை மாற்றுவதற்காகவும், கைப்பற்றுவதற்காகவும் அவர்கள் கைக்கொண்ட வழிமுறைகளும் தமிழ் மக்களை மேலும் ''ஒன்றிய இலங்கை'' என்ற உணர்விலிருந்தும் நீங்கித் தனியான தேசிய வாதத்தை வளர்க்கத் தூண்டின.

டி.எஸ்.சேனாநாயக்கவின் குடியேற்றத் திட்டங்களும், பண்டாரநாயக்க அவர்களின் தனிச் சிங்களச் சட்டமும், ஐக்கிய முன்னணி அரசின் கல்விக் கொள்கைகளும் பின்வந்த அரசுகளின் சிங்கள பௌத்த சார்பு நிலைப்பாடுகளும் தமிழ் மக்களைத் தேசிய இயக்கங்களின் பால் நாட்டங் கொள்ளச் செய்தன.

குடியேற்றத் திட்டங்களின் மூலம் தமது பாரம்பரிய தாயகம் சிதைக்கப்படுவதைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டனர். தமிழரசுக் கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றிய தந்தை செல்வா, தூய தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களால், தமிழர்களது பாரம்பரிய தாயகம் சிதைவடையும் ஆபத்தை முக்கியத்துவப்படுத்திச்சுட்டிக் காட்டினார்.

1956ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி, சிங்களம் மட்டும் அரசகரும மொழியாதல் வேண்டும் எனும் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்த வேளை, தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் மட்டுமன்றி, ஏனைய தமிழ்த் தலைவர்களும், பொதுமக்களும் இணைந்து சத்தியாக்கிரகம் ஒன்றைக் காலி முகத்திடலில் அனுஷ்டித்தனர். இச்சமயம், சத்தியாக்கிரகிகள் மீது தாக்குதல்கள் நடைபெறும் சாத்தியங் கள் தென்பட்டன.

> ''அப்போது அவ்வழியால் பாராளுமன்றுக்கு செல்லவென வந்து கொண்டிருந்த பிரதமர் பண்டாரநாயக்கவை அணுகிய உயர் பொலிஸ் அதிகாரியொருவர், தமிழ்த் தலைவர்கள் தாக்கப்படும் அபாயம் இருப்பதாகக் கூறி, எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து வினவினார். அதற்குப் பதிலளிக்கும் முகமாகப் பிரதமர் பண்டாரநாயக்க ''அவர் கள் அந்த உருசியை அனுபவிக்க அனுமதியுங்கள்'' **(Let them have a taste of it)** என்று கூறினாராம். [(7)]

அன்று தமிழ் மக்கள் அனுபவித்த உருசியை இன்று முழு நாடுமே யுத்தப் பிடியிற் சிக்கி அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

இவ்வாறாக சிங்களத் தலைவர்களின் போக்குகள், தமிழ் மக்கள் அவர்கள் மீது கொண்டிருந்த துளியளவு நம்பிக்கையையும் அற்றுப் போகச் செய்தன. இதன் விளைவாகத் தான் தமிழ்த் தேசியவாதம் என்பது 1977 களில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்வைத்துத் ''தமிழ்ப் பிரிவினை வாதம்'' என்ற அந்தஸ்தை எட்டியிருக்கிறது.

தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்து வந்த கொல்வின் ஆர்.டி.சில்வா, என்.எம்.பெரேரா போன்ற இடதுசாரித்தலைவர்கள் கூட, 1970 ம் ஆண்டில் ஆளுங்கட்சியில் இருந்தபோது, சோல்பரி அரசியலமைப்பில் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு வழங்கும் 29 (2) ஏற்பாட்டினை நீக்குவதற்குத்

துணை போயிருக்கின்றார்கள். வெட்டுப் புள்ளித் திட்டத்தை அறிமுகஞ் செய்ததன் மூலம் தமிழ் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

> ''வெட்டுப் புள்ளித் திட்டத்தினால் திறமையாகக் கற்ற தமிழ் மாணவர்கள் பலர், பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இழந்தனர். இது அவர்களை விரக்தியடையச் செய்ததுடன் ஆயுதக் கிளர்ச்சியில் நாட்டஞ் செலுத்தவும் ஊக்குவித்தது''[8]

கல்வியை நம்பியிருந்த தமிழ்ச் சமுதாயத்திற்குக் கல்விக் கதவு அடைக்கப்பட்டதானது பெரும் மன உளைச்சலை ஏற்படுத்தியது. கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த தேசிய வாதத்துள் அவர்கள் இலகுவில் ஈர்க்கப்பட்டனர். மிதவாதத் தலைவர்களின் கையில் தமிழ்த் தலைமைத்துவம் தஞ்சமடைந்திருந்த எழுபதுகளின் பிற்பகுதியில், இளைஞர்கள் தேசிய இயக்கங்களில் முக்கிய பங்கைப் பெற்று அவற்றின் விழுதுகளாகவும் மாறினர்.

நாளடைவில், அகிம்சையிலும் மிதவாதத் தலைமைகளிலும் நம்பிக்கையிழந்த இளைஞர்கள், ஆயுதங்களை ஏந்தியதுடன், தலைமைத்துவத்தையும் தம் வசமாக்கிக் கொண்டனர். இதன் பின், தமிழ்த் தேசிய வாதம், கட்டுப்பாடற்றுப் பெரும் எடுப்பில் வளரலாயிற்று. இயல்பாகவே இளைஞர்களுக்கிருக்கும் துடிப்பும், அவர்களது உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் பல்வேறு செயற்பாடுகளும் ஒருங்கு சேர்ந்து, தமிழ்த் தேசிய வாதத்தை உச்ச நிலைக்கு இட்டுச் சென்றன. அதுவே ஒரு நிலையில் ''பிரிவினை வாதம்'' என்ற நிலையை எட்டி, இன்று அதே தன்மையிற் தொடர்கின்றது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திற் தமிழ்த் தேசியவாதமாக உருவெடுத்த உணர்வலைகள் இருபத்தொராம் நூற்றாண்டிற் தமிழ்ப் பிரிவினைவாதமாகப் பரிணமித்துள்ளமைக்குப் பல்வேறு காரணங்களும் இருக்கலாம்.

எனினும் தொடர்ந்து வந்த அரசுகளால் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் ஏற்கப்படாமையும், ஒரு தலைப்பட்சமான தீர்க்கதரிசனமற்ற சிங்கள அரசியல் தலைவர்களின் செயற்பாடுகளுமே இவற்றுள் முக்கியமான காரணங்களாக விளங்குகின்றன. எனவே, பிறக்கப்போகும் இருபத்தியொராம் நூற்றாண்டில், ''ஒன்றுபட்ட இலங்கை'' என்ற தேசிய உணர்வு ஏற்படுத்தப்பட வேண்டுமானால், சரித்திரத்தை மீளாய்வு செய்வதுடன், தொடரும் காலங்களில் எந்தவொரு இனத்துக்கும் அநீதி இழைக்கப் படாத முறையிலான நேர்மையான அரசியற் தீர்வு ஒன்று காணப்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

**உசாத்துணைக் குறிப்புகள்:-**


(1) K.M. De Silva, A History of Sri Lanka

(2) Prof. Stanley J.Thambiah, The Nation State in Crisis and the Rise of Ethno Nationalism

(3) Dr.Ambalavanar Sivarajah, Politics of Tamil Nationalism in Sri Lanka

(4) S. Ponniah, Satyagraha and the Freedom Movement of the Tamils in Ceylon

(5) அ.ஜெயரத்தினம் உவில்சன், ''சா.ஜே.வே.செல்வநாயகம்'' - செல்வநாயகம் நினைவுப்பேருரை-1981

(6) Prof.S.Pathmanathan, The Kingdom of Jaffna

(7) S.Ponniah, Satyagraha and the Freedom Movement of the Tamils in Ceylon

(8) Victor Ivon, Sri Lanka in Crisis - Road To Conflict.

# எங்கள் வரலாறுகள் காக்கப்படுமா?

**யோகநாதன் திலீபன், 3 ம் வருடம், பொறியியற் பீடம்.**

*பூமிப்பந்தை உருட்டியுருட்டிப் புதுப்புதுக் கவிதைகளைத் தினந்தினம் எழுதிக் கொண்டிருக்கும் காலக் கவிஞன் இன்று எம்மண்ணில் யுத்தக் கவிதை ஒன்றை எழுதிக் கொண்டிருக்கிறான்; சமாதானத்தை எதிர்பார்த்து நாம் செம்மண் நாட்களை நீட்டிக் கொண்டிருக்கும் போதும் அதிலும் செங்குருதியாலேயே சில சித்திரங்கள் வரைந்து கொண்டிருக்கிறான். கலிங்கத்துப் பரணிகள் இன்று நம் கண்முன்னேயே அரங்கேறிய வண்ணம் உள்ளன. மகாத்மாக்கள் பலர் மறைந்து கொண்டிருக்கிறார்கள். நாம் காணாமல் போய்க்கொண் டிருக்கிறோம். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம், இன்றைய காலப்பகுதி தமிழன் வரலாற்றிலே பொறித்து வைக்கப்பட வேண்டியதொரு பகுதி. யுத்த மேகங்களின் பாரங்களைத் தலைகளிலே தாங்கி, இந்த 20 ம் நூற்றாண்டில் கூட அத்தியாவசியத் தேவைகளையாயினும் பூர்த்தி செய்ய முடியாத பொருளாதாரத் தடைச் சிறைகளில் வாழ்க்கை, சொந்த மண்ணை விட்டு அன்னிய மண்ணில் அகதி வாழ்க்கை. ஆம், இது தமிழனின் சோகமான ஒரு காலப்பகுதி தமிழனின் தனித்துவம் உடைந்து கொண்டிருக்கும் ஒரு காலப் பகுதி. கலாச்சாரப் பின்னடைவுகளை எதிர்நோக்கும் ஒரு காலப்பகுதி......*

*இங்கே நாம் ஒன்றை எண்ணிப்பார்க்க வேண்டும். 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த தமிழ்' என்று சொல்வார்கள். ஆனால் அவன் எங்கே தோன்றினான்?, எங்கே வாழ்ந் தான்?, எப்படியெல்லாம் வாழ்ந்தான்?, பின்னர் ஏன், எப்படி இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிற்கு வந்தான்?, அல்லது அங்கேயே தான் தோன்றினானா?, எதையும் சொல்வதற்கு பூரணத்துவமான வரலாற்று ஆவணங்கள் எம்மிடம் இல்லை. தொல்பொருள் ஆய்வுகள் மூலம் சிலசில காலப்பகுதிகளின் வரலாறுகள் கிடைத்திருப்பினும் எமது வரலாற்றைப் பூரணமாகக்கூற அவை போதுமானதாக இல்லை.*

*திராவிடர்கள், எகிப்தியர்களின் வழித்தோன்றல்கள் என்று கூறுகிறது ஓர் ஆய்வு; இந்தியாவின் வடக்கேயிருந்து ஆரியர்களின் படையெடுப்புக் காரணமாக தெற்கே புலம் பெயர்ந்தவர்களே திராவிடர்கள் என்று கூறுகிறது இன்னுமொரு ஆய்வு; இவற்றை எல்லாம் பின் தள்ளிவிட்டு, இல்லை! திராவிடர்களே உலகின் மூத்த குடிகள் கடற்கோளால் ஆழ்ந்து போன குமரிக் கண்டமே தமிழரின் ஆதித் தாயகம் என்று கூறுகிறது பிறிதோர் ஆய்வு. எது எப்படி இருப்பினும் எங்கள் முன்னோர்கள் தங்கள் வரலாறுகளை ஆவணங்களாகப் பேணிப் பாதுகாத்திருந்தால் இந்த ஐயப்பாடுகள் எழவேண்டிய அவசியமே இல்லை என்பதே இங்கு கவனிக்கப்பட வேண்டியது. ஆயினும் திராவிடர்களே உலக நாகரீகத்தின் முன்னோடிகள் என்னும் உண்மையை உலகுக்குப் பறைசாற்றும், வாழும் ஆவணங்களாக மொகஞ்சதாரோ, ஹரப்பா கண்டு பிடிப்புக்கள் விளங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.*

*இப்படியான ஒரு நிலை அதாவது தங்கள் வரலாறே தெரியாத ஒரு நிலை நாளை ஒவ்வொரு நாட்டிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் சமுதாயத்தின் சந்ததிக்கும் வரும். நாம் எங்கே இருந்து வந் தோம்?, ஏன் வந்தோம்? என்று தெரியாத ஒரு சமுதாயம் உருவாகும். இது தடுத்து நிறுத்தப்படவேண்டுமா*

யின் எமது இன்றைய வரலாறுகள் யாவும், அதாவது இன்றைய நிகழ்வுகள் யாவும் ஒழுங்காக ஆவணப் படுத்தப்பட வேண்டும். இன்றைய நிகழ்வுகளே நாளைய வரலாறு என்பார்கள், எனவே இன்றைய நிகழ்வு கள் யாவும் ஆவணப்படுத்தப்பட்டால் நாளைய எமது சமுதாயத்தின் கைகளில் அவர்களது வரலாறுகள் இருக்கும்.

ஒரு இனத்தின் வரலாறு அதன் கையில் இருப்பதனால் அவ்வினம் என்ன பயனைப் பெற முடியும் என நீங்கள் கேட்காலம். இது அனேகமானோரின் மனங்களில் எழும் கேள்வி தான். வரலாறு இல்லாத ஒரு இனம் தன்னை ஒரு நாகரீக இனமாகப் பிரகடனப்படுத்திவிட முடியாது. அத்தோடு இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட இனங்களோ வாழும் ஓர் நாட்டில் இனங்களிடையே பிரச்சனைகள் உருவாகும் போது ஓர் இனம் மற்ற இனத்தின் வரலாறுகளை மறைக்கவோ, மாற்றியமைக்கவோ முற்படும். ஓர் இனத்தின் வரலாறுகள் மறைக்கப்படும்போது அவ்வினத்தின் உரிமைகளைக் கூட மறுக்கக்கூடிய நிலையினை மற்ற இனம் பெற்றுக் கொள்ளும். இதற்கு சிறந்த ஒரு உதாரணமாக, அண்மையில் எமது மேன்மை தங்கிய ஜனாதிபதியவர்கள் தென்னாபிரிக்காவில் வெளியிட்டிருந்த கருத்தையே கூறலாம்.

எமது வரலாறுகள் இன்று நேற்றல்ல பல ஆண்டுகளாக மாற்றப்பட்டும் மறைக்கப்பட்டும் வந்திருக் கிறது. இந்தவகையிலே 1990ம் ஆண்டு மகாபொல நாட்காட்டியுடன் (கலண்டர்) ''பாடசாலை மாணவர் களுக்காக வழங்கப்படும் அன்பளிப்பு'' என்னும் வாசகத்துடன் தேசிய கல்வி நிறுவனத்தின் சமாஜ அத்தி யாப்பன (சமூகக்கல்வி) பிரிவு மத்திய கலாச்சார நிதியத்தின் ஆலோசனையுடனும் வர்த்தக கப்பற்துறை அமைச்சின் அனுசரணையுடனும் வெளியிடப்பட்ட புராதன இலங்கையின் வரைபடம் சிறந்தொரு உதாரணமாகும். இப்படம். தமிழ் ஊர்களின் பெயர்கள் மாற்றப்பட்டும், நாகதீவு என்ற பெயர் மறைக்கப்பட் டும் வரலாற்றையே திரிபுபடுத்தி வெளியிடப்பட்டது. இங்கு ஒரே காலப்பகுதியில் விளங்கிய இரு நாடுக ளாகிய கல்யாணி, நாகதீவு ஆகியவற்றில் நாகதீவு திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளது. கல்யாணி என்னும் பெயரில், நாகர் என்னும் சாதிப் பெயர் தொனிக்கவில்லை, ஆனால் நாகதீவு என்னும் பெயரில் நாகர் என் னும் சாதிப்பெயர் தொனிக்கிறது. நாகர்கள், திராவிடர்களென மேலைநாட்டு, கீழைநாட்டு வரலாற்று ஆசிரியர்களும் அறிஞர்களும் சொல்லிவிட்டனர். ஆதலினால் நாகர் என்னும் சாதிப் பெயர் தொனிக்கும் நாகதீவை இப்படத்தில் குறிப்பிடின் இலங்கைத் தீவின் புராதன வரலாறு திராவிடர்களுடையதாக மாறி விடும். எனவேதான் அது மறைக்கப்பட்டுள்ளது. அத்தோடு 2500 ஆண்டுகளிற்கு முற்பட்ட புராதன நகர் களின் இராசதானியாக விளங்கிய கதிரமலையுங்கூட (கந்தரோடை) இப்படத்தில் குறிப்பிடப்படவில்லை. அதுமட்டுமல்ல காங்கேசன்துறைக்கு அண்மையாக இருந்த சம்புத்துறை (சம்பு என்றால் நாவல், அங்கு நாவற்காடுகள் சூழ்ந்திருந்ததால் அப்பெயர் தோன்றியிருக்கக்கூடும். சம்பு என்பது சிவனையும் குறிக்கும்) ஜம்புகோள என்றும் வடபுலத்தில் நாகவேந்தர்களின் புராதன இராசதானிகளாகவும் ஈழநாட்டின் பண்டைக் காலத் துறைமுகங்களாகவும் விளங்கிய மாதோட்டம் மகாதித்த என்றும், திருகோணமலை கோணகாமக என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விரு இடங்களிலும் பாடல் பெற்ற சிவதலங்கள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாமல், புங்குடுதீவு பியங்குதீப என்றும், காரைதீவு சுக்கீரத்ந்த என்னும் குறிப்பிடப்பட்டுள்ளன. இங்கு இன்னுமொன்றைக் கவனிக்க வேண்டும். இலங்கைத்தீவில் பௌத்த சமயம் இற்றைக்கு 2246 ஆண்டுகளுக்கு முன் பரவத்தொடங்கியதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதற்கு முன் அதாவது 2500 ஆண்டுகளிற்கு முன் இலங்கைத்தீவில் நாகதீவு என்னும் பெயர் வழங்கி வந்திருப்பதை மகாவம்சத்திலிருந்து அறிய முடிகிறது. எனவே புராதன இலங்கைப் படத்தில் நாகதீவு மறைக்கப்பட எந்த நியாயமும் இல்லை.

இப்படியாக ஒரு இனம் மற்ற இனத்தின் வரலாறுகளை மாற்றியும், மறைத்தும், அவர்கள் இந்நாட்டிற்கு உரியவர்கள் அல்ல எனக்கூறி அவர்களது உரிமைகளை மறுக்க முடியும். எனவே ஒரு இனம் தனது உரிமைகளைக் காக்க வேண்டுமாயின் வரலாற்று ஆவணங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். ஆவணங்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் தமிழர்கள் மத்தியிலே ஆவணக் காப்பகங்கள் கட்டி யெழுப்பப்பட வேண்டும்.

இனி ஆவணக் காப்பகத்துறையைப் பற்றிச் சற்றுப்பார்ப்போம். திரு.அலி.ஏ.மஸ்ரூப் என்னும் ஆய்வாளர் ஆவணக்காப்பகத்துறையை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | தொல்பொருள் ஆவணங்கள் : | மட்பாண்டங்கள், நாணயங்கள், எலும்புக் கூடுகள். (தொல் பொருள் ஆய்வில் கிடைக்கும் அரும் பொருட்கள் யாவும்) |
| 2. | எழுத்து ஆவணங்கள் : | கல்வெட்டுக்கள் மற்றும் எழுத்து வடிவிலான அனைத்தும். |
| 3. | ஓவிய ஆவணங்கள் : | பாறைகளில் வரைந்த படங்கள், செதுக்கிய ஓவியங்கள், சிற்பங்கள். |
| 4. | ஒலி,ஒளி ஆவணங்கள் : | பல்வேறு நிகழ்வுகளைக் கொண்ட ஒலி, ஒளிப்பேழைகள், நுண்சுருள் நாடாக்கள் . |
| 5. | வாய்மொழி ஆவணங்கள் : | மனித நினைவாற்றலை ஒலிப்பதிவு செய்த ஆவணங்கள். |

இப்படியான தரவுகளை தேடிப் பெற்று பேணிப் பாதுகாப்பதே ஆவணக் காப்பகங்களின் முக்கிய பணியாகும். இப்பணிகள் இன்று நேற்றல்ல இற்றைக்கு கி.மு. 3000-2800 ஆண்டுகளிற்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மெசப்பத்தேமியா நகரின் இயானா ஆலயத்தில் எழுதப்பட்ட களிமண் எழுத்துக்களே உலகில் கிடைத்த மிகத் தொன்மையான எழுத்தாவனங் கள் எனக்கூறுவர். ஆயினும் இன்றைய கால கட்டத்தில் களிமண் தட்டிலோ, பாறைகளிலோ பொறிக்கப் படுதல் மிகவும் குறைந்துள்ளது. வரலாற்றைக் கடந்தும் ஒரே ஆவணமாக பத்திரிகைகளும் சஞ்சிகைகளுமே இன்று விளங்குகின்றன. அத்தோடு தற்போது ஒலிஒளிப் பேழைகளும் பாவிக்கப்படுகின்றன. எனவே இவை பாதுகாக்கப்பட வேண்டியது முக்கியமாகும்.

இப்படியான ஆவணக் காப்பகங்கள் மூலம் சமுதாயம் ஒன்று தனது உரிமைகளை நிலை நாட்டிக் கொண்ட ஓர் நிகழ்வை இங்கு பார்ப்பது சிறப்பாக இருக்கும் என நினைக்கிறேன். ''மொறீசியஸ்'' என்பது. தமிழர்கள் இன்று சிறு பான்மையினராக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு தீவு. இங்கு முக்கிய பெரும் பான்மையினர் ஹிந்தி மொழி பேசும் வட இந்தியர்களாவர். இவர்கள் தமது கருத்துக்களையும், கொள்கை களையும் ஆளுமையையும் அவ்வப்போது தமிழர் மீது திணிக்க முயன்று வந்தார்கள். சில வருடங்களிற்கு முன் அவர்கள், தாங்கள் அத்தீவில் குடியேறிய 150 வருட நிகழ்வை கோலாகலத்துடன் கொண்டாடினார் கள். அவ்விழா அங்கு வாழ்ந்த தமிழர் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அந்த விழிப்புணர் வின் பிரதிநிதியாக உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மொரீசியஸ் கிளைத்தலைவர் திரு.மாணிக்கம் தங் கணமுத்து செயலில் இறங்கினார். ஆவணக் காப்பகங்களை அலசி மொரீசியஸ் தீவுக்கான தமிழர் குடியேற் றம் 150 வருடங்கள் முன் அல்ல, 250 வருடங்களிற்கு முன்னரே நிகழ்ந்துள்ளது என்ற உண்மையைத் தக்க ஆதாரங்களுடன் நிரூபித்தார். இதற்கு அவரிற்கு உதவிக்கரம் கொடுத்தவை பிரான்ஸ் நாட்டு ஆவணக் காப்பகங்களும் மற்றும் புதுச்சேரி அரச ஆவணக் காப்பகமும் ஆகும். வட இந்தியர்கள் வர்த்தகத்திற்கும் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்கும் மொரீசியஸ் தீவில் குடியேறுவதற்கு 100 ஆண்டுகள் முன்னரே தமிழர்கள் பிறெஞ்சு, பிரிட்டிஷ் படைகளில் போர் வீரர்களாக அங்கு சென்று குடியேறியதை தக்க ஆதாரங்களோடு நிரூபித்து, அத்தீவில் முதல் குடியேறியவர்கள் தமிழர்களே என்பதைப் பிரகடனப்படுத் தினார். அதனை அவர் பிரகடனப்படுத்தியதன் மூலம் விஷேடசலுகை எதையும் எதிர்பார்க்கவில்லை. நியாய மாக தமக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளைக் கேட்டார். அந்த அரசு பெரும்பான்மையாக வடஇந்தியர் களைக் கொண்டிருந்த போதிலும் பெருந்தன்மையோடு படியிறங்கி அவர்கள் உரிமைகளிற்கு வழிவிட்டுப் பெருமை கொண்டது. இந்த நிகழ்வு ஆவணக் காப்பகங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

மேலைநாடுகள் ஆவணக் காப்பகத் துறையில் பல ஆண்டுகள் முன்பே விழித்துக் கொண்டு விட் டது. தற்போது அங்கு பல்வேறு நவீன கருவிகள் பயன்படுத்தப்பட்டு வருவதோடு, ஒரே பாரம்பரியத்தைக் கொண்ட பல்வேறு உலக நாடுகளும் ஆவணக் கூட்டு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு கூட்டுறவு அடிப்

படையில் புரட்சிகரமான மாற்றங்களைத் தோற்றுவித்து வருகின்றன. ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரையில் இன்னும் இத்துறையில் ஒரு தொய்வு நிலையே காணப்படுகின்றது. ஆயினும் இன்றும் சில ஆவணக் காப்பகங்கள் நம்மத்தியில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் ஒல்லாந்தர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின் 1640களில் ஒரு ஒழுங்கான கட்டமைப்பை பெற்று காலியில் இயங்கி, பின் 1656களில் கொழும்புக்கு மாற்றப்பட்டு தற்போது கொழும்பில் இயங்கி வரும் தேசிய சுவடிகள் திணைக்களம் இங்கு குறிப்பிட்டாக வேண்டிய ஒன்றாகும். இந்நிலையத்தில் 1998ம் ஆண்டில் மட்டும் மூவாயிரம் பேர் தகவல்கள் பெற்றுள்ளார்கள் என்பதே ஆவணக் காப்பகங்களின் தேவையை எடுத்துக்காட்டக்கூடியதாக உள்ளது.

நான் அறிந்த வரையில் தற்போது இத்துறையில் தனி நபராக ''உலகத்தமிழ் ஆவணக் காப்பகம்'' ஒன்றை நிறுவி அதனை சிறப்பாக முன்னெடுத்துச் செல்பவர்கள் ஆவண ஞானி குரும்பசிட்டி திரு.இரா. கனகரத்தினமும் அவர் துணைவியாரும் ஆவர். இவர்களை விட காலஞ்சென்ற தமிழரசு S.J.V செல்வநாயகத்தின் மகனான திரு.சந்திரஹாசனின் தலைமையில் இந்தியாவிலுள்ள எழும்பூரில் இயங்கும் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திலும் இலங்கைத் தமிழர் தொடர்பான ஆவணங்கள் சேகரித்தல் நடைபெற்று வருகின்றது. அத்தோடு யாழ். மண் அரச படைகளால் கைப்பற்றப்படும் வரை மானிப்பாயில் ஓர் ஆவணக் காப்பகம் இயங்கி வந்தது. இது காலஞ்சென்ற திரு.கந்தசாமி அவர்களால் நிறுவப்பட்டு பின்னர் திரு. பூரணலிங்கம் என்பவரால் நிர்வகிக்கப்பட்டது. அதன் தற்போதைய நிலை என்ன என்பது அறிய முடியாதுள்ளது. இங்கு நாம் கலைஞானி திரு.செல்வரட்ணம் அவர்களையும் மறந்துவிடமுடியாது. இவரும் ஆவணக் காப்பகத் துறையின் ஓர் பகுதியான அரும் பொருட்கள் சேகரித்தலில் ஈடுபட்டு வருகிறார். இவரைப் போன்றே ஆவணக் காப்பகத் துறையின் இன்னுமோர் பகுதியான பழம் ஏடுகள், சுவடிகள் போன்றவற்றைத் தேடும் பணியில் மட்டக்களப்பு புனித.மைக்கல் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. கமலநாதன் அவர்கள் ஈடுபட்டுள்ளார். இவற்றை விட அண்மைக்காலத்தில் மலையகத் தமிழருக்கான தனியானதொரு ஆவணக் காப்பகம் நிறுவப்பட வேண்டும் என்ற குரல் எழுப்பப்பட்டது, வரவேற்புக்குரியது. ஆனால் அது பின்னர் செயல்வடிவம் பெற்றதாக செய்தி எதுவும் கிடைக்கவில்லை.

இப்படியாக எத்தனை ஆவணக் காப்பகங்கள் செயற்பட்டாலும் அதனால் அந்த இனம் பெறும் பயன் மூலமே அக்காப்பகம் தனது நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்கிறது. அதாவது வரலாற்று ஆவணங்கள் ஆவணக்காப்பகங்களில் சேமிக்கப்பட்டிருந்தால் மட்டும் போதாது. அவை தேவையான நேரங்களில் தேவையான ஒரு தனி மனிதனாலோ அல்லது சமுதாயத்தாலோ எடுத்துப் பயன்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். எனவே ஒவ்வொரு ஆவணக் காப்பகமும் தன்னிடமுள்ள ஆவணங்களைப் பட்டியலிட்டு கணனிகளினூடான சர்வதேச வலைப்பின்னலூடாகவோ (Internet) அல்லது புத்தக வடிவிலோ ஒவ்வொரு மக்களையும் சென்றடையக்கூடிய நிலையினைப் பேண வேண்டும். அத்தோடு தற்போது முக்கிய ஆவணங்களாக விளங்கும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஒலி,ஒளிப் பேழைகள் விரைவில் பழுதடையக்கூடியவை. எனவே இவை யாவும் நிரந்தர ஆவணங்களாக அதாவது கணனியில் நிலையான நினைவகங்களிலே நுண்சுருள்களிலோ (Micro film) சேமிக்கப்பட வேண்டும். இதற்குப் பெருந்தொகையான பணம் செலவாகும். எனவே பணம் படைத்த தமிழர்கள், நிறுவனங்கள் முன்வந்து இந்த ஆவணக் காப்பகங்களிற்கு நிதியுதவி வழங்கவேண்டும். எங்கள் வரலாறுகளைப் பேண வேண்டும். அதுவே நாம் எமது நாளைய சந்ததிக்குச் செய்யும் சிறந்த ஒரு சேவையாகும் .

**''ஆவணங்கள் பேணி அடுத்த சந்ததிக்கு கையளிப்போம்''**

**உசாத்துணை:**


1. ஆவணஞானி கனகரட்னம் எழுதிய ''ஆவணக் காப்பகம் ஓர் அறிமுகம்''
2. சொல்லேருழவர் ம.க.அ. அந்தனிசில் இன் ''புராதன இலங்கையின் 'புதிரான' வரைபடம் திராவிடரின் வரலாற்றை மூடி மறைக்கிறது'' எனும் கட்டுரை (09.02.97, வீரகேசரி).

# விடியலை நோக்கி....

ஷர்மிளா றஹீம், 3 ம் வருடம், கலைப்பீடம்.

தூரத்தே தெரியும்
விடியலின் வெளிச்சம் நோக்கி
தத்தித் தத்திக்
கால்கள் நடக்கும்.
தொட்டு விட வேண்டும்
என்ற ஏக்கத்தில்
மனசு அல்லாடும்.

ஓரடி வைக்க
வெளிச்சத்தின் தூவல்கள்,
ஈரடி பின்வாங்குவதாய்
மனம் உணரும்.

சலிக்காமல்
கால்கள் முன்னேறும்.
அண்மித்து விடும்
என நினைக்கும் போது,
தூரம்
அதிகமாய்த் தெரிய
சோர்ந்து போன கால்கள்
தள்ளாடும்.
மனசு சலிப்புற,
பாதி வழியிலேயே உடல்
உட்காரச் சொல்லும்.

கனவில்
கால் பதித்து நடந்து,
விழித்த போது
கனவு கலைந்து
கற்பனைகள்
பாதாளத்தில் விழுந்ததுபோல்
மனசு தவிக்கும்.

பாலை வனத்தின் மத்தியில்
தள்ளாடித்
தனியாய்க் குந்தியிருக்க,
தூரத்தில் சிறு புள்ளியாய்
விடியலின் வெளிச்சம்
வா! வா! என்றழைத்துக்
கண் சிமிட்டும்.

நிலாப் பார்க்கும்
சின்னக் குழந்தையாய்
மனசு அடம் பிடிக்கும்.

தொட்டு விடுவேன் என்ற
நம்பிக்கை தரும்
உந்துதலில்,
மீண்டும்
கால்கள் தடம் பதிக்கும் -
விடியலின் வெளிச்சம் நோக்கி....

# அடுத்த நூற்றாண்டா, அது எப்போது?

பேராசிரியர் சி.சிவசேகரம், பொறியியற் பீடம்

தமிழர்கள் அடுத்த நூற்றாண்டு, ஆயிரவாண்டு என்பன பற்றியும் அப்போது தமிழின் நிலை பற்றியும் வளர்ச்சி பற்றியும் கொஞ்சம் பேசுகிறார்கள். ஆயினும், தமிழை, அடுத்த நூற்றாண்டுக்கென்ன, இந்த 20ம் நூற்றாண்டுக்குக் கூட ஏற்ற நிலைக்கு வளர்த்திருப்பதாகத் தெரியவில்லை. போன 19ம் நூற்றாண்டின் சில தேவைகளைக் கூட நாம் சரியாக நிறைவு செய்திருக்கிறோமா என நிச்சயமில்லை.

தமிழ் மொழி பற்றிய ஒரு விறைப்பான பார்வை நமது தலைகளை அடைத்துக் கொண்டிருக்கிறது. கன்னித்தமிழ், செந்தமிழ், உலகின் மூத்த மொழி என்ற விதமான பொய்களினின்று நம்மால் இன்னும் விடுபட முடியவில்லை. பச்சை நாத்திகர்கள் கூடத் 'தமிழ்த்தாய்க்கு' ஒரு கும்பிடு போடாமல் சில நிகழ்ச்சிகளைத் தொடங்க முடியாதளவுக்கு ஒரு வழிபாட்டுக் கலாசாரம் உருவாகி நிற்கிறது. தொன்மை, முதன்மை, தூய்மை, தனித்துவம் பற்றிய பிரமைகளை நம்மால் உடைக்க முடியவில்லை.

தமிழ்த் தன்மை என்றால் அது தனித்தமிழ்த் தன்மை என்று ஒரு போக்கு. பிராமணர், தமிழ் வடமொழியில் இருந்து வந்தது என்று முன்பு சொன்னார்கள். ஆகவே வடமொழிச் சொற்களை ஒழிக்க வேண்டும் என்கிற ஆவேசம். தமிழருக்கு இசை இருக்கவில்லை என்றார்கள். ஆகவே கர்நாடக இசை வேண்டாம் என்ற வீம்பு. இந்த விதமான மூர்க்கத்தனம் ஒவ்வொரு துறையிலும் தலை நீட்டி வந்துள்ளது.

மறுபுறம், தமிழில் உள்ள நல்ல சொற்களை அதுவும் தமிழர் பரவலாக அறிந்த சொற்களைத் தேடுவதற்கான சோம்பல். குருட்டுத்தனமாக அயற்சொற்களை, குறிப்பாக ஆங்கில வாயிலாக வந்த சொற்களை அப்படியே உள்வாங்கி விடுகிற போக்கும் தமிழ்ச் சொற்றொடர்களின் இடத்தில் கொச்சையாகத் தமிழாக் கப்பட்ட ஆங்கிலச் சொற்றொடர்களைப் பாவிக்கும் போக்கும் நாளேடுகளில் மலிந்து காணப்படுகிறது.

இன்றைய நவகொலனியச் சூழலும் 'உலகமயமாதல்' என்ற பேரில் நாம் வரித்துக் கொள்ளத் துடிக்கும் பூரணமான ஏகாதிபத்திய ஆதிக்கமும், ஒரு புறம் ஆங்கிலத்தையே அதிகார மொழியாக ஏற்றுச் சரணாகதியாகிற ஒரு போக்கையும் மறுபுறம் தமிழின் சமூக முக்கியம் பற்றி குறைவான மதிப்பீட்டையும் தமிழின் ஆற்றல் பற்றிய ஒரு தாழ்வுணர்ச்சியையும் உருவாக்கி வருகின்றன. இதற்கு முகம் கொடுப்பது எவ்வாறு என்பதிலேயே தமிழின் எதிர்காலம் பற்றிய கேள்விக்கு உரிய விடையின் ஒரு முக்கியமான பகுதி தங்கியுள்ளது.

நமது உயர், நடுத்தர வர்க்கங்களின் ஆங்கில மோகம் பற்றி நமக்குள்ளே பொய்கள் வேண்டாம். இன்று இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் நடுத்தர வர்க்கம் ஆங்கிலத்தின் மூலம் செயற்படுவதையே சிறப்பாக எண்ணுகிறது. தமிழ்த் தேசியவாதக் கட்சிகளான திராவிட இயக்கங்கள் யாவுமே, ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாவதை விரும்புவதோடு, தமிழ் நாட்டில் தமிழ் மூலம் உயர்கல்விக்கு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி ஒரு திட்டமும் இல்லாமலே உள்ளன. தமிழ்ப் பற்று இல்லாதவர்களாகக் காட்டப்பட்டு வந்த இடதுசாரிகளோ, தாய்மொழிக் கல்வியின் தேவையை ஒவ்வொரு இந்திய மாநிலத்

திலும் வற்புறுத்தி வருகிறார்கள்.

தமிழ் உயர் நடுத்தர வர்க்கத்தைப் பொறுத்த வரை, ஆங்கிலம் எசமானர்களின் மொழி, அயல் நாடுகளில் வேலை தருகிற முதலாளிகளது மொழி, இன்று உள்நாட்டில் சொற்களையே பாவிப்பதை யாராலும் நிறுத்திவிட முடியாது.

தமிழ்ப்பேசும் சமூகங்களின் முன்னும் தமிழ்மொழியின் முன்னும் உள்ள சவால் பெரியது. புதிய தகவல்கள், கோட்பாடுகள், கலைச் சொற்கள், பண்டங்களின் பேர்கள், ஊர்ப் பேர்கள், மனிதர்களின் பேர்கள், விலங்கினங்களின் பேர்கள் என ஏராளமான விடயங்களுடனும் தமிழ்ப் பேசுவோரும் அவர்கள் நாவில் வழங்குகிற தமிழும் உறவாடவேண்டி உள்ளது.

தொல்காப்பியர் காலத்து இலக்கண விதிகள் இதற்கு முகங்கொடுக்கப் போதா. பின்னைக்கால இலக்கண நூல்களில் இன்றைய எழுத்துச் சிக்கல் பற்றிக் கற்பனை செய்யக்கூட இடம் இருக்கவில்லை. வடமொழியிலிருந்து வந்த நான்கு மெய்யெழுத்துக்களுங்கூட இந்த எழுத்து நெருக்கடிக்கு முகங் கொடுக்கப் போதா. Fக்கு ஃப என்றும் zhக்கு ழ என்றும் Tக்கு ரி என்றும் எழுதி நாம் செய்கிற மழுப்பல்கள், தமிழின் நிசமான பிரச்சனையின்று தப்புவதற்கு உதவமாட்டா என்பது மட்டுமல்லாமல், தமிழைச் சீர்குலைக்கிற செயலையும் செய்வன.

தமிழ் எழுத்துக்களின் முன்னாலோ, பின்னாலோ, மேலேயோ, கீழேயோ நடுவிலேயோ புள்ளிக் கோலம் போட்டுத் தமிழுக்குப் புதிய சில எழுத்துக்கள் வருவதைத் தடுப்பது தமிழை வளர்க்க உதவாது. இன்றைய தமிழ், அதாவது பேச்சுத் தமிழ், பிச்சை போடுகிற என்.ஜி.ஓக்களின் மொழி. நமது அறிவு, ஆற்றல், ஆராய்ச்சி எல்லாமே அயல் நாட்டவர்கட்கு விற்பதற்காகவும் சேவகம் செய்வதற்காகவுமே என்று உள்ள வரைக்கும் ஆண்டைகளின் மொழி எதுவோ அதுவே அடிமைகளாகிய நம்மை ஆளவந்த மொழியாக இருக்கும்.

நம் கறுப்பு 'வெள்ளைக்காரப்' பிள்ளைகளைப் பொறுத்தவரை தமிழ் என்பது வீட்டு வேலைக்கார ருடனும் ஆங்கிலம் படித்து அறியாத உறவினர்களுடனும் சுற்றத்தாருடனும் பேசுவதற்கு ஏற்ற மொழி. அதை விட, இடையிடை நாம் தமிழர் என்று நினைவூட்டிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தான், கலை, கலாசாரம், சடங்கு, சம்பிரதாயம் என்று ஏதாவது செய்வதற்கும் கொஞ்சம் பயன்படுகிற மொழி. அவர்களுக்குத் தமிழ் எப்போதோ வளர்ந்த அளவுங்கூட அதிகம்.

தாங்கள் தமிழை வளர்க்கிறதாகவும் நேசிக்கிறதாகவும், மெய்யாக நம்பியோ நம்பாமலோ, 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்று சொல்லிக் கொண்டே தூய்மையின் பேரால் தமிழின் கழுத்தை நெரிக்கிற ஒரு போக்கு இருக்கிறது. தமிழில் புதிதாக ஒரு சொல் நுழைந்தால் அதை அமிலத்திற் கழுவிப் பார்த்து, அது சுத்தத் தமிழா என்று பரிசோதித்து, இல்லாவிட்டால் தூய தமிழில் ஒரு சொல்லை இவர்கள் புனைந்து தமிழிற் தவழ விடுவார்கள். அது தமிழரின் வாயில் நுழைந்து பிழைப்பதும் உண்டு, பிழைப்படு வதும் உண்டு. இப்படி ஏதாவது ஒரு சொல் தனித்தமிழாகத் தேறி அரங்கேறுவதற்குள் ஆயிரக்கணக்கில் அயற் சொற்கள் தமிழுக்குள் வந்து விடுகின்றன. அவை தமிழல்ல என்று தனித் தமிழ்க்காரர்கள் எவ்வளவு தான் உயரக் கூரையேறி உரக்கக்கூவினாலும் தமிழர்கள் எல்லாரும் அந்தச் சில புதிய ஒலிகளை உள்வாங்கியுள்ளனர். அவற்றைக் கையாள நமது எழுத்து முறை போதாது. எனவே இது வரை செய்யப்பட்ட சில்லரைப் பழுது பார்த்தல்களின் மூலம் தமிழால் அதன் யதார்த்தமான நிலைமைக்கு முகங் கொடுக்க முடியாது என்பதை நாம் ஏற்றே ஆக வேண்டும்.

தமிழுக்கு புதிய எழுத்து வடிவங்களைப் புகுத்தல் குறுகியகாலத்துக்கு அதன் ஒலிப்பிரச்சனை யைத் தீர்க்க உதவும். நீண்ட காலத்தில் தென் ஆசியப் பிரதேசத்துக்குப் பொதுவான ஒரு எளிய எழுத்து முறையை வகுத்துக் கொள்வது, தமிழுக்கும் இப் பிரதேசத்தின் பல வேறு தேசிய இனத்தவருடைய மொழிகட்டும் நன்மை தரும்.

தமிழின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ள இன்னொரு அம்சம் கலைச் சொல்லாக்கம் தொடர் பானது. தமிழ் தமிழருக்காகவே அல்லாது தமிழுக்காகத் தமிழரல்ல என்பது எனது தாழ்மையான கருத்து. இந்த நோக்கில் மக்களது மொழி நடைமுறையைக் கணிப்பில் எடுத்தே புதிய கலைச் சொற்களைப் புனைவது பயனுள்ளது. தமிழ்ப் பேசும் மக்கள் பரவலாகப் பயன்படுத்தும் அவசியமான அயற் சொற்களை ஏற்றுக் கொள்ளப்பட்ட வழக்காக அங்கீகரிப்பதும், எளிதில் விளங்கக் கூடிய பயனுள்ள அயற்சொற்களை உடனடியான எதிர் காலத்திற்குரிய கலைச் சொற்களாக அவற்றின் மூல வடிவிலோ தமிழுக்குச் சிறிது இசைவான முறையிற் சற்று மாற்றியோ உள் வாங்குவதும் பயனுள்ளது. அதே வேளை, அடிப்படையான சில சொற்கள், குறிப்பாக மெய்யியல், தருக்கவியல், கணிதம் போன்ற துறைகளில், அதிக முரண்பாட்டுக் கிடமில்லாது சீராக அமைக்கப்பட வேண்டும். அனைத்திலும் முக்கியமாக ஒவ்வொரு தமிழ்க்கலைச் சொல்லையும் ஆங்கிலத்தில் உள்ள ஒரு சொல்லின் நிழலாக நோக்காமல் தமிழ்ப் பேசும் சமூகங்களின் சிந்தனையும் சமூக நடைமுறையும் சார்ந்து நோக்குவது முக்கியமானது.

தமிழ்ப் பேசுவோரது சமுதாயத் தேவைகளை முதன்மைப்படுத்தியே எவரும் தமிழை வளர்க்க முயலலாம். அப்படி அல்லாத முயற்சிகள் தமிழில் ஒரு 'சமஸ்கிருதத்தை' உருவாக்க உதவுமே அல்லாது வேறு பயன் தர மாட்டா.

தமிழின் வளர்ச்சி தமிழ்ப் பேசும் சமூகத்தின் கல்வி, தொழில், பொருளாதாரம் என்பனவற்றின தும் அதன் சமூக உறவுகளதும் பண்பாட்டினதும் வளர்ச்சியின் மீதே தங்கியுள்ளது. எனவே தமிழின் வளர்ச்சி என்பது ஒரு சமூக அரசியற் பணியாகிறது. இது வரை குறுகிய தமிழ்த் தேசியவாதம் தமிழை மற்றச் சகோதர மொழிகளிடமிருந்து தனிமைப்படுத்தி உள்ளது. ஆயினும் ஆங்கில ஆதிக்கத்திற்கெதிரான ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க அதனால் இயலவில்லை.

உலகிற் தூய இனமென்று எதுவும் இல்லை. தூய பண்பாடு என எதுவும் இல்லை. தூய மொழி என எதுவுமே இல்லை. அயலினின்று உள்வாங்கியே வாழும் மொழிகளில் ஒவ்வொன்றும் வளர்ந்துள்ளது. அந்த உள்வாங்கல் யாருடைய ஆளுமையினதும் தேவைகளினதும் கீழ் நடைபெறுகிறது என்பது தான் அந்த வளர்ச்சியின் சிறப்பைத் தீர்மானிக்கிறது.

தமிழின் வளர்ச்சியை விரும்புவோர் சமகால உலகின் தேவைகட்கு முகம் கொடுப்பதில் அதன் குறைபாடுகளை அடையாளம் காணத் தவறக்கூடாது. தமிழின் தேவைகள் என்ன, தமிழ்ப்பேசும் சமூகங்களின் தேவைகள் என்ன என்பதை நாம் அடையாளங்கண்டு நவீன உலகுக்கு ஏற்ற ஒரு வலிய மொழியாகத் தமிழை வளர்க்க முடியும். உலகின் ஒவ்வொரு மொழிக்குள்ளும் அந்த வளர்ச்சிக்கான ஆற்றல் உண்டு. ஆனால் இறுகிப்போயிருக்கிற மரபுவாதக் கூட்டை உடைத்து வெளியே வராத குஞ்சு அதற்கு உள்ளேயே மரித்து விடும்.

அடுத்த நூற்றாண்டு பற்றிப் பேசுமுன்பு இந்த நூற்றாண்டின் தமிழ் என்று எதை நாம் கருதுகிறோம் என்று நமக்குள்ளே தெளிவு அவசியம். அது சென்ற பல நூற்றாண்டுகளின் முன்பிருந்த ஒரு மொழியாகவே இருக்க வேண்டுவோர் இன்னும் ஆயிரம் ஆண்டுக் காலம் கழித்தும் தமிழின் தொன்மையும் தூய்மையும் பற்றிப் பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால் அந்தத் தமிழ் இன்றைய வடமொழி போல, லத்தின் போல, 'பாட்டனாரின் கொம்பன் யானை' போல ஒரு மொழிப் பிணம் தான்.

மறுபுறம் தமிழ், தமிழருக்கான ஒரு உயிருள்ள வாழும், வளரும், மாறி விரிவடையும் மொழி என எண்ணுவோர் செய்ய வேண்டியன பல உள்ளன. முதலில் நம் 'இரண்டாயிரம் வருடப் பழைய சுமையைக்' கொஞ்சம் இறக்கி வைத்துக் குப்பை நீக்கி நல்லதை மட்டும் எடுத்து முன்னே செல்லத் துணிய வேண்டும். தவறுவோமேயானால் அடுத்த நூற்றாண்டும் ஆயிரமாண்டும் நம்மையும் நம் மொழியையும் கடந்து சில நூற்றாண்டுகளாகத் தேங்கிக் கிடக்கிற இடத்திலேயே விட்டு விட்டுத் தம்பாட்டில் போய் விடுவன.

# புது யுகம் படைப்போம்!

செல்வி முனௌபியா ஏ.கபூர், முதலாம் வருடம், கலைப்பீடம்.

*மாறி வரும்-காலச்சக்கரத்தில்*
*மானிடனே!*
*மனித வாழ்விலும் - மாறுதல்கள்*
*வர வேண்டும், வளர வேண்டும்.*
*பழமை களைந்து,*
*புதியவற்றை வரவேற்கும்*
*யுகந்தனிலே!*
*நாமும் புத்துணர்ச்சி பெற வேண்டும்.*
*கடந்து வந்த பாதைதனை*
*கனவாக மீட்டிடுவோம்.*
*அத்திவாரம் இடுவோம் - என்றும்*
*நாளைய எம் வாழ்வு*
*நல்லதாய் அமைய வேண்டு மென்றே!*

★ ★ ★

*விஞ்ஞான யுகந்தனிலே*
*வியாபித்த விந்தைகளோ*
*விஞ்சி நிற்கின்றன,*
*இன்றைய பொழுது தனில்.*
*கணனி மயந்தனிலே*
*களிக்கின்ற யுகமிது,*
*நாளைய இருபத்தியோராம் நூற்றாண்டில்*
*இமயத்தின் சிகரத்தை*
*இண்டநெட்டால் தொட வேண்டும்.*
*நகர்ந்து செல்லும் இந்நூற்றாண்டு*
*நலிவுற்ற உள்ளங்களால்*
*நிறைந்து நிற்கின்றன.*
*தடயங்களால் மூடி நிற்கும்*
*வீதிகளால் - எம்*
*கண்கள் நீரைத் துளிர்க்கின்றன.*

*கொடூர யுத்தங்கள்,*
*மனித வேட்டைகள்,*
*மனிதாபிமானம் எங்கோ...*
*முகவரி தொலைத்து -*
*இல்லை - மரணித்த சாயலில்*
*மறைந்து விட்டது எம்மவர்*
*மனங்களினின்றும்!*
*காலக் கொடுமைகள்,*
*சாலவே புதுமுகம் காட்டி*
*புன்னகைத்து நிற்கின்றன!*
*சமுதாயச் சீர்கேடு*
*இன்று-*
*போதைப் பொருட்களிலும்,*
*களியாட்ட திரைகளிலும்,*
*கற்பிழக்கா கன்னியரை*
*கண்ணீரில் வதைத்து நிற்க,*
*வளம் மிக்க வாலிப வட்டங்கள்*
*வலம் வருகின்றன வீதியோரங்களில்*
*'கஞ்சா'வில் பஞ்சமின்றி,*
*'கள்'ளினைத் தெள்ளமுதாய்,*
*பருகிடும் இளசுகளோ....?*
*'ஹெரோயினின்' நாராசம் புரியாது,*
*'அபினை'யே ரிபினாக*
*நினைக்கின்ற - பரிதாப காட்சியது!*
*'குடு' வின் கெடுதலினால்*
*வாழ்க்கையில் திக்குத்திசையின்றி*
*தவிப்பவர் தான் எத்தனை பேர்?*

★ ★ ★

'சிறுவர்கள் துஷ்பிரயோகம்'
பேரிடியாய் எம் கண் முன்னே
பேயாட்டம் ஆடும் நிலை.
ஜீரணிக்க முடியவில்லை - இத்தனையும்
காணும் எம்மால்.
நாட்டையாளப் பிறந்தவராம்,
நாளும் ''வீதியோரச் சிறுவரென''
புது நாமம் பூண்டு - வலம் வருகின்றனர்,
யாசகம் பெறுவதற்காய்.
ஏடு பிடிக்கும் கரங்களின்று,
பாத்திரம் பிடித்து வருகின்றனர்.

அடிமனத்திலே கோபுரமாய்
எழுப்பப்பட்ட
எதிர்காலக் கற்பனைகள், இலட்சியங்கள்,
அடித்தளத்தினிலே சிதைகின்றன.
டாம்பீக வாழ்க்கை - எமக்கு
அணுவளவும் இல்லை
கும்பி நிரப்புவதற்கோ -
மிஞ்சிய ஓர் பிடியே எமக்கு
போதும்!
பால் மணம் மாறா பருவங்கள் - யாம்
இன்று கந்தல் ஆடையின்றி-
விம்மல் பெருக்கெடுக்க
விழி நீரால் - மண்ணினையே
சஞ்சாரம் செய்கின்றோம்.

அரியணையில் அமர்வதற்கோ
அருகதையே அற்றவர்கள்,
நாங்களென்றோ - சமகால
அரண்மனையாய் நடைசாலைகளில்
ஒத்திகைகள் நடக்கின்றன.

முகவரிகள் தொலைத்தவர்கள்
புதுவரிகள் தேடி நாளும்
புலம் பெயர்ந்து சாதனைகள்
புரிகின்றனர் அவனியிலே!

''20 ம் நூற்றாண்டு'' மானிடர் - எம்
இதயத்தில் - மாறாத சோகங்களால்
முகாரியிடப்பட்டுள்ளது.

நாளை வாழ்வுண்டு என்ற
நாளையும் நினைக்கவில்லை.
காலையும், மாலையும் - ஏன்
தித்திக்காத ரணங்களானால்....!
நாளை உண்டென்ற நினைவுதானேது?
நடந்தவைகள் கண்சிமிட்டும் மின்னலாய்
மறையவில்லை-ஆயினும்
நடக்கப் போவதாவது - நல்லதாய் அமைய
இந்நூற்றாண்டின் எடுத்துக்காட்டுக்கள்
சான்றுகளானால்....
ஓடும் உதிரம் கூட
கனலேறி இருக்க,
உள்ளம் வரண்ட சஹாராக்களின்
சாயல்களின் விளிம்பினிலே,
ஏக்கப் பெருமூச்சுக்கள்,
ஏரிமலையாய் வெடிக்கின்றன.
இப்போதிருப்பார் அடுத்தகணம்
இருப்பதற்கு உத்தரவாதமில்லை.

இந்நிலை மாறவேண்டும்
பிறக்கும் நூற்றாண்டு,
இற்றைக்கு சவாலாகி,
சோகம் களைந்து, மனங்களில்
சோபனம் நிலைக்க வேண்டும்.
மண்ணில் மலர்வது உயர்வுக்கேயன்றி,
மடிவதற்காகவல்ல!
''புதியன புகுதலும் பழையன கழிதலும்''
என்ற - புரட்சிக்கவியின்
புதுமுகம் மலர்ந்து - புன்னகை தவழ
''புது யுகம் படைக்க வேண்டும்''
வரும் நூற்றாண்டு - வையத்தில்
நல்வரவாய் என்றும் அமைய வேண்டும்.

# புதிய நூற்றாண்டின் தேவை மாற்றங்களை உள்வாங்கும் முகாமை - இலங்கை ஒரு பார்வை

*வ.சிவலோகதாசன், B.Com.Hons (Cey), CEC (UK), உதவி விரிவுரையாளர், வணிகவியல் துறை.*

மாற்றத்தை ஒரு வியாபார நிறுவனம் எவ்வாறு எதிர் கொள்ள வேண்டும், எவ்வாறு அதற்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும், என்பது பற்றி ஜாக்ரவுற் என்ற அறிஞர் தனது புதிய இடைநிலைப் படுத்தல் எனும் நூலில் விரிவாக விளக்கியுள்ளார். மாற்றத்தை எதிர்வுகூற முயற்சிப்பதிலேயே வாடிக்கையாளரைத்தூண்டுவதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடிய பல விடயங்கள் இருக்கின்றன. ஆனால் எதிர்காலத்தை யாராலும் எதிர்வுகூற முடியாது. இவ்வுகில் மாற்றம் மட்டுமே மாறாமல் இருக்கிறது. இம்மாற்றங்களுக்கு மத்தியில் இலங்கை புதிய நூற்றாண்டை மிகவும் உறுதியான ஒரு நிலையில் நின்று எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதில் மிகமுக்கியமானது திறந்த போட்டிப் பொருளாதார மொன்றை எடுத்துவருவதில் அரசு (நாடு) காட்டிவரும் அர்ப்பணிப்பாகும். இந்நிலையில் சந்தையில் பாரிய அற்புதங்கள் நிகழ்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. இச்சந்தைகளில் நுகர்வோரின் பிரதான பிரச்சினை பல நெருக்கடிகளுக்கு உள்ளாகுதல், போட்டியின் காரணமாக தெரிவு பற்றிய கொடுமையில் சிக்கித் தவித்தல் என்பனவாகும். உலக அடிப்படையில் போட்டிகளில் ஏற்பட்டுள்ள செறிவே வியாபாரத்தில் காணக்கூடிய மிகப் பெரியமாற்றமாகும். இவ்வளவுபெரிய மாற்றங்களுக்கு தனியார் மக்கள் கம்பனிகள் மாத்திரமன்றி அரச பொதுத்துறை நிறுவனங்களும் முகங் கொடுக்க வேண்டியது தவிர்க்க முடியாத தொன்றாகும்.

துரித அபிவிருத்திக்கு அவசியமான மிக முக்கியமான மூலவளத்தை இலங்கை கொண்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. இலங்கை அறிவாற்றலும் படிப்பறிவும் பெருமளவுக்கு ஆர்வமும் கொண்ட மக்களைத் தாராளமாக தன்னகத்தே கொண்டுள்ளது. குறிப்பிட்ட சில கைத்தொழில்களின் ஒரு மையமாக அபிவிருத்தி செய்வதற்கு இலங்கையின் பூகோள அமைப்பு பெருமளவுக்குப் பொருத்தமானதாக உள்ளது. எனினும் இவ்வளங்களைப் பூரணமாகப் பயன்படுத்தி சிறந்த முகாமையின் கீழ் எவ்வளவு வினைத்திறனானதும் செயற்திறனானதுமான பயனை இலங்கை பெற்றுள்ளது என்பது கேள்விக்குறிய விடயமாகும். சுதந்திரம் பெற்றதிலிருந்து பெரும்பாலான நடவடிக்கைகள் பொதுத்துறை நிறுவனங்களின் கீழ் கொண்டுவரப்பட்டதும், பின்பு அவற்றில் சில கம்பனிகளாக உடமை மாற்றப்பட்டதும் யாவரும் அறிந்த தொன்றாகும். இதனால் இவை எவ்வித முன்னேற்றத்தைக் கண்டன என்பது ஆராயப்பட வேண்டிய தொன்றாகும்.

தனியார் மயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார் சந்தைகளில் பெருமளவுக்குத் தங்கியிருத் தல், திறந்த சர்வதேச வர்த்தகம், உலகமயமாக்கல் என்றெல்லாம் (சொற்றொடர்களில்) உலக கெங்கிலும் நாளாந்தம் நிகழ்ந்துவரும் இந்தமாபெரும் மாற்றங்களின் காரணமாக இலங்கையில் இடையறாது

விரிவடைந்து வரும் போட்டி, உலகப் பொருளாதாரமொன்றுக்குள் தள்ளிவிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக இலங்கையின் சமூகப் பொருளாதாரப்பின்புலத்தில் பொதுத்துறை வகித்துவரும் பங்கும், கம்பனிகளின் பங்கும் பல முக்கிய மாற்றங்களை எதிர்கொண்டுள்ளது. மாற்றங்களை எடுத்து வரும் முகவர் என்ற ஒரு புதிய பங்கினை அவை இப்பொழுது ஏற்றுள்ளது. இந்த நிலை இந்நிறுவனங்களின் நடவடிக்கைகளில் பெருமளவுக்கு விரிவாக்கத்தை எடுத்துவந்துள்ளது எனலாம்.

இந்நிறுவனங்கள் அத்தியாவசிய சேவைகளை வழங்கி வரும் துறைகளாக மட்டுமன்றி மூலவளங்களை விநியோகிக்கும், உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியை மேற்கொள்ளும், கொள்கைத் தலையீடுகளுக்கூடாக சமூக பொருளாதார அமைப்பை ஒழுங்குபடுத்தும் துறைகளாகவும் அவை நோக்கப்படுகின்றன. தேசிய மாகாண மட்டத்திலான பல்வேறு அமைச்சுகள், திணைக்களங்கள், மாவட்ட பிரதேச செயலகங்கள், பொதுக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், அதிகார சபைகள், வங்கிகள், காவற்துறை என்பன பல பொதுத்துறையின் கீழும், அவ்வாறே சில உற்பத்தித்துறைகள், நிதித்துறைகள், வங்கிகள், பங்கீட்டுத்துறைகள், இன்னும் பல அத்தியாவசிய தேவைகளை வழங்கும் துறைகளாக தனியார், மக்கள் கம்பனிகளும் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில் இத்துறைகளின் பொருட்கள், சேவைகள் விநியோகத்தில் காணப்படும் செயற்றிறன் மட்டமும், அதேபோல் மூலவளப் பயன்பாடும் மக்கள் வாழ்க்கைத் தரத்தில் முக்கியமான ஒரு தாக்கத்தைக் கொண்டிருக்க முடியும் என்பது தெளிவு. இந்நிறுவனங்கள் வெளியீடுகளை எடுத்துவரும் நிகழ்வுப் போக்கில் பாரிய அளவிலான மூலவளங்களை ஈடுபடுத்தியிருந்த போதிலும் சிறந்த முகாமையின்மையின் காரணமாக மனித முயற்சிக்கும் சம்பந்தப்பட்ட செய்முறைகளுக்கும் இடையில் சரியான அளவிலான கலவை இடம் பெற்றிருக்க வில்லை என்பதனை அனுபவம் காட்டுகிறது. எனவேதான் நிறுவனங்களின் திறமையீனம், மோசமான சேவை, விநியோகம், செயற்றிறனற்ற முகாமை என்பன குறித்து பொது மக்களும், அரசியல் வாதிகளும் அதிருப்தியை தெரிவித்து வந்துள்ளனர். இதன் காரணமாக கம்பனிகள் சில நட்டம், திருப்தியான சேவை வழங்க முடியாத நிலையில் சந்தையைவிட்டு வெளியேறியதும், பொதுத்துறைகள் சில கம்பனிகளாக உடமைமாற்றப்பட்டதும் யாவரும் அறிந்த தொன்றாகும்.

நிறுவனம் என்ற வகையில் உள்ளீடுகளை வெளியீடுகளாக நிலை மாற்றம் செய்யும் செயற்பாட்டில் பரஸ்பரம் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டுள்ள பல்வேறு காரணிகளின் ஒரு பின் விளைவாக உற்பத்தித்திறனை நோக்க முடியும். நிறுவனங்கள் உயர் அளவிலான உற்பத்தித்திறனை சாதித்துக் கொள்ளும் பொருட்டு கிடைக்கக்கூடியதாக இருக்கும் மூலவளங்களை செயற்திறனுடனும் (சரியான விதத்திலும்), வினைத்திறனுடனும் (சரியான நோக்கங்களுக்காகவும்) பயன்படுத்திக் கொள்ளக்கூடியவாறு நிர்வாக முறை நெறிப்படுத்தப்படுவது அவசியமாகும். மேலும் வாடிக்கையாளரின் தேவையை, திருப்தியை நிறைவு செய்வதில் கவனம் செலுத்துதல் வேண்டும். சந்தைப்படுத்தலின் இறுதிநோக்கமே அதிக எண்ணிக்கையுள்ள வாடிக்கையாளரை வென்றெடுப்பதாகும். இலங்கை நிறுவனங்கள் எவ்வளவுக்கு தனது நோக்கங்களை வரையறுத்து முழுமையான நோக்கை அடைகின்றன என்பது ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

மக்களுக்கு உண்மையான வழிகாட்டுதல்களை வழங்குவதற்குக் குறிப்பாக ஒரு தரிசனம் அவசியமாக உள்ளது எனவும், ஆனால் பல்வேறுபட்ட நிலைமைகளில் முன் முயற்சியைத் தூண்டுவதற்கும், பொருத்தமான விதத்தில் செயல்படுவதற்கும் அது தெளிவற்றதாக உள்ளது எனவும் ஜோன் கோட்டர் குறிப்பிடுகிறார். தலைமைத்துவத்திலிருந்துவரும் ஒரு தரிசனம் குறிக்கோள்களை

*சாதித்துக் கொள்வதற்காக மக்களை சரியான வழியில் இட்டுச் செல்லும் ஒரு காரணியாக உள்ளது. மறுபுறத்தில் திட்டமிட்ட பணி, ஒரு குறிப்பிட்ட தாபனம் ஈடுபட்டுள்ள தொழிலைச் சுட்டிக்காட்டுகிறது. எனவே அது மூலவளங்களை முடக்குவதற்கான குறிக்கோள்களை உருவாக்கிக் கொள்வதற்கும் திட்டங்களைத் தயாரித்துக் கொள்வதற்குமான வழிகாட்டுதலை வழங்குகின்றது. பொதுவாக பொதுத் துறை நிறுவனங்கள் ஒரு தரிசனத்திலோ அல்லது பணித்திட்டத்திலோ வழிநடத்தப்படுவதாகத் தெரியவில்லை. மாறாக அவை பெறுமனே உயிர்வாழ்வதற்கான வழியையே தெரிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. அத்துடன் கம்பனிகள் தனது நோக்கங்களையோ, உபாயங்களையோ திருப்தியாக வரையறுக் காததுடன் வாடிக்கையாளரின் தேர்வுக்கு, திருப்திக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரியவில்லை. மாறாக அவை உச்ச இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. எனவே இந்த நிறுவனங்களில் முடிவெடுக்கும் அதிகாரத்தில் உள்ளவர்கள் நாங்கள் இப்பொழுது செய்வதனை ஏன் செய்கின்றோம், செய்வதையே அவ்விதத்தில் மீண்டும் மீண்டும் ஏன் செய்கின்றோம், இவற்றின் நீண்டகால நிகழ்வுகள் என்ன போன்ற அடிப்படைக் கேள்விகளை எழுப்புவார்கள் என எதிர்பார்க்க முடியாது.*

*வாடிக்கையாளர் திருப்தி நிறுவனங்களின் வெற்றிக்கு மிக முக்கியமான குறிகாட்டியாகக் கருதப்படுகிறது. இன்றைய நவீன வர்த்தக உலகில் வாடிக்கையாளரே வியாபாரமாகக் கருதப்படுகிறது. இலங்கையில் வாடிக்கையாளர் குறித்த கருதுகோள் சற்று சிக்கலான தொன்றாகவே இருந்து வருதனைக் காணமுடிகிறது. நிறுவன ஊழியர்கள் பொதுமக்களை தமது வாடிக்கையாளராகக் கருதுவதில்லை. இங்கு வாடிக்கையாளர்களை அலட்சியப்படுத்தும் ஒரு போக்குக் காணப்படுகின்றது. நிறுவனங்கள் வாடிக்கை யாளர் திருப்தியை அடிப்படையாகக் கொண்டு செயற்படுமாயின் வெற்றி காண்பதுடன் ஒரு நிலையான அரசியலையும் காணக்கூடியதாக இருக்கும். சிங்கப்பூர், மலேசியா, சீனா போன்ற நாடுகளில் அரச சேவையும், தனியார் கம்பனிகளும் உயரளவில் வாடிக்கையாளர்களை நோக்கி நெறிப்படுத்தப் பட்டவையாக இருந்துவருகின்றன. இது தொடர்பாக இலங்கை பெறுமதி மிக்க படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.*

*நிறுவனங்களின் வெற்றி ஊழியர்களின் கண்ணோட்டத்தில் மட்டுமன்றி வாடிக்கையாளர்களின் கண்ணோட்டத்திலும் அணுகப்படுதல் வேண்டும். அதாவது சம்பந்தப்பட்ட நடைமுறைகளில் அடிப்படையான தீவிரமாற்றங்களை எடுத்து வருவதன் மூலம் மட்டுமே வெற்றியைக் காண முடியும். எனவே புத்தாக்கமும் புதிய சிந்தனையுமே இதற்கான துவக்கப்புள்ளிகளாக இருந்து வர வேண்டும். புதிய சிந்தனை கொண்டவர்களால் குறிப்பாக வாடிக்கையாளருக்குக் கிட்டும் அனுகூலங்கள் என்ன, அவர்களின் தேவையில் திருப்தியில் மாற்றத்தை ஏற்படுத்தும் சூழ்நிலைகள் எவை, பிரதிகூலங்கள் எவை என்ற நிலைப்பாட்டில் நின்று சிந்திப்பவர்களாலேயே நிறுவனங்கள் வழிநடத்தப்படவேண்டும். இந்தவகையான சிந்தனை உள்ளீடுகளிலும் பார்க்க பெறுபேறுகள் மீதே அதிக அழுத்தத்தைச் செலுத்துகின்றது. சில நிறுவனங்களில் சம்பந்தப்பட்ட நடைமுறைகளில் புத்தாக்கமும், மாற்றமும் அறவே இல்லாதிருப்பது ஒரு குறையாகும். சில ஆய்வுகள் அரச சேவையின் தற்போதைய நடைமுறைகளில் சில வழக்கொழிந்தவையாக இருந்து வருகின்றன என்பதையும், அவை இன்றைய தேவைக்குகந்தவையாக இருந்து வரவில்லை என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளன. அவ்வாறே சில கம்பனிகளில் பின்பற்றப்படும் நடைமுறைகள், விதிகள் பொதுமக்களுக்கு சிரமத்தையும் தொல்லையையும் அளிப்பனவாக இருந்துவருகின்றன.*

*நிறுவனங்களில் எவ்வாறு வாடிக்கையாளர்கள் முக்கியத்துவம் வகிக்கின்றனரோ அவ்வாறே ஊழியர்களும் முக்கியம் பெறுகின்றனர். ஊழியர்களின் வெளியீட்டுத்திறன் அவர்களுடைய் தொழில்*

திறனிலும் தூண்டுதல்களிலும் தங்கியிருக்கும். ஒவ்வொரு நிறுவனமும் ஊழியர்களைத் தெரிவு செய்தல், அபிவிருத்தி செய்தல், பயிற்சியளித்தல், ஊதியம் வழங்கல் என்பனவற்றை பதவித் தொழிற்பாட்டினூடாக செய்கின்றது. ஆக்கத்திறனுள்ள ஊழியர்களை உருவாக்குவதில், அவர்களைத் தூண்டுதலில், அபிவிருத்தி செய்வதில் இந்நிறுவனங்கள் எவ்வளவு மூலவளத்தைச் செலவிடுகின்றது, அதில் எவ்வளவு வெற்றிகண்டுள்ளது என்பது அறியப்பட வேண்டிய தொன்றாகும். தேவையான ஆற்றல் உள்ளவர்களாக ஒவ்வொருவரையும் உருவாக்கி தனக்குத் தேவையான ஊழியப்படையை பெற்றுக் கொள்ள எந்த நிறுவனமும் முன்னிற்பதாகத் தெரியவில்லை. தொழிற்சந்தையில் அவர்களைத் தேடித்திரியும் பணியில் ஈடுபடுகிறதே தவிர. தேவையானவர்களை உருவாக்குவதில் எவ்விதபங்களிப்பும் செய்வதாகத் தோன்றவில்லை எனலாம். உற்பத்திப் பொருள், இலாபம் இருந்தாலும் நிறுவன வெற்றிக்கு மக்களே முக்கியம். எனவே சரியான பதவிக்கு சரியான ஆளை வைத்திருப்பது அவசியம். சரியானவர்களைத் தேடுவதிலும் பார்க்க உருவாக்குவது சிறந்ததாகும். அதுமட்டுமன்றி ஆற்றலுள்ளவர்கள் எதிர் காலத்தில் அவசியமானவர்களாகையால் அவர்களுக்கு நன்கு பயிற்சியளித்துத் தூண்டுதல் வழங்கப்பட வேண்டும்.

பெரும்பாலான நிறுவனங்களில் பெறுபேறுகளிலும் பார்க்க அதிகாரக் கட்டமைப்புக்களுக்கு உயர் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுவருவதைக் காணலாம். எனவே இந்நிலையில் பெறுபேறுகளையும் மீறி அதிகாரிகளின் படித்தரங்கள், விதிகள் என்பவற்றின் மேலாதிக்கம் நிலவி வருகின்றது. இதன் விளைவாகத் தவிர்க்க முடியாத வகையில் முடிவெடுப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. தீர்மானம் எடுப்பதிலுள்ள தாமதங்களைத் தவிர்ப்பதற்கு இருவழிகளில் முயலலாம். முதலில் அதிகார ஏறுவரிசை அமைப்பினைக் குறைத்து சமவரிசைத் தாபனங்களை உருவாக்கி நடவடிக்கைக்களை எடுக்கலாம். இரண்டாவது நடுமட்டங்களிலும் கீழ்மட்டங்களிலும் உள்ள ஊழியர்களுக்கு முடிவெடுக்கும் அதிகாரத்தை வழங்க முடியும். இது கீழ் மட்ட ஊழியர்கள் செயல்தூண்டல் பெற்றுக் கொள்வதற்கு வகை செய்யும். அத்துடன் நிர்வாக அமைப்பின் பல்வேறுபாகங்களுக்ககிடையில் அதிகளவிலான ஒழுங்கமைப்பைக் கட்டியெழுப்புவதில் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டு வருதல் அவசியமாகும். தற்போதுள்ள நிறுவனங்களின் நிர்வாக அமைப்பில் காணப்படும் பல்வேறு திணைக்களங்கள், பிரிவுகள், அலகுகள் என்பவற்றுக்கிடையில் குறைந்தளவிலான தொடர்பே நிலவி வருகின்றது.

இன்னும் கொஞ்ச நாட்களில் உதயமாக இருக்கும் புதிய 2000வது ஆண்டு அபிவிருத்திச் சவால்களைப் பொறுத்தவரையில் ஒரு காலகட்டமாக இருக்கும் புதிய தகவல்யுகத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கு இலங்கையின் அரச சேவையும், கம்பனிகளும் புதிய அறிவையும், திறன்களையும், புதிய முறைகளையும், அதேபோல நவீன பாணியிலான பணிக் கலாசாரமொன்றையும் உள்ளடக்கிய முகாமையொன்றை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். இவ்வகையில் கடந்த பல தசாப்தங்களாக ஜப்பானிய, அமெரிக்க பொருளாதார சாதனைகள் உலகின் எல்லா நாடுகளையும் பிரமிக்கச் செய்துள்ளன. அவற்றின் படிப்பினைகளையும், வெற்றிக்கான அணுகுமுறைகளையும் அறிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

அமெரிக்க கம்பனிகளின் வெற்றிகரமான இயக்கத்திற்கு காரணங்கள் என்ன என்பதை ஆராய்ந்த அறிஞர்கள் அவற்றின் நடத்தைகள் தொடர்பாக 8 விதமான கருத்துக்களை முன்வைத்தனர். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வித கம்பனிகள் சார்ந்தவை. இவை இலங்கை நிறுவனங்களைப் பொறுத்தவரையில் புதிய படிப்பினையை வழங்கவல்லன. அவையாவன,

**1. நடத்தை வழி:-**

இந்தக் கம்பனிகள் பகுப்பாய்வு, தீர்மானமெடுத்தல் முறைகளை மேற்கொண்டாலும் செயலிலேயே முக்கிய அடிப்படையை வைத்திருக்கிறது. அவர்கள் நடைமுறையில் எதையும் செயற் படுத்த வேண்டும் என்ற அக்கறை உடையவர்களாக இருக்கின்றனர். எனவே சிறப்பாக தொடர்ந்து இருக்கின்ற கம்பனிகள் செயலுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

**2. வாடிக்கையாளருக்கு நெருக்கமானது**

இந்தக் கம்பனிகள் வாடிக்கையாளர்களுக்கு நெருக்கமாகத் தமது நடவடிக்கையை எடுப் பார்கள். எந்த வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்கிறதோ அவர்களிடமிருந்து பல விடயங்களைக் கற்கின்றார்கள். தங்களுடைய பொருட்கள் சேவைகளை ஏனைய நிறுவனங்களைக்காட்டிலும் வித்தியாச மான தரத்துடனும், நம்பிக்கையுடனும் சிறப்புடையதாகவும் வழங்குவதால் இவற்றுக்குப் புகழும், நம்பிக்கையும் நீண்ட காலங்களுக்கு இருக்கின்றன. பொருட்கள் சேவைகளுக்கான கருத்தை வாடிக்கை யாளரிடமிருந்தே பெறுகின்றன.

**3. சுதந்திரமாக இருப்பதும், முயற்சித் தன்மையும்**

கண்டுபிடிப்பை முக்கியமானதாக கருதும் இந்தக்கம்பனிகள் பல தயாரிப்பாளர்களையும், கண்டுபிடிப்பாளர்களையும் நிறுவனத்தில் பல இடங்களிலே வைத்திருக்கின்றன. இடர் ஏற்பதிலேயும் முயற்சி செய்து பார்ப்பதிலேயும் அமெரிக்காவின் வெற்றிகரமான கம்பனிகள் முன்னணியில் திகழ்கின்றன. இதனால் பல பிழைகளைத் தவிர்க்கக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுகிறது.

**4. மக்களுக்கூடாக உற்பத்தித்திறனை ஏற்படுத்துதல்**

நிறுவனத்தில் உள்ள ஆட்களே பொருட்கள், சேவைகளின் தரத்துக்கும், உற்பத்தித்திறனுக்கும் காரணமாக இருப்பார்கள் என்பதை திறமையாகச் செயற்படும் அமெரிக்கக் கம்பனிகளிலிருந்து அறியமுடிகிறது. தொழிலாளர்களுடைய மனப்பான்மையை நல்ல நிலையில் வைத்திருப்பது உற்பத் திறனை அதிகரிக்குமென்று உணர்ந்துள்ளனர்.

**5. சாதனைக்கு முக்கியத்துவம்**

நிறுவனத்தினுடைய அடிப்படைத்தத்துவம் தொழில் நுட்பம், பொருளாதாரம், நிறுவன அமைப்பு, கண்டுபிடிப்பு ஆகியவற்றில் நேரம் செலுத்துவதைக் காட்டிலும் சாதனையைப் பெறுவதிலேயே முக்கியமாக இருக்க வேண்டும்.

**6. நடத்தக்கூடிய வியாபாரத்தைக் கொள்வனவு செய்தல்**

நடத்த முடியாத வியாபாரத்தை ஒரு போதும் கொள்வனவு செய்க்கூடாது என்று இந் நிறுவனங்களிலிருந்து அறிய முடிகிறது. எந்த வியாபாரத்தை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவோ அந்த வியாபாரத்திலேயே பெரிதும் தங்கியிருப்பதாகும்.

**7. எளிமையான நிறுவன அமைப்பு முறை**

இந்த வெற்றிகரமான நிறுவனங்கள் எதிலுமே தாய அமைப்பு முறை பின்பற்றப்படவில்லை. மிகவும் எளிமையான நிறுவன அமைப்பு முறையை இந்த நிறுவனங்கள் கைக்கொண்டிருக்கின்றன. உயர்

மட்டத்தில் ஒரு சில முகாமையாளர்களே இருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 8. இறுக்கமான தளர்வான நிறுவன அமைப்பு

அமெரிக்காவில் வெற்றிகரமாக இயங்கும் கம்பனிகள் மையப்படுத்துதல், பின்முகப்படுத்துதல் ஆகிய இரு முறைகளைப் பின்பற்றுகின்றன. மேல் மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரை சுதந்திரமாக இயக்கக்கூடியமுறை இந்த நிறுவனங்களில் காணப்படுகிறது. ஆனால் சில விடயங்களைப் பொறுத்தவரை மத்தியப்படுத்தல் முறை காணப்படுகிறது. எனவே இங்கு இறுக்கமான அமைப்பு முறையும் அதே நேரத்தில் தளர்வான அமைப்பு முறைகளும் உண்டு.

இவைதவிர மிகப்பெரிய முகாமைத்துவ ஆலோசனை நிறுவனமான மக்கின்சே கம்பனியில் பணிபுரிந்த இரு குழு அங்கத்துவ எழுத்தாளர்களுக்கிடையிலான கூட்டு சேர்ந்த முயற்சியால் தமது ஆய்வை அமெரிக்காவின் வினைத்திறனுடைய நிறுவன அமைப்புக்களில் மேற்கொண்டதன் பயனாக சுமூகமாக முகாமை செய்யப்பட வேண்டிய ஒன்றிலொன்று தங்கியிருக்கும் ஏழு காரணிகளைக் கண்டறிந்தனர். இவை தந்திரோபாயம், அமைப்பு, முறைகள், ஊழியர், வடிவம், திறமைகள், தமது குறிக்கோளிலும் நிறுவன குறிக்கோளிற்கு முக்கியத்துவம் கொடுத்தலும் பெறுமானங்களைப் பங்கிடலும் என்ற மக்கின் சேயின் 7 எஸ் கட்டமைப்பு எனப்படும். இவற்றொன்றின் மீது மாற்றமொன்றை மேற்கொள்ளும் போது ஏனைய ஆறிலும் சீராக்கத்தை வேண்டி நிற்கும் என்பதைக்கண்டறிந்தனர்.

அமெரிக்கா மற்றும் முன்னணிப் போட்டியாளர்களுக்கு உயர் நாட்டு சர்வதேச சந்தைகளில் கடினமான சவாலை விடுத்து பொருட்களையும் சேவைகளையும் குறைந்த செலவிலும் உயர்தரத்திலும் தயாரித்து ஜப்பானிய ஸ்தாபனங்கள் குறிப்பிடத்தக்க சாதனையை ஈட்டியதோடு, உலக சந்தையில் பெருமளவில் உட்பிரவேசிக்க ஆரம்பித்தன. ஜப்பானிய கம்பனிகளின் பிரமாண்டமான வளர்ச்சிக்கு ஆய்வாளர்கள் தரச்சுற்றுக்கள் 5-எஸ் போன்ற எண்ணக்கருக்களை முன்வைக்கின்றனர். ஒரு நிறுவனத்தின் பொருட்கள் சேவைகளின் தரத்தை நிர்ணயிக்கையில் அது தொடர்பான அனைத்து ஊழியர்களையும் தரம்பற்றிய தீர்மானம் எடுப்பதில் பங்கு கொள்ளச் செய்வதுடன், சிறந்த தீர்மானம் கிடைக்கும் வரை தொடர்ந்தும் பங்கு கொள்ளச் செய்வதை தரச்சுற்றுக்கள் என அழைப்பர். நிறுவனமொன்றினைத் திட்டமிட்டு முறையான வகையில் சிறப்பாக நடத்திச் செல்வதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கும் அதேவேளை வினைத்திறனையும், பயன்பாட்டையும், பொருளின் தரத்தையும் அதிகரிக்கச் செய்ய அறிமுகப்படுத்தப்பட்டதே '' ஐ விதி (5-எஸ்)'' எண்ணக்கருவாகும். நவீன கலாசாரத் தாக்கத்தினைக் கொண்ட இந்த நவீன முகாமைத்துவ நுட்பமுறை தற்போது உலகின் நாலாபக்கங்களிலும் நல்லபயனையும், சிறந்த பெறுபேறுகளையும் வழங்கி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இவற்றின் அடிப்படை அம்சங்களாவன

1. செய்ரி : நிறுவனத்திலுள்ள தேவையற்ற விடயங்களைத் தெரிந்து அவற்றை அப்புறப்படுத்துதல் என்பது இதன் கருத்தாகும். நிறுவனத்திலிருந்து அனாவசியமானவை எனக் கருதப்படும் பொருட்களை ஆராய்ந்து அறிந்து அப்புறப்படுத்துவதைக் குறிக்கும்.

2. செய்டோன் : நிறுவனத்தின் நாளாந்தக் கருமங்களை மேற் கொள்கையில் அத்தியாவசியமானவற்றை ஒரு ஒழுங்கு முறைப்படி அமைத்துக் கொள்வதை இது குறிக்கின்றது. ஒவ்வொரு பொருளும் உரிய இடத்தில் வைக்கப்படும் போது நிறுவனச் சூழல் கவர்ச்சியான சூழலாக மாறுவதுடன் இதன் காரணமாக வேலையில் நேர விரயம் காலதாமதம் ஏற்பட வழியில்லாதும் போகும்.

3. செய்சோ : நிறுவனத்தை முற்றிலும் சுத்தமாக வைத்திருப்பது பற்றியும் நிலம், இயந்திரம் மற்றும் உபகரணங்களின் மீது படியும் தூசுக்கள், அழுக்குகள் முற்றாக அகற்றப்பட வேண்டியது பற்றியும் குறிப்பிடுகின்றது. நிறுவனத்தை சுத்தம் செய்ய வேண்டியது நாளாந்தக் கடமை என்பதை இது விளக்குகின்றது.

4. செய்கெட்சு : நிறுவனத்தை உயர்ந்த தரத்தில் பாதுகாப்பாக முறையாகத் திட்டமிட்டுத் தொடர்ந்து நடத்திச் செல்வதே இதன் கருத்தாகும். இதை நடைமுறைப்படுத்த உயர் முகாமைத் துவத்தின் அர்ப்பணிப்பு நெருங்கிய மேற்பார்வை, வழிகாட்டல் என்பன மிக முக்கிய மான அம்சங்களாக நோக்கப்பட வேண்டும்.

5. செயிட்சுகே : நிறுவனம் சிறந்த முறையில் செயற்றிறனும், வினைத்திறனும் பாதுகாக்கப்படும் வகையில் திட்டமிட்டதாக நடாத்திச் செல்வது தொடர்பாக ஒழுக்கத்தை ஊழியர் களிடையே ஏற்படுத்துவது இதன் கருத்தாகும். ஊழியரிடையே உறுதியான மாற்ற மொன்றை ஏற்படுத்துவதன் மூலம் இந்நிலைமையை உருவாக்கலாம். அப்போது அவர்கள் நாளுக்கு நாள் ஏற்படும் புதிய மாற்றங்களுக்கு ஏற்ப தமது உற்பத்திகளை சந்தைக்கு ஏற்றவாறு விஞ்ஞான முறைகளுடன் கூடிய உற்பத்தியாக வெளியிடும் சந்தர்ப்பமும் உருவாகும்.

இவ்வாறு ஜப்பானிய 5-எஸ் என்பது நல்ல தொரு நிறுவன செயற்பாட்டிற்கு தொடர்ச்சியான வினைத்திறன் அதிகரிப்பிற்கும் தரவிருத்திக்கும் அடிப்படையாக அமைகின்றது.

எனவே உதயமாக இருக்கும் புதிய நூற்றாண்டு வியக்கத்தக்க மாற்றங்களைக் கொண்டு வரவுள்ளது. நவீன முகாமையின் வளர்ச்சியானது மாற்றங்களால் உள்வாங்கப்பட்ட, மாற்றங்களை உருவாக்குகின்ற ஒரு புதுயுகத்துக்கு முகங்கொடுக்கக்கூடியவகையில் வளர்ச்சியடைந்துள்ளது. நவீன தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியும் தொழில்சார் கல்வி வளர்ச்சியும் இலங்கையின் எல்லாத்துறை நிறுவனங்களையும் சென்றடைய வேண்டும். ஒரு நிறுவன மொன்றின் வெற்றி, குறிக்கோள்களை அடையக் கூடிய சிறப்பான தந்திரோபாயங்கள், வினைத்திறன் வாய்ந்த செயற்பாடுகள், அர்ப்பண சிந்தை நிறைந்த ஊழியர்கள் என்பனவற்றின் பங்களிப்பைக் கொண்டுள்ளது. நிறுவனங்களின் அளவு, ஈடுபடும் துறை, இயங்கும் விசாலம் போன்ற இன்னோரென்ன காரணிகளை விடுத்து மேற்கூறிய மூன்று அம்சங் களும் சகல நிறுவனங்களுக்கும் பொருந்துவதனைக் காணலாம். இவற்றைச் சிறப்பாக முகாமை செய்வதில் நிறுவனங்கள் கவனம் செலுத்துதல் வேண்டும். எனவேதான் இன்று மறைமுகமாக நடை பெற்றுக் கொண்டிருக்கும் போட்டித்தன்மை எதிர்காலத்தில் வெளிப்படையானதாக மாறும் போதும், வாடிக்கையாளர்களின் புதிய தேவைகளும், நடவடிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் மாற்றமடையும் போதும் சிறந்த சேவையை வழங்கி தொடர்ந்து இயங்கக்கூடியதாக இருக்கும்.

# உறவுகளைத் தேடி....

ந.சந்திரிக்கா, மூன்றாம் வருடம், விலங்கு மருத்துவ பீடம்.

"*Good morning boss*" யாரோ கரகரத்த குரலில் காதுக்கு அண்மையில் கூறியதைக் கேட்டு ஸ்நேவின் கண்கள் ஒருவித எதிர்பார்ப்புடன் திறந்து அந்த ரோபோ மனிதனைக் கண்டதும் மீண்டும் ஒருவித அலுப்புடன் மூடிக் கொண்டன. மனம் மட்டும் இன்றாவது அப்பா அம்மா என்னை பார்க்க வரமாட்டார்களா என்ற கேள்வியை மீண்டும் மீண்டும் தொடுத்துக் கொண்டிருந்தது. இத்தனைக்கும் அவர்கள் அதே வீட்டில் தான் இருக்கின்றார்கள். ஆனால் ஒருவர் எங்கேயிருப்பார் இந்த நேரத்தில், என்றது மற்றவருக்கு தெரியாது. ஒருவரைப் பற்றி மற்றவர் அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டாதவர்களாக மற்றவரின் இழப்பில் பங்கெடுக்க முன்வராத அந்த இருவரிடையேயும் தான் ஸ்நேவும் அவனுடைய 25 வருடங்களை கழித்திருந்தான். எனினும் இரண்டு வாரங்கட்கு முன் நடந்த பயங்கர விபத்தும் அதன் பயனாய் காலிலும், கையிலும் ஏற்பட்ட முறிவுகளும் தான் அவனிற்கு ஒரு வித 'தேடலை' ஏற்படுத்தியது. தத்தம் உலகில் தனித்தனி இயந்திர மனிதர்களாய் வாழ்க்கை நடத்தும் 21ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்நேவிற்கு அவனுடைய மனம் எதை நாடுகின்றது என்றோ எப்படி அதைப் பெறுவதென்றோ தெரியவில்லை. ஆயினும் சொல்லத் தெரியாத ஓர் அனுபவத்திற்காக அதன்மூலம் கிடைக்கப் போகும் மன அமைதிக்காக அவன் எதையும் செய்யத் தயாராய் இருக்கின்றான்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவனை மீண்டும் ரோபோ எழுப்பி உடலைச் சுத்தம் செய்ய முற்பட்டபோது காலும் கையும் விலுக் விலுக்கென்று, மீண்டும் வலி குத்தத் தொடங்கியது. வேதனையால் துடித்தவனை இலட்சியம் செய்யாமல் ரோபோ தன் வேலையில் கவனமாயிருந்தது. மனிதனின் உணர்வுகளை புரிந்து கொள்ள முடியாத இயந்திரத்துடன் போராடுவதிலோ இரக்கத்தை எதிர்பார்ப்பதிலோ பயனில்லை என்பதை அறிந்த அவனும் அழுதபடியே மீண்டும் மயங்கிப் போனான்.

அவன் கண்ணை விழித்தபோது ''அம்மாவும் அப்பாவும் உன்னைப் பார்க்க வந்துள்ளனர்'' என்று ரோபோ கூறியது. அவன் அவர்களை உள்ளே அழைத்து வருமாறு சமிக்ஞை செய்தான். உள்ளே வந்த அம்மா நெற்றியில் முத்தமிட்டு வழமைபோல் "*God bless you my dear*" என்றாள். அப்பாவோ அவனுடன் கழிக்கும் ஒவ்வொரு நிமிடத்தையும் ஒருவித அவஸ்தையாக கருதி குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். ஸ்நேவின் உதடுகள் அவனையறியாமலேயே ''அம்மா நீ ஒவ்வொரு நாளும் ஏன் என்னைப் பார்க்க வரக்கூடாது?'' என்று தன்னிச்சையாக கேட்டதும், தாய் அவனை வித்தியாசமாகப் பார்த்தாள். கணவனின் முகத்தையும் கேள்விக்குறியுடன் நோக்கியவள் ''ஏன் உன்னை ரோபோ சரியாக கவனிப்பதில்லையா?'' என்று கேட்டாள். ''அப்படியில்லை எனக்கு இந்த அறையும் இயந்திரங்களுடனான வாழ்க்கையும் அலுத்துவிட்டது. காரணம் புரியாமல் எனக்கு அழுகை வருகின்றது. நான் எதையோ எதிர்பார்க்கின்றேன். ஆனால் இதுவரை அனுபவிக்காத அந்த ஒன்று எதுவென்று எனக்குத் தெரியவும்

இல்லை....., உயிரும் சதையும் உள்ள மனிதர்களுடன் கதைக்கும் போது ஒரு துளி மனச்சந்தோசம் ஏற்படுகிறது. இப்படியே படுக்கையில் இன்னும் இரண்டு நாள் இருந்தாலும் நான் பைத்தியமாகிப் போவேன் போல் தோன்றுகின்றது. எனக்கு என்னை நினைக்கையில் பயமாய் இருக்கின்றது'' என்று கூறி அவன் மீண்டும் அழத்தொடங்கினான்.

''ஒரு தாதிக்கு ஒரு நாளைக்கு 200 டொலர் இங்கு கொடுக்க வேண்டும். அதைவிட ரோபோ இலாபம் என்றபடியால் தானே, அப்பா ஒன்று ஏற்கனவே வீட்டு வேலைக்கு இருக்கும் போதும் உனக்கு பணிவிடை செய்யவென்று இதை வாங்கினவர். நீ லூசியின் இழப்பிலிருந்து மீளவில்லை. அதனால்தான் இப்படி ஒரு மனநோயாளியாக மாறப் பார்க்கின்றாய். நாளைக்கே ஒரு நல்ல psychiatristஐ அழைத்து வருகின்றேன்'' என்று கூறி பதிலுக்குக் காத்திராமல் அறையைவிட்டு வெளியேறினாள். கூடவே அப்பாவும்.

மீண்டும் தனிமை...., ரோபோவின் கண்கள் கூட இவனை பரிதாபமாகப் பார்ப்பது போல் ஒரு உணர்வு. ''நானா? ஒரு மனநோயாளியாகி விட்டேனா?'' அவனிற்குள்ளேயே புதுக்குழப்பம் உருவெடுத்தது. அம்மா யாரை இழந்துவிட்டேன் என்றாள். லூசியையா? இப்போதும் நான் அவளை நேசிக்கின்றேனா?'' அவன் தன்னைத் தானே கேட்டுப் பார்த்தபோது ''இல்லை'' என்ற பதில் வந்தது. ''அப்படியெனில் இரண்டு வருடம் ஒரே வீட்டில் ஒரு அறையில் வாழ்ந்த வாழ்க்கை கூட உடல் சம்பந்தப்பட்டது தானா. அதில் மனதிற்குப் பங்கில்லையா? அவளிற்கும் அப்படித்தான். இல்லாவிட்டால் ஒரே இரவில் நிரந்தரப் பிரிவை அவளே ஏற்படுத்தியிருப்பாளா?'' சங்கிலிப் பின்னலாய் அவள் நினைவுகள்.....

லூசி, அழகான கனேடிய 18 வயது கல்லூரி மாணவியை அவன் தன்னுடைய 20 ஆவது வயதில் Mcmaster பல்கலைக்கழகத்தில் நடந்த கிறிஸ்மஸ் partyயில்தான் முதன் முதலில் சந்தித்தான். ஸ்நேவின் பெற்றோர்கள் 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே இலங்கையை விட்டு குடிபெயர்ந்து அகதிகளாக கனடாவிற்கு வந்தவர்கள். ஸ்நோ பிறந்தது, வளர்ந்தது எல்லாம் கனடாவில்தான். வீட்டில் பேசும் மொழியால் மட்டுமே அவன் தமிழன். அவன் ஒரு கனேடியன்தான். ஆரம்பத்தில் சாதாரண நட்பாக இருந்த ஸ்நே - லூசி உறவு datingஇற்கு வெளியில் செல்லத் தொடங்கிய போது அவனிற்கு அவளில் ஒரு பெரும் ஈடுபாட்டை ஏற்படுத்தியதோடு அவளை வாழ்க்கைத் துணைவியாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

அடிப்படையில் அவன் ஒரு தமிழன் என்பதால் லூசியின் வீட்டில் அதற்கு வரவேற்பு இருக்கவில்லை. திடீரென அவன் அவளை வீட்டிற்கு அழைத்து வந்து பெற்றோருக்கு அறிமுகப்படுத்தி வைத்ததோடு அவள் இனி இந்த வீட்டில் தான் இருப்பாள் என்றும் கூறிவிட்டான். பெற்றோர் மறுப்பேதும் கூறவில்லை. அவளையும் தங்கள் வட்டத்தின் இன்னொரு நண்பியாக சேர்த்துக் கொண்டனர். பதிவுத் திருமணம் என்பது கூட இருவரிற்கும் போலியாகத் தெரிந்தமையால் அதையும் வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டனர். பெற்றோரோ பிள்ளையின் சொந்த விடயங்களில் தலையிடுவது அநாகரிகம் என்று ஒதுங்கிக் கொண்டனர். இரண்டு வருடம் வாழ்க்கை இயல்பாய் ஓடிற்று.

அன்று 2020 ஆண்டு முதல் நாள். புதுவருட party ஒன்றிற்காக பலத்த காய்ச்சலின் மத்தியிலும் லூசி வற்புறுத்தியதால் அவளுடன் அவனும் வந்திருந்தான். அவனிற்கு அன்று நடனத்தில் நாட்டமில்லை என்றறிந்தவள் வேறு நண்பர்களுடன் நடனமாடச் சென்றுவிட்டாள். அவனிற்கு ஏனோ உடனே வீட்டிற்குப் போக வேண்டும் போல் தோன்றியது. அவளை வருமாறு கூப்பிட்ட போது மறுத்து விட்டாள். மேலும் சிலமணி நேரத்தை குடியில் செலவிட்டபின் இனியும் இருக்க இயலாது என்று கண்டு லூசியை தேடிப் போனபோது அவள் நிறைவெறியில் வேறு ஒருவன் அணைப்பில் தன்னிலை மறந்து ஆடிய வண்ணம் இருந்தாள். இவன் அருகில் சென்று கூப்பிட்ட போது அலட்சியப்படுத்தினாள். கோபத்தில் காரை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து விட்டான். ஒரு மாதிரி ஆடிப்பாடி Party முடித்துக் கொண்டு ஸ்நேவை தேடியவளிற்கு அவன் இல்லாதது பெரிய அதிர்ச்சியாக இருந்ததோடு அவன் தன்னை வேண்டுமென்றே அவமானப்படுத்தியதாக எண்ணினாள். எப்படியோ ஒருவாறு வாடகைக்கார் பிடித்து வீடு வந்து சேர்ந்தாள்.

படீரென்று கதவைத் திறந்து கண்கள் சிவக்க கோபத்தில் நின்றவளைப் பார்த்து ஸ்நே அமைதியாக உள்ளார்ந்த வருத்தத்துடன் மன்னிப்புக் கேட்டான். அவளிற்கோ அவனது அமைதியும் தன்னை அலட்சியப்படுத்துவதாக தோன்றிற்று. கோபத்தில் தன்னிலை மறந்து அவள் ஏதேதோ சம்பந்தம் இல்லாமல் கூறிக் கத்தத் தொடங்கியதில் இவனின் சமாதான வார்த்தைகள் எல்லாம் அடிபட்டுப் போயிற்று. அவள் போட்ட சத்தத்தை நிறுத்த வழியின்றி போகவே பொறுமையை இழந்த அவன் என்ன செய்கின்றோம் என்று யோசிக்காமலேயே கன்னத்தில் அறைந்து விட்டான்.

''இந்த மண்ணிலேயே பிறந்து வளர்ந்தால் மட்டும் நீ கறுப்பன் என்பது இல்லாது போகுமா? அடிப்படையில் நீ ஒரு தமிழன், அதனால் தான் உனக்கு நாகரிகமாக பழகத் தெரியவில்லை. நான் மற்ற ஆண்களுடன் பழகுவதை உன்னால் பொறுக்கமுடியவில்லை. நீ கைநீட்டி அடிக்க பார்த்துக் கொண்டு இருப்பன் என்றா நினைத்தாய். உன்னை சட்டத்தின் முன் கொண்டு வராவிட்டால் நான் லூசியில்லை'' என்றவள் அன்றிரவே தன் உடமைகளுடன் வீட்டை விட்டு வெளியேறிவிட்டாள். அவள் வெளியேறுவதை தடுக்க அவனால் முடியவில்லை. தான் சிறிது அவசரப்பட்டு விட்டோம் என்று தன்னையே கடிந்து கொண்டாலும், அவளின் கொடூரமான குற்றச்சாட்டுக்களை நினைக்க நினைக்க கோபம் தலைக்கேறியது. 5 வருடம் பழகியும் என்னைப் பற்றி இவளால் புரிந்து கொள்ள முடியவில்லையே என்று எண்ணிய போது ஒருவித சுயபச்சாதாபம் அவனைச் சூழ்ந்து கொண்டது.

பெற்றோரிடம் இனி அவள் என்னுடன் இருக்க விரும்பவில்லை என்று சுருக்கமாக கூறியபோது அவர்களும் அதற்குமேல் எதுவும் கேட்கவில்லை. போனால் போகட்டும் என்று இறுமாப்பில் எண்ணினாலும் அறையின் எல்லாப் பக்கமும் அவள் உருவமே தோன்றி அவன் மனதை அலைக்கழித்தது. காதருகிலும் அவள் குரல்.

ஒரு கிழமை வீட்டிலேயே முடங்கிக் கிடந்தவன் இனி அது சரிப்பட்டு வராது என்றெண்ணி மெதுவாக அலுவலகம் போய்வரத் தொடங்கினான். அடுத்த ஒரு கிழமைக்குள் மீண்டும் அவனிற்கு லூசியை சந்திக்க எதிர்பாராத சந்தர்ப்பம் கிட்டியது. தனியாக அல்ல, அவளுடன் அவளுடைய புதிய காதலனும் நின்றிருந்தான்.

*Shopping complex* வாசலிலேயே இருவரும் ஒருவரை ஒருவர் கவனித்துவிட்டனர். ஸ்நே அவளை தவிர்க்க விரும்பி எதிர்ப்புறமாக நடக்கத் தொடங்கியதும் லூசியின் குரல் அவனை தடுத்து நிறுத்தியது. வேண்டா வெறுப்பாக திரும்பியவனிடம் அவள் தன்னுடைய புதிய காதலனை அழைத்து வந்து அறிமுகப்படுத்தி வைத்தாள். ''இவர் ஒரு ஒறிஜினல் கனேடியன்'' என்று. அந்தப் புதியவனை அறிமுகப் படுத்தியது அவனை வேண்டுமென்றே குத்திக் காட்டுகிறாள் என்று ஸ்நேவிற்குப் புரிந்தது. ஏதோ கூறி சிரித்து மழுப்பி ஒருவாறு விடைபெற்று வந்தவனிற்கு ''தமிழர்கள் என்னதான் சென்ற நூற்றாண்டிலேயே இங்கு வந்து வாழத் தொடங்கி இருந்தாலும் அவர்கட்கு இன்னும் நாகரிகமாக வாழத் தெரியவில்லை. எம்முடைய கலாசாரங்களை பின்பற்றவும் முடியாமல் தங்களுடையதை மறக்கவும் முடியாமல் ஒரு முகமூடி வாழ்க்கை நடத்துகின்றனர்'' என்று ஆங்கிலத்தில் அவள் கூறிக் கொண்டிருந்தது தெளிவாகக் கேட்டது.

என்றோ ஒரு காலத்தில் இது உண்மையாக இருந்திருந்தாலும் இன்று இங்குள்ள 90 வீதத் தமிழர் மனத்திலும் முற்று முழுதாக கனடா பிரஜைகளாகவே மாறிவிட்டனர். கறுப்பர் என்ற எண்ணத்தை தான் உங்களால் மாற்றிக்கொள்ள முடியவில்லை என்று அவளிடம் கூறவேண்டும் போல் இருந்தாலும் ஏதும் சொல்லப் பிடிக்காதவனாக அவ்விடத்தை விட்டு வெளியேறினான். நினைவு அவளிடமே இருந்ததால் ஒன்றும் செய்யப் பிடிக்காமல் பித்துப் பிடித்தவன்போல் காரை வீட்டை நோக்கி செலுத்தத் தொடங்கினான்.

மன உழைச்சலுடன் காரை பலவித சிந்தனைகட்கு மத்தியில் செலுத்திக் கொண்டிருந்த தருணத்தில் தான் அவனது கவனப் பிசகால் அந்த பயங்கர விபத்து நேர்ந்து, இப்போது அவனை ஆறு மாதத்திற்கு படுக்கையில் தள்ளிவிட்டது.....

பழைய நினைவுகளில் மூழ்கி இருந்தவன், அவனது தாய் அனுப்பி வைத்த வைத்தியர் உள்ளே வருவதைக் கண்டு சிந்தனைகளில் இருந்து விடுபட்டான். பலவிதமான கேள்விகளைக் கேட்டு பரிசோதித்த வைத்தியர் அவனிடம் ''இது தனிமை உணர்வால் வரும் மனவியாதி! நீங்கள் உங்கள் மனதை ஏதாவது ஒன்றில் ஈடுபடுத்தி அதைப்பற்றி ஆர்வத்துடன் சிந்திக்கத் தொடங்கினால் இதிலிருந்து விடுபடலாம். கூடுமானவரை யாரையாவது பக்கத்தில் வைத்துக்கொண்டு அவர்களுடன் கதைத்து சிரித்துப் பழகுங்கள். அப்போது இந்த தனிமை உணர்வு உங்களை விட்டுப் போகும், இல்லையெனில் தற்கொலை முயற்சிக்கே போக வாய்ப்புண்டு'' என்று எச்சரித்து சென்றார்.

''சென்ற வாரம் வரை இந்த தனிமையை நான் உணரவில்லையே. உண்மையில் பெயரளவில் நான் அம்மா, அப்பா, லூசி என்று சேர்ந்திருந்தாலும் மனத்தளவில் நாம் எப்போதும் ஒருவரை ஒருவர் நெருங்கியது இல்லையே. இல்லாவிட்டால் ஒரு இரவில் அற்ப விடயத்திற்காக லூசியுடனான என் உறவு ஏன் முறிந்தது. அதற்கிடையில் புதிய உறவையும் அவளால் உருவாக்க முடிந்துள்ளதே.... இவ்வளவு நாளும் நானும் ஓர் இயந்திரமாக சுழன்றபடியால் எனக்கு எனது உணர்வுகளையே புரிந்து கொள்ள முடியாமல் போய் இப்போது தான் அந்தக் குறை உணரப்படுகின்றதோ?'' எதற்குமே விடைகாண முடியாமல் அவன் தவித்த போது தான் பாட்டியிடம் இருந்து அவனிற்கு ஒரு கடிதம் வந்தது.

''சாகும் முன் உங்களை வந்து ஒருதரம் பார்க்க ஆசைப்படுகிறேன்'' என்றுதான் கடிதத்தில் எழுதியிருந்தாள். முன்பு ஒருமுறை ஸ்நேவிற்கு 10 வயதில் இங்கு ஒரு மாதம் தங்க வந்தவள், இந்தக் கலாசாரம் எனக்குச் சரிவராது என்று ஒரு கிழமை முடியும் முன்னரே இலங்கைக்கு திரும்பிவிட்டாள். இப்போ மீண்டும் வருகிறாள். அவனும் ஏதோ ஒரு எதிர்ப்பார்ப்புடன் பாட்டியின் வருகைக்காக காத்திருக்கத் தொடங்கினான்.

அறிவித்தபடி வந்திறங்கிய பாட்டி இவனது நிலைகண்டு அழுதே விட்டாள். வந்த களைப்பையும் மறந்து அன்றே அவனிற்கு சேவகம் செய்யத் தொடங்கினாள். இயந்திர மனிதனின் இயக்கத்தை நிறுத்தியதோடு தன் கையாலேயே உணவு சமைத்து ஊட்டி விட்டாள், குளிக்க வைத்து, தலைவாரி, அவன் உடற்பயிற்சி செய்ய ஒத்தாசை புரிந்து.... இப்போ ஸ்நேவிற்கு பாட்டிதான் எல்லாமே. அவனுடைய உள்ளார்ந்த தேடலிற்கு விடை கிடைத்தது போன்றிருந்தது ஸ்நேவிற்கு. நேரம் கிடைக்கும் போதெல்லாம் இலங்கைத் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களையும் ஒருவருடன் ஒருவர் பின்னிப்பிணைந்த வாழ்க்கை முறையையும் கேட்கக் கேட்க தான் எத்தனை விடயங்களை இழந்துவிட்டேன் என்று அவன் ஏங்கினான். ''இத்தனை ஆண்டிற்கு கொஞ்சமேனும் தமிழரின் பழைய பழக்க வழக்கங்களும் கலாச்சாரங்களும் மாறவில்லையா?'' என்று ஸ்நே கேட்டதற்கு ''காலத்திற்கு ஏற்ப மாற்றம் ஏற்படுவது இயற்கை. ஆனால் அதுக்காக அன்பு, பாசம், குடும்பம் என்ற உறவு, தியாகம் இதெல்லாம் எப்போதும் அந்த மண்ணில் மாறாது. எத்தனையோ பேர் தங்களுடைய உயிரை இளம் வயதில் தியாகம் செய்ததால் தான் இன்று நாங்கள் அந்த மண்ணில் தலை நிமிர்ந்து நடக்கின்றோம். எங்களுடைய விடுதலைக்காக நாங்கள் போராடியதும் அதனால் ஏற்பட்ட இழப்புக்களும் எங்களுக்குள்ளே ஒரு விழிப்பை ஏற்படுத்தியிருக்கு. ஒவ்வொருத்தரையும் என்னுடையவன் என்று மனமார நேசிக்க வழிவகுத்திருக்கிறது. எங்களுடைய கலாசாரங்களை பாதுகாக்கவும் தமிழ் சமுதாயத்தை பாதுகாக்கவும் செய்யப்பட்ட தியாகங்கள் என்றென்றும் மறக்க இயலாதவை. அது அம்மா, அப்பா, குடும்பம் என்ற அன்பான பிணைப்பை மேலும் இறுக்கியிருக்கு. அதை எந்த புது சக்தியாலும் உடைக்கமுடியாது'' என்று குட்டிப் பிரசங்கமே செய்துவிட்டாள்.

ஒரு மாதத்தில் திரும்பிப் போவதென்று வந்த பாட்டி ஆறுமாதம் அங்கிருந்து ஸ்நே பூரண சுகம் பெறும்வரை கண்ணும் கருத்துமாக கவனித்தபின் இலங்கை நோக்கி பயணப்பட ஆயத்தம் செய்த போது கூடவே வருவேன் என்று அடம்பிடித்த அந்த 25 வயதுக் குழந்தையை யாராலும் தடுக்க முடியவில்லை. தன்னுடைய தேடல் நிறைவேறும் என்ற நம்பிக்கையில் உறவுகளைத் தேடி பழைய உலகை நோக்கி புதிய மனிதனாக பயணத்தை ஆரம்பிக்கின்றான்.

# நாளைய சிவப்பு விடியலில்....

லறீனா அப்துல் ஹக், முதலாம் வருடம், கலைப்பீடம்.

*அதோ...*
*கூப்பிடு தொலைவில்*
*அடுத்த நூற்றாண்டு!*
*ஓ! மனிதா,*
*இருநூறு தசாப்தங்களை*
*கடந்து வந்தவனே!*
*உன்*
*சாதனைகளைக்*
*கொஞ்சம்*
*பட்டியலிடலாம், வா!*

*அன்று...*
*உள்ளக்கிடக்கைகள்*
*உணர்த்தும் சொல்லின்றி...*
*கிளியாய் மிழற்றிய*
*நீ,*
*மொழிகள் பலவும்*
*கண்டுபிடித்தாய்.*
*கூடவே,*
*உன்மொழி உயர்வா?*
*என்மொழி மேலா?*
*என்றொரு கலகமும்*
*மூட்டி வளர்த்தாய்!*

*கண்டது காட்சி*
*கொண்டது கோலம்*
*என்கிற வாழ்வு*
*அலுப்புற்றபோது...*
*மதமென்ற ஒன்றின்*
*பின்னாற் சென்றாய்!*

*மதத்தின் பெயரால்*
*மனிதத்தை மறந்து*
*மனிதா நீயும்*
*மதம் பிடித்தலைந்தாய்!*

*அறிவியலென்னும்*
*அக்கினிகொண்டு*
*இருண்ட உலகினை*
*ஒளிபெறச் செய்தாய்.*
*ஒளிதருந் தீயையே*
*ஒழிக்குங் கருவியாய்*
*மாற்றிட விழைந்தாய்;*
*உனக்குள் நீயே*
*விலங்கென ஆனாய்!*

*உலகினை*
*உயிர்களைக்*
*காப்பதற்குதவும் விஞ்ஞானத்தால்*
*அழிவின் விளிம்புக்கே*
*அச்சாரமிட்டாய்!*

*அணுக்கரு வலுவால்*
*அவனி சிறப்புறும்*
*பணியியற்றாது - அணு*
*ஆயுதமெனுங் கொடுங்*
*கருவியினால் - நீ*
*பெரும் ராட்சசனானாய்!*

*விண்ணையளந்திட*
*விமானம் செய்து...*

சமுத்திரம் ஆய்ந்திட
நீர்மூழ்கி சமைத்து...
வேவுபார்க்கவும் - வெடி
வைத்துத் தகர்க்கவும்
சூழ்ச்சிகள் செய்தாய் - சுடர்
விளக்கினில் விழுந்த
விட்டிலாய் ஆனாய்!

கணணி அமைத்தாய்
கற்பனைக் - கெட்டா(த)
அற்புதஞ் செய்தாய்;
அடுத்தவன் அழிவினை
நுணுகிக் கணித்திட
அதனையுங் கூட
கருவியாக்கினாய்!
நிலவு தொட்டதாய்
நெஞ்சு நிமிர்த்தினாய் - நீ
விழுமம் இழந்ததால்
வையத்திலே இருள்
சூழ்ந்தது குறித்து
சிந்தித்ததுண்டோ?

பச்சைப் பசும்புல்
வெளிகளிலெல்லாம்
இரத்தச் சகதியில்
மனிதனை(யே) உழுதாய்!
உன்னைத் தவிர
அனைத்தையுமழித்தாய்;
நீ மட்டுமே - நலம்
வாழ்வதற்காக!

ஓ!
பாவப்பட்ட
மானிடப் பிறவியே!
நீ...
விழிகளைத் தொலைத்து
சித்திரம் பெற்றாய்!
ஆன்மாவை விற்று
உடலம் வாங்கினாய் !
உணர்வுகள் ஒழித்து
சடலமாய் ஆனாய்!

அதோ பார்!
இப்பொழுதெல்லாம்
பந்து விளையாடும்
பிஞ்சுக் கரங்களில்
கொலைக்கருவிதான்
கண்சிமிட்டிச் சிரிக்கிறது;
சட்டைப் பைகளில்
மிட்டாய்க்குப் பதிலாக
தோட்டா இருக்கிறது.
ஓ!
இதுதான் நீ
கண்டதாய் மார்தட்டும்
முன்னேற்றமா?

முட்டாளின்
சொர்க்கத்தில்
முடிசூட்டிக் கொண்டவனே!
நீ
இதே பாதையில்
இனியும் நடந்தால் ...
நாளைய விடியலில்...
சூரியன் - இரத்தச்
சிவப்பாய் உதிப்பான்!
சேவலின் கூவலும்
போருக்கு 'சமிக்ஞை'யாய்...

இரத்தமே பூக்களாய்
இதழ்களை விரிக்கும்!
வாடைக்காற்றில் - பிண
வாடையே வீசும்!
மழைத்துளியின் நிறம்
சிவப்பாய் இருக்கும்!
இறைச்சிக் கடைகளில்
மனிதனின்
அவயவம் தொங்கும்!
ஆக மொத்தத்தில்
அகிலத்திலே...
'மனிதன்' என்பவன்
மரணித்துப் போவான்!

# நவீன விவசாயத்துறை 21ம் நூற்றாண்டை நோக்கி...

முருகேசு ஸ்ரீவேணுகோபால சர்மா, 4 ம் வருடம், விவசாய பீடம் .

இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கி ஏறுநடை போடும் உலகின் நடையில் என்ன தள்ளாட்டம்? நிமிர்ந்த நடை மனிதர் மெலிந்து கூனிக் குறுகச் செல்கிறார்களே! ஆம், ''ஆகாரம்''. அதுதான் மனித வாழ்வின் ஆதாரத்திற்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை தான் இதற்குக் காரணம். இந்நிலையில் உணவு உற்பத்தியின் அடிநாதமான விவசாயத்துறை பல பாரிய சவால்களை எதிர் நோக்குகின்றது. எனவே 21 ம் நூற்றாண்டின் தேவைகளை நிறைவு செய்யும் வண்ணம் விவசாயத்துறை தன்னைப் பல புதிய வழிகளில் மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகிறது.

இந் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையால் 1943 இல் வங்காள தேசத்தில் 2.3 மில்லியன் மக்கள் பட்டினியால் மடிந்தனர். விழிப்படைந்த விவசாயத்துறை ''பசுமைப்புரட்சி'' செய்து உற்பத்தியை பல மடங்கு அதிகரித்தது. ஆயினும் இன்னமும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 800 மில்லியன் மக்கள் போசணைக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். 200 மில்லியன் சிறுவர்கள் புரத கலோரிக் குறைபாட்டுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். மேலும் பசியாலும் போசாக்கின்மையாலும் இறக்கும் சிறார்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. -(W.F.S.1996)

உலக சனத்தொகை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. வருடம் ஒன்றுக்கு ஏறத்தாள 90 மில்லியன் குழந்தைகள் பிறப்பதாக அறியப்படுகிறது. (A.R.D.1997) ஐக்கிய நாடுகள் அமையத்தின் கணிப்பீட்டின்படி உலக சனத்தொகை 2010 களில் ஏழு பில்லியனாகவும் 2025 களில் 8.3 பில்லியனாகவும் அதிகரிக்கும் என அறியப்படுகிறது. இதில் 94 வீதமான அதிகரிப்பு வளர்முக நாடுகளிலேயே ஏற்படும் எனக் கூறப்படுகிறது. இந்நிலையில் 2020 ம் ஆண்டளவில் உலக உணவுத்தேவை வளர்முக நாடுகளில் ஏறக்குறைய 1842 மில்லியன் மெற்றிக் தொன்னாகவும், அபிவிருத்தி அடைந்த நாடுகளில் 852 மில்லியன் மெற்றிக் தொன்னாகவும் இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ் அதிகரித்த உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய உணவு உற்பத்தி எதிர்வரும் மூன்று தசாப்தங்களில் 75 வீதமாக அதிகரிக்கப்பட வேண்டும்.

ஆனால் உலக உணவு உற்பத்தி வீதமோ குறைவடைந்து கொண்டே செல்கிறது. 1960 களில் மூன்று வீதமாக இருந்த உணவு உற்பத்தி வளர்ச்சி வீதம் 80களில் 2.2வீதமாகக் குறைந்துள்ளது. 2010களில் இது 1.8 வீதமாகக் குறைந்து விடும் என அஞ்சப்படுகிறது. இவ்வாறு வளர்ச்சி வீதம் குறைவடைந்து சென்றால் 2025ஆம் ஆண்டளவில் ஏறத்தாள 700 மில்லியன் மெற்றிக் தொன் உணவுப் பற்றாக்குறை ஏற்பட வழிவகுக்கும். இந் நிலை தோன்றக் காரணம் என்ன?

சனத்தொகை அதிகரிப்பால் விவசாய நிலத்தின் அளவு குறைவடைவதும், பயிர்ச்செய்கைக்கான நீரின் அளவு குறைவடைவதும் சில காரணங்களாக இருந்த போதும், மிக முக்கிய காரணி பயிர் செய்யும் நிலத்தின் வளம் குறைவடைந்து செல்வதேயாகும். மண்ணின் வளம் குறைவடைய என்ன காரணம்? உண்மையில் விவசாயத்துறையில் ஏற்பட்ட பசுமைப் புரட்சிதான் காரணம். உணவு உற்பத்தி ஒன்றையே

நோக்காகக் கொண்டு சூழலைப் பற்றிய சிந்தனை சிறிதுமின்றி செயற்படுத்தப்பட ''பசுமைப்புரட்சி''யில் பலவித செயற்கை இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்டன. வளமாக்கிகள் என்றும், பீடை நாசினிகள் என்றும், களைகொல்லிகள் என்றும் பயன்படுத்தப்பட்ட இரசாயனங்களால் மண்நுண்ணங்கிகள் யாவும் அழிக்கப் பட்டன. இதனால் இயற்கை வட்டங்கள் பாதிக்கப்பட்டு சூழற்சமநிலை குழப்பப்பட்டது.

செயற்கை வளமாக்கிகளால் மண்ணின் இழையமைப்பு மாற்றமடைந்தது. இதனால் மண்ணின் அயன் தன்மை மாறியதுடன் மண்ணின், நீரை உறிஞ்சி வைக்கும் தன்மையும் சிதைவடைந்தது. மண்ணரிப்பு ஏற்பட்டதுடன் மண் கனிப் பொருட்களும் கழுவப்பட்டுச் சென்றன. உணவு விவசாய ஸ்தாபனத்தின் கணிப்பின்படி உலகில் 1000 மில்லியன் ஹெக்டயரிற்கும் மேற்பட்ட நிலம் காற்று மழை என்பவற்றினால் அரிப்புக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. மண்ணின் அமைப்பு மாற்றத்துடன் மண்ணின் மூடுபடை அழிக்கப்படல், மண் தூளாக்கப்படல், ஓரினப் பயிர் வளர்த்தல் என்பனவும் மண்ணரிப்பில் பங்களிப்புச் செய்கின்றன. ஓரினப்பயிர்ச் செய்கையில் அறுவடையின் பின் நிலம் நேரடியாக வானிலைத் தாக்கங்களுக்கு உட்படுகிறது. மேலும் நாட்டப்பட்ட பயிர் முற்றாக வளரும்வரை நிலம் மழை, காற்று என்பவற்றுக்கு நேரடியாக முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. இக்காரணிகள் மண்ணரிப்பைத் தூண்டுகின்றன.

மழை நீர் மண்ணால் உறிஞ்சப்படாமை காரணமாக மண்ணீரின் அளவு குறைவடைகிறது. மேலும் நிலம் சூரிய ஒளியின் நேரடித் தாக்கத்திற்கு உட்படுவதால் உள்ள நீரும் ஆவியாகிவிடும். இவற்றால் தாவர வளர்ச்சிக்கு வேண்டிய நீர் மண்ணில் இல்லாது போய் விடுகிறது. மேலும் இரசாயனங்களின் காரணமாக சூழலிலுள்ள நன்மை பயக்கும் அங்கிகளும் அழிந்தொழிகின்றன. பீடைகளை உண்ணும் பூச்சிகள் அழிவதால் பீடைகள் மிகையாக அதிகரித்து எதிரிடையான பலனை ஏற்படுத்துகின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக இரசாயனவளங்கள் மண்ணீரிலும், மண்ணிலிருந்து நீரிலும் சேர்வதால் மண்ணிலும், நீரிலும் நச்சுத்தன்மை அதிகரித்து உயிரினங்கள் வாழ முடியாத அளவு சூழல் மாசுற்றதாக ஆகிவிடுகிறது. உணவு விவசாய ஸ்தாபனத்தின் கணிப்பின்படி ஏறத்தாழ 200 மில்லியன் ஹெக்டேயர் நிலம் பௌதிக இரசாயன சிதைவுகட்கு உட்பட்டிருப்பதாக அறியமுடிகிறது. இவ்வாறாக மனிதனின் செயற்பாடுகளால் சூழல் சமநிலை குழப்பப்படல், மாசேற்படல், மண்ணின் வளம் குறைதல் என்பன ஏற்பட்டு மண்ணின் உற்பத்தித்திறன் குறைவடைகிறது. மேலும் இரசாயனங்களுக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய வகையில் பீடைகளும் இசைவாக்கம் பெற்று முன்னரிலும் அதிக சேதத்தை ஏற்படுத்துகின்றன. இச் செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இந்நிலையில் இன்று எம் மத்தியில் உள்ள மாபெரும் கேள்வி ''விவசாயத்துறை அதிகரித்துவரும் சனத் தொகையின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யுமா?'' என்பதுதான். இவ்வினாவிற்கு ''ஆம்'' என்றே பதிலிறுக்கிறது விவசாயத்துறை.

அது எப்படி? கடந்த கால, நிகழ்கால நிகழ்வுகளால் பெற்றுக் கொண்ட அனுபவங்களின் அடிப் படையில் தன்னைப் புதிய பாதையில் இட்டுச் செல்ல விழைகிறது விவசாயத்துறை. இன்னமும் உற்பத்தியை அதிகரிப்பதற்கான பௌதீக, உயிரியல், தொழில் நுட்ப சாத்தியக் கூறுகள் இருப்பதாகக் கூறும் விவசாயத் துறையின் புதிய எண்ணக்கருவாக ''இரட்டிப்பு பசுமைப் புரட்சி'' (Doubly Green Revolution) விளங்குகிறது.

## இரட்டிப்பு பசுமைப்புரட்சி (Doubly Greeen Revolution)

இப்புதிய எண்ணக்கரு சூழலை பூரணமானதாக முகாமைத்துவம் செய்ய முயற்சிக்கிறது. அத்துடன் சூழலுடனான மனிதனின் தொடர்புகளையும் முகாமைத்துவம் செய்கிறது. அதாவது சூழல், சமூக பொருளாதார காரணிகள், பரம்பரையியல், பயிராக்கவியல் உயிரியல் என்பவற்றை ஒன்றிணைத்து முகாமைத்துவம் செய்யும் அணுகுமுறையாக இது விளங்குகிறது. இங்கு சூழற்பாதுகாப்பு (Environmental Conservation), நிலைத்திருக்கும் விவசாயம் (Sustainable agriculture) என்பன முக்கிய அம்சங்களாக விளங்குகின்றன. மேலும் இரசாயனங்களின் பாவனை குறைக்கப்பட்டு ''ஒன்றிணைக்கப்பட்ட பீடை முகாமைத்துவம்'', ''ஒன்றிணைக்கப்பட்ட நீர், மண், கனிப்பொருள் முகாமைத்துவம்'' முதலிய செயற்பாடு களினூடாக சூழல் பாதுகாக்கப்பட்டு உற்பத்தி அதிகரிக்கப்படுகிறது. இவ் இரட்டிப்பு பசுமைப்புரட்சியின் இலக்குகளை எய்த சேதனப் பண்ணையாக்கம் சிறந்த வழிமுறையாக உள்ளது.

## சேதனப் பண்ணையாக்கம் (Organic Farming)

சூழலியல், சமூகவியல், பொருளாதார ரீதியாக பாதிப்பற்ற உணவு, நார்ப்பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் எல்லா விதமான விவசாயத்திட்டங்களும் சேதனப் பண்ணையாக்கம் எனக் கூறப்படுகின்றன. இம்முறையில் இரசாயன தொகுப்பு வளமாக்கிகள், பீடை நாசினிகள், களைகொல்லிகள் என்பனவற்றின் பாவனை தவிர்க்கப்பட்டு சேதனப் பொருட்களை மண்ணிற்கு சேர்ப்பதன் மூலம் மண்ணின் வளம் அதிகரிக்கச் செய்யப்படுகிறது. உக்கல், கூட்டுப்பசளை, சிறுநீர், சாணம் என்பன மண்ணின் இழையமைப்பைத் திருத்தி மண்ணை வளப்படுத்துவதுடன் மண்ணின் நீர் பிடித்து வைத்திருக்கும் ஆற்றலையும் அதிகரிக்கச் செய்கின்றன. நுண்ணங்கிகளின் செயற்பாட்டைக் கூட்டி கனிப் பொருள் வட்டங்களை ஒழுங்காக்குகின்றன. மழை நீர் உறிஞ்சப்படுவதால் 'பாய்ந்து ஓடுதல்' தடுக்கப்பட்டு மண்ணரிப்பு கட்டுப்படுத்தப்படும்.

பீடைக்கட்டுப்பாடு : பூச்சிகளுக்கு எதிர்ப்புத்திறன் உள்ள துளசி, திருநீற்றுப் பச்சை, வெங்காயம் லீக்ஸ் முதலியவற்றை பாத்திகளில் கலந்து நாட்டுவதன் மூலமும், பீடைகளை அழிக்கும் பூச்சியினங்களை, வளர்ப்பதன் மூலமும், வேம்பு போன்ற தாவரங்களின் சாற்றை விசிறுவதன் மூலமும் பீடைகள் கட்டுப்படுத்தப்படும். மேலும் வலையிடல், பயிர்ச் சுழற்சி, தூய்மைபேணுதல், பிடித்து அழித்தல், பலவகைத்தாவரங்களைப் பயிரிடல் என்பனவும் பீடைகளைக் கட்டுப்படுத்த உதவுகின்றன.

நோய்க்கட்டுப்பாடு : நோய்களுக்கு எதிர்ப்புள்ள இனங்களைப் பயிரிடலும், சூழலுக்கு ஏற்ற இனங்களைப் பயிரிடலும், தூய்மை பேணுதலும், தொற்று ஏற்படலைத் தவிர்த்தலும், பாதிக்கப்பட்ட பகுதிகளை அழித்தலும் நோய்க்கட்டுப்பாட்டிற்கு உதவும் சிறந்த முறைகளாகும்.

களைக்கட்டுப்பாடு : பாத்திகளில் காய்ந்த அல்லது உயிர்ப்பான தாவரப்பகுதிகளைப் பயன்படுத்தி மூடு படை அமைப்பதன் மூலம் வளர்ச்சிக்கு வேண்டிய ஒளியைக்கட்டுப்படுத்தி களைகளைக் கட்டுப்படுத்தலாம். மேலும் தாவரங்களை மிக நெருக்கமாக நாட்டுவதன் மூலமும் களைகளைக் கட்டுப்படுத்தலாம். இம்முறைகள் மூலம் சூரிய ஒளியினால் மண்ணீர் ஆவியாதலும் குறைக்கப்படும். இதனால் அடிக்கடி நீர்பாய்ச்ச வேண்டிய தேவையும் குறைகிறது. அத்துடன் மழைகாலங்களில் மண்ணரிப்பு ஏற்படுவதும் தடுக்கப்படுகிறது.

இவ்வாறாக இம்முறைகள் மண்வளத்தைப் பாதுகாப்பதுடன் மாசடைதலையும் தடுக்கின்றன. அத்துடன் விவசாயத்திற்கான மூலதனமும் வெகுவாகக் குறைக்கப்பட்டு இலாபம் அதிகரிக்கும்.

இவ் இரட்டிப்பு பசுமைப்புரட்சியில் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் உற்பத்திகளை பாதுகாப்பாக வைத்திருக்கவும் பரம்பரையியல் பற்றிய அறிவும், உயிர் தொழில் நுட்பமும் (Biotechnology) பெரிதும் உதவுகின்றன. இவ்வறிவின் மூலம் பரம்பரை அலகுகளில் மாற்றங்களை ஏற்படுத்தி நல்ல விளைச்சல் தரும் இனங்களும், பீடைகள், நோய்கள் என்பவற்றுக்கு எதிர்பபுள்ள இனங்களும் உருவாக்கப் படக்கூடியதாக இருக்கின்றது. மேலும் பல புதிய இனங்களும் கண்டுபிடிக்கப்பட இத்தொழில்நுட்பங்கள் உதவுகின்றன. இழைய வளர்ப்பின் மூலம் தாவரங்களின் சிறிய பகுதிகளில் இருந்தும் பல புதிய தாவரங்களை உருவாக்க வழிபிறந்துள்ளது. இவ்வாறாக இன்றைய நவீன விவசாயத்துறையானது பல சவால்களைச் சந்தித்த போதும் தன் முயற்சியினால் பல புதிய தொழில் நுட்பங்களோடு, சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது.

**உசாத்துணை**

1. Agriculture rural development volume 4. No. 2/1997

2. Fighting hunger and malnutrition; world food summit 13-17 November,1996

நன்றி : கலஹா கிராமிய சேவை நிலையம்.

# தேடல்

## சியாமளா சிவம், இரண்டாம் வருடம், விவசாயபீடம்.

அதிகாலை ஐந்து மணிக்கே விழித்துக் கொண்டு, கர்ணகடூரமாய் எந்த மொழி என்றே புரியாத பாடல்களை போட்டு விட்டுத்தான் பேரன் அபினேஷ் ஏதாவது செய்வான். அதனால் தான் தேவர் நான்கு மணிக்கே கண் விழித்து, நீராடி முடித்து கந்த சஷ்டிகவசம் சொல்லி முடித்து விடுவார். பழைய நினைவுகளில் மூழ்கியதில், இதில் மண் விழுந்து விட்டது என்று வருந்தியவராய் தேநீரை தயாரிப்பதில் ஈடுபட்டார்.

வீட்டில் எல்லோருக்குமே தனியறைகளும், அதனை ஒட்டியதாய் சகல வசதிகளும் கொண்ட பாத்ரூமும் இருப்பதால், தத்தம் வேலைகளை தாமே பார்த்துக் கொள்வார்கள். ஒரே வீடு என்றாலும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்வதில்லை. அப்படிச் சந்தித்தாற் கூட 'ஹலோ' என்று அந்நிய பாவத்துடன் சொல்லி விட்டு கடந்து விடுவார்கள். எல்லோருமே வெளியில் சாப்பிட்டாலும் தேவர் மட்டும் தனக்குத் தேவையானதை தானே சமைத்துக் கொள்வார். எப்பவாவது மருமகள் ஏதாவது செய்து எல்லோர் அறைக்கும் அனுப்பி விடுவாள். இது என்னடா வாழ்க்கை என்று தேவர் சில சமயம் தனக்குள்ளேயே அலுத்துக் கொள்வார். காலந்தான் யாருக்காவும் காத்திருப்பதில்லையே எல்லோரையும் உருட்டியபடியே அதுவும் உருண்டது.

அன்றொரு காலை, அருகிலுள்ள கோயிலுக்குப் போய் வரலாமென புறப்பட்டவரைப் பாதிவழியிலேயே தூரத்து உறவான யோகம் வழி மறித்தாள்.

''என்ன தேவரண்ணே! பேத்தி பெரியவளாகி விட்டாளாமே! சொல்லியனுப்பவில்லைதானே! என்ன தான் பணம் வந்தாலும் சொந்தத்தை மறக்க கூடாது தானே! உங்கள் மருமகளின் நண்பி சொல்லி எனக்கு தெரிய வேண்டியதாயிருக்குது. சொல்வதால் என்ன குறைந்து விடும்'' என்று குற்றப்பத்திரிகை படித்தாள். அவருக்கே இது புது நியூஸ். தனது மகிழ்ச்சியையும், வியப்பையும் மறைத்துக் கொண்டவராய் ''இல்ல யோகம். மருமகளுக்கு கொஞ்சம் வருத்தம் என்றதால எங்களுக்குள்ளேயே முடித்துக் கொண்டோம்'' என்று சமாதானம் சொன்னார்.

''என்னவோ? எங்கட காலத்தில எண்டால்''.....என்றபடி யோகம் கடந்து செல்ல, வெளியே செல்ல மனமின்றி வீடு திரும்பினார். மனைவி இருந்திருந்தால் எப்படியெல்லாம் மகிழ்ந்திருப்பாள் என்று நினைத்தவருக்கு, பேத்தியை உடனேயே பார்க்க வேண்டும் என்ற ஆவல் பெருகியது. ஓரிடத்திலும் அமைதியாக அமர்ந்திருக்க முடியாமல் திரிந்தவருக்கு சட்டென ஏதோ நினைவு வர குசினியினுள் புகுந்து கொண்டு தமக்கு தெரிந்த பலகாரங்களைச் செய்யத் தொடங்கினார். அவற்றைத் தட்டுகளில் அடுக்கி விட்டு பேத்திக்காக காத்து நின்றார். இரவு எட்டு மணியாகியும் வரவில்லை என்றவுடன் அவருக்கு

பொறுமை நழுவ தொடங்கியது. அதே வேளை வெளிக்கதவைத் திறந்து கொண்டு பேத்தி சுவர்ணாவும், அவளுடன் ஆண்களும், பெண்களுமாய் அவள் நண்பர்களும் உள்ளே நுழைய அவருக்கு சற்று ஏமாற்றமாகிப்போனது. அவர்கள் போவர்கள் என்று காத்திருக்க, பாட்டைப் போட்டு விட்டு ஆடுவதும், அவரே பேசக் கூசும் விஷயங்களை அவர்கள் பகிடிகளாய் கூறுவதும், ஏனையோர் சிரிப்பதுமாய் அந்த இடமே அதிர, மேலும் பொறுமையின்றி ''அம்மா, சுவர்ணா, இங்கே வாம்மா, இந்தப் பலகாரங்களை சாப்பிட கொடுத்து விட்டு என்னோட கொஞ்சம் வர்றியா?'' என்றுகேட்டு பேத்தியை குழந்தை போன்ற ஆவலுடன் தமது அறையினுள் கூட்டிச் சென்றார்.

''முகத்தை கழுவிவிட்டு, சாமிக்கு விளக்கு கொழுத்தி கும்பிட்டுட்டுப் போம்மா'' என்று அன்புடன் சொன்னார். ''என்ன விளையாடுறீங்களா? சாமி, பூதம் எல்லாமே உங்களோட இருக்கட்டும். என்னையும் பழம்பஞ்சாங்கம் ஆக்கலாம் என்று நினைத்தீர்களா? என்ர Friends பார்த்தால் என்ன நினைப்பினம்?'' என்று கத்தியபடி பேத்தி வெளியே செல்ல, சற்றுநேரம் அசைவற்று நின்று விட்டு மீண்டும் ஏதோ நம்பிக்கையுடன் ஹோலுக்குச் செல்ல, அங்கு அவர் அன்பாய் செய்திருந்த பலகாரங்கள் அப்படியே இருக்க, பேத்தியுட்பட எல்லோருமே வெளியே சென்று விட்டிருந்தனர். மனந்நொந்தவராய் தன் அறைக்கு திரும்பி ''அவள் குழந்தை அவளை மன்னித்து விடப்பா'' என்றபடி இறைவனைச் சரணடைந்தார்.

வழமைபோன்றே அலாரச் சத்தமின்றி அதிகாலை நான்கு மணிக்கே கண் விழித்து விட்ட தேவர், அந்தக் காலைக் குளிரை அனுபவித்தபடியே மீண்டும் போர்வைக்குள் சுருண்டு குட்டித்தூக்கம் போடக் கெஞ்சிய மனதை அடக்கிக் கொண்டு எழுந்து போய் குளியலறையினுள் புகுந்து கொண்டார். தலைமீது பூத்தூறலாய் நீர்த்துளிகள் சிதறிய போது, ஏனோ அவருக்கு ஊரில் கழித்த பழைய நினைவுகள் ஞாபகத்துக்கு வந்தன.

அருகிலிருந்த சிவன் கோயிலில், காலைப் பொழுதைக் கம்பீரமாக்கிக் கொண்டு ஒலிக்கும் காண்டா மணியின் நாதத்துடன் கண்விழித்து அதனைத் தொடர்ந்து காதோரங்களை வருடிக் கொடுக்கும் சுப்ரபாதத்தை அனுபவித்தபடியே தம் காலைக்கடமைகளை முடித்துக் கொண்டு, சிவனையும் தரிசித்த பின்னே அன்றைய பொழுதின் வேலைகளைச் செய்ய ஆரம்பிப்பார் தேவர். அவர் குணத்துக்கேற்றாற் போலவே. குணவதியாய் வம்பு தும்புகளில் ஈடுபடாது தானுண்டு தன் வேலையுண்டு என்று அமைந்து விட்ட மனைவி கமலமும் அவருக்கு ஒரு கொடையாயிற்று. குடும்பம் என்ற கோயிலுக்கு அன்பென்ற தீபம் ஒளியூட்ட, ஊர் மெச்ச வாழ்ந்த அந்தத் தம்பதியினரை, குழந்தை இல்லையே என்ற குறை ஆரம்ப காலத்தில் வாட்டினாலும் கூட, அவர்கள் இருவருமே அக்குறையினை ஒருவருக்கொருவர் காட்டிக் கொள்ளவில்லை. கமலம் அனுஷ்டித்த விரதங்களின் பயனோ என்னமோ, அந்தக்குறையும் நீங்கியது. குழந்தை பிறந்த சமயம் வேலை விடயமாக அவர் வெளியூர் சென்றிருந்தார். மகன் பிறந்து விட்ட செய்தி கேட்டு அவசர அவசரமாய் திரும்பி வந்த அவரை, பொக்கு வாய் சிரிப்புடன் மகனும், முகங் நிறைந்த பூரிப்புடன் மனைவியும் வரவேற்றார்கள். பாலையாய் இருந்த பாதையில் பூஞ்சோலையாய் மகனின் வரவு அமைந்தது போன்று இருவருமே மகிழ்ச்சிப் பூரிப்பில் திளைத்தனர்.

காலங்கள் கரைந்து மகனும் கொழும்பில் வங்கியொன்றின் முகாமையாளராகி, தன்னுடன் வேலை பார்த்த பெண்ணையே மணம் புரிய விரும்பிய போது, அவன் விருப்பத்துக்கு என்றுமே எதிர்ப்புச் சொல்லியிராத பெற்றோரும் மகிழ்வுடனேயே மணஞ் செய்து வைத்தனர். மகனை விட்டுப் பிரிந்திராத கமலம் அவனுடனேயே இருக்க விரும்பினாலும் மருமகளுக்கு தாம் ஒரு சுமைதான் என்பதை தானே புரிந்து கொண்டவளாய், கணவனுடன் மீண்டும் ஊருக்கே திரும்பினாள். தெளிந்த நீரோடையாய் சில நாட்கள் கழிய, அன்னையின் உதவியை நாடி மகன் கடிதம் போட்டிருந்தான். என்னதான் முடிவுகள் எடுத்திருந்தாலும், தாய்ப்பாசத்தின் முன் அவை துரும்புகள் தானே! மருமகளுக்கு, பிள்ளைப்

பேற்றுக்கென சம்பளமில்லா வேலைக்காரியாய் வயதையும் மீறிய சுறுசுறுப்புடன் உழைத்தாள். முதலில் பேரன் அபினேஷ், இரண்டு வருடங்கள் கழிய பேத்தி சுவர்ணா என பிறந்த இரு பேரக் குழந்தைகளும் தாத்தாவையும் பாட்டியையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தின. அவர்களின் மழலையின் இனிமையை அனுபவிக்கும் பாக்கியம் அந்த முதியோருக்கே கிடைத்தது. ஏனெனில் குழந்தைகள் காலையில் கண் விழிக்க முன்பே வேலைக்குப் போய் அவர்கள் உறங்கிய பின்பே திரும்பி வரும் பெற்றோரின் முகமே குழந்தைகளுக்கு அந்நியமாயிருந்தது. நோயின் வேதனைகளை கணவனுக்கு கூட காட்டாமல் புன்னகையுடன் வளைய வந்த கமலா, அவரை தவிக்க விட்டு திடீரென மறைந்த போது தான் தாம் அநாதையாகிப் போனது போன்று உணர்ந்தார் தேவர். குழந்தைகள் பாடசாலை செல்லத் தொடங்கி இரண்டு வருடத்துக்குள்ளாகவே தமக்குள் ஒரு உலகத்தை சிருஷ்டித்துக் கொண்டு அந்நியமாகிப் போனார்கள். குரலுயர்த்தி கதைத்து கூட பழக்கமில்லாத தேவர் முதலில் தவித்தாலும், அரசாங்கம் வழங்கும் முதியோர் நிதி மூலம் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு, ஆமையாய் தமக்குள் தாமே சுருண்டு கொள்ள பழகி விட்டார்.

வெளியே காட்டுக்கத்தலாய் ஒலிக்கும் பைலா சத்தத்துடன் சுய நினைவுக்கு வந்த தேவர், தலையைத் துவட்டிக் கொண்டே குளியலறையை விட்டு வெளியே வந்தார்.

மீண்டும் சில நாட்கள் கழிய, கண்ணாம் மூச்சி ஆட்டம் போன்றே ஒருவரையொருவர் காணாமலேயே அவரவர் பொழுதுகள் கரைந்தன. ஒருநாள் அவர் மருமகளைக் குசினியினுள் கண்ட போது அவரை நீண்ட நாட்களாய் அரித்துக் கொண்டிருந்த விஷயத்தைக் கேட்டார். ''சுகுணாம்மா! நம்மட பிள்ளைகள் T.V, கொம்பியூட்டர், வெளி அலுவல் என்று பொழுதைக் கழிக்கிறார்களே! ஏம்மா படியென்று சொல்லக்கூடாதா?''

''ஏன் மாமா வீண் ஆராய்ச்சியெல்லாம்? முந்திதான் ஏட்டுக்கல்வி. இப்போது தொழிற்கல்வி தான், தெரியுமா? அவர்கள் சிறு பிள்ளைகளில்லை தானே! அவர்களுக்கு எல்லாமே தெரியும்'' என்று சொல்ல சரிதான் போலும், காலம் முன்னேறிவிட்டது, நான் பழைய பனையோலைதானே என்று தம்மைத் தாமே கடிந்து கொண்டார்.

மறு நாள் மாலையில் ஒரு குட்டித்தூக்கம் போட்டு எழுந்தவரை, அபினேஷின் அறையிலிருந்து வந்த இருமற்சத்தம் கவலைப்படுத்தியது. ஏதோவெல்லாம் படிக்கிற பிள்ளை கவனிக்கத்தான் ஆளில்லை என்று நினைத்தவராய் பாலைக்காய்ச்சி, கற்கண்டு போட்டு எடுத்துக் கொண்டு, முதன் முறையாய் பேரனின் அறைக்குள் செல்ல கதவைத் திறந்தவர், கண்டகோலம் அதிர்ச்சியை கொடுத்தது, அறையின் சுவர்களை அரைகுறையான ஆடை அணிந்த பெண்களின் படங்கள் அழகு செய்ய அவரே அறிந்திராத குடிவகைகளின் முன்னால் கையில் சிகரெட்டுடன் அமர்ந்திருந்தான் அவரது பதினாறு வயது கூட நிரம்பியிராத அருமைப்பேரன். விக்கித்துப்போய் நின்று விட்ட அவரை பேரனின் குரல் நனவுக்குக் கொண்டு வந்தது ''கொஞ்சமும் மானர்ஸ் தெரியாதா? கதவைத் தட்டிப் போட்டு வரவேணும் என்று கூடத் தெரியாமல்....ஏன் வந்தனீங்கள்?''. ''இல்லை அபினேஷ் இருமல்....பால்...'' என்று தடுமாற ''நான் கேட்டேனா? அநாவசியமாய் எதிலயும் மூக்கை நுளைக்காமல் கொண்டு போங்கோ'' மெதுவாய் வெளியில் வந்து ஆறுதலாய் இரண்டு மூச்சு வாங்கிக் கொண்டார்.

என்ன தான் தலைமுறை மாற்றம், நாகரிகம் என்றாலும் இப்படியா படுகுழியில் கண்ணை மூடிக் கொண்டு விழுவார்கள். இப்படியே போனால், அழிவைத் தவிர வேறு முடிவில்லை. எதற்கும் மகனிடம் சொல்லி திருத்துவோம் என்று இரண்டு நாள் சிந்தனையில் தீர்மானித்தவராய் வேலை முடிந்து வந்த மகனை பிடித்தார் தேவர்.

''அப்பா நானே களைச்சுப் போய் வந்திருக்கிறன், கொஞ்சம் 'றெஸ்ற்' எடுத்தால் தான்

நாளைக்கு வேலைக்குப் போகலாம். சொல்றதை சுருக்கமா சொல்லுங்கோ''

''தம்பி! அபினேஷின்ரயும், சுவர்ணாடயும் போக்கு சரியில்லை. சிகரட் குடி ஆட்டம் பாட்டம் என்னப்பா இது?''

''இதுதானா விஷயம். நானும் ஏதோ என்று பயந்து போனன், இந்த 21 ம் நூற்றாண்டில் உங்கட பத்தாம்பசலித்தனமான கொள்கைகளை கொஞ்சம் மூட்டை கட்டி வையுங்கோ. இந்தக்கால பிள்ளைகள் இப்படித்தான். நான் பெத்தனானே கவலைப்படலை, உங்களுக்கென்ன?''

''இல்ல இராவில கூட வீட்டுக்கு வர்றதில்ல....'' என்று முடிக்க முன்,

''இதுக்குத்தான் வயசு போனதுகளை வீட்டுல வைச்சிருக்கக்கூடாது என்று சொல்றது, உங்களுக்கு இங்க சரிவராட்டி முதியோர் இல்லம் இருக்குது.போகலாம் தானே! வீணா ஏன் எங்கட குடும்பத்தில சிக்கல ஏற்படுத்திறீங்கள்'' என்றபடி மகன் போக, சிரிப்பு வந்தது தேவருக்கு. ''குடும்பமா? இதற்குப் பெயர்தான் குடும்பமா? அன்பையும் புரிந்துணர்வையும் பரிமாறிக் கொண்டு உறவுகள் இணைவதற்குப் பெயர் தான் குடும்பம்! அந்நியர் போல் ஒரே வீட்டில் திரிகிறார்களே தவிர ஐந்தறிவு களுக்கு கூட பொது மொழியான அன்பையே உணராதவர்கள். எப்படித்தான் தன்னை சமாதானப்படுத்த முயன்றும் முடியாமல் கண்ணில் நீர் பெருக, படுக்கையில் புரண்டவருக்கு திடீரென நெஞ்சு வலிப்பது போன்று இருக்க, தண்ணீர் தேடினார். கூப்பிட்டாலும் யாரும் வரமுடியாத தனிமையில், வாய் விட்டுக் கத்தினார். மறுநாட் காலை நான்கு மணிக்கு அந்த அறை வெளிச்சம் பெறவில்லை. உறவுகளை தனிமையில் தேடிய அந்த முதிய பறவை, சூரியனை தேடி விண் நோக்கி பறக்கும் இளம் பறவைகளின் முடிவை காணும் முன்பே தன் பயணத்தை முடித்துக் கொண்டது. எத்தனை நாட்களின் பின் அவரது மரணச் செய்தி அவரது வீட்டாருக்கே தெரியப்போகிறதோ தெரியாது.

---

**யாழ்ப்பாணத்தில் உள்ள சில கல்லூரிகள் இணையத்தில் தமது விபரங்களை வெளியிட்டுள்ளன. அவற்றுள் பரி.யோவான் கல்லூரி, ஹாட்லி கல்லூரி, இந்துக் கல்லூரி என்பன சிலவாகும்.**

**பரி.யோவான் கல்லூரியின் விபரங்கள் பெற :-**

http:// www.lanka.net/stjohns/

**யாழ். இந்துக் கல்லூரியின் விபரங்கள் பெற :-**

http:// www.jaffnahindu.sm.com

**ஹாட்லி கல்லூரியின் விபரங்கள் பெற :-**

http:// www.hartleycolleg.com/

# விடிவை நோக்கி விநோத ஆயத்தம்

## வேழினி வல்லிபுரம், இரண்டாம் வருடம், விவசாயபீடம்.

*இருபத்தோராம் நூற்றாண்டிற்கு*
*இங்கே ஆயத்தம்*
*இனிதாக நடக்கின்றது*
*இயம்பிடுவேன் கேட்டிடுவீர்.*

*சந்திரனில் வீடுகட்ட*
*கல்லுகள் தேவையென்று - இங்கு*
*குண்டுகள் போட்டு*
*வீடுகள் உடைக்கிறார்கள்.*

*க்ளோனிங்கில் எடுக்கும்*
*பிரதிகளுக்கு உயிர்கொடுக்க*
*இங்குள்ள உயிர்களை*
*இரகசியமாய் அனுப்புகிறார்கள்.*

*இந்த சொர்க்கபுரியை*
*எப்படி அழிக்கலாமென்று*
*பலர்கூடி தர்க்கம் புரிந்து*
*ஒத்திகை பார்க்கிறார்கள்.*

*நரகத்தை இவ்விடத்தில்*
*அமைத்துவிட வேண்டுமென*
*எமையெல்லாம் வைத்திங்கு*
*கடும்பயிற்சி எடுக்கிறார்கள்.*

*நீரில்லாக் கிரகத்தில்*
*நாம்வாழ நேர்ந்தால்*
*கண்ணீரைச் சுரந்து*
*நாம் வாழப் பழக - எமது*
*கண்ணீர்ச் சுரப்பிகளுக்கு*
*கனபயிற்சி தருகிறார்கள்.*

*நிலவினில் நாம் வாழ்ந்தால்*
*பகலவன் உண்டாம்*
*வெள்ளொளி பெறுவதற்கு*
*செவ்வொளியும் வேண்டுமென்று*
*செங்குருதியில் இப்புவியை - தினம்*
*நனைய விடுகிறார்கள்.*

*குண்டுகள் துளைத்தாலும்-சாகாத*
*சந்ததியை உருவாக்க*
*எமது பரம்பரையை*
*குண்டுகளால் துளைத்து*
*பரிசோதனை செய்கிறார்கள்.*

*இதயம் செயலிழந்தால்*
*இறப்பு வந்து விடுமென்று*
*இருதயமில்லா சந்ததியை - இங்கு*
*சிருஷ்டிக்க முயல்கிறார்கள்.*

# கருகிப்போன அரும்புகள்

**வல்லிபுரம் சுகந்தன், இரண்டாம் வருடம், பொறியியற் பீடம்.**

*ட்ரிங். ட்ரிங்...ட்ரிங். ட்ரிங்....நவீன கணனியின் ஒளிஒலி கருவி அழைப்பிசை ஒலிக்க, காதலியின் முதலிரவுக் கதகதப்பை அளித்துக் கொண்டிருந்த உடற்போர்வையை அகற்றி, அதன் இயக்கத்தைத் துண்டித்த ப்ரகாஸின் பார்வை வீச்சில் கணனித் திரை தென்பட அங்கே,*

*''672-021-102454 இல் இருந்து அழைப்பு''*

*''விசேட உடல் உணர் கருவி மூலம் தொடர்பை ஏற்படுத்த தொடர்பாளர் விருப்பம்''*

*சர்வ கிரக மொழியான தமிழில் இலத்திரன்கள் ஒளி வீசிப் பளிச்சிட திரையின் அடிப்பகுதியில்*

*''17.01.2077, 06:30:25:12''*

*என அன்றைய திகதியும் நேரமும் அடிக்கோடிடப்பட உடனே உடல் உணர்கருவியை அணிந்து கொண்டு தொடர்பை ஏற்படுத்த முப்பரிமாணத் திரையில், முன்னே நிஜமாய் நிற்பது போல் நிழலாய் 'ஸ்நேகா' தேவதையாய் தோன்றினாள்.*

*''ஹாய் ப்ரகாஸ்! இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்'' கூறித் திரையினூடே ப்ரகாஸின் கரங்களைப் பற்றி இதமாய் அக்கரங்களில் முத்தமிடக் கிறங்கியவன், திரையினூடே அவளை இறுக்குவதற்காய்த் தன் கரங்களை அந்த அப்ஸரசின் மேனியில் அலைய விட ஆரம்பிக்க, அவனது பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள் ஸ்நேகா. ஏமாற்றத்துடன் அலைத்த ப்ரகாஸின் கைகளைத் தன் மென் கரங்களுக்குள் அடக்கினாள்.*

*''என்ன ப்ரகாஸ், உங்கட 25வது பிறந்த நாளான இன்றைக்கு எனக்கு என்ன விருந்து வைக்கப் போறீங்க? எங்க வைக்கப்போறீங்க? இன்னும் சரியாக 1/2 மணித்தியாலம் 15 செக்கனில நான் இஞ்ச செவ்வாயில் இருந்து வெளிக்கிட்டு அங்கே எங்கட நாடான ஈழத்தின்ர வேலணை சர்வகிரக விண்வெளி உந்தூர்தி நிலையத்திற்கு வருவேன். என்ன றிசீவ் பண்ண நீங்க அங்க கட்டாயம் வாறீங்க. இண்டைக்கு முழுக்க நான் உங்களோட தான் இருக்கப் போறன் சரியா என்ன?'' என்றவள் தொடர்பைத் துண்டிக்க முற்பட, ''கொஞ்சம் பொறு ஸ்நேகா, உனக்கு இண்டைக்கு முழுநேரத்திற்கும் நான் ப்றோகிறாம் பண்ணியாச்சு. நீ வந்த உடனே என்ர நியூமொடல் ரொக்கட்டில் இரண்டு பேரும் சந்திரனுக்குப் போய் அங்க ப்ரபா சைவ உணவகத்தில் மத்தியானம் சாப்பிட்டு விட்டுப் பின்னேரம் புதனுக்குப் போய் அங்க புதுசாக் கட்டப்பட்டிருக்கிற ''தாயக விடுதலை வீரர்களின் நினைவாலயத்தப் பாத்திற்றுப் பிறகு வீட்டுக்குத் திரும்பிறம் என்ன. எப்பிடி என்ர ப்றோகிறாம்? உனக்கும் சந்தோஷம் தானே?*

*''ரொம்ப ரொம்பச் சந்தோஷம்'' என்றவள் தன் தளிர் விரல்களால் அவன் விரல்களில் சொடக்கிட்டாள்.*

''அப்ப எனக்கு ஏதாவது பரிசு தர வேணும்'

''வரேக்குள்ள வாங்கிக் கொண்டு வாறன்''

''இல்ல இப்பவே வேணும்''

''இப்ப என்னெண்டு? இப்ப என்னட்ட ஒன்டுமில்லை''

''பொய் சொல்ல வேண்டாம். உன்னட்ட நான் கேக்கிறது இருக்கு. உனக்குத் தர வெக்கம் எண்டா நானே எடுக்கிறன்''

''ஆங்! அதானே வேண்டாங்கிறது. நான் ஒறிஜினல் தமிழ்ப் பெண்ணாக்கும். அதெல்லாம் கல்யாணத்திற்கப்புறம் தான்''. ஏமாற்றத்தால் ப்ரகாஸ் முகம் வாடிப்போக, ''என்ன ப்ரகாஸ், டல்லா யிட்டீங்க! இன்னும் ஒரு மாசம் தானே. நம்ம கல்யாணம் முடிஞ்சிட்டதுக்கப்புறம் நீங்க வேணாண்டாலும் நான் விட்டுடப் போறேனா என்ன?'' என்றவள் ப்ரகாஸின் முகம் அப்போதும் பிரகாசமாகாதது கண்டு, ''சரி சரி கொஞ்சம் கிட்டவா வாங்க'' என்று ப்ரகாஸை அழைத்து திரையினூடே இழுத்து இறுக்கமாய்த் தன்னோடு இணைத்து இதமாய் அவன் இதழ்களில் தன் உதடுகளை அழுத்தமாய்ப் பதிக்க, திரையினூடான மின் இணைப்புகளின் மூலம் இலத்திரன்கள் அவன் நரம்புகளில் உணர்வுகளைத் தோற்றுவிக்க அந்த உணர்ச்சிகளின் ஊற்றுக்களுடன் ஸ்நேகாவின் உதட்டுச் சாயம் தன் வழமையான வாசனையை வீசிக் கொண்டு அவன் இதழ்களில் பதியலாயிற்று.

''இப்ப சந்தோஷம் தானே'' என்றவள், ''சரி, எனக்கு நேரம் போகுது'' என்று கூறிக் கொண்டு தொடர்பைத் துண்டிக்க திரைவெறுமையாகிப்போனது.

தனது தொடர்பையும் துண்டித்த ப்ரகாஸ் ஸ்நேகாவின் முத்தம் தந்த கிறக்கத்தில் சில நிமிடம் மயங்கிநின்று பின் தன் உதட்டில் பதிந்திருந்த அவளின் உதட்டுச் சாயத்தைக் கைக்குட்டையால் துடைத்து விட்டு தன் நாளாந்தக் கடமைகளில் ஈடுபடலானான். பின் தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டியிருந்த கோப்புகளைக் கணனியில் இருந்து பெற்றுக் கொண்டு அவற்றை ஆராயலானான். அவன் அவசரமாகச் செய்து முடிக்க வேண்டிய வேலைகளோ அன்றி புதிதாகத் துப்புத்துலக்க வேண்டியவைகளோ எதுவு மில்லாதது கண்டு நிம்மதிப் பெருமூச்சுடன் காலை உணவை முடித்து விட்டு ஸ்நேகாவை வரவேற்பதற்காய் தனது நவீன ரக உந்தூர்தியில் ஏறி அதை இயக்கினான்.

மின்கலத்தில் இருந்து மின் பொறிகள் தெறிக்கப்பட இயந்திரத்தின் சக்தி பிறப்பிக்கும் அறையினுள் இருந்த ஐதரசன் அணு உடைக்கப்பட வெளிக்கிளம்பிய சக்தியில் ஒளியின் நூறில் ஒரு பங்கு வேகத்துடன் புறப்பட்ட அவ் உந்தூர்தி பின் சூரிய சக்தியைக் கிரகித்துத் தன் வேகத்தைச் சீர்ப்படுத்திக் கொண்டு முன்னோக்கிப் பாய ஸ்நேகாவின் கனவுகளில் பின்னோக்கிப் பயணிக்கலானான் ப்ரகாஸ்.

ப்ரகாஸ் ஒரு சிறந்த துப்பறிவாளனும் கணனி நிபுணனும் ஆவான். தனது கணனி அறிவு கொண்டு அவன் உருவாக்கிய 6 ம் தலைமுறையைச் சேர்ந்த துப்பறியும் கணனியின் உதவியுடன் கொலைகள் மற்றும் இரகசிய சம்பவங்களைத் துப்பறிந்து இன்று அனைத்து கிரகங்களிலும் பிரபலமான ஒரு துப்பறிவாளன். அவனிடம் ஒரு தலைக் காதல் கொண்டு அலையும் பெண்கள் ஏராளம். ஆனால் அவன் மனம் கவர்ந்தவள் அவனது தாயகத்தைச் சேர்ந்தவளும் தற்போது செவ்வாயில் தனியார் தொழில் நிறுவனம் ஒன்றில் வேலை பார்ப்பவளுமான ஸ்நேகா. ஏறத்தாழ இரு வருடங்களுக்கு முன் சாதாரணமாய் ஆரம்பித்த நட்பு இன்று காதலாகி இருவரும் அன்றில் பறவைகளாய் ஒன்றாய்ச் சிறகடித்து காதல் வானில் கானம் பாடி வருகின்றனர்.

வேலணை சர்வகிரக உந்தூர்தி நிலையத்தில் சுமார் 2 நிமிடங்களின் காத்திருப்பின் பின் ஸ்நேகா 3 வயது குறைந்து விட்ட இளமையாய்ப் புன்முறுவலுடன் வந்து சேர ஆவலுடன் ஓடிச் சென்று அவள் கரம் பற்றித் தன் வாகனத்திற்கு அழைத்து வந்தான்.

முன்னரே திட்டமிட்டிருந்த படி சந்திரனிற்குச் சென்று அங்கே 'ப்ரபா உணவத்தில்' மதிய உணவை முடித்துக் கொண்டு அருகில் இருந்த பிரபல விடுதிக்குச் சென்றனர். அங்கே இருவருக்கும் தனித்தனி அறைகள் வழங்கும்படி வரவேற்புப் பணியில் இருந்த 'ரோபோ' விடம் கூற அதை வேகமாய் மறுத்து ஒரு அறையே போதும் என்று கூறிய ஸ்நேகாவை ஆச்சரியத்துடன் பார்த்தான் ப்ரகாஸ்.

அறையினுள் சென்றதும் ஆவேசத்துடன் ப்ரகாஸை இழுத்து இறுக்கமாய்த் தன்னுடலோடு இணைத்து அழுத்தமாய் அவன் இதழ்களில் தன் இதழ்களைப் பதித்து முத்தமிட்ட ஸ்நேகாவின் உதட்டுச் சாய மணமும் நிறமும் வேறுபட்டிருந்தது. தானாகவே மேலும் எல்லை மீறிப் போகும் ஸ்நேகாவின் செயல் கண்டு திகைத்த ப்ரகாஸ், ''ஏய் ஸ்நேகா! இண்டைக்கு உனக்கு என்னாச்சு? இதெல்லாம் கல்யாணத்திற்குப் பிறகுதான் எண்டு சொன்னியே! நீ ரொம்பவும் மோசம். தமிழ்ப் பெண்ணெண்டா அது நீதான் எண்டு நான் நினைச்ச மாதிரி இல்ல நீ. நீயும் மற்றப் பெண்கள் மாதிரி மாறிவிட்டாய்'' என்று ஏசி விட்டு அறையை விட்டு வெளியேறப் போனவனின் கரங்களை இழுத்து அவனை நிறுத்திய ஸ்நேகா, ''நாங்க தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறமே! எங்கட கல்யாணத்துக்கு இன்னும் ஒரு மாசம் தானே கிடக்கு. இப்ப இப்பிடிச் செய்யிறதால என்ன வந்திரப் போகுது?'' என்று கூற அவளைப் பார்வையால் எரித்து விட்டுத் தன் இல்லம் திரும்பியவனின் மனம் அவளின் செயல்களால் கனமாகிப் போக படுக்கையில் சாய்ந்து கொண்டே அன்றைய விசேட செய்திகளைத் திரையில் காண்பிக்க கணனிக்கு ஆணையிட்டான்.

ஒரு துப்பறிவாளனுக்குத் தேவையான செய்திகளைத் தந்து கொண்டிருந்த திரையில் கண்ணில் இடறுப்பட்ட செய்தி கண்டு நெஞ்சு திக்கென்றது.

''இன்று காலை 06:35:15 அளவில் செவ்வாய்க் கிரகத்தில் வேலையாற்றி வந்த ஸ்நேகா என்னும் மானிடப் பெண் மர்மமான முறையில் கொலையுண்டிருக்கிறார். இவரின் மரணத்திற்கான காரணம் இன்னமும் மர்மமாகவே உள்ளது....'' என்றவாறு தொடர்ந்த அந்த செய்தியை அவனால் நம்பமுடியவில்லை. கணனியின் செய்தி என்பதால் நம்பாமலும் இருக்க முடியவில்லை. செய்தி தந்த அதிர்ச்சியில் சில நிமிடங்கள் கலங்கி நின்றவன், உடனடியாகச் செவ்வாய்க் கிரக காவல் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்ட போது அவர் ஸ்நேகாவின் மரணத்தை உறுதிப்படுத்தியதுடன் கொலையுண்ட முறை மிகவும் மர்மமாயிருப்பதாயும், அவனது உதவி தேவைப்படுவதாகவும் கூறி அனைத்துத் தகவல்களையும் அவனது கணனிக்கு வலைப் பின்னல் மூலம் அனுப்பினார்.

அவர் அனுப்பிய விபரங்களைத் தரவாக்கி அவனது துப்பறியும் கணனியில் கொடுத்து விட்டு பெறுபேற்றை வேண்டிய போது ஸ்நேகா கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பதாகவும், ஆனால் அவள் கழுத்தில் எந்தச் சாதனமும் தொடுகையை ஏற்படுத்தாததால் கொலைக்கு உபயோகிக்கப் பட்ட பொருள் எது என்பது பெரும் மர்மமாயிருப்பதாயும், பெறுபேற்றை அளித்து விட்டு கணனி மௌனமாகியது. நினைக்க நினைக்க நெஞ்சு வெடித்து விடும் போல் இருந்தது ப்ரகாஸிற்கு. ஸ்நேகா காலையிலேயே இறந்து விட்டாள். அப்படியானால் தன்னுடன் சந்திரனிற்கு வந்தது யார்? அவளும் அப்படியே ஒரே அச்சில் வார்த்ததுபோல் ஸ்நேகா மாதிரியே இருந்தாளே! ஸ்நேகாவிற்குத் தான் அவள் 6 மாதக் குழந்தையாய் இருக்கும் போதே தாய் தந்தை இறந்து விட்டனர். அப்படியானால் இது யார்? நான் தான் பெரிய பிழை விட்டு விட்டேன். அவளது நடவடிக்கைகள் எல்லாம் எனது ஸ்நேகாவின் இயல்பிற்கு முற்றிலும் மாறாகவல்லவா இருந்தன. ஏன் வயது கூட 3 வயது குறைவானது மாதிரியல்லவா இருந்தது. ஸ்நேகா என்றெண்ணி அவளைச் சந்தித்த சந்தோஷத்தில் எல்லாவற்றையும் கவனிக்கத் தவறி விட்டேன், என்று வருந்தியவன் முகத்தில் அரும்பி இருந்த வியர்வையைக் கைக்குட்டையால் துடைக்க அதில் பதிந்திருந்த ஸ்நேகாவின் உதட்டுச் சாய வாசம் அவன் சுவாசக் காற்றில் கலக்க ''ஆமாம் அவள் இன்று பூசியிருந்த உதட்டுச் சாயம் கூட வேறுபட்டிருந்ததே. ச்சே! நான் ஒரு மடையன். ஒரு சிறந்த துப்பறிவாளன் என்றிருந்தும் என்ன பிரயோசனம்? எத்தனை விடயங்களில் கோட்டை விட்டு விட்டேன் என்று மனம்

நொந்தவாறே ஸ்நேகாவின் வாசம் தந்த கைக்குட்டையை ஆதுரத்துடன் பார்வையால் வருட, அவனுடைய உதட்டில் பதிந்து பின் அந்தக் கைக்குட்டையால் துடைக்கப்பட அதில் பதிந்திருந்த ஸ்நேகாவின் உதட்டுச் சாயம் கண்ணில் இடறுப்பட மின்னலாய் அவன் நெஞ்சிற்குள் பொறி ஒன்று தெறித்தது.

உடனே தன் உந்தூர்தியில் செவ்வாய்க்குப் பறந்தான் ப்ராகாஸ். அங்கே சென்று காவல் நிலையத்தை அடைந்த போது அவசரமாய் வெளியே புறப்பட்ட காவல் நிலைய அதிகாரி அவனை அழைத்துக் கொண்டு பிரேத பரிசோதனைச்சாலையைச் சென்றடைந்தார். அங்கே சென்ற ப்ரகாஸிற்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி. ஸ்நேகாவும், சில மணி நேரங்களுக்கு முன் ஸ்நேகாவாய் நடித்தவளும் அருகருகே கிடத்திவைக்கப்பட்டிருக்க இருவருக்கும் உயிர் நிச்சயமாய் இல்லை என்பது வெளிப்பார்வைக்கே புலனாயிற்று. கேள்விக்குறியுடன் காவல் அதிகாரியை நோக்க அவர் ஒரு கடிதத்தை அவனிடம் நீட்டினார்.

அன்புள்ள ப்ரகாஸ்!

நான் உங்களை உயிருக்குயிராய்க் காதலித்தேன். நீங்களும் அவ்வாறே என்னைக் காதலிப்பதாய் எண்ணினேன். ஏனெனில் உங்கள் கணனியில் என்னுடைய படங்களை எல்லா இடங்களிலும் பதிந்து வைத்திருந்தீர்கள். ஆனால் நேற்றுத் தான் தெரிந்தது, நீங்கள் காதலிப்பது என்னையல்ல. அப்படியே என்போல் இருக்கும் ஸ்நேகாவை என்று. அவளைப் பற்றி விசாரித்ததில் சில திடுக்கிடும் தகவல்கள் எனக்குக்கிடைத்தன. ஸ்நேகா 3 வயதாயிருந்த போது அவளது ஒரு கலத்தில் இருந்து 'க்ளோனிங்' முறையில் நான் உருவாக்கப்பட்டேனாம். இன்று காலை ஸ்நேகாவுடன் தொடர்பு கொண்டு உங்களை எனக்கு விட்டுத் தரும்படி எவ்வளவோ மன்றாடினேன். அவள் மறுத்து விட என்ன செய்கிறேன் என்று புரியாமல் அவளைக் கொன்று விட்டேன். பின் அவள் மாதிரி நடித்து உங்களை அடைய எவ்வளவோ முயன்றேன். அதிலும் நான் தோல்வியுற்றதால் மரண தேவதையை அணைத்துக் கொள்கிறேன். உங்கள் மனதை நான் புண்படுத்தியிருந்தால் தயவு கூர்ந்து என்னை மன்னித்து எனக்காய் ஒரு துளி கண்ணீர் சிந்துவீர்களெனில் என் காதல் வெற்றி பெற்றதாய் என் ஆத்மா சாந்தியடையும்.

இப்படிக்கு

மரணத்திலும் உங்கள் நினைவுடன்

ஸ்வேதா

வாசித்தவன் கலங்கிய விழிகளுடன் காவல் அதிகாரியைப் பார்க்க அவர், ''எல்லாம் சரி. ஆனால் எப்படிக் கொலை மேற்கொள்ளப்பட்டது என்பது தான் இன்னும் புரியவில்லையே'' என்று தன் ஆதங்கத்தை வெளிப்படுத்த, விசேட உடல் உணர் கருவி மூலம் எதுவும் செய்யலாம் என்பதையும், அதற்கு ஆதாரமாய் ஸ்நேகாவின் உதட்டுச் சாயம் படிந்த கைக்குட்டையையும் அவரிடம் காட்டிவிட்டு கண்களில் ஊற்றெடுத்துக் கன்னத்தில் கோடிழுத்த கண்ணீரை அவர் அறியாமல் அக் கைக்குட்டையால் ஒற்ற, அதைக் கண்டும் காணாதவர் மாதிரி அவர் விலகி நடந்தார்.

# 21ம் நூற்றாண்டில் தமிழ் மொழியின் பயன்பாடு

"கல்தோன்றி மண்தோன்றா காலத்து முன்தோன்றிய மூத்த தமிழ்"

இது சான்றோர் வாக்கு. இவ்வாறு மிக நீண்ட வரலாற்றை கொண்ட தமிழ் மொழி, இன்றைய விஞ்ஞான தொழினுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டுள்ளதா? என்பது தமிழ் பேசும் மனங்களில் எழும் ஓர் கேள்வி. காலத்தின் கோலத்துடன் மாற்றமடையாத எதுவும் அழிந்து போயுள்ளதை வரலாறுகள் சுட்டிக் காட்டுகின்றன.

21ம் நூற்றாண்டில் காலடி வைக்கப்போகும் இவ்வேளையில், '21ம் நூற் றாண்டில் தமிழ் மொழியின் பயன்பாடு' எனும் தலைப்பில் வெவ்வேறு துறைகளில் தமிழ் மொழியின் பயன்பாடு பற்றிய ஒரு கருத்துத் தொகுப்பை மேற்கொள்ளல் உசிதமெனக் கருதினோம். இதனடிப்படையில் நிர்வாகத்துறை, நீதித்துறை, தொடர்பு சாதனத்துறை, கல்வியியல்துறை என்பவற்றில் இந்த நூற்றாண்டில் தமிழ் மொழியின் பயன்பாடு எவ்விதம் இருந்திருக்கின்றது? எதிர்வரும் நூற்றாண்டில் எவ்வாறு இருக்கப் போகின்றது? அல்லது இருக்க வேண்டும் என்று அவ்வத்துறை சார்ந்த விற்பன்னர்களின் கருத்துக்களை தொகுத்து வழங்கியுள்ளோம். இவர்களுடைய கருத்துகள் இதழுக்குச் சிறப்புச் செய்வதுடன் சிந்தனையை தூண்டுவனவாகவும் அமைந்துள்ளன. இது இன்னும் வெவ்வேறு துறை சார்ந்த விற்பன்னர்களின் கருத்தை யும் உள்ளடக்கியிருக்கலாம் என்ற ஆதங்கத்தை ஏற்படுத்தியது.

இதோ அவர்களின் பேனாக்கள் பேசுகின்றன. அவற்றுடன் உங்கள் எண் ணங்களையும் விரிவாக்குங்கள்.

## நிர்வாகத்துறை

***திரு. சுப்பிரமணியம் சிவதாசன்,***
***ஜனாதிபதி ஆலோசகர்,***
***தலைவர், அரச கரும மொழி அமுலாக்கல் ஆணைக்குழு.***

*நிர்வாகத் துறையில் தமிழ் மொழியின் பயன்பாடு எவ்விதம் இருந்தது என நாம் பார்க்கப் போனால், சுதந்திரத்திற்கு முற்பட்ட கால நிகழ்வுகளையும் மேலோட்டமாகக் கூறவேண்டும். 1940 களில், அரசுப்பேரவையிலே, சுதந்திரமடைந்தால் சிங்களமும் தமிழும் ஆட்சி மொழியாகுதல் வேண்டும் என்று கூறப்பட்டது, ஆங்கிலத்திலிருந்து உடனடியாகச் சுதேசிய மொழிகளுக்கு மாறுவதில் இருந்த பிரச்சினை களைக் கருத்திற் கொண்டு, இதற்கெனக் குறித்த கால அவகாசம் வழங்கப்படலாம் என்றும் யோசனை*

முன்வைக்கப்பட்டது. எனினும் 1956 ம் ஆண்டில் சிங்களம் மட்டுமே அரச கரும மொழி எனப் பிரகடனஞ் செய்யப்பட்டது. இதனால் ஏற்பட்ட பாரிய பாதிப்புகளை நாம் இன்றும் காணக்கூடியதாக உள்ளது. சிங்களம் மட்டும் சட்டத்தினைத் தொடர்ந்து இடம் பெற்ற சம்பவங்களால், ''தமிழும் நியாயமாகப் பாவிக்கப் படக்கூடிய'' வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எனினும் தமிழ் மொழி நிர்வாகத் துறையில் சமமான அந்தஸ்தைப் பெறவில்லை. அரச கரும மொழி அல்லது ஆட்சி மொழி எனும் போது, இரு விடயங்களைக் கவனத்தில் எடுக்க வேண்டும். ஒன்று நிர்வாக மொழி, அதாவது இலங்கை மக்கள் தமது அரசு சார் கடமைகளைச் செய்யும் போது அல்லது அரச உத்தியோகத்தர்கள் தமது கடமைகளைச் செய்யும் போது, பயன்படுத்தும் மொழி. மற்றையது, பதிவுகளைப் பேணும் மொழி.

1987ம் ஆண்டு, இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து ஏற்பட்ட அரசியலமைப்பு மாற்றங் களால், தமிழ் மொழி இலங்கை முழுவதிலும் ஓர் நிர்வாக மொழியாக அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் இவ் அரசியலமைப்பை நோக்குகையில் அதன் வசன அமைப்பிலேயே, தமிழ் மொழியின் சமவுரிமை மறுக்கப்பட்டுள்ளதோவென எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில், முதலாம் உப பிரிவில், ''சிங்களம் ஆட்சி மொழியாகுதல் வேண்டும்'' எனக்கூறி, பின்னர் மறு வரியில், ''தமிழும் ஆட்சி மொழியாகுதல் வேண்டும்'' எனக்கூறப்பட்டு உள்ளது. அதாவது ''சிங்களமும் தமிழும் ஆட்சி மொழியாகுதல் வேண்டும்'' எனக்கூறும் மனோநிலை உருவாகவில்லை என்பதனையே இது காட்டுகிறது.

இங்கு கவனிக்க வேண்டியது என்னவென்றால், 1988ம் ஆண்டு அரசியலமைப்பு மாற்றங் களுக்குப் பின்னரும், இலங்கை முழுவதிலும் தமிழ் நிர்வாக மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதேயன்றி, பதிவுகள் சிங்களத்தில் மட்டுமே செய்யப்பட ஏற்பாடுள்ளது. வடகிழக்கு மாகாணத்தில் மட்டுமே தமிழ் மொழியில் பதிவுகள் செய்யப்படலாம். வடகிழக்குக்கு வெளியே சிங்களத்தில் மட்டுமே பதிவுகள் செய்யப்படலாம்.

1988ம் ஆண்டின் அரசியலமைப்புக்கான 16 வது திருத்தச் சட்டப்படி, தமிழ் மொழி பேசுவோர் கணிசமான அளவில் வாழ்கின்ற இடத்தில் அவர்களுக்குக் கடமைகளை இலகுவாக்குவதற்காக, சனாதிபதி, தமிழ் மொழியிலும் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனப் பிரகடனஞ் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே இப் பிரகடனத்தைச் செய்யும் அதிகாரம், ஜனாதிபதிக்கே வழங்கப் பட்டுள்ளது. அதாவது தமிழ் மொழியிலும் பிறப்பு, இறப்பு, விவாக பதிவுகள், ஏனைய அரச நிருவாகத் துறைசார் பதிவுகளை மேற்கொள்வதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் தன்மதியதிகாரம் ஒரு தனிமனிதரிடமே வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி விரும்பினால் தமிழ் மொழிக்குச் சம உரிமையை வழங்கி, தமிழிலும் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பணிக்கலாம். உத்தேச அரசியல் யாப்பில், ஜனாதிபதி, ஏதாவது ஒரு பிரதேசத்தில் 12.5 சதவீதத்துக்கும் அதிகமாகத் தமிழ்மொழி பேசுபவர்கள் இருந்தால், அப்பிரதேசங்களில் தமிழ் மொழியில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரகடனஞ் செய்யலாம். ஜனாதிபதியால் இப் பிரகடனஞ் செய்யப்படாத பட்சத்தில், தமிழ் மொழியில் பதிவை மேற்கொள்ளக் கூடிய ஒரு பதிவாளர் கூட, தமிழ் மொழியில் பதிவுகளைச் செய்வது (வடகிழக்குக்கு வெளியே) அரசியலமைப்புக்கு முரணானதாகும். இப்பிரகடனஞ் செய்யப்பட்டாலொழிய, தமிழ் மொழி மூலப் பதிவாளர்களையோ, அதற்கு வேண்டிய ஏனைய அலுவலர்களையோ நியமிக்க முடியாது. தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்ய முடியாது. எனவே முழு இலங்கையிலும் தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து வழங்குவது, தனி ஒருவரின் விருப்பு வெறுப்பிலேயே தங்கியிருப்பதைக் காணலாம்.

எனினும், தற்போது எனது ஆணைக்குழுவினூடாக, தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங் களை அடையாளங் கண்டு, 50க்கு மேற்பட்ட பதிவாளர் பிரிவுகளில் தமிழ் மொழி மூலப் பதிவுகளை மேற்கொள்ளும் பிரகடனத்தைச் செய்யுமாறு தொடர்ச்சியாகச் சிபாரிசு செய்தும் வலியுறுத்தியும் வருகின்றேன். விரைவில் இது செயலுருப்பெறும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. நிர்வாக மொழியாகத் தமிழ் மொழி முழு இலங்கையிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரச நிறுவனம் ஒன்றுடன் தமது

கடமைகளை நிறைவேற்றுதற் பொருட்டோ தேவைகளைப் பூர்த்திசெய்தற் பொருட்டோ ஒருவர் தாம் விரும்பிய மொழியில் தொடர்பு கொள்ளும் அதிகாரம், உரிமை உள்ளது. எனவே தமிழ் மொழி பேசுபவர்கள், தாம் தொடர்பு கொள்வதற்குத் தயக்கமின்றித் தமிழைப் பயன்படுத்தலாம்.

எனினும் எம்முன் உள்ள முக்கிய பிரச்சினை, தமிழைப் பயன்படுத்துவதில் நாம் அக்கறை யின்றி இருப்பதாகும். அரச நிறுவனங்களில் தமிழ் மொழிக்குப் பாரபட்சங் காட்டப்படும் சந்தர்ப்பங்களில் எமக்கு அறியத் தருமாறு எத்தனையோ வழிகளில் நான் வேண்டுகோள் விடுத்தும் போதிய முறைப் பாடுகள் வந்து சேர்வதில்லை. எல்லா நிறுவனங்களுக்கும் நாம் இரகசியப் பொலிசாரை அனுப்பித் தமிழ் மொழி பயன்படுத்தப்படுகிறதா என்று ஆராய்ந்து பார்த்தல் சாத்தியமா? எனவே அன்றாடம் எதிர்கொள் ளும் பிரச்சினைகளை அவற்றை அனுபவிப்பவர்கள் தான் எமக்கு அறியத் தர வேண்டும். எம்மில் பலர், ''இது குறித்து முறைப்பாடு செய்து என்ன நடக்கப்போகிறது?'' என்ற அலட்சியப் போக்குடன் எந்த முறைப்பாட்டையும் தெரிவிப்பதில்லை. அல்லது தெரிவிப்பதில் நேரத்தைச் செலவிட விரும்புவதில்லை.

எனவே எம்முள் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும். நாம் எமது மொழிக்குச் சம அந்தஸ்தைப் பெற வேண்டுமென்றால், அதற்குரிய நடவடிக்கைகளை நாங்கள் தான் எடுக்க வேண்டும். இதன் மூலமே அடுத்த நூற்றாண்டிலாவது, தமிழ் மொழியைத் தக்க முறையில் பயன்படுத்துவதிலும் அதன் மூலம் நாம் பயன் பெறுவதிலும் வெற்றி காண முடியும்.

## தொடர்புசாதனத்துறை

***திரு.கே.சீ .லோகேஸ்வரன்,***

***செயலாளர்,***

***தபால், தொலைத் தொடர்பு, தொடர்பு சாதன அமைச்சு.***

அன்றைய காலங்களில் தமிழ் மொழியினை இலக்கியம், சமயம், மற்றும் கலைகள் சம்பந்தப் பட்டமட்டில் தான் பிரயோகித்தார்கள். அக்காலத்திலே பண்டிதத்தமிழ், பாமரத்தமிழ் என்ற அடிப்படை யில் விவாதங்கள் நடைபெற்றதை நாம் அறிவோம். தமிழ் போதனா மொழியாக வளர்ந்த காலத்தில் விஞ்ஞானம் மற்றும் அறிவியல் சார்ந்த பொருட்களில் தமிழ் வழங்கப்பட்டது. மொழி பெயர்ப்பு ஆற்றல்கள் வளரத் தொடங்கின. பிறமொழிகளுட் குறிப்பாக ஐரோப்பிய மொழிச் சொற்கள் தாராளமாகப் பிரயோகிக்கப்பட்டன. சமுதாய மாற்றங்கள் மிக விரைவாக முன்னேறுகின்ற இக்கால கட்டத்தை அறிவியல் சார் சமுதாயம் Knowledge Based Society என்று கூறுவதை நாம் கேட்கின்றோம். இவ்வறிவு சார் சமுதாயத்தினை ஓட்டும் இயந்திரமாக அமைகிறது தொடர்பு சாதனங்கள். பண்டிதத்தமிழ், இலக்கியத்தமிழ், பேச்சுத்தமிழ் என்று பேசிய காலம் போன்று தொடர்பு சாதனங்களின் செல்வாக்கினால் தொடர்பு சாதனத் தமிழ் என்று சிந்திக்கும் நிலை உருவாகியுள்ளது. பத்திரிகைத்தமிழ் என்ற நிலைக்கு சார்பாய் வானொலி, தொலைக்காட்சி போன்ற சாதனங்கள் தமிழ் மொழியைத் தொடர்பாடலுக்குப் பயன்படுத்துகின்றன. கருத்துப் பரிவர்த்தனைச் சாதனமாக மொழி பயன்படுத்தப்படுகின்றது. மக்கள் தகவல் தொடர்பாடலுக்கு தேவையானது இலகு தமிழ், இலகு தமிழில் பேசினால் அது இலகுவில் மக்கள் மனதில் பதிந்து விடும். பல விடயங்களைத் தமிழில் கூறும்போது கேட்போருக்கு புரிவதற்கு கஷ்டமாக உள்ளது என்பதை பலமுறை கேட்டுள்ளேன். பலர் ஆங்கிலச் சொல்லிற்கு தமிழைத் தேடி அலைவதைப் பார்த்திருக்கிறேன். தொடர்பாடலில் சொல்லுக்குச் சொல் தேடுவதிலும் பார்க்க, கருத்துக்கு விளக்கம் தேடுவது தான் பொருத்தமானது என்பது எனது கருத்து. மொழி பெயர்ப்பு என்பது கருத்தினை பெயர்ப்பதாக அமைவது தான் சிறப்பு.

இலகு தமிழை பிரயோகிக்க வேண்டும் என்று நான் கூறும் போது பாரம்பரியமாக எழுதப் பட்டோ பேசப்பட்டோ வந்த தமிழுக்கு மாறான வேறுபட்ட தமிழ் மொழியினைக் கருதவில்லை.

மாறாக கருத்துக்கள் மக்களை இலகுவில் சென்றடையக் கூடியதாக, அதே நேரம் மொழியின் கட்டுக்கோப்பு, விழுமியங்கள் குலைந்து விடாத வகையில் பிரயோகிக்கப்படும் தமிழையே குறிப்பிடு கின்றேன். தொடர்பு சாதனத்துறை என்று குறிப்பிடும் போது, அதில் மிகப் பிரதான இடத்தை வானொலி வகிக்கிறது.

வானொலி, செய்திப் பரிமாற்றத்தில் ஒரு வலிமை மிக்க கருவியாக விளங்குகிறது. இன்றும் கிராமங்களில் உள்ள மக்கள் விரும்பும் ஒரு கருவியாகவே வானொலி பயன்படுகிறது. உலகச் செய்திகள் முதல் கிராமச் செய்திகள் வரை இதில் இடம் பெறுவதால் படித்தவர்களும், பாமரர்களும் விரும்பிக் கேட்கின்றனர். அரசின் ஆதரவுடன் வானொலி செயல்படுவதால் அரசின் பிரச்சாரக் கருவியாகவும் விளங்குகின்றது. ஆகவே தான் பத்திரிகைகளுக்கு தரப்படாத முக்கியத்துவம் இன்று வானொலிக்குத் தரப்படுகின்றது.

வானொலி தமிழ் வாக்கிய அமைப்பில் ஆங்கிலச் சொற்கள் அதிகம் உள்ளன. சில ஆங்கிலச் சொற்களுக்கு மொழி பெயர்ப்புகள் கொடுக்கப்பட்டு உள்ளன. பல சொற்கள் கூட்டுச் சொற்களாக இருப்பதால் மொழி பெயர்ப்பு செய்யப்படவில்லை. நேயர்களின் கேள்விக்கான பதில்களில் பேச்சு மொழியே அதிக அளவில் இடம் பெற்றுள்ளது. ஆங்கிலச் சொல்லோடு அதற்கு இணையான தமிழ் சொல்லையும் மருத்துவர்கள் தருகிறார்கள். இதனால் புரிந்து கொள்வது எளிதாகிறது. சில சொற்கள் பேச்சு வழக்கில் இருந்தாலும் படிப்பறிவில்லாதவர்களுக்கு விளங்குவதில்லை.

வானொலியில் பேச்சு வழக்கையும் தமிழ் மொழிப் பயன்பாட்டையும் நோக்குதல் முக்கியம். கவிதை, நாடகம், போட்டி, உரையாடல், கேள்விபதில், உரைச்சித்திரம், சொற்பொழிவு, விளம்பரம், சிறுகதை, தொடர்கதை முதலியன வானொலியில் செய்திச் பரிமாற்றம் கருதி ஒலிபரப்பப்படுகின்றன. இவற்றில் கவிதை, உரை, சொற்பொழிவு போன்றவை கற்றவர்கள் மட்டுமே புரிந்து கொள்ளும் அளவில் அமைகின்றன. நாடகத்தைச் சில நேரங்களில் இரண்டு பிரிவினரும் புரிந்து கொள்ளும் வகையில் அமைத்தல் வேண்டும். ஆனால் அதற்கேற்ற மொழிநடை அமைவதில்லை. இவற்றில் எத்தகையச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதை வானொலி நிலையத்தினரே முடிவு செய்து கொள்கின் றனர். அவர்கள் அனைவரும் அனைத்து மொழித்திறன்களையும் ஒருங்கே பெற்றவர்களாக இருப்ப தில்லை. எனவே மொழி அறிஞர்கள், செய்தி பரிமாற்றத்துறை அறிஞர்கள் கொண்ட ஒரு குழுவை இதற்கென நியமித்து அவர்கள் பரிந்துரைக்கும் சொற்களைக் கொண்டு ஒலிபரப்பினால் அனைவரும் பயன்பெறுவர்.

போட்டி, விளம்பரம், உரையாடல் முதலியவற்றில் வட்டார வழக்கச் சொற்கள் இடம் பெறுகின்றன. ஆனால் பேட்டி காண்பவர் கற்றவராக இருப்பதனால் பேட்டி காணும் போது உயர் வழக்குச் சொற்களைப் பயன்படுத்தும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் வட்டார வழக்குச் சொற்கள் முழுமையாக இடம் பெறுவதில்லை. கலந்துரையாடல் நிகழ்ச்சியிலும், பெண்களுக்காகவும், தொழிலாளர்களுக்காகவும் ஒலிபரப்பப்படும் செய்திகள் கற்றவர்களுக்கே அதிகம் பயன்படும் விதத்தில் அமைந்துள்ளன. ஏனென்றால் பெரும்பாலும் பெண்களுக்காக ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சியில் பங்கு பெறுபவர்கள் மாதர் சங்கத்தில் தொடர்பு கொண்டவர்களாக இருக்கிறார்கள். 'வானொலியில் பயன்படும் மொழி வழக்கினை நிகழ்ச்சியில் பங்கு கொள்வோரின் எண்ணிக்கை, அவர்களின் பங்கு, சமுதாய நிலை, கல்வியறிவு மற்றும் நிகழ்ச்சிகளின் தன்மை இவைகளைப் பொறுத்து அறிந்து கொள்ள வாய்ப்பிருக்கிறது.

இந்திய வானொலியில் செய்தி வாசிக்கும் போது, செய்திகள் வாசிப்பது ''சரோஜ் நாராயண சாமி / இராஜாராம்'' என்ற மொழிப் பயன்பாடே அமைந்துள்ளது. செய்திகள் வாசிப்பவர் ''சரோஜ் நாராயண சாமி/ இராஜாராம்'' என்று இருப்பதே பொருத்தமானது. வாசிப்பது என்று அஃறிணையில் ஆரம்பித்து உயர் திணையில் முடிப்பது தமிழ் இலக்கண முறைக்குப் பொருத்தமாக இல்லை. ஆனால்,

இலங்கை வானொலியில் இக்குறை காணப்படவில்லை. செய்திகள் வாசிப்பவர் 'சந்திரமோகன்' என்றோ அல்லது இராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம் என்றோ ஒலிபரப்புகின்றனர்.

செய்திகள் வாசிக்கும் போது அதிகமான பிற மொழிச் சொற்கள் இடம் பெறுகின்றன. குறிப்பாக வடமொழி மற்றும் ஆங்கில மொழிச் சொற்களைச் சொல்லலாம். சான்றாக ராஷ்டிரபதி, ஜனாதிபதி, உபராஷ்டிரபதி, பிரதம மந்திரி, மேஜர், கப்ரன், கர்னல், கலெக்டர் போன்ற சொற்கள் அதிகம் வழங்கப்படுகின்றன. இதற்கு மாறாக, குடியரசுத்தலைவர், துணை குடியரசுத்தலைவர், மாவட்ட ஆட்சித்தலைவர் என்று பயன்படுத்தினால் மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும். தற்போது இது போன்ற சூழ்நிலை உருவாகி வருவதை நாம் காணலாம். மேலும், வட்டார வழக்குக் கூறுகளும், தேவையற்ற பிறமொழி கலப்பில்லாத தமிழ்ச் சொற்களும் இடம்பெறும் வகையில் வானொலியில் செய்திப்பரிமாற்றம் நிகழ்ந்தால் மக்கள் நிறைவான பயனைப் பெறுவார்கள். எனவே மொழிநடையில் வானொலிக்காகப் பல மாற்றங்களைச் செய்ய வேண்டி உள்ளது.

இவ்விதம் நான் கூறும் போது, காலத்துக்கேற்ப சூழ்நிலைக்கேற்ப எங்களை எதிர் கொள்ளும் சவால்களை எதிர்நோக்க மொழியை வளர்த்து கொள்ள வேண்டுமென்பதையே குறிப்பிடுகின்றேன். மக்கள் தகவல் தொடர்பியல் என்ற வகையிலே ஏராளமான மக்களுடன் தொடர்பு கொள்ளும் சாதனங்கள் மொழியின் கட்டுக் கோப்பினைக் கலைத்து விடக்கூடாது. இன்றைய இளைய தலைமுறை இலக்கண வழுவில்லாமல் தமிழை எழுத பேச பழக வேண்டும் என்பதே எனது விருப்பம். இந்த வகையிலே தொலைத் தொடர்பு சாதனங்கள் பெருந் தொண்டை ஆற்ற முடியும்.

மேலும் Internet தற்போது ஆங்கில மூலமாகத் தான் எமக்குக் கிடைக்கின்றது. இதனால் கவலை கொண்டுள்ளார்கள் பிரஞ்சு ஸ்பானிய ஜப்பானிய மொழியினர். இதற்கு ஒரு வழியினைக் காண மேற்கூறிய சர்வதேச மொழியினர் முயற்சி செய்கின்றார்கள். ஆனால் எம் போன்றவர்கள், அதாவது பழம்பெருமை வாய்ந்த, இலக்கியம் செறிந்த, தனிப்பட்ட கலாச்சாரத்தினையும் பேணி பாதுகாத்து வளர்க்கலாம் என்பது இப்போ UNESCOவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டு உள்ளது. நான் நினைக்கிறேன், இதுதான் தமிழ் பேசும் மக்களை எதிர் நோக்கியுள்ள மிக முக்கிய சவால். இதனை நாம் நன்குணர்ந்து செயற்பட வேண்டும்.

ஈற்றில், இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ் மொழியின் பயன்பாடு வலுவுள்ளதாக அமை வதற்குரிய வகையில் தமிழ் கல்வி முறையில் பாரிய மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது எனது எண்ணம்.

## நீதித்துறை

**திரு. க.வி. விக்னேஸ்வரன் ,**

**நீதியரசர்,**

**மேன்முறையீட்டு நீதிமன்றம்.**

1999ஆம் ஆண்டின் இறுதியில் எந்த ஒரு உலகத்தை வையத்தோர் விட்டு வைக்கிறார்களோ அந்த உலகத்தில் தமிழ் மொழியின் பயன்பாடு எத்துணையதாக இருக்கும் என்று ஆராய்வதே இந்த கட்டுரையின் குறிக்கோள். உலக சூழல் மாறுபட்டு வருவதையும், தமிழர் சூழல் மாறுபட்டு வருவதையும் கருத்திற் கொண்டே இக்கட்டுரைக் கருத்தை பரிசீலிக்க வேண்டும்.

சட்டத்துறையைப் பொறுத்தவரையில் 21ம் நூற்றாண்டில் தமிழ்மொழியின் பயன்பாடு எவ்வாறு இருக்கும், எந்த அளவுக்கு விருத்தியடையும், எத்துணைப் பயனுடையதாக இருக்கும், அதனை இன்னும்

விருத்தி அடையச் செய்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்பவற்றை இக்கட்டுரையில் ஆராய்வது பொருந்தும் எனக்கருதுகிறேன்.

செந்தமிழை நாவால் செயல்படச் செய்ய சூழல் இடங்கொடுக்காது விட்டால் தமிழில் சட்டம் பயின்றும் வரப்போவது என்ன? கொழும்பில் சட்டக்கல்லூரி, பல்கலைக்கழக சட்டபீடம் போன்றவை அமைந்துள்ளன. தமிழில் பயில்கிறோம். நாளை சட்டத்தை நீதி மன்றங்களில் தமிழில் எடுத்தியம்ப என்ன வசதிகள் செய்து தரப்பட்டு உள்ளன? தமிழும் ஒரு ஆட்சி மொழி என யாப்புச் சட்டம் கூறுகிறது. இரு தமிழர்களிடையே வழக்கொன்று ஏற்பட்டால் அதைக் கொழும்பு நீதிமன்றில் தமிழில் பேசித் தீர்த்துக் கொள்ளலாமா? இத்யாதி கேள்விகள் இளைஞர்கள் மனதில் எழுவது இயல்பே.

அரசியல் யாப்புப் பிரிவு 24 திருத்தியமைக்கப்பட்டு தற்பொழுது இலங்கை எங்கணுமே சிங்களம், தமிழ் ஆகியன நீதிமன்ற மொழிகளாக ஏற்கப்பட்டு பொதுவாக வட, கீழ் மாகாணங்களில் தமிழும் மற்றைய மாகாணங்களில் சிங்களமும் நீதிமன்ற மொழிகளாகப் பாவிக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டு உள்ளது. எந்த நீதிமன்றத்திலும் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் மன்ற நடவடிக்கை கள், கட்சிக்காரர் ஒருவர் ஆரம்பித்து நடாத்தலாம் என்று திருத்திய பிரிவு 24 (2) இல் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் கட்சிக்காரர், சட்டத்தரணி, நீதிபதி ஆகியோர் மொழிபெயர்ப்பு வசதிகள் பெற உரித்துடையவர்கள் என்று திருத்திய பிரிவு 24 (3) கூறுகிறது.

ஏதேனும் ஒரு மன்றில் ஆங்கிலம் பாவிக்க உரிய அமைச்சர் இடமளிக்கலாம், என்று திருத்திய பிரிவு 24 (4) கூறுகிறது. (குறிப்பு:-யாரேனுமொருவர் மொழி பற்றிய திருத்திய யாப்புச் சட்டத்தின் (IV)வது அத்தியாயத்தை மும்மொழிகளிலும் பிரதி பண்ணி வெளிக்கொண்டு வருவது உசிதம் என்று கருதுகிறேன்) / (மேற்படி) அரசியலமைப்புச்சட்ட ஏற்பாடுகளின்படி வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழில் நிர்வாக கருமம் ஆற்ற உரித்தளித்திருக்கும் அதேவேளையில் மற்ற மாகாணங்களில் தமிழில் கருமம் ஆற்றவோ, வடக்குக்,கிழக்கில் சிங்களத்தில் கருமம் ஆற்றவோ சனாதிபதியின் நெறிப்படுத்தலை எதிர்நோக்கவேண்டி உள்ளது. அப்பேர்பட்ட பணிப்புரை எந்தவொரு பகுதிக்கும் இதுவரை பிறப்பித் திருப்பதாக தெரியவில்லை. ஆகவே தற்பொழுது கொழும்பில் தமிழில் வழக்கு பதியலாமா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. ஆனால் 1978-79-80 ஆண்டின் 1ம் ஸ்ரீலங்கா சட்ட அறிக்கை பக்கம் 329ல் கொழும்பில் தமிழில் வழக்கு தாக்கல் செய்ய யாப்புப்பிரிவு 24(2) அதிகாரம் அளித்திருப்பதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது. அத்துடன் தமிழில் வழக்கு தாக்கல் செய்வோர் சிங்கள மொழி பெயர்ப்பினையும் கூடப்பதிய வேண்டும் என்ற கட்டுப்பாடு அவர்களுக்கு இல்லையென்றும் மேற்படி தீர்ப்பு கூறியுள்ளது.

யாப்பு பிரிவு 24 (2) வெகுவாக மாற்றமடையாமல் தற்பொழுதும் நடைமுறையில் இருந்தால் கூட பிரிவு 24 (1) மாற்றம் அடைந்து நீதிமன்றமொன்றின் வழக்குக் கோப்பும் மன்ற நடவடிக்கைகளும் அவ்வந்தப் பிரதேசத்தின் மன்ற மொழியிலேயே இருக்க வேண்டும் என்கிறது. மேலும் மன்ற மொழி அல்லாத மொழியில் வழக்குகள் கேட்கப்பட வேண்டும் எனில் அதற்கான பணிப்புரைகள் உரிய அமைச்சரால் பிறப்பிக்கப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டு உள்ளது. ஆகவே, தற்பொழுது அமைச்சரின் பணிப்புரை இல்லாது கொழும்பில் தமிழில் வழக்குகள் பதியலாமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

மேற்கண்ட யாப்பு பிரிவுகளை சுருக்கமாக எடுத்தியம்பியதன் நோக்கம் 21 ம் நூற்றாண்டில் தமிழ் மொழி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிமன்ற மொழியாக நாட்டின் திருத்திய யாப்புச் சட்டப்படி நடைமுறைப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கும் அதேவேளையில் அமைச்சர் பணிப்புரை களின் மூலம் அல்லது இனி இயற்றபட போகும் நியதிச்சட்டம் மூலம் கொழும்பு, புத்தளம், சேருவில, அம்பாறை போன்ற இடங்களில் இருமொழிகளும் மன்றமொழிகளாகப் பாவிக்கப்படும் என்று எதிர் பார்க்கவும் இடமிருக்கிறது.

அடுத்து தமிழின் பயன்பாடு சட்டத்துறையில் எந்த அளவுக்கு ஏற்புடையதாகும் என்று ஆராய்ந்தோமானால் தமிழ் மொழியைக் குறிப்பிட்ட மன்றங்களில் சிங்களத்துடன் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வெளியிலும் பயன்படுத்த எத்தனிக்கும் போது கூடிய மொழி பெயர்ப்பு வசதிகள், தமிழ்மொழிப்பாவனை போன்றவை நடைமுறையில் தேவைப்பட போகின்றன என்று எதிர்பார்க்கலாம். மும்மொழிகளிலும் சட்டத்தில் அறிவு படைத்தோருக்கு இலங்கை முழுவதும் வரவேற்பு இருக்கும் என்பதில் சந்தேகம் இருக்காது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மட்டும் பொதுவாக நீதிமன்ற மொழியாக தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டு இருப்பதால் 21ம் நூற்றாண்டில் தமிழ் மொழி மூல சட்டக்கல்லூரியும், தமிழ் மொழி மூல போதனாப்பீடமும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே உருவாகலாம் என்று கொள்ள இடமிருக்கிறது. எனவே சட்டப்படிப்புகளுக்கு கொழும்புக்கு வரவேண்டிய அவசியம் ஏற்படாது. 16வது யாப்புத் திருத்தச் சட்டப்படி தமிழில் மூல நியதிச் சட்டங்கள் ஆக்கப்பட்டு வெளிவரவேண்டி இருப்பதால் ஆங்கில பிரதிகளைப் பரிசீலிக்கும் தற்போதைய பழக்கம் அருகி வரும் என்று எதிர்பார்க்கலாம். அதாவது வெறும்மொழி பெயர்ப்பு நூல்கள் மட்டும் வெளிவராது தமிழிலேயே சிந்தித்து சட்டத்திற்கு தமிழில் வடிவம் கொடுக்கும் நூல்களை 21ம் நூற்றாண்டில் எதிர்பார்க்கலாம்.

தமிழுக்கு யாப்பு சட்டத்தில் தற்போதிருக்கும் உரித்துக்கள், சலுகைகளை நாம் மறத்தலாகாது. படிப்படியாக ஆங்கிலம் வழக்கொழிந்து போகும் என்று எண்ணுவார் பலர் உளர். ஆனால் இணைப்பு மொழி வருங்காலத்தில் சில முக்கிய நீதிமன்றங்களில் கூடிய அளவு பாவிக்கப்படலாம் என்று கொள்ளவும் இடமிருக்கிறது. உலகமொழியாக ஆங்கிலம் உருவாகியுள்ளதால் அம்மொழியை நாங்கள் வருங்காலத்தில் புறக்கணிப்பது இல்லை. ஆங்கில அறிவு சட்டத்துறையில் வெகுவாகத் தேவைப்படும். ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்து நூல்கள் வெளியிடும் அதேநேரத்தில் ஆங்கில அறிவும் போதிய அளவில் இருந்தால் தான் உலகமாற்றங்களின் மீது அக்கறை செலுத்தக்கூடியதாக இருக்கும்.

தமிழ் மொழியைப் பாதுகாத்து அதே நேரத்தில் நவீன விஞ்ஞான வளர்ச்சியையும், சட்ட வளர்ச்சியையும் பிரதிபலிக்கும் வண்ணம் இலங்கைத்தமிழர்கள் தமிழ் மொழியை 21ம் நூற்றாண்டில் பயன்படுத்துவார்கள் என்று நம்ப இடமிருக்கிறது. மொழிக்காகவும் இனத்திற்காகவும், ஆயுதம் ஏந்தத் துணிந்த தமிழ் இளைஞர்கள் தமது மொழியையும் இனத்தையும் பாதுகாக்கும் வண்ணம் 21ம் நூற்றாண்டில் நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்க இடமுண்டு. சமயோசிதத்துடன் நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கவும் இடமுண்டு. தமிழில் கருமங்களை ஆற்ற வேண்டும் என்ற துடிப்பை அவர்களிடம் எதிர்பார்க்கலாம்.

பொதுவாக 21ம் நூற்றாண்டில் தமிழ்மொழி சட்டத்துறையில் நாடளாவப் பாவிக்கப்படும் என்றும் குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பெரும்பாலாகத் தமிழ்மொழியே பாவிக்கப்படுமென்றும் இதன் காரணத்தால் சட்ட நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றன சட்ட அறிவைத் தாய் மொழியில் விருத்தி செய்ய உதவுவன என்றும், எங்கள் இனத்தின் மொழியின் தனித்துவத்தை எடுத்தியம்ப தமிழ் மொழிப்பயன்பாடு முக்கியமாகத் தென்படும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கும் அதே வேளையில் இப்பொழுதிருந்தே தமிழில் சட்ட நூல்கள் வெளிவர வேண்டும், அதுவும் கூடுமானவரை கலப்படம் குறைந்த நல்ல தமிழில் வெளிவர வேண்டும் என்றும் முதன் முதலில் இலங்கையில் சட்டவிரிவுரைகளைத் தமிழில் ஆக்கியோன் என்ற நற்பெயருக்குத் தெய்வ அருளால் இலக்காகிய இந்தக் கட்டுரை ஆசிரியன் தாழ்மையுடன் எதிர்பார்க்கிறான்.

## கல்வியல்துறை

*பேராசிரியர் சோ.சந்திரசேகரம்,*

*கல்வியல்துறை,*

*கொழும்புப் பல்கலைக்கழகம்.*

### இலங்கையின் உயர்கல்விநிலையில் தமிழ்மொழி மூலக் கல்வியியல்

மருத்துவர் மருந்துவக் கல்வியையும், வழக்கறிஞர் சட்டவியலையும் கற்றுத் தேர்வது போல பாடசாலை ஆசிரியர்களும் கல்வித்துறை நிர்வாகிகளும் (பணிப்பாளர், துணைப்பணிப்பாளர்கள், தேசிய கல்வி நிறுவன அதிகாரிகள்) கல்வியியலைப் பயின்றால் மட்டுமே அவர்கள் தொழிற் தகைமையும் பயிற்சியும் உடையவர்களாகக் கருதப்படுவர். இதனை சுட்டிக்காட்ட ஓர் அவசியம் உண்டு.

இலங்கையில் காலங்காலமாக இக் கல்வியியல் பயிற்சி பெறாதவர்களே (பட்டதாரிகள், க.பொ.த. உ/நி சித்தி பெற்றவர்களே) ஆசிரிய பதவிகளில் நியமிக்கப்பட்டனர். சில ஆண்டுகால அனுபவங்களின் பின்னரே பட்டதாரி ஆசிரியர்கள் பல்கலைக்கழகங்களிலும் உ/நி தகுதி பெற்றவர்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும் சேர்ந்து கல்வியியல் பயிற்சியைப் பெற்றனர்.

இன்று இக்கொள்கை மாற்றம் பெற்று வருகின்றது. பாடசாலைகளில் ஆசிரியர்களாக முழுமையான அந்தஸ்துடன் பணியாற்று முன்னர் அவர்கள் கல்வியியல் பயிற்சியைப் பெற வேண்டும் என்ற கொள்கையைப் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் வலியுறுத்துகின்றன.

வரலாறு, புவியியல், பொருளியல் போன்ற பல்கலைக்கழகப் பயிற்சி நெறிகளின் விபரங்களும் அவை பற்றிய தகவல்களும் இன்று பெருமளவுக்கு சமூகத்தைச் சென்றடைந்துள்ளன. ஆனால் கல்வியியல் பயிற்சி நெறியுள் அடங்கும் பாடநெறிகள் பற்றிய தகவல்கள் பற்றிய அறியாமை சமூகத்தில் காணப்படுவதை அறிகிறோம்.

இப்பயிற்சி நெறியில் ஆசிரியர் பணியாற்றுபவர்கள் உலக நாடுகளின் கல்விமுறைகள், கல்விமுறைகளின் வரலாறு, அவற்றின் பிரச்சினைகள், இன்றைய போக்குகள், புதிய கல்விச் சீர் திருத்தங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஒப்பீட்டுக்கல்வி; பிள்ளைகளைப் புரிந்து கொள்ளல், அவர்களின் வளர்ச்சிப் பருவங்கள் பற்றிய கல்வி உளவியல்; கல்வியின் நோக்கம், குறிக்கோள் மற்றும் பல்வகைக் கல்விச் சிந்தனைகள், நவீன கல்வி எண்ணக்கருக்கள் (உ+ம்: வாழ்க்கை நீடித்த கல்வி, முறைசாராக்கல்வி, 21ஆம் நூற்றாண்டுக்கான கல்வி), தத்துவஞானிகளின் கல்வி பற்றிய கருத் தோட்டங்கள் பற்றிய கல்வித்தத்துவம்; மற்றும் கற்பித்தல் முறைகள், பரீட்சித்தலும் மதிப்பீட்டு முறைகளும், கல்விமுறையைத் திட்டமிடும் வழிமுறைகள், ஆலோனை கூறல், வழிகாட்டல், கல்வி முறைகளையும் பாடசாலைகளையும் நிர்வகித்தல் போன்ற பல்வேறு பாடத்துறைகளாகக் கல்வியியல் விரிந்து செல்லுகின்றது. இவைசார்ந்த அறிவும் செயல்முறைப்பயிற்சியும் (பாடசாலையில் 10 வாரங்கள் கற்பித்தல் பயிற்சி) இப்பயிற்சி நெறிகளில் அடங்குகின்றன. கல்வியியல் ஆராய்ச்சிகள் உயர்பட்ட நெறிகளின் ஒரு முக்கிய நிபந்தனையாகும்.

ஏறத்தாழ 1960ஆம் ஆண்டுவரை பல்கலைக்கழகப் பயிற்சி நெறிகள் அனைத்தும் (கலை, விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல்) ஆங்கில மொழி மூலமே நடாத்தப்பட்டன. பல்கலைக்கழகம் கலைப்பட்டத்துக்கான தமிழ்மொழி, இலக்கிய வினாத்தாள்கள் கூட ஆங்கில மொழியிலேயே வழங்கப் பட்டன. உதாரணமாக சங்ககால இலக்கியப் பண்புகள் பற்றி ஆங்கிலத்திலேயே ஆராயப்பட்டன. 1950களில் மேலை நாடுகளில் இலங்கை அறிஞர்கள் (பேராசிரியர்கள் வித்தியானந்தன், வேலுப்பிள்ளை, கைலாசபதி, சிவத்தம்பி, பூலோகசிங்கம்) தமிழ் மொழி பற்றிச் செய்த உயர்பட்ட ஆய்வுகள் ஆங்கில

மொழிமூலமே அமைந்தன. 1960 களின் தொடக்கத்தில் கலைப்பீடப் பாடநெறிகள் தமிழ் மொழியில் கற்பிக்கப்பட்டன.

பாடசாலைக் கல்விநிலையில் நீண்ட காலமாக உயர்தரப் பாடநெறிகள் (பழைய S.S.C, H.S.C., பல்கலைக்கழப் புகுமுக வகுப்புகள்) ஆங்கில மொழிகளிலேயே நடத்தப்பட்டன. பாடசாலை சென்ற மாணவர்களில் (1930கள், 1940கள், 1950கள்) 5-10 வீதமானவர்கள் ஆங்கிலப் பாடசாலைகளில் ஆங்கில மொழியில் பயின்றனர். 'கட்டணம் செலுத்தக் கூடிய வசதிபடைத்தவர்களுக்கு உயர்தரமான, வாழ்க்கைப் பயனுள்ள ஆங்கிலக் கல்வி; வசதியற்ற பாமரர்களின் பிள்ளைகளுக்கு சுயமொழிகளில் ஆரம்பக்கல்வி'. இதுவே ஆங்கில குடியேற்ற ஆட்சியாளர்கள் உருவாக்கிய தமது நன்மை கருதிய கல்விக் கொள்கை. அரச பதவிகளுக்குத் தேவையானோரை ஆங்கிலக் கல்வி மூலம் உள்ளூரிலேயே திரட்டும் முயற்சி அவர்களுக்குச் சிக்கனமானதாக அமைந்தது. இல்லையாயின், ஆங்கிலநாட்டிலிருந்து பெரும் பொருட் செலவில் பதவியாளர்களையும் அலுவலர்களையும் கொண்டு வரவேண்டியிருந்தது.

1945 ஆம் ஆண்டின் பின்னர், பாடசாலைக் கல்வியின் சகல நிலைகளிலும் உயர்தரக் கல்வி நிலை வளர (க.பொ.த. சா/நி, உ/நி) சுயமொழிகளைப் போதனா மொழிகளாக்கும் கொள்கை கடைப் பிடிக்கப்பட்டது. இதன் விளைவாக ஆங்கில மொழி மூலம் கல்வி வழங்கிய சிறு தொகையான (10 வீதமான) பாடசாலைகள் படிப்படியாக சுயமொழிகளைப் போதனா மொழிகளாக்க வேண்டியதாயிற்று. இன்றும் ஆங்கில மொழிப் பண்பாட்டுடன் ஆங்கிலத்தை நிர்வாக மற்றும் நாளாந்த மொழியாகச் சகல விடயங்களிலும் கையாளுகின்ற பாடசாலைகளும், சுயமொழிகளிலேயே சகல பாடங்களையும் கற்பித்து வருவது குறிப்பிடத்தக்கது. இப்போதனாமொழி மாற்றம் பாடசாலை மட்டத்தில் 1953 - 1959 வரை படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

உயர்கல்வி நிலையில் சுயமொழிகள் துரிதமாகப் பயன்படுத்தப்பட உதவிய காரணிகளை சுருக்கமாகத் தொகுத்து நோக்கலாம்.

- உயர்கல்வி வாய்ப்புகளை விரிவான முறையில் பின்தங்கிய, கிராமப்புற மாணவர்களைச் சென்றடையச் செய்ய ஆங்கில மொழி மூலக் கல்வி பொருத்தமற்றுக் காணப்பட்டது.
- 'ஆங்கில மொழியில் மட்டுமே உயர்கல்வி' என்ற கொள்கை ஏராளமானவர்களின் உயர்கல்வி வாய்ப்புகளைத் தடை செய்திருந்தது.
- பாடசாலைக் கல்வியில் சுயமொழிகளின் பயன்பாடு உறுதி பெற்றதைத் தொடர்ந்து உயர்கல்வி நிலையில், குறிப்பாக சமூக அறிவியல் மற்றும் கல்வியியல் துறைகளில் சுயமொழிகளில் பயிற்சி நெறிகளை நடத்த வேண்டியதாயிற்று.
- தாய்மொழிக் கல்விக்கு சார்பானதாகவே சகல உளவியல், கல்வித் தத்துவ நியாயங்களும் அமைந்திருந்தது.

இன்றைய நிலையை சுருக்கமாகக் கூறினால் 21ஆம் நூற்றாண்டிலும் கல்வியியல் பயிற்சி நெறிகளைத் தமிழ் மொழியில்தான் தொடர்ந்து நடாத்தியாக வேண்டும். ஆயினும் இப்பயிற்சி நெறிகளை மேலும் கூடிய வினைத்திறனுடனும் உயர்ந்த தராதரங்களுடன் நடாத்த சில முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.


இம்முக்கிய நடவடிக்கைகளைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

- சிங்கள மொழி மூலம் நடாத்தப்படும் பல கல்வியியல் (உயர் பட்ட) பயிற்சி நெறிகள் தமிழ் மொழியிலும் நடாத்தப்படல் வேண்டும். அவையாவன: கல்வி முதுமானி (M.Ed), பரீட்சித்தல், கல்வி மதிப்பீடு, ஆலோசனை கூறல் தொடர்பான பயிற்சி நெறிகள் (courses in testing, educational assessment, councelling). கல்விமாணி (B.Ed)

பயிற்சி நெறியானது இடைநிறுத்தப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போது தமிழ் மொழியில் அதனைத் தொடங்கவில்லை. சிங்கள மொழி மூலமே நடாத்தப்படுகின்றது. பல்கலைக்கழகங்கள் இவற்றைத் தமிழில் நடாத்த முயற்சிக்க வேண்டும்.

- தேசிய கல்வி நிறுவனத்தில் இப்பயிற்சி நெறி விஞ்ஞானம், கணிதம், ஆரம்பக்கல்வி போன்ற ஒன்பது துறைகளில் நடாத்தப்படுகின்றன. தமிழ் மொழியில் ஓரிரு பயிற்சி நெறிகளை மட்டும் நடாத்தும் நிலை நீங்க வேண்டும்.
- தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் மேற்கூறிய உயர்பட்டப்பயிற்சி நெறிகள் அனைத்தும் சிங்கள மொழியில் மட்டுமல்லாது தமிழ் மொழியிலும் நடாத்தப்படல் வேண்டும்.
- இப்பயிற்சி நெறிகளை நடாத்துவதற்கான விரிவுரையாளர்களின் உயர்கல்வித் தகுதிகளையும் பயிற்சியையும் மேம்படுத்தும் முயற்சிகள் தேவை. வெளிநாட்டுப் பயிற்சி நெறிகளைப் பயிலும் வாய்ப்பு அவர்களுக்கும் போதிய அளவு வழங்கப் படல் வேண்டும்.
- தமிழில் கல்வியியல் பாடநூல்களையும் ஆய்வு நூல்களையும் எழுதுவோருக்கு விசேட ஊக்குவிப்புகள் வழங்கப்படல் வேண்டும்.
- கல்வியியல் துறைக்கென புதிய கலைச் சொல் அகராதியொன்று தொகுக்கப்படல் வேண்டும்.
- தமிழ் மொழியில் தேர்ச்சியுள்ள கல்வியியல் வல்லுனர்களின் விபரங்களடங்கிய பேரேடு ஒன்றும் கல்வியியல் நூல்கள், ஆய்வுகள் அடங்கிய விளக்கமான நூற்பட்டியல் ஒன்றும் (bibliography) தொகுக்கப்படல் வேண்டும்.
- தமிழில் கல்வியியல் துறை சார்ந்த உயர் பயிற்சி நெறிகள் (M.Ed, M.Phil, Ph.D) யாவும் வட இலங்கையில் யாழ். பல்கலைக்கழகத்திலும், தெற்கே கொழும்புப் பல்கலைக் கழகத்திலும் வலுவான முறையில் ஏற்படுத்தப்படல் வேண்டும்.
- பல்கலைக்கழகம் சார்ந்த, சாராத தமிழ் மொழி மூலக் கல்வியாளர்கள் (தேசிய கல்வி நிறுவகம், கல்வியியல் கல்லூரி, கல்வி அமைச்சு/ திணைக்களம்..) அனைவரையும் கொண்ட கல்வியியல் ஆய்வரங்கம்/ ஆய்வு வட்டம் உருவாக்கப்பட்டுக் கல்வியியல் ஆய்வுகளை ஊக்குவிக்கப்படல் வேண்டும். ஆய்வுச் சஞ்சிகைகள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் என்பன தொடங்கப்படல் வேண்டும்.

பன்னெறி ஆய்வு முறைமையை (inter- disciplinary research) வளர்க்க ஏனைய துறை சார்ந்த சிறப்பறிஞரின் (வரலாறு, பொருளியல், சமூகவியல், தமிழ், புவியியல்....) துணையும் ஒத்துழைப்பும் நாடப்படல் வேண்டும்.




# சங்க நிகழ்வுகள்

## - ஒரு மீள்பார்வை

# நாடக விழா - 1998

**கலாநிதி துரை மனோகரன், விரிவுரையாளர், தமிழ்த்துறை.**

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் மாணவர் மத்தியில் நடைபெற்று வரும் தமிழ் நாடகப் போட்டிகள், பல்கலைக்கழகச் சமூகத்தவரிடையே நாடகம் பற்றிய பிரக்ஞையையும், ஆர்வத்தினையும் ஏற்படுத்திவருகின்றன. இவ்வகையில், 1998ல் இடம் பெற்ற நாடகப் போட்டியும் குறிப்பிட்டுக் கூறத்தக்க அளவுக்குத் தரம் வாய்ந்ததாக அமைந்திருந்தது.

இந்நாடகப் போட்டியில் இடம் பெற்ற நாடகம் ஒவ்வொன்றும் ஒவ்வோர் அனுபவத்தை ஏற்படுத்தியது. இவற்றின் மூலம் புதிய பிரச்சினைகளும் புதிய அணுகுமுறைகளும் மேடையேற்றம் கண்டன. பல்கலைக்கழக மேடை மீண்டும் ஒரு முறை, அல்லது அதைவிட மேலாகத் தனது ஆரோக் கியத்தை வெளிப்புடுத்தியது. ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சியின் ஒரு வெட்டுமுகத் தோற்றம் போல நாடகங்களின் போக்கு அமைந்திருந்தது.

இந்நாடகப் போட்டியில் ஆறு நாடகங்கள் இடம் பெற்றிருந்தன. எஸ்.சரத்ஜயனின் 'வழிதர மறுக்கும் வட்டங்களும் பரிதிப்பாதைப் பயணங்களும்', சி.எம்.சி. மன்சூரின் 'இதுவரை இவர்கள்', மௌ.சித்தார்த்தனின் 'அந்நிய ஸ்வரங்கள்', ஸ்ரீதரனின் 'கூடாரம்', ருஷாந்தனின் 'பொதி', தனேஸ் குமரனின் 'சிலுவைவாசிகள்' ஆகிய அவ் ஆறு நாடகங்களும் தம்மளவில் தனித்துவம் கொண்டவையாக விளங்கின.

எமது பல்கலைக்கழக நாடக இயக்குநர்கள் அல்லது தயாரிப்பாளர்களிடம் சிலவேளைகளிற் காணப்படும் ஒரு குறை, நாடகம் தொடங்குவதற்கு முன்னர், தமது நாடகங்கள் பற்றிய ஒரு முன்னுரை யைப் பார்வையாளருக்குக் கூற விரும்புவதாகும். நாடகம் தானாகவே தான் சொல்லப்போகும் விஷயங்களை உணர்த்தவேண்டும். நாடகத்துக்கான முன்னுரையைக் கேட்டுத்தான் நாடகத்தைப் புரிந்துகொள்ளவேண்டும் என்ற தேவை பார்வையாளருக்கு இருப்பதில்லை. அவ்வாறு, பார்வை யாளர்களை மதிப்பிடுவது தவறாகும்.

1998ம் ஆண்டுக்கான தமிழ் நாடகப் போட்டியில் முதலில் மேடையேற்றப்பட்ட 'வழிதர மறுக்கும் வட்டங்களும் பரிதிப்பாதைப் பயணங்களும்' என்ற நாடகம், திறமை வாய்ந்த சில நடிகர்களைக் கொண்டு நிகழ்த்தப்பட்டது. ஆயினும், நாடகப் பிரதியிற் போதிய அக்கறை செலுத்தப்படவில்லை. இயக்குநரும் நாடகத்தைத் தெளிவான முறையில் பார்வையாளர் முன் அளிக்கத் தவறிவிட்டார். அந்நாடகம் உண்மையில் ஒரு குறைப்பிரசவமாகவே அமைந்து விட்டது.

'இதுவரை இவர்கள்' என்னும் நாடகம் தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தும் ஒரு தரமான நாடகமாக விளங்கியது. இத்தகைய ஒரு பிரச்சினை இதுவரையில் பேராதனையில் மேடையேற

வில்லை என்று நினைக்கிறேன். தரமான நாடகப் பிரதியை அது கொண்டிருந்தது. நாடகம் தொடங்கும் போதும், முடியும்போதும் பாங்கு ஒலியும், வேதபாராயண ஒலியும் பயன்படுத்தப்பட்டமை, நாடகத்தின் தொனியை இனங்காட்டப் பெரிதும் உதவியது. நாடகத்துக்கும் அது பொலிவை ஊட்டியது. நாடகத்தைப் பொறுத்தவரை, இயக்குநரின் திறமை குறிப்பிடத்தக்கது. இந்நாடகத்திற் பங்கேற்ற அனைவரும் போட்டிபோட்டுக் கொண்டு நடித்தனர். ஒரு சில குறைகள் இருந்தபோதிலும், ஒரு தரமான முன்னோடி முயற்சியாக இந்நாடகம் அமைந்தமை பாராட்டத்தக்கது.

இனப்பிரச்சினையை ஆர்ப்பாட்டமில்லாது, மென்மையான முறையில், ஒரு புதிய அணுகு முறையிற் கையாண்ட நாடகமாக 'அந்நிய ஸ்வரங்கள்' விளங்கியது. தரமான பிரதியைக் கொண்டதாக வும், புதிய உத்திமுறையைப் பயன்படுத்தியதாகவும் அது அமைந்திருந்தது. பேராதனை மேடைக்கு இது ஒரு புதிய அனுபவமாகவும் இருந்தது. நாடகத்தைத் ''தொய்ய'' விடாமல் இயக்கிய இயக்குநரின் திறமை பாராட்டத்தக்கது. நாடகத்திற் பங்கேற்ற பெரும்பாலானோர் தம் பாத்திரங்களை உணர்ந்து நடித்தனர். மென்மையான பின்னணி இசை நாடகத்துக்கு மேலும் மெருகேற்றியது.


''கூடாரம்'' என்ற நாடகம் ஒரு வித்தியாசமான கோணத்தில் அமைந்திருந்தது. பிரச்சினை களைச் சிக்கலாக்கிவிட்டு, அவிழ்க்கமுடியாமற் கஷ்டப்படும் நிலை, இந்நாடகத்திற் குறியீடாகக் காட்டப்பட்டது. பல விஷயங்கள் உதிரிகளாக இந்நாடகத்திற் சொல்லப்பட்டமையால், அது தனது கட்டுக்கோப்பை இழந்து காணப்பட்டது. நாடக ஆசிரியரும், நெறியாளரும் இதனைக் கவனத்திற் கொள்ளத் தவறிவிட்டனர். நாடகத்தின் இறுதிப் பகுதி பிரசாரமயமாக அமைந்து விட்டது. இந்நாடகத்தின் பலமாக அமைந்தவை, சில நடிக, நடிகையரின் நடிப்பும், பின்னணி இசையுமாகும்.

'பொதி' என்னும் நாடகமும் பேராதனை மேடைக்குப் பொலிவும், பெருமையும் சேர்க்கும் வித்தியாசமான முயற்சியாக அமைந்திருந்தது. உள்ளுறைப் பொருளையும், சமூக விமர்சனத்தையும் கலந்து நாடகம் விளங்கியது. நாடகப் பிரதி, நடிப்பு, நெறியாள்கை ஆகியவை மிகத் தரமாக அமைந்திருந் தன. இந்நாடகத்திற் பங்கேற்றவர்களிற் பெரும்பாலானோர், தாம் தேர்ந்த கலைஞர்கள் என்பதை நிரூபித்துக் கொண்டனர். இந்நாடகத்திற் சவமாகப் பாத்திரமேற்றவர், யோகாசனத்திற் கூறப்படும் சாந்தி ஆசனம், அல்லது சவ ஆசனத்தை நன்கு பயின்றிருப்பார் போலும். ஆடாமல் அசையாமல் தமது பாத்திரத்தை அவர் அருமையாகச் செய்தார். நாடகத்தின் கட்டுக்கோப்பும், அது உணர்த்த விரும்பிய செய்தியும் சிறப்பாக இருந்தன.

'சிலுவை வாசிகள்' என்ற நாடகம் ஒருவகையில் நாடகத்துக்குரிய அம்சங்களையும், இன்னொரு வகையில் மேடைப் பேச்சுக்குரிய அம்சங்களையும் கொண்டதாக விளங்கியது. நாடகம் என்பது மேடைப் பேச்சல்ல. அது நிகழ்த்திக் காட்டப்பட வேண்டும். நாடகத்தின் இறுதியில் பிரசாரம் சற்று அதிகமாக அமைந்து விட்டது. இந்நாடகத்தில் எலும்புக்கூடாகப் பாத்திரமேற்றவர், அதனைத் தத்ரூபமாகச் செய்தார். நாடக இயக்கத்தில் நெறியாளர் போதிய கவனம் செலுத்தியிருக்கலாம்.

இந்நாடகப் போட்டியில் சில நாடகங்கள் தரமும், கனதியும் கொண்டவையாக விளங்கின; சில ''இன்னும் திருந்த இடமுண்டு'' என்ற பாங்கில் அமைந்திருந்தன. எவ்வாறாயினும், அலுத்துச்சலித்த விடயங்களையே திரும்பத் திரும்ப மேடையேற்றாமல், நாடகம் தொடர்பான தமது புதிய உணர்வுகளை மாணவர்கள் வெளிக்காட்டியுள்ளமை, நாடகப் போட்டியின் ஆரோக்கியமான அம்சமாகும். இம்முறை குறிப்பிடத்தக்க பரிசோதனை முயற்சிகள் நடைபெற்றுள்ளன. அதேவேளை, அவை சாதனைகளாகவும், முன்னோடி முயற்சிகளாகவும் அமைந்துள்ளன என்பது, நாடக ஆர்வலருக்கு நிறைவு தரும் விடயங்களாகும்.

# நாடக விழா '98



**எஸ்.சரத்ஜெயனின்**

## "வழிதரமறுக்கும் வட்டங்களும் பரிதிப்பாதைப் பயணங்களும்"

| | | |
|---|---|---|
| பாத்திரங்கள் | : | ம.அமுதராஜ், க.யனார்த்தன், ப.குகனேசன், த.முரளிதரன், கோ.நந்தகுமார், க.பார்த்தீபன், செ.ருக்ஷகான், ந.குமுதினி, இ.ஹாகினி, பு.சுதாகினி, க.சுரேன், சோ.சரத்ஜயன், இ.பார்த்தீபன், ந.மோகாதேவன், ச.குகனேசன், ற.வைகுந்தன், ஜெ.சிவானந்தன். |
| மேடை அமைப்பு | : | தி.கலைச்செல்வன், செ.ராஜீவன், அ.முகுந்தன். |
| ஒளி அமைப்பு | : | வே.மகிந்தன், பி.விசாகன், ச.கிருபானந்தன். |
| இசை | : | ஜெ.ஜெயக்குமார், தி.ராஜ்குமார். |
| தயாரிப்பு | : | ச.மதிருபன் |

✱ 3ம் இடம் பெற்ற நாடகம் ✱

# நாடக விழா '98




### சி.எம்.எம்.மன்சூரின்

## "இதுவரை இவர்கள்"

| | | |
|---|---|---|
| பாத்திரங்கள் | : | ச.மயூரதாஸ், ஏ.எச்.லரீனா, வி.சந்திரசேகரன், ஏ.ஆர்.சர்மிளா, எஸ்.யசீறா, த.ஜெயக்குமார், ப.நிரஞ்சினி, தையூப், எஸ்.எல்.கரீம், ஏச.எம்.எம்.ரைகான், எம்.எப்.எம்.றிஸ்வான், ஏ.சுபைதீன், க.ராதா ரமணன், ஏ.எல்.மிஸ்கீன். |
| மேடையமைப்பு | : | எஸ்.எம்.ஹலீம், எம்.எம்.பகாம், ஏ.சி.அம்ஹர், எம்.எம்,எல், றசாக் |
| இசையமைப்பு | : | சி.துஷ்யந்தி. |
| ஒளியமைப்பு | : | ஏ.எம்.சியாத், எஸ்.எம்.அமீர் |
| ஒப்பனை | : | எம்.ஏ.எம்.அக்ரம், எஸ்.கண்ணன் |
| நாடக ஆசிரியர், நெறியாள்கை | : | சி.எம்.எம்.மன்சூர் |

# நாடக விழா '98



### மௌ.சித்தார்த்தனின்

## "அன்னிய ஸ்வரங்கள்"

நடிப்பு : மௌ.சித்தார்த்தன், எஸ்.டிவானி, ஜி.எஸ்.எஸ்.பெர்னாண்டோ, இ.குமுதினி, ஹட்ஸ் பேபிசிங்கம், க.ஜெயரத்தினா, எஸ்.ஸ்ரீசங்கர், கி.பத்மநாதன், ஜொ.மோகன்ராஜ், செ.ஜெகதீஸ்வரி

இசையமைப்பு : கோ.கிருஷாந்தி, க.ஆனந்தகுமாரசர்மா.

பின்னணிப் பாடல் : இ.சுகன்யா, ச.சபர்மதி, ரெ.சர்மிலி

ஒளியமைப்பு : சுதர்சன் பீரிஸ், எஸ்.உதயசீலன், ஏ.இ.நிக்ஸன் சொய்சா, எஸ்.சிங்காரவேல்

ஒப்பனை : சி.பத்மினி, து.விஜயலக்ஷ்மி.

பிரதியாக்கம் : ஜி.எஸ்.எஸ்.பெர்னாண்டோ

நெறியாள்கை : மௌ.சித்தார்த்தன்

★ 1ம் இடம் பெற்ற நாடகம் ★

# நாடக விழா '98



## எஸ்.ஸ்ரீதரனின்

## "கூடாரம்"

| | | |
|---|---|---|
| நடிப்பு | : | வ.ஜெயரூபன், க.லோகப்பிரகாசம், க.விஷ்ணுகரன், சி.சிவசோதி, இ.கோகுலதாஸ், ந.சுவர்ணலதா, ச.கவிதாஞ்சலி, எஸ்.ஸ்ரீதரன். ப.ஜெயகாந், ச.ஜெகநாதன், த.சிவதர்ஷினி, எஸ்.ஜெயந்தி, எஸ்.கீர்த்திவர்மன், ஆர்.இராஜேந்திரன், ந.பாலமுரளி, பி.பாஸ்கரன் |
| பிரதியாக்கம் | : | பொ.சகாதேவன் |
| இசையமைப்பு | : | எஸ்.ஜெபராணி, ப.திலகன் |
| ஒளியமைப்பு | : | க.ஜெயநிதி |
| மேடையமைப்பு | : | இ.கோகுலதாஸ், ச.ஜெகநாதன், பி.பாஸ்பரன் |
| ஒப்பனை | : | ச.யாழினி, க.கமலா, பி.சசிகலா. |
| துணை நெறியாள்கை | : | க.லோகப்பிரகாசம், வ.ஜெயரூபன். |
| நெறியாள்கை | : | எஸ்.ஸ்ரீதரன் |

# நாடக விழா '98



### இ. ருஷாந்தனின்
## "பொதி"

| | | |
|---|---|---|
| பங்கேற்றவர்கள் | : | மாசிலாமணி தவராஜா, உமா தம்பிஜயா, பாலச்சந்திரன் குமரன், லியூறின் சந்தாம்பிள்ளை, சம்சுதீன் சித்தீக், சந்திரிகா நடராஜா, சிவபாலன் ஜீவா, பாலகிருஷ்ணன் பிரதாபன், திருச்செல்வம் இரஜிதரன், பூநாதன் முருகதாஸ், திருச்செல்வம் ஹம்லெற், கந்தசாமி இந்திராஜ், பெருமாள் ரமேஷ், யாழினி சிவச்சந்திரன். |
| வசன உதவியாளர் | : | ஜானகி பாலசுப்பிரமணியம், கல்வளைராஜன் கபிலன் |
| இசை | : | கி. ஜோர்ஜ் பாலநாதன் |
| ஒளியமைப்பு | : | மயில்வாகனம் சதீஷ்குமார், ஜெகான் குணதர்ஷன். |
| ஒப்பனை | : | விநாயகலிங்கம் துதிகரன், ஸ்ரீபன் ஜெபச்செல்வன் |
| மேடையமைப்பு | : | தங்கராஜா சசிதரன், தாரகேசன் ரொஷான் |
| பிரதியாக்கம், நெறியாள்கை | : | இராசலிங்கம் ருஷாந்தன் |

★ 2ம் இடம் பெற்ற நாடகம் ★

# நாடக விழா '98



*வெ.தனேஸ்குமரனின்*

## *''சிலுவைவாசிகள்''*

நடிகர்கள் : சு.அரவிந்தன், வே.சதீஸ்குமார், ந.இளங்கோ, ப.அனுஷலக்ஷ்மி, இ.லக்ஷினி, சே.தயாழினி, ஜெ.முகுந்தன், அ.அலங்கேஸ்வரன், ஜெ.திவாகர், ச.தயாளன், த.திருவரன், க.வேல்வேந்தன், க.காசிநாதன், சோ.ரஜனிகாந், ச.நிர்மலன், ப.சாயிநேசன், ஆர். திவாகரன்,

பாடல்கள் : ம.கிருஷாந்தன், த.பகீரதன், கு.தர்மினி, வி.மீரா,

ஓகன் ; இ.ஜனந்தன்,

தபேலா : ச.பாலமுருகன்,

ஒளியமைப்பு : அ.லொயிட்,

கதை, இயக்கம் : வெ.தனேஸ்குமரன்

# நாட்டுக் கூத்து



## "துஷ்டன் வதம்"

| | | |
|---|---|---|
| பங்குபற்றுவோர் | : | பொ.நக்கீரன், ம.அமுதராஜ், ச.கிருபால், ச.ருக்ஷகான், க.ராதாரமணன், அ.அலங்கேஸ்வரன், ச.லோகேஸ்வரன், ப.கமலா, ச.கவிதா |
| பாட்டு | : | யோ.தயாபரன், ஏ.குபேரன், ம.சதீபாலமுருகன், ம.கிருஷாந்தன், தி.விஜயரேகா, வை.மஞ்சுளா, வி.சுகர்ணா, சி.மேனகா |
| டொலக் | : | சி.பகீரதன் |
| தபேலா | : | தெ.ஸ்ரீகாந்த் |
| ஹார்மோனியம் | : | ச.ஜனந்தன் |
| ஒப்பனை | : | சி.வேணு, ம.கபேந்திரன், தோ.ஜெயச்சந்திரமௌலி, சு.சுஜந்தன், அ.தேவானந், தி.விஜயரேகா |
| ஒளியமைப்பு | : | ஐ.இராகவன், ப.விசாகன், வே.மகிந்தன் |
| பிரதியாக்கம் | : | ச.கிருபால் |
| நெறியாள்கை | : | ம.அமுதராஜ், க.நரேந்திரநாதன், ச.கிருபால் |

# 'குறிஞ்சித் தமிழமுதம்' - ஓர் விமர்சனம்

*T.V.R. சங்கர், கொழும்பு.*

நேரம் மாலை ஐந்து மணியை கடந்து விட்டது என்பதால் அவசர அவசரமாக சரஸ்வதி மண்டபத்துக்குள் நுழைந்து பார்த்தால் தமிழ் சங்கத்தின் 'குறிஞ்சித்தமிழமுதம் ஆரம்பமாகியிருக்க வில்லை. பார்வையாளர்களும் மிகக் குறைவாகவே காணப்பட்டனர். பேராதனை பல்ககைல்கழகத் தமிழ் சங்கத்திற்கு பத்திரிகையாளரிடம் என்ன கோபமோ! இல்லை பத்திரிகையாளர்கட்கு தமிழ்ச் சங்கத்திடம் கோபமோ தெரியவில்லை. உத்தியோகபூர்வமாகப் பத்திரிகையாளர் எவரும் சமூகமளித்திருக்கவில்லை. மாலை நான்கு மணிக்கு ஆரம்பமாக வேண்டிய நிகழ்வுகள் காலம் தாழ்த்தி தமிழ்தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகியது.

கீழைத்தேய இசை நிகழ்வு (பல்லியம்) வழமைபோல் முதலாவது கலை நிகழ்வாக அரங்கேறி யது. ஒலியமைப்பும் ஒலிக்கோர்வையும் (Mixing) நிகழ்வின் ஆரம்பத்தில் ஒத்துழைக்க மறுத்தாலும் பின்னர் சீராக்கப்பட்டிருந்தன. ''தக்கிடததும்'' போன்ற ஒரு சில பாடல்களின் 'இசை வடிவங்களை நன்றாகவும் இருந்தன.

வழமையான பேராதனை நிகழ்ச்சி நிரலில் இருந்து சிறிது வித்தியாசமானதாக இம்முறை ஐயாவின் (வீரமணி ஐயர்) 'தக்கன் யாகம்' நாட்டிய நாடகம் ஒன்றும் மேடையேற்றப்பட்டது வரவேற்கப் பட வேண்டிய விடயம். தக்கன், தக்கனின் மகள், சுடலை பொடி பூசிய தபசியாக வேடமேற்றவர்கள் முகபாவங்களை வெளிப்படுத்தி நன்றாகவே செய்திருந்தார்கள். குபேரனின் குரல்வளம் மேலும் மெருகூட்டியது. புதிய முயற்சி என்ற வகையில் நட்டுவாங்கம் அமைத்தவர் பாராட்டப்பட வேண்டியவர். ஆனாலும் தயாரிப்பில் இன்னும் சற்று கவனம் செலுத்தலாம். தக்கன் யாகத்தில் சிவனின் உருத்திர தாண்டவம் தான் காணுவதற்கு அரிய முக்கிய நிகழ்வு. அந்த உக்கிர நடனத்தை எதிர்பார்த்தவர்களை தயாரிப்பாளர் ஏமாற்றிவிட்டார். அழுத்தமாகவும் ஆழமாகவும் சாட்சிகளை அமைப்பதன் மூலம் சிவரதி மேலும் பல தரமான நாட்டிய நாடகங்களை வழங்குவார் என எதிர்பார்ப்போம்.

'துஷ்டன் வதம்' நாட்டுக்கூத்து சுருக்கமாக வழங்குவதற்காக கதையில் சில மாற்றங்களுடன் வடமோடி முறையைத் தழுவி மேடையேற்றப்பட்டுள்ளது. எனினும் வழக்கமான வடமோடிப் பாணிக் குரிய துடிப்பும் விறுவிறுப்பும் காணாமல் போயிருந்தது. கூத்து ஆடியவர்கள் ஒரு இயந்திரத் தன்மையைத் தவிர்த்து, இயல்புத் தன்மை முக்கியமாகக் கூத்துக்குரிய நளினம், கூத்துக்கேயுரிய தலையசைப்புக்கள் என்பவற்றின் ஊடாக கூத்தின் தரத்தை உயர்த்துவதற்கு மேலும் முயற்சி செய்யலாம். வழமையாகப் பேராதனை கூத்துக் காட்சிகளில் அமோக வரவேற்பைப் பெறும் யுத்தக் காட்சிகளும் சோபிக்கவில்லை. பயிற்சி, நெறியாள்கை என்பவற்றில் மேலும் கவனம் செலுத்தியிருக்கலாம். 92ல் மீண்டும் ஆரம்பித்த

நாட்டுக்கூத்தின் தரம் மிகவும் உயர்வாக இருந்தது. அதனைத் தொடர்ந்து பேணுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதே எனது அவா.

அடுத்து மேடையேறிய 'அகங்களும் முகங்களும்' மேடை நாடகம் போராதனைப் பல்கலைக் கழகத்தின் நாடகத்தரத்தையே கேள்விக் குறியாக்கிவிட்டது. காத்திரமான கருவைக் கொண்ட நாடகம் இயல்பற்ற வலிந்து நகர்த்தப்பட்ட காட்சிகள், பயிற்சியின்மை, அழுத்தம் குறைந்த காட்சியமைப்புக்கள், நெறிப்படுத்தலில் உள்ள பலவீனம், ஒலியமைப்பின் சீரின்மை என்று இன்னோரென்ன காரணங்களால் கனமிழந்து காணப்பட்டது.

கடைசியாக மேடையேறிய நகைச்சுவை நாடகம் தனி மனித - லொட்ஜ் முதலாளியின் - நடிப்பாகவே மேடையேற்றப்பட்டது எனலாம். லொட்ஜ் முதலாளியாக நடித்தவரிற்கு உடல் மொழி நன்றாகவே கைகொடுக்கிறது. அவரின் உடல் மொழி சிரிக்க வைக்கிறது. வெறும் இரட்டை அர்த்தங்களில் மட்டும் தங்கியிருக்காது இடம், பொருள், காலம் சார்பான (நகைச்) சுவையான கருத்துக்களால் சிரிப்பூட்டுவதற்கும் முயன்றிருக்கலாம். ஒரு படி மேலே போய் காட்சிப் படிமங்கள் கூட நகைச்சுவையை வெளிப்படுத்தும் ஊடகமாக பயன்படுத்தப்படலாம். மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு பழ. சிறியும் களு. நந்தனும் தரமான நாடகங்கள் தரமுடியும்.

நாங்கள் எந்தளவு காலத்திற்கு செய்ததையே திரும்பத் திரும்ப செய்து கொண்டு இருக்கப் போகிறோம்?? கீழைத்தேய இசை, பரத நாட்டியம், நாட்டுக்கூத்து, நாடகம், இந்த வரிசை தான் கடந்த எட்டு ஆண்டுகளாக தொடர்கிறது. நாங்கள் எப்போது பரிசோதனை முயற்சிகளில் ஈடுபடப் போகின்றோம்? புதுமைகளைப் புகுத்தப்போகின்றோம். எமது பாரம்பரிய கலைகளை, கலாச்சாரத்தை வளப்படுத்தப்போகின்றோம்?? அந்த வகையில் நாட்டிய நாடகம் சற்று ஆறுதல் தருகிறது.

மேலே கூறிய குறைகளை தவிர்த்துப் பார்த்தால் பல இடர்கட்கு மத்தியிலும் சிரமப்பட்டு ஒரு கலை நிகழ்வை பேராதனையில் இருந்து கொழும்பில் மேடையேற்றியதற்கு தமிழ்ச்சங்கம் பெருமைப் பட்டுக் கொள்ளலாம்.

பல்கலைக்கழகங்களிலே ஒரு கலை நிகழ்வை கற்றலின் மத்தியில் தயாரிப்பதில் பல சிரமங்கள் இருக்கின்றன. குறிப்பாகப் பல கலைஞர்கள் பங்குபற்றுகின்ற கலை நிகழ்வை ஒருங்கிணைத்து, ஒத்திகை பார்த்து, மேடையேற்றுவது என்பது பகீரதப் பிரயத்தனமே. எவ்வாறு இருப்பினும் பல்கலைக் கழகத்தின் (குறிப்பாக பேராதனைப் பல்கலைக்கழக) கலை நிகழ்வு என்பதால் பார்வையாளர்களிடமும் எதிர்பார்ப்பு இருக்கிறது என்பதையும் நாம் மனங் கொள்ள வேண்டும்.

---

எதிர்காலத்தில் எமது நிகழ்வுகள் மேலும் சிறப்புற வேண்டும் என்ற நோக்கில், எமக்குக் கிடைத்தவற்றில் மேற்கண்ட ஆக்கபூர்வமான விமர்சனம் பிரசுரமாகிறது.

- ஆசிரியர்.

# சங்கத்தின் பாதையிலே....

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தில் கடந்த நான்கு ஆண்டுகாலமாக அதன் செயற்பாடுகளில் பங்கேற்றவன் என்ற வகையில் எனது அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். இவை எதிர்காலத்தில் சங்கத்தின் சீரிய நடவடிக்கைகளிற்கு பேருதவியாக அமையும் என எண்ணுகிறேன்.

ஏனைய பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களின் அமைப்புக்களுடன் ஒப்பிடும்போது எமது பல்கலைக்கழக மாணவர்கள் உண்மையில் சங்கச் செயற்பாட்டிற்கு பல்வேறு வழிகளில் உறுதுணையாக இருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தரும் ஒரு விடயமாகும். மாணவர்கள் உயிர்த்துடிப்புடன், தமது இல்லங்களில் நடைபெறும் வைபவங்களைப் போல தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகளில் பங்கேற்பது பாராப்பட வேண்டிய ஒன்றாகும்.

தமிழ்ச்சங்கம் ஆண்டுதோறும் நடாத்தும் நிகழ்ச்சிகள் மூலம் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் தமது திறமைகளை வளர்த்துக் கொள்கின்றனர். தமிழ்ச் சங்கம் பல்வேறு தடைகளைத் தாண்டிச் சிறப்புடன் செயற்பட்டு வருவதற்கு தமிழ்ச் சங்கம் மீது உண்மையான அக்கறையுடைய மாணவர்களின் ஒத்துழைப்பே காரணமாக அமைகின்றது.

எமது பல்கலைக் கழகத் தமிழ்பேசும் விரிவுரையாளர்கள் சங்க நடவடிக்கைகளிற்கு தொடர்ந்து உறுதுணையாக உரமிட்டு நிற்பது மகிழ்ச்சியையும், உத்வேகத்தையும் தருகின்றதொன்றாக அமைகின்றது. அவர்களுடைய ஒத்துழைப்பும், வழிநடத்தலும் மென் மேலும் அதிகரிக்க வேண்டும் என்பது தமிழ்ச் சங்க உறுப்பினர்களது விருப்பமாகவுள்ளது.

எமது 64 வது செயற்குழு இரு பெருந்தலைவர்களையும், இரு பெரும் பொருளாளர்களையும் அதன் காலப்பகுதியில் கண்டுள்ளது. கலைப்பீட தமிழ்த் துறைத் தலைவரே தமிழ்ச்சங்கத்தின் பெரும் தலைவராவார் என்ற தமிழ்ச் சங்க யாப்பின் விதப்புரைக்கிணங்க எமது செயற்குழு பொறுப்பேற்ற போது பெருந்தலைவராக இருந்த பேராசிரியர் க.அருணாசலம் சிறிது காலத்துள் யாழ்ப்பாணம் சென்றதால் தமிழ்த்துறைத் தலைவராகப் பொறுப்பேற்ற பேராசிரியர் சி.தில்லைநாதன் சங்கத்திற்கு பெருந்தலைவராக இருந்து எம்மைச் சிறப்புற வழிநடாத்தினார். எமது செயற்குழுவின் பெரும் பொருளாளராக இருந்த மெய் யியற் துறை முதுநிலை விரிவுரையாளர் திரு M.S.M. அனஸ் உயர் கல்விக்காக அண்மையில் இலண்டன் சென்ற காரணத்தினால் பெரும் பொருளாளராக பல்மருத்துவபீட முதுநிலைவிரிவுரையாளர் வைத்திய கலாநிதி M.A.M.சித்தீக் தொடர்ந்து எம்மை வழி நடாத்தினார். எமது செயற்குழுவின் கணக்காய்வாளரான பொறியியற்பீட முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வ.முத்துக்குமாரசுவாமி அவர்கள் எமது செயற் பாட்டை செம்மைப்படுத்த உதவினார். எமது செயற்குழு சிறப்புடன் செயற்பட உண்மையில் இவர்களின் பக்கபலம் பேருதவியாக இருந்தமையை நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

தமிழ்ச் சங்கம் நாடகம், நாட்டுக்கூத்து, நாட்டியம், இசை, பேச்சு..... எனப் பல்வேறுபட்ட துறைகளின் வளர்ச்சிக்காக நீண்டகாலமாக உழைத்து வருவது யாவரும் அறிந்ததே. எனினும்

மாணவர்கள் எதிர்நோக்கும் சில சமூகப் பிரச்சனைகளை தீர்க்க முன்வர வேண்டும் என்ற பலரது எதிர்பார்ப்பிற்கு இணங்க மாணவர்களின் பொருளாதாரப் பிரச்சனைக்குத் தீர்வாக இம்முறை ''தமிழ்ச் சங்கப் புலமைப் பரிசிற் திட்டம்'' ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் கொழும்பு மாநகரில் பல்வேறுபட்ட சிரமங்களின் மத்தியில் நடாத்திய ''குறிஞ்சித் தமிழமுதம்'' எனும் கலை நிகழ்வின் மூலம் திரட்டிய பணத்திலேயே இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் நடாத்தும் கலை நிகழ்வின் மூலம் பெறும் பணத்தைக் கொண்டு மென் மேலும் இத்திட்டத்தை விரிவுபடுத்த வேண்டியது மாணவர்களது கடமையாகும்.

நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டு தாங்கொணாத் துன்பங் களின் மத்தியில் வாழ்ந்து வருதல் யாவரும் அறிந்த வேதனை மிகுந்த விடயமாகும். இவர்களிற்கு நிதி யுதவியோ, பொருளுதவியோ செய்ய முடியாத சிக்கலான சூழ்நிலையில் தமிழ்ச்சங்கம் இருக்கின்றது. இச் சந்தர்ப்பத்தில் காலத்தின் தேவைக்கேற்ப தமிழ்ச்சங்க யாப்பு சீர் செய்யப்பட வேண்டிய அவசியம் மீள எழுந்துள்ளமை நோக்கற்பாலது. நாம் இதற்கான சில முயற்சிகளை எடுத்த போதிலும் எமக்கு போதிய ஆதரவு கிடைக்கப் பெறவில்லை.

கடந்த தமிழ்ச் சங்கச் செயற்குழுக்களில் முஸ்லிம் மாணவர்கள் இடம் பெற்ற போதிலும் முஸ்லிம் மாணவர்களது செயற்பாடுகள் போதிய அளவில் அமைந்திருக்கவில்லை. ஆனால் இம்முறை தமிழ்ச்சங்க நாடகவிழாவில் முஸ்லிம் மாணவர்களும் நாடகம் ஒன்றை வழங்கியதும், முஸ்லிம் பெண்கள் மேடையேறி நடித்துப் பரிசில்களை பெற்றமையும் வரவேற்கத்தக்கதும், மகிழ்ச்சியைத் தருகின்றதுமான ஒரு விடயமாகும். தொடர்ந்தும் தமிழ்ச்சங்கம் அனைவருக்கும் உரித்தானது என்பதை உணர்ந்து அவர்களது பங்களிப்பு மென்மேலும் தமிழ் சங்கத்திற்கு கிடைக்கும் என நம்புகிறோம். கலைப்பீட மாணவர்களும் இம்முறை முனைப்போடு தமிழ்ச்சங்கப் பணிகளில் இணைந்து கொண்டதை அவ தானிக்கக் கூடியதாக இருந்தது.

தமிழ்ச்சங்கச் செயற்குழுவில் 15 உறுப்பினர்கள் இருப்பினும் சிலர் பெயரளவில் இடம் பெறுகின்றமையையும் ஏனையோர் கடினமாக உழைப்பதையும் கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இந்த நிலைமையை நாம் பொதுக் கூட்டம் ஒன்றில் எடுத்துரைத்து இவ்வாறு இயங்காத செயற்குழு உறுப்பினர்கள் மீது நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இவ்வாறான உறுப்பினர் களை செயற்குழுவில் இருந்து நீக்குவதற்கு தமிழ்ச்சங்கத்திற்கு அதிகாரம் உண்டு என்பதை எதிர்காலத்தில் செயற்குழுக்களில் இடம்பெற இருக்கும் மாணவர்கள் கவனத்திற் கொள்ளல் சாலச் சிறந்தது. இதேவேளை செயற்குழுவில் இடம்பெறாத பல மாணவர்கள் தமிழ்ச் சங்கத்திற்காக மிகவும் கடுமையாக உழைத் தமையை இங்கு நன்றியுடன் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

1929ம் ஆண்டு கணிதப் பேராசிரியர் 'அடங்காத் தமிழன்' சி.சுந்தரலிங்கம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு இலங்கைப் பல்கலைக்கழகத்திலிருந்து பின்னர் பேராதனைக்கு மாற்றப்பட்டு, பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தோற்றம் முதற்கொண்டு அதனுடன் இணைந்து செயற்பட்டு வரும் தமிழ்ச்சங்கத்திற்கு தனியாக அலுவலக அறையோ விளம்பரப் பலகையோ கிடையாது என்பது ஆச்சரியத்தைத் தரும் விடயமாகும். அலுவலக அறை ஒன்றைப் பெறுவதற்கு நாம் முயற்சித்த போதும் பல்கலைக்கழகத்தில் போதிய கட்டடவசதி இன்மையால் தற்போது பெறமுடியாதுள்ளது. எனினும் தொடர்ந்து வரும் செயற்குழுக்களும் முயற்சிக்கும் பட்சத்தில் காலக்கிரமத்தில் பெற்றுக் கொள்ள முடியும். தமிழ்ச்சங்கத்திற்கென விளம்பரப் பலகை ஒன்றை நாம் எல்லாப் பீட மாணவர்களிற்கும் பொதுவான இடமான உலக பல்கலைக்கழக சேவையகத்தில் நிறுவியிருப்பது தமிழ்ச் சங்க வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாக நாம் கருதுகிறோம். இதன் மூலம் தமிழ்ச்சங்க கூட்டங்கள், நிகழ்ச்சிகள் பற்றிய அறிவித்தல்கள் தமக்கு சரியான முறையில் கிடைக்கவில்லை என ஒரு சிலர் குறைகூறும் நிலை தவிர்க்கப்பட்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

பொறியியற்பீட உதவி விரிவுரையாளர் திரு.து.வசீகரன், உதவி ஆய்வாளர் திரு.ப.பிரதீபன் ஆகியோரின் அயரா முயற்சியாலும், உழைப்பாலும் இம்முறை தமிழ்ச்சங்கத்திற்கென முற்றிலும் தமிழில் ஒரு இணையத் தளத்தினை உருவாக்கியிருக்கின்றோம். இவர்கள் தமிழ்ச்சங்க வரலாற்றினை தேடிச் சேகரித்து, ஒழுங்குபடுத்தி இரவுபகலாக கணனியின் முன் தமது பெறுமதியான நேரத்தை செலவிட்டு இப்பணியைத் திறம்பட எமக்கு முடித்துத் தந்துள்ளனர். இவர்களிற்கு தமிழ்ச்சங்க வரலாறு தொடர்பான பல விளக்கங்களையும், ஆலோசனைகளையும் பேராசிரியர் சி.தில்லைநாதனும், பேராசிரியர் சி.சிவசேகரமும் வழங்கியிருந்தனர். இவர்களின் பணி உண்மையிற் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

நீண்டகாலமாக தமிழ்ச்சங்கம் இயங்கி வந்தபோதிலும் அங்கத்தவர் பதிவேடு எதுவும் இருக்கவில்லை. இம்முறை நாம் அங்கத்தவர் பதிவேடு ஒன்றை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

'21ம் நூற்றாண்டில் தமிழ் மொழியும், தமிழிலக்கியமும்' எனும் தலைப்பிலான மூன்று அமர்வுகளைக் கொண்ட ஒரு நாள் ஆய்வரங்கொன்றினை நிகழ்த்த நாம் திட்டமிட்டிருந்தோம். போதிய கால அவகாசமின்மையாலும், நிதி நிலைமைகள் சாதகமாக இல்லாத காரணத்தினாலும் எமது செயற்குழுவின் காலப் பகுதிக்குள் செய்து முடிக்காதபோதிலும் இதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் அனைத்தையும் நாம் செய்து முடித்துள்ளோம். எதிர்வரும் செயற்குழு அனைத்துப் பீட மாணவர்களும் பங்குபற்றக் கூடிய வகையில் இந்நிகழ்வை செய்து முடிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

தமிழ்ச்சங்கம் தன்னுடைய பணியைச் சிறப்புறச் செய்தாலும், மாணவர்கள் நிகழ்ச்சிகளை, கலையை ரசிக்கின்ற மனப்பக்குவத்துடன் அமைதியாக (கூச்சல்.... இன்றி) கண்டு களிக்கும் நாள் எந்நாளோ? இதுபற்றி எதிர்கால மாணவர்களாவது சிந்திக்கட்டும். ஏனெனில் மொழி, கலை, பண்பாடு இவைதான் ஓர் இனத்தின் அடையாளம்.

எமது செயற்குழு சங்கத்தினைப் பொறுப்பேற்கும் போது சங்கத்திடம் நிதி எதுவும் இருக்கவில்லை. மாறாக சங்கம் பலரிடம் கடன்பட வேண்டியிருந்தது. நாம் இந்நிலையில் சங்கத்தினைப் பொறுப்பேற்று உண்மையிலேயே சங்கத்தினை மீள நிறுவியிருக்கின்றோம் என்று சொன்னால் மிகையாகாது. எமது செயற்குழு உறுப்பினர்கள் தமது சொந்தப்பணத்தில் ஆரம்ப நிகழ்ச்சிகளை மேற்கொண்டது குறிப்பிடக்கூடிய ஒரு விடயமாகும். எதிர்வரும் செயற்குழுக்கள் தொடர்ந்தும் தமிழ்ச்சங்கம் இயங்க வேண்டும் என்ற உணர்வில் செயற்படும் என நம்புகின்றேன்.

மாணவர்களின் உழைப்பால், பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட பணத்தை தவறான முறையில் செலவு செய்யாது மிகவும் அமைதியாக தமிழ்ச்சங்கத்தினதும், தமிழ் மாணவர்களினதும் தேவையை உணர்ந்து உரியவகையில் பயன்படுத்தியிருக்கிறோம் என்ற திருப்தியுடனும், தொடர்ந்து வரும் செயற்குழுக்கள் தமிழ்ச்சங்கத்தை மேலும் சீரிய பாதையில் இட்டுச் செல்லும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடனும் தமிழ்ச்சங்கத்தை 'வையகம் உள்ளவரை வாழ்க!' என வாழ்த்தும் உங்களில் ஒருவனாகின்றேன்.

**''உண்ணல் உடுத்தல் உயிர்த்தல் எனச் செந்தமிழை**
**நண்ணலும் ஆம்என்று நாட்டுக''.**

***க.நரேந்திரநாதன்,***
***தலைவர்,***
***தமிழ்ச்சங்கம்.***

***பொறியியற்பீடம்***
***பேராதனைப் பல்கலைக்கழகம்,***
***பேராதனை.***

# செயலாளர் அறிக்கை

இலங்கையிலுள்ள புகழ்பூத்த பல்கலைக்கழகங்களில் ஒன்றானதும் ஐம்பதுக்கு மேற்பட்ட வருட வரலாற்றைக் கொண்டதுமான பேராதனைப் பல்கலைக்கழகத்திலுள்ள பழம் பெருமை வாய்ந்த அமைப்புக்களுள் எமது தமிழ்ச் சங்கமும் ஒன்றாகும். இத்தகையதொரு அமைப்பினது 64 வது செயற்குழுவிலே செயலாளராக செவ்வனே செயலாற்றிட முயன்றிருக்கின்றேன். முயற்சியின் பலனாக நிகழ்ந்திட்ட நிகழ்வுகளை தொகுத்து செயலாளர் அறிக்கையாக இந்த வருட இளங்கதிர் இதழிலே வெளியிடுவதில் பெருமகிழ்வடைகிறேன்.

முதன்முதலாக சங்கத்தினை எமது செயற்குழு பொறுப்பேற்ற போது நிறைந்த வேலைப்பளுவும் குறைந்த நிதி நிலைமையும் எம்மை மலைக்க வைத்தது. எனினும், எம்மாலியன்ற வரை சிறப்பாக செய்துள்ளோம் என்று நம்புகின்றோம். கொழும்பு மாநகரில் எமது சங்கம் ஒழுங்கு செய்த ''குறிஞ்சித் தமிழமுதம்'' நிகழ்வின் மூலம் கிடைத்த நிதியினைக் கொண்டு, எமது வளாகத்தின் கல்வி கற்கும் மாணவர்களுக்காக ஒரு புலமைப் பரிசில் நிதியினை உருவாக்கி தமிழ்ச் சங்கத்தின் நீண்ட நாள் கனவை நனவாக்கிய திருப்தி அடையும் அதேநேரம் '21ம் நூற்றாண்டில் தமிழ்மொழியும் தமிழிலக்கியமும்' போன்ற சில நிகழ்வுகளை திட்டமிட்டிருந்தும் நிகழ்த்த முடியாமற் போனது வருத்தம் அளித்தது.

### 28,29.03.98 - இளங்கதிர் வெளியீடு 1997/98

தமிழ்ச்சங்கத்தின் 1997/98 ஆண்டிற்கான இளங்கதிர் வெளியீட்டு விழா இருநாள் நிகழ்வாக 28,29-03.98 நடைபெற்றது. பேராசிரியர் ப.சின்னத்தம்பி தலைமையில் தொடங்கிய முதல் நாள் நிகழ்விற்கு பேராசிரியர் இ.சிவகணேசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் குபேரனின் தயாரிப்பிலுருவான 'சத்யவான் சாவித்திரி' வில்லுப்பாட்டும், 'இதுதான் முடிவா?' எனுந் தலைப்பிலான கவியரங்கும் எ.நிச்சனின் நெறியாள்கையிலே 'பாஞ்சாலி சபதம்' நாட்டுக் கூத்தும், க.நரேந்திரநாதனின் நெறியாள்கையிலுருவான 'Maslow' நாடகமும், திரு. V.K.தேவலிங்கத்தின் தயாரிப்பான 'கீதவர்ஷா' எனும் மேலைத்தேய கீழைத்தேய இசைநிகழ்வும் மேடையேறி பார்வையாளர்களை களிப்பூட்டின.

இரண்டாம் நாள் நிகழ்விற்கு பேராசிரியர் க.அருணாசலம் தலைமை தாங்கினார். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வவுனியா கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியான திரு. S.அழகரட்ணம் அழைக்கப் பட்டிருந்தார். 'இராஜதந்திரம்' எனும் வரலாற்று நாடகமும் மேடையேற்றப்பட்டது. சற்று வித்தியாசமான கலை இரசத்தை பார்வையாளர்களிற்கு கொடுத்து அந்த நிகழ்வில் பழ.சிறியின் 'அத்தான்... சட்டைப் பொத்தான்..' எனும் நகைச்சுவை நாடகமும் மேடையேற்றப்பட்டது.

நிகழ்வில் இதழின் ஆய்வுரையை திரு.வ.மகேஸ்வரன் வழங்கினார். நிகழ்வின் வெற்றிக்கு வித்திட்ட எமது நண்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும் நன்றி கூறத் தமிழ்ச் சங்கம் கடமைப்பட்டிருக்கிறது.

### 04.06.1998 - பொதுக்கூட்டம்

தமிழ்ச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கலைப்பீட புவியியல் அரங்கில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் 1998/99 கல்வியாண்டிற்கான செயற்குழு தமிழ்ச்சங்கத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டது. தவிர்க்க முடியாத காரணங்களிற்காக தலைவர் தெரிவு இடம் பெறவில்லை. இதனால் தலைவர் தெரிவு நிகழும்வரை உபதலைவர் த.விஜயரேகா பதில் தலைவராக பொறுப்பேற்றார்.

### 08.07.1998 - 'புதுவசந்தம்'

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு பற்பல கனவுகளுடன் புதிய தென்றலாய் பல திறமைகளுடன் வந்த தமிழ் பேசும் புதிய மாணவர்களை வரவேற்கும் முகமாகவும் அவர்களது திறமைகளை வெளிக்கொணரும் முகமாகவும் E.O.E பெரெய்ரா அரங்கில் பேராசிரியர் சி.சிவசேகரம் தலைமையில் புதுவசந்தம் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வை சங்கீத நாட்டிய சங்கத்துடன் சேர்ந்து எமது சங்கம் ஒழுங்கமைத்திருந்தது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இரு சங்கங்களிற்கும் பெருந் தலைவரான பேராசிரியர் க.அருணாசலமும் சிறப்பு விருத்தினர்களாக சங்கீத நாட்டிய சங்கப் பெரும் பொருளாளர் பேராசிரியர் வை.நந்தகுமாரும், தமிழ்சங்கப் பெரும் பொருளாளர் திரு.M.S.M.அனஸும் அழைக்கப்பட்டிருந்தனர்.

கீழைத்தேய இசைநிகழ்ச்சி, நடனம், பட்டிமண்டபம், நாடகங்கள், கவிதா நிகழ்வு போன்ற கலை நிகழ்வுகளை புதிய மாணவர்கள் சிறப்புறத் தயாரித்து வழங்கினார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களுக்கும் பட்டி மண்டபத்திற்கும் தலைமை வகித்த கலைப்பீட விரிவுரையாளர் திரு.வ.மகேஸ்வரன் அவர்களிற்கும் மேலும் கலைநிகழ்வுகளை நெறிப்படுத்தி மெரு கூட்ட உதவிய சிரேஷ்ட மாணவர்களிற்கும் சிறப்பாக எமது சங்கத்துடன் தோளோடு தோள் நின்று செயற் பட்ட சங்கீத நாட்டிய சங்க செயற்குழுவினருக்கும் எமது சங்கம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறது.

### 05.08.1998 - கவிதா நிகழ்வு

இந்திய நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் வீ.அரசு அவர்கள் முதன்மையாகக் கலந்து கொள்ள எமது சங்கத்தினால் கலைப்பீட புவியியல் அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு மாணவர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எமது அழைப்பை ஏற்று தமது சிரமத்தைப் பாராது கலந்து கொண்ட பேராசிரியர் வீ.அரசுவிற்கு எமது சங்கம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறது.

### 14,16, 17.9.1998 - திரைப்படவிழா.

வழமைபோல எமது பல்கலைக்கழக திரை அரங்கில் வான்மதி, பாண்டியன், டூயட் ஆகிய மூன்று திரைப்படங்களும் காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்வின் வெற்றிக்கு உழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

### 22.9.98 - பொதுக்கூட்டம்.

எமது சங்கத்தின் பெரும் பொருளாளர் திரு.M.S.M.அனஸ் தலைமையில், மாணவர் ஒன்றிய அறையில் கூடிய இந்த விசேட பொதுக்கூட்டத்தில் புதிய தலைவராக க.நரேந்திரநாதன் போட்டி ஏதுமின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## 27.9.98 - மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் ஒரு பட்டி மண்டபம்

மொரட்டுவை பல்கலைக்கழகத் தமிழ் இலக்கிய மன்றத்தினால் நடாத்தப்பட்ட வாணி விழாவில் சிறப்பு நிகழ்வாக இடம்பெற்ற கொழும்பு, மொரட்டுவை, பேராதனை பல்கலைக்கழகங்களிற்கிடையேயான பட்டி மண்டபத்தில் அவர்களின் அழைப்பை ஏற்று, எமது பல்கலைக்கழகத்தின் சார்பில் தமிழ்ச்சங்கம் அனுப்பி வைத்த குழுவினர் ஸ்ரீ பிரசாந்தன், சு.நிலக்ஷன், ஜெ. ஜெயகாந்தன் பங்கேற்று சிறப்பாக வாதிட்டு வெற்றியும் பெற்றனர்.

## 10.10.98 - நாடகவிழா

பல்கலைக்கழகத்திலே நிகழும் தமிழ் நிகழ்வுகளிலேயே மாணவர்களிடையே ஒரு புத்துணர்வையூட்டும் நாடக விழா, சங்கத் தலைவர் க.நரேந்திரநாதன் தலைமையில் இனிதே நடந்தேறியது. வருடந்தோறும் நடைபெறும் ஏனைய நாடக விழாக்களிலிருந்து வேறுபட்டு தனித்துவம் மிக்கதொன்றாக இது அமைந்தது. முஸ்லிம் மாணவர்களும் இம்முறை இணைந்து ஒரு நாடகத்தை தயாரித்திருந்தது குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகவிருந்தது. போட்டியிற் பங்கு கொண்ட நாடகங்கள் வருமாறு.

1. இ.ருஷாந்தனின் ''பொதி''
2. சோ.சரத்ஜயனின் ''வழிதர மறுக்கும் வட்டங்களும் பரிதிப் பாதைப் பயணங்களும்''
3. மெள.சித்தார்த்தனின் ''அந்நியஸ்வரங்கள்''
4. S.சிறிதரனின் ''கூடாரம்''
5. C.M.C. மன்சூரின் ''இதுவரை இவர்கள்''
6. வெ.தனேஸ்குமரனின் ''சிலுவை வாசிகள்''

இந்தப் போட்டிக்கு நடுவர்களாக கலைப்பீட விரிவுரையாளர்கள் பேராசிரியர் அ.சிவராசா, திரு. M.S.M. அனஸ், திரு.வ.மகேஸ்வரன், பொறியியற்பீட விரிவுரையாளர் கலாநிதி S.சாந்தினி, யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரையாளர் செல்வி R.ஜெயரஞ்சினி ஆகியோர் எமது அழைப்பை ஏற்றுக் கலந்து கொண்டு சிறப்பித்ததோடல்லாமல் சிறந்த முடிவுகளை சபையோருக்கு வழங்கியதற்கு எமது சங்கம் அவர்களிற்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறது.

மேலும், நிகழ்வின் நீதிபதிகள் முடிவுபற்றி ஆராய்ந்து கொண்டிருந்த நேரத்தை நிரப்ப நடந்து முடிந்த 6 நாடகங்களின் குறைநிறைகளை ஒரு விமர்சன வடிவில் தந்த கலாநிதி துரை. மனோகரன் அவர்களிற்கும் மற்றும் பொதுவான பல தகவல்களை நகைச்சுவையான பேச்சின் மூலம் சபையோரின் மனதில் நிலைக்கச் செய்த தமிழ்ச் சங்க முன்னாள் தலைவர் திரு.சண்முகதாசன் அவர்களிற்கும் எமது சங்கம் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறது.

| பரிசு | பெற்றவர் | வழங்கியவர்கள் |
|---|---|---|
| 1 வது சிறந்த நாடகம் | 'அந்நியஸ்வரங்கள்' | 'பிறையன்' ஞாபகார்த்தமாக பொறியியற்பீட E/93 பதிவிலக்க மாணவர்கள் |
| 2வது சிறந்த நாடகம் | 'பொதி' | 'அகங்களும் முகங்களும்' நாடகக்குழு (சுழற்கேடயம்) |
| 3வது சிறந்த நாடகம் | வழிதர மறுக்கும் வட்டங்களும் பரிதிப்பாதைப் பயணங்களும்' | 'கோதுடைக்கும் குஞ்சுகள்' நாடகக்குழு (சுழற் கேடயம்) |

| | | |
|---|---|---|
| சிறந்த நெறியாள்கை | 'அந்நியஸ்வரங்கள்' நாடகம் மௌ. சித்தார்த்தன் | கலைப்பீட 1ம் வருட மாணவர் |
| சிறந்த பிரதி | 'பொதி' நாடகம் இ.ருஷாந்தன் | கலைப்பீட 3ம் வருட மாணவர். |
| சிறந்த நடிகர் | 'அந்நியஸ்வரங்கள்' நாடகத்தில் மௌ.சித்தார்த்தன் | கலைப்பீட இறுதி வருட மாணவர் |
| சிறந்த நடிகை | 'அந்நியஸ்வரங்கள்' நாடகத்தில் எஸ்.டிலானி | விஞ்ஞானபீட 2ம் வருட மாணவர் |
| நினைவில் நின்ற நடிகர் | 'இதுவரை இவர்கள்' நாடகத்தில் ச.மயூரதாஸ் | 'காட்டாறு' நாடகக்குழு (சுழற் கேடயம்) |
| | ''பொதி'' நாடகத்தில் பூ.முருகதாஸ் | |
| நினைவில் நின்ற நடிகை | 'இதுவரை இவர்கள்' நாடகத்தில் லறீனா அப்துல் ஹக் | 'காட்டாறு' நாடகக்குழு (சுழற்கேடயம்) |
| | ''பொதி'' நாடகத்தில் ந.சந்திரிக்கா | |
| சிறந்த மேடையமைப்பு | 'பொதி' நாடகம் | விவசாய விஞ்ஞான இறுதி வருட மாணவ அன்பர் ஒருவரின் 500/= பணப்பரிசு |

### *1-11-98 - 'முத்தமிழ் ஆரம்'*

கிழக்கு மாகாணத்தின் தலைநகர் திருமலையில் எமது சகோதர சங்கமான சங்கீத நாட்டிய சங்கம் ஒழுங்கு செய்த 'முத்தமிழ் ஆரம்' எனும் பல்சுவைக் கதம்ப நிகழ்வில் எமது தமிழ்ச்சங்க தயாரிப்பில் ச.கிருபால், ம.அமுதராஜ், க. நரேந்திரநாதன் ஆகியோரின் நெறியாள்கையில் 'துஷ்டன் வதம்' எனும் மரபு வழிநாட்டுக் கூத்தும் இ.ருஷாந்தனின் நெறியாள்கையில் 'பொதி' நாடகமும் ஆகியன மேடையேறின.

### *7,8-11-1998 - திருமலையில் ஓவியக் கண்காட்சி*

இயற்கை எழில் கொஞ்சும் திருமலைநகரில் வடக்கு கிழக்கு மகாணக் கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஓவியக் கண்காட்சியில் எமது சங்கத்தின் சார்பில் இ.ருஷாந்தன் (கிக்கோ) தனது படைப்புக்களை வைத்து எமது தமிழ்ச்சங்கத்திற்கு பெருமை சேர்ந்தார். இவரது ஓவியங்கள் மக்களிடையே பலத்த வரவேற்பை பெற்றதை நாம் இங்கு பெருமையாக கூறியே ஆக வேண்டும். ஓவியத்திற்கு விளக்கம் அளிப்பதற்காக ம.மகிதரன், க.இந்திரராஜ், சி.சிவகுமரன் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### *14.04.1998 - குறிஞ்சித் தமிழமுதம்*

ஈழ வளநாட்டின் தலைநகராம் கொழும்பு மாநகரில் எமது தமிழ்ச்சங்கம் 'குறிஞ்சித் தமிழமுதம்' எனும் பல்சுவைக் கதம்ப நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது. பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் எமது தமிழ்ச் சங்கத் தலைவர் க.நரேந்திரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் திரு.சி.தில்லைநடராசா பிரதம விருந்தினராகவும், திரு.பெ. ராதாகிருஷ்ணன், பேராசிரியர் மா.செ. மூக்கையா, திரு.M.S.M. அனஸ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் அழைக்கப்பட்டிருந்தனர்.

தமிழ்த்தாய்வாழ்த்து, தமிழ்ச்சங்க கீதம் உடன் இனிதே ஆரம்பமான இந்நிகழ்வில் சி.சிவரதி, சே.பிரியா ஆகியோரின் நெறியாள்கையில் உருவான 'சங்கீர்த்தனா' கீழைத்தேய வாத்திய இசை நிகழ்ச்சி, சென்ற

வருடம் எமது சங்க நாடக விழாவில் 1ம் இடம் பெற்று ஜனார்த்தனனின் நெறியாள்கையிலான 'அகங்களும் முகங்களும்' நாடகம், எமது சங்கத்தினால் தயாரிக்கப்பட்டு, ச.கிருபால், க.நரேந்திரநாதன், ம.அமுதராஜ்ஆகியோரின் நெறியாள்கையில் உருவான 'துஷ்டன் வதம்' மரபு வழி நாட்டுக்கூத்து, திரு. வீரமணி ஐயரின் பிரதியாக்கத்தில் சி.சிவரதியின் நெறியாள்கையிலுருவான 'தக்கன் யாகம்' நாட்டிய நாடகம், பழ.சிறி, களு.நந்தன் ஆகியோரின் நெறியாள்கையில் உருவான 'கல்யாணங்கள் லொட்ஜில் நிச்சயிக்கப்படுகின்றன' நகைச்சுவை நாடகம் என்பன மக்களின் மனதிலே ஒரு நிறைவைக் கொடுத்தது. 'சங்கீர்த்தனா', 'தக்கன்யாகம்' ஆகிய இரு நிகழ்ச்சிகளை தயாரித்துதவிய எமது சகோதர சங்கமான சங்கீத நாட்டிய சங்கத்திற்கு எமது நன்றிகள்.

பலத்த சிரமத்தின் மத்தியில் இந்நிகழ்வை மேடையேற்றுவதற்கு பல வழிகளிலும் ஒத்தாசை புரிந்த, எமது சங்க உறுப்பினர்களுடன் தோளோடு தோள் நின்ற அனைத்து மாணவ நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் தமிழ்ச்சங்கம் தனது கடமையுணர்வுடன் கூடிய நன்றியைக் கூறி நிற்கிறது.

### 18.11.1998 - பேராசிரியர் க.கைலாசபதி நினைவு விழா

தமிழ்ச்சங்கச் செயலாளர் செ. கிள்ளிவளவன் தலைமையில் E.O.E பெரெய்ரா அரங்கில் வழமையான பொலிவுடன் நடந்தேறியது. இந்நிகழ்வின் நினைவுப் பேருரையை கலாநிதி துரை. மனோகரன் நிகழ்த்தினார். இந்த நினைவு விழாவில், நான்காவது ஆண்டாகத் தொடர்ந்து நடாத்தப்பட்டு வரும் 'தனி நபர் நடிப்புப் போட்டியும்' ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இப்போட்டிக்கு நடுவர்களாக விரிவுரையாளர்கள் கலாநிதி.R. சாந்தினி, திரு.வ.மகேஸ்வரன் செல்வி.அம்பிகை வேல்முருகு ஆகியோர் கலந்து கொண்டு தீர்ப்பு வழங்கினர். ஆண்கள் பிரிவில் 1ம் இடத்திற்கு ப.குகநேசன், 2ம் இடத்திற்கு J.சிவானந்தன், 3ம் இடத்திற்கு வெ.தனேஸ்குமரன் ஆகியோர் தெரிவானார்கள். பெண்கள் பிரிவில் 1ம் இடத்திற்கு T.உமா 2ம் இடத்திற்கு ந.குமுதினி, 3ம் இடத்திற்கு S. சிவசோதி ஆகியோரும் தெரிவானார்கள். இறுதி நிகழ்வாக தமிழ்ச்சங்கத் தயாரிப்பிலுருவாகி திருகோணமலையிலும், கொழும்பிலும் மேடையேற்றப்பட்ட 'துஷ்டன் வதம்' நாட்டுக்கூத்து பல்கலைக்கழகத்திலும் மேடையேறியது.

இந்நிகழ்வின் வெற்றிக்குதவிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

### 28.11.1998 - ஹட்டனில் நாட்டுக்கூத்து

ஹட்டன் மாநகரில் நடந்த வென்சூர் ஆடையகத்தின் ஆண்டு விழாவில், அவர்களின் அழைப்பை ஏற்று, எமது சகோதரசங்கமான சங்கீத நாட்டிய சங்கத்தினூடாக, எமது தயாரிப்பான, 'துஷ்டன் வதம்' நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டது.

### 13.12.1998 - கவிதைப்பட்டறை

எமது பல்கலைக்கழக மாணவர்களின் கவிதைத்திறனை வளம் படுத்தும் முகமாக இம்முறை ஒரு கவிதைப் பட்டறையை எமது சங்கம் ஏற்பாடு செய்ததோடல்லாமல் இப்பட்டறையில் கண்டி, மாத்தளை ஆகிய பிரதேச தமிழ்ப்பாடசாலைகளில் கவிதை எழுதுவதில் ஆர்வமுள்ளவர்களிற்கும் சந்தர்ப்பத்தை அமைத்துக் கொடுத்தது. இந்நிகழ்வில் மிகவும் ஆர்வத்தடன் கலந்து கொண்ட பேராசிரியர் சி.தில்லைநாதன், பேராசிரியர் சி.சிவசேகரம், கலாநிதி M.A. நுஹ்மான், கலாநிதி துரை. மனோகரன், திரு. M.S.M அனஸ் ஆகியோருக்கும் பங்கேற்ற மாணவ மாணவிகளுக்கும் எமது நன்றிகள்.

### 15.12.1998 - பொதுக்கூட்டம்

கலைப்பீட புவியியல் அரங்கில் தமிழ்ச்சங்கத் தலைவன் திரு.க.நரேந்திரநாதன் தலைமையில் கூடிய போது, சென்ற ஆண்டிற்குரிய பொருளாளர் அறிக்கையை கடந்த நிருவாகக்குழு சமர்ப்பித்தது. புதிதாக

ஆரம்பிக்கப்படவிருக்கும் புலமைப் பரிசிற்திட்டம் தொடர்பான ஆலோசனைகளும் மேற்படி கூட்டத்தில் பெறப்பட்டது.

### 18.12.1998 - தேனீர் விருந்து

கொழும்பு மாநகரில் தமிழ்ச்சங்கத்தினால் நடாத்தப்பட்ட 'குறிஞ்சித் தமிழமுதம்' எனும் பல்சுவை நிகழ்வின் வெற்றிக்கு வித்திட்ட, தோளோடு தோள் நின்று உழைத்த மாணவ நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் ஒருங்கு சேர்த்து அவர்களிற்கு ஒரு தேனீர் விருந்தை எமது சங்கம் ஒழுங்கு செய்திருந்தது. எமது பல்கலைக்கழக உலக பல்கலைக்கழக சேவைகள் அரங்கில் நடந்த நிகழ்விற்கு சிறப்பு அதிதிகளாக பேராசிரியர் மா.செ.மூக்கையா, திரு. M.S.M. அனஸ் ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர்.

### 20.12.1998 கொழும்பு பல்கலைக்கழகத்தில் கலை நிகழ்வு

கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம், கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் வருடாந்த கலைவிழாவுடன், 'இளந்தென்றல்' ஆண்டு மலரையும் வெளியிட்டது ''இன்றைய சமுதாய இளைஞனை பெரிதும் மழுங்கடிக்கச் செய்வது மேலைத்தேய மோகம், இன்றைய அரசியல், பொழுதுபோக்குச் சாதனம் என்ற முக்கோணத் தலைப்பிலான பட்டி மண்டபத்தில் 'இன்றைய அரசியல்' என்ற தலைப்பில் எமது பல்கலைக்கழக மாணவர்கள் ஸ்ரீ. பிரசாந்தன், சு.நிலக்ஷன், ஜெ.ஜெயகாந்தன் ஆகியோர் சிறப்பாக வாதிட்டனர். இ.தர்ஷினியும், ஜெயக்குமாரும், நா.சுதனும் சித்தாராவின் இசையமைப்பிற் பாடிய பாடல்களினால் மக்கள் மனதிலே இடம் பிடித்தனர்.

இந்நிகழ்வில் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலிருந்தும் மாணவர்கள் பங்கேற்றனர். எமது பல்கலைக் கழகத்தின் சார்பில் பட்டி மண்டபத்திலும் இசை நிகழ்விலும் மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

எமது தமிழ்ச்சங்கத்தின் தலைவர் க.நரேந்திரநாதன் ''இளந்தென்றலின்'' பிரதியை மேடையில் பெற்றுக் கொண்டார். கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்திற்கு எமது நன்றிகள்......

### 14.02.1999 - குறிஞ்சியிற் சிவராத்திரி

குறிஞ்சிக் குமரன் ஆலயத்திலே சகோதர சங்கமான இந்து மாணவர் சங்கம் சிவராத்திரியை முன்னிட்டு ஒழுங்கு செய்திருந்த கலை நிகழ்வுகளில், 'கற்றதனாலாய பயன்' எனுந் தலைப்பிலான கவியரங்கம், சமய சமூக பண்பாட்டு மரபுகளில் தற்கால வாழ்க்கைக்கு ஏற்ப மாற்றம் அவசியம், அவசியம் இல்லை எனுந் தலைப்பிலான பட்டி மண்டபமும், 'தடுத்தாட்கொண்ட புராணம்' எனும் வில்லுப்பாட்டும், 'தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவும் தமிழ்ச்சங்கத்தின் தயாரிப்புகளாக மேடையேற்றப்பட்டன. இந்நிகழ்வில் பட்டி மண்டபத்திற்கு நடுவராகக் கலந்து கொண்ட திரு.பவகரன் அவர்களிற்கு தமிழ்ச்சங்கம் நன்றிகூறக்கடமைப்பட்டுள்ளது. நிகழ்வுகள் சிறப்புற ஒத்துழைத்த இந்து மாணவர் சங்கத்திற்கு எமது நன்றிகள் பற்பல.

### 26.05.99 - வருடாந்தப் பொதுக்கூட்டம்

கலைப்பீட கன்னங்கரா கட்டிடத்தில் எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் க.நரேந்திரநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன. புலமைப்பரிசில் திட்டம், அனைத்துப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம், நடப்பாண்டிற்கான பரும்படியான கணக்கு அறிக்கை, புதிய செயற்குழு தெரிவு, கடந்த சங்கத்தின் (1997/98) கணக்கு அறிக்கையின் விபரம் ஆகியன. பின்னர் புதிய செயற்குழு பொறுப்பேற்றுக் கொண்டது. இறுதியில் சங்கத்தின் செயலாளர் செ.கிள்ளிவளவனின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவடைந்தது.

**27.05.99 - பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவு விழா**

எமது சங்கத்தில் நீண்டகாலம் பெரும்பொருளாளர், பெருந்தலைவர் ஆகவும் பல்வேறுபட்ட நாடகங்கள், நாட்டுக்கூத்துக்களை தயாரித்து எமது சங்கத்தினூடாக வழங்கியவரும், கலைப்பீட தமிழ்த்துறையின் முன்னாள் தலைவருமான பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவில் எமது சங்கம் ஓர் விழாவினை ஏற்பாடு செய்திருந்தது.

தமிழ்ச்சங்கத் தலைவர் க.நரேந்திரநாதன் தலைமையில் ஈ.ஓ.ஈ.பெரேய்ரா அரங்கில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் நினைவுப் பேருரையினை எமது சங்கத்தின் பெருந்தலைவரும், தமிழ்த் துறைத் தலைவருமான பேராசிரியர் சு.தில்லைநாதன் நிகழ்த்தினார். இவ்விழாவில் பேராசிரியர் சி.சிவசேகரம் தலைமையில் நடைபெற்ற ''என்றெமதின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்'' என்ற தலைப்பிலான கவியரங்கில் வ.சுகந்தன், ஹீ.பிரசாந்தன், லறீனா அப்துல்ஹக், சு.நிலக்ஷன் ஆகியோர் சுவைபட கருத்தாழமிக்க கவிதைகளை வழங்கினர். இறுதியாக சங்கத்தின் செயலாளர் செ.கிள்ளிவளவனின் நன்றி உரையுடன் விழா சிறப்புற நிறைவெய்தியது.

**30.05.99 - கலைவிழாவும் இளங்கதிர் வெளியீடும்**

உலக வலைப்பின்னல் பக்கத்தில் எமது சங்கத்திற்கும் இணையத் தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

எமது சங்கத்திற்கென விளம்பரப்பலகை ஒன்றினை உலக பல்கலைக்கழக சேவையகத்தில் நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

நன்றி

**இறுதி வருடம்,**
**பொறியியற்பீடம்,**
**பேராதனை பல்கலைக்கழகம்**

**செ.கிள்ளிவளவன்**
**செயலாளர் ,**
**தமிழ்ச்சங்கம்.**



இட மிருந்து வலம்

அமர்ந்திருப்போர் : பேராசிரியர்சி.தில்லைநாதன் (பெருந்தலைவர்), க.நரேந்திரநாதன் (தலைவர்), பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தன (துணை வேந்தர்), செ.கிள்ளிவளவன் (செயலாளர்), திரு.எம்.எஸ்.எம்.அனஸ் (பெரும் பொருளாளர்)

நின்றிருப்போர் : சி.டிலானி (செ.உ.), வீ.மணிவண்ணன் (செ.உ.), சு.உதயசீலன் (பொருளாளர்), பா.பிரதாபன் (இதழாசிரியர்), யோ.திலீபன் (செ.உ.), கோ.நந்தகுமார் (செ.உ.), தி.விஜயரேகா (உப தலைவர்)

| ஆண்டு | இதழ் | பெருந்தலைவர் | பெரும் பொருளாளர் | தலைவர் |
|---|---|---|---|---|
| 1948-49 | 01 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி V. அப்பாப்பிள்ளை | V.சண்முகநாதன் |
| 1949-50 | 02 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி V. அப்பாப்பிள்ளை | C.குணபாலசிங்கம் |
| 1950-51 | 03 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி V. அப்பாப்பிள்ளை | R.N.முத்துராஜா |
| 1951-52 | 04 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி V. அப்பாப்பிள்ளை | - |
| 1952-53 | 05 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | திரு.கனகசபாபதிப்பிள்ளை | சி.சி.மாணிக்கவாசகர் |
| 1953-54 | 06 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | திரு.கனகசபாபதிப்பிள்ளை | மகாலிங்கசிவம் |
| 1954-55 | 07 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | திரு. V.M.முருகேசம்பிள்ளை | K.செல்வரெத்தினம் |
| 1955-56 | 08 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | பேராசிரியர் கனகசபாபதி | கி.கோபாலரட்ணம் |
| 1956-57 | 09 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி சு.வித்தியானந்தன் | ச.ஹீ.சண்முகராஜா |
| 1957-58 | 10 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி சு.வித்தியானந்தன் | நா.இராசரத்தினம் |
| 1958-59 | 11 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி சு.வித்தியானந்தன் | அ.இரத்தினம் |
| 1959-60 | 12 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி சு.வித்தியானந்தன் | மு.கணேசசுந்தரம் |
| 1960-61 | 13 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி சு.வித்தியானந்தன் | சோ.கணேசநாதன் |
| 1961-62 | 14 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி சு.வித்தியானந்தன் | அ.சண்முகதாஸ் |
| 1962-63 | 15 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி சு.வித்தியானந்தன் | சி.நடராசா |
| 1964-65 | 16 | பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை | கலாநிதி சு.வித்தியானந்தன் | க.நாகேந்திரன் |
| 1965-66 | 17 | பேராசிரியர் வி.செல்வநாயகம் | கலாநிதி சு.வித்தியானந்தன் | நா.மயில்வாகனம் |
| 1966-67 | 18 | பேராசிரியர் வி.செல்வநாயகம் | கலாநிதி சு.வித்தியானந்தன் | சு.தேவதாஸ் |
| 1967-68 | 19 | பேராசிரியர் வி.செல்வநாயகம் | கலாநிதி சு.வித்தியானந்தன் | ஆ.ரவீந்திரன் |
| 1968-69 | 20 | பேராசிரியர் வி.செல்வநாயகம் | கலாநிதி சு.வித்தியானந்தன் | மு.குமாரசுவாமி |
| 1969-70 | 21 | பேராசிரியர் வி.செல்வநாயகம் | கலாநிதி த.யோகரத்தினம் | வி.ந.ஜேக்கப் |
| 1976-77 | 22 | பேராசிரியர் சு.வித்தியானந்தன் | கலாநிதி சி.பத்மாநாதன் | சி.நவரத்தினம் |
| 1978-79 | 23 | பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை | திரு. மு.சின்னத்தம்பி | கு.பரராஜசேகரம் |
| 1980-81 | 24 | பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை | திரு. மு.சின்னத்தம்பி | கி.செல்வராஜா |
| 1981-82 | 25 | திரு.சி.தில்லைநாதன் | திரு. மு.சின்னத்தம்பி | மா.வைகுந்தவாசன் |
| 1991-92 | 26 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | ஜனாப் M.L.A.காதர் | வ.பவஹரன் |
| 1992-93 | 27 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | ஜனாப் M.L.A.காதர் | க.நா.சண்முகதாசன் |
| 1993-94 | 28 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | ஜனாப் M.L.A.காதர் | செ,செல்வரூபன் |
| 1994-95 | 29 | கலாநிதி க.அருணாசலம் | திரு.வை.நந்தகுமார் | பா.பாலநந்தகுமார் |
| 1996-97 | 30 | கலாநிதி க.அருணாசலம் | திரு.வை.நந்தகுமார் | ப.பிரதீபன் |
| 1997-98 | 31 | பேராசிரியர் க.அருணாசலம் | பேராசிரியர் வை.நந்தகுமார் | பொ.சுரேந்திரன் |
| 1998-99 | 32 | பேராசிரியர் சி.தில்லைநாதன் | ஜனாப் M.S.M.அனஸ்<br>டாக்டர் M.A.M.சித்தீக் | க.நரேந்திரநாதன் |

| உபதலைவர் | செயலாளர் | இளம் பொருளாளர் | இதழாசிரியர் |
|---|---|---|---|
| K.ஜெயராஜா | A.தேவராஜா | C.V.ராஜசுந்தரம் | த.சண்முகசுந்தரன் |
| V.சிவசுப்பிரமணியம் | V.பேரம்பலம் | V.J.ராஜநாதன் | நா.தம்பிமுத்து |
| V.A.முருகேசம்பிள்ளை | K.பாலசிங்கம் | K.மகேஸ்வரன் | அ.ரங்கநாதன் |
| - | - | - | சி.முருகவேள் |
| சு.பரமோதயம் | வ.தங்கராசா | S.குமாரசுவாமி | செ.மு.ஹனிபா |
| - | - | - | வெங்கடேசசர்மா |
| க.நல்லசிவம்பிள்ளை | ஆ.க.ஆறுமுகசாமி | S.சமீம் | இ.சிவகுருநாதன் |
| சரவணபவா | க.சிவப்பிரகாசம் | - | R.குமரதேவன் |
| இமானுவல் கமலநாதன் | T.S.மேதர் | பொ.கமலேந்திரன் | செ,குணரத்தினம் |
| சு.சிவானந்தன் | A.P.V. கோமசு | சு. சண்முகபவா | ஆ.வேலுப்பிள்ளை |
| பொ.கதிர்வேலாயுதபிள்ளை | செ.வே.காசிநாதன் | தி.சாம்பவி | ச.அடைக்கலமுத்து |
| க.சீவநாயகம் | கோ.சோமசுந்தரம் | சி.பாலசுப்பிரமணியம் | மு.தளையசிங்கம் |
| க.சண்முகசோதி | பு.காசிப்பிள்ளை | அ.சண்முகதாஸ் | வி.கி.இராசதுரை |
| க.அருமைநாயகம் | க.ஸ்ரீஸ்கந்தராசா | வ.கிருஷ்ணசாமி | S.செபநேசன் |
| ச.நேசராசா | ந.சிவகுருநாதன் | S.H.M.ஜமீல் | செ.கதிர்காமநாதன் |
| க.ஸ்ரீஸ்கந்தராஜா | க.சின்னராஜா | ச.தெட்சணாமூர்த்தி | ந.வேல்முருகு |
| வீ.கந்தசாமி | பொ.அருந்தவநாதன் | கு.சோமசுந்தரம் | ஆ.சிவநேசச்செல்வன் |
| செ.மு.மு.மர்ஜான் | க.தர்மராஜா | நா.கனகநாயகம் | சி.சடாசர சண்முகதாஸ் |
| செ.மகாலிங்கம் | நா.சுப்பிரமணியம் | பி.யோசப்பு | ஆ.பாலேந்திரன் |
| தா.நாகரட்ணம் | அ.ரகுமூர்த்தி | செ.சுவாமிநாதன் | க.சரநாதன் |
| பொ.ஆனந்தஜயசேகரம் | க,சந்திரகுமார் | ஐ.சிவஞானசுந்தரம் | க.செல்வரத்தினம் |
| A.ஜமீல் | பா.மகேஸ்வரன் | பா.சுதர்சன் | சி.கருணாந்தராசா |
| கி.இரவீந்திரன் | ம.சிவகுமார் | ச.பார்த்திபன் | பி.புனிததாஸ் |
| அ.முருகானந்தா | ந.சண்முகப்பிரபு | வி.விஜயகுமாரன் | பூ.காசிநாதர் |
| க.மு.சிறாஜ் | நா.ரஞ்சன் | அ.ஜோர்ஜ் சந்திரகுமார் | கு.குலேஸ்வரகுமார் |
| க.நா.சண்முகதாசன் | R.M.இம்தியாஸ் | ம.ஜோதிராஜ் | த.தவவதனி |
| P.M.ஜமாஹிர் | சி.சிவானந்தன் | இ.வாசுகி | S.Y.ஸ்ரீதர் |
| { சி.மதியழகன்<br>மு.வ.அப்துல் கையூம் | அ.பெனடிக்ற் இராஜேந்திரன் | பே.இராஜகுலசிங்கம் | M.A.முஹம்மது றமீஸ் |
| இ.லெ.அப்துல் நசார் | கி.ஜுட்ஸ் இராஜநாதன் | சூசை.அன்ரனிதாசன் | H.M.கலால்தீன் |
| A.C.P.முஹமட் | சி.பரணீஸ்வரன் | தா.ஸ்ரீராமநாதன் | இரா.இரவிசங்கர் |
| ந.நிலானி | கி.ம.மொறாய்ஸ் | சி.சிவசுதன் | { அ.ப.மு.அஷ்ரப்<br>இரா.சர்மிளாதேவி |
| தி.விஜயரேகா | செ.கிள்ளிவளவன் | சு.உதயசீலன் | பா.பிரதாபன் |

# தமிழ்ச் சங்க நிர்வாகம்

# 1998/99

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | : | பேராசிரியர் சி.தில்லைநாதன் |
| பெரும் பொருளாளர் | : | திரு எம்.எஸ்.எம்.அனஸ் |
| | | வைத்திய கலாநிதி. எம்.ஏ.எம்.சித்தீக் |
| தலைவர் | : | செல்வன் க.நரேந்திரநாதன் |
| உபதலைவர் | : | செல்வி தி.விஜயரேகா |
| செயலாளர் | : | செல்வன் செ.கிள்ளிவளவன் |
| இளம் பொருளாளர் | : | செல்வன் சு.உதயசீலன் |
| இதழாசிரியர் | · | செல்வன் பா.பிரதாபன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | | செல்வன் கோ.நந்தகுமார் |
| | | செல்வன் யோ.திலீபன் |
| | | செல்வன் வீ.மணிவண்ணன் |
| | | செல்வி சி.டில்ானி |
| | | செல்வன் பூ.முருகதாஸ் |
| | | செல்வி தெ.சிவரஞ்சனி |
| | | செல்வன் சே.திருவாலன் |
| | | செல்வன் மா.தவராசா |
| | | செல்வன் சி.மனோகரன் |
| | | செல்வன் ச.கப்பிரியற்பிள்ளை |

## என்றென்றும் நன்றியுடன்...

இளங்கதிருக்கு இதழாசிரியராக தெரிவு செய்யப்பட்டதில் இருந்து இவ்விதழை சிறப்புற வெளியிட வேண்டும் என்ற எண்ணமே மனமெங்கும் நிறைந்து இருந்தது. அவ்வகையில் இவ்விதழ் சிறப்புற உதவிய அனைவருக்கும் நன்றி சொல்ல வேண்டியது என் கடமை.

- இம்மலர் சிறப்புற வாழ்த்துரைத்த துணைவேந்தர், பெருந்தலைவர், பெரும் பொருளாளர், சங்கத் தலைவர் அவர்களுக்கும்,
- காத்திரமான ஆக்கங்களையும் தந்துதவிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் எனது சக மாணவ மாணவிகளுக்கும்,
- அட்டைப்படத்தை வரைந்த இ.ருஷாந்தனுக்கும், சிறப்புப் பகுதிக்கான படத்தை வரைந்துதவிய நண்பன் தி.இரஜிதரனுக்கும்,
- நாம் வேண்டி நின்ற போது ஆக்கங்களைத் தந்துதவிய கௌரவ சி.வி.விக்னேஸ்வரன், திரு.சு.சிவ தாசன், பேராசிரியர் சோ.சந்திரசேகரன், திரு.கே.சீ.லோகேஸ்வரன், திரு. சுமணசிறி லியனகே, திரு.சி.ஜெய்சங்கர், திரு.சோ.கோகுலநாதன், திரு. ரி.வி.ஆர் சங்கர்,
- ஆக்கங்களை சரிபார்த்துதவியதுடன் ஆலோசனைகளும் வழங்கிய தமிழ்த்துறை விரிவுரையாளர்கள் திரு.வி.மகேஸ்வரன், கலாநிதி துரை.மனோகரன், செல்வி இரா.சர்மிளாதேவி அவர்களுக்கும்,
- இளங்கதிர் வெளியீட்டிற்கு நிதி சேர்க்குமாக கொழும்பில் தமிழ்ச்சங்கம் நடாத்திய 'குறிஞ்சித் தமிழமுதம்' நிகழ்வின் வெற்றிக்கு ஒத்துழைத்த அனைவருக்கும்,
- விளம்பரங்களை தந்து எம்மை உற்சாகமூட்டிய வர்த்தக பெருமக்களுக்கும், இவ்விளம்பரங்களை சேகரிப்பதில் சிறப்புடன் செயற்பட்ட யோ.திலீபன் மற்றும் ஏனைய சக மாணவர்களுக்கும்,
- ஆக்கங்களை சேகரிப்பதில் உதவி புரிந்த க.ஜெயநிதிக்கும்,
- அச்சக கோர்வையினை சரிபார்ப்பதில் உதவி புரிந்த ப.நிரஞ்சினி, சு.ஜரின் ஆகியோருக்கும்,
- இம்மலரை சிறப்புட அச்சிட்ட உதவிய ''டெக்னோ பிரின்ட்''நிறுவனத்தினருக்கும்,
- மலர் வெளியீட்டு வைபவத்துக்கு வருகை தந்த வர்த்தகப் பெருமக்களுக்கும், ஏனைய விருந்தினர்கட்கும்,
- இம்மலர் சிறப்புற அனைத்து வழிகளிலும் தோளோடு தோள் நின்று உழைத்த சு.நிலக்ஷனுக்கும்,
- மற்றும் தமிழ்ச்சங்க பெருந்தலைவர், பெரும் பொருளாளர், தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் ஏனைய செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும்,
- இவ்விதழின் வெற்றிக்கு ஒத்துழைத்த சகலருக்கும்,

எனது மனப்பூர்வமான நன்றிகளை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இவர்களது பணி எதிர்காலத்திலும் இளங்கதிரை வளம்படுத்த உதவ வேண்டும் என வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

***பா.பிரதாபன்***

***இதழாசிரியர்.***

*With Best Compliments From...*

## K.T.P.M COMPUTER TRAINING CENTRE

தலைமையகம் :
இல. 29,
கோவில் வீதி,
குருமன்காடு,
வவுனியா.

*Collaborated With*

**IIS (PVT) LTD.**

*Affilated To* **IMIS** *U.K*

கிளை :
இல. 37,
வைரவர் கோவில் வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா.

இப்போது வவுனியாவில் ...

- தன்னிகரில்லா கணனிக் கல்வியில் தனக்கென ஒரு இடம்பிடித்து முன்னணியில் இருக்கும் நிறுவனம்.
- காலம் அறிந்த செயற்பாடு. கட்டணத்தில் நியாயமுண்டு. தேடவேண்டியதில்லை நாடி வாருங்கள் K.T.B.M.
- புதுமைகளை மேடையில் அரங்கேற்றுவதே இலட்சியமாக கொண்ட நிறுவனம்.
- பெரியோர்கள் சிறியோர்கள் அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் தேவையான அனைத்துக் கணனிக் கல்வியையும் வழங்குகிறது.
- மற்றும் அச்சுப் பதிப்பு வேலைகள், கணனிக் கொள்வனவு, கணனி உதிரிப்பாகங்கள் விற்பனை அனைத்துக்கும் K.T.P.M.

**சேவை கலந்த செயற்பாடு. மாணவர் அறிவு பலம் எங்கள் ஆத்ம பலம்.**

*With Best Compliments From...*

# Janatha Enterprises

**No. 127 E,**

**D.S. Senanayake Vidiya,**

**Kandy.**

*With Best Compliments From...*

# ZAROOK STORES

**18, Ambagamuwa Road,**
**Gampola.**

**Tel : 074-485152**

*With Best Compliments From...*

# சரஸ்வதி ஸ்ரோர்ஸ்

**No. 10,**
**Nuwaraeliya Road,**
**Gampola.**

*With Best Compliments From...*

# *Ganesha Stores*

*No.311,*
*Main Street,*
*Matale.*
*Tel : 3449*

*With Best Compliments From...*

# A.O. லக்ஷ்மி ஜுவல்ஸ்

* அசல் 22 கரட் தங்க நகை விற்பனையாளர்கள்
* நகை ஆடர்கள் குறித்த வேளையில் செய்து கொடுக்கப்படும்

**361, பிரதான வீதி, மாத்தளை.**
**தொ.இல -066-30581**

*With Best Compliments From...*

# RAZZAK SONS

**No. 81,**
**Main Street,**
**Matale.**
**Tel : 066- 22015**

*With Best Compliments From...*

# S.S. PHARMACY

**No. 301/A,**
**Main Street,**
**Matale.**

*With Best Compliments From...*

# *Rasheediya Enterprises*

**IMPORTERS OF BRAND NEW & RECONDITION MOTOR VEHICLES PART EXCHANGE LEASING & FINANCING**

No.105,
King Street, Matale, Sri Lanka.
Tel : 066 - 22198
Fax : 066 - 23535
Cellular : 077 - 803854

*With Best Compliments From...*

# ALANKAAR

*-Jewellers-*

No. 236, Trincomalee Street,
Matale.
Tel : 066-22344

*With Best Compliments From...*

# RAZMI TRADERS

**IMPORTERS & DEALERS IN BRAND NEW & RECONDITIONED MOTOR VEHICLES**

*No. 346, Main Street, Matale.*
*Tel : 066 - 22618, 23535*
*Fax : 066-23535*

No. 71, King Street, Matale.
Tel : 066 - 23636

*With Best Compliments From...*

# S.T.P SONS

**No.24,**
**Ambagamuwa Road,**
**Gampola.**

*With Best Compliments From...*

# PRAME MEDICAL

PHARMACEUTICALS
BOOKS & STATIONERY
PHOTO COPY, LAMINATING
COMMUNICATION
T.PHONE CALLS, I.D.D CALLS
FAX, E-MAIL, INTERNET
COMPUTER TYPE SETTING
PUBLISING & PRINTING

***46, Peradeniya Road, Kandy.***
***Phone : 074-470578,***
***Fax : 94-8-222339***
***E-Mail : prame@ids.lk***

*With Best Compliments From...*

# Mallika

## COLOUR LAB & STUDIO

- *Wedding Photographs*
- *Studio Portraits*
- *1 Hour Visa & Passport Photos*
- *Complete Wedding Coverage with Album*
- *Colour Film Processing and Printing*
- *Reproduction of Old Photographs*
- *Picture Framing*

**MALLIKA COLOUR LABORATORY (PVT) LTD.**
**No. 4, Power Station Rd, Kandy**
**Tel : 08-232472**

*With Best Compliments From...*

# A.S. Kumaraswamy & co

*No. 10,12,*
*Station Road,*
*Gampola.*

*With Best Compliments From...*

V.S. Shanmugalingam.

# V. S. S. STORES

Main Street,
Manampitiya
Tel : 027-24547

*With Best Compliments From...*

# S.D. Segar

◆

◆

◆

◆

**No. 66,**
**Nuwaraeliya Road,**
**Gampola.**

*With Best Compliments From...*

# GEM TEX

Main Street,
Manampitiya.

*With Best Compliments From...*

**Sri Priyaas Jewellers**

***Manufacturing Jewellers***
***& Eversilvers***

**No. 53,**
**Ambagamuwa Road,**
**Gampola.**
**Tel : 08-352458**

*With Best Compliments From...*

**SHANTHINI JEWELLERS**

**No. 5/3, Niyangampaya**
**Shopping Complex,**
**Ambagamuwa Road,**
**Gampola.**

*With Best Compliments From...*

**BEEMA GRINDING MILLS**

**No.86,**
**Nuwara - Eliya Road,**
**Gampola.**
**Tel : 08-352462**

*With Best Compliments From...*

**SRI LANKA SPICE CENTRE**

**General Merchants**
**and Dealers in**
**Ceylon Produce**

**164, Main Street, Matale.**
**Tel : 066-22345, 066-22005**
**066-24021**

*With Best Compliments From...*

NEW
GANESHA
STORES

No. 53, Nuwara Eliya Road,
Gampola.
T.p : 08-52410

*With Best Compliments From...*

CHITHRA
*Jewellers*

***22 Carat Sovereign***
***Gold Jewellers***

41, D.S. Senanayake Vidiya,
Kandy.
Tel : 08-23290

*With Best Compliments From...*

BODY TONE

**Vegetable Protein Tablets**
**For**
**Extra Strength, Stamina &**
**Fitness**
**Fat Free**
**From America**

***K.S.P ENTERPRISES***
***& PHARMACY (PVT) LTD***

L4, First Floor,
C.B.S. Building, Colombo 11.
T.Phone : 449766

*With Best Compliments From...*

*P. Somasundra*
Gampola.

*With Best Compliments From...*

# NEW HOTEL
# DE BUHARRE

84, Nuwaraeliya Road,
Gampola.

**BRANCH OF NEW HOTEL DE BUHARRE**

# BLUE STAR HOTEL

49, Nuwaraeliya Road,
Gampola.

*With Best Compliments From...*

# MULTI GROCERY

*General Merchants, Commission Agents*
*Wholesales & Retail Dealers*

**Main Street,**
**Manampitiya.**

*With Best Compliments From...*

# *Sri Venayagar Stores*

**No 15, Kandy Road,**
**Gampola.**
**Tel : 08-352420**

*With Best Compliments From...*

**Shri Ambals Jewelers**

*(For Quality 22 Karat Gold)*

**Main Street,**
**Maskeliya**
**Tel : 052-77458**

*With Best Compliments From...*

**Victoriya Press**

**(Offset & Letter Press)**

**Maskeliya.**
**Tel : 052 - 77393**

*With Best Compliments From...*

**Rathna Maligai**

*Jewellers & Pawn Brokers*

**48 & 50,**
**D.S. Senanayake Veediya,**
**Kandy.**
**Dial : 234438**

*With Best Compliments From...*

**NEW PRIYA STORES**

*Dealers in Grocere's*
*& Hotel Supply*

**125, D.S. Senanayake Vidiya,**
**Kandy.**
**Dial : 223979, 225305**

*With Best Compliments From...*

**NAGALINGAMS**
**JEWELLERS**

*Designers & Manufacturers of 22 Carat Sovereign Gold Quality Jewellery*

*101, Colombo Street,*
*Kandy.*
*Tel : 08-32545*

*With Best Compliments From...*

*Commercial*
*Hardware Stores*

*Hardware Merchants & Estate Suppliers*

65 & 67, COLOMBO STREET, KANDY.
TEL : 08-223565, 08-234323
FAX : 08-232343

*With Best Compliments From...*

**SARASWATHI STORES**

*90, COLOMBO STREET,*
*KANDY,*
*TEL : 08-222104, 08-233027*
*FAX : 8233027*

*With Best Compliments From...*

**Kavija Electrical**

***Govt. Suppliers - Dealers in Electrical Goods Appliances & Hardware***

Rajarata Super Market,
2nd Floor
98-2/1, Colombo Street, Kandy.
Tel : 08-233215

*With Best Compliments From...*

**SRI MURUGAN'S**

***WHOLESALE & RETAIL TEXTILE DEALERS***

*94, COLOMBO STREET,*
*KANDY,*
*TEL : 08-223399*

*With Best Compliments From...*

**SRILANKA PHARMACY LTD.**

39, D.S. Senanayake Veediya,
Kandy.
Tel : 08-223606, 08-232649

*With Best Compliments From...*

**A**

**Wel**

**Wisher**

*With Best Compliments From...*

**Laxmi Vilas & Communication**

**I.D.D & Local Calls, Fax, Laminating, Spiral Binding, Photo Copy, Stationery & Made Tea Etc...**

48, Main Street, Maskeliya.

Tel : 052-77426, 070-521030

Fax : 052-77382

*With Best Compliments From...*

***MASTRO MUSICS***

*Quality Video filming & Audio recording*

5A1, 1st Floor,
Post Office Road,
Maskeliya

*With Best Compliments From...*

**KANDY TRACTOR & MOTOR SPARES**

*One good part protects another !*
*Always use genuine spare parts.*

*Dealers in*
*Massey Ferguson, Ford, Kubota, International Tractor Spares & Implements*

68B, Colombo Street,

Kandy.

Dial : 08-222894

*அன்பான வரவேற்பு ! நேர்மை !*
*நிதானமான விலை !*
*எவல்சில்வர், பித்தளை சாமான்கள் !*
*சுவர் மணிக்கூடு! மேசை மணிக்கூடு*
*மற்றும் பாடசாலை உபகரணங்கள்!*

**இன்றே விஜயம் செய்யுங்கள்.**

***வாழ்க தமிழ்!!!***

## குமரன் ஸ்டோர்ஸ்

**5, 7வது வீதி, மஸ்கெலியா**

**தொ.பே : 052-77423**

**தரமான சகல**
**பலசரக்கு பொருட்களையும்**
**பெற்றுக் கொள்ள**
**வாழ்த்துக்களுடன்**

## Siva Stores

**111, Post Office Rd.**
**Maskeliya.**
**Tel : 052 - 77209**

## New Siva Stores

**109, Main Street**
**Maskeliya.**
**Tel : 052 - 77450**

*வெற்றி பெற வாழ்த்துகிறோம் !!!*

## வேல்ஸ் டெய்லர்ஸ்

***நாளைய நாகரிகத்தை இன்றே***
***அறிமுகப்படுத்தும்***
***மலையகத்தின் ஒரே***
***தலைசிறந்த இடம் ....***

## Vels Tailors

**183, Main Street,**
**Maskeliya.**

***With Best Compliments From...***

## VISWANATHAN'S

**உங்களது அனைத்து மின்சார**
**உபகரணங்களையும் குறித்த**
**காலத்தில் விரைவாகவும்**
**தரமாகவும் திருத்திப் பெற இன்றே**
**நாடுங்கள்.**

**(மக்கள் வங்கிக்கு அருகில்)**

*பிரதான வீதி, மஸ்கெலியா.*

*தொ.பே : 052-77451*

இளங்கதிர் சிறப்புற

வாழ்த்தும்

# சாரதா ரெக்ஸ்ரைல்ஸ்

*18, கொத்மலை வீதி,*

*நாவலப்பிட்டிய.*

*தொலைபேசி இல : 054-23185*

